JL
m211, Nos
Nos. 13
1624 [illegible]

OFFICE OF THE REGISTRAR OF B...
17 SEP 1917
MADRAS

# சக்ரவர்த்தினி

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL-18 தொகுதி-13 | August - 1917. ஆகஸ்டு 1917. | No-1 பகுதி-1

## சைவொத் திருந்தா லையமிட் டுண்.

"உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே, உண்டி முதற்றே யுணவின் பிண்டம்" என்று புறநானூறு கூறுவதைக் கவனித்து நோக்குமிடத்து, ஐயமிட்டுண்டல் ஒவ்வொருவர்க்கும் மிக அவசியமான செயலாமென்பது விளங்குவதால், நாம் ஒவ்வொரு நாளும் தவறாதும் மறவாதும் ஐயமிட்டுண்டு வர முயற்சி செய்து வருதல் வேண்டும். தானங்களுள் அன்னதானமும் பிணிகளுள் பசிப்பிணியும் மேம்பாடுடையனவாக விருத்தலின், அன்னதானஞ் செய்தலும் பசிப்பிணியை யொழித்தலும் நம்மனோர்க்கு மிக முக்கியமான செயல்களாம்; இவற்றைச் செய்யா திருப்பவர் நல்லனவென்பவற்றுள் எதனையும் உண்மையாகச்செய்வது சொப்பனத்து மில்லையாம். பசித்தார் முகங்கண் டிரங்கி, அவர்க்கு அன்போ டன்னமளித்து வருவதற்கே நமக்குச் செல்வங் கிடைத்திருக்கின்றது; நமக்குக் கிடைத்த செல்வத்தைக் கொண்டு அன்னதானஞ்செய்து ஏழைகளது பசிப்பிணியை நீக்கி வருதல் வேண்டுமென்று தீர்மானித்து, தாமுண்ணுமுன் ஐயமிட்டுண்டு வருபவர் புகழுடையவரா யிருப்பதன்றி இகழுடையவரா யிருப்பது ஒருவாற்றானு மில்லையாம்.

பசிப்பிணி மிக்கவிடத்து மானம், குலம், கல்வி, வண்மை, அறிவு, தானம், தவம், உயர்ச்சி, முயற்சி, காமம் என்னும் பத்தும் பறந்துவிடுவனவாக விருத்தலின், பசிப்பிணியினும் மிக்கதோர் பிணியில்லையாம். மற்றப் பிணி (நோய்) கள் இப்பிணிபோன்று

162432

தீமைசெய்வன வன்றாதலின், இப்பிணியைத் தீர்ப்பது நம்மனோர்க்கு மிக முக்கியமான செயலாம். நம்முடம்பு அன்னமயம் (அன்னத்தாலாயது) என்று கூறப்படுகின்றமையின், நாம் அன்னமில்லாது வருந்துவோர்க்கு அதனைத் தந்து வருதலை வழக்கமாகக் கொண்டிருப்போமாயின், பசிப்பிணியால் வருந்துகின்றவர் தம் வருத்தத்தினின்றும் நீங்கி, தாம் செய்யவேண்டிய வேலைகளைச் செய்து, மற்றவர்க்கும் உபகாரஞ் செய்தற்குரியவராவர். பசியால் வருந்துகின்றவர்க்கு உணவு கொடுப்பவர் அவர்க்கு உயிர்கொடுப்பவராக விருத்தலின், நாம் உயிர்கொடுக்கும் வேலையாகிய அன்னதானத்தை மிகு கவனமாய்ச்செய்து வருதல் வேண்டும். உணவில்லாது வருந்துகின்றவர்க்கு அன்பாக அன்னமிட்டுவருதல் ஒவ்வோரூரிலும் கிரமமாக நடைபெற்று வருமாயின், ஏழைகள் வாயிலாகப் பிறர்க்குத் தீமையுண்டாவது பெரும்பான்மையு மில்லையாம். உணவில்லாது வருந்துகின்றவர் கல்வி கேள்வி முதலியவற்றை யுடையவராதல்கூடாதாகலின், அவர்க்கு முன்னர்ச்செய்தற்குரியது அன்னதானமே யாம். ஆத்திசூடியில் "ஐயமிட்டுண்" என்றருளிச் செய்த ஔவைப்பிராட்டியார் அதனோடு நில்லாது கொன்றைவேந்தனில் "சையொத் திருந்தா லைய மிட்டுண் - (நீ) கைப்பொருளொத் திருந்தால் பிச்சையிட் டுண்பாயாக" என்றருளி யிருத்தலைக் கவனிப்போர்க்கு அன்னதானம் செய்வது தமக்கு வேண்டிய பொருளில்லாதவர்க்கு முடியாதென்பது நன்கு விளங்குவதாம். பிறரிடத்தொன்றை யிரந்து சீவியாது, பிறர்க்கொன்றை யீந்து சீவிப்பதே ஒவ்வொருவர்க்கும் சிறந்த வாழ்க்கையாம். இவ்வாழ்க்கையைப் பொருளில்லாதவர் பெறுவது முடியாமையின், அறநெறியிற்சென்று பொருளைத் தேடி நல்வாழ்க்கையைப் பெறுதல் நம்மனோர்க்கு மிக முக்கியமான காரியமாம். அன்னதானஞ் செய்யாதவன் பிறரால் பாவியென்று பழிக்கப்படுபவனாக விருத்தலின், அவனது வாழ்க்கை எவ்வாற்றானும் நல்வாழ்க்கை யாவதில்லையாம். ஐயமிட்டுண்ணும் பழக்கமுடையவன் தன்னிடத்துள்ள பொருளை அதனளவு தெரியாது செலவுசெய்து விடுவானாயின், அவன் தன் வாழ்நாள் முற்றும் அன்னதானஞ் செய்பவனா யிருத்தல் முடியாதாம்; ஆகவே, ஐயமிட்டுண்ண ஆர்வம் (விருப்பம்) கொள்ளுமொவ்வொருவரும் தம் பொருளை அதனளவறிந்து அன்னதானத்தில் செலவு செய்து வருதல் வேண்டும். இவ்வாறொழுக வேண்டுமென்பதை நம்மனோர்க் கறிவுறுத்தவே ஔவைப்பிராட்டியார்

JL
M211/4105 14-05-13



'சையொத்திருந்தா லைய மிட்டுண்' என்று திருவாய்மலர்ந் தருளினார். "ஏற்பதிகழ்ச்சி" என்பதை யென்நாளு மறவாது தமக்குரிய பொருளை அதனளவறிந்து ஐயமிட்டுண்ணுதலில் செலவுசெய்து வருகின்றவர் தமக்கு வாரம் வாரம் அல்லது மாதம் மாதம் கிடைக்கும் பொருளை நான்குபாக மாக்கி அவற்றுள் இரண்டு பாகத்தைத் தமது குடும்பத்திற்காகவும், ஒரு பாகத்தை அன்னதான முதலியவற்றிற்காகவும் செலவுசெய்து வருதல் வேண்டும்; மற்றொரு பாகத்தையோ முதுமைப்பருவத்திற்றமக்குதவியாகும்வண்ணம் இருப்பாகச் சேர்த்தல் வேண்டும். இவ்வாறு செய்துவருபவர் வறுமையுடையவராகாது தானங்களுள் தலைமையதான அன்னதானத்தை மிகு சிறப்பாகச்செய்து வருவது தவறுவதில்லையாம். பேரும் புகழும் பெருவாழ்வும் பெற்று வாழ்பவர் இவரே யாவர்.

திரிகடுகம் "ஈதற்குச் செய்க பொருளை" என்றும், "வருவாயுட் கால்வழங்கி வாழ்தல்" என்றும், நான்மணிக்கடிகை "கொடுப்பின னசனங் கொடுக்க" என்றும் கூறியிருத்தலை நாம் நன்கு கவனிப்போமாயின், ஈதற்பொருட்டே பொருளைத் தேடல்வேண்டும்; அதில் நான்கிலொரு பாகத்தை அறத்தின் பொருட்டுச் செலவு செய்தல்வேண்டும். அவ்வறத்திலும் ஐயமிட்டுண்ணுதலை விசேடமாகச் செய்தல் வேண்டுமென்பன நமக்கு விளங்கா திருப்பன வன்றாம்.

"மண்ணார் சட்டி கரத்தேந்தி மறநாய் கௌவுங் காலினராய்,
அண்ணாந் தேங்கி யிரப்பாரை யறிந்தோ மறிந்தோ மம்மம்மா,
பண்ணார் மொழியார் பாலடிசில் பைம்பொற் கலத்திற் பரிந்தூட்ட,
உண்ணா நின்ற போதொருவர்க் குதவா மாந்த ரிவர்தாமே"

என்று பெரியார் கூறுவதால் யாது விளங்குகின்றது? தாமுண்ணும்போது பசித்து வந்தவர்க் கன்னமிடா துண்பவர் மிக வறியராய்ப் பிறந்து பிச்சையெடுத் துண்ணுதற் குரியவராவா ரென்பதன்றோ விளங்குகின்றது? ஐயமிட்டுண்ணாமை பெருந் துன்பந் தருதற்குக் காரணமா யிருத்தலின், நாம் அத்துன்பம் வாராதபடி ஐயமிட்டுண்ணுதலை மேற்கொண்டொழுக முயலுதல் வேண்டும். இஃது அறங்கள் பலவற்றினுஞ் சிறப்புடையதா யிருத்தலின், இதனால் நாம் நல்லனவென்பவற்றை யெல்லா மடைதல் கூடும். "நன்மைசெய்தார் நலம்பெறுவர் தீமைசெய்தார் தீமைபெற்று நலிவர் தாமே" என்று பழமொழி விளக்கம் கூறுவதை யிங்கு நாம் பெரிதுங் கவனித்தல் வேண்டும்.

"இல்லோ ரிரப்பது மியல்பே யியல்பே, இரந்தோர்க் கீவது முடையோர் கடனே" என்று வெற்றிவேற்கை கூறுவதைக் கவனித்து நமக்குள்ள பொருளளவிற்கேற்ப வஞ்சகமில்லாமல், பசித்து வருந்துவோர்க்கு அன்போ டன்னமிட் டுண்ணும் வழக்கத்தை மேற்கொள்ளாது, தம்மைப் பிறர் வியந்துபேச வேண்டுமென்று கருதி, பாத்திரா பாத்திர மறியாமல் பிறர்க்கன்னமிட்டுண்டு வருபவர் அதன் பயனை யடைவது ஒருவாற்றானுமில்லையாம். ஒவ்வொருவரும் முதலாவதாக அனுசரித்தற்குரியது தர்மமும், இரண்டாவதாக அனுசரித்தற்குரியது தனமும், மூன்றாவதாக அனுசரித்தற்குரியது காமமுமாம். இவற்றுள் முதலாவதாக வுள்ளதை மறவாது கைக்கொண்டு, தர்மங்களுள் சிறந்த ஐயமிட்டுண்ணுதலை மேற்கொண்டொழுகி வருபவர் மற்றவற்றை யடையா திருப்பது எவ்வாற்றானுமில்லையாம். தருமம் இம்மைப்பயன், மறுமைப்பயன் மோட்சமென்னு மூன்றனையும் தருவதாக விருத்தலின், அது வாயிலாகப் பெறாத நன்மையொன்றுமே யில்லையாம்.

16அ43அ மணிமேகலை.

" குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்,
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம், நாணணிகளையும்
ஆணெழில் சிதைக்கும், பூண்முலை மாதரொடு புறங்கடை
பசிப்பிணி யென்னும் பாவியது " [நிறுத்தும்,

கொடுமையை யறிந்தார் ஐயமிட்டுண்ப தொருதலையாம் (ஒருதலை—நிச்சயம். ஏழைகளிடத்துள்ள பசிப்பிணி யென்னும் பாவியை யொழிக்க அவர்களுக்கு அன்னமிடாதுண்டு வருபவர் இறந்த பின் அவர்போற் பிறப்பது நிச்சயமாம். இது

சீவக சிந்தாமணி.

மாசித் திங்கள் மாசின சின்னத் துணிமுள்ளின்
ஊசித் துன்ன மூசிய வாடை யுடையாகப்
பேசிப் போவாய் பிச்சையெனக்கை யகலேந்திக்
கூசிக் கூசி நிற்பர் கொடுத்துண் டறியாதார்

என்று கூறுவதாலும் விளங்குவதாம்.

தமக்குள்ள பொருளை மறைத்து வையாதும், ஆற்றிற் கரைத்த புளி யவலமாவதுபோல உண்டு தேக்கிட்டிருப்போர்க் கன்னமிட்டவலமாகாதும், பொருளொன்றுமின்றி வருந்திப் பசியால் வருத்தமுற்று வந்தவர்க்கு அன்னமிட்டுண்டு வருபவர் அல்லனவற்றை யடைந்து வருந்துவதில்லையாம்; கடவுளது கருணைக்குப் பாத்திரரா யிருப்பவரும், அறங்களெல்லாவற்றையும் தமக்குக் கூடுமான வளவுஞ் செய்தற் குரியரா யிருப்பவரும் இவரே யாவர். நாமும் கூடுமானவளவும் பொருளை நல்வழியிற் சென்று தேடி அறங்களுள் சிறந்துள்ள ஐயமிட்டுண்ணுதலைச் சிறப்பாகச் செய்து ஆண்டவனருளுக்குப் பாத்திரமாவோமாக.

திருக்குறள்.

ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலின் பின்."

" அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி."
" பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்ட லரிது."

நாலடியார்.

துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.

இப்பிரயோகங்கள் இங்குக் கவனிக்கத் தக்கனவாம்.

# மணிவாசகன்.

## அத்தியாயம் 1.

தமிழ் நாடு என்று எவரும் புகழும் மேன்மையினை உடையது பாண்டியநாடு. அந்த நாட்டைப் பாண்டிய மன்னர் ஆண்டு வந்ததால், அதற்கு அப்பெயர் வந்தது. அந்த நாட்டிலேயே முதல், இடை, கடை என்னும் முச்சங்கங்களும் இருந்தன. அச்சங்கங்களில் தலைமை பூண்டே பாண்டிய மன்னர் தமிழை வளர்

த்து வந்தனர். அந்த நாட்டில் வைகை என்னும் ஒரு பெரிய நதி ஒன்று உண்டு. அந்த நதிக்கரையின் இருபக்கத்திலும் பெரிய ஊர்கள் பல உள்ளன. அவ்வூர்களுள் வாதவூர் என்பதும் ஒன்று. அதில், பெரும்பான்மையும் சைவநெறி தவறாத அந்தணர்களே வாசஞ்செய்து வந்தனர்.

அந்தணர் குலத்துள் பல பிரிவுகள் உண்டு. அவற்றுள் அமாத்தியர் குலம் என்பதும் ஒன்று. மன்னருக்கு அருகாய் இருந்து, அவர்களுக்குச் சமயம் நேர்ந்தபோது சூழ்ச்சி உரைப்பவர்கள், அமாத்தியர் ஆவர். அந்த அமாத்தியர் குலத்தில், சம்புபாதா சிருதர் என்னும் பெயருடைய ஒரு பெரியவர் இருந்தார். அவர், சிவனையே தெய்வம் என்று வணங்குபவர்; எக்காலத்தும் சத்தியமே பேசுபவர்; சிறிதும் ஒழுக்க நெறிதவறாத உத்தமர். வாதவூரில் இருந்த அந்தணர் எல்லாம் அவரைத் தங்கள் குருவாக மதித்துவந்தனர். அவர், தமது இல்லறம் சரிவர நடக்கச் சிவஞானவதி என்னும் ஒரு அம்மையை மணம் செய்துகொண்டார். அந்த அம்மை கணவனையே தெய்வம் என எண்ணி வழிபடும் உத்தமி; ஜீவகாருண்ணியம் நிறைந்த செல்வி; அன்றியும், "சிறுகாலை யட்டில்புகல், அருத்தி யுறச்சமைத்தல், சுவைதிருத்தி யூட்டல், மறுகாலை யெண்ணாது விருந்தழைத்தல், மகப்பெறுதல், மடநாணச்சம், பெறுகாலை யின்புறுதல், முன்னுறங்கப் பின்னுறங்கல், பின்னெழாதல், உறுகாலை தொழுதல் பன்னிரண்டு மங்கர்க் கற்புடையோர் செய்கை". என்று பெரியோர்கள் கூறும் கற்பு லக்ஷணங்கள் எல்லாம் ஒன்றுசேர அமைந்த அரிசி.

அந்த இருவரும் தமது இல்லறத்தினைச் சரிவர நடத்தி வந்தபோது பௌத்த மதமே எங்கும் பரவி இருந்தது. சைவர்களுள் பெரும்பாலார், அந்தப் பௌத்த மதத்தையே உண்மை மதமெனக் கொண்டொழுகினர். சைவத்தில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லாமலே போயிற்று. எல்லாம் பௌத்தமயம்! எல்லாரும் பௌத்தர்கள்! அந்த நாடு எங்கும் பௌத்த கொள்கையே நிரம்பியது.

நாடு அழிந்த கோலத்தைக்கண்டார் சம்புபாதாசிருதர்; சைவத்திற்கு இந்த நிலைமையும் வந்ததா என்று பெரிதும் வருந்தினர்; இது என் செய்தால் தீரும் என்று ஏங்கினர். அந்த ஏக்



கத்துடன், அவருக்கு ஒரு புதவன் இல்லையே என்ற ஏக்கமும் கூடியது. அதனால் அவர், தமது வழிபடு கடவுளை நோக்கி "ஈசனே, உனது மெய்ச்சமயமாகிய சைவத்தை நிலைநிறுத்தக் கூடிய ஒரு சற்புத்திரனை எனக்கு அருள்செய்க." என்று வேண்டினர். அவர் வேண்டுகோளுக்கு இரங்கிய இறைவன், சம்புபாதாசிருதருக்கு ஒரு நல்ல புதல்வன் உண்டாகும்படி அருள் செய்தார். அதனால், சிவஞானவதி கருப்பம் அடைந்தார்.

மாதங்கள் ஒன்பதும் சென்றன. பத்தாவது மாதத்தில், நல்ல நக்ஷத்திரம் அமைந்த சுப தினத்தில், அந்த அம்மை ஒரு பாலனைப்பெற்றார். அப்பாலனுக்குச்சம்புபாதாசிருதர் தாமே சாதகம் கணித்துப்பார்க்க, தாம் கோரிய எண்ணத்தை முற்றுவிக்க வந்த பாலனே அவன் என்பதை அறிந்தார்; அறிந்து, அக்குழந்தைக்குச் செய்யவேண்டிய பால சடங்குகளை எல்லாம் செய்து முடித்து வாதவூரர் என்னும் பெயர் இட்டனர்; அதற்கு ஐந்தாவது வயதுவந்ததும் அதனைப் பள்ளிக்குவிட்டார். பள்ளிக்குச் சென்றபாலன், ஐந்தாறு வருடங்களுள், எல்லாக் கலைகளையும் ஒரு கஷ்டமும் இன்றி விரைவில் கற்றுக்கொண்டான். அதைக் கண்ட சம்புபாதாசிருதர், தாமே தமது பிள்ளைக்கு வேதாகமங்களைக் கற்றுக்கொடுத்தார். வாதவூரர், வேதாகமத்திலும் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் மிகவும் தேர்ச்சி உடையவராய், மதுரைக்கண் இருந்த கடைச்சங்கப் புலவர்களுடன் கூடி உறவாடி இருந்தார். அப்போது அவருக்குப் பதினாறு வயது ஆயது.

## அதிகாரம்—2.

மதுரையைத் தனது அரசிருக்கைப் பட்டணமாகக்கொண்டு அக்கால் பாண்டி நாட்டை ஆண்டு வந்தவன் அரிமர்த்தன பாண்டியன் என்பான். அவன் கி. பி. ஆறும் நூற்றாண்டின் இறுதியில் அரசுசெலுத்தியவன் என்று சில அறிஞர் கூறுகின்றனர். அந்த அரிமர்த்தன பாண்டியன், சங்கப் புலவர்களாலும் பிறராலும் வாதவூரரது கல்வியின் சிறப்பையும், புத்தியின் வன்மையையும் கேள்விப்பட்டான்; உடனே அவரைப்பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவனுக்கு உண்டாயது. உண்டாகவே, அவன் தன்னுடைய பிரதானிகளுள் சிலரை அனுப்பி, வாதவூரரை அழைத்துக்கொண்டு வரும்படி கட்டளையிட்டான். பிரதானிகளும் வாதவூரரைக்கண்டு, அரிமர்த்தன பாண்டியன் உள்ளக்கிடக்கையை

உரைத்தனர். வாதவூரர் அதைக்கேட்டதும், மன்னவன் பணியை உடனே நிறைவேற்ற வேண்டுவது பிரஜைகள் கடமையாகும் என்பதை உணர்ந்து, தமது பெற்றோர்களின் அனுமதிபெற்று, அவர்களுடன் சென்றார். பிரதானிகள் வாதவூரரை மாறன் முன் அழைத்து ஏகினர். கண்டான் அரிமர்த்தனன். வாதவூர் வந்த புண்ணியரை கண்டதும், அவர் விஷயத்தில் அவனுக்குப் பெரிய நம்பிக்கை உண்டாயது. அதனாலவன் என்றும் அவரை விட்டுப் பிரிந்திருக்கலாகாதென எண்ணினான். முகப்பொலிவைக்கண்டே அங்ஙனம் அவன் செய்யத்துணிந்தான் என்றால், அவருடைய வாயினின்று வரும் சொற்களைக்கேட்டால், இன்னும் என்னதான் அவன் செய்யத்துணியான்? வந்த வாதவூரர், அரசனை ஆசீர்வதித்து, 'அழைத்த காரணம் என்னவோ, தெரிவிக்கவேண்டும்' என்று கேட்டனர். அவ்வாசகத்தைக்கேட்டதும், அவன் அவரை விட்டுப் பிரியமனம் இல்லானாய், அவரை அருகு அழைத்து உட்காரவைத்து, "தாம் எனக்கு மந்திரியாக இருக்க ஒப்புக்கொள்ளவேண்டும்" என்று வேண்டினன். வாதவூரர், அதற்கு மனம் இலர் ஆயினும், மன்னவன் மொழியை மறுக்க அஞ்சி, ஒப்புக்கொண்டனர். ஒப்புக்கொள்ளவே, அரிமர்த்தனனுக்கு அளவுகடந்த ஆனந்தம் உண்டாயது. உடனே, அவன் தனது மந்திரிகளைநோக்கி 'மந்திரிகளே! நமது வாதவூரரை உங்களுக்கு எல்லாம் தலைவர் ஆக்கினோம்; ஆகவே, அவர் இன்று முதல் எனக்கு முதல் மந்திரி யாவர்; அன்றியும், அவருக்கு யான் இன்று தென்னவன் பிரமராயர் என்னும் பட்டம் தந்தேன்; அதை அவரும் அங்கீகரிப்பார் என எண்ணுகிறேன்" என்றான். அதுகேட்ட மந்திரிகள், "சந்தோஷம், சந்தோஷம்" என்று சொல்லத் தலைப்பட்டனர். வாதவூரரும் அரிமர்த்தனனை நோக்கி, "தாம் என்னை இவ்வளவு கௌரவப்படுத்த, யான் ஒரு காரியமும் செய்யவில்லையே. எனினும், தாம் இன்று காட்டிய இந்த நன்றியை என்றும் மறவேன்" என்று கூறினர். அரிமர்த்தனன், வாதவூரரது அதிவிநயமான வார்த்தைகளைக்கேட்குந் தோறும் கேட்குந் தோறும் உள்ளம் பூரித்தான். அங்ஙனமே பல நாட்கள் சென்றன.

என்றும் அரிமர்த்தனன் வாதவூரர் உத்தரவு இன்றி ஒரு காரியமும் செய்வதில்லை. ராஜ்ய காரியங்களை எல்லாம் அவரிட



மே விட்டுவிட்டான். அவரும், தமது மன்னவனுக்கு மேலும் மேலும் கீர்த்தி உண்டாகும்படி, ராஜ்யகாரியங்களைக் கவனித்து வந்தார். அவர், ராஜ்ய வியவகாரங்களில் நாட்டம் வைத்து இருந்தாலும், அவருடைய நாட்டம் எல்லாம் பரசிவத்தின் இடத்திலேயே இருந்தது. சில சமயங்களில், இந்த வியவகாரத்தை நாம் ஏன் வைத்துக்கொண்டோம் என வருந்தினர்; அக்காலத்தையும் ஈசனுக்குப்பிரியம் ஆக்கலாமே என்பது அவருடைய எண்ணம். என் செய்வார்! மன்னனையும் திருப்தி செய்யவேண்டும். அது பற்றி, அவர் தமது நாட்டத்தைச் சிவன்பால் செலுத்தி, வெளியே பார்ப்பவர்க்கு மாத்திரம் வியவகாரத்தில் ஈடுபட்டவர்போல இருந்தார்.

சம்புபாதாசிருதர், தம்முடைய அருமைப் புதல்வர்க்குக் கிடைத்த உத்யோகத்தைக்கண்டு, அதுவும் தமது கொள்கையை நிறைவேற்றத்தக்க வேலையே ஆகும் என மகிழ்ந்து, தமது புதல்வருக்கு அவ்வுத்யோகத்தினை இந்த இந்த விதமாக நடத்தவேண்டும் என்றும் எடுத்து உரைத்தார். வாதவூரர், எல்லாம் அறிந்தவர் ஆயினும், ஒன்றும் அறியார்போலத் தமது தந்தை சொல்வதை அதிக சிரத்தையுடன் கேட்டு, "அப்படியே நடப்பேன்" என உறுதிமொழிகூறினர்.

தமது மன்னனுக்கு முன்னினும் அதிகமாய்ப்பொருள் வருவாய் உண்டாகவேண்டும் என்ற நோக்கம் உடைய வாதவூரர், முதலில் குடிகள் தரும் இறைப் பொருளைக்கணக்கெடுத்தனர். பின் சுரங்கம் முதலானவற்றில் வரும் பொருளின் அளவைக்கண்டனர். சிற்றரசர்கள் கட்டும் பகுதிப் பணத்தை அளந்து அறிந்தனர். அவை ஒவ்வொன்றற்கும் தனித்தனி கணக்கு இல்லாது இருப்பதை அறிந்து, தாமே கணக்கு ஏற்படுத்தி, அதைப்போல் எப்போதும் வைக்கும்படி சிப்பந்திகளுக்கு உத்தரவு செய்தனர். அதனால், இறை கொடாதவரும் பகுதிப்பொருள் கொடாதவரும் பயந்து, தத்தம் இறைப்பொருளையும் பகுதிப் பணத்தையும் தவறாது கட்டிப்போயினர். வாதவூரர் வரும்படியை மாத்திரம் கவனித்தவர் அல்லர். அதனுடன், அரண்மனைச் செலவையும் திட்டம் செய்தார். முன்னினும் அதிகமாக, அன்ன சத்திரம், பூஞ்சோலை, கல்விச்சாலை முதலானவற்றை ஏற்படுத்தினர். ஆல

யங்களுள் ஆறுகால பூஜையும் சரிவர நடத்திவரக்கட்டளை இட்டார். இவற்றால், மன்னனுக்கு முன்னிலும் அதிகமாகப் பொருள் சேர்ந்ததோடு, கீர்த்தியும் பெருகியது. அரசர்க்கு அவ்வப்போது அவர் வரவு செலவுகளைத்தெரிவித்து, பொக்கிஷசாலையில் இவ்வளவு திரவியம் இருக்கிறது என்று, வாதவூரர் கணக்கிட்டுச் சொல்லுந்தோறும், இதுவரை எந்த மந்திரியும் இப்படி ஒழுங்குபடச்செய்ய இல்லையே என்று உள்ளம் பூரித்தான். அம்மட்டோ வாதவூரர் செய்த வேலை? மேலும் அவர், தம்முடைய மன்னனின் சேனை வலிமையையும் பிறமன்னரின்சேனை வலிமையையும் அறிந்து, பிறமன்னர்கண்டு அஞ்சுமாறு, நால்வகைப்படைகளையும் அதிகமாக்கி அவற்றைத் திருத்தியும் வைத்தனர். குடிகளுக்கு ஏதேனும் குறையுண்டோ என்பதை அறியச் சில சமயங்களில், தாமே வேற்றுருக்கொண்டு ஊர் ஊராய்ச்செல்வர்.

சதாவதானம்

தெ. கிருஷ்ணசாமிப் பாவலர்.

## சுகாதாரம்.

(முன்தொடர்ச்சி.)

### விஷவாய்வுகளை நீக்கும் பக்குவங்கள்.

துர்க்கந்தமுள்ள விஷவாய்வுகளை நீக்கும்படிக்கு ஜனங்கள் சாம்பிராணி முதலிய வாசனைப் பதார்த்தங்களை உபயோகிக்கிறார்கள். இது அறிவீனம். இந்த வாசனைப்பதார்த்தங்களால் விஷவாய்வுகளின் நாற்றம் நாசிப்புலனுக்குத் தோன்றாமல் போகுமே தவிர அவைகளால் வருங்கேடுகள் சற்றாயினும் நீங்காவாம். ஆப்பிரிக்கா அராபியா வனாந்திரங்களிலுள்ள தீக்குருவியென்னும் ஒரு பெரியபட்சி தனக்கு ஏதாவது ஒரு மோசம் வருகிறபொழுது தன் தலையை மணலுக்குள் புதைத்துக்கொண்டு அந்த மோசத்தைத் தான்பாராததினாலே அது நீங்கிப்போய்விட்டதென்று புத்தியீனமாய் நினைக்கிறதுபோலும், ஒருவன் விஷத்தை கசப்பு தோன்றாமல் சருக்கரைகலந்து சாப்பிட்டாற்போலும் ஜனங்கள் துர்க்கந்தமுள்ள விஷவாய்வுகளைச் சில வாசனைகளால் தங்கள் நாசிப்புலனுக்குத் தெரியாமல் போகச் செய்வதனால் அவைகளி



னால் வருங்கேடுகளும் நீங்கிப்போய்விட்டன என்று எண்ணுகிறார்கள். விஷவாய்வுகள் வாசனைகளால் மறைக்கப்பட்டபோதிலும் அவை ஜனங்களைச் சேதப்படுத்துவதில் சிறிதேனும் குறைவுபடா. ஜனங்கள் தங்கள் வீடுகளிலும் அவைகளுக்குச் சமீபித்த இடங்களிலுமிருக்கிற அசுத்தங்களை நீக்கிப்போடுவதற்குப் பதிலாக அவைகளிலிருந்து வருங் கெட்டநாற்றம் தங்களுக்குத் தெரியாமலிருக்கும்படிக்கு வீடுகளில் வாசனைகளைப் பிரயோகிக்கிறது. எவ்வளவு அறிவீனம்?

துர்க்கந்தமும் விஷமுமான வாய்வுகளை நீக்குவதற்குத் தகுந்த பிரயோகங்கள் என்னவென்றால்: முதலாவது தேகம், வஸ்திரம், வீடு முதலானவைகளை மிகவுஞ் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல். இரண்டாவது, எப்பொழுதும் போதுமானபடி சுத்தமும் புதிதுமான காற்று வீடெங்கும் வியாபிக்கும்படிச் செய்துகொள்ளுதல். தினந்தோறும், தரித்திருந்த வஸ்திரங்களையும் படுக்கைச் சாமான்களையும் நன்றாய் உதறிப் பின்பு வெளியே ஆகாயத்திலும் வெளிச்சத்திலும் சற்றுநேரம் விரித்துவைத்திருந்தால் அசுத்தங்களெல்லாம் நீங்கிவிடும். மூன்றாவது, புதிய அடுப்புக்கரி. இது விஷவாய்வுகளை நீக்கத்தக்க மிகவும் முக்கியக்கருவி. இதை நன்றாய்ப் பொடித்துத் துணிப்பைகளில் போட்டாவது அல்லது, சிறு கரித்துண்டுகளைச் சிறிய கூடைகளில் போட்டாவது நாற்றங்கள் விஷவாய்வுகள் உண்டாகத்தக்க இடங்களிலெல்லாம் தூக்கிவைக்கவேண்டும். முக்கியமாய் சாக்கடை, கக்கூசு, வியாதிக்காரர் படுக்கை முதலான இடங்களில் இதைப் பிரயோகிக்கலாம். சிலநாளுக் கொருதடவை பழயகரியை நீக்கிப் புதியகரியைப் போடவேண்டும். கரியானது விஷவாய்வுகளை உறிஞ்சித் தனக்குள் அடக்கிப் பின்பு அவைகளை அழித்துப் போடுகின்றது. சில விஷவாய்வுகளில் அது தன்னிலும் 90-பங்குக்கதிகமான அளவுள்ள வாய்வைத் தனக்குள் அடக்கி அழிக்கின்றது. நான்காவது, காய்ந்து தூளாக்கப்பட்ட களிமண். இதைக் கக்கூசிலுள்ள, அசுத்தங்களில் போதுமானபடி போட்டால் துர்க்கந்தமும் விஷவாய்வுகளும் உண்டாகமாட்டாவாம். இதை ஆஸ்பத்திரி கக்கூசுகளில் பிரயோகிக்கிறார்கள். ஐந்தாவது, சுண்ணாம்புத் தண்ணீர். இது மனித சுவாசத்தினாலும், பின்னும் பல ஏதுக்களாலுமுண்டாகிற கொடிய விஷவாய்வாகிய கரிஅமிலவாய்

வை முற்றிலும் நீக்கத்தக்கது. ஆகையால் அடிக்கடி வீடுகளை நன்றாய் வெள்ளை யடித்தல்வேண்டும். ஆறாவது, ஒரு பாத்திரத்தில் நெருப்புக் கரிகளைவைத்து அவைகளின் பேரில் கொஞ்சம் உப்பைப்போட்டு சுத்தமாக்கவேண்டிய அறைகளில் வைத்தால் உப்பிலிருந்துண்டாகிற ஒருவகை வாய்வினால் அசுத்தவாய்வுகள் நீங்கும். ஐயோடின் (Iodine) என்கிறமருந்தில் சொற்பத்தைச் சின்ன பாத்திரங்களில் போட்டு சுத்தமாக்க வேண்டிய அறைகளில் வைத்தால் அதிலிருந்துண்டாகிற வாய்வு கெந்தக ஜல வாய்வு முதலான அசுத்தவாய்வுகளை யழித்துவிடும். இதை வைசூரி முதலான விஷ வியாதிகளால் உண்டாகிற அசுத்தவாய்வுகள் நிறைந்த அறைகளில் பிரயோகித்தால் அவ்வாய்வுகள் அழிக்கப்படும். ஏழாவது, நயிற்றிக் ஆசிட் (Nitric acid) என்ற வெடியுப்பு திராவகத்தில் தாம்பிரத்துண்டை அல்லது தகட்டைப் போட்டால் அதிலிருந்துண்டாகிய வாய்வு அநேக அசுத்தவாய்வுகளை யழிக்கத்தக்கது. இது பிரேத நாற்றத்தை வெகு சீக்கிரத்தில் நீக்கத்தக்கது. இதை அதிகமாய்ச் சுவாசித்தால் தலைக் கிறுகிறுப்பு, குமட்டல், வாந்தி முதலானவை உண்டாம். ஆகையால் அதை உபயோகிக்கும் அறைகளில் ஜனங்கள் இருக்கக் கூடாது. எட்டாவது, கெந்தகப்புகை. கெந்தகத்தை நெருப்பின் பேரில் போடுகிறதினால் உண்டாகும் புகை அநேகவகை அசுத்த வாய்வுகளை அழித்துவிடும். இது ஒரு மிகவும் நல்லவகை. இதை வைசூரி முதலான விஷவியாதிக்காரருள்ள அறைகளில் உபயோகித்தால் விஷவாய்வுகள் அழிக்கப்படும். காடியிலிருந்துண்டாகிற ஆவியும் அசுத்தவாய்வுகளை நீக்கத்தக்கது. ஒன்பதாவது, சென்னையில் சொற்ப கிரயத்துக்கு வாங்கத்தக்க (Carbolic acid) கார்பாலிக் ஆசிடென்ற மிகவுஞ் சிறந்த ஒரு திராவகமும் (Norton's Fluid) நார்ட்டன்ஸ் பிளுயிட் என்ற ஒரு வாசனைத் தண்ணீரும் (McDougalds powder.) மெக்டுக்கால்ஸ் பவுடர் என்ற ஒருவகைத்தூளும் மிகவும் விசேஷமானவை. இவைகளை வியாதிக்காரர் இருக்கும் அறைகள் முதலிய இடங்களில் பிரயோகித்தால் கொடிய விஷவாய்வுகள் நீங்கிப்போம்.



## தண்ணீர்.

எல்லாவிதத் தண்ணீர்களும் முதலாவது சமுத்திரத்திலிருந்து சூரியனுடைய உஷ்ணத்தினால் ஆவியாக எழும்பி மேகங்களாகிப் பின்பு பூமிக்கு மழையாகத் திரும்பிவந்து ஆறுகள் ஏரிகள் குளங்கள் சுனைகள் ஆகின்றன. மழைநீர் ஆற்றுநீர் ஊற்றுநீர் கிணற்றுநீர் ஆகிய இவை அந்தந்த இடத்திலுள்ள மண் முதலியவற்றிற்குத் தக்கபடி வித்தியாசமுள்ளவைகளாயிருக்கும்.

### மழைத்தண்ணீர்.

மழையானது ஆகாயத்தை ஊடுருவி வருகையில் அதில் ஆகாயத்திலுள்ள பிராணவாய்வும் கரி அமிலவாய்வும் சேருமாகையால் அவை யதற்கு அதிக ருசியுண்டாக்கும். ஆனால் மழைத்தண்ணீர் விழும் இடங்களிலுள்ள பலவகை அசுத்தங்களை அது கரைத்துக்கொண்டு போகிறதினாலும் அது போய்விழும் குளம் முதலானவைகளில் செத்தை சருகு முதலியவற்றை அடித்துக்கொண்டு போய்த் தள்ளுகிறதினாலும் இச்செத்தை முதலானவைகள் நாளடைவில் அழுகித் தண்ணீரில் கரைந்துபோகிறதினாலும் சிலவிடங்களிலுள்ள மழைத்தண்ணீர் அசுத்த முள்ளதாய்ப் போகின்றது. சுத்தமான நாட்டுப்புறங்களில் விழுந்து சேர்ந்து நிற்கின்ற மழைத்தண்ணீர் பட்டணங்களில் விழுந்து சேருகிற மழைத்தண்ணீரைப் பார்க்கிலும் சுத்தமுள்ளது.

### ஆற்றுத்தண்ணீர்.

ஆறுகள் பலவகையான தரைகளின்மேல் ஓடுகிறபடியால் அங்கங்கே சேருகிற பலவகை அசுத்தங்கள் ஆற்றுத்தண்ணீரில் கலந்திருக்கும். ஒரே ஆற்றின் ஒரு கரையோரத்திலுள்ள தண்ணீர்க்கும் எதிர்க்கரையிலுள்ள தண்ணீர்க்கும் சில காலங்களில் வித்தியாசமிருக்கும். இந்த வித்தியாசம் நிலத்துக்குத் தக்கபடிதான். ஆற்றுத்தண்ணீரில் பூண்டுகளாலும் ஜீவஜெந்துக்களாலும் உண்டாகிற பலவகை அசுத்தக்கழிவுகள் சேர்ந்துகொண்டேயிருக்கும். சில நதிகளில் பிரவாக முண்டாகித் தண்ணீர் பல அசுத்தங்களைக் கரைத்துக்கொண்டு கலங்கலாய்ப் போகும்பொழுது அத்தண்ணீரைச் சாப்பிடுவதினால் சிலருக்கு வயற்றோட்டம் முதலான தொந்தரவுகள் சம்பவிக்கும்.

## கிணறுகள்—ஊற்றுக்கள்.

கடினமான கற்பாறையுள்ள இடத்திலிருந்து ஊறுகிற தண்ணீர் மிகவுஞ் சுத்தமானது. மிருதுவான மணற்பாறையிலிருந்து ஊறுகிற தண்ணீர் ஒருவாறு சுத்தமுள்ளதென்று சொல்லலாம். சில காலங்களில் அதில் அசுத்தங்கள் கலந்திருக்கும். சரல் அல்லது பருக்கைக்கல் (Gravel) உள்ள இடத்திலிருந்து ஊறுகிற தண்ணீர் பல பேதங்களுள்ளதாயிருக்கும். சரல் சுத்தமாயிருக்கிறதற்குத் தக்கபடியும், ஊற்று பட்டணங்களுக்குத் தூரமாயிருக்கிறதற்குத் தக்கபடியும் அத்தண்ணீர் சுத்தமாயிருக்கும். மணற்றரைகளிலிருந்து ஊறுகிற தண்ணீர் சில காலங்களில் மிகச்சுத்தமாயும் மற்றக் காலங்களில் அசுத்தமாயுமிருக்கும். இது மணலின் தன்மைக்குத் தக்கபடியாம். சுண்ணாம்புக் கற்றரைகளிலிருந்து ஊறுந் தண்ணீரானது சொற்பப் பால்கலந்த தண்ணீர்க்குள்ள நிறத்தை யுடையதாயும் ருசிக்கு மதுரமானதாயுமிருக்கும். இத்தண்ணீர்களை வழக்மாய்க் குடிக்கிறதினால் சிலவேளைகளில் சுகவீனங்களுண்டாகும். மேலும் இத்தண்ணீர்களில் பருப்பு முதலானவை வேகிறது வருத்தம். நல்ல களிமண் தரையில் ஊற்றுகள் அதிகமிராவாம். அதிலுள்ள தண்ணீர் ஆழமாயில்லாமல் தரைக்குச் சமீபமாயிருக்குமாகையால் அதில் பலவகை அசுத்தங்கள் கலந்திருக்கும். சிறு மணலும், களிமண்ணும் சேர்ந்த வண்டற்றரையிலுள்ள (Alluvial soil) தண்ணீர் அடிக்கடி அசுத்தமுள்ளதாயிருக்கும். நன்றாய் (manure) எருவிட்டுப் பயிரிடுகிற நிலங்களிலிருக்கிற தண்ணீரில் அநேக வகையான அசுத்தங்கள் நிறைந்திருக்கும். பிரேதங்களை அடக்கம் பண்ணும் இடங்களிலிருந்து ஊறுகிற தண்ணீரும் அசுத்தமுள்ளதுதான்.

பொதுவாய் நமது தேசத்திலுள்ள கிணறுகள் சரியானபடி பாதுகாக்கப்படுகிறதில்லை. கிணற்று ஓரங்களிலெல்லாம் ஓயாமல் தண்ணீர் சிந்தப் படுகிறதினாலும் ஜனங்கள் ஸ்நானம்பண்ணி அழுக்கு வஸ்திரங்களை சுத்தம்பண்ணுகிறதினாலும் கிணறுகளின் வெளிச் சுற்றிடங்களிலெல்லாம் அதிகமாகச்சேறுஞ் சகதியுமுண்டாக அசுத்தத்தண்ணீர்கள்கட்டுக்கிடையாய் நிற்பதனால் அத்தண்ணீர்கள் கீழே ஊறிப்போய் கிணற்றிலுள்ள நல்ல தண்ணீரோடு கலந்து அதை அசுத்தப்படுத்தி சுகத்திற்கு பிரதிகூலமுள்ளதாக்கி விடுகின்றன. மேலுமிவ்வாறு கிணறுகளைச் சுற்றி யுண்டாகிற



அசுத்தத் தண்ணீர்களையும் சேறு சகதிகளையும் ஜனங்கள் மிதிக்கிறதினால் அவர்களுக்கு நரம்புச் சிலந்தி என்கிற புண் முதலிய பலவியாதிகளுண்டாகின்றன. ஆகையா லித்திமைகளை நீக்கும் பொருட்டுக் கிணறுகளைச் சுற்றி 10-அல்லது 12-அடி தூரத்திற்கு நன்றாய் இணைக்கப்பட்ட கற்களைக்கொண்டாவது அல்லது செங்கல் சுண்ணாம்பைக்கொண்டாவது அல்லது ஆஸ்பால்ட் (Asphalte) என்கிற வஸ்துவைக் கொண்டாவது தளவரிசை செய்து இதைச் சுற்றிலுஞ் சிறு வாய்க்காலைக் கட்டி அதில் விழுந்து ஓடும் தண்ணீர் வாய்க்காலின் ஓர் மூலையிலிட்டிருக்கிற திறப்பின் வழியாக தூரமான இடங்களில் போய்விழும்படிச் செய்யவேண்டும். அன்றியு மிதனோடு கிணற்று வாயைச் சுற்றிப் போதுமான உயரமும் பலமுமான சுவர் கட்டியிருப்பது அநேக விஷயங்களுக்குப் பிரயோசனமுள்ளது. (வரும்)

## கர்ணன்.

(முன் தொடர்ச்சி)

கண்ணன் சென்ற பிறகு துரியோதனன் விதுரனை நோக்கி "நீ வலியினாலே எனது அரசினைப்பறித்துஎன் பகைவர்களுக்குக் கொடுக்க எண்ணிவந்த கண்ணனுக்கும்அவனது சேனைகளுக்கும் நீர் விருந்து செய்வித்தலாகுமோ? என் தந்தையுடன் பிறந்தும் இதுவரையினும் என் கைச் சோற்றை யுண்டுவந்தும் என்னுடைய பகைவனை உன்னுடைய பகைவனாகக் கருதாமல் என்ன மதிகொண்டு இவ்வாறு செய்தனை? ஆம், நீ தாசி புத்திரன் ஆதலால் இவ்வாறு செய்தல் உனக்கு ஏற்றதே." என்று கூறி,

முதல்விழைந் தொருவ னுடனி யைந்தபொருள்
பற்றி யின்புற முயங்கினும்
அதிக மென்றபொரு ளொருவன் வேறுதரி
னவனை போயொழிய வறிவரோ?
பொதுமடந்தையர் தமக்கு மண்ணிலிது
புதுமை யல்லவவர் புதல்வனும்
விதுர னின்றவனொ டுறவுகொண்டதொர்
வியப்பை யென்சொலி வெறுப்பதே"

என்று சபையை நோக்கிக் கூறினன்.

அதைக்கேட்டு விதுரர் கடுஞ்சினமுற்று துரியோதனனை பார்த்து உன் தந்தையாரைப்போலவே பாண்டவர்களின் தந்தையாரும் என்னுடன் பிறந்தவர். பாண்டவர் நற்குணங்களுடையோர். ஆதலின் அத்தகைய பாண்டவர்களுக்கு நான் உதவி புரியின் உன்னையன்றி மற்ற அரசர்களில் என்பாற் குற்றங் கூறுவரோ? இவ்வாறு என்னை அவமதித்துப் பேசிய உன் தலையை இப்பொழுதே துணித்துவிடுவேன். ஆனால்,

"மூத்தான் மகனை முனிந்திளையான் கொன்றனென்
றேத்தா வடுவுங் குலோனிலேனென் — பூத்தாமஞ்
செய்தபோர் வேத்தவையுட் டேர்வேந்தே நீயென்னை
வைதும் புகுமோ மறித்து."

நான் சொல்வதினின்று தவறுவனல்லேன். உங்களிருவர்க்கும் நேரும் போரில் யான் நின்று கணைதொடுக்கமாட்டேன். இது உறுதிமொழி என்று கூறித் தன் கையில் இருந்த வில்லை முறித்துவிட்டுத் தமது மனைக்குப் போய்விட்டனர்.

அதைக் கண்ட அரசர்கள் இத் துரியோதனன் அச்சுதன் வில்லையும், சிவன் வில்லையும் ஒப்பதாகிய தமது வில்லை முறிக்கும்படி செய்துவிட்டானே! இனிப் போரில் அர்ச்சுனன் வில்லேந்தி வந்து நின்றால் அவனையெதிர்த்து நிற்கவல்லார் யாவர்? என்று மனங்கலங்கலானார்கள். அப்போது பீஷ்மர் துரியோதனனை நோக்கி,

காரனைத்தும் விடுதாரை யன்னபல
கணைக ளேவியமர் கருதும்வில்
வீரனைப் பழுதுரைத்த நீ பகையை
யெங்ஙனே தனிகொல் வெல்லுவாய்
பாரனைத்துமினி யைவ ராளும்வகை
பண்ணு வித்தனை யழிந்ததுன்
போரனைத்தும் என உள்ளழிந்து சில பேசினர்.

அதைக் கேட்ட துரியோதனன் விதுரனையன்றி வேறு சிறந்த வில்வீரர் ஒருவரும் இல்லையோ? கொடையிற் சிறந்த அங்கர்கோன் வில்லொன்றுமே பாண்டவர்களை அவர்கள் சேனைகளோடு அழித்தற்குப் போதியதாகும். அதுவுமல்லாமல்,



"நீயி ருக்கநெடு விற்கை யாசிரிய
னவனி ருக்கநிக ரற்றவன்
சேயி ருக்கவிறன் மன்ன ரிப்படி
திரண்டி ருக்க வெதிர் சென்றுநேர்
வேயி ருக்குமித ழிடைய னுக்குநல்
விருந்து செய்தவன் வெறுக்கிலென்
போயி ருக்கிலென் முறிக்கி லென்சிலை
மலைந்து நம்மொடெவர் போர்செய்வார்?"

என்று கூறினான். அப்போது கர்ணன் பீஷ்மரை நோக்கி தேவர்களை இரண்டுவந் தெதிர்ப்பினும் என்னுடைய பாணங்களால் அழிவுறுவர். யான் இருக்க விசயனைப் போரில் வெல்லவல்லோர் இனி யாரிருக்கின்றனர் என்று கூறுகின்றீர். போர் நேருங் காலத்தில் இக் கண்ணபிரானே அவன் தேரிலிருந்து அதனைச் செலுத்தினாலும் அவன் முடியைக் கொள்ளாமல்விடேன். தேவர்களுடைய முடிகளையும் ஓர் இமைப்போதிற் கொள்ளவல்ல என்னுடைய வெம்பணிப் பகழிக்கு விசயன் தப்புவானல்லன். நான் இப்பொழுது அதிகமாகக் கூறுவதிற் பயனில்லை. போர்க்களத்திலே என்னுடைய வில்லாண்மையைக் காணலாகும். என்றனன். அதைக்கேட்ட பீஷ்மர்,

"திசைய னைத்தினும் வளைந்த தானவரை
யிரவி வந்தொரு திசையின்வாய்
நிசியெ னப்பொருது வான வர்க்கர
சளித்து வந்தவிற னீர்மையான்
விசய னுக்குநிகர் நீகொ லோகடவுண்
வெண்ம திக்குநிகர் வெள்ளியோ?
அசைவில் விற்றொழிலும் வல்லையோ"

என்று கூறினர். அதைக்கேட்ட கர்ணன், இம்மன்னனது பக்கத்திருந்து உணவுகொள்ளும் நீர் இம்மன்னனுடன் சிலர் பகைத்த காலத்தில் அவர்களின் ஆண்மையையும் புகழையும் எடுத்துக் கூறுகின்றீர். இது உமக்குத் தகுதியாகுமோ? சிவனும் என்னுடைய கணைகளுக்கு அஞ்சுவான். "புவனமொன்றுபட வரினுமென்றனொடு பொருவராயினெதிர் பொரவிடாய்" என்று மிகவுஞ் சினந்து கூறினான்.

பிறகு பீஷ்மர் "அவ்வண்ணமே, நீ போர்க்களத்திலே போர்புரிகலை அப்போது பார்ப்போம்" என்று கூறிச் சபையை விட்டுச் சென்றனர். பிறகு துரியோதனன் சபையிலிருந்து மற்றவர்களையும் விடைகொடுத்தனுப்பிவிட்டனன். இது நிற்க. முறிக்கப்பட்ட வில்லுடன் மனைக்கு வந்த விதுரரைக் கண்ணன் நோக்கி "அன்புடையீர்! அத்தினபுரியில் பீஷ்மர் வில்லும், விதுரர் வில்லுமாகிய இரண்டு சிறந்த விற்கள் இருக்கின்றன என்று யாவராலும் கொண்டாடப்படும் விற்கள் இரண்டனுள் ஒன்றாகிய உமது வில்லை ஒடித்துவிட்டதற்குக் காரணம் யாது" என்று கேட்டனன். அதைக் கேட்ட விதுரர்,

"ஆவது கருதனாகி லரசர்சொற் கேளா னாகில்
வீவது குறியானாகில் விளைவது முணரா னாகில்
நாவது காவனாகி லவனுக்கா நடந்து போரிற்
சாவது பழுதென்றன்றோ சகத்துளோர் சாற்று கின்றார்."

"செல்வம்வந் துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிது பேணார்
சொல்வன வறிந்து சொல்லார் சுற்றமுந் துணையு நோக்கார்
வெல்வதே நினைவதல்லால் வெம்பகை வலிதென் றெண்ணார்
வல்வினை விளைவுமோரார் மண்ணின்மேல் வாழு மாந்தர்"

"நினைக்கவுந் தொழவுமெட்டா நீயெழுந் தருளப் பெற்றுந்
தனக்கிது தகுதியென்று தமருடன் வாழ வெண்ணான்
மனக்கடுங் கனலினன்றன் மனத்தினா லுரைத்த புன்சொல்
எனக்கிசை யாமல் யானு மிருஞ்சிலை யிறுத்த தென்றார்"

அதைக்கேட்ட கண்ணன் விதுரரை நோக்கி, அன்புடையீர்! மிகுதியாக நெய்யை வார்த்துக் கட்டைகளை அடுக்கி வைத்தாலும் காற்றுவந்து கூடாதபோது நெருப்புப்பற்றியெரியாததுபோல நீர் போரில் துரியோதனனுக்குத் துணையாக வந்து நிற்காமற் போய்விடின் அவனுக்கு வெற்றி யுண்டாகாதென்பது உறுதியாகும். அறிவிற் சிறந்தீர்! உம்மை மதியாது அம்மன்னன் மொழிந்த புன்மொழிகளைப் பொறுப்பீராக." என்று கூறி அவரிடம் விடைபெற்றுக்கொண்டு குந்தியின் மனைக்குச் சென்றனன்.

(வரும்).

C. R. கோவிந்த ராஜு முதலியார்,
பண்டிதர், பச்சையப்பன் காலேஜி, சென்னை.

## பிதுர்வாக்ய பரிபாலனம்.

(முன் தொடர்ச்சி)

அங்கம்-2 காட்சி-1

இடம்:—கைகேயியின் மாளிகை.

கைகேயி நித்திரை செய்கின்றாள்.
மந்தரை பிரவேசிக்கின்றாள்.

மந்தரை:—(தனக்குள்) நல்லது (சுற்றுமுற்றும் பார்த்து) ஒருவரையுங்காணோம்; இதுதான் சமயம்; உள்ளே பிரவேசித்துத் தக்கபடி சொல்லி என் எண்ணத்தை முடிக்கின்றேன். ஏன்? இந்தக்காரியம் என் சுயநலத்தை மாத்திரம் எப்படிக் கருதியதாகும்? கைகேயிக்கும் பெரிய நன்மையைத் தருவதல்லவா? எஜமானிக்கு நன்மையைத் தேடுவது என்போன்ற தாதிகளுக்கு உசிதமான கடமை யல்லவா? ஜகதீசா! பரந்தாமா! பரமதயாநிதே! உன்னை நம்பிச் செய்யத் துணிகின்றேன். காரியம் கைவரச் செய்யவேண்டும்.

(பிரவேசிக்கின்றாள் அறைக்குள்)

ஓ! நித்திரையிலிருக்கின்றார்கள்! எப்படி நித்ராபங்கம் செய்வது? (மௌனம்) நித்திரை பங்கமானால்தா னென்ன? நல்ல செய்தியைச் சொல்ல வந்தேனாகையால் கோபியார்கள். இருக்கட்டும்; மெதுவாய்க் காலைப்பிடிப்பதுபோலப் பிடித்து எழுப்புகின்றேன்.

(உட்கார்ந்து காலைப்பிடிக்கின்றாள்)

கை:—(எழுந்துட்கார்ந்து) யார்? மந்தரையா? ஏன்? எழுப்பினாயா? என்ன விசேஷம்? இப்போதுதான் படுத்துக் கண்ணயர்ந்தேன்.

மந்:—எழுப்பவில்லை. காலைத்தொட்டேன்: எழுந்துவிட்டீர்கள். அவசரமான காரியமிருக்கிறது.

கை:—என்ன அப்படி! யாருக்கென்ன? மஹாராஜா கூப்பிடுகிறாரா? அல்லது வருகிறாரா?

மந்:—மஹாராஜாவுக்கு உங்கள் நினைப்புத்தான் எப்போதும், இல்லையா? நல்லது. அவர்கள் காரியம் எங்கேயோ, கவனம் எங்கேயோ, உங்களுக்கு வீணெண்ணம் கிடந்து மனஸிலே பாதிக்கிறது. இது வழக்கந்தான், புதுமையல்ல.

கை:—என்னடி மந்தரே! திடுக்கிடும்படியாக இருக்கிறதே உன் பேச்சு! என்ன சொல்.

மந்:—நானெதைச் சொல்லட்டும்; வெளுத்ததெல்லாம் உங்களுக்குப் பால். கறுத்ததெல்லாம் நீர்; நீங்கள் என்ன செய்வீர்கள்! இப்படியு மிருப்பாளா ஒரு ஸ்திரீ!

கை:— என்னடி இது! தூக்கத்திலிருக்கிறவளை எழுப்பி மனம் துடிக்கும்படியாகச் செய்கின்றாய் சொல், சங்கதியை!

மந்:—கோபிக்கவேண்டாம்! இந்த மந்தரை எப்போதும் உங்களுக்கு இதம் சொல்லுகிறவள் என்று நம்புங்கள். இவள் பேச்சை நம்புங்கள் நன்மையே யுண்டாகும்.

கை:—இருக்கட்டும் சொல்.

மந்:—அம்மா! உங்களுக்குக் கொஞ்சமும் புத்தியில்லை. பெரிய ஆபத்து உங்களுக்குண்டாயிருக்கிறது. அதை யறியாமல் நித்திரை செய்கிறீர்களே! ஆபத்து வந்ததை யறியாமல் பெரிய பெரிய அதிர்ஷ்டம் வந்துவிட்டதாக வெண்ணி மகிழ்ந்துகொண்டிருக்கிறீர்! இந்த மகிழ்ச்சி கோடைகாலத்து வெள்ளம் போல் நிலைத்திராது.

கை:—ஆ! ஆ! அடி மந்தரே! இப்பொழுது அப்படிப்பட்ட ஆபத்தென்ன வந்துவிட்டது?

மந்:—(தனக்குள்) கைகேயிக்கு க்ஷேமமுண்டாக வேண்டுமென்பதும், இராமனுக்கும் கைகேயிக்கும் பகையுண்டாக வேண்டுமென்பதும் என் எண்ணம்; பார்க்கின்றேன். (பிரகாசமாய்) மதியுடையவர்களுக்குத்தான் கதி; உமது நன்மை அழிந்தது. செல்வம் ஒழிந்தது. கோஸலை யம்மாள் அவர்களுடைய அறிவால் வாழ்வு பெற்றார்கள்.

கை:—என்னடி அப்படிச் சொல்லுகின்றாய்? எனக்கு நாயகன் மன்னர் மன்னன். எனக்குப் புத்திரன் அரிய பெரிய புகழ் பெற்ற பரதன். இதன்மேல் கோஸலையம்மாளுக் குற்ற வாழ்வென்னடி?

மந்தரை:—அம்மா! இராமருக்குப் பட்டங்கட்டப்போகிறார்கள் நாளைக்கு. இதை யறிந்த என் மனம் சகிக்கவில்லை. உங்களுக்கு இச்செய்தி தெரியாதே! அடடா! அம்மணீ! உமது



நன்மையை நாடி இப்போது இங்கே ஓடிவந்தேன். தங்களுக்கு க்ஷேமம் உண்டாமாயின் அப்பொழுது எனக்கும் க்ஷேமம் உண்டாகுமென்பது எனது நிச்சயமான எண்ணம். நீரும் அரசனுக்குப் பட்ட மகிஷிதானே? அரசனுடைய வார்த்தைகளெல்லாம் அரச தருமத்திற் கேற்றவைபோ லிருந்தாலும் எல்லாம்உண்மையில்மோசக்கருத்தை யுத்தேசித்தனவேயாம். இது உங்களுக்குத் தெரியவில்லை. நீங்கள் அவருடைய வார்த்தையில் நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள். அவர் உம்மிடம் இனிமையாகப் பேசுவதைப் பார்த்து நீர் மோசம் போகிறீர். சமயம் பார்த்துக் கௌஸலைக்கு ஸம்பத்தைக் கொடுத்துவிட்டார். பரதர் இங்கிருந்தால் பட்டாபிஷேகத்திற்கு ஏதேனும் தடையேற்படுமென்று கருதியே அவனை முன்பே மாமன் வீட்டிற் கனுப்பிவிட்டார். இதனாலேயே நீர் அவருடைய நடத்தையை யறிந்துகொள்ளலாம். இது ஒன்றும் தங்களுக்குத் தெரியவில்லை. அரசர் உம்மையும், உமது குமாரரையும் மோசஞ் செய்து விட்டார், அவர் மகாபாபி. இராமனுக்குப் பட்டங்கட்டினால், உமக்கு இங்கேது சுதந்தரம்? நீர், உமது மகன், உறவினர் இவர்களோடு அழிந்துபோனதாகத்தான் கொள்ளவேண்டும். சமயோசிதமான அறிவுடைய அம்மணி! உமக்கு வேண்டிய நன்மையை இப்போதே தேடிக்கொள்ளுங்கள்; உங்களையும் உங்களுடைய பிள்ளை பரதனையும், உம்மை யடுத்திருக்கும் என்னையும் காப்பாற்றவேண்டும்.

கை:—(தனக்குள்) இராமன் மகுடாபிஷேகம் செய்து கொண்டாலென்ன? நமக்கென்ன தாழ்வு அதில். (பிரகாசமாய்) மந்தரே! இந்தா முத்தாரம்! வாங்கிக்கொள்.

மந்தரை:—(தனக்குள்) நமது கருத்திற்கிசைந்து விட்டனர் போலும் சந்தோஷம்.

(முத்தாரத்தைப் பெற்றுக் கொள்கிறாள்.)

கை:—மந்தரே! இராமனென்றும் பரதனென்றும் வித்தியாசமெனக்கில்லை. ஆதலால் இராமனுக்குப் பட்டாபிஷேகமாவது பற்றி எனக்குப் பரமசந்தோஷம். அதைவிட வேறு சந்

தோஷ சமாசாரமெனக் கென்ன இருக்கப்போகிறது? நீ இப்போது கூறிய வார்த்தைகளில் இராமனுக்குப் பட்டாபிஷேகம் என்ற நல்ல சமாசாரமொன்றே எனக்கு நான் என்று மடையாத ஆநந்தத்தைக் கொடுத்தது. ஆகையால் எதை நீ கேட்டாலும் கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன்.

(மந்தரை முகஞ் சுளித்துக் கையில் வைத்திருந்த முத்தாரத்தை யெறிகின்றாள்.)

மந்தரை:—உமக்கு அறிவே இல்லை. அறிவிருந்தால் இச்சமயம் சந்தோஷப்படுவீரா? நீர் துக்கக் கடலில் மூழ்கியிருந்தும் அதை யறியாது பேசுகின்றீர். கௌஸலைக்கு அதிர்ஷ்டம் வந்துவிட்டது. பாக்கியம் அவளை யடைந்துவிட்டது. அந்தக் கௌஸலைக்கு இனிமேல் நீங்கள் அடிமைதான். பரதரும் இனிமேல் இராமனுக்கு முன்னிலையில் கைகட்டிக்கொண்டு நிற்கவேண்டியவரே! இதற்குத் தக்கவழி தேடாவிடில் நீர் பெரும் மோசம் போவீர். சொல்லிவிட்டேன். நீர் இப்போது ஆராய்ந்து பாரும். பரதனுக்கு இராஜ்யம் கிடைக்குமாயின் நாமெல்லாம் எப்படி யிருப்போம்! இதைச் சிறிதும் அறியாது பேசுகின்றீர்! இராஜ்யத்தில் பரதனுக்குப் பாத்திய முண்டல்லவா?

கை:—மந்தரே! கேள்—கத்தாதே.

"எனக்கு நல்லையு மில்லைநீ யென்மகன் பரதன்
தனக்கு நல்லையு மில்லையத் தருமமே நோக்கில்
உனக்கு நல்லையு மில்லைவந் தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்".

நீ சொன்னது எனக்கும் என் மகன் பரதனுக்கும் நல்லதல்ல; தருமமாகப் பார்த்தால் உனக்கும் நல்லதல்ல; வினைப்பயன் தூண்டுதலால் நீ உன்மனத்திற் கிசைந்தது கூறினாய். நீநினைத்தது சரியல்ல; நியாயமல்ல; அடியே மந்தரே! இராமனைப் பற்றி நீநினைப்பது சரியாயில்லை. அவன் மிகுந்த தரும சிந்தனையுள்ளவன். பெரியாரிடத்துப் பழக்கமுடையவன். அவர்களால் நல்ல வழிக்குக் கொண்டுவரப்பட்டவன்.



நற்குண நற்செய்கைகளுடையவன். நன்றிமறவாதவன். அடீ! அவன் உண்மையையே பேசுபவன். இராஜதர்மப்படி அவன்தான் இந்த இராஜ்யத்திற் குரியவன். அவன் தன் சகோதரர்களிடமும், ஊழியர்களிடமும் ஈன்ற தாயைப்போல் அன்பு பாராட்டும் இயல்புடையவன். அந்தக் குணமணியின் பட்டாபிஷேகத்தைக் குறித்து ஏன் நீ விசனப்படுகிறாய்? இராமனுக்குப் பிறகு இந்த இராஜ்யம் பரதனுக்கே கிடைக்கும் என்று நினைத்துக்கொள். இந்தப் பட்டாபிஷேகம் நம்மெல்லோருக்கும் ஆநந்தத்தையே கொடுப்பதாகும். இராமன் என்னிடம் தன் தாய் கௌஸலையிடத்து வைத்திருப்பதைவிட அதிக அன்புடையவனாகவே யிருக்கின்றான். அவனுக்கு இராஜ்யங் கிடைத்தால் அது பரதனுக்கு கிடைத்தாப்போல்தான்.

மந்தரை:—(துக்கிக்கின்றாள். பெருமூச்சுவிடுகிறாள்.) நீர் சிறிதும் ஆராயாமலே பேசுகின்றீர். இராமனுக்கு இப்போது கிடைக்கும் இராஜ்யம் அவனுக்குப் பிறகு யாருக்குக் கிடைக்கும்? யோசித்துப் பார்த்தீரா? இராமனுடைய புத்திரனுக்கல்லவா கிடைக்கும்; இதுகூடத் தெரியவேண்டாமா? ஐயோ! இராமனுக்கு இராஜ்யம் சுதந்தரமாய் விடின் பிறகு பரதனுக்கேது பாத்தியம்? பைத்தியம்போல் பேசுகின்றீரே! நான் இவ்வளவு சொல்லியும் தெரியவில்லையே! உமக்குக் கோபந்தான் அதிகமாயிருக்கிறது. உமது புத்திரனுக்கு இப்போது இராஜ்யங் கிடைக்கவில்லையானால் பின்னால் உமக்குக் கஷ்டந்தான். இதை நான் தெரிவிப்பதற்கே வந்தேன். என் கருத்தைத் தெரிந்துகொள்ளாமலே பேசுகின்றீர். என் பிரயாசம் கடைசியில் வீணாகும்போலிருக்கிறது. அம்மணீ இராஜ்ய பதவியை இராமன் ஏற்ற பின்பு பரதனிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்ள அவன் எண்ணுவான். அப்போது பரதனுக்கு உயிர்ச்சேதம் நேரிடினும் நேரும். பணத்தாசை எதைத்தான் செய்யத் துணிவு கொடாது? இலக்ஷ்மணனுடைய விஷயம் வேறு; அவன் இராமனிடமே எப்போதும் இருக்கின்றான். அருகே பழகினவரிடத்து யாருக்கும் அன்புண்டாவது வழக்கந்தானே. ஆதலால் அவனுக்கு இராமன் ஒரு தீங்கும் செய்யான் என்

பது நிச்சயம். இந்த விபரங்களை நீர் யோசித்துப்பாரும். தாயைவிடப் பிள்ளைக்கு இதந்தேடுவார் யாரேனு முண்டோ? ஆகையால் இச்சமயம் நீர் பரதன் விஷயத்தில் பராமுகமாயிருந்தால் அவன் துன்பப்படுவதுமன்றி நாமெல்லோருமே பெருந்துயரத்துக்காளாக வேண்டும். என் பேச்சைத் தட்டாமல் பரதன் பாராளவும் இராமன் வனத்திற் கேகவும் வழியைத் தேடும்.

கை:—(யோசிக்கின்றாள் சற்றுநேரம்) (தனக்குள்.) இந்த மந்தரை கூறுவது நியாயந்தான். இராமன் ராஜ்யத்திற்கு வந்துவிட்டால் எப்படி யிருப்பானோ யார் கண்டதை! ஸம்பத்து பல யடியாக மனிதனை மாற்றிவிடுமல்லவா? இதை நாம் எண்ணிப் பார்க்கவேயில்லை! இப்போது இருப்பதுபோல் பிரியமாக இருந்தால் தப்பிலேனும்! இல்லாவிட்டால் சக்களத்திக்குக் கீழ்ப்படிந்து நடப்பதெப்படி? என்ன மதியீனம் என் நாதனுக்கு? பரதனை விரட்டிவிட்டு இந்தக் காரியம் செய்யத் துணிந்தாரே! அவனிருந்தால் இவர் பேச்சை மறுப்பானோ? அடா! இருக்கட்டும்—(பிரகாசமாய்) மந்தரே! நீ இங்கே வா! இப்போதுதான் என் மனத்திற்குப் பட்டது. நீ சொன்னதெல்லாம் உண்மைதான். அரசன் அவ்வாறு செய்திருப்பார். அடியே! இராமனை வனத்திற் கனுப்பவும் பரதனைப் பாராளும்படி செய்யவும் ஒரு யுக்தி யோசித்துச் சொல் பார்க்கலாம்.

மந்தரை:—அப்படிச் சொல்லுங்களம்மா! என் வயிற்றில் பால் வார்த்தீர்கள் இப்பொழுது! தங்களுக்கு யுக்தி யொன்றும் கிடைக்காதா?

கை:—இச்சமயம் ஒன்றும் ஏற்றதாய் மனத்திற்குப்படவில்லை. நீ யொன்று யோசித்துச் சொல் பார்ப்போம்.

மந்,—சொன்னால் அப்படிச் செய்வீர்களா? தவறமாட்டீர்களே? நான் சொல்லப்போகும் யுக்தியில் நல்ல பிடிப்பிருக்கிறது. அப்படியே செய்யவேண்டும்.

கை:—என்னடி இன்னுமா நீ சொல்லவேண்டும்; ராமனைக் காட்டுக்குத் துரத்தாவிட்டால் என் பேரை மாற்றிக்கூப்பிடு.



மந்:—அப்படியா நல்லது! அம்மா! முன் நடந்த தேவாசுர யுத்தத்தில் உம்முடைய உதவியைப் பெற்ற அரசர் உமக்கு இரண்டு வரம் தந்ததாகவும் அவைகளை வேண்டும்போது நிறைவேற்றிக்கொள்ளும்படி அவர் உமக்கு வாக்களித்திருப்பதாகவும் எனக்கு முன் நீர் சொல்லியிருக்கின்றீர்களல்லவா? அது நினைவிருக்கின்றதா? அவ்விரண்டனுள் ஒன்றால் இராமன் பதினான்கு வருஷம் காடேகவும், மற்றொன்றால் பரதன் இந்நாடாளவும் செய்து கொள்ளுங்களேன்? என்ன யோசனை? இதில்தான் உங்களுக்குப் பிடிப்பிருக்கின்றது. அரசர் வாக்குத் தவறாரானதால் நீர் கேட்பதற்கிணங்காமலிரார். மறுக்காமல் செய்வார். இந்த யுக்தி தவறாது.

கை:—மந்தரே! நன்றாய்ச் சொன்னாய்? நல்ல யுக்தியிது; அசைக்க முடியாது இதை! அடியே! நீ புத்திசாலி யென்பதில் சந்தேகமில்லை. எனக்கு உன்னைப்போல் தாதி யிருக்கிறவரையில் குறை யெப்படி உண்டாகும்? நீதான் மனமொத்த தாதி? இதை எவ்விதத்திலும் நிறைவேற்றி விடுவேன். சந்தேகப்படாதே. சும்மாவா அரசன் எனக்குச் செய்யப்போகின்றார். யுத்தத்தில் உதவிசெய்யவில்லையா? இந்தஸ்திரீ! இந்தக் கைகேயி இல்லாமற் போனாலல்லவா தெரியும் அன்றைக்கு! இதோபார் என் ஆபரணங்களைக் கழற்றி யெறிந்துவிட்டுத் தலைவிரிகோலமாய்க் கோபகிரகஞ்சென்று படுத்துக்கொள்ளுகின்றேன் இந்த நிமிஷமே! அப்போதுதான் வழி பிறக்கும்.

(கைகேயி ஆபரணங்களைக் கழற்றுகிறாள்.)

ம:—நல்லதம்மா! காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டாமா? அப்படியே செய்யுங்கள்; நான் போகிறேன்.

(போகின்றாள்)

(வழியில்நின்று) நல்லவேளை! நான் புறப்பட்டுவந்த வேளை நல்லவேளை! காரியம் பலித்தது! இந்த மந்தரை நினைத்ததை முடிக்காமற் போவாளா? இதை யெல்லாம் முடிக்காவிட்டால் ஆனவயதிற்கும் அநுபவத்திற்கும் பெருமை என்ன இருக்கும் உலகில்?

வரகவி - திரு. சி. சுப்ரமணிய பாரதி.

## பக்தி.

(முன் தொடர்ச்சி)

"அவஜாநந்தி மாம்மூடா மானுஷீம் தனுமாச்ரிதம்
பரம்பாவ மஜானந்தோ மமபூத மஹேச்வரம்."

(பகவத்கீதை அத் - 9, சுலோ - 11.)

"என்னுடைய உண்மை வடிவத்தை யறியாத மூடர்கள், அனைத்திற்குந் தலைவனாகிய என்னை மனித உடலைத் தாங்கி நிற்பவனாகக் கருதி இகழ்கின்றார்கள்." இவ்வாறெல்லாம் அவதாரங்களைப்பற்றி பகவான் கீதையிலருளி யிருக்கின்றார். பகவான் ஸ்ரீராமக்ருஷ்ண பரமஹம்ஸர் இவ்வாறு கூறுகின்றார்:—"கடலானது மிகவுங் கொந்தளித்துப் பொங்கும்பொழுது, சிறிய ஆறுகள், குளங்கள் முதலியவை அவற்றின் யாதொரு முயற்சியுமின்றியே நிரம்பிப் பெருகி வழிந்தோடுகின்றன; அதுபோலவே கடவுளது ஓர் அவதாரந் தோன்றும்பொழுது கடவுளருளாகிற ஒரு பெருங் கொந்தளிப்புண்டாகி உலகம் முழுவதும் பரவுகின்றது; அதனால் எல்லா மனிதரும் பரிபூர்ணமான ஆத்ம ஞானத்தை யடையப் பெற்றுப் பேரின்பமுற்றவ ராகிறார்கள்."

### ௩. ஓங்கார மந்த்ரம்.

(ஒலிப்பிழம்பு.)

ஆனால் இவ்வாறான பெரியோர்களைப் பற்றியல்ல நாமிப்பொழுது விளக்கப் புகுந்தது. மேலான (ஸித்தி) நிலைகளையடைந்தவர்களான சில நல்லாசிரியர்—ஸத் குருமூர்த்திகளைப் பற்றி மட்டுந்தான். இவர்கள் த்யான யோகங்களான மந்த்ரங்களி னுதவியைக் கொண்டுதான், மாணவர்களுக்குப் பரமார்த்த ஞானத்தை யுபதேசிப்பது. அந்த மந்த்ரங்கள் யாவை? உலகுமுழுவதுமுள்ள எல்லாப் பொருள்களும் பெயருடனும், வடிவுடனுங் கூடியதாய்த்தான் விளங்குகின்றன. வ்யஷ்டி—பிரிந்த ரூபமான மனித சரீரத்திலுள்ள அந்தக்கரணத்திலிருந்து நாம ரூபவேற்றுமைகளையன்றி யாதொரு எண்ணமுந் தோன்றுவதில்லை. உலகைத் தோற்றச் செய்வதில் ஒரு ஏற்பாடுதான் எங்கும் பரவி யிருக்கிறதென்பது ஒழுங்குதானெனில் இவ்வாறுள்ள (நாமரூப) வேற்றுமைகளைப் பின்பற்றியே எல்லாவுயிர்களுந் தோற்றுவனவா யிருத்தல்வேண்டும்.

"யதா ஏகேன ம்ருத்பிண்டேன விஜ்ஞாதேன
ஸர்வம் விஜ்ஞாதம் பவதி."

"எப்படி ஒரு மண்ணுருண்டையி னியற்கை இவ்வாறெனத் தெரிந்தால் மற்ற மண்ணின் இயல்பு மப்படியே என நன்கு விளங்குகின்றதோ" அதுபோல வ்யஷ்டி சரீரத்தின் ஞானத்தைக்கொண்டு ஸமஷ்டி சரீர ஞானமானது தானே யுண்டாய்விடும். ரூபம் (வடிவம்) என்பது ஒரு பழத்தின் மேலுள்ள தோல் அல்லது ஓடுபோலவும், நாமம் (பெயர்) என்பது சாறு அல்லது உள்ளே யுள்ள குழம்புபோலவு மிருக்கின்றது. ஸ்தூல சரீரம் ரூபமாயும், ஸூக்ஷ்ம சரீரம் (மனம்) அல்லது அந்தக்கரணம் நாமமாயு மிருக்கின்றன. ஒலிக்குறிகள் எப்பொழுதும் பெயரைச் சார்ந்திருக்கின்றன. மனிதரிடத்து எல்லா எண்ணங்களும், அந்தக்கரணத்தில் (அல்லது பிரிவற்ற பெருந் தத்துவத்தில்) தோன்றி முதலில் சொற்களாகவும் பிறகு ஸ்தூலகாரண(ரூப)ங்களாகவுந் தோன்றி விளங்குகின்றன.

உலகத்தில் ப்ரஹ்மா - ஹிரண்ய கர்ப்பன் - அல்லது மஹத்தத்வம் முதலில் நாமமாயும், பிறகு ரூபமாயும், இந்த உலகவடிவமாயும், தன்னைத்தானே விளங்கச்செய்து கொண்டது. வெளிப்படையாய்ப் புலன்களுக்குத் தோன்றுகின்ற, (ஸ்தூலாகாரமாயிருக்கின்ற) இந்த உலகம் ரூபமா யிருக்கின்றது. அதன் பின்புறத்தில் (உள்ளே) அழிவற்றதாயும் நன்கு விளங்காததாயுமிருக்கும் "ஸ்போடம்" (விளங்கச் செய்வது.) என்பதனாற் காத்துவரப் படுகின்றது. எல்லாப் பெயர்களுக்கும் அல்லது எண்ணங்களுக்குங், காரணமாயும், இன்றியமையாத கருவியாயும், அழிவற்றதாயு மிருக்கின்ற இந்த "ஸ்போடம்" அல்லது "ஸ்போடகம்" "மலர்தல்" என்ற வல்லமை வாயிலாகத்தான் கடவுள் உலகத்தைத் தோற்றுவிக்கின்றார். கடவுளே முதலில் "ஸ்போட (விளக்குபவ)ராயும்" பிறகு முறையே பொறிபுலன்களுக்குத் தென்படும் ஸ்தூல ப்ரபஞ்சமாயும் மாறித் தோன்றுகின்றார். இந்த "ஸ்போட" மலர்ச்சியின் பெயரைக் குறித்து விளக்குவதற்கான ஒரு சொல்மட்டுமே யிருக்கின்றது. அது "ஓங்

கார" மாகும். எந்த விதத்திலும், சொல்லையும் பொருளையும் வேறுபடுத்திக்கூற வியலாததால் ஓங்காரமும், அழிவற்ற "ஸ்போடமும்" அதாவது ஓங்காரத்தை விளங்க - மலரச் - செய்வதும் யாதொரு வேற்றுமையும் (பிரிவு) மின்றி ஒன்றாகவே யிருக்கின்றன; ஆதலாற்றான் மிகத்தூய—பரிசுத்தமான—தாயும், எல்லாப் பெயர் வடிவங்கட்கும் விதையாயும், எப்பொழுது முள்ளதாயு மிருக்கின்ற இந்த "ஓங்கார" த்திலிருந்தே உலகனைத்து முண்டாக்கப்பட்டிருக்கின்றதென்று கருத—ஊகிக்க—வேண்டியிருக்கின்றது. "ஆனால் சொல்லும் பொருளும் பிரிவற்றிருக்கின்றதென்றாலும், ஒரு பொருளைச் சுட்டிவிளக்கப் பல சொற்களைக் கையாளவேண்டி யிருப்பதினால் இந்தத் தனியான "ஓங்கார" பதம் உலகமுண்டாவதற்குக் காரணமாகவும், இன்றியமையாததாகவும் இருக்கின்ற சொல்லா யிருக்கவேண்டுமென்பதில்லை." என்றொரு அவஸரத் தீர்மானம் (பூர்வபக்ஷம்) தோன்றலாம். அதற்கு விடை என்னவெனில்:—எல்லாவற்றையு மடக்கியுள்ளதாகிய ஆற்றல் "ஓங்கார" த்திற்கு மட்டுமே யுண்டு. அது போன்ற வல்லமை வேறொன்றற்குமில்லை. "மலர்தல்" என்பது எல்லாச் சொற்களுக்குந் துணைக்காரணமா யிருக்கின்றது. எனினும் அது முற்றுபெற்ற உறுதியான உண்மைப் பொருளாகாது என்றெண்ணில், ஒரு சொல்லினின்றும் மற்றொரு சொல்லைப் பிரித்தறிவதற்கான எல்லாக் குறிகளையும் நீக்கிவிட்டால் பிறகு எது மிகுந்திருக்கிறதோ அது "ஸ்போடம்" எனப்படும். அதனையிந்த "நாதப்ரஹ்மம்" அதாவது "ஒலிக்கடவுள்" எனக் கூறப்படுகின்றது. எல்லாச் சொற்களும் சுட்டிக் கூறுவதற்கியலாததான "ஸ்போட" மலர்ச்சியைத் தான் குறிப்பிடுகின்றது. ஆனால் அவை ஸ்போடத்தினது ஒரே யொரு பொருளை மட்டுந்தான் விளக்குகின்றது. எவ்வாறெனில், ஒவ்வொரு சொல்லும் பிறபொருள்களினின்றும் வேறுபட்ட ஒரு தனித்தனிப் பொருளைமட்டுங் குறிப்பதாகும். * அப்பொழுது அதனை "ஸ்போட" மென்று கூறமுடியவில்லை. அதாவது (எல்லா

* "பசு" என்ற சொல் மனிதர், மரம், முதலியவற்றினின்றும் வேறாயுள்ள "ஆ" (பசுமாடு) இனத்தைமட்டுங் குறிக்கின்றது. இவ்வாறெல்லாச் சொற்களும் ஒவ்வொரு விசேஷப் பொருள்களை மட்டும் விளக்குகின்றன.



விசேஷப் பொருள்களையு மொதுக்கி யிருக்கின்ற) ஸ்போடத்தினுடைய மிகவும் ஸாமான்யமான பொருளைச் சுருக்காது அதன் முழு இயற்கையையும் விளக்க எந்தச் சொல்லுக்கு வல்லமையுண்டோ, அந்தச் சொல்லே அதைக் குறிக்கும் பொருத்தமானதாயிருக்கும். அவ்வாறுள்ள சொல்லே "ஓங்கார" மெனப்படும். அஃதாவது அ+உ+ம் (ஓம்) என்ற மூன்றெழுத்துக்களைச் சேர்த்திருக்கின்ற ஓங்காரம் எல்லா ஒலிகளுக்கும் பொதுவான ஒரு அடையாளமாகும். "அ"வென்ற எழுத்தானது எல்லா ஒலிகளைக் காட்டிலும் (முதலாயிருந்து) மிகவுங் குறைந்த வேற்றுமைமட்டும் அடைந்துள்ள ஓர் ஒலியாகும். (முதல் ஒலிக்கு மிகவு மடுத்துப் பொருத்தமாயிருப்பது "அ" என்ற எழுத்து. அதனாலேயே ஸ்ரீ க்ருஷ்ணபகவானும் கீதையில் "அக்ஷராணாம் அகாரஸ்மி" எழுத்துக்களுக்குள்ளே "அ" என்ற எழுத்தா யிருக்கின்றேன்." என்று திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றார். வெளிப்படையாய்ச் சொல்லத்தக்க எல்லா வொலிகளும் "தொண்டை முதல் உதடு வரை" யி லுள்ள ஒவ்வோரிடத்தினின்றும் உண்டாகின்றது: தொண்டை முதல் உதடுவரையிலுள்ள எல்லா ஒலித் தோற்றங்களையுங் குறிப்பதாயுள்ள எழுத்து "உகார" மாகும்; "அகாரம்" முதலெழுத்தும், "மகாரம்" (அநுஸ்வரம்) உதட்டிலிருந்து முடிகின்ற கடைசி எழுத்துமாகும். ஆதலால் இந்த "ஓங்காரம்" ஒழுங்காய் உச்சரிக்கப்பட்டதானால், ப்ரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருள்களையுங் குறிக்கின்ற எல்லா ஒலியடையாளங்களும், இதில் உள்ளாழ்ந்து கிடக்கின்றன (எனவறிவோம்.) வேறெந்தச் சொல்லுக்கு மிந்த வல்லமையில்லை; ஆகையால், "ஓங்காரமே" ஸ்போடத்தை விளக்குவதற்கு மிகவும் பொருத்தமான—எழுத்து—அடையாளம்; "ஓங்கார" மென்னுஞ் சொல்லின் பொருளும், அது (ஸ்போடம்) தான். சொல்லும் பொருளும் வேற்றுமையற்று விளங்குவதால் "ஓங்காரமும்," ஸ்போடமும் ஒன்றேயாகும். ஸ்போடம் எல்லாப் பொருள்களுக்கும் (ப்ரபஞ்சத்திற்கும்) வேர் (மூலம்) ஆக இருப்பதனாலும் அது மிக நுண்ணியதாகையாற் கடவுளிடத்து மிக அருகிலிருப்பதனாலும், உண்மையில் அது கடவுளது முதல் தோற்றமா யிருப்பதனாலும், இந்த "ஓங்காரமே" கடவுளைக் காட்டும் "ஓர்குறி" யா யிருக்கின்றது. அறிஞர்கள் "அகண்ட ஸச்சிதானந்தப் பரப்

ரஹ்ம"மாகிய கடவுளைச் சில விசேஷ குணங்களோடு கூடிய நிலைமை வாயிலாக மட்டுமே த்யானி - நினைக்கக்கூடுமென்பதெப்படியோ, அதுபோலவேதான் அவரது உடலா யிருக்கின்ற எல்லாப் பிரபஞ்சங்களையும், * அவரவரது உள்ளத்தின் வல்லமைக்கேற்பமட்டுமே தான் (மனிதர்களால்) த்யானிக்க இயலும்.

ஒவ்வொருவருடைய உள்ளத்திலெவ்வெவ்வுண்மை (தத்வங்)கள்மிகுந்திருக்கின்றனவோ அவற்றிற்கேற்பத்தான் அவர்களால் கடவுள் த்யானிக்கப்படுகின்றது. அதனாலேயே ஓரே கடவுள் பலவாறான விசேஷ குணங்களுடன் தோன்றி விளங்குகின்றார். அவ்வாறே ப்ரபஞ்சமும் பலர்க்குப் பலவாறாகத் தோன்றுகின்றது. இப்படிப் பல குணங்களோடு கூடியிருக்கின்ற கடவுளது பல் நிலைமைகளை விளக்குவதற்குத் தனிமையான குறிகளின்றியமையாதனவா யிருக்கின்றன. எப்படி "ஓங்கார"மானது கடவுளது அகண்ட (பிரிவற்ற) நிலைமையை விளக்குகின்றதோ, அப்படியே, அவ்வாறான பல குறிகள் பற்பல பிரிவான (கண்ட) நிலைமைகளைக் குறிப்பனவையா யுள்ளன. அவைகளெல்லாங், கடவுளை த்யானிப்பதற்கும், மெய்யறிவைப் பெறுவதற்கும் உதவியா யிருக்கின்றன.

விண்ணாற்றுமுடிச் செல்வனார்.

நீதிசாரம்.

## சூது.

சூதாடுதல் மிகவுங்கொடியது. அச்சூதால் வரும்பொருளினிடத்து இச்சைவைப்பது அதனினுங்கொடியது. ஆதலால் அதனையொருகாலும் நினைத்தல் கூடாதாம்.

ஒருவன் சூதின்னதென்று அறியாதவனாக விருந்தாலும், அவன் சூதாடு மிடங்களிற் றங்கி யிருப்பானாயின், அவ்வழியால் வரும் பழிபாவங்களுக்கு அவனுமுடன்படவேண்டி யிருக்குமாதலின், அவனுக்கு உடனே தீங்குவரும்.

சூதாடுதலில் ஒருவனை ஜயிக்கதக்க வல்லமையுடையவனாக விருந்தாலும் தோல்வியடைவது ஸித்தமே. அதில் வெற்றிபெற்று ப்ரயோஜனத்தை யடைவதில்லையோ'வென்னின், அந்த ப்ரயோஜனமும், இரையால் மறைந்த தூண்டிலினிரும்பை மீன் விழுங்கியதுபோலவே யாகும்.

சூதாடுதலா லுண்டாகும் ப்ரயோஜனம் கொஞ்சமாக விருக்கினும் அது இன்னும்பெறலாமென்கிற விருப்பதை யுண்டாக்குகின்றமையின், பின்பு நேரிடும் நஷ்டம் மிகவுமதிகமாக விருக்கும். ஆதலால், முதலிலுண்டாகிய கொஞ்சப்ரயோஜனம் ப்ரயோஜனமல்ல வென்பது நன்றாய்விளங்குவதுமன்றி அத்தன்மையுடைய சூதாடலை விரும்பியவர்கட்கு அறமும்இன்பமுமில்லை யென்பதும் ப்ரகாசமாகத் தோன்றாமற் போகாது.

உருள்கின்ற பாச்சிகையினால் வரும்பொருள் எவ்வளவாக விருக்குமோ தெரியாது. ஆனால் அதனால் போகும்பொருள் அரசனுடைய பொக்கிஷத்தி லிருக்கும் த்ரவ்யத்திற்கும் அதிகமாகவே யிருக்குமென்பது மெய்யேயாம்.

பலதுன்பங்களையு முண்டாக்கிப் புகழை யழிக்கின்ற சூதாடுதலைப்போல வறுமையைத்தருவது வேறொன் றில்லையெனக் கருதுதல் வேண்டும்.

சூதாடுதலையும் அதனிடத்தையும் அதற்குவேண்டுந் தொழிலையும் மேற்கொண்டவர்கள் ஒருகால் உயிருடனிருந்தும், இல்லாதவர்களாவார்கள்; நளன், பாண்டவர் சூதாடியதனால் ஸகல மேன்மையையு மிழந்து வனவாஸஞ்செய்து வறுமையடைந்தனுலே இருந்து மில்லாதவர்களானார்கள்.

செல்வத்தையழித்து வறுமையைக்கொடுக்குஞ் சூதாடலை விரும்பி வெற்றிதோற்பறியாமல் அதிலே உழன்று திரிகின்றவர்கள் இஹத்தில் பெருமையையும் சௌக்யத்தையு மிழப்பார்களென்பதும் பொய் - களவு முதலாய பாபக்கிர்த்தியங்களைக் குறித்து ஏவப்படுகையால் மறுமையில் நரகபாதைக்கு பாத்ரர்களாவார்களென்பதும் பிரசித்தமாம்.

ஆதலால், சூதென்னுங் கெட்ட செய்கையைவிட்டுப் பகவானிடத்து நம்பிக்கைவைத்து நடப்போர்க்கு எல்லா ப்ரயோஜனங்களும் எளிதில் கை கூடுமென்று அறிந்து நடத்தல்வேண்டும்.

---

## தீவினையச்சம்.

தொடர்ச்சியாய்ப் பாபத்தைச் செய்துவரும் பாபி மேன்மேலும் பாபத்தையே செய்து வருவானேயல்லது வேறுமனேயிரான். ஆனால் பாவங்களுக்கஞ்சி நடப்போர் யாரோ அவர்களே ஸர்வோத்தமரெனப்படுவார்கள்.

அக்னி எல்லாவஸ்துக்களையும் தஹிக்கும் ஸ்வபாவத்தையுடையதாயினும் தன்னைச்சேராத வஸ்துக்களைத் தொடர்ந்து தஹிக்கமாட்டாது. தீவினையோ வென்றால் அப்படியல்ல; ஒருவன் தனதின்பத்தின் பொருட்டுச் செய்யும் தீவினையாகிய அக்னி அவ

* "விராட்" புருஷனை.

ணை எப்பொழுதும் தொடர்ந்து கொண்டிருந்து வேதனை செய்யும்; ஆதலால் அக்னியைப்பார்க்கினும் கொடியது தீவினையென்று சொல்லப் பட்டிருக்கின்றது.

ஒருவன் இடைவிடாது துன்பத்திற்கு ஹேதுவாகிய தீவினையைச் செய்து கொண்டிருந்தாலும் பெரியோர்கள் அதற்சஞ்சி அதனைப் பொறுத்துக்கொண் டிருப்பார்களாதலால் அவர்களுடைய அறிவும் செறியும் மிகவும் சிறந்ததாகக்கொள்ளப்படும்.

பிறருக்குத் துன்பத்தைச் செய்துகொண்டிருப்பவனை அக்கொடியசெய்கையே முடிவில் நாசமடையச்செய்யும். மேலும் அவனாலேதேனும் உபகாரஞ் செய்யப்பட் டிருந்தாலும் அதுவும் அவனுக்கு ஸமயத்தி லுதவாமற்போய்விடும்.

பொருளில்லாமை பற்றி அது கிடைக்கும் படியாகப் பிறர்க்குத் துன்பத்தைச் செய்துயிர் வாழ்வோன் பிறவிதோறும் தரித்திரத்தையடைந்து துன்பப்படுவான். இதற்குக் "கேடுவான் கெடு நினைப்பான்" என்னும் பழமொழி நிதரிசனமாக விருக்கின்றது.

துன்பத்திற்கு ஹேதுவாகிய செய்கைகளைச் செய்கிறதினாலே யுண்டாகிய கொடியபாபம் தொடர்ந்து வருத்தப்படுத்துமென்கிற எண்ணத்தையுடைய நல்லோர்கள் பிறர்க்குத் துன்பத்தைச்செய்ய உடன்படார்கள்.

மிகவும் கொடியவரான பகைவரிடத்திருந்துந் தப்பிப் பிழைக்க ஒருபாய முண்டாயிருக்கலாமாயினும், பாபமானகொடிய செய்கையால் வருந் துன்பத்திற்குத் தப்பிப்பிழைப்பது கூடாதென்றும் அது பிறவிதோறும் பின்சென்று வருத்தப்படுத்துமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஒருவனது உருவத்தின் சாயையென்னும் நிழல் காலைப்பொதிலும் மாலைப்பொழுதிலும் அதிகதீர்க்கியாய்க் காணப்பட்டாலும் அது உச்சிப் பொழுதில் அவனது காலடியில் வந்துசேரும். அதுபோல பிறருக்குச்செய்த தீவினை அப்பொழுது ஸௌக்யம்போலக் காணப்பட்டாலும்பின்னாலே அவனைத்தொடர்ந்துநின்றுகெடுக்கும்.

பாபம்வந் தணுகாமலிருக்கும்படி காத்துக்கொள்ள விருப்பமுள்ளவன் துன்பத்தைத்தருவதாகிய தீவினையைப் பிறரிடத்துச் செய்ய வுடன்படாம லிருத்தல்வேண்டும்.

பாபம்செய்யின் இருமையிலும் ஸுகத்தையடைவ தில்லையென்று அறிந்த நல்லோர்கள் துன்மார்க்கத்திற் சென்று பிறர்க்குத் தீவினையைச்செய்ய வுடன்படார்கள்.

ஆதலால் தீவினையென்பது பல நற்கருமங்களையுங் கெடுக்கத் தக்கதென்றுணர்ந்து அதற்கஞ்சி தூரமாக விருத்தல்வேண்டும்.


# சக்ரவர்த்தினி.

“ கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி ”.

| | | |
|---|---|---|
| VOL-13<br>தொகுதி-13 | September-1917.<br>செப்டம்பர்௴ 1917. | No-2<br>பகுதி-2 |


## சொக்க ரென்பவ ரத்தம் பெறுவர்.

நம்மனோர் அத்தியாவசியகமாக அடைதற்குரிய பொருள் நான்காம்; அவை அறம், பொருள், இன்பம், வீடென்பனவாம். இவற்றுள், வீடென்பது எப்போதும் பயனாகவிருப்பதாம்; இதனால் பெறுதற்குரியது யாது மில்லையாம்; இதுவோ அறத்தாலன்றிப் பிறிதொன்றால் பெறுதற்குரியதன்றாம்; இவ்வறமோ பொருளால் பெறுதற்குரியதாம். பொருள் அறத்தையேயன்றி இன்பத்தையும் தருவதாகவிருத்தலின், இதனை ஒவ்வொருவரும் அத்தியாவசியகமாக நியாயமான வழியிற் சென்று பெறுதல்வேண்டும். நியாயமான வழியிற்சென்று பொருளைத்தேடி, அதனைத் தக்கவாறு செலவு செய்து வருபவர் அறத்தையும் இன்பத்தையும் பெறுதல் ஒருதலையாம்; இவற்றோடு நில்லாமல் அறத்தின் வாயிலாக வீட்டையும் ஒருகாலவிசேஷத்தில் பெறுதலும் ஒருதலையாம். நியாயமானவழியிற்சென்று தேடும் பொருள் இம்மைப்பயன் மறுமைப்பயன் வீடு என்னு மூன்றனையும் தருவதாகிய அறத்தையும், இம்மைப்பயனொன்றையே தருவதாய இன்பத்தையும் தருவதாக விருத்தலின், அதனைத்தேடி, அதன் பயனையடைய முயலுதல் நம்மனோர்க்கு முக்கியமானகடமையாம்.

“ வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த விருதலையு மெய்தும்
நடுவண தெய்தாதா னெய்து முலைப்பெய்
தடுவது போலுந் துயர் ”

என்று நாலடியார் கூறுவது கவனிக்கப்படுமாயின், அறம் பொருள் இன்பமென்னும் மூன்றனுள் ஒருவன் அவற்றின் மத்தியிலுள்ள பொருளை யடைவானாயின், அதற்கு முன்னுள்ள அறத்தையும்பின்னுள்ள இன்பத்தையுமடைவான்; அப்பொருளை யடையாதவன் பொய் பேசுதல், கோட்சொல்லுதல், வஞ்சகஞ்செய்தல், களவு செய்தல் முதலியவற்றிற் கடிமையாகி, தன்னைக் கொல்லனது உலைக்களத்திலிட்டுக் காய்ச்சுவதுபோன்ற துன்பத்தை யடைவானென்பது பெறப்படுவதாம். இதனால் பொருளை நியாயமான வழியிற்சென்று தேடித் தக்கவாறு செலவுசெய்துவருபவர் அதன் பயனாகிய அறத்தையும் இன்பத்தையும் தவறாதடைவரென்பது நமக்கு நன்கு விளங்குவதாம். நமது ஞானத்தாயாகிய ஔவைப்பிராட்டியார் ஆத்திசூடியில் "பொருடனைப் போற்றிவாழ்" என்றருளியதனோ டமையாது, கொன்றை வேந்தனில் "சொக்கரென்பவ ரத்தம் பெறுவர்—பொருளுடையவரென்று சொல்லப்படுகின்றவர் (அதனால் அறமும் இன்பமுமென்னு மிரண்டு) அர்த்தங்களையும் (தவறாது) பெறுவர்" என்றருளியிருத்தலையும் நாம் பெரிதும் கவனித்தல்வேண்டும். பொருளைத் தம்மியல்பிற் கேற்பச் செலவு செய்து பாதுகாத்து வாழுகின்றவர் அதன் பயனாகிய அறத்தையும் இன்பத்தையும் அடைவாரென்பதை நன்கு கவனித்து, அதனைப் பாதுகாத்துத் தக்கவாறாகச் செலவு செய்து வருவோமாயின், நாம் அறத்தையும் இன்பத்தையும் அடைதலேயன்றி, அறத்தின் பயனாகிய வீட்டையும் பெறுதற்குரியவராவோம். பொருளைப்பெறாதவர் ஒரு நன்மையையும் அடைவதில்லையாகலின், நாம் எப்போதும் பொருளை நியாயமான வழியிற்சென்று தேடுதலில் கண்ணும் கருத்துமாயிருத்தல் வேண்டும்.

(1) அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தனசெய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்.

(2) பொருளாவது மணி(முத்து,பவளம்முதலியன), பொன், நெல், வீடு, விளைநிலமுதலியனவாம்.

(3) இன்பமாவது இல்லறத்தோடு பொருந்தி வாழுவதா லுண்டாகுஞ் சுகமாம்.

(4) வீடாவது உயிர், துன்பமென்பது சிறிதுமின்றி யின்ப வடிவமாகவே விளங்குவதாம்.



இந்நான்கனுள், வீடு அறத்தாலும், அறம் பொருளாலும் வருவனவாம். பொருள் இன்பத்தையே யன்றி, அறத்தையும் அதன்வாயிலாக வீட்டையும் தருஞ்சிறப்புடையதாக விருப்பதாயினும், அது தீயவழியால் வருமாயின், அற முதலியவற்றுள் எதனையுந் தருவதாகாது துன்பத்தையே தருவதாம்; ஆகலின், நாம் அதனைத் தீயவழியிற்சென்று தேடுவதொழிந்து நல்வழியிற்சென்று தேடி உறவினர் துறவினர் முதலியவர்க்கு உபயோகமாம்வகை தக்கவாறு செலவு செய்து அதன் பயனை யடைதல் வேண்டும்; இவ்வாறொழுகாதிருப்போமாயின், எந்த நன்மையையும் அடைதற்குரியவராகமாட்டோம். இது நிச்சயமாம்.

"அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து, தீதின்றி வந்த பொருள்" என்று திருக்குறள் கூறுவதை நாம் பெரிதுஞ் சிந்தித்துணர்தல்வேண்டும். பொருள் சம்பாதிக்கும் வகையை யறிந்து, அதனை நியாயமான வழியிற்சென்று தேடி, கடவுட் பூசை செய்தல், தானதருமஞ்செய்தல், உறவினர்க்குதவல் முதலியவற்றிற்கு உபயோகமாக்கி வருகின்றவர் அறத்தையும் இன்பத்தையும் தவறாதடைவரென்பதனையன்றோ அக்குறள் நமக்குத் தெரிவிக்கின்றது? நாம் பொருளை நல்வழியிற்சென்று தேடாது தீயவழியிற்சென்று தேடுவோமாயின், அதன் பயனையடையாது துக்கத்தையே யடைதற்குரியவராவோம்.

"அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய, வொண்பொருள்கொள்வார் பிறர்—ஒருவன் கொடாமைப்பொருட்டுச்சுற்றத்தார்நட்டார்கண் அன்பு செய்தலையொழிந்து, வேண்டுவன நுகராது தன்னைச்செறுத்து, வறியார்க்கு ஈதல் முதலிய வறத்தை நினைப்பதுஞ் செய்யாது, ஈட்டிய வொள்ளிய பொருளைக்கொண்டு போய்ப் பயன் பெறுவார் பிறர்" என்று திருக்குறள் கூறுவதை நாம் சிறிது கவனித்து நோக்குவோமாயின், அற நோக்காது பொருளைத்தேடியவன், அதன் பயனை யடைவதில்லை; பிறர் அப்பொருளைக் கொண்டுபோய் அதன்பயனை யடைகின்றனரென்பது நமக்கு மாறுபாடின்றி விளங்குவதாம். ஆகவே, நாம் பொருளின் பயனாகிய அறத்தையும் இன்பத்தையும் அடையவேண்டுமாயின், அதனை நியாயமான வழியிற்சென்று தேடுதல்வேண்டும்; அவ்வாறு தேடுவோமாயின், அறத்தையும் இன்பத்தையும் பெறுதலேயன்றி, வீட்டையும் அறத்தின் வாயிலாகத் தவறாது பெறு

தற்குத் தக்கவராவோம். பொருள் இவ்வளவு சிறப்புடையதாக விருத்தலின், அதனை நியாயமான வழியிற்சென்று தேடி அதன் பயனடைய முயலாது, அளவுகடந்து செலவு செய்துவருபவர் மானமழிந்து மதிகெட்டு, தாமிருந்த வூரைவிட்டோடி, பலரால் கள்வரெனக் கருதப்பட்டு, துன்பத்தைத் தொடர்பா யனுபவித்துவருதல் நிச்சயமாம்; ஆகலின், நாம் அறத்தைத் தேடுதலிலும் இன்பத்தை யனுபவித்தலிலும் பொருளை யளவறிந்து செலவு செய்து வருதல்வேண்டும்; வந்தாற்றான் அதன் பயனைத் தவறாதடைவதற்குத் தக்கவராவோம்.

திருக்குறள்.

"ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொருள், ஏனை யிரண்டு மொருங்கு—நெறியான்வரும் பொருளை இறப்பமிகப் படைத்தார்க்கு மற்றையறனுமின்பமும் ஒருங்கே யெளிய பொருள்களாம்."

பஞ்சதந்திரம்.

(மித்திரபேதம்)

"பொருளிலார்க் கின்ப மில்லை புண்ணிய மில்லை யென்றும்
மருவுறு கீர்த்தி யில்லை மாந்தருட் பெருமை யில்லை
கருதிய கரும மில்லை கதிபெறு வழியு மில்லை
பெருநிலத் திடைந டக்கும் பிணமெனப் படுவ ரன்றே."

"நற்பொரு ளறத்தை யின்ப நலத்தைஞா னத்தை மிக்க
சொற்பெறு புகழை யென்றுந் துகளறு பெருமை தன்னைப்
பற்பல ருறவை நட்பைப் பகைதவிர்த் திடுந்தி றத்தைப்
பொற்புறு கதியை யெல்லாம் பொருளலாற் றருவ தின்றே."

"ஆதலாற் றரும வாற்றா லரும்பொரு ளீட்டி மேலும்
ஊதியங் கொண்ட றஞ்செய் துரியவப் பொருளைக் காத்தல்
நீதியிவ் வாறு செய்யார் நிதியமுந் தேய்ந்து மற்றும்
ஓதுமெந் நலமு மின்றி யுறுதுய ரடைகு வாரே."

இப்பிரயோகங்களிங்கு நன்குணர்தற்பாலனவாம்.

உ

# ஞானப்பிரகாசம்.

---

## முதலங்கம்.

### காட்சி. 1.

இடம்:—காசிநகரத்திற்கு வெளியே ஒரு ஸரசு.

காலம்:—காலை.

(ஞானப்ரகாசனும், குணசீலனும் சம்பாஷிக்கிறார்கள்.)

குணசீலன்:—நண்ப! ஏதோ ஒரு விஷயத்தைப் பேசிக்கொண்டே அதிகதூரம் வந்துவிட்டோம். அருணோதயமும் ஆய்விட்டது. அதோ ஒருதடாகம் தெரிகிறது. அங்கே சென்று நமது காலைக்கடன்களை முடித்துக்கொண்டு திரும்புவோமா?

ஞானப்ரகாசன்:—(தனக்குள்) ஆ! ஈதென்ன!! இவ்வளவுதூரம் வந்துவிட்டோமே!!! இந்திரதீர்த்தமல்லவாவிது? மனத்தைக் கவரும்படியான வார்த்தைகளா யிருந்தமையால் நடந்து வந்த சிரமமே தெரியவில்லை.
(பிரகாசமாய்) ஆருயிர்த்தோழ! அங்ஙனமே செய்வோம்.

குண:—மித்ர! இக்கமலங்கள் எவ்வளவு அழகாயிருக்கின்றன பார்! இவை மித்ரன் உதயமானதும் முகமலர்ச்சியினால் தங்கள் அகமலர்ச்சியைத் தெரிவிக்கின்றன.

ஞான:—(பார்க்கின்றான்.) (தனக்குள்) "அடா ஞானப்ரகாசா! உனக்கு இத்தனை வயதாகியும் உன் பெற்றோர்கள் உனது விவாக விஷயத்தைப்பற்றிக் கவனிக்காமலிருக்கிறார்களே!! நீயும் உன் யௌவனகாலத்தை யிப்படியே விருதாவாக்கிக் கொள்ளுகின்றாயே" என்றல்லவா இம்மலர்கள் தங்கள் சிரங்களை யசைத்து, நகைத்து என்னைப் பரிகாசஞ் செய்கின்றன. (பிரகாசமாய்) (தன்னை மறந்து) ஓ மலர்களே! அதற்கு யான் யென்ன செய்வது? பெற்றோர்களிருக்க என்னிஷ்டப்படி யெங்ஙனம் ஒரு பெண்ணை மணக்கலாம்? அப்படி மணந்தாலும் உலகம் என்ன சொல்லும்? (திகைத்துத்

தனக்குள்) ஆ! என்ன இப்படி பிதற்றுகிறேனே லச்சையின்றி!!

(குளக்கரையில் ஓராலமரத்தின் கீழ் அமர்ந்திருந்த ஒரு துறவியுற்றுக்கேட்கின்றார்)

துறவி:—(தனக்குள்) என்ன வார்த்தையிது! "பெற்றோர்களிருக்க என்னிஷ்டப்படி யெங்ஙனம் ஒரு பெண்ணை மணக்கலா"மா ஐயோபாவம்! என்ன காமவிகாரம்!! உலகத்திற்கும் பயந்தவனாயிருக்கிறான். இப்படிப்பட்டவனுக்கன்றோ நாம் போதித்து வைராக்யத்தை யுண்டாக்கவேண்டும்! சரி! இன்னும் என்ன பேசுகின்றாரென பார்ப்போம்.

குண:—ஞானப்ரகாசா! என்ன ஏதேதோ உளறுகிறாயே? உன்னை மறந்தே பேசுகின்றாயா யென்ன?

ஞான:—என்ன சொன்னாய்? குணசீலா! நானா உளறுகிறேன். இக்கமலங்கள் என்னைப் பரிகாசஞ்செய்ய நான் அவற்றிற்குப் பதிலுரைத்தேனே யன்றிச் சம்பந்தமில்லாமல் உளறவில்லையே!

துறவி:—சரி! சரி!! இவர்கள் பெயர் "குணசீலன்" "ஞானப்ரகாசன்" நன்றாயிருக்கிறது! அவனுக்கு ஞானப்ரகாசனென்னும் பெயர் தகுமே. அவன் மிக்க நியாயத்துடனும் பேசுகின்றான். அவனிடத்திலுள்ள அறிவீனத்தை இரண்டொரு வார்த்தையிலேயே வென்று விடலாம். நானே அவர்களிடத்திற் செல்லுகின்றேன். (எழுந்து வருகின்றார்)

ஞான:—நண்ப! இப்படிப்பார். ஒரு துறவி நம்மை நோக்கி வருகின்றார். அவரை வணங்குவோம் வா. நமக்குக்ஷேமமுண்டாகும். (இருவரும் நமஸ்கரிக்கிறார்கள்)

துறவி:—அப்பா குணசீலா! நீ குணசீலனாகுக. ஞானப்ரகாசா! நீ ஞானப்ரகாசனே. எழுந்திருங்கள்.

ஞான:—(ஆச்சர்யத்துடன்) ஹே ஸ்வாமீ! எங்களுடைய பெயர்கள் தங்களுக் கெப்படித் தெரிந்தன?

துறவி:—உங்கள் வார்த்தைகளாலேயே!

ஞான:—நாங்கள் எப்போது சொன்னோம்?

துறவி:—"ஞானப்ரகாசா என்ன ஏதோ உளறுகிறாய்" என்பதாலும் "குணசீலா! நானா உளறுகிறேன்" என்பதாலுமே யறிந்தேன்.



ஞான:—(மனதில் திகிலடைந்து) தமக்குள் என்மனோபாவமும் இவர் அறிந்திருப்பார் (யோசித்துக்கொண்டு நிற்கின்றான்.)

துறவி:—அப்பா ஞானப்ரகாசா! எந்தப் பெண்ணை மணக்கலாமென்று ஆலோசிக்கின்றாய். என்னிடத்தில் ஒரு பெண் இருக்கின்றாள். அவளை மணந்து உன் கவலையைத் தீர்த்துக் கொள்ளலாம். ஆனால் நான் கேட்கும் சில கேள்விகளுக்குப் பதிலுரைக்கவேண்டும்.

ஞான:—ஸ்வாமி! அங்ஙனம் ஒன்றையும் நான் நினைக்கவில்லை. ஆயினும் தாங்கள் கேட்கும் வினாக்களை மாத்திரம் அறிய விரும்புகிறேன்.

துறவி:—அப்படியா! என் வினாக்களுக்கு விடையளித்து என்னிடத்திலுள்ள பெண்ணையா அடைய விரும்புகிறாய்? ஆனால் சரி "பெற்றோர்களிருக்க என்னிஷ்டப்படி யெங்ஙனம் ஒரு பெண்ணை மணக்கலாம்" என்றனையே ஒரு பெண்ணை மணப்பதில் உனக்கு இஷ்டந்தானே!

ஞான:—(திடுக்கிட்டுத் தனக்குள்) என்ன இது! என்னை மறந்து பேசியவார்த்தைகளையும் இவர் கேட்டுவிட்டாரே!! மறுத்தாலும் விடார். ஒப்புக்கொள்ளுகிறேன். (ப்ரகாசமாய்) ஸ்வாமீ! இஷ்டந்தான்.

துறவி:—எதை விரும்பிப்புருஷர்கள் ஸ்திரீகளை யிச்சிக்கிறார்கள்?

ஞான:—இன்பத்தை விரும்பியே!

துறவி:—சரி! நாம் ஒருபொருளைத்தேடி யடையவேண்டுமானால் அப்பொருள் இன்னதென்று அறிந்தாலன்றோ அதைத் தேடமுடியும்?

ஞான:—ஆம்.

துறவி:—ஆனால் "பெண்" அல்லது "ஸ்திரீ" என்பதற்குப் பொருள்யாது? காணப்படுகின்ற சரீரத்திலே யுள்ளதோலா? இரத்தமா? ஊனா? எலும்பா? நரம்பா? மற்றெது?

ஞான:—ஸ்திரீகளுக்குரிய லக்ஷணத்தை யேற்குஞ்சரீரமே ஸ்திரீ யெனப்படும்.

துறவி:—அப்படியானால் நீ ஒரு ஸ்திரீக்குரிய லக்ஷணத்தை யேற்கும் இறந்த சரீரத்தை மணக்க விரும்புகிறாயா?

ஞான:—ஸ்வாமீ! என்ன கேள்வியது? இறந்த பெண்ணைப் பித்தனும் விரும்புவானா?

துறவி:—அப்படியானால் சரீரத்திற்கு வேறாய் "பெண்" என்னும் பெயரை ஏற்கும் பொருள் யாது?

ஞான:—(யோசிக்கின்றான்; ஒன்றுந்தோன்றாதவனாய் குணசீலன் முகம் பார்க்கின்றான்; குணசீலனும் பிரமிக்கின்றான்).

துறவி:—அப்பா ஞானப்ரகாசா! என்ன சொல்லப்போகின்றாய்?

ஞான:—ஸ்வாமீ! எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை. தாங்களே தயைசெய்து சொல்லவேண்டும்.

துறவி:—ஆனால் கவனமாய்க் கேளுங்கள்-ஜனங்கள் சாதாரணமாய்க் கூறும் "பெண்" அல்லது "ஸ்திரீ" என்னும் பெயருக்குப் பொருளே யில்லை. எந்தச் சரீரத்தைப் பார்த்துப் பெண்ணென்று சொல்லுகிறார்களோ அந்தச் "சரீர" மென்கிற பெயருக்கே பொருளில்லை. கைகள், கால்கள், உடல் தலை முதலிய அவயவங்களே யன்றிச் "சரீர" மென்னும் பெயரை யேற்கும் பொருள் யாதாயினு மிருக்கின்கின்றதா? யோசித்துப் பார். இங்ஙனமே அவ்வவயவங்களுக்கும் பொருளில்லை. கவனித்து வருகின்றீர்களா?

ஞான-குண:—கவனித்து வருகின்றோம். ஸ்வாமீ!

துறவி:—"பெண்" என்பதற்குப் பொருள் இன்னதென்று ஏற்படாமையால், அதை யடைவதெப்படி? தனக்கெனப் பொருளில்லாத ஒன்றை யடைய இச்சையுண்டாகுமா அறிவுள்ளவனுக்கு?

ஞான:—உண்டாகாது. ஆனாலும் "பெண்களை யடைந்து இன்புறுகிறோம்" என்னும் உலக வசனத்திற்குப் பொருள் என்ன?

துறவி:—இருளைப் பார்த்து வெளிச்சமென்று சொல்லுபவர் வசனத்திற்குப் பொருள் யாது?

ஞான:—அது பிதற்றல். அதற்கென்ன பொருளுரைப்பது?

துறவி:—அதுதானா பிதற்றல். ஸ்திரீகளின் வாயிலூறும் துர்நாற்றமுடைய எச்சிலை அமுதமென்பது பிதற்றலல்லவா?



"முள்ளுங் கல்லும் முயன்று நடக்கும்
உள்ளங்காலைப் பஞ்செனவுரைப்பதும்
வெள்ளெலும்பாலே மேவிய கணைக்கால்
துள்ளும் வராலெனச் சொல்லித் துதிப்பதும்
தசையுமெலும்புந் தக்கபுன் குரம்பையை
இசையுங் கதலித் தண்டென வியம்பலும்
நெடுமுடல்தாங்கி நின்றிடுமிடையைத்
துடிபிடியென்று சொல்லித் துதிப்பதும்
மலமும் ஜலமும் வழும்புந் திறையும்
அலையும் வயிற்றை யாலிலை யென்பதும்" பிதற்றலல்லவா,
இது மாத்திரமா!

"அங்கையைப் பார்த்து காந்தளென் றுரைப்பதும்
வேர்வையு மழுக்கும் மேவிய கழுத்தை
துப்புமுருக்கின் றாய்மலரென்பதும்
அன்னமுங்கறியும் அசைவிட்டிறக்கும்
முன்னியபல்லை முத்தென மொழிதலும்
நீருஞ்சளியு நின்றுகின் றொழுகும்
கூரியமூக்கைக் குமிழெனக் கூறலும்
தண்ணீர்பீளை தவிரா தொழுகும்
கண்ணைப்பார்த்துக் கழுநீரெனலும்
உள்ளுங்குறும்பி யொழுகுங்காதை
வள்ளைத் தண்டின் வளமென வாழ்த்தலும்" பிதற்றலாகாமல் மற்றென்னையாம்? துன்பரூபமாகிய மாதரிடத்தில் இன்பம் உண்டென்று கூறும் உலக வசனத்திற்கு யாது பொருள்! அறிவின்மையே பொருளாம். நெருப்பைத் தொட்டாற் சுடும். பெண்ணை நினைத்தாற் சுடுமே.

ன:—(விவேகமுடையவனாய்) என் அறியாமையை நீக்க வந்த அருள்வடிவே! இப்பொழுது என் மனம் முற்றும் மாறிவிட்டது தங்களுபதேசத்தால்; ஆனால் ஒருசந்தேகம் 'பெண்' ணென்னும் பதத்திற்குப் பொருளில்லையென்று தாங்கள் உபதேசித்தீர். "உலகம்" என்னும் பதத்திற்கு யாது பொருளென அறியவிரும்புகிறேன். தயைபுரிந்து உபதே

துறவி:—ஞானப்ரகாசா! நன்கு வினவினாய் உலகமென்னும் பதமும் பெண்ணென்னும் பதத்தைப்போலவே தனக்கெனப் பொருளில்லாததேயாம்; ஆராய்ந்துழி உலகத்திலெவையும் தமக்கெனப் பொருளுடையன வல்லவென்றேற்படும். பொருள் ஒன்றேயுளது. அதுவே உண்மைப் பொருளாகும். மற்றயாவும் நசிக்கக்கூடியனவேயாம். நசிக்கக்கூடியனவற்றால் வருவனவெல்லாந் துன்பமேயாம்.

ஞான:—(அடியற்றமரம்போல் கீழேவிழுந்து நமஸ்கரிக்கின்றான்) குருமூர்த்தமே! எனது உடலும் உயிரும் உமது பதாம்புயங்களுக்கு அர்ப்பணஞ் செய்கின்றேன். எது பொருளோ அதைக்காட்டவேண்டும். எது இன்பமோ அதை உபதேசிக்கவேண்டும்.

துறவி:—(ஞானப்ரகாசனை யெடுப்பித் தலைமேல் தன்கையமர்த்தி) அப்பா ஞர்னப்ரகாசா நீயே பொருள். நீயே இன்பம். (காதில் ஏதோ உபதேசிக்கின்றார்.)

(திரைவிழுகின்றது.)

N. சுப்ரமணிய அய்யர், சென்னை.

# நீதிசாரம்.

## உபகாரம்.

தெய்வலோகத்தில் ஸகல ஸுகமு முளதென்பதனால் அவ்விடத்தில் இரப்போருங் கொடுப்போருமில்லை; அதைப்பற்றி அவ்வுலகத்தில் உபகாரமென்பதுமில்லை. இவ்வுலகத்தில் இரப்போருங் கொடுப்போரு முண்டா யிருக்கின்றனர்; அதனால், உபகாரஞ் செய்வதற் கிடமுண்டென்றும், உபகாரத்தைப்பார்க்கிலும் சிறந்த செல்வம் வேறொன்றுமில்லை யென்றும், சொல்லப்படுகின்றமையின், தெய்வலோகத்தைப் பார்க்கிலும் இவ்வுலகமே சிறந்ததென்று கூறப்பட்டிருக்கின்றது.

நல்லோர்கள் ப்ரதியுபகாரத்தை விரும்பாமலே உபகாரஞ் செய்வார்களென்பதற்கு நிதர்ஸன மென்னவெனின், உலகத்



ராலே ஒருதவியும் பெறாத மேகங்கள் கடல்நீரைத் தற்செயலக் கொண்டுவந்து பெய்து உயிர்களை ரக்ஷிப்பதே யாம்.

உலகநடையை அனுஸரித்துப் பலருக்கு முபகாரஞ் செய்வன் இறந்தாலும் பூமியினிடத்து உயிருடன் வாழ்ந்திருப்பனென்றும், அவ்வித உபகாரத்தைச் செய்யாதவன் எத்தனை காலம் உயிருடனிருந்தாலும் செத்தபிணத்தோ டொப்பாவனென்றும் சொல்லியதற்குப் பொருளென்னவெனில், முன்னோர்களது நீதிநூலின் பொருளை யுணர்ந்து அவ்வழிபாட்டுக்கு மாறுபாடில்லாமல் உபகாரத்தைச்செய்து நடப்பவன் அறிவுடையவனென்றும் மனித ஜன்மமெடுத்தும் உயிரிற்குரிய அறிவும் அதற்குத் தக்க செய்கையு மில்லாவிடின் அவன் அறிவிலானென்றும் ஆதலால் உயிரிலா னென்றும் குறிப்பித்திருப்பதே யாம்.

உபகாரிகளிடத்துண்டாகிய செல்வம் பலருக்கு முபயோகமாக விருக்குமென்பதற்கு த்ருஷ்டாந்த மென்னவெனில், ஊருக்குள்ளிருக்கும் குளத்துநீர் பலருக்கும் உதவியாக விருப்பது போலவும், அவ்வூர் மத்தியிலிருக்கும் மாமரம் தனக்குள்ள இலை காய் கனி முதலியவற்றைப் பிறர்க்குத் தருவதுபோலவுமாம்.

உதவிசெய்வதே நலமென் றுணர்ந்திருக்கும் புத்திமான் தனக்குத் தரித்ரம் வந்த காலத்திலும் அவ்வுதவி செய்யும் நெறியை மறந்து தளரவிடமாட்டான்; ஆனால்; உபகாரஞ் செய்வதற்கிடமில்லாத விஷயத்தில் தான் ஜன்மமெடுத்தது நிஷ்பலமென்று வ்யஸனப்படுவான்.

உபகாரத்தின் பொருட்டுத் தன்னைப் பிறரிடத்து விற்பது கூடாத கார்யமானாலும், அது புகழை யுண்டாக்குகின்றபடியால் அவ்வாறு விலைப்படுவதினாலேயுங் குற்றமில்லை யென்றுபெரியோருரைத்திருக்கிறார்களென்பதற்கு அரிச்சந்திரனுடைய சரித்ரமே நிதர்ஸனமா யிருக்கின்றது.

கீர்த்திபெற்று வாழ்வதற்குக் கல்வி யாண்மை முதலாகிய காரணங்கள் பலவுண்டா யிருந்தாலும் அவைகளைப் பார்க்கிலும் உபகாரத்தால் வருவதே சிறந்த புகழென்றும், அப்புகழ் நெடுங்காலம் நிலைபெற்றிருக்கு மென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன.

உலகத்தில் எப்பொழுதும் அழிவில்லாமல் புகழுடம்பினால் நிலைபெற்றிருப்பதற்கு உபகாரமே முக்ய காரணமா யிருக்கின்ற

தாதலால், மனிதஸ்வரூபத்தைப்பெற்ற யாவரும் உபகாரஞ்செய்வதில் மனத்தளர்ச்சி செய்யலாகாது.

உபகாரியாகிய குணவானானவன் இகத்திலும் பரத்திலும் ஏககாலத்தில் வாசஞ் செய்வா னென்பதற்குப் பொருளென்னவெனில், அவன் தான்செய்த தர்மத்தின் பயனால் ஸ்வர்க்கானுபவம் பெற்று மகிழ்ந்திருக்குங் காலத்தில் அவனது கீர்த்தி பூலோகத்திலும் நிலைபெற்றிருக்கு மென்பதுதான்.

பூமியினிடத்தி லெடுக்கப்படும் ஜன்மங்களில் மனித ஜன்மம் சிறந்தது. அந்த ஜன்ம மெடுத்தபின் உபகாரியென்று பெயரெடுப்பது அதினுஞ் சிறந்தது. அப்படிக்கில்லாத ஜன்மம் ம்ருக ஜன்மத்திலுந் தாழ்வானது.; ஏனெனில், மிருகமும் வளர்ப்பவர்களுக்கு உதவிசெய்வதனாலேதான்.

ஆதலால், ஒப்புரவறிந்து உபகாரத்தைச்செய்து புகழடைதல்வேண்டும்.

---

## ஈகை.

தமக்குள்ள செல்வத்திற்குத் தக்கபடி இரப்போருக் கில்லையென்று சொல்லாமல் கொடுப்பதையே ஆபரணமாகக் கொண்டவரிடத்து அச்செல்வம் பெருக்கமுற்றிருக்கும்.

ஒருவன் ஸன்மார்க்கத்தில் ப்ரயாஸப்பட்டு ஸம்பாதித்த த்ரவ்யத்தி லெவ்வளவாகிலும் இரப்பவர்களின் குறிப்பறிந்து கொடுத்துத் தானும் சுகத்தை யனுபவித்திருப்பது அவனுக்கு ஸுகஜீவனமாம். அப்படியல்லாமல் த்ரவ்யத்தைத் தேடித் தானுமனுபவியாமல் எளியவர்க்குங் கொடாமல் புதைத்துவைத்துக் காப்பாற்றுவதினால் அவனுக்குப் பயனில்லையாயினும், 'பொன் காத்த பூதம்' என்றுலக மிகழும் பயன்மாத்ர முண்டாயிருக்கலாம்.

அதிதி முதலியோர் தங்கள் வறுமையா லிரந்து கேட்கினும் உபகாரஞ் செய்யாதவனுடைய த்ரவ்யம் எவ்வளவு திரளாக விருந்தாலும் பயனில்லாமற் கெடும். உபகாரத்திற் செலவு செய்தால் அது வ்ருத்தியாகிறது மல்லாமல் கீர்த்தியையு முண்டாக்கும்.



கிடைத்த பொருளில் நாலிலொரு பாகம் தர்மகைங்கர்யத்தில் செலவுசெய்ய வேண்டுமென்று முன்னோர்கள் சொல்லியிருக்கின்றமையின், தனக்குண்டாகிய குறைவை நினையாமல் பிறருக்குக் கொடுப்பதே சிறந்த கொடையாம்.

செல்வத்தையுடைய ஒருவனிடத்தில் ஒரு தரித்திரன் வந்தடுத்துத் தனதில்லாமையைச் சொல்லி இரந்து கேட்பானாயின் அவனது துயரத்தை நீக்காமல் தன்னைப்போலொத்த பாக்யவான்களுக்குக் கொடுத்துத் தானுமுண்டு களித்திருப்பவனுடைய செல்வம் அரிய தவஞ்செய்து பெற்றதாக விருந்தாலும் இரப்போருக் குதவாமையால் நிலையில்லாம லழிந்துவிடும் ஆதலால் தாத்ருத்வமென்னுங் கொடையே உத்தம குணமாம்.

த்ரவ்யமின்மையால் ஒருவன் புல்லமுது படியைக்கொண்டு காலங் கழிப்பவனாக விருந்தாலும், தானுண்ணும்போது வந்த அதிதிக்குத் தானுண்ணும் ஸாதத்தில் கிஞ்சிற்று பாகித்துக் கொடுத்துண்ண வேண்டும். அப்படிக் கொடாம லுண்போனைப் பிற்காலத்தில், 'இட்டுண்ணாத பாவி' யென்று உலகம் பழிக்கும்.

தனக்குந் தன் சுற்றத்தாருக்கு முதவுமென் றெண்ணித் தனக்குள்ள த்ரவ்யத்தைப் பிறருக் கீயாமல் பூமியினிடத்துப்பத்ரப்படுத்திவைக்கும் புல்லறிவாளர்களின் விவேகத்தின் தன்மையைக் கண்டு பூமிதேவி நகைசெய்வாளென்று சொல்லவேண்டியதே யில்லை. ஏனெனில் பூமியினிடத்து வைத்த பொருளை அநுபவியாமல் இறந்தவர்க ளெத்தனைபெயர் என்று சொல்லக்கூடும்?

தானுண்டதும் ஒருவருக்குக் கொடுத்தது மாத்ரமே தன் பொருளென்றும், உபகாரத்திற் கொடுத்த அப்பொருள் மறுமைக்குத் துணையாமென்றும், அப்படி உபகாரஞ் செய்யாமல் காப்பாற்றிவைத்த பொருள் முடிவில் தனக்குதவாமற் போகுமென்றும் முன்னோர்கள் சொல்லி யிருக்கின்றார்கள்.

நூற்றிலொருவன் சூரனென்றும், ஆயிரத்தி லொருவன் பண்டிதனென்றும், லக்ஷத்தி லொருவன் சபையில் ப்ரஸங்கிக்கத்தக்க வாக்குடையவனென்றும். தாதாவானவன் உண்டோ இல்லையோவென்றும், சொல்லப்பட்டிருப்பதன் பொருளென்ன

வெனில், தாத்ருத்வமே எல்லாவற்றிலும் சிறந்த குணமென்று அறிவுறுத்தற் பொருட்டாம்.

பேரிகையின் த்வனி யோஜனை தூரத்திலும், மேகத்தின் கர்ஜிப்பு பன்னிரண்டு யோஜனை தூரத்திலும், தாதாவானவனுடைய கீர்த்தி எவ்விடத்துங் கேட்குமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

தாத்ருத்வம், இன்சொலுரைத்தல், மநோதைர்யம், பகுத்தறியும் அறிவு ஆகிய இக்குணங்கள் அவரவர்களுக்கு ஸ்வபாவமாக வுண்டாக வேண்டுமே யல்லாமல் ஒருவராலே கற்பிக்கப்பட்ட குணங்களல்லவென்று சிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

இறந்துபோக வேண்டியநாள் இன்னந் தூரமாக விருக்கிறதென்றும், ஆதலால் தர்மத்தைப் பின்னுலே செய்வோமென்று ஆலஸ்யமாகவிராமல் உடனே தர்மத்தைச் செய்தல்வேண்டும்; ஏனெனில், நமது ஆயுளும் பொருளும் நாளைக்கிருப்பது நிஜமல்ல.

பலருக்கு முபகாரம் செய்பவர்களுடைய செல்வம் படுமுதலாய் முளைத்துக் காய்த்துப் பலனையளிக்கும் பனைமரத்தைப் போல விளங்கி யிருக்கும். உபகாரஞ் செய்யாதவர்களுடைய செல்வம், எவ்வளவு மிகுதியாக விருந்தாலும் சுடுகாட்டுக்குள் வாழும் ஆண்பனையைப்போ லிருக்குமே யல்லது வேறு ப்ரயோஜனத்தைக் கொடாது.

கீர்த்திபெற வேண்டுமென்றாலும், மறுமைக்குத் துணையாக விருக்குமென்றாலும், கேட்போர்களுடைய முகத்திற் கஞ்சியானாலும், நல்வழியில் ஸம்பாதித்த பொருளைக் கூடியமட்டிலும் உபகாரமாகச் செலவுசெய்கிறவர்கள் நல்லோர்களாலே கீர்த்திபெற்று வாழ்வார்கள்.

ஆதலால், யாவரும் உபகாரமுதலிய ஸத்கர்மங்களிற் செலுத்தப்படுந் தாத்ருத்வமென்னுஞ் சிறந்த குணத்தைக் கைக்கொண்டு கீர்த்தியடையதல் வேண்டும்.



## ஜலம்.

### கிணறுகளை வெட்டுகையில் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

(1) ஒரு பூமியில் எந்தப்பக்கந்தாழ்ந்து பள்ளமாயிருக்கிறதோ அந்த இடத்தில் கிணற்றை வெட்டினுல் தண்ணீர் சமீபத்தில் அகப்படும். (2) எந்த இடத்தில் புல் பூண்டு முதலான செடிகள் முளைத்திருக்கின்றனவோ அந்தஇடத்திலும்தண்ணீர் சமீபத்தில் காணப்படும். (3) உலர்ந்த மணலுள்ள சம பூமியில் எந்த இடத்தில் உதயத்தில் மூடுபனி (mist) உண்டாயிருக்கின்றதோ அல்லது பல வகைப் பூச்சிக்களின் கூட்டங்கள் காணப்படுகின்றனவோ அந்த இடத்தில் வெட்டினுல் தண்ணீர் சமீபத்தில் காணப்படும். (4) கடலுக்குச் சமீபத்தில் சாதாரணமாய்த் தண்ணீர் அகப்படும். பெரும்பாலும் அத்தண்ணீர் நல்லதாயுமிருக்கும். கடலுக்குச் சமீபத்தில் மேடான இடங்களிருந்தால் அவைகளிலிருந்து ஊறிவருகிற நல்ல தண்ணீர் கடல் ஓரத்தில் ஊறுகிற உப்புத்தண்ணீரின் குணத்தை மாற்றிவிடும். சிலவேளைகளில் கடலுக்குச் சமீபத்தில் வெட்டுகிற கிணறுகளில் உப்புத்தண்ணீரே காணப்படும். அப்படியானுல் கடலுக்குத் தூரமாக வெட்டிக்கொண்டு போகப்போக சற்றுதூரத்திற்குள் நல்ல தண்ணீர் அகப்படும். (5) மலைகள் குன்றுகள் உள்ள இடங்களில் தண்ணீர் மிகுதியாய் அகப்படும். மலைகளின்மேல் விழும் தண்ணீர் அவ்விடங்களிலேயே சேர்ந்து தங்கியிருந்து பின்பு நாளடைவில் அடிவாரங்களுக்கு ஊறிப்போகும். ஆகையால் கிணறுகளை வெட்டவேண்டுமானுல் அவைகளை மலைச்சார்ப்புகளில் வெட்டாமல் தாழ்ந்திருக்கிற அடிவாரங்களிலேயே வெட்டவேண்டும். (6) ஒரு நீரோட்டமிருக்குமானுல் அதற்குச் சமீபமாய்க் கிணற்றை வெட்டினுல் தண்ணீர் அதிகமாய் அகப்படும். இரண்டு நீரோட்டங்கள் சந்திக்கிற இடத்தில் கிணற்றை வெட்டினுல் தண்ணீர் மிகவும் ஏராளமாய்க் கிடைக்கும்.

---

### சாப்பிடத்தக்க நல்ல தண்ணீரின் இலட்சணங்கள்.

நல்ல தண்ணீர் கண்ணுடியைப்போல தெளிவுள்ளதாயும் யாதொரு நிறமும் வாசனையும் ருசியுமற்றதாகவு மிருக்கவேண்டும்.

அதை வைத்திருக்கும் பாத்திரத்தில் யாதொரு மண்டியும் படியக்கூடாது. அதில் பருப்பும் காய்கறிகளும் நன்றாயும் லகுவாயுத் வெந்துபோகவேணடும்

நல்ல தண்ணீர் கிடையாத விஷயத்தில் சமுத்திரத் தண்ணீரையாவது அல்லது கிடைக்கக்கூடிய எந்தத் தண்ணீரையாவது மேற்பக்கத்தில் ஒரு சிறு துவாரஞ் செய்த ஒரு பெரிய பானையில் வார்த்து பானையின் வாயை நன்றாய் மூடிய பின்பு தண்ணீரைக் கொதிக்கவைத்தால் அதனாலுண்டாகிற நீராவியைப் பானையின்மேற் பக்கத்திலுள்ள துவாரத்தில் வைத்திருக்கிற ஒரு குழல்வழியாய் சாராயத்தை வடிக்கிறதுபோல வேறொரு பாத்திரத்திற் போய்க் குளிரும்படிச்செய்தால் ஏறக்குறைய எல்லா அசுத்தங்களும் பானைக்குள் நின்றுபோக ஆவியாகப் போய்ச்சேர்ந்த தண்ணீர் கூடியமட்டும் சுத்தமாயிருக்கும். நீராவியினாலுண்டான தண்ணீரில் ஆகாயமும் கரி அமிலவாய்வும் இல்லாததினால் அது ருசிக்கு மதுரமாயிராது. ஆனால் அத்தண்ணீரின்பேரில் ஆகாயம் தாராளமாய்ப் படும்படி செய்தால் அதற்கு ருசி மறுபடியுமுண்டாகும்.

---

## அசுத்தத்தண்ணீர்களினால் உண்டாகும் வியாதிகள்.

நெருங்கி வாசஞ்செய்யும் ஜனங்களாலுண்டாகும் பல அசுத்தங்கள் போய்ச் சேருகிற குளங்கள் ஆறுகள் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுத்துக்குடிக்கிற ஜனங்களுக்கு பல வியாதிகள் உண்டாம். இங்கிலாந்து தேசத்தில் ஒரு ஊரிலுள்ள அசுத்தத் தண்ணீர்கள் சிறிது சிறிதாகப் போய்ச் சேர்ந்துகொண்டிருந்த ஒரு குளத்தின் தண்ணீரை அப்பட்டணத்திலுள்ள கைதிகள் எடுத்து ஒருநாள் மாத்திரம் குடித்தார்கள். அவர்கள் அதைக் குடித்த 24-மணிநேரத்திற்குள்ளாக ஏறக்குறைய அவர்களெல்லாருக்கும் வயிற்றுக் கழிச்சல் உண்டாயிற்று. இப்படிப்பட்ட அசுத்தத் தண்ணீர்களைக் குடிக்கிறதினால் சில வேளைகளில் கொடிய விஷ ஜன்னி சுரங்களுமுண்டாம்.

ஜன நெருக்கமான பட்டணங்களுக்குள்ளிருக்கிற கிணறு, குளம் முதலானவை சாக்கடை கக்கூசு முதலான அசுத்த இடங்களுக்குச் சமீபத்திலிருக்கிறபடியால் அவைகளுக்குள் அசுத்தத்



தண்ணீர்கள் ஊறிப்போய் விழுகிறதற்கு இடமுண்டாகும். இவ்விதமாக அசுத்தங்கள் கலந்த தண்ணீரை எடுத்துக் குடித்துச் சமையல் முதலான வேலைகளுக்கு உபயோகித்தால் அநேக வியாதிகள் உண்டாம். இவ்வகையாகவே மற்ற இடங்களிலில்லாத பலவகையான அசுத்த வியாதிகள் பெரிய பட்டணங்களில் காணப்படுகின்றன. விஷபேதி யுண்டாவதற்கான பிரதான காரணங்களில் ஒன்று அசுத்தத் தண்ணீர்தான். இங்கிலாந்து தேசத்திலுள்ள ஒரு பெரிய பட்டணத்தில் 1854-ம் வருஷம் விஷபேதி யுண்டாகி ஒரு வாரத்திற்குள் 500 - பேரைக்கொன்று விட்டது. ஒரு டாக்டர் அவ்வூர் ஜனங்கள் சாப்பிட்டுவந்த தண்ணீரைப் பரீட்சித்துப் பார்த்ததில் ஜனங்களாலும் சாக்கடைகளாலும் உண்டாகிற பலவகையான அசுத்தங்களை அதில் கண்டுபிடித்தார். ஆயினும் அந்தத் தண்ணீர் பார்வைக்குச் சற்று நன்றாயிருந்ததனால் அவ்வூருக்கு மூன்று மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில் வாசஞ்செய்த ஒரு பெருமாட்டி தினந்தோறும் குடிக்கிறதற்கு அந்தத்தண்ணீரை வரவழைத்துக் கொண்டிருந்தாள். அதனால் அவளுக்கும் அந்தத் தண்ணீரைக் குடித்த அவள் வீட்டிலுள்ளோருக்கும் விஷபேதியுண்டாயிற்று. ஆனால் அவளிருந்த அக்கிராமத்திலுள்ள ஜனங்களில் வேறொருவருக்காவது அந்தக்காலத்தில் விஷபேதி யுண்டானதாகக் காணப்படவில்லை.

ஒரு வகைச் சுண்ணாம்புக் கற்றறையிலுள்ள தண்ணீரைச் சாப்பிட்டு வருவதினால் குடலைப்பற்றின வியாதிகள் உண்டாம்; பசி கெட்டுப்போகும்; சிலவேளைகளில் வயற்றோட்டஞ், சீதபேதி முதலான நோய்களுண்டாம்.

இத்தேசத்து ஜனங்களுக்குள் அறிவீனமானவர்கள் குளம் கிணறு முதலானவைகளிலுள்ள குடிக்கத்தக்க தண்ணீரில் இறங்கி ஸ்நானம் பண்ணுகிறதினாலும் அழுக்கு வஸ்திரங்களைத் தோய்க்கிறதினாலும் ஆடுமாடுகளைக் குளிப்பாட்டுகிறதினாலும் மரங்கள் முதலானவைகளைப் போட்டு அழுகவைக்கிறதினாலும் தண்ணீரை மிகவும் அசுத்தப்படுத்திப் பின்னும் அதையே சாப்பிட்டும் வருகிறார்கள். இப்படிச்செய்கிறதினால் தங்களுக்குப் பலவகை வியாதிகளை வருவித்துக்கொள்ளுகிறதை அவர்கள் அறியவில்லை. சிலவேளைகளில் இப்படிப்பட்ட அசுத்தத் தண்ணீர்களில் பலவகையான பூச்சிகள் உற்பத்தியாகி இருக்கும். இப்பூச்

சிக ளெவையென்றால், மனிதர்களுடைய குடல்களில் வாசம் பண்ணும் நாக்குப்பூச்சி முதலிய பூச்சிகளும், கால்களில் புறப்படுகிற நரம்புச் சிலந்திப் பூச்சியும், பின்னும் இவைபோன்ற வேறு சிலபூச்சிகளுமாம். நமது கண்களுக்குத் தென்படாத இச்செந்துக்களின் முட்டைகளுங் குஞ்சுகளும் நாம் உட்கொள்ளும் அசுத்தத் தண்ணீர்களின் வழியாய் நமது தேகத்திற்குள் சென்று பெரிய பூச்சிகளாகி வளரும். நரம்புச் சிலந்திப் பூச்சியின் சிறு குஞ்சுகள் நாம் குடிக்கிற அசுத்தத் தண்ணீர்களின் வழியாய் நமது தேகத்திற்குள் பிரவேசிக்கிறதுந் தவிர நம்முடைய கை கால் முதலானவைகளின்பேரில் படுகிற அசுத்தத் தண்ணீர்களின் வழியாகவும் நாம் ஸ்நானம் பண்ணும் அசுத்தத் தண்ணீரின் வழியாகவும் நமது தோலுக்குள் பிரவேசித்துப் பின்பு நரம்பு போன்ற நீளப் பூச்சிகளாகிக் கடைசியில் கைகால்களிலுண்டாகிற நரம்புச்சிலந்திகளின் வழியாக வெளியே புறப்படும். நரம்புச்சிலந்தியில் காணப்படுகிற நரம்பு மெய்யான நரம்பல்ல, அது ஒரு பூச்சியே.

# பக்தி.

## 8. ப்ரதிமோபாஸனையும், ப்ரதீகோபாஸனையும்.

* ப்ரதீகங்களையும், ப்ரதிமைகளையும் வழிபடுமுறையேஇங்கு விளக்கப் புகுந்தது. ப்ரதீகத்தின் வாயிலாகக் கடவுளை வழிபடுதல் எவ்வாறு? "அப்ரமணி; ப்ரஹ்மத்ருஷ்ட்யானு ஸந்தானம்" = "கடவுள் நோக்கத்தோடு கூடிக் கடவுளல்லாததினு மன்புடன் மனதைச் செலுத்துவது" தான் ப்ரதீகோபாஸன மெனப்படும். பகவான் ஸ்ரீராமானுஜாசார்யர் கூறுவதாவது:—"மனதைக் கடவுளாகக் கருதி வழிபடு. இது உட்பொருளான (ஆந்தரமான) வழிபாடு; ஆகாசம் கடவுளேயாகும்; இது வெளிப்படையான பொருள்" மனம் ஆந்தரமான ப்ரதீகம்; ஆகாசம் வெளிப்படையான ப்ரதீகம்; இவ்விரண்டையுங் கடவுளது ப்ரதிநிதியாய்க் கருதி வழிபட (உபா

* ப்ரதிமை = விக்ரஹம், ப்ரதீகம் = விராட் புருஷனது அவயவங்கள்.



ஸிக்க அல்லது பூஜித்துவர) வேண்டும். "ப்ரதீகம்" என்ற பதத்திற்கு உள்நோக்கிச் செல்லுதல் என்று பொருள். அதனால் ப்ரதீகோபாஸனை" என்றது, கடவுளுக்குப் பதிலா யிருப்பதும், கடவுளிடத்து மிக மிக நெருங்கிக்கொண்டு வருவதுமாயுள்ள ஒரு பொருளை வணங்குதல் என்று பொருள்படும். ச்ருதிகளிற் கூறப்படுகின்ற ப்ரதீகங்களைத் தவிர புராணங்களிலும், தந்த்ர (மந்த்ர) சாஸ்த்ரங்களிலும், வேறுபல ப்ரதீகங்களைப்பற்றிச் சொல்லி வருவதைக் காண்கின்றோம். புராண, தந்த்ர நூற்களிற் கூறப்படுகின்ற ப்ரதீகோபாஸனைகளின் கூட்டத்திற் பலவிதமான பித்ரு பூஜைகளும், (இதர) தேவபூஜைகளும் உட்படுத்தப் பட்டிருக்கின்றன.

கடவுளைப் போற்றி வழிபடுவதற்குமட்டும் "பக்தி" அல்லது "பேரன்பு" என்று கூறப்படுமேயன்றி, † தேவர், பித்ருக்கள் முதலியவர்களை வணங்குவதற் கெல்லாம் "பக்தி" யென்று சொல்வது கூடாது.

தேவதைகள் ஒவ்வொருவர்க்குந் தனித்தனியான பூஜாவிதிகளெல்லாம் (வேதத்தின்) கர்மகாண்டத்தில் அடங்கியிருக்

† "த்ரைகுண்ய விஷயாவேதா நிஸ்த்ரைகுண்யோபவார்ஜுந
நிர்த்வந்த்வோ நித்யஸதோ நிர்யோகக்ஷேம ஆத்மவான்"

'ஓ! அர்ஜுனா வேதங்கள் ஸத்வாதிக் குணங்களை விஷயமாகவுடையன, (என்றால் காம்யகர்மிகளுக்காக ஏற்பட்டன) நீ ஆசையற்றவனாகவுந் த்வந்த்வங்களற்றவனாகவும் நித்யஸத்வ நிலையுடையவனாகவும், யோக க்ஷேமங்களற்றவனாகவும், ஊக்கமுள்ளவனாகவுமாகக் கடவாய்" என்பதாம்.

"யாந்திதேவ வ்ருதாதேவான் பித்ருன்யாந்தி பித்ருவ்ருதா:
பூதானியாந்தி பூதேஜ்யா யாந்திமத்யா ஜினோபிமாம்.',

(கீதை அத்-9, ச்லோ-25)

"தேவதைகளை யுத்தேசித்து வ்ரதங்களைச் செய்பவர் தேவதைகளையும், பித்ருக்களை யுத்தேசித்துச் செய்பவர் பித்ருக்களையும், பூதங்களை யுத்தேசித்துச் செய்பவர் பூதங்களையும், அடைகின்றார்கள். (அஃதாவது அந்தந்த லோகத்தையடைகின்றார்கள்.) அழிவற்ற பரமாத்மஸ்வரூபனாகிய என்னிடத்தும் பேரன்பு செலுத்தினால் என்னையே யடைகின்றார்கள். தேவர், பித்ரு முதலானவர்களைப் பூஜிப்பவர் அழிவுள்ள நிலைமையையும், பரம்பொருளான முழுமுதற் கடவுளைப்போற்றுபவர் அழிவற்ற மேலான நிலைமையையு மெய்துவர் என்பதாம்.

கின்றன. அந்த முறைகளைப் பின்பற்றித் தேவதைகளைப் போற்று கின்றவர்களுக்கு ஸ்வர்க்கலோக-போக-ஸம்பந்தமான சில இன்பங்களோ வேறுபல இழிவான வல்லமைகளோ கிடைக்கின்றன. இவை (தேவபித்ருபூஜை) களொன்றும் "பக்தி" யையுண்டாக்கவோ, பேரின்ப (மோக்ஷ) வீட்டை யளிக்கவோ செய்வதில்லை.

இங்கு ஒரு விஷயம் மனதிலிருத்தி நினைப்பில்வைத்துக் கொள்ள வேண்டியதாகும். சில இடங்களில் "வேதாந்தத்தி (மறைமுடிவி) னால் அறியத்தக்கதாயும், நிர்க்குணமாயும், மிக மேலானதாயு மிருக்கின்ற முழுமுதற்கடவுளாகிய ஸாக்ஷாத் ப்ரஹ்மத்தையே ப்ரதீகோபாஸனைக்கு இழுத்துக்கொண்டு வந்து முடிவில் ப்ரதீகமே ஸாக்ஷாத் ஆத்மா (உள்ளே யொளிர்பவன்) அந்தர்யாமி" என்று வழிபடுபவர் மயங்கநேரிடுகின்றது. ப்ரதீகமானது ஒருபொழுதும் ஆத்மாவாகாது. அது கடவுளை யறிந்து போற்றுவதற்கு ஓர் அறிகுறியாக மட்டு முள்ளது, ஒரு உதவி மட்டுமாகும் என்று சொன்னால், ப்ரதீகத்தின் வாயிலாகக் கடவுள் போற்றி வழிபடப்படுகின்றாரெனில், அவ்வழிபாடானது ஐயமின்றி நன்மை பயப்பதாக விருக்கின்றதென்று பொருள்படும். பக்தி விஷயத்தில் தாழ்ந்தபடிகளிருக்கின்றவர்களுக்கெல்லாம் "ப்ரஹ்மநிஷ்டையைப் பெறும் (கடவுளை முழுவதும் நன்கு அறிந்துகொள்ளும்) வரையில் ப்ரதீகோபாஸனையானது இன்றியமையாததாகும்.

தேவதைகளுடையவோ, பிறமூர்த்திகளுடையவோ உபாஸனையானது அத்யாத்மிக வித்யையிலுட்பட்டதல்ல. அது சாஸ்த்ரமுறைப்படியுள்ள ஒரு செய்கை மாத்திரமாக முடிக்கின்றது.

தேவதைகளைப் பூஜிப்பதெல்லாம் அததற்குரிய பயனை மட்டுமேயளிக்க வல்லது. எனினும் எந்தத் தேவதையை யாயினும், முழுமுதற்கடவுளா (ப்ரஹ்மமாக, அல்லது ஈஸ்வரனா) கக்கருதித் தொழுதுவரின் அது உயர்ந்த பத்தியாகவும், பேரின்ப (மோக்ஷ)த்தை யளிப்பதாகவுமாகி விடுகின்றது. ச்ருதி, ஸ்ம்ருதிகளிற் பல இடங்களிலும், ஒரு தேவதையையோ, ஒரு மஹர்ஷியையோ தன்னியல்பினின்றும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்து கடவுளுக்கு நிகராகக் கருதி வழிபடுகின்ற காரணம் மேற்கூறியவற்றால் நன்கு விளங்கும். அத்வைதி கூறுவதாவது:—



"ப்ரபஞ்சத்திலிருந்து பெயரையும், வடிவத்தையு மகற்றிவிட்டால் (பிறகு மிச்சமாயுள்ள) உலகுமுழுவதும் ஸச்சிதாநந்த மயமாகிய ப்ரஹ்மம் மட்டுமே யல்லவா?" என்வும், விசிஷ்டாத்வைதிகள் சொல்வதாவது ‡ "எல்லாவுயிர்களிடத்திலு மந்தரியாமியாயிருப்பவர் முழுமுதற் கடவுளான ஸாக்ஷாத் ஈச்வரனேயன்றோ?" எனவும், ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகள் தமது ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யத்தில் கூறுவதாவது:—"பலம் ஆதித்யாத்யுபாஸனே ஷுப்ரஹ்மை வதாஸ்யதி—ஸர்வாத்ய க்ஷத்வாத்= ஸூர்யன் முதலிய தேவோபாஸனையா லுண்டாகின்ற பயனையும் ப்ரஹ்மமே யளிக்கின்றது—ப்ரஹ்மம் அனைவர்க்குந்தலைமை பெற்றதாகலால்" என்றும், "ஈத்ருசம் சாத்ரப்ரஹ்மண: உபாஸ்யத்வம், யத்ப்ரதீ கேஷு தத்ருஷ்ட்யாரோபணம் ப்ரதிமாதிஷு இவ்விஷ்ண்வாதிநாம்=விக்ரஹங்களில் விஷ்ணு முதலான தேவர்களைத் தோன்றச் செய்வது மேல் ப்ரதீகங்களில் ப்ரஹ்ம நோக்கத்தைச் செலுத்துகின்றது." இவ்வாறு தான் ப்ரஹ்மமானது வழிபடுவதாகின்றது.

ப்ரதீக உபாஸனையைப்பற்றி விவரமாய் வெளியிடப்பட்டிருக்கின்ற அபிப்பிராயங்களெல்லாம் ப்ரதிமோபாஸனைக்கும் பொருந்துவதுதான். அஃதியாதெனில் தேவர்களென்ற நோக்கத்தோடு ப்ரதிமைகள் உபாஸிக்கப்பட்டன வெனின், அதனால் பக்தியோ, முக்தியோ ஒன்றுங்கிடைப்பதில்லை. ஆனால் ஈச்வரன் என்ற நோக்கத்தோடு ப்ரதிமோபாஸனைசெய்பவர்க்குப் பக்தியும், முக்தியும் கிடைத்து விடுகிறது. உலகத்திலுள்ள ப்ரதான கொள்கையினரில், வேதாந்திகளுஞ், சில கிறிஸ்தவர்களும், புத்தருங்கூட விக்ரஹாராதனைத்தைக் கைக்கொண்டு நடத்திவரு

---

‡ "அஸ்திபாதி ப்ரியம்ரூபம் நாமசேத்யாம்ச பஞ்சகம்
ஆத்யத்ரயம் ப்ரஹ்மரூபம் ஜகத்ரூபம் ததோத்வயம்"

(த்ருக் த்ருச்யவிவேகம்.)

"முப்பொழுதும் உண்மையாயிருத்தல், விளங்கிக்கொண் டிருத்தல், களிப்புடனிருத்தல், பெயர், வடிவம் என ஐந்துபிரிவாம்; இதில் முதன் மூன்று நிலைமையும் கடவுளியல்பாம், பிற்கூறிய இரண்டும் உலகவடிவாம். முதல்மூன்றுங் காட்சியும், பின்னிரண்டுங் காணப்படு பொருளுமாம். முதன்மூன்று முண்மையாம், பின்னிரண்டும் பொய்த்தோற்றமா" மென வுணர்க.

வதை நாம் காண்கின்றோம். முகம்மதியரும், கிறிஸ்தவரில் ஒரு பிரிவினரான, "ப்ரோடஸ்டாண்ட்" (Protestant) கொள்கையினரும்மட்டுமே இந்தக் (கடவுளையும், மேலான நிலையையுமடைவதற்குத் துணைசெய்வதான இன்றியமையாத விக்ரஹாராதனமென்னும்) ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ளாதிருக்கின்றனர். ஆயினும் முகம்மதியர் அவரது பெரியோரை யடக்கஞ்செய்துள்ள மசூதிகளை விக்ரகங்கட்குப் பதிலாக வணங்குகின்றார்கள். "ப்ரோடஸ்டாண்ட்" கொள்கையினரும், (அவர்களையறியாமலே) தர்மாதர்மங்களைமட்டும் விவரிக்கின்ற நாஸ்திகர்களைப் பின்பற்றுகின்றார்கள். கிறிஸ்தவர் சிலரிடத்தும் முகம்மதியரிடத்துமுள்ள விக்ரஹாராதனமானது, கேவலம் ப்ரதிமை என்ற நோக்கத்துடனோ, அல்லது ப்ரதீகம் என்ற நோக்கத்துடனோ மட்டும் நடைபெறுகின்றதேயன்றி, அது நன்னோக்கத்துடன் நடைபெறுவதில்லை என்பதனால் அவர்களிடத்துள்ள விக்ரஹாராதனமானது கடவுளை நேரே சென்றடைய முடியாததென்று பொருள்படும். அவற்றைச் சாஸ்த்ரமுறைப்படியுள்ள சில செய்கைகளாய் மட்டுமே எண்ணவேண்டிவருகின்றது. அதைத்தவிர (முற்கூறியவாறு) பக்திதோன்றுவதற்கோ, முக்தி கிட்டுவதற்கோ (அவை) பயன்படா. இவ்வாறுள்ள ப்ரதிமோபாஸனையில் கடவுளிடத்திருந்து வேறுபட்ட பிறபொருள்களைத்தான் நாடியும், போற்றி வணங்கியும் வரப்படுகின்றன. ஆதலாற் கடவுள் பொருட்டுச் செய்யப்படுகின்ற விக்ரஹாராதனம் (முதலியன) மட்டுந்தான் உண்மையான பூஜையெனத்தகும். அஃதாவது, அதனால், பாபமோ துன்பமோ (ஒருபொழுதும்) உண்டாவதில்லை. அது சாஸ்த்ரோக்தமான (முறைப்படி) செய்கின்ற செய்கை மட்டுமாகவே முடிகின்றது. உபாஸிப்பவர்க்கு அதன்பயன் கட்டாயம் ஸித்தி(கிடை)த்தே தீரும்.

(வரும்)

விண்ணாற்று முடிச் சேல்வனார்.

# மணிவாசகன்.

(முன்தொடர்ச்சி.)

குடிகளின் குறையை அறிவர். அறிந்து உடனே அக்குறையை நிவர்த்திசெய்வர். அதனால், அப்பாண்டிய நாட்டில் உள்ளகுடிகள் அனைவரும், தங்கள்குறையை அறிந்து நீக்கும்வாதவூரரை அப்போதே ஒரு தெய்வம் என்று நினைத்து வந்தனர்.

வாதவூரர் ராஜ்ய கார்யங்களைக் கவனிக்கும் நேரம்போக மற்றைய நேரங்களில், பலவாய சமயநூல்களை ஆராய்வர். அவர் ஒவ்வொரு சமயநூலையும் ஆராய்ச்சி செய்யும்போது, அந்த அந்த நூலில் உள்ள குற்றங்களை உணர்ந்து, கடைசியாக மெய்ச்சமயமாகிய சுத்தாத்துவித சைவசமயத்தின் நூல்கள் பலவற்றையும் கற்று அச்சமயமே உண்மைச்சமயம் என்பதையும், அச்சமயத்தின் தெய்வமாய் விளங்கும் ஸ்ரீ கண்டபரமசிவமே எவ்வுயிர்க்கும் உய்வையளிக்கும் பரதெய்வமாகும் என்பதையும் உள்ளவாறறிந்து அவ்வுண்மையினைத்தமக்கு அங்கை நெல்லிக்கனி என அளிக்கும் ஞானாசாரியர் "எப்போது வருவார்; எப்போது வருவார்" என்று அவர் வருகையை எதிர்பார்த்திருந்தனர்.

ஒரு நாள் அரிமர்த்தன பாண்டியன் தன் மணி ஆசனத்தில் வீற்றிருந்து வாதவூரருடன் சாஸ்திர ஆராய்ச்சிசெய்து கொண்டு இருந்தான். அப்போது, அவன் எதிராக அவனுடைய குதிரைப்படைத்தலைவன் வந்து நின்று, அவனை வணங்கி நின்றான். அவன் வருகையைப் பாண்டியன் அறிந்து, தனது அருகில் அமர்ந்துள்ள வாதவூரரைக்குறிப்புடன் நோக்கினன். குறிப்பறிதலில் வல்லுநரான வர்தவூரர், "பாண்டியன், குதிரைப்படைத் தலைவனது வருகையின் காரணத்தை அறியவிரும்புகிறான்" என்பதை உணர்ந்து, அப்படைத்தலைவனை நோக்கி, "நீ இவ்விடம் வந்தகாரணம் என்ன?" என்று கேட்டனர். அதற்கு அவன், "சேரசோழர் போற்றும் அடையாளமாலையாம் வேப்பமாலையைத் தரித்துள்ள மன்னருக்கு அடியேன் செய்து கொள்ளும் விண்ணப்பம் இஃதாகும்:—சிறந்த லக்ஷணங்கள் அமைந்து கணக்கற்ற குதிரைகள் கட்டப்பெறும் நமது லாயத்தில், இறந்த குதிரைகள்போக எஞ்சி நிற்பன சிலவேயாகும். அவற்றுள்ளும் சில, கிழமாயும் நோயால்

வருந்தியும் உள்ளன. இப்போது, சோழநாட்டின் கீழ்க் கடற்கரையில் ஆரியதேசத்தவர் குதிரைகள்கொண்டு வந்திருப்பதாக அடியேன் கேள்விப்பட்டேன்." என்று கூறினன்.

அவன் மாற்ற முணர்ந்த மன்னவன் வாதவூரரை நோக்கி, "மந்திரியாரே! தாம் இன்று நம் பண்டாரத்தினின்றும் நாற்பத்தொன்பது கோடி பசும்பொன் கொண்டுசென்று, நல்லபுரவிகள் கொண்டுவாரும்." என, வாதவூரர் அரசனது ஆக்ஞையின்படியே மன்னனது பொக்கிஷச்சாலையை அடைந்து, நாற்பத்தொன்பது கோடி பொன் கொண்டு, அதனைப்பொதி செய்து ஒட்டையின்மீது ஏற்றி நால்வகைப் படையும் தம்மைச் சூழ்ந்து வரப் பிரயாணமாயினர்.

அவர் பிரயாணமாய் மதுரையை விட்டு நீங்குவதன்முன், அந்த அருமைப் பதியில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளை வணங்கிச்செல்ல எண்ணி, தம்முடன் வந்த வீரரை முன்னதாக அனுப்பித் தாம் திருக்கோயிலினுட்புகுந்தனர். அவர் உட்புகும்போதே, நற்சகுணமாகக் கோயிலின் மணி ஒலி எழுந்தது. அவ்வொலியைக்கேட்ட வாதவூரர், தாம் பல நாளாகக்கோரியிருந்த ஞானாசாரியர் வருங்காலம் குறுகியதுபோலும் என்று மகிழ்ந்து, கடவுளின் சன்னிதியை அடைந்தார். அப்போது கோயில் அர்ச்சகர், அவரது வரவையறிந்து, பரம்பொருளுக்குக் கற்பூர தீபாராதனைசெய்து, அவருக்கு விபூதிப் பிரசாதம் அளித்தனர். அதனை அன்பர் அன்புடனேற்று, "ஈதும் நம்மெண்ண முற்றுப்பெறுவதை முன்னதாகக்காட்டும் நற்குறியாகும்" என எண்ணி, தமது நெற்றியிலணிந்து, தம்மை மறந்தவராய் அக்கடவுளின் வசப்பட்டு அவரைக்கல்லும் உருகும் வண்ணம் கனிவுடன் பாடித்துதித்து, அங்கிருந்து நீங்கித் தமது படைவீரருடன் வந்து சேர்ந்தனர். வீரர்கள் தமது மந்திரியாரை அன்புடன் சிவிகையிற்றூங்கி, பரமசந்தோஷத்துடன், காடுமலைகளை யெல்லாம் கடந்து சென்று, திருப்பெருந்துறை யென்னும் திருப்பதியை அடைந்தனர். அவர்கள் அவ்வரிய பதியைக்குறுகிய போது, நமது தமிழ்ச்செல்வரது மனத்துள் என்றும் எழாத பேரானந்தம் பொங்கியது; அவரது வலது கண்ணும் வலது புயமும் துடித்தன. அதனால் அவர் தம்முடைய பரிஜனங்களை



நோக்கி, "நாம் இவ்விடத்திறங்கி, ஈங்குள்ள அதிசயங்களைக் கண்டுசெல்ல மனம்கொண்டோம். ஆதலின், நீங்கள் இவ்விடத்தில் கொட்டகை இடுங்கள்" என்றனர். அவரது கட்டளையைக் கேட்ட வீரர்கள், உடனே அவ்விடத்தில் தமது பிரயாணத்தை நிறுத்தி, தாம் எல்லோரும் தங்குவதற்கேற்ற பெரியதொரு கொட்டமையைக்கட்டி முடித்தனர். அதில் நமது வாதவூரர் இருந்து, உடன்வந்த மற்றவர்களையும் அதிற்கிடந்து இளைப்பாறுமாறு கருணைகூர்ந்தனர்.

சதாவதானம்,

தெ. கிருஷ்ணசாமிப் பாவலர்.

## பிதுர்வாக்ய பரிபாலனம்.

(முன்தொடர்ச்சி.)

இடம்:—கைகேயியின் அந்தப்புரம்.

கைகேயி கோபக்ரகத்தில் அலங்கோலமாய்ப் படுத்துக் கொண்டிருக்கிறாள்.

தசரதர் பிரவேசித்துச் சுற்றிலும் பார்க்கின்றார்.

ஈரதன்:—(தனக்குள்) ஒருவரையுங் காணோமே! எங்கே சென்றாள்? இவ்விடம் விடடுச் செல்ல இது வேளையல்லவே!

(இங்கு மங்கும் பார்க்கின்றான்.)

என்ன ஆச்சரியமிது! இந்நாள்வரையில், இங்கே வந்து என் காதலியைக் காணாமல் திரும்பினதில்லையே!

(பார்க்கின்றான் சுற்றிலும்)

(நின்று) ஆ! என்ன இது! என்ன கோபம்! ஏன்! ஏன்!! காரணமென்ன? விளைந்ததென்ன! அடைந்ததென்ன? எந்தப்பாவி என் நாயகியை யிக்கதிக் குள்ளாக்கியவன்? அருகே சென்று விசாரிக்கின்றேன். ஆகா! வேரோடு களையப்பட்ட மரம்போல் கிடக்கின்றாயே! உன்னை யார் என்ன சொன்னது? என் உயிர்க்கு என்ன தீங்கு விளைந்தது?

அந்தோ! வலையிலகப்பட்ட பெண் மானைப்போலவும் வேடனுடைய அம்பினாலடி யுண்டு பயந்த பிடியானைபோலவும் வருந்துகின்றாயே!

(உட்கார்ந்து இருகரங்களாலும் தழுவிக்கொடுக்கிறான்.)

என் கண்ணே! (தசரதன் கைகேயியைத் தன் மடிமீது வைத்துக்கொள்ளுகிறான்) புருஷருட் சிறந்தவனும், உனக்கு உயிரினும் சிறந்தவனாகிய இராமன்மேல் ஆணைப்படி உன் விருப்பமெதுவாயினும் நிறைவேற்றுகிறேன்.

கை:—(தலை நிமிர்ந்து தன் புருஷனை நோக்கி) நாதா! முன் சம்பராசுரயுத்தத்தில் எனக்குக் கொடுப்பதாகக் கூறிய இரண்டு வரங்களையும் இப்போது தட்டாமல் தரவேண்டும் நீர் நிறைவேற்ற இணங்கவில்லையாயின், இப்போதே பிராணனை விட்டுவிடுவேன்."

அரசன் ஒன்றும் பேசாமலிருக்கிறான். பெருமூச்செறிகிறான்.

கைகேயி (அரசனைநோக்கி) "முன் நீர் கொடுத்த ஒரு வரத்தால் இராமனுடைய பட்டாபிஷேகத்திற்காகச் சித்தமாயிருக்கும் பொருள்களைக்கொண்டு பரதனுக்குப் பட்டாபிஷேகம்-செய்விக்க வேண்டும். இரண்டாவது வரத்தால் இராமன் மரவுரியுடுத்துப் பதினான்குவருஷம் தண்டகாரண்யத்தில் வசிக்கவேண்டும். நான் சொல்வதை நான் என் கண்கொண்டு பார்க்கவேண்டும்".

தச:—(தமக்குள்) என்னே வினை இது! ஆ! இதுகனவோ! மயக்கமோ! ஆ! என்னகட்டளை!

யோசித்தவாறிருக்கின்றான், படுக்கின்றான். கைகேயியைப் பார்த்து எழுந்திருக்கின்றான்.

கை:—(அரசனைப்பார்த்து) "வரங்களைக் கொடுத்ததுமல்லாமல், இப்போது ஸத்தியமும் செய்துவிட்டு மறுப்ப தழகாகுமோ? தங்களை ஸத்தியந்தவறாதவர் என்று எப்படிச் சொல்லக்கூடும்? முன் தங்களை நான் காப்பாற்றியதை மறந்துவிட்டது நீதியா? கொடுத்த வரத்தைத் தவறி நடப்பதுதான்



ராஜதர்மமா? இதனால் வாக்குத்தவறாமல் அரசாட்சிசெய்து வந்த உமது முன்னோர்கட்கும் நீர் அவமான முண்டாக்குகிறவராகின்றீர்; வேண்டாம். நான் கேட்டவரம் நியாயமோ அநியாயமோ எப்படியிருப்பினும் நீர் கொடுத்தே தீரவேண்டும். வாக்குப்படி அதை நிறைவேற்றாமற்போனால் என் பிராணனை இப்போதே உமது முன்னிலையில் விட்டுவிடுவேன்".

தச:—அடி! பாதகி! வம்சத்தைக் கெடுக்கவந்த பாபி! இராமன் உனக்கு என்ன பிழை செய்தான்? நான்தான் என்ன செய்துவிட்டேன். உனக்கேன் இந்தப் புத்தி வந்தது? அடிபாதகி! நீ விஷமுள்ள பாம்பு; உன்னை நான் வீட்டில் தெரியாமல் வைத்துக்கொண் டிருக்கிறேன். உலக முழுவதும் இராமனை நல்லவனென்று புகழ்கின்றதே! நீயேன் த்வேஷ புத்தி கொண்டு அவனைக்காட்டிற்கு அனுப்புகிறாய்? என்னிடத்தில் அவன் மிகுந்த அன்புடையவனாயிற்றே! மேலும் என் மூத்தபிள்ளை யல்லவா? அவனை விட்டு நான் எப்படி பிரிந்திருப்பேன்? வேறு யாரை யிழந்தாலும் சகித்திருப்பேன்? அவனைப் பிரிந்து எப்படி உயிருடனிருப்பேன்! அடியே! என்னைக் கெடுக்கின்றாய்? நீ முன், இராமனிடம் மிகுந்த அன்பு, "எனக்கு முண்டு" என்று கூறியிருக்கின்றாயே? அதற்கு விரோதமாக ஏன் இப்போது பேசுகின்றாய்? பரதனிடம் என் அன்பு எப்படியிருக்கிறதென் பதைப் பரீக்ஷிப்பதற்கோ? இது தகாது; வேண்டாம். வீண் எண்ணம் எண்ணாதே? "இராமன், பரதன் இருவரும் எனக்கொன்றுதான்" என்று எத்தனையோமுறை நீயே சொல்லியிருக்கின்றாயே? அதை மறந்தாயோ? தருமந்தவறாத இராமனைக் காட்டிற் கனுப்புவதால் உனக்குப் பாபம் சம்பவிக்காதா?

தச:—(பதைபதைக்கிறான்; பெருமூச் செறிகிறான்; ஒன்றும் தோன்றாது சும்மாவிருக்கிறான். சற்று) இராமா! இராமா!

(தரையிற் சாய்ந்து துயரப்படுகிறான்.)

(எழுந்து கைகேயியை நோக்கி) "ஐயோ! உனக்கு இந்த உபதேசம் செய்தது யார்? உனக்குப் பேய் பிடித்திருக்கிற

தோ? இந்தப் பேச்சுப் பேச உனக்கு வெட்கங்கிடையாதா? இராமனுக்குப் பட்டங்கட்டுவதிலுனக்கு என்ன பயம்? உன் புருஷன் நன்மையையும், உலக க்ஷேமத்தையும், பரதனுடைய க்ஷேமத்தையும் விரும்பினால் நீ அடஞ் செய்யாதே! பரதன், இராமனை நீக்கிவிட்டு இந்த அரசுரிமை பெற்று இதைப் பரிபாலிக்கப் பிரியப்படான். அடியே! புத்திரன் காடுசென்றபிறகு ஜீவித்திருப்பவனுக்குச் சுகமுண்டாகுமா? அல்லது ஏதேனும்ஸந்தோஷந்தானுண்டாகுமா? உன்காலில் விழுகிறேன். ஐயோ! பரதன் இராஜ்யத்தை யாளட்டும்; ராமன் ஏன் காட்டுக்குச் செல்லவேண்டும்? அவன் பரதனை ஏதாவது துன்பப்படுத்துவான்என்கிற எண்ணமோ!ஐயோ! ஸத்தியஸந்தன், தருமம் தவறுதவன், உத்தமன் என்று பேர் பெற்ற என் கண்ணுன இராமனு பரதனுக்குத் தீங்கு செய்வான்? வேண்டாமடி அந்த எண்ணம்! மறந்து விடு அதை! நீ இப்படி ராமனுக்குச் சனியனுவாயென்று நானெண்ணவில்லையே என்றும்! ஆ! மௌனம். அந்தோ! பிடிவாதமென்னும் மலைமேலிருந்து இறங்கமாட்டே னென்கிருளே பாவி! ஆ!"

(பெருமூச்செறிந்து தரையிற் படுக்கின்ருன்.)

சுமந்திரர் பிரவேசிக்கின்ருர்.

சு:—(அரசனை நோக்கி) "என்ன! ஏன் தூங்குகிருர் இப்போது? இதுவா சமயம்.! பட்டாபிஷேக அவசரம் தெரியாதவர் போல் படுத்துக் கொண்டிருக்கிருரே! காரண மென்ன? (பிரகாசமாய்) ராஜாதிராஜ! ராஜமார்த்தாண்ட! ராஜகம்பீர! எழுந்தருளவேண்டும்! எல்லோரும் காத்துக்கொண்டிருக்கின்றனர்; நல்லவேளை தவறிப்போகுமே! இப்பொழுதேன் நித்திரை? இப்படிப் படுத்திருப்பதற்குக் காரணமென்ன? பிரபுவே! வசிஷ்டர் தமது வருகைக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்! இராமருடைய பட்டாபிஷேகத்தைச் சீக்கிரமே நடத்த வேண்டுமாம். இடையனில்லாத பசுவையும், சந்திரனில்லா இராவையும் போல அரசனில்லாத நாடும் கெடும். என் ஐயனே! எழுந்திருக்க வேண்டும்."



தச:—(பெருமூச்சோடு எழுந்து சுமந்திரரைப் பார்த்து) "சுமந்திரரே! ஏற்கனவே பிளக்கப்பட்டிருக்கும் என் இருதயத்தை உமது பேச்சு இப்பொழுது மிகுதியும் துன்பப்படுத்துகிறது"

சும:—(தனக்குள்) அரசன் இப்படிப் பேசக் காரணமென்ன? ஒருவேளை நாம் சமயந் தப்பி இங்கு வந்து விட்டோமோ? (மௌனம்)

(பயந்து நிற்கிருன்.)

கை:—(சுமந்திரனை நோக்கி) "ஐயா! நாளைக்குப் பட்டாபிஷேகம் நடக்கிறதென்ற மகிழ்ச்சியால் இரவுமுழுவதும் அரசன் தூக்கமில்லாமலிருந்தார்; இன்னும் அவருக்குத்தூக்கம் தெளியவில்லை.நீர் போய் இராமரை இங்குவிரைவில் அழைத்துக் கொண்டு வாரும்."

சும:—(தனக்குள்) இதை அரசனுடைய ஆக்ஞை யாகத்தான் கொள்ளல் வேண்டும். (பிரகாசமாய்) அப்படியே அழைத்து வருகிறேன்.

(போகின்ருன்.)

மீண்டும் பிரவேசிக்கின்ருர்.

(தமக்குள்) சூரியோதயமாய் விட்டபடியால், வசிஷ்டர் முதலிய முனிவர்கள், அமைச்சர், படைத்தலைவர், நகரத்துப் பிரமுகர் யாவரும் பட்டாபிஷேக நிமித்தம் காத்துக்கொண்டிருக்கின்றனர் சபையில். அதைத் தெரிவித்துவிட்டுப் போகின்றேன். அரசர் வராத காரணமென்ன வென்று கேட்கின்றனர். (பிரகாசமாய்) "மஹாராஜாவே! உங்களுக்கு மங்களமுண்டாக்கக்கடவது! சூரியோதயமாய்விட்டது. அபிஷேகத்திற்கு வெண்டியவை யாவும் சித்தமாயின; எழுந்திருந்து செய்யவேண்டியவைகளைச் சீக்கிரமாகச் செய்யுங்கள்; யாவரும் காத்துக்கொண் டிருக்கின்றனர்."

தச:—(படுத்தவண்ணத்தில்) சுமந்திரரே! முன் கைகேயி இராமனை அழைத்து வரும்படி சொன்னுளே; என் வார்த்தையை மீறி நடக்கிறீர்? சீக்கிரமாக அழைத்துவாரும், போம் சீக்கிரம்.

சும:—அவ்வாறே செல்லுகின்றேன். (போகின்றான்.)

தசரதர் எழுந்து ஆசனத் தமர்கிறார். கைகேயி நிற்கிறாள். அருகே.

தச:—அடியே! ஏனோ இப்படி வதைக்கின்றாய்? ஐயோ! உன்னிலும் கொடியவள் உண்டோ? உன்னைவிட உயிரை வாங்கும் யமன் வேறே யிருக்கின்றானோ? ஆ! இராமனை ஏன் சதிகாண்கின்றாய்? அவனை த்வேஷித்துக் கொள்வாருமுண்டா? என்ன பாபமிது!

(சோர்வடைகிறான்.)

இராமன் பிரவேசிக்கின்றான்.

இராமன்:—(தனக்குள் ஏன் இப்படி விசனத்துடனிருக்கின்றார் தந்தை! காரணமென்ன? இப்படி யிச்சமயம் இவரிருக்க நேர்ந்ததென்ன? இந்த விசனத்திற்கு நான் ஏதாவது சம்பந்தப் பட்டிருப்பேனா? சி! அப்படி யிராது - அருகே சென்று விசாரிக்கின்றேன். சுமந்திரர் அவசரப்படுத்தினாரே!

அருகே சென்று முதலில் தந்தையைப் பணிந்து பின் தாயைப் பணிகின்றான்.

தச:—இராமா! இராமா!

(அவர்கண்களில் நீர்ததும்புகிறது விசனப்படுகிறார்.)

இரா:—ஆ! ஆ! என்ன! என்ன! ஏனிப்படி!

(மெய் விதிர்த்துப் பிரமிக்கிறான்.)

(கைகேயியை நமஸ்கரித்து) அம்மா! நான் என்னை யறியாமலும் என் பிதாவுக்குப் பிழை செய்ததில்லையே; ஏன் அவர் கோபித்துக் கொண்டிருக்கிறார்? அவரைச் சமாதானஞ் செய்ய வேண்டும். அம்மணி! என்னுடன் எப்பொழுதும் பிதா அன்போடு பேசுவாரே! இன்றைக் கேனிப்படி யிருக்கிறார், ஏதேனும் வியாதி யுண்டாயிருக்கிறதா? இப்படி மனத்துயரம் வருவதற்குக் காரணம் என்ன? நீங்களேதேனும் கடுஞ்சொல் சொன்னீர்களா? உண்மையைச் சொல்லுங்களம்மணி



கை:—(தன் வெட்கத்தை விட்டு) அரசருக்குக் கோபமு மில்லை, துக்கமு மில்லை; ஆனால் அவர் மனதில் ஒரு எண்ணமிருக்கிறது. அதை உன்னிடம் சொல்லப் பயப்படுகிறார்! முன் சம்பராசுரயுத்த சமயம் இரண்டு வரம் எனக்குக் கொடுத்திருந்தார். அதைக் கேட்டேன். இப்போது நிறை வேற்றுவதாக வாக்களித்தார். அப்பா! இராமா! வரத்தைக் கொடுத்ததுமன்றி நிறை வேற்றுவதாக ஸத்தியமும் செய்தார். இப்பொழுது சாதாரண மனிதனைப் போல் அதற்காக வருதப் படுகிறார். ஸத்தியமன்றோ தருமத்திற்கு மூலம்; அது தவறுவது அழகாகுமா? அவரது ஸத்தியம் தவறாதபடி நீ செய்யவேண்டும்; அது நன்மையானாலும் தீமையானாலுமெப்படி யிருந்தாலும் நீ ஒப்புக்கொள்வதானால் நான் அதை உனக்குச் சொல்லுகிறேன்.

இரா:—என் தாயே! என் அம்மணி! அப்படிச் சொல்லவேண்டாம்; இராமா இந்த அக்கினியில் குதி, இந்த விஷத்தைக் குடி, இந்தக் கடலில் முழுகு என்று சொன்னாலும் அக்கணமே செய்வேன்; என் பிதாவின் கட்டளை யென்றால் போதும்; அவரே எனக்குக் குரு, பிதா, அரசர், யாவும், என் அம்மா சொல்லுங்கள்.

கை:—நீ பதினான்கு வருஷம் வனம் செல்லவேண்டும் ஒரு வரத்தின்படி, மற்றொரு வரத்தின்படி பரதன் இந்தப் பாராள வேண்டும். இவ்விரண்டும் முடிவுபெறவேண்டும். உன் பிதாவின் கட்டளை யிதுவாகும். ஆகையால் உன் பிதாவின் கட்டளைப்படி நடந்து அவரைச் சத்தியந் தவறாதவராகச் செய். சொன்னேன்.

தசரதன் ஆ! ஆ! சோர்கின்றான்.

இரா:—நல்லது; ஸந்தோஷம் உமக்குக் கொடுத்த வரத்தின்படி நான் ஜடைமுடிதரித்து வனத்துக்குப் போகிறேன்; பரதனே பட்டம் பெறட்டும். அம்மணி! என்னிடத்தில் அன்பாயிருக்கும் என் பிதா ஏன் என்னுடன் பேசாமலிருக்கிறார்? அதை மாத்திரம் தெரிவியும் போதும்.

கை:—அப்பனே! உன்னிடம் இதைச் சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டு பேசாமலிருக்கிறார். வேறு ஒரு காரணமுமில்லை. நீ கவலைப்படாதே; நீ இந்த நகரத்தைவிட்டுப் புறப்பட்டுக் காட்டுக்குப் போகிறவரை உன் பிதா உண்ணவும் மாட்டார், பேசவும் மாட்டார்.

கைகேயி இப்படிக் கூறுவதைக் கேட்ட தசரதன் கட்டிலிற் சாய்கின்றான்.

ராமன்:—(கைகேயியைப் பார்த்து) நான் பொருளை விரும்பி இவ்வுலகத்தில் வசிப்பவனல்லன்; என் பிதாவுக்கு மகிழ்ச்சியுண்டாக்கு நிமித்தம் என் உயிரையும் கொடுப்பேன். அவருக்குப் பணிவிடை செய்வதைவிடத் தவம் வேறொன்றுமில்லை; இந்த க்ஷணமே ஸீதையிடமும் என் தாய் கௌஸல்யையிடமும் விடை பெற்றுக் கொண்டு காட்டுக்குச் செல்லுகின்றேன்.

என்று சொல்லிக் கொண்டே மதி மயங்கி யிருக்கும் பிதாவையும், கைகேயியையும், வலமாகப் போந்து அவ்விடம் விட்டு வெளிப் புறப்படுகின்றான்.

வாகவி - திரு. அ. சுப்ரமணிய பாரதி.

---

யுத்தம்.

ருஷ்யாவில் நேர்ந்திருக்கும் குழப்பத்தினால் யுத்தம் எதிர்பார்த்திருந்தவாறு சீக்கிரம் முடிவாகுமென்று தெரியவில்லை. மேற்கரங்கத்தில் பிரிட்டிஷாரும் - பிரெஞ்சுக்காரரும் மிகு உக்ரமாகச் சண்டைசெய்து ஜெர்மானியரைப் பின்னடையச் செய்து வருகின்றார்கள்.

அந்நிபெசண்ட் அம்மையார்.

சென்ற மூன்று மாதகாலமாகப் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருந்த அந்நிபெசண்ட் அம்மையார் இம்மாதம் 17-ந்தேதி பந்தோபஸ்திலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

... NOV 1917 ... MADRAS

# சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி ".

VOL-13 தொகுதி-13 | October-1917. அக்டோபர்மீ 1917. | No-3 பகுதி-3

## நாலடியார் வசனம்.

### 4 - அறன்வலி யுறுத்தல்.

அஃதாவது அறம் பொருளின்பங்கள் போலாகாது இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் மோட்சத்தையுந் தருவதாக விருத்தலின், அவற்றினும் வலியுடையதாமெனக் கூறல். அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தனவற்றைச் செய்தலும் விலக்கியவற்றைச் செய்யா தொழிதலுமாம். செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை யென்பனவற்றை யுணர்ந்தவரன்றி மற்றவர் அறத்தைக் கடைபோகச் செய்வதின்மையின், அவ்வியைபுபற்றி அவற்றின் பின் அறன்வலி யுறுத்தல் வைக்கப்பட்டது. (பொருள் இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் தருவதாம்; இன்பம் இம்மைப் பயனையே தருவதாம்.)

அறஞ் செய்யாதவர் வறுமை யுடையவராய்
வருத்தமுறுவரெனல்.

(1) முற்பிறப்பிற் செய்த தவங் காரணமாக யிப்பிறப்பிற் றவஞ்செய்யாதவர் (மனைவி மக்கள் முதலியவர்களுடன் செல்வத்தாற் சிறந்து) இல்லறவாழ்க்கையை விருப்பவரே நல்வாழ்க்கையுடையவரென்று கருதி (அவர் தம் வீட்டின் வாயிற்படிக்கருகே சென்று) தலைவாயிலைப் பிடித்துக்கொண்டு நின்று, (உள்ளே

யிருப்பவரைத்) தலைநிமிர்ந்து நோக்கித் தாமுள்ளே நுழையப் பெறாதவராகி மிகவும் வருத்தமடைந்திருப்பர்.

(க - து.) முற்பிறப்பில் நல்வினை செய்யாதவர் இப்பிறப்பிற் றரித்திர முடையவராய், யாதாவதொன்றைப் பெறுதற்பொருட்டு, செல்வ முடையாரது வீட்டின் தலைவாயிற் கருகே சென்று அதனைப் பிடித்துக்கொண்டு நின்று, உள்ளே யிருப்பவர் யாதாவதொன்று கொண்டுவந்து நமக்குக் கொடுப்பார்களாவென்று கருதி, அவர் வருகையை யெதிர்பார்த்து வருந்தி நிற்பாரென்பதாம்.

செல்வத்தை விரும்பி அறத்தைச் செய்யாதிருப்பது தகுதியாகாதெனக் கூறல்.

(2) நாம் (செல்வத்தால் சிறப்புற்று) வாழக்கடவோமென்று கருதி அச்செல்வத்தை விரும்பி, அறஞ்செய்வதை மறந்து, (எவ்வளவு கால மிருந்தாலும் ஒரு காலத்தில் தவறாது) நாமிறந்து போவோமென் றெண்ணுதிருந்த மிழிவுள்ள மனமே! நீ (பொருள்வேண்டுமென்று தளராத வூக்கத்துடன்)இருந்து இடைவிடாது முயற்சிசெய்து வாழ்வாயானாலும் உன்னுடைய வாழ்நாட்கள் குறைந்துவிட்டன, இனிச் செய்வது யாது? அதனை எனக்குக் கூறுவாயாக.

இஃது அறத்தின் பயனை யறிந்த வொருவன் தன் வாழ்நாள் பயனின்றிக் கழிந்தமைக்காக வருத்தமுற்றுத் தன் மனதை நோக்கிக் கூறியதாம்.

(க - து.) செல்வத்தை விரும்பி அறஞ்செய்யா திருப்பது தகுதியாகாது; இறந்தபின் நற்றுணையாக வருவது அறமே யாகலின், அதனை விரைந்து செய்தல் வேண்டும்; மூப்பு வந்தபின் அறத்தைக் கருதியவாறு செய்தல் முடியாது என்பதாம்.

துன்பம் தீவினையின் பயனுமென்றறிபவர் நல்வினையைச் செய்ய முயலுவாரெனல்.

(3) பேதை (தனக்குத்) தீவினையின் பயனாகிய துன்பம் வந்தவிடத்து, பெருமூச்செறிந்துகொண்டு, (தனக்கு வந்த துன்பத்தை யெண்ணி யெண்ணி) மனத்திலே (பெரிதும்) வருத்தமுற்றுவதைவான்; (தீவினையின் பயனாகிய துன்பம் வந்தவிடத்து



அதனை (இஃதெதனால் வந்ததென்று) ஆராய்ந்து, (இத்துன்பம் நாம்) முற்பிறப்பிற் செய்த தீவினையின் பயனுமென் றுணர்பவரே (நல்வினையைச் செய்து அதனால்) தடுமாற்றத்தின் எல்லையினின்றும் நீங்கிப் போவர்.

பேதை - செய்யத்தக்க திது, செய்யத்தகாத திது என்றுணராதவன். தடுமாற்றம் - பல வேறு திறத்தனவாகிய பிறப்புக்களை யடைந்து வருந்துவதினின்றும் நீங்கும்வழி தெரியாது கலக்கமுறுதல். இத்துன்பம் நாம் முற்பிறப்பிற் செய்த தீவினையின் பயனுமென் றுணர்தலும் நல்வினையின் பயனுமென இதனாற் குறிப்பித்தவாறுணர்க.

(க - து.) துன்பம் வந்தவிடத்து, அதற்குத் தளர்ச்சி யடையாது, இது நாம் செய்த தீவினையால் வந்ததென்றுணர்ந்து, தீவினைகளைச் செய்வதொழிந்து, நல்வினைகளைச் செய்பவரே துன்பத்தின் எல்லையைக் கடப்பாரென்பதாம்.

மானிடவுடம்பு பெறுதற் கரிதாகலின், அதன் பயனைத் தவறாது பெற முயலுதல் வேண்டுமெனல்.

(4) பெறுதற்கரிய மானிடவுடம்பைப் பெற்றவர் அதனைப் பெற்ற பலத்தால் (மோட்சமாகிய) பெரிய பயனையும் (அறத்தை) மிகுதியாகச் செய்து பெறக்கடவாராக; (ஆலையில் வைத்தாட்டும்போது) கரும்பிலிருந் துண்டாய சாறுபோல (அவ்வறம்) மிகவும் மறுபிறப்பிற்கு உதவியா யிருக்கும்; அக்கரும்பின் கோதுபோல உடம்பானது பயனில்லாதுபோம்.

சாறு - ரசம்; கோது - சக்கை.

(க - து.) கரும்பை ஆலையில் வைத்து ஆட்டி அதன் இரசத்தைப் பெறுவதுபோல, உடம்பை அறஞ்செய்வதற்குரியதாக்கி அதன் பயனாகிய அறத்தைப் பெறுதல் வேண்டும்; பெற்றால் அது மறுமைக்குதவியா யிருப்பதுடன் மோட்சத்தையுந் தருவதென்பதாம்.

உடம்பின் பயனைப் பெற்றவர் அது நீங்குவது பற்றி வருத்தமுறாரெனல்.

(5) கரும்பை ஆலையில் வைத்தாட்டி, (அதன் சாற்றாலாகிய) வெல்லக் கட்டியை முன்னே கொண்டவர் அதனது சக்கைபெழு

ம்பி (தீயில்விழுந்து) வேகும்போது (அதனால்) துன்பங்கொண்டு கலங்குவதில்லை; அதுபோல, (இந்திரியங்களை யடக்குதல் முதலியவற்றால்) வருத்தமுற்று, உடம்பின் பயனாகிய அறத்தைப் பெற்றவர் யமன் வரும்போது (அதனால்) துன்பங்கொண்டு கலங்குவதில்லையாம்.

(க - து.) கரும்பை ஆலையில் வைத்தாட்ட வேண்டிய காலத்திலாட்டி அதன் பயனைப் பெற்றவர் அதன் சக்கை தீயில்விழுந்து வேவது பற்றி வருத்த முறாமைபோல, உடம்பை இளமைப் பருவத்திலேயே அறஞ்செய்தற் குரியதாக்கி, அதன் பயனைப் பெற்றவர் இறப்பதுபற்றி வருத்தமுறாரென்பதாம்.

*யமன்வரும் நாளைக் குறிப்பிட்டறிதல் முடியாது; அதனால்*
*அறத்தை விரைந்து செய்தல் வேண்டுமெனல்.*

(6) (அறிவிலாதவர்களே! நீங்கள் தான் வரும் சமயம்) இன்றைக்கோ நாளைக்கோ (பின்) என்றைக்கோ என்று நினைத்தற்குக் கூடாதவாறு யமன் (நமக்குப்) பின்னே நின்றுகொண் டிருக்கிறானென்று நினைத்து, தீயகாரியங்கள் செய்து வருவதை விட்டுவிடுங்கள்; மாட்சிமையுடையார் (இவைசெய்யத்தக்கவையென்று கூறிய) நல்வினைகளைக் கூடுமானவளவும் பொருந்துமாறு செய்யுங்கள்.

(க - து.) யமன் வரும் சமயத்தை யறிதல் முடியாமையால், தீவினைகளை யொழித்து மறுமைக் குதவியாக நல்வினைகளை விரைந்து செய்தல் வேண்டுமென்பதாம்.

*இம்மைக்கே யுரிய காரியங்களைச் செய்திராது மறுமைக்குரிய*
*காரியங்களை மறவாது செய்துவருதல் வேண்டுமெனல்.*

(7) (சீவர்கள் தமக்குக் கிடைத்துள்ள) மக்களுடம்பால் செய்து பெறத்தக்கனவாய பெரியபயன்கள் (எவ்வளவாமென்று) ஆராய்ந் தறியுமிடத்து, (அவை) எவ்வளவினும் மிகப் பலவாயிருப்பனவாம்; அதனால், (மனைவி மக்கள் முதலாயினாருடன்) கூடியுள்ள உடம்பிற்கே வேண்டிய காரியங்களைச் செய்தொழுகாது சுவர்க்கலோகத்திலிருந்து (சுகபோகங்களை) யனுபவிக்க, (அதற்கேதுவாய அறங்களை ஒவ்வொருவரும் மறவாது) செய்துவருதல் வேண்டும்.



(க - து.) மக்கள் உடம்பால்செய்து பெறத்தக்க பெரிய பயன்கள் புண்ணியலோகப்ராப்தி, யோகசித்து, சாஸ்திரவாராய்ச்சி, சற்குரு சேவை, தத்துவ விசாரம் முதலிய பலவாம்; அவற்றைப் பெறுதற்குரிய கருமங்களைச் செய்யாது, இவ்வுடம்பிற்கு வேண்டிய கருமங்களை மாத்திரம் செய்துவருதல் எவர்க்குந் தகுதியாகாது. அறத்தைச் செய்பவர் தவறாது புண்ணியலோகத்தை யடைந்து பல சுகபோகங்களை யனுபவிப்பரென்பதாம்.

*தக்கார்க்குச் செய்யும் அறம் மிகப் பெரிதாமெனல்.*

(8) கிள்ளியெடுக்கு மளவினதாகிய ஓரால மரத்தின் விதை (கிளை முதலியவற்றால் மிக) நெருங்கி வளர்ந்து, மிகவும் நிழலை (பிராணிகளுக்குத்) தருவதுபோல, (ஒருவர் செய்யும்) நல்வினைப் பயனும் சிறிதா யிருப்பினும், தக்காரிடத்துச் சேருமாயின், ஆகாயமும் சிறிதாமாறு (அதனை) மூடிவிடும்; (அஃதாவது மிகப் பெரிதாம்).

நல்வினைப் பயன் - நல்லெண்ணத்தோடு செய்யும் தருமம். தக்கார் - கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களால் மேம்பாடுடையார்.

(க - து.) ஆலம்விதை மரமாக வளர்ந்து பிராணிகளுக்குப் பெருநிழலைத் தருவதுபோல, தக்கார்க்குச் செய்யும் அறமும் சமஸ்கார வடிவமாக வளர்ந்து தன்னைச் செய்தவர்க்குப் பெரும் பயனைத் தருமென்பதாம்.

*ஒவ்வொருவரும் தமது வாழ்நாள் கழிவைக்கண்டு*
*மகிழ்ச்சியடையாது, அறத்தை விரைந்துசெய்தல்*
*வேண்டுமெனல்.*

(9) தினந்தோறும் (தாமிருப்பதற்குரிய) நாள் கழிந்து வருவதைத் தமது வாழ்நாளின் மீது செலவுநாளாக வைத்து, (அந்த) நாட்கழிவை யறியாதவர், தினந்தோறும் (தாமிருப்பதற்குரிய) நாட்கழிவு வரப்பார்த்தும், அந்நாட்கழிவைக் கவனியாதவராகி, தினந்தோறும் (தமது வாழ்)நாள் கழிந்து வருவதை (கழியாமல்) இருக்கின்றதென்று நினைத்து (மறுமைக்குத் துணையாக அறத்தைச் செய்யாது) சந்தோஷமடைகின்றனர்.

நாட்கழிவைப் பார்த்தலர்வது நாட்கழிவிற்குக் காரணமான சூரியன் தோன்றிமறைதலைக் காண்டலாம்.

(க - து.) ஒவ்வொருவரும் தமது வாழ்நாள் கழியாதிருக்கின்றதென்று கருதிச் சந்தோஷங் கொண்டிராமல், அறத்தை விரைந்துசெய்தல் வேண்டுமென்பதாம்.

இரந்துவாழ்வது வாழ்வன்று ; ஈந்துவாழ்வதே வாழ்வாமெனல்.

(10) இழிவான காரியத்தைச் செய்து பொருள் தேடி அது கொண்டு (உண்டி உடை முதலியவற்றை) அனுபவிக்கச் செய்தவிடத்தும் இவ்வுடம்பு பலமடைந்து (நெடுநாள்) நிலைபெற்றிருக்குமாயின், (யான்) மானமென்னும் அருமையாகிய ஆபரணத்தை நீக்கிவிட்டு, இரத்தலென்று சொல்லப்படும் கனவீனமான அவமானத்தோடுகூடி வாழ்வேனாக.

இது, வறுமையடைந்து வருத்தமுறும் அறிவுடையானொருவன், தான் பிறர்க்கீதற் கியைபுடையவனாகாது பிறரிடத்து இரத்தற் கியைபுடையவனானதை நோக்கித் துக்கித்துக் கூறியதாம்.

மானம் - தனது மேன்மையைப் பாதுகாத்துக் கொண்டொழுகுதல். இரத்தல் - யாசித்தல்.

இரப்பவர்க்குத் தவறாது அவமானமுண்டா மென்பதைக் குறிப்பிக்க, இரத்தலென்று சொல்லப்படும் கனவீனவான அவமானம் என்று கூறப்பட்டது.

(க - து.) இரத்தலைச் செய்து அதனால் அவமான மடைந்திராது, கூடுமானவளவும் ஈதலைச் செய்து அதனால் மானத்தோடு வாழ வேண்டும் ; அதுவே மறுமைக்குத் துணையாமென்பதாம்.

## ஸ்ரீராமநாம வைபவம்.

ராமநாமமானது ஸஹஸ்ர நாமங்களுக்கு நிகரானது. மகிழ்ச்சியோடும் பக்தியோடும் ராமநாமத்தை ஜபிப்பவன் ஸகல பாபங்களினின்றும் விடுபட்டுப் பரிசுத்தனாவான். முக்தர், முமுக்ஷுக்கள், பத்தர் (கட்டுண்டவர்)—என மூன்று வகையினராக ஜீவர்கள் பிரிக்கப்படுகின்றனர். அவர்களெல்லோருக்கும் ஸ்ரீராமநாமமே



தாரகமென நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. பரிகாஸத்திற்காகவோ, ஸம்பாஷணையினிடையிலோ, பக்தியினாலேயோ ஸ்ரீராமநாமத்தைச் சிந்திப்பவன் ஜீவன் முக்தனாவான். இதுபற்றிய ஒரு கதையிருக்கின்றது. அது மஹா பாபங்களையும் போக்கக்கூடியது.

பூர்வம் சித்ரவர்மன் என்னுமொரு மன்னனிருந்தான். அவன் மிகுகீர்த்தி பெற்றிருந்தான். அவன் கேகயதேசத்திற்கு அதிபதி; ஸ்ரீமான்; தருமமுணர்ந்தவன்; கார்கியர் என்னும் முனிபுங்கவரின் அன்புக்குரிய மாணவன். அவனுக்கு வைஜ்யந்தன் என்னுமொரு புதல்வனிருந்தான். அவன் மஹா புத்திசாலி. ஆனால் அவன் சப்தத்தைக் கேட்கும் செவிப்புலனைமாத்ர முடையவனாக விருந்தான்; வாயினால் எதையும் பேசமுடியாதவனாயிருந்தான். தன்னுடைய ஏகபுத்ரனாகிய இந்த வைஜயந்தன், ஊமையா யிருப்பதனால் பெரும் துயரத்திற்குள்ளான மன்னன், அதனை நிவிர்த்திக்கவெண்ணி, வைதிக, லௌகிக கர்மங்களைப் பற்பலவாறாகவும் செய்து வெகுகாலம் முயற்சித்துப் பார்த்தான். தன் முயற்சி பயன்றராமற்போகவே, மன்னன் பெருங்கவலைக்குள்ளாகி, செய்வ தின்னதென்று தெரியாமற் கலங்கி நின்றான்.

இவ்வாறு கலங்கி நிற்கும் இம்மன்னனுடைய அரண்மனைக்குத் தற்செயலாய் மஹானாகிய ஸ்ரீ நாரதமுனிவர் எழுந்தருளினர். அவரைப் பார்த்ததும் அரசன் பக்தியோடு பூஜித்து வணங்கி, தன் புதல்வனையு மழைத்து அவரை வணங்கும்படி செய்தான். ஜனனகால முதற்கொண்டு தன் புதல்வன் ஊமையாயிருப்பதுகண்டு பெருங்கவலைக்குள்ளாழ்ந்திருக்கும் மன்னனை நாரதர் பார்த்துக் கூறுகின்றார்.—

மன்னவ! அதிதியாக நான் வந்திருக்கும் இச்சமயம் உனக்கேற்பட்ட மனக்கவலையென்ன ? ஆசையற்றவனாயினும், ஆசையுள்ளவனாயினும் அதிதியென்று வருவானாயின் அவன் பூஜிக்கத்தக்கவனே யாவன். தன் வீட்டிற்கு வந்த அதிதியைக் கண்டவுடன் எவன் தன் முகவொளிகுன்றிக் கடுகடுப்பாய்ப் பேசுகின்றானோ அவன் பாண்டு என்னும் பெருநோயடைவான். வீட்டிலிருக்கும்போது வந்த அதிதிக்கு வீட்டுக்குடையவனில்லை, வெளியே சென்றிருக்கின்றானென்று போக்குச்சொல்லி எவன் அனுப்பு

கின்றானே அவன் மண்டூகமாகப் பிறந்து பாம்பின் புற்றி
பிரவேசித்து அதற்குணவாகின்றான். யதி, கிருஹஸ்தன், விரத
முடையவன், இவர்களிலேயாவர் அதிதியாகவரினும் அவர்களைத்
திட்டி விரட்டுவானாயின் நோயினாலும் வறுமையினாலும் அவன்
துன்பமுறுவான் என்பது திண்ணம் என்று இவ்வாறு தருமங்
களைப் பேச்சோடு பேச்சாக எடுத்துப்பேசிய நாரதரைநோக்கி
அன்போடு அரசன் கூறுகின்றான்.—

முநிபுங்கவரே! தாம் என்னுடைய கிருஹத்திற்குப்பிராப்த
மானமையால் நான் தன்யனானேன். பரமஸந்தோஷமடைந்தேன்.
அவ்வாறிருந்தும் நான் தைந்யனாக இருப்பதன் காரணம் கூறு
கின்றேன். தயைசெய்து கேட்டநுக்கிரகிக்க வேண்டும்—

வெகு காலம் மக்கட்பேறின்றி வருந்தினேன். பின்ன
அருந்தவம்புரிந்து இந்தப் புதல்வனைப் பெற்றேன். இவனுக்குச்
காதுகேட்கின்றது. இவன் வாயினால் மாத்திரம் பேசுவதில்லை.
இந்தக் கவலையே என்னை வருத்துகின்றது. இதனால் வேறு
சிந்தை யில்லாதவனானேன். இவன் காது கேட்பவனாகவிருந்தும்
ஊமையாயிருப்பது எந்தக்கர்மத்தின் ப்ரபாவமோ தெரியவில்லை.
முனிவரே! இதை எனக்குக் கூறவேண்டும்—என்றான்.

நாரதர்:—அரசனே! உன்னுடைய புதல்வன் முன்னம்
ஸூர்யவம்சத்து மன்னனாகிய ஸுஸந்தி யென்பவனுக்குப் புத்
திரனாகப் பிறந்திருந்தான். அவனுக்கு ப்ரசேனஜித் என்று
பெயர். ஒருசமயம் அவன் வசிஷ்டமஹரிஷியின் ஆச்ரமத்திற்
குச் சென்றான். அங்குக் குருவின் போதனையினால் ராமா ராம
என்று ஜெபம் செய்துகொண்டிருக்கும் அழகான கிளியைக் கண்
டான். அதனைத் தரிசித்ததனால் பரமானந்தமடைந்த மன்னன்
தனக்கு அந்தக் கிளியைத் தரும்படி குருவைக் கேட்டான்.
மாணவனிடம் கொண்ட அன்பினால் வசிஷ்டர், அந்தக் கிளியை
அவனிடம் கொடுத்தார். பிறகு ப்ரசேனஜித்தென்னும் அவ்வர
சன், அந்தக்கிளியைப் பரமசந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டு
தன் நகரஞ்சென்று ஏகாந்தமான ஓரிடத்தில் அதனை வைத்து
“இனி ராமநாமத்தை உச்சரிக்கக்கூடாது; வேறு வார்த்தை
களையே பேசவேண்டும்” என்று கூறித் திட்டப்படுத்தினான். கிளி
யும் அவனை யநுஸரித்து லீலா சுகமாக ஆயிற்று. பிறகு அவ்
வரசன், காலத்தில் மரணமாயினன்.



மறுபடி அந்தக் கிளியானது வசிஷ்டருடைய ஆச்ரமத்திற்
குச்சென்று முன்னம் உச்சரித்து வந்தது போலவே ஸ்ரீராம
நாமத்தை உச்சரித்து வருகிறது.

இப்போது அந்தப் பிரசேனஜித் ராஜனே உனக்கு ஊமை
யாகப் பிறந்திருக்கின்றான். முன் இவன் கிளியை ராமநாமத்
தைச் சொல்லவெட்டாமற் றடுத்தானல்லவா? அறிவின்மையி
னாலே எவன் ஸ்ரீராம பக்திக்குத் தீங்கும் ஸ்ரீராமபக்தனுக்கு
த்வேஷமும் செய்கின்றானோ அவன் சண்டாளனாகவாவது
மற்றவனாகவாவது பிறப்பான்.

ஆகையினால் உன் புதல்வன், வஸிஷ்ட மஹரிஷியின் ஆச்ர
மஞ் சென்று அங்கு ஸ்ரீராமநாம ஜபம் செய்துகொண்டிருக்கும்
கிளியினிடத்தும் வீற்றிருந்து ஸ்ரீராமநாம ச்ரவணம் செய்து
கொண்டிருப்பானாயின் இவன் அந்தப் பாபத்தினின்று விடுபட்டு
நன்றாகப் பேசுகிறவனாவான். அப்பால் அவன் ராஜ்யத்திற்கு
வந்துவிடலாம்—என்றார்.

இங்ஙனம் கூறியதும் அரசன் பேருவகைகொண்டு நாரத
முனிவரை வணங்கிப் பூஜித்தான். முனிவர் அவனிடம் விடை
கொண்டு ஆகாயமார்க்கமாகச் சென்றார். பிறகு சித்ரவர்மன்
என்னும் அரசன் நாரதர் திருவாய்மலர்ந்தருளியபடி தன் புதல்
வனை அந்தக் கிளியிடத்திற்கு அனுப்பிவைத்தான். புத்ரன் கிளி
யிடம் சென்று ஸ்ரீராமநாம ச்ரவணஞ் செய்து நன்றாகப் பேசும்
வன்மைபெற்றுத் திரும்பினான்.

புத்ரனைக் கண்டு மகிழ்ச்சியடைந்து சித்ரவர்மா, தன் புதல்
வனுக்கு முடிசூட்டுவித்து வயதான விருத்தனாகையால், தன்
மனைவியுடன் வனம் சென்றான்.

இவ்வாறு தன் தந்தை வனமேகியதும் ஊமைத்தன்மை
யொழியப்பெற்ற புதல்வன் வைஜயந்தம் என்னும் நகரமொன்றை
யேற்படுத்திக்கொண்டு அரசுபுரிந்து வந்தான். ப்ரஸேனஜித்தா
கிய இவன், வெகு காலம் அரசுபுரிந்து வந்து பிறகு மரணமடை
ந்து, மிதிலையில் தத்வஞான முடையவனாய் ஜனகன் என்னும்
பெயரோடு பிறந்தான். அந்தக் கிளியும் தனக்கு ஞானோப
தேசஞ் செய்தவராகிய வ்யாஸருக்குப் புத்ரனாகப் பிறந்து சுகர்
என்னும் பெயரோடு விளங்கியது.

சுகர் பூர்வ சம்பந்தத்தினால் ஜனகனை இன்னானென்றறிந்து அவனிடம் சென்று உபதேசம் பெற்றுக்கொண்டு இந்தப் புவியில் ஜீவன் முக்தராக விளங்குகின்றார். ஆகையினால் ஸ்ரீராமனுடைய நாமஜபம் புரிபவன் பாபங்களிலிருந்து விடுபட்டு ஜீவன் முக்தனாவானென்பது நிச்சயம்.

ராமாயணம்.

## பிதுர்வாக்ய பரிபாலனம்.

(முன்தொடர்ச்சி)

இடம்:—கோஸலையின் அரண்மனையில் ஒரு பக்கம்.
இராமசந்திரன் பிரவேசிக்கின்றான்.

கோ:—(பார்க்கின்றாள் - தனக்குள்) யார்! கண்மணி இராமனா! என்ன இது! இப்படிவரக் காரணமென்ன? என் அப்பனுக்குக் குடையெங்கே? சாமரை எங்கே? சேகவர்கள் எங்கே? ஆ! என்ன புதுமை இது! பட்டாபிஷேகத்திற்கு ஏதேனும் இடையூறுண்டாயிற்றோ?

கோஸலை யோசித்தவாறிருக்கின்றாள்.

இரா:—(அருகே சென்று) அம்மா! அடியேன் நமஸ்கரிக்கின்றேன்.

நமஸ்கரிக்கின்றான்.

கோ:—மஹாராஜனாக இருக்கக் கடவாய்; சர்வமங்களமும் உண்டாகட்டும். ஏன் இப்படி வந்தாய்? காரண மென்ன? முடிசூட்டுவதில் ஏதேனும் தடையேற்பட்டதோ? என்னடா அப்பா! என் கண்மணி!

இரா:—(இருகரங்களையும் கூப்பிக் கும்பிட்டுக் கொண்டு) அம்மா! உன்னுடைய அன்பான புத்திரனும் குற்ற மற்ற குணமணியு மாகிய என் தம்பி பரதன் மகுடம் சூட்டுகின்றான்.

கோ:—அப்படியா! நல்லது, மூத்தவனிருக்க இளையவனுக்குப் பட்டங் கட்டும் வழக்கங் கிடையாதே. இவ்வழக்கம் மாறி நடக்கக் காரண மென்ன? உன் தந்தையின் விரும்பம் அதுவோ?

இரா:—ஆம் அம்மா!



கோ:—சரி சந்தோஷம்; உன் தந்தையின் கட்டளையை மறுக்காதது தான் உனக்குத் தருமம்; நல்லது செய்தாய், என் துரையே! பரதன் நல்லவன். உன்னைப் பார்க்கிலும் மூன்று பங்கு மேலான சற்குணமுடையவன்; பரிசுத்தன். இந்த அரசுரிமையை உன் அருமைத்தம்பி பரதனுக்கே கொடுத்து நீயும் அவனும் நீடூழிகாலம் ஒற்றுமையாக விருந்து நீதிதவறாமல் அரசுசெலுத்தி வரவேண்டும். அதில் எனக்குப் பரம சந்தோஷம்.

இரா:—அம்மா! நான் நல்வழிபட்டுச் சுகமடையத் தந்தை எனக்கிட்ட கட்டளை ஒன்றிருக்கின்றது. அதைத் தெரிவித்து என் கடமையை நிறைவேற்ற எண்ணி வந்தேன். என்னை ஆசீர்வதித்து அனுப்பவேண்டும்.

கோ:—உன் தந்தை உனக்குக் கொடுத்த கட்டளை யென்ன? அதை நான் மறுக்கப்போகின்றேனா?

இரா:—அதைத் தாங்கள் மறுக்கமாட்டீர்கள் என்பது நிச்சயம். என்னைத் தண்டகாரண்யம் சென்று அங்கே பதினான்கு வருஷம் முனிவர்களைப்போல் கந்தமூல பலாதிகளைப் புசித்துக் காலங்கழிக்கக் கட்டளையிட் டிருக்கிறார். இதுதான் அம்மா! பிறிதொன்றுமில்லை. தாங்கள் என்னை விடைகொடுத் தனுப்பவேண்டும்.

கோ:—ஆ! ஆ! இராமா! இராமா!

(கீழே விழுகின்றாள்.)

"(எழுந்துட்கார்ந்து இராமனைப் பார்த்து) அப்பா! ராமா!

"வஞ்சமோ மகனே புனைமாநிலம்
தஞ்சமாக நீதாங்கென்ற வாசகம்
நஞ்சமோ வினிநானுயிர் வாழ்வனோ
அஞ்சுமஞ்சு மென்னாருயி ரஞ்சுமால்—

அப்பா! உன்னைப்பார்த்து இந்தப்புவியை நீ பாதுகாத்து வரக்கடவாய் என்று உன் தந்தை கூறியது உன்னை வஞ்சித்தற் பொருட்டா? அடே! அல்லாமல் என்னைக் கொல்வதன் பொருட்டா? அப்பனே! உன்னைப் பிரிந்து நான் உயிரோடிருந்து வாழ்வேனோ? ஆகா! என் பிராணன் அஞ்சுகின்றதே! அஞ்சுகின்றதே! ஆ!

(மறுபடியும் கீழே விழுந்து
சோர்ந்து பெருமூச்செறிகிறாள்.)

(எழுந்துட்கார்ந்து தனக்குள்) அடிபாதகி!

(வயிற்றிலடித்துக் கொள்ளுகிறாள்)

இதற்கோ நான் மகனைப்பெற்றேன், மன்னா! இந்த வயிற்றெரிச்சலுக்காகவா நீர் புத்திரகாமேஷ்டியாகம் செய்தீர்? ஆ! நீர் உமது புத்திரனிடத்துக்கொண்ட கிருபை நன்றாயிருக்கின்றது! ஆ! யாருடைய சூழ்ச்சியோ விதி? ஐயோ! (ராமனை நோக்கி) அடே! நீ பிறந்து இப்படிப்பட்ட துக்கத்திற்கு என்னை ஆளாக்கியதிலும் பிறக்காமலிருந்தால் ஓரே துக்கமாய்ப் போயிருக்குமே அப்பா! நீ காடு சென்ற பின் நானெப்படி உயிரோடிருப்பேன்? ஐயோ! நீ அரசனுக்குச் செய்த பிழை யென்ன? அவருக்கு உன்னை காட்டுக்கு அனுப்ப மனம் எப்படித் துணிந்தது? முன்விசுவாமித்திரரோடு அனுப்பயோசித்தவராயிற்றே! தருமத்தின் பயன் என்னிடம் பொய்யாய்ப் போய்விட்டதோ? இனி நான் எல்லோருக்கும் அடிமை தான்; என்னை இனி எவரும் மதிக்கவே மாட்டார்கள். அப்பா! இராமா! உனக்குப் பட்டாபிஷேகமாகும்; என் துக்கம் ஒழியும் என்று மகிழ்ந்திருந்தேனே! தீராத்துக்கமாய் முடிந்ததே! அடே! என் கண்மணி! என்ன நான் செய்வேனடா?

(பெருமூச்செறிந்து துக்கப்படுகின்றாள். புலம்புகின்றாள்.)

இரா:—(படுத்துப்புலம்புந்தாயைக்கையாலெடுத்துட்கார வைத்து) அம்மா! ஏன் விசாரப்படுகின்றீர்கள்? விசனப்படுவது வீண்! பொய் சொல்லாத தந்தைக்கும் பொய்சொன்னான் இந்தத் தசரதன் என்னும் பழிமொழியுண்டாக்குவது உமக்கு அழகாகுமா? தாங்கள் மகா பதிவிரதாசிரோணியல்லவா? நாயகனுக்கு வரும் துக்கம் சுகம் இரண்டையும் தமக்கு வந்த தாகப்பாவிக்கும் மாதரசியன்றோ தாங்கள். என் ஐயன் கொடுத்த கட்டளையை மறுப்பது இந்த இராமனுக் கழகாகுமா? இந்த இராமன் அப்படி நடப்பவனா? அம்மணி! பரதன் மகிழ்ச்சியிற் சிறந்து செல்வத்தையடையவும், மறந்தும் பொய் கூறாதவன் இராமன் பிதாவென்று உலகம்



எங்கும் என் பிதாவைப் புகழவும் நான் கானகத்திற்குச்சென்று அங்குப் பதினான்கு வருஷம் வசித்துவர உறுதிகொண்டேன், என் அம்மணி! யான் மானுடனாகப் பிறந்து அடையும் பயனில் இதைக் காட்டிலும் வேறுண்டோ? தாங்களே யோசித்துப் பாருங்கள். என் அருமைத் தாயே!

விண்ணும் மண்ணும் இவ்வேலையயு மற்றும்வே
றெண்ணும் பூத மெலா மிறந் தேகினும்
அண்ணலே வல்மறுக்க அடியனேற்
கெண்ணுமோ விதற்குள்ளழி யேனரோ.

அம்மா! விண்ணுலகும் இந்த மண்ணுலகும், மற்றுமுள்ள பொருள்களும் வெவ்வேறாக எண்ணப்படும் பஞ்ச பூதங்களும், தத்தம் நிலை கெட்டழிந்து போயினும் என் அன்னையே! என்னையீன்ற அரசனது ஆணையை மறுக்க எனக்குக் கூடுமோ? இதன்பொருட்டுத் தாங்கள் மனம் வருந்தவேண்டாம்.

கோ:—அப்பனே! இராமா! என் துரையே! என் உயிர்க்கு உறுதி தரும் உத்தமனே! நீ சொல்லியபடியே செய்! அரசரது ஆணையை மறுத்து நட என்று சொல்ல என் மனந் துணியாது. என்னை யிங்கு விட்டுச் செல்வாயாயின் என் பிராணன் தரியாது. ஆகையால் என்னையும் உன்னோடு காட்டுக்கு அழைத்துச் செல், அப்பொழுது தான் உன்னை வயிற்றிற் சுமந்திருந்து யீன்ற இந்த உடலும் உயிரும் உய்யும்!

இரா:—அம்மா! கேளுங்கள்! நான் பிரிந்த வருத்தத்தினால் மிகுதியும் துன்பப்படும் என் தந்தைக்கு வேண்டிய உபசரணையையும் ஆறுதலையும் சொல்லி அவரைச் சமாதானப்படுத்துவதைவிட்டு, என்னோடு தாங்கள் கானகம் வருகின்றேன் என்பதும் அழைத்துப்போவென்பதும், அழகோ தம்போன்ற உத்தமர்களுக்கு. இன்னொன்று:—என் அருமைத்தம்பி பரதன் இந்தப் பாராளும் உரிமையை யேற்றுக் கொண்ட பின் தந்தை தவத்திற்குச் செல்வார்; அப்பொழுது தாங்கள் அவர்களுடனிருந்து அவர்களுக்கு வேண்டும் பணிவிடைகள் புரிந்து நல்ல நல்ல விரதங்களைச்செய்துவரக் கட

வீர்; இந்தப் பதினான்கு வருஷமும் பதினான்கு நாளாகக் கழித்து வருகின்றேன். மனக் கிலேசத்தை மறந்து என்னை யாசீர்வதித்து அனுப்புங்கள் அம்மா!

கோ:—அப்பா! இராமா! இராமா! (சோர்கின்றாள்)
எப்படியடா விடை கொடுப்பேன்; என்னடா செய்வேனப்பா! என்மனத்திற்கு நீ சொல்லும் தேறுதலெல்லாம் பயன் தருவனவா யில்லையே! (அழுகின்றாள்.)

இரா:—அம்மா! தெரிந்தவர்களா யிருந்தும் இப்படி வருந்தலாமா? முன் பரசுராமர், தந்தை சொற்படி தாயை வெட்டவில்லையா? அவர் தம் தந்தைசொல்லைக் காப்பாற்றியபடி நானும் என் தந்தை சொல்லைக் காப்பதல்லவா மகா உத்தமியாகிய தங்கள் வயிற்றிற் பிறந்த எனக்கழகு. முன் சகரர் தங்கள் பிதாவின் கட்டளையைச் சிரமேற்கொண்டு நடந்து பிராணனைவிட்ட, ஒப்பில்லாத பெரியகீர்த்தி அழிந்துவிட்டதோ! அஞ்ச வேண்டாம்; நான் காட்டில் மாதவர்க்கு வழிபாடுசெய்து, அதனால் அடைதற் கரிய ஞானமும் நல்ல மந்திரோபதேசங்களையு மடைந்து தேவர்கள் புகழ இங்குச் சுகமாக வருவதை நீங்களே காண்பீர்கள். முன் விசுவாமித்திரரோடு வனஞ்சென்று அவரிட்ட கட்டளைப்படி நடந்தபடியால், வாய்த்தகல்வியும் அதன்பிறகு அடைந்த பெரும் பயனும் மறக்கத்தக்கனவாமோ? அம்மா! விடைகொடுத்தனுப்பவேண்டும்.

(தலைசாய்த்து வணங்கிக் கைநீட்டிக் கேட்கின்றான்.)

லக்ஷ்மணன் பிரவேசிக்கின்றான்.

லக்ஷ்:—அண்ணா! அண்ணா! நன்றாயிருக்கின்றது நீங்கள் செய்வது! உம்மைப்போலொத்த அறிஞர்கள் இப்படி வருந்துவதழகாமோ? கொடியவர்களான தந்தையும் கைகேயியும் நம்மிடத்தில் கெட்ட எண்ணங்கொண்டிருக்கின்றனர். நிச்சயித்தபடி பட்டாபிஷேகம் நடத்துவதை விட்டுப் பெண்பேச்சுக்கிணங்கித் தங்களைக் காட்டுக்குச்செல்ல கட்டளையிட்ட மன்னன் எண்ணம் சரியானதல்ல; இதனால் அவருக்குப் புகழுண்டாகாது. ஆ! (மௌனம்)



கோ:—(தனக்குள் தலையையசைத்து) ஓகோ! கைகேசியின் வஞ்சகமா-இது! என்ன! என்ன! ராமனைக்காட்டுக்கேனடி அனுப்பவேண்டும்; பரதன் பாராளட்டுமே; யார் மறுத்தது. சோகப்படுகின்றாள்.

ல:—அண்ணா! என் மனம் சகிக்கவில்லை இதை! இதை உலகம் ஒப்பாது! இதைத் தருமமென்று சொல்லுவதுந் தவறு. இதுவஞ்சனை! பிதா மோகவசமாகி இப்படிச்செய்திருக்கிறார் என்பது நிச்சயம். அண்ணா! உமக்கு வல்லமை யில்லையா! அதைநினைக்கும்போது என்னையறியாமல் எனக்குத் துக்கம் கொதித்தெழுகின்றது மனதில். அதர்மத்திற்குக் கட்டுப்படுவதோ வீரனுக்கழகு. சுத்தவீரரே! உமது மனஉறுதி எங்கே சென்றது? மதி எங்கே சென்றது! மறைந்தனவோ மாயமாய்! ஐயோ! உமது பட்டாபிஷேகத்திற்கு இவ்வாறு விக்னம் நேர்ந்ததை நீர் தெய்வச் செயலென்று நம்பியிருக்கின்றீர்போலும்! இதோ பாரும்! இப்போதுஇந்த நிமிஷத்தில் மனிதச்செயலுக்கும் தெய்வச் செயலுக்குமுள்ள வித்தியாசத்தை! மூன்று உலகும் திரண்டு வரினும் இவ்விஷயத்தில் என் வீரத்தைப் பாருங்கள்! அண்ணா! பேதைப்பிதாவின் ஆணையை நீர் பொருளாகக் கருதவேண்டாம்! இதோ கெட்ட எண்ணங்கொண்ட அவர்களை அழித்து வருகின்றேன்.

(கோபங்கொண்டு பதறுகிறான்.)

அண்ணா! இந்தக்ஷணமே ஹதா ஹதம் செய்துவிடுகிறேன்.

(ஓங்குகின்றான் கத்தியை; பரபரப்படைகின்றான்.)

இரா:—இலக்ஷ்மணா! பொறு; பதறாதே.

(கையமர்த்துகின்றார்.)

லக்ஷ்:—அண்ணா! தடுக்கவேண்டாமென்னை! என் மனந்தாளாது இனி ஒரு நிமிஷமும்! நீங்கள் இப்போதே பட்டாபிஷேகத்திற்குத் தயாராயிருங்கள். யார் தடுக்கவரினும் பார்க்கின்றேன் அவர்கள் புயபலத்தை; அண்ணா! தமது அடிமையாகிய இந்த இலக்ஷ்மணன் கரத்திலிருக்கும் வில்லும் கத்தியும் அலங்காரத்திற்காகவா? சீ! இந்த இலக்ஷ்

மணன் சுத்த வீரனாகிய இராமச்சந்திரமூர்த்தியின் தம்பி, யுத்தத்தில் நின்றால் முன்னின்று சண்டை செய்வாருமுண்டோ? சிறிதும் யோசிக்கவேண்டாம். என் அஸ்திரவித்தையின் சாமர்த்தியத்தைக் காட்டுகின்றேன் இன்றைக்கு!

இரா:—இலக்ஷ்மணா! கோபம் பொல்லாது; நிதானி.

இலக்ஷ்:—நியாயவிரோதத்திற்குக் கட்டுப்படவேண்டுமென்பதும் ஒரு விதியா! அண்ணா! சீக்கிரமாகத் தெரிவிக்க வேண்டும்! நான் என்ன செய்தால் இந்த உலகம் உமக்குச் சொந்தமாகும்? அதுதான் எனக்கு வேண்டும்! உத்தரவு! என் ஐயனே! உத்தரவு.

(பதைக்கின்றான்.)

இரா:—தம்பி! நிதானி; என் பேச்சைக் கேள்; எது எப்படியாயினும் தந்தையின் எண்ணத்தை நிறைவேற்றத்தான் எனக்கு விருப்பம்.

இலக்ஷ்:—(கௌஸலையை நோக்கி) அம்மா! அண்ணாவின் நியாயத்தைக் கவனியுங்கள்! செய்வன செய்யத்தகாதன கருதாமல் கருவத்தினாலும் வஞ்சனையினாலும் கெட்டவழியில் செல்லுகிறவர்கள் குருவாயிருந்தாலும் தண்டித்தலன்றோ நீதி! எப்படித் தந்தை இராஜபத்தைப் பரதனுக்குக் கொடுக்கின்றார். (ராமனை நோக்கி) அண்ணா! தாங்கள் என்பேச்சுக்கிணங்காமல் வனஞ் செல்வீர்களேயாயின், நானும் தங்களுடன் வந்து என் துக்கத்தைத் தீர்த்துக்கொள்வேனல்லது இங்கிருந்து இடர்ப்படேன்! இது ஸத்தியம்! ஸத்தியம்!

கோ:—(இராமனைப்பார்த்து) இராமா! இலக்ஷ்மணன் கூறும் நியாயங்களைக் கவனிக்காமலே பேசுகின்றாயே! அடே! நான் பொறுக்கமாட்டேன் மனம்! உன்னைப் பிரிவதாலேற்படும் துக்காக்கினி என்னை எரித்துவிடும் இது நிச்சயம்! உன்னைக் காணாமலிருப்பது எனக்குக் காற்றாகும்; என் அழுகையே சமித்துக்களாகும்! என் கண்களினின்று பெருகும் நீர் அதற்கு ஆஹுதியாகும்? உன்னை எண்ணுவதால் உண்டாகும் ஆவியே புகையாகும். பெருமூச்சே துக்காக்கினியை மூட்டும் முயற்சியாகும். இப்படியெழும் துக்கமாகிய நெருப்பு என்னை எரித்து விடும். பின்னர் நீ



தாயிழந்த தனயனாவாய்; அப்பா! காட்டுக்குப் போகவேண்டாம்; போவது நியாயமல்ல; மீறிச் செல்வையாயின் நானும் கூடவருவேன், அப்படியில்லையாயின் பிராணனையிழப்பேன். தாய்வார்த்தையைத் தட்டாதே!

இரா:—அம்மா! தமது கிருபையால் நான் எல்லாம் அறிவேன். சிற்றன்னை கைகேயி தந்தையை வஞ்சித்து ஏமாற்றிவிட்டாள். நானும் காட்டுக்குச் சென்று நீரும் என்கூட வந்துவிட்டால் தந்தை பிராணனை விட்டுவிடுவார். மனைவி தன் கணவனை விடுவது மகாபாபமல்லவா? பதி பூமியிலிருக்கும் வரையில் தாங்கள் அவருக்குப் பணிவிடைபுரிந்து வரவேண்டுமல்லது தவிர்வது தகாத செய்கையாம். தாங்கள் அறியாததோ இந்தத் தருமம்?

கோ:—அப்பா! கண்மணி! இராமா! நான் என்ன சொல்லப் போகின்றேன் உனக்கு! நீ நல்லன பொல்லாதன நாடி நடக்கும் உத்தமன். உனக்குச் சொல்லவேண்டுமா? உன் விருப்பம்— (துக்கிக்கின்றாள்.)

இரா:—ஏன் துக்கப்படவேண்டும். நாமிருவரும் மன்னர் ஆக்ஞைப்படி நடக்கவேண்டியவர்களல்லவா? ஆகையால் அவர் கட்டளைப்படி வனத்திற்குச் சென்று பதினான்கு வருஷம் விளையாடி வருகின்றேன். வருத்தப்படவேண்டாம்.

கோ:—இராமா! நீ காட்டுக்குப் போவதையே பார்க்கின்றாய்? உன் கருத்தை மாற்ற என்னால் ஆகாது. வீரனே! நீ போய்வா! உனக்குச் சுபமுண்டாகக்கடவது! என் துக்கம் மீண்டும் உன்னைக் காணும்வரையில் தீராது. அப்பனே பிதாவின் கட்டளையை நிறைவேற்று. (இலக்ஷ்மணனைப் பார்த்து) இலக்ஷ்மணா! பிதுர்வாக்கிய பரிபாலனத்தைப் பெரிதாகக் கொள்வதுதான் அழகு.

(இலக்ஷ்மணன் எதுவும் பேசாமல் பணிவாய் நிற்கிறான்.

இரா:—அம்மா! நமஸ்கரிக்கின்றேன்.

(போகின்றான். இலக்ஷ்மணனும் நமஸ்கரித்துச் செல்கிறான்.)

வரகவி - திரு. அ. சுப்ரமணிய பாரதி.

# சுகாதாரம்.

## பலவகை அசுத்தங்களுள்ள தண்ணீர்களைச் சுத்தமாக்கும் வகைகள்.

அசுத்தத் தண்ணீரைச் சுடவைப்பதனால் சில அசுத்த வாய்வுகள் வெளியே போய்விடும்; வேறு சில அசுத்தங்கள் கீழே படிந்துபோம். ஆனால் குளிர்ந்த தண்ணீரிலுள்ள ருசி சுடவைத்த தண்ணீரில் நீங்கிப்போய்விடும். இஃதேதனாலெனின், குளிர்ந்த தண்ணீரில் கரி அமிலவாய்வும் ஆகாயமும் அடங்கி யிருக்கிறபடியால் அதற்கு ருசியுண்டாயிருக்கின்றது. ஆனால் அதைச் சுடவைக்கும்பொழுது சூட்டினால் அந்த வாய்வுகள் இரண்டும் வெளியேபோய்விட, தண்ணீரின் ருசியும் நீங்கிவிடுகின்றது. ஆகையால் நல்ல தண்ணீர் கிடையாத பட்சத்தில் கிடைத்த தண்ணீரைச் சுடவைத்து அதன் அசுத்தங்களெல்லாம் நீங்கினபின் மெதுவாய் மேலிட்ட தண்ணீரை வேறே சுத்தமான பாத்திரங்களில் ஊற்றி அந்தத்தண்ணீரின்மீது காற்று நன்றாய்ப் படும்படியாகச் சற்றுநேரம் அந்தப் பாத்திரங்களைக் குலுக்கினால் கரி அமிலவாய்வும் காற்றும் அத்தண்ணீரோடு சேர்ந்து அதற்குக் குளிர்ந்த தண்ணீருக்குள்ள ருசியை யுண்டுபண்ணும்.

பூண்டுகளினாலும்ஜீவஜந்துக்களினாலுமுண்டாகும் பலவகை அசுத்தங்கள் நிறைந்த தண்ணீர்களைச் சுத்தமாக்கும் வகைகளாவன:—சுத்தமாயுள்ள புதிய அடுப்புக்கரியை அசுத்தத்தண்ணீரில் போட்டுவைத்தால் அசுத்தங்கள் நீங்கிவிடும். அடுப்புக்கரியானது பூண்டுகளாலும் ஜீவ ஜந்துக்களாலும் உண்டாகிற அசுத்தங்களில் 100-ல் 88 - பங்கையும், மற்றவகை அசுத்தங்களில் 100-ல் 30-பங்கையும் நீக்கிவிடும். ஒரு பங்கு அடுப்புக்கரி 100 - பங்குள்ள மிகவும் அசுத்தமான தண்ணீரையும், 600 - பங்குள்ள சொற்ப அசுத்தமான தண்ணீரையும் சுத்தமாக்கும். அஃதாவது ஒரு பவுன் கரி 600 - பவுன் அசுத்தத் தண்ணீரைச் சுத்தமாக்கும். அடுப்புக்கரிக்குள்ளிருக்கும் எண்ணிறந்த சிறு துவாரங்களில் பிராண வாய்வு அதிகமாய் அடங்கி யிருக்கிறபடியால் தண்ணீரில் அல்லது ஆகாயத்திலுள்ள அசுத்தங்கள் அச்சிறு துவாரங்களுக்குச் சமீபித்தவுடனே அவை பிராணவாய்வால் அழிக்கப்படுகின்றன. ஆனால் கரியானது சொற்பகாலத்திற்குள் தன் சத்துவத்தை இழந்துபோகுமாகையால் சொற்பகாலத்திற் கொருதடவை புதிய கரியைப் பிரயோகித்தல் வேண்டும். அல்லது பழய கரியைச் சூரிய காங்கை அல்லது நெருப்புக் காங்கையினால் நன்றாய்க் காயவைத்தால் அது முன்போலச் சுத்தம் பண்ணும் சத்துவத்தை யுடையதாகிவிடும்.

இரண்டுபடி தண்ணீரில் 6-கிரெய்ன் அல்லது 6-குண்டுமணி நிறையுள்ள படிக்காரம் அல்லது சீனக்காரத்தை நன்றாய்த் தூள் செய்துபோட்டால் தண்ணீரிலுள்ள பலவகை அசுத்தங்கள் கீழேபடிந்துவிடும். படிக்காரத்தைச் சேர்த்தபின்பு 12 - முதல் 21 - மணிநேரம் வரைக்கும் அந்தத் தண்ணீரைத் தொடாமல் வைத்திருந்தால் அநேக அசுத்தங்கள் முற்றிலுங் கீழேபடிந்துபோம். நான்குபங்கு கரியையும் ஒருபங்கு படிக்காரத்தையும் சேர்த்து அசுத்தத் தண்ணீரில் பிரயோகித்தால் பிரயோஜனம் மிகவும் அதிகமாயிருக்கும்.

பலவகையான அசுத்தங்களுள்ள தண்ணீர்களை வைத்திருக்கும் பாத்திரங்களில் தேயிலை, தேற்றுங்கொட்டை, காசுக்கட்டி, மாங்கொட்டைப்பருப்பு, கொட்டைப்பாக்கு முதலான துவர்ப்புள்ள பதார்த்தங்களை உறைத்துச் சேர்த்தால் அல்லது அத்தண்ணீர்களில் அவைகளைப் போட்டுவைத்தால் அசுத்தங்கள் கீழே படிந்துவிடும்.

பூண்டுகளாலும் ஜீவ ஜந்துக்களாலும் உண்டாகும் அசுத்தங்கள் உள்ள தண்ணீரில் இரும்புக்கம்பியைப் போட்டிருந்தால் அத்தண்ணீர் ஒருவாறு சுத்தமாகும்.

சென்னபட்டணத்திலுள்ள மருந்துக்கடைகளில் கிடைக்கத்தக்க (Condy's Fluid) காண்டிஸ்பலூயிட் என்ற ஒரு சிவப்பு நீரில் சொற்பத்தைப் பூண்டுகளாலும் ஜீவஜந்துக்களாலும் உண்டாகிற பல அசுத்தக்கழிவுகள் சேர்ந்திருக்கிற தண்ணீரில் விட்டால் அந்த அசுத்தங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டுப் போம். மிகவும் நாற்றமுள்ள அசுத்தத் தண்ணீரில் இதைக் கொஞ்சம் ஊற்றினால் அது உடனே சுத்தமாகிவிடும்.

சாதாரணமாய் வீடுகளில் தண்ணீரைச் சுத்தமாக்குவதற்கு ஏற்ற நல்லவகை என்னவென்றால்:—மூன்று பெரியமண்பாத்திரங்களை வாங்கி ஒன்றில் ஏறக்குறைய பாதிநிறையப் புதிய அடுப்புக் கரிகளையும் சுத்தமான ஆற்றுமணலையும் கலந்துபோட்டு அதின் அடியில் ஒருசிறு துவாரத்தையுண்டாக்கி உருண்டையாகச் சீவின சிறு மூங்கில்கொம்பு அல்லது குச்சியைக்கொண்டு அத்துவாரத்தை இலேசாக அடைத்துவைக்கவேண்டும். இப்படியே இன்னொரு பானைக்கும் செய்யவேண்டும்; ஆனால் இதில் கரியைப் போடாமல் மணலை மாத்திரம் போடவேண்டும். பின்பு மூன்று மூங்கிற்காலில் மூன்று தட்டுள்ள ஒரு ஸ்டாண்டு உண்டுபண்ணிக் கீழ்த்தட்டில் துவாரமற்ற வெறும்பானையையும் நடுத்தட்டில் மணல் மாத்திரமுள்ளபானையையும் மேல்தட்டில் மணலுங் கரியுமுள்ள பானையையும் வைத்துக் கூடியமட்டுஞ் சுத்தமாயுள்ள தண்ணீரைக் கொண்டுவந்து மேல்பானையில் விட்டால் அந்தத் தண்ணீர் சொட்டுச்சொட்டாய் இரண்டாம் பானையில் விழுந்து பின்பு அதிலிருந்து கீழ்ப்பானையில் விழும். இப்படிச் செய்வதனால் தண்ணீரிலுள்ள விஷமுள்ள அநேக அசுத்தங்கள் நீங்கிச் சுகத்திற் கேற்றதும் ருசிக்கு மதுரமுமான நல்ல தண்ணீருண்டாகும். இந்தப் பக்குவத்தினால் தண்ணீரிலுள்ள உப்பு அல்லது கைப்புங்கூட வெகுவாய் நீங்கிப்போம். இந்தப் பானைகளுக்குள் ஒன்றும் விழாதபடிக்குச் சிறு துவாரங்கள் உண்டுபண்ணப்பட்ட பாந்தசட்டிகளைக்கொண்டு அவைகளை மூடித் தூசு முதலானவை விழாத இடங்களில் வைத்திருத்தல்வேண்டும். இந்தப் பானைகளிலுள்ள கரியையும் மணலையும் சிலநாளைக் கொருமுறை மாற்றிப் பானைகளை நன்றாய்ச் சுத்தம்பண்ணினால் உத்தமம். மேலேயுள்ள இரண்டு பானைகளின் அடியிலுள்ள மரக்கொம்புகள் தண்ணீரில் எப்பொழுதும் நனைந்துகொண் டிருப்பதினால் அழுகிப்போகாதபடிக்கு அவைகளின்மீது தச்சர் உபயோகிக்கிற வச்சிரத்தைக் கொண்டாவது அல்லதுமரங்களுக்குப்பூசுகிற தார் (Tar) எண்ணெயைக் கொண்டாவது நன்றாய்ப் பூசிவைத்தல்வேண்டும். மூன்று பானைகளை வைத்திருப்பது கஷ்டமாயிருந்தால் மணல் மாத்திரமுள்ள நடுப்பானையை நீக்கிவிடலாம்.

---



### பிரயாணங்களில் நல்ல தண்ணீரை உண்டாக்கிக் கொள்ளும் வகைகள்.

பிளானல், அல்லது கம்பளித்துணி, அல்லது அடர்த்தியான பருத்திநூல் துணியில் ஒரு பைதைத்து அதை ஒரு சுத்தமான பாத்திரத்தின் வாயில் கட்டி அதில் சுத்தமான அடுப்புக்கரித் துண்டுகளைப்போட்டு அகப்பட்ட தண்ணீரை அதில் வார்த்தால் கரிவழியாகப் பாத்திரத்திற்குள் வடிந்துவிழுகிற தண்ணீர் சுத்தமுள்ளதாம். அல்லது அத்தண்ணீரோடு கொஞ்சம் தேயிலை, காசுக்கட்டி, பாக்கு, தேற்றான்கொட்டை, படிகாரம் முதலான துவர்ப்புள்ளபதார்த்தங்களைச்சேர்த்துச் சுடவைத்தால் தண்ணீரிலுள்ள அசுத்தங்கள் வெகுவாய்க் கீழே படிந்துபோகத் தண்ணீர் சுத்தமாகும். இரண்டு மண்பாத்திரங்களை எடுத்து ஒன்றன் அடிப்புறத்தில் சிறிய துவாரங்களைச்செய்து அதில் பாதி நிறைய சுத்தமான மணலையும் அடுப்புக்கரியையும் அடர்த்தியாய்ப் போட்டு அதில் தண்ணீரை வார்த்து மற்றொரு மண்பாத்திரத்தின்பேரில் வைத்தால் தண்ணீர் மிகவும் சுத்தமாகிக் கீழ்ப்பாத்திரத்தில் விழும். அதனைச் சமையல் சாப்பாடு முதலான காரியங்களுக்குப் பிரயோகிக்கலாம். விசேஷமாய்ப் பிரயாணங்களில் சந்தேகமான தண்ணீர்களை யெல்லாஞ் சுடவைத்துப்பின்பு மேலான தெளிந்த தண்ணீரை வேறு பாத்திரங்களில் வார்த்துக்கொண்டு உபயோகிக்கவேண்டும். இப்படிச் செய்வதினால் அநேக அசுத்தங்கள் நீங்கிப்போம். சிலவேளை பிரயாணங்களில் சுண்ணாம்புக்கல் பாறை முதலான சிலவகைத் தரைகளிலிருந்து ஊறுகிற தண்ணீர்களைச் சாப்பிடுகிறதினால் மிகவுந் தொந்தரவுள்ள நீர்ச்சுருக்கு அல்லது நீர்க்கடுப்பு வியாதிகள் உண்டாம். தண்ணீரைச் சுடவைத்துச் சாப்பிடுகிறதினால்இந்தத் தொந்தரவிலிருந்து ஒருவாறு விலகிக்கொள்ளலாம்.

## பக்தி.

### 9. இஷ்ட நிஷ்டை.

(விருப்பத்தை நாடுதல்.)

இனி "இஷ்டநிஷ்டை" என்பதைப் பற்றியே நாமிங்கு விளக்கவேண்டியது. ஒரு தொண்ட - பக்த - னை விரும்புகிற

வன், “பல கொள்கைகளும்,—கடவுளைப்போ யடையும் - பல வழிகளாகு” மென்று தெளிய வேண்டும். வெவ்வேறான பல கொள்கையினரது முடிவான தீர்மானங்களும், ஒரே கடவுளது பெருமையை விளக்குகின்ற பல வழிகள் என்று அவன் நன்குணர்தல் வேண்டும். (ஓ! கடவுளே!) “தங்களை மனிதர் பலவாறு போற்றுகின்றனர்; புகழ்கின்றனர்; தங்களைப் பல பெயராலழைத்துப் பிரிவினை செய்வதுபோலத் தோற்றுகின்றது. எனினுமவையனைத்திலுந் தங்களது பேராற்றலானது நிறைந்திருக்கின்றது..........எல்லா வழிகளாலுந் தாங்கள் தொண்டர்களையடைந்து அவர்களுக்குள் பொழிகின்றீர்கள்; தங்களிடத்து மிகுந்த பேரன்புவாய்ந்த தொண்டர்க்குத் தங்களை வழிபடுவதற்கு இன்னபொழுதுதானென்ற ஏற்பாடில்லை தங்களை மிக எளிதிலடைய இயலும்; எனினும் நிர்ப்பாக்யனானஎனக்குமட்டுந் தங்களிடத்து மெய்யன்பு (பேரன்பு அல்லது பக்தி) தோன்றவில்லை.” அதுமட்டுமல்ல, முடிவான தீர்மானங்களை வெறுத்தலோ, அதன் தலைவர்களைப் பழித்தலோ, - ஒருபொழுதுங் கூடாது; அவ்வாறான பெரியோர்களைப் பற்றிப்பிறர் பழிப்பதைக் காதில் வாங்கவுங் கூடாது. இவ்வாறு எல்லோரிடத்து மொற்றுமையான அருளும், அன்பும், நட்பு முள்ளவர் மிக அரிது. குறுகிய அறிவுள்ள சில கொள்கையினர், தங்கள் கொள்கையையுங், கொள்கையினரையு மெவ்வளவு நேசிக்கிறார்களோ, அவ்வளவுக் கவ்வளவு பிறகொள்கையையுங், கொள்கையினரையும் பகைக்கிறார்கள். ஆயினும் எல்லாரிடத்தும் அருளும், அன்பும், நட்பும் வாய்ந்துள்ள சிலர் கடவுளிடத்து மெய்யன்பில்லாதவராயுமிருக்கின்றார்கள். எல்லா வுயிர்களிடத்தும், ஒற்றுமையுடன் — வேற்றுமையற்று அன்பும், அருளும் வாய்ந்தவரும், கடவுளிடத்தும் மேலான மெய்யன்பு வாய்ந்தவருமாயுள்ள மனிதர்கள் இவ்வுலகெங்கும் நிறைந்து தோன்றும்படி அருள்புரிய வேண்டுமென்று யான் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை வேண்டுகின்றேன்! நமது நிர்ப்பாக்யத்தால் அவ்வாறுள்ள பெரியோர் பலரைக் காண்பது மிக அரிது. என்றாலுங் கடவுளிடத்துப் பேரன்பையும், எல்லா வுயிர்களிடத்து மொரேவிதமா யுள்ள அருளையுஞ் சேர்த்து மகிழச்செய்து, மனிதர்களைப் பழக்கிவிட வேண்டும் (முடியும்) என்று நமக்குத் தோன்றுவதுமுண்டு. இதற்



குள்ளவழி “இஷ்ட நிஷ்டையே.” அதன் வாயிலாகத்தான் உலகத்துள்ள எல்லாக் கொள்கைகளும், அவ்வக் கொள்கையினர்க்கு ஒவ்வொரு விருப்பத்தை (கடவுளைப்போற்ற ஒவ்வொரு கொள்கையினர்க்கு, மொவ்வொரு வழியை) மட்டுமே காட்டுகின்றது. ஆனால் வேதாந்தசாஸ்த்ரமோவெனில்,‘தெளிந்த அறிவினர்க்குக் கடவுளது எண்ணற்ற வழிகளை நன்கு விளக்குகின்றது; அவரது முடிவற்ற தோற்றங்களையும், அருஞ்செயல்களையும், பேராற்றல்களையுந் தெரிவிக்கின்றது; அவருக்குப் பல நல்லெண்ணங்களையுந் தோற்றச் செய்கின்றது; அதனை யடைவதற்கான பல வழிகளையு மறிவிக்கின்றது. இவ்வாறான வழிகளை மிகப் பெரியோரான ஸித்த புருஷர்கள் வெட்டித்திறந்துவெளிப்படுத்திச் சீர்திருத்திப் பேரின்ப (மோக்ஷ) வீடடைய விரும்புபவர்க்கு(மெய்யறிவினாற் பேரின்பமெய்துவதாகிய அந்தமேலான நிலைமையையெய்துவதற்குப்) பயன்படுமாறு ஒழுங்குபடுத்திவைத்திருக்கின்றார்கள். மனிதர்கள் அந்த நிலையினை யடையும்பொழுது எல்லாப் பற்றினின்றும் விடுபட்டு நிரதிசயமான பேரின்பத்தை நுகர்கின்றார்கள்.

பேரின்ப முறுவதற்கான பல வழிகளிலேயு மொன்றையும் பகைத்துக் கொள்ளவோ, இகழ்ந்தொதுக்கவோ கூடாதென்று “பக்தியோகம்” முதலாவதாக நமக்குக் கட்டளையிடுகின்றது. எனினும் ஒரு சிறுவிதை முளைத்துச் செடியாகி வளர்ந்து மரமாகும் வரையிலும் அதற்கு வேலிகட்டிக் கவலையுடன் யாதுகாக்க வேண்டிய தின்றியமையாதது. அதுபோல முதலிலேயே நாம் பலவாறான எண்ணங்களிலுங், கொள்கைகளிலுங், பல விருப்பங்களிலும், பல வழிகளிலும் அறிவைச் செலுத்த முயன்றால் எளிய நிலைமையிலுள்ள நமது ஆத்மஞானம் முழுவது மழிந்து போகின்றது. சிலருக்குப் பலவாறான கொள்கைகளின் முடிபையும், ஆராய்ந்துகொள்ள வேண்டுமென்று ஒரு கவலை - மயக்கம்- உண்டாகின்றது. அவர்களுக்கு அப்பொழுதே சுவைப்பதாயுள்ளவற்றை மட்டும் புதிது புதிதாகப் பலவற்றையுங் கேட்க விருப்பம். ஒன்றினிடத்து வெறுப்புண்டானால் மற்றொன்றைத் தொடங்குவார்கள்; அதனிடத்தும் வெறுப்புத் தோன்றினால் மூன்றாவதொன்றைத் தேடுவார்கள் அவர்களிவ்வாறு ஒவ்வொன்றாக மாறி மாறி வெறும்பொழுது போக்காகக் கருதிக் கைக்

கொள்வதன்றி, அதனிடத்திலிருந்து வேறு எப்பயனையும், விரும்புகிற (எதிர்பார்க்கிற)தில்லை. அபின் - கஞ்ஜா - முதலிய லாஹிரி - மயக்கப்பொருளருந்துபவர்க்கும் மானஸிகமான அபின் - மனக்குழப்பமென்றும் - மயக்கமுடைய இவர்க்கும் யாதொரு வேற்றுமையுமில்லை. இனி வேறு சில (பெரியோ)ருண்டு அவர்களைப்பற்றி பகவான் ஸ்ரீராமக்ருஷ்ண பரமஹம்ஸர் பின்வருமாறு கூறுகின்றார். "ஸ்வாதி நக்ஷத்ரம் உச்சமாகும்பொழுது கடலிலுள்ள முத்துச் சிப்பிகள் நீர்மட்டத்தின் மேலே வந்து - மழையை எதிர்பார்த்துக் கொண்டிருந்து, மழை பெய்யும்பொழுது அந்த மழையின் ஒரு துளி நீரைத் தம் மகத்து ஏற்றுக்கொண்டு உள்ளே அமிழ்ந்து விடுகின்றன. பிறகு சிலநாட்கள் சென்றதும், அந்நீர்த்துளியை மிகவும் அழகான முத்தாக்கி விடுகின்றன" என்றொரு கதை சொல்வதுண்டு. இவர் அந்த முத்துச் சிப்பியைப் போன்றவராவர்.

இஷ்ட நிஷ்டையைப் பற்றியுள்ள இந்த உதாரணமானது மிக உயர்ந்த பொருளை யுள்ளடக்கியதாயும், மிகவும் வெளிப்படையாயு மிருக்கின்றது. "பக்தி" வழியைக் கைக்கொள்ளத் தொடங்கு மொருவர்க்கு, இந்த "இஷ்ட நிஷ்டை" அல்லது ஏக நிஷ்டை (நிலைத்த நம்பிக்கை, ஒரே உறுதி) இன்றியமையாதது. "எல்லா ஆற்றலும் வாய்ந்த முழுமுதற் கடவுளான ஈச்வரனேதான் ஸ்ரீபதியும், ஜானகீபதியுமா யிருக்கின்றாரென்பதை யானறிவேன்; எனினும் எனக்கு எப்பொருளுந் தாமரையிதழ்க் கண்ணனா யிருக்கின்ற ஸ்ரீராமனே" என்றுள்ள ஸ்ரீ ஹனுமாரின் வாக்யத்தை (பக்தி மார்க்கத்தைக் கைக்கொண்ட) எல்லோரும் கருத்திலிருத்தி அத்துடனொன்றுபட வேண்டும். கடவுளைப் போற்றுவதையே தொழிலாய்க் கொண்டவர் பரமார்த்தபக்தியென்னும் பேரன்பு - அல்லது மெய்யன்புடன் கூடியவராயின், அவரது அந்த அன்பாகிற விதை முறையே வளர்ந்து ஒரு பெரிய ஆலமரம்போலக் கிளை கொம்புகளுடன் கூடிய ஒரு பெரிய மரமாய்த் தீர்ந்து அத்யாத்மிகமான எல்லா விஷயங்களிலும், எல்லா விருப்பங்களிலும், பரவுகின்றது. இவ்வாறு தனக்கு மிகத் துணையாயும், தனது மேலான நோக்கமாயு முள்ளதாய்க் கருதப்படுகின்ற அவரை - அக்கடவுளைத்தான் பிற - எல்லாக் கொள்கையினராலும், பிற நோக்கங்களை யுடையவராலும், பல பெயர் வடிவங்களோடு கூடப் போற்றி வணங்கப்படுகின்றதென்று மெய்ப்பொருளுணர்ந்த தொண்டன் உணர்கின்றான்.

# இனியவை கூறல்.

ஒருவன் பிறனிடத்தில் வஞ்சனையில்லாமல் அன்புடன் இன்பமாயும் ஹிதமாயுமிருக்கின்ற வார்த்தைகளைப்பேசி அவனை ஸந்தோஷப்படுத்துவதே இனியவை கூறலெனப்படும்.

மனமகிழும்படியாக ஒருவனுக்கு வேண்டிய த்ரவ்யத்தைக் கொடுப்பதைப் பார்க்கிலும் அவனைக் கண்டமாத்திரத்தில் முகமலர்ந்து இனியசொற்களால் வரவழைத்து உபசரிப்பதைவிட மிகுதியான நன்மை வேறொன்றுமில்லை.

ஒருவனைத் தூரத்தில் கண்டபொழுது முகமலர்ச்சியோடு மனமுவந்து பார்த்து அப்படியே ஸமீபத்தில் வந்தவுடனே மனமும் வாக்கும் வேறுபடாமல் விஹிதமாய் வரவழைப்பதைப் பார்க்கிலும் இனிமை வேறு வேண்டியதில்லை.

எல்லாருடனேயும் அன்போடு வசனித்துக்கொண் டிருப்பவனுக்கு உலகத்தார் நட்பாகி வேண்டிய உதவியைச் செய்வார்களாதலால், அவனைத் தரித்ரம் நெருங்குவதற்கு அஞ்சும்.

பெரியோர்களிடத்து வணக்கமாகவும், மற்றெல்லோரிடத்தும் ஹிதமாகவும், அன்புடன் வசனித்து உபசரிப்பவனுக்கு இந்தக் குணமே சிறந்த ஆபரணமாக ப்ரகாசித்துக் கொண்டிருக்குமாதலால் அவனுக்கிதைவிட வேறு பூஷணம் வேண்டுவதில்லை. இக்குணங்களில்லாதவர்கள் விலையுயர்ந்த ரத்நாபரணங்களைத் தரித்துக் கொண்டிருந்தாலும் மண்ணினாற்செய்த ப்ரதிமைக்கு மேற்சோடித்த ஆபரணங்களைப்போ லிருக்குமேயல்லாது அழகு பொருந்தாது.

பிறர்க்கு நன்மையைத்தருமினிய சொற்களின்னவையென்று ஆராய்ச்சிசெய்து அவ்வசனங்களையே சொல்லுகின்றவனுக்குப் பாபங்குறைந்து தர்மம் மேலிட்டு வளரும்; ஆதலால் அவன் இம்மையில் ஸுகத்தையும், மறுமையில் மோக்ஷத்தையும், அடைவான்.

இனியசொற்களால் பலநன்மையு முண்டாகுமென்று தெரிந்திருந்தும், அதைக் கவனிக்காமல் கடுமையான சொற்களைச் சொல்ல விரும்புவோன் மூர்க்கனெனப் படுவதுமன்றிப் பகைக்கும் நகைக்கும் பாத்ரனாவான்.

நன்மையைத்தரும்இனியவசனங்கள் அனந்தமுண்டாயிருக்க அவைகளை விட்டுத் தீமைகளைத் தருங்கொடுமையான சொற்களைச்

சொல்ல விரும்புவது எத்தன்மையதாக விக்கிறதென்றால் புஜிப்பதற்கு மதுரமான நல்ல கனிவர்க்கங்க ளிருக்க அவைகளை விரும்பாமல் எட்டிக்கனியைப் புசிக்க விரும்புவதுபோலாம்.

ஆதலால் நல்வசனத்தை வசனிக்கவும் கெட்டவசனங்களை நினையாதிருக்கவும் வேண்டும்.

---

## புறங் கூறாமை.

ஒருவன் தர்மத்தின் பெயரைக் கூட கனவிலாகிலும் நினையாமற் பாவங்களையே செய்கின்றவனாக விருந்தாலும், அவன் பிறனைக்காணாவிடத்திகழ்ந்து பேசாதிருப்பானாயின், இவ்வொரு குணத்தினாலே அப்பாவங்களை யெல்லாம் ஒழித்துப் புண்யபலத்தை யடைவான்.

தர்மங்களை யழிப்பதைப் பார்க்கிலும் பிறனைக்காணாவிடத்து நிந்தித்துப்பேசுவது மிகவுங்கொடியது. அவனைக்கண்டவிடத்து ஒருமையானவனைப்போல நகைபுரிந்துறவாடுவது அதனினுங் கொடியது.இவ்விதமாகப் புறங்கூறி உறவாடுவதைவிட இறப்பதே நலம்; இறந்து விடுவதினாலே அப்பாப மொழிந்து விடுமென்றும், அதனாலே புறங்கூறாதவர் பெரும்பலனைமறுபிறப்பி லடையலாகு மென்றும், முன்னோருரைத்திருக்கின்றனர்.

பிறரிடத்துண்டாகிய பழியைக் குறித்து அவர்களில்லாதவிடத்தில் இகழ்ச்சியாய்ச் சொல்லிக்கொண் டிருப்பவனது குற்றங்களி லொன்றை ஆராய்ந்தெடுத்து வெட்கப்படும்படி அவனது நேரில் சொன்னா லதைக்கேட்டு அவன் வருத்தப்படுவானோ?

சுற்றத்தார் முதலாயினோர் தன்னைவிட்டு நீங்கி யிருக்கும்படியாக அவர்களிடத்திற் குற்றங்கூறுங் குணத்தை ப்ரதானமாக வுடையவன் அவர்கள் ஸந்தோஷப்படும்படியான நல்வசனங்களைச் சொல்ல அறிவானோ? அறிவானாயின் புறங்கூறுதலாகிய கெட்ட செய்கை அப்பொழுதே அவனை விட்டு நீங்கிப்போய்விடும்.

தன்னோடு நெருங்கி யுறவாடும் நட்பினனுடைய குற்றங்களைக் காணாவிடத்துத் தூறாகத் தூற்றுகின்றவன் அயலவனிடத்து என்ன கொடுமையைச் செய்வானோ தெரிந்திலேம்.

எல்லாவற்றையுஞ் சுமக்கின்ற பூமிதேவிக்குப் புறங்கூறுவோருடைய சரீரத்தைச் சுமப்பது மிகவும் பளுவாயிருக்கும்.



ஆனால் அக்கொடியவர்களையுஞ் சுமப்பது தனக்குத் தர்மமென்று கருதி மௌனமாக விருக்கிறாள். அதுபோல புறங்கூறுவோருடைய குற்றங்களையும் பொறுப்பது நல்லோர்க்குக் கடைமையாயிருக்கும்.

புறங்கூறுவதற்காகப் பிறருடைய குற்றங்களை யாராய்கின்றதும் குற்றமாதலால், அவன் இந்தத் தன்குற்றத்தையும் ஆராய்வானாயின் இதனா லுண்டாகிய பாபமொழிந்து இருமையினும் ஸுகத்தை யடைவான்.

ஆதலால், பிறர்மீது குற்றங் கூறுதலாகிய துர்க்குணத்திற்கிடங் கொடாமல் நற்குணத்தை வஹிப்பதே நலமென்றெண்ணி நடத்தல் வேண்டும்.

---

## பயனில் சொல்லாமை.

அறிவுடையவர்கள் வெறுக்கும்படியான வீண்சொற்களைச் சொல்லுகின்றவன் எவ்வளவு சிறப்படைந்திருந்தாலும் அவனை நல்லோர்கள் மாத்தரமல்லஎல்லோரும் இழிவாய்ப்பேசுவார்களே யன்றி புகழ்ச்சியாகப் பேசார்கள். ஆதலால் இதைக் கவனிப்பவன் பயனைத்தராத சொற்களைச் சொல்ல விரும்பான்.

அறிவுடையோர் கூடிய ஸபையிடத்து ப்ரயோஜனத்தைத் தராத வீண்சொற்களைச் சொல்லித் தனக்குத்தானேஸந்தோஷங் கொண் டிருப்பவன் எவ்வளவு செல்வத்தை யுடையவனாக விருந்தாலும் அவன் நீதியை அறியாத அவிவேகி யென்று சொல்லப்படுவதற்குப் பதிலாய் வேறொன்றுஞ் சொல்லப்படான்.

நல்ல குணத்தை யுடைய கல்விமான்கள் உண்மையும், மாதுர்யமு மில்லாத அப்ரயோஜனமான சொற்களைச் சொல்ல விரும்பார்கள். விரும்புவார்களாயின், அவர்கள் முன்பெற்றிருந்த மேம்பாட்டையும் சிறப்பையும் இழந்துவிடுவார்களென்பது ஸித்தமாம்.

அப்பிரயோஜனமான சொற்களை நல்லனவென்று எண்ணி ஸதாகாலமும் பிறரிடத்துச் சொல்லி மகிழ்ச்சியடைகின்றவர்களே மனிதர்களுக்குள் பதரென்று சொல்லப்படுகின்றார்கள்.

நீதியோடு சேராதசொற்களே பயனைத்தராத சொற்களாம். அவைகளைவிவேகிகள் ஸ்வப்நத்திலுஞ் சொல்ல வுடன்படார்கள். உடன்பட்டாலோ, விவேகியென்கிற பெருந்தன்மை அவர்களை விட்டு நீங்கிப்போய்விடும்.

புருஷார்த்தங்களுக்குள் முக்யமானது மோக்ஷமென்றும் அதையடைய விரும்பிய நல்லோர்கள் பயனைத்தராத வீண்சொற்களைச் சொல்ல ஒருபோதும் விரும்பார்களென்றும், சொல்வி இந்த நீதியை உணர்கின்றவர்கள் வீணான சொற்களைச் சொல்ல உடன்படார்கள்.

காமம் - வெகுளி - மயக்கம் - இவைகளைத் துறந்த பெரியோர் மறந்தாவது புன்மொழிகளைப் பேசார். ஏனெனின், புன்மொழியினா லுண்டாகுந் தீமை கொடியதென்று முன்னோருரைத்த நீதிவாக்கியங்களின் பொருளை யுணர்ந்திருப்பதினாலே தான்.

ஆதலால், பயனிலாப் புன்சொற்களைப் பேசுகிறதினால் பற்பல நன்மைகளுங் கெடுமென்றுணர்ந்து அவ்வழக்கத்திற் கிடங்கொடா திருத்தல்வேண்டும்.

---

## யுத்தம்.

இப்போது யுத்தம் மிகுகடுமையாக நடந்துவருகின்றது. மேற்கரங்கத்தில் பிரிட்டிஷாரும், பிரெஞ்சுக்காரரும் ஜெர்மானியரை மிகு உக்ரமாகத் தாக்கிப் பின்னடையச்செய்து வருகின்றனர். ஆதலால் ஜெர்மனியில் கலக்க மதிகரித்து வருகின்றது. இந்தக் கலக்கத்தை யொழிக்க ஜெர்மன் சக்ரவர்த்தியார் வேறு போர்முகங்களில் வெற்றியடையப் பிரயத்னஞ்செய்து வருகின்றார். முதலில் ருஷ்யாவின் குழப்பத்தைக் கண்டு அங்குக் கடற்படையையும், தரைப்படையையும் திரட்டிச்சென்று ரீகாவையும், ரீகாவளைகுடாவிலுள்ள சில தீவுகளையும் பிடித்து விட்டனர். இத்தாலியரைப் பெருஞ்சேனைகொண்டு எதிர்த்துவருகின்றனர். இங்குமங்கும் சிலவெற்றிகளைக் காட்டி ஜெர்மன் சக்ரவர்த்தியார் தமது குடிகளை யேமாற்றி வருகின்றனர். இவை ஸ்திரமான வெற்றிகளல்லாமையினால், ஜெர்மன் குடிக ளேமாற்றமடையாது சமாதானத்தை விரும்பி வருகின்றனர். ஆஸ்டிரியரும், பல்கேரியரும், துருக்கியரும் சமாதானத்தை நாடி, அதுபற்றி முயற்சிசெய்து வருகின்றனர். ருஷ்யாவில் நேர்ந்திருக்கும் குழப்பம் ஒருவாறு அடங்கிவருகின்றது. அதனால் ருஷ்யரும் பகைவரைப் பலமாக வெதிர்த்துப் போர்செய்யும் வன்மைபெற்று வருவார்கள். இத்தாலியரும் தமது வன்மையைக் காட்டும் சமயம் வந்திருக்கின்றமையின், அவர்களும் மிகு உக்ரமாகவே போர்செய்து வருவார்கள். அமெரிக்கரும் பிரெஞ்சுப் போர்முனையில் சண்டை தொடங்கி விட்டனர். மழைக்காலத்திலும் எல்லாப் போர்முகங்களிலும் பலமான சண்டை நடைபெறுமென்று தெரிகின்றது.

JAN 1918


# சக்ரவர்த்தினி.

“ கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்ப
மற்றீண்டு வாரா நெறி ”.

VOL-13 தொகுதி-13 | November-1917. நவம்பர்மீ 1917. | No- பகுதி - 4.


## சோம்ப ரென்பவர் தேம்பித்திரிவர்.

ஒவ்வொருவரும் தாங்கருதிய காரியங்களைச் செய்து முடிக்கவேண்டுமாயின், சோம்பலில்லாதவரா யிருத்தல்வேண்டும். சோம்பலுடையார் தாம் கருதிய காரியங்களைச் செய்து முடித்து, பெறவேண்டிய பயனைப் பெறுவதேயில்லையாம். மக்களுக்கு முக்கியமாக விருத்தற்குரியன நல்லறிவும் காரிய முயற்சியுமாம். அவையில்லாதவர் வறுமையால் வருந்தி யலைந்து திரிவது நிச்சயமாம். சோம்பலுடையானடையுந் தீமை, அஃதில்லாதானடையும் நன்மை யென்பனவற்றை நன்குணர்ந்தவர் நல்லறிவும் காரியமுயற்சியு முடையவராயிருந்து, தாம் கருதிய பயனையடைதல் பெரும்பான்மையுந் தவறுவதில்லையாம். “வித்துமேரு முளவா யிருப்ப, எய்த்தங் கிருக்கு மேழையும் பதரே”, “முதலுள பண்டங் கொண்டுவா ணிபஞ்செய், ததன்பய னுண்ணா வணிகரும் பதரே” என்று வெற்றி வேற்கை கூறுவது நமக்கியாதுணர்த்துகின்றது? சோம்பலுடையவர் பதர்போன்றுவரென்பதனையன்றோ வுணர்த்துகின்றது? உழவன் விதைத்தற்கு விதையும், உழுதற்கு ஏரும் தன்னிடத்திருக்க, சோம்பலாலே உழுது பயிர் செய்யாது வறுமையுற்றிருப்பானாயின், அவனை யென்னவென்று கூறலாம்? பெருமூடனென்று கூறலாமன்றோ? முதற்பொருள் தன்னிடத்திருக்க அது கொண்டு வர்த்தகஞ்செய்து, அதன் பயனைப் பெறாதுள்ள வர்த்தகனை

புட
அதையவென்று கூறலாம்? மகா மூடனென்று கூறலாமன்றோ?
களைச் செம் வர்த்தகரும் தத்தம்தொழில்களைச் செய்யாது சோம்பிக்
இந்த நீதிராயின், அதனால் அவர்க்குளதாம் துன்பம் பிறரையும்
உடன்படவதாக விருத்தலின், மக்களுள் முக்கியமாகச் சோம்பலில்
காமம் யிருக்கவேண்டியவர்கள் அவர்களேயாவர். உழவரும்
யோர் மநமில்வழி, எவர்க்கும் எப்பொருளும் கிடைப்பது மிக
புன்மொழியமென்பது சிறிதூகித்து நோக்கினால் நன்கு விளங்குவ
ருரைத்த நீ ல்லறிவும் காரியமுயற்சியு மில்லாவிடத்து உழவரும்
தான்.
ரும் ஒரு காரியத்தையும் முற்றுப்பெறச் செய்வது முடி
பல ்மையின், அவர்கள் நல்லறிவும் காரியமுயற்சியு முடையவ
ராய், தத்தங்காரியங்களைச் செய்துவருதல் வேண்டும்; செய்து
வருவாராயின், உலகத்தார் துன்புற்று வதைவதுபெருபான்மையு மில்லையாம். உழவரது முயற்சியும் வர்த்தகரது முயற்சியுமே மற்றவரது முயற்சிக்குக் காரணமாயிருத்தலின், அவ்விருவரும் நல்லறிவும் காரிய முயற்சியு முடையவரா யிருத்தல்வேண்டும்; இருந்தால், அவரேயன்றி மற்றவரும் சுகமாய் வாழ்தல் கூடும்.

சோம்பல் உழவர்க்கும் வர்த்தகர்க்கும் ஒருபோதுங் கூடாதென்று சொல்லப்படுமாயினும், கூர்ந்து நோக்குமிடத்து, அஃது எவர்க்குமே கூடாததாம். சோம்பலால் கெட்டவர்தொகைக்கு அளவேயில்லையாம். சோம்பலுண்டாதற்குக் காரணம் தாமதகுணமாம்? அஃதாவது மோகவடிவமாம். மோகமாவது சித்தம் செய்வது, தவிர்வதறியாது இருண்டிருத்தலாம். சோம்பலின் காரியம் பெருந்தூக்கமும் எக்காரியத்தைச் செய்வதிலும் சிரத்தையில்லாமையுமாம். சோம்பலின் காரணமான தாமதகுணத்தை யொழித்துவிடுபவர் அதன்காரியமாகிய பெருந்தூககத்தை மேற்கொள்வதும் தங்காரியத்தைச் செய்வதில் சிரத்தை யில்லாமையுமில்லாது தாம் செய்யவேண்டிய காரியத்தைச் செவ்வையாகச்செய்து, அதனாற்பெறவேண்டிய பயனைப் பெற்றுவாழ்தல் நிச்சயமாம். சோம்பலுடையவர் முயற்சியில்லாதவரா யிருத்தல் நிச்சயமாகலின், பிறர்க்கு அவர் விரும்பியபொருளைக்கொடுத்தல், தம்மைத்தாமே நன்கு மதித்தலென்னும் செருக்கு என்னுமிவற்றை யுடையவராயிராது, பிறர்கூறும் அவமதிப்புக்குள்ளாகி, அல்லலடைவது தவறுவதேயில்லையாம். சோம்பலுடையவர்க்கு மறப்புச் சொந்தமாகவிருத்தலின், அவரதனால் இக்காரியத்தை இக்



காலத்தில் இன்னவாறு செய்யவேண்டுமென்பதுணராது, தமக்குரிய பொருளையிழந்து, வறுமைப்பிணிக்கு வாய்ப்பான தோழராகி வருத்த முறுதற் குரியவராகின்றனர். நெருப்பிற் கொடியது பிறிதின்மையின், அதனை நெருப்பாகவே கருதுவதுபோல, சோம்பலிற் றீயது பிறிதின்மையின் அதனைச்சோம்பலாகவே கருதி அதனை யொழிக்கமுயன்று வருபவர் மேன்மை பெறு திருப்பதில்லையாம். அவர் குடி மேன்மைபெற்று விளங்குவது ஒருவாற்றானுந் தவறுவதில்லையாம்.

கும்பகர்ணன் போர்க்களத்திற்கு வந்து வானரவீரரை வென்று, சுக்கிரீவனைப் பிடித்துக்கொண்டு, இலங்கையுட் செல்லும்போது, சோம்பலின் காரியமாகிய தூக்கம் வந்துவிட்டமையால், அவனைத் தளரவிட்டுவிட்டான்; விடவே, அவன் கும்பகர்ணனது மூக்கையும் காதையும் கடித்தெறிந்துவிட்டு, அவனிடத்தினின்றுந் தப்பி வந்துவிட்டானென்று இராமாயணங் கூறுவதைச் சிறிதூகித்து நோக்குவார்க்குச் சோம்பலுடையவர் எத்தன்மையராயினும் ஒருகாலத்தில் தவறாது விபத்துக்காளாய்த் துன்ப முறுவரென்பது விளங்காதிருப்பதில்லையாம். "உற்ற தொழில் செய்வோர்க் குறுபஞ்ச மில்லையாம்" என்று நீதிவெண்பா கூறுவது யாதுணர்த்துகின்றது? தத்தமக்குரிய தொழிலைச் சோம்பலின்றிச் செய்கின்றவர்க்கு வறுமையுண்டாவதில்லையாமென்பதனை யன்றோ வுணர்த்துகின்றது. எல்லாம் விதிப்படி நடக்குமென்று சோம்பிக்கிடக்கின்றவர் உணவு விழுங்காவிட்டால் உள்ளே செல்லாதிருக்கின்றதே யென்பது பற்றிச் சிறிது கவனித்துணர்தல்வேண்டும். மலஜலம் விடுதல், உணவுண்டல் முதலியன முயற்சியில்லாவிட்டால், எவர்க்கும் முடியாவென்பது சிதையாத சித்தாந்தமாக விருத்தலைச் சோம்பலுடையவர் கவனியாதிருக்கின்றனர். ஒவ்வொரு காரியமும் முயற்சியை முன்னிட்டே நடைபெறுவதாக விருத்தலின், சோம்பலை மேற்கொள்வது எவர்க்குந் தகுதியுடையதன்றாம். சோம்பலை மேற்கொள்பவர் அடையும் பயன் முடிவில்லாத துன்பமேயாம். சோம்பலை மேற்கொள்பவர் துன்பத்தை விலைகொடுத்து வாங்குகின்றவர்போலாவரென்பது சோம்பலுடையா ரடையுங் கதியைச் சிறுதுற்று நோக்கினால் நன்கு விளங்குவதாம்.

சோம்பல் கேடனைத்தும் வருதற்குக்காரணமாயிருக்கின்றது; அதனை யொவ்வொருவரும் மிகு விழிப்பாயிருந்தொழித்து, தாம் செய்யவேண்டியகாரியங்களைக்கிரமமாகச்செய்து சீர்பெறல்வேண்டும். சோம்பலுக்கு இடங்கொடுத்திருப்பவர் ஒரு நன்மையையு மடைவதில்லையென்பதை நம்மனோர்க்கு நன்குணர்த்தவே நமது ஞானத் தாயாகிய ஔவைப்பிராட்டியாரவர்கள் ஆத்திசூடியில் "சோம்பித்திரியேல்" என்றருளியதனோடு நில்லாது கொன்றைவேந்தனிலும் "சோம்ப ரென்பவர் தேம்பித்திரிவர் = சோம்பலுடையவரென்று சொல்லப்படுவோர் (வறுமையால்) வருந்தித் (தம்வயிறு வளர்த்தற்பொருட்டு மனைதோறுஞ் சென்று) அலைவர்" என்று திருவாய் மலர்ந்தருளினர். ஒருவன் பலவகையாலும் தேடுதற்குரியது மரியாதையேயாம்; அது சோம்பலுடையார்க் குண்டாவதில்லையாம். சோம்பலுடையாரது குடி அவர் கெடுதற்குமுன்னே அழிந்து விடுகின்றது; அவர் பலராலிழித்துப் பேசப்படுகின்றனர்; அவரிடத்துத்தானே செல்வம் வந்தடைந்தவிடத்தும் அவர் அதன் பயனை யடைவதில்லை; சோம்பல் தன்னையுடையவனை அவன் பகைவர்க்கு அடிமையாக்குகின்றது என்றற்றொடக்கத்தனவற்றை யறிந்தவர் சோம்பலை யொழித்து மரியாதையைத் தேடுவது ஒருதலையாம். சோம்பலில்லார்க் கடையாளம் அவர் மரியாதையுடையவராக விருத்தலேயாம். மரியாதையைத் தேடுகின்றவர் அது வருதற்குரிய காரியங்களைச் செய்வதில் சோம்பியிருப்பதில்லையாம்; அவர் சுற்றத்தார் நட்பினர் முதலாயினோர் தம்மைச் சூழப் பொருளுடையவராய் வாழ்ந்து புகழ்பெற்று விளங்குதல் தவறுவதேயில்லையாம். தம் முன்னோர் தேடிய பொருளைக்கொண்டு உணவையும் உடையையும் முறையே நிரம்பவுண்டுடுத்தி, யாதாயினு மொரு தொழில் செய்து பொருள்தேடாது சோம்பிக்கிடப்பவர் தாம் உய்வதற்குரிய வேலையையும் பிறருய்வதற்குரிய வேலையையும் செய்யாதிருத்தலின், பிணம்போன்றவரே யாவர்.

"கடவுள் காட்டுமன்றி வூட்டாது" என்னும் பழமொழி நன்கு கவனிக்கப் படுமாயின், கடவுள் காட்டுவதைப் பெறுவதற்கு முயற்சிவேண்டுமென்பது பெறப்படுவதாம், சோம்பலுடையார் கடவுள் காட்டுவதைப் பெறுவதேயில்லையாம். மக்களது



162432

முயற்சி விளைநிலம் போன்றதாம்; தெய்வானுக்கிரகம் விதை போன்றதாம். விளைநிலமும் விதையுமில்லாவிடத்து விளைவுண்டாகாமைபோல, முயற்சியும் தெய்வானுக்கிரகமு மில்லாவிடத்து எவர்க்கும் தாம் கருதிய பயனுண்டாவதில்லையாம். ஆகவே, தெய்வானுக்கிரகத்தை முன்னிட்டு முயற்சிசெய்து வருபவர் தாங் கருதிய பயனையடையாதிருப்பதில்லையாம். பொருள் தேடு முயற்சிசெய்வதில்லாது சோம்பலை மேற்கொண்டிருப்பவர் பிறர் பொருளை யெதிர்பார்த்து அதனால் அவமானமடைதற்குரியவராயிருக்கின்றனரென்பதனை நாம் அடிக்கடி ஞாபகஞ்செய்து கொண்டு, சோம்பலுக்குச் சிறிதுமிடங் கொடாது வருதல்வேண்டும்; அதற்குச் சிறிதிடங்கொடுத்து விடுவோமாயின், அது மலைபோலவளர்ந்து, நம்மைப் பல தீங்கினையுமடைதற் காளாக்கிவிடும். நாம் தீங்கில்லாது மரியாதையாக வாழவேண்டுமாயின் சோம்பலுண்டாகாவாறதனைத் தடுத்து வருதல்வேண்டும். வந்தாற்றான், எல்லா நன்மையுமடைதற்குரியவராவோம்.

"கடவுளீ குவனென் றெண்ணிநித் தியமுங் கருதுறு முயற்சி செய் யானே, லடலுறு செல்வ மடைகுவ னேகொ லருங்கலத் திட்டபா லடிசின், மிடலுடைக் காத்தா லெடுத்துண தெங்ஙன் வீங்கும்வெம் பசிப்பிணி யொழிப்ப, னுடல்பவங் தனக்கோ ராகர மாகு முடனனி வாட்டுமெய்த் தவத்தோய்".

என்று குசேலோபாக்கியானம் கூறுவது இங்குணர்தற் பாலதாம்.

## சுகாதாரம்.

### போஜனம்.

மனிதனுடைய தேகத்தில் எப்போழுதும் ஓயாத மாறுதலும் தேய்வும் கழிவும் நடந்துகொண்டே யிருக்கின்றன. இப்படி ஒருநாளில் மாத்திரம் ஒருவனுடைய தேகத்திலிருந்து மலஜல சுவேதங்களின் வழியால் வெளியே நீக்கப்படுங் கழிவுப் பதார்த்தங்களின் நிறை 3 - அல்லது 4 - பவுன் உள்ளது. இந்தக் கழிவுக்குச் சமமாக நூதனபதார்த்தங்கள் நமது தேகத்தில்

எப்பொழுதுஞ் சேர்ந்துகொண்டே யிருக்கவேண்டியது அவசியமாம். இந்த நூதனபதார்த்தங்கள் வரும் வழி நாம் சாப்பிடும் போஜனந்தான். மேலும் தேக அனல் நமது ஜீவனுக்கு மிகவும் அவசியம். இது எப்பொழுதும் நிலையாயிருப்பதற்குத் தேகத்தில் நெருப்பு ஓயாமல் எரிந்துக்கொண்டிருத்தல்வேண்டும். இந்த நெருப்பிற்கு இடைவிடாமல் விறகுவேண்டியது அவசியமே. இவ்விறகு நாம் சாப்பிடும் போஜனத்திலுள்ள எண்ணெய், நெய், கொழுப்பு, சருக்கரை முதலானவைகள்தாம். ஆகையால் நாம் சாப்பிடும் போஜனத்தின் பிரயோசனங்கள் இரண்டு: முதலாவது நமது தேகத்தில் தேய்ந்து வெளியே கழிந்துபோகும் பழைய பதார்ந்தங்களுக்குப் பதிலாக புதிய பதார்த்தங்களைக் கொடுப்பதும், இரண்டாவது எப்பொழுதுந் தேக அனலை யுண்டாக்கிக்கொண்டிருப்பதுந்தான்.

### போஜனங்களின் வகுப்புகள்.

போஜன பதார்த்தங்களைச் சிலர் நான்குவகுப்புகளாய்ப் பிரித்திருக்கின்றார்கள். அவையாவன:

1-வது சதையையுண்டுபண்ணும் சத்துள்ளபதார்த்தங்கள். இந்த வகுப்பில் பலவகை இறைச்சி, முட்டை, பால், பயறு முதலியன அடங்கி யிருக்கின்றன. 2-வது கொழுப்புப்பதார்த்தங்கள். இந்த வகுப்பில் ஜீவஜெந்துக்களிலிருந்தும், பூண்டுகளிலிருந்தும் உண்டாகிற கொழுப்புகளும், எண்ணெய்களும் அடங்கி யிருக்கின்றன. 3-வது கரி ஜலவஸ்துக்கள் (Hydro carbons). இந்த வகுப்பில் பலவகை மாவுகளிலுள்ள மாச்சத்தும் (Starch) பலவகைச் சருக்கரைகளும் அடங்கி யிருக்கின்றன. 4-வது உப்புக்கள். இந்த வகுப்பில் நமது சாப்பாட்டில் சேருகிற சாதாரண உப்பும் போஜனத்திற்கு உபயோகமான காய் கறி முதலான பல பொருள்களிலுள்ள வேறு அநேகவகை உப்புக்களும், சுண்ணாம்பு, இரும்பு முதலானவைகளும் அடங்கியிருக்கின்றன. தண்ணீரும் இந்தவகுப்பில் சேர்ந்ததுதான்.

இந்த நான்கு வகுப்பான பதார்த்தங்களும் எவ்வகைப் போஜனத்தில் சரியான அளவாய்ச் சேர்ந்திருக்கின்றனவோ அதுவே பூரணமான போஜனமாகும். ஆயினும் 1 வது, 2.வது, 4 வது ஆகிய இம் மூன்று வகுப்புகளில் அடங்கிய பதார்த்தங்கள் மனித



னுக்கு இன்றி அமையாதவை. எவ்வகையான போஜனத்திலும் அவை இருக்க வேண்டியது அவசியம்.

(1) சதையையுண்டாக்கும் முதல்வகுப்புப் பதார்த்தங்கள் சரீரபலத்திற்கும் உறுதிக்கும் மனோபலத்திற்கும் அனுகூலமானவையாம். அவை தேகத்திலுள்ள சகல இயந்திரங்களையும் செழிப்பாக வளரச்செய்யத் தக்கவைகள். எவ்வளவுக்கு அவைகளை நாம் சாப்பிடுகிறோமோ, எவ்வளவுக்கு அவை ஜீரணமாகி நமது தேகத்தில் சாருகின்றனவோ, அவ்வளவுக்கு தேகபலமும் முயற்சியும் அதிகப்பட்டு மனோ தத்துவங்களும் பலமடையும்.

(2) கொழுப்புப்பதார்த்தங்களால் உண்டாகும் பிரயோஜனங்கள் என்னவென்றால்: 1-வது, அவை நமது தேகத்திலுள்ள மூளை நரம்பு முதலிய சில பாகங்கள் வளருவதற்கு அனுகூலமானவையாம். 2-வது, அவை சரீர அனலை உண்டாக்குவதற்கு உபயோகமாகின்றன. மேலும் அவை சதையை யுண்டாக்கும் முதல்வகுப்புப் பதார்த்தங்கள் சரிவர ஜீரணமாகி நமது தேகத்தில் சாருகிறதற்கு உதவிசெய்கின்றன.

(3) கரிஜலபதார்த்தங்கள் சரீர அனலை மாத்திரம் உண்டாக்கத் தக்கவையாம். அவை தேகத்திலுள்ள யாதொருபாகத்தையும் வளர்க்கச் சக்தியற்றவையாம். இவற்றுள் சில அனலை யுண்டாக்கின பின்பு மீதியாயிருக்குமானால் கொழுப்பாக மாறி தேகத்தில் தங்கியிருக்கும். இவ்வகுப்புப்பதார்த்தங்களும் சரீரத்திற்கு அவசியமானவை தாம். ஏனென்றால் சரீரத்தில் போதுமான அளவு அனல் உண்டாகிக்கொண்டிருந்தால்தான் தேகசுகம் நிலைத்திருக்கும். போஜனங்களில் இவ்வகுப்புப் பதார்த்தங்கள் நான்கு பங்காகவும், சதையையுண்டாக்கும் முதல் வகுப்புப் பதார்த்தங்கள் ஒருபங்காகவுமிருத்தல்வேண்டுமென்று வைத்தியசாஸ்திரிகள் மதிப்பிட்டிருக்கிறார்கள்.

(4) நான்காவது வகுப்பைச் சேர்ந்த பலவகை உப்புக்கள் தண்ணீர் முதலானவை முதலாம் வகுப்பைச் சேர்ந்த சதையை வளர்க்கும் பதார்த்தங்களைப் போலவே நமது தேகத்திற்கு இன்றி யமையாதனவாம். அவை இரத்தம் சதைமுதலிய நமது சரீரத்தின் பல பாகங்களில் அமைந்திருக்கின்றன. மேலும்

அவை எலும்புமுதலான சில இயந்திரங்கள் வளருகிறதற்கு மிகவும் உதவியானவை. சாதாரணமான உப்பு தேகத்திற்கு மிகவும் அவசியமானபொருள். இதன் அளவு அதிகமாய்க் குறைந்துபோனால் அநேகவிதமான வியாதிகள் சம்பவிக்கும்; குடலில் பூச்சிகள் உற்பத்தியாகும். வேர்வைமுதலிய தேகக்கழிவுகளின் வழியாய் ஒரு நாளொன்றுக்கு ஒருவனுடைய தேகத்திலிருந்து ஏறக்குறைய ஒரு அவுன்ஸ் அல்லது $2\frac{3}{4}$-ரூபாய் நிறையுள்ள உப்பு வெளியே கழிந்துபோகின்றது. ஆகையால் ஒரு பெரிய ஆளுக்கு நாளொன்றுக்குக் குறைந்தபக்ஷத்தில் ஒரு அவுன்ஸ் உப்பாவது சாப்பாட்டின் வழியாய்த் தேகத்திற்குள் செல்லவேண்டியது அவசியம். மேலும் போதுமான தண்ணீர் நமது தேகத்தில் சேராவிட்டால் சரீரத்தில் நடக்கும் ஜீரணத்தொழிலும் வளர்ச்சித்தொழிலும் சரியானபடி நடந்தேறமாட்டாவாம்.

(வரும்.)

---

1. Man is a cooking animal; he cooks everything, even to his accounts.

2. That it would disagree with one is no consolation for not getting what one wants.

3. Life may teach us to know the best, but most of us only know it slightly and are on much more intimate terms with the second best, if not the worst.

4. The theorist will talk of the greatest good for the greatest number, where as the actualist will speak of the smallest serice for the greatest payment.

## ஞானப்பிரகாசம்.

### முதலங்கம்.

### 2-ம் காட்சி.

இடம்:—காசிநகரக் கொலு மண்டபம்.

காலம்:முற்பகல்

பாத்திரங்கள்:—புருஷோத்தமன், சித்தசர்மா, ஸுபுத்தி, சேவகன் ஞானப்பிரகாசன்.

சித்தசர்மா:—மன்னர் பெருமானே! தங்கள் தவப்புதல்வன் ஞானப்பிரகாசன் சிலநாட்களாய் காலை மாலைகளில் தன் சினேகிதருடன் உல்லாசமாய்ப் பவனி செல்வதில்லையாம்; ஒன்றையுங் கவனிப்பதில்லையாம்; குதிரைச் சவாரியும் போவதில்லையாம்; பைத்தியம் பிடித்தவனைப்போல் ஏதோவொன்றை நினைத்துக்கொண்டு சிரிப்பதும் கூத்தாடுவதுமாக விருக்கின்றனும். என்ன காரணமோ தெரியவில்லை. அவனுக்கு விவாகம் செய்யவேண்டிய காலமும் ஆய்விட்டது. ஒருவேளை தனக்குத் தகுந்த காலத்தில் விவாகம் செய்யவில்லையே யென்ற சிந்தை மேலிட்டுச் சித்தப்பிரமை கொண்டிருக்கலாமென்று நினைக்கின்றேன்.

இதைப்பற்றிக் கவனித்து அவனுக்கு விவாகம் செய்விப்பது அத்தியாவசியமென நினைக்கின்றேன்.

புருஷோ:—(பெருமூச்சுடன்) ஹா! அப்படியா!! அவனை இங்கே வரவழைப்பாய்.

சித்த:—(சேவகனைப்பார்த்து) அடே! சேவகா!! நீபோய் நமது இளவரசர் ஞானப்பிரகாசரை இங்கே அழைத்துவருவாய்.

சேவகன்:—அப்படியே சாமீ! இதோ அயச்சிகிட்டு வந்துட்டோ (ஓடுகிறான்.)

சுபுத்தி:—அரசரேறே! இளவரசன் ஞானப்பிரகாசனுடைய விவாக விஷயத்தைப்பற்றி யான் முன்னரே யோசித்துப் பற்பல தேசத்து அரசகன்னிகைகளின் உருவப்படங்களை வரவழைத்து வைத்திருக்கின்றேன். அவனுக்கு எந்தக் கன்னிகையின் மேல் மனம் நாடுகிறதோ அந்தக் கன்னிகையை

மணஞ்செய்விக்கலாம். இதோ இருக்கின்றன அப்படங்கள். (படங்களை அரசனிடத்தில் கொடுக்கிறான்.)

புரு:—(படங்களை வாங்கிப்பார்த்து) சரி! அப்படியே செய்யலாம்.

ஞான:—(விரைவாய் வந்து) அன்புள்ள பிதாவே! நமஸ்கரிக்கின்றேன். என்னைத் தாங்கள் இங்கு அழைப்பித்ததற்கு யாது காரணமென்று நான் அறிய விரும்பலாமா ?

புரு:—மங்களமுண்டாகுக ! என் அருந்தவப் புதல்வனே ! ! இங்கு வருவாய்.உன்னை அழைப்பித்த காரணம் வேறொன்றுமில்லை ; உன் மனோபாவத்தை யறிந்து நீ யிச்சிக்கும் கன்னிகையை உனக்கு விவாகம் செய்விக்க வேண்டுமென்பதே. இதோ இருக்கும் படங்களைப் பார்த்து உன் மனதிற்கிசைந்த கன்னிகையைத் தெரிந்தெடுப்பாய்.

ஞான:—தந்தையே ! எனக்கு விவாகம் வேண்டுவதில்லை. பெண்களை மணப்பது பெருந் துன்பத்திற்குக் காரணமல்லவா ? நெருப்பைத் தொட்டாற் சுடும். பெண்களை நினைத்தாற் சுடுமே !! பெண்களை மணப்பது ஒரு சுகமா !!! காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டித் தன் கண்ணெதிரே மாதென்றுசொல்லி வருமாயை தன்னை மறலிவிட்ட தூதென்றெண்ணுமற் சுகமென்று நாடுவரோ அறிவுள்ளோர் ? இது தாங்கள் அறியாததோ ?

புரு:—மைந்தனே ! நீ கூறிய மொழிகள் எனக்கு அதிக ஆச்சரியத்தை யுண்டாக்குகின்றன. மணந்த பெண்ணை யடக்கியாளத் தெரியாதவனன்றோ பெண்களால் துன்பமுண்டாகின்றதென்று கூறுவன். அழகிலும், யௌவனத்திலும், பராக்கிரமத்திலும், கல்வியிலும், சம்பத்திலும் மிகுந்த நீ இவ்விதங் கூறுவது அழகல்ல—“ பெண்களை மணப்பது பெருந் துன்பத்திற்குக் காரண”மென்பதைத் தெரிந்துகொள்ளாமலா சிவனுடைய வில்லை யொடித்து இராமன் சீதையையும், வேங்கை மரமாகவும் தொண்டு கிழவனாகவும் வேடந்தரித்து முருகன் வள்ளியையும், மச்ச யந்திரத்தைப் பேதித்து அர்ச்சுனன் துரோபதையையும் மணந்தனர் ? அறியாத்தனத்தினால் பேசினாய். போகட்டும்—சீக்கிரம் தெரிவிப்பாய் உன் மனத்திற்கிசைந்த பெண்ணை.



ஞான.—(புன்முறுவலுடன்) தந்தையே ! சக்கிரவர்த்தியாகிய நளமகாராஜன் தமயந்தியை மணந்ததனாலன்றோ தன் அரசை யிழந்து ருதுபர்ணனுக்கு அடிமையானது ; மிக்க வல்லமையுடைய இராவணனும் பெண்ணாசையாலன்றோ பிடிசாம்பலானது ; அன்றியும் உடலும் உயிரும்போலிருந்த சுந்தோபசுந்தர்கள் திலோத்தமையின் மேல்கொண்ட காதலாலன்றோ இருவரும் உயிரிழந்தது ; மேலும் பெண்வழிச் சேர்ந்தன்றோ உத்தானபாதன் தன் அருமைப் புதல்வனைக் காட்டிற்கனுப்பியது ; பிரகஸ்பதி தன் மனைவியாகிய தாரையாலன்றோ தன் மதிப்பிழந்தது. இவைகளையெல்லாம் உணர்ந்தேதான் நான் விவாகம் வேண்டாமென்று சொன்னேன். தந்தையே ! “ நோய்கொண்டாலுங் கொள்ளலாம் நூறு வயதளவிருந்தும் பேய்கொண்டாலுங் கொள்ளலாம் பெண்கொள்ளலாகாதே” என்னும் முதுரை தாங்களறியாததோ ? ஆதலால், துன்பங்களுக் குறைவிடமாகிய பெண்ணின் வலையில் என்னைச் சிக்கவைக்காமல் தயைபுரிய வேண்டுகின்றேன்.

புரு:—(கோபத்துடன்) சீ ! மூர்க்கா ! ! நீயோ எனக்கு நீதிகள் கற்பிக்கத்தக்கவன் ? என்னிடத்திலா நீ கற்ற கல்வியைக் காட்டுவது ; (தனக்குள்) என்ன அவிவேகம் இது! ஸ்ரீகளே ஸகல துன்பங்களுக்குங் காரணமா ! (பிரகாசமாய்) இந்த வேதாந்தம் உனக்கு யார் கற்பித்தது? ஹரிஹரப்பிரம்மாதிகளும், இந்திராதி தேவதைகளும், தேவதைகளுக்கு நிகரான அரசர்களும் ஸ்திரீகளுடனே இன்பமாய் வாழ்ந்துகொண்டிருக்க உனக்கு ஒருவனுக்கு மாத்திரமா ஸ்திரீகள் துன்ப காரணமாய்ப் புலப்படுகிறார்கள் ? போதும் ! போதும் ! ! வாயை மூடு ! ! ! தந்தையின் வார்த்தையைத் தட்டும் சண்டாளன் நீ. என் எதிரே நிற்காதே.

ஞான:—(தனக்குள்) யுக்தியோடு கூடிய ஆக்ஷேபத்திற்குச் சமாதானம் சொல்ல முடியாவிட்டால் கோபத்தைக் காட்டுவது உலகவழக்கந் தானே !

புரு:—(தனக்குள்) புத்திரரில்லாத ஒருவருக்குப் புத்திரரில்லையேயென்கிற கவலை சிலநாளும் புத்திரனொருவனுண்டாயினும் அவன் ஆயுளையும், கல்வியையும் உடையவனாயிருக்க வேண்

டுமே யென்கிற கவலை சிலநாளும் அங்ஙனமே அவன் ஆயுளையும் கல்வியையும் உடையவனா யிருப்பினும் நற்குண நற்செயகைகள் பொருந்தியவனாயும் தனக்கு அடங்கியவனாயு மிருக்கவேண்டுமென்கிற கவலைபலநாளும் இங்ஙனம் ஒருதந்தையின் வாழ்நாள் முழுமைக்கும் புத்திரன் கவலையையே தருகின்றவனா யிருத்தலால் அத்தந்தைக்கு அப்புத்திரனைக் காட்டிலும் சத்துரு வேறு யாவரிருக்கின்றார் உலகத்தில்? (பெருமூச்சுடன்) (சுபுத்தியை நோக்கி) சுபுத்தீ! தந்தை சொற் கேளாத புத்திரனும் கொண்ட கணவனுக் கடங்காத மனைவியும் யஜமானனிடத்தில் விசுவாசமில்லாத, வேலைக்காரனும் முறையே சத்துருக்களல்லவா? இவன் என் வார்த்தையைக் கேளாததினால் சத்துருத் தன்மையை வகித்திருக்கின்றான். ஆதலால் தண்டனைக்கும் உரியவனாகின்றான். (கோபமாய்) இச்சண்டாளனுக்கு என்ன தண்டனை விதிக்கலாம்?

சுபுத்தி:—மகாராஜாவே! தாங்கள் ஆத்திரத்துடன் இவ்வாறு கூறுவது நலம்மோ? தங்களருமைப் புதல்வன் அறியாமையால் கூறிய வார்த்தைகளுக்கு இங்ஙனம் கோபித்துத் தண்டிக்கவும் யோசிக்கலாமா? சிறியோர் செய்த பெரிய பிழைகளையும் பெரியோர் பொறுப்பது கடனாயிருக்க இவ்வற்பப் பிழைக்குக் கோபிப்பது அழகாமோ? விவாகம் வேண்டாமென்று வெட்கத்தினாலும் கூறியிருக்கலாம். இது வாலிபர்களுக்கு இயல்பன்றோ? ஆதலால் தாங்கள்கொண்ட ஆக்கிரகத்தை யடக்கி தங்கள் புதல்வனைத் தங்கள் மனைவியிடத்தில் அனுப்புங்கள். அவர்கள் தநயனுடன் தனியாய்ப் பேசிச் செய்ய வேண்டிய காரியத்தைச் செவ்வனே செய்து முடிப்பார்கள்.

புரு:—ஆனால் சரி! அப்படியே செய்யும்.

சுபுத்தி:—அப்பா! ஞானப்பிரகாசா!! நீ இச்சிக்கும் பெண்ணையிங்கே பலரறியத் தெரிவிக்க உனக்கு வெட்கமா யிருக்கலாம். ஆதலால் உன் தாயாரிடம்போய்த் தனியாய்ச் சொல். (சேவகனை நோக்கி) அடே சேவகா நீயும் இவருடன் சென்று இராணியம்மாள் சொல்லுவதை இங்குவந்து தெரிவிப்பாய்.



ஞான:—வெட்கப்படுவதற்கு நானென்ன ஸ்திரீயா. நான் என் தாயாரிடத்திற்குப் போகவேண்டுமாமே! போனால் அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள்? உண்மையை யறிந்த மனதை மாற்ற யாரால்தான் முடியும்? சரி! போகிறேன்.

(சேவகனும் ஞானப்பிரகாசனும் போகிறார்கள்.)

---

## முதலங்கம்.

### 3-ம் காட்சி.

இடம்:—இராணியின் அந்தப்புரம்.

காலம் - நடுப்பகல்.

பாத்திரங்கள்:—இந்துமுகி, ஞானப்பிரகாசன், சேவகன்.

ஞான:—அம்மா! நமஸ்கரிக்கிறேன்.

இந்து:—அப்பா! என் அருமந்த மகனே!! மங்களமுண்டாகுக!!! நீ உன் தந்தையிடத்திற்குப் போயிருந்தாயாமே? என்ன சங்கதி? எதற்காக உன்னை அழைப்பித்தார்?

ஞான:—அம்மா! தந்தை எனக்கு விவாகம் செய்ய யோசித்து நான் எந்தப் பெண்ணை இச்சிக்கிறேனென்று தெரிந்துக் கொள்ளவே என்னை வரவழைத்தார்.

இந்து:—(சந்தோஷத்துடன்) அப்படியா! மெத்த சந்தோஷம்! (தனக்குள்) வயதாய்விட்டதே. விவாக விஷயத்தைப்பற்றி இன்னும் கவனிக்காமல் இருக்கிறாரே! நாமாகிலும் இதைப் பற்றிச் சொல்லலாமா வென்றுகூட சில வேளைகளில் நினைத்தேன். ஆனாலும் 'அவருக்குத் தெரியாதா நாமென்ன சொல்லுவது' என்று பேசாமலிருந்துவிட்டேன். கங்கணப் பிராப்தி வேளை வரவேண்டாமா! (பிரகாசமாய்) சரி! நீ எந்தப் பெண்ணை விரும்புவதாய்ச் சொன்னாய்?

ஞான:—அம்மா! எனக்கு விவாகமே வேண்டாமென்று சொல்லிவிட்டேன்.

இந்து:—(சிரித்துக்கொண்டு) என் செல்வமே! என்னிடத்திலா பரிகாசம்? சொல். எந்தப் பெண்ணை இச்சிக்கிறாய். ஓகோ வெட்கமோ!! என்னிடத்தில் உனக்கென்ன வெட்கம்?

சேவகன்:—அம்மா ! அம்மா !! கொயிந்தே நம்ம அய்யாவண்டெ கூட இப்பிடித்தாங் கண்ணாலம் பண்ணிக்கமாட்டோண்ணு சொல்லிச்சிங்கோ அதுகுத்தா அவங்கொ கோவிச்சிகினு ஒங்ககிட்டெ அனுப்பினாங்கோ.

இந்து:—(திடுக்கிட்டு) என்ன ! உண்மையாகவா !! ஏன் விவாகம் வேண்டாமென்று சொன்னாய் ?

ஞான:—அம்மா ! சகல துன்பங்களுக்கு உறைவிடமாயும், பந்த காரணமாயும், சுகத்திற்கு அதிக தூரமாயும், பக்திக்கு அதிக விரோதமாயும், தாய், தந்தை, சகோதரர் முதலியவர்களிடத்தில் வெறுப்பை யுண்டாக்கக் கூடியதாயுமான "பெண்" என்கிற சர்ப்பத்தின் வாய்க்கு இரையாவதற்கு யாராகிலும் இணங்குவார்களோ ? அப்படிப்பட்ட சர்ப்பத்திற்கு என்னை யிரையாக்குவது உங்களுக்கழகா ? பெற்ற பிள்ளைக்குத் துன்பந்தேடுதல் பெற்றோர்க்கு நியாயமாகுமா?

இந்து:—அப்பா ! குழந்தாய் !! உன் வார்த்தையைக் கேட்க எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. வேத சாஸ்திர, புராண இதிகாசங்களை நன்றாய் வாசித்துத் தெளிந்த நீ இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுவது எனக்குப் புதுமையாகவே யிருக்கிறது. "நல்ல ஞாலமும் வானமும் பெறினும் எல்லாமில்லை இல்லில்லார்க்கே" என்றும், இல்லறமல்லது நல்லறமன்று" என்றும் பலபடியாக சகல சாஸ்திரங்களும் இல்லறத்திற்கே ஏற்றங்கொடுத்துப் புகழ்ந்திருக்கவும், தத்துவஞானிகளாகிய ஜனகர், வசிட்டர், யாஞ்ஞவல்கியர் முதலிய ரிஷிகளும் அரசர்களும் பத்தினிகளோடு வாழ்ந்திருக்கவும் உனக்கு என்ன இப்படிப்பட்ட புத்தி ஏற்பட்டது ? போதும் ! போதும் !! இனியாகிலும் உன் அறிவீனத்தை விடுத்து உடனே தந்தை யிடத்திற் கோடி விவாகம் செய்துகொள்ளுவதாய்த் தெரிவித்துவா. என் வார்த்தையைக்கேள் "தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை" என்பது நீயறியாததா ? தாயாருடைய வார்த்தையைக் கொண்டன்றோ பாண்டவர்கள் ஐவரும் ஒரு பெண்ணை மணந்தது. வியாஸர் தன் தாயாகிய மச்சகந்தியின் வார்த்தையாலன்றோ பரஸ்திரீகளாகிய விசித்திர வீரியன் பாரியைகளை யடைந்தது. இங்ஙனம் ஒரு ஸ்திரீயைப்பலர் மணந்ததும் பரஸ்திரீ



யைப் பரபுருஷன் இச்சித்ததும் வேத விருத்தமாயிருப்பினும் அவர்கள் அவ்விலக்கான காரியத்தை விதியாகச்செய்து முடித்தது தாய் சொல்லின் வலிமையாலன்றோ ? ஆதலால் வேத வாக்கியத்தைக் காட்டிலும், மகனே ! மாத்ருவாக்கியம் மேன்மையுடையதென்று ஏற்படவில்லையா ? இத்தகைய தாய் வார்த்தையை மீறி நடப்பது விவேகியாகிய உனக்கு அழகல்ல. ஆதலால் உன் எண்ணத்தை உடனே மாற்றி என்னிஷ்டப்படி விவாகம் செய்துகொள்.

ஞான:—அம்மா ! தாங்கள் என்னை விவாகம் செய்துகொள்ளப் பல நியாயங்களைக் காட்டி வற்புறுத்தியதற்கு மிக்க வந்தனம். இதுகாறும் தாங்கள் எடுத்துக்கூறிய நியாயங்கள் அதிகநுட்பமான தர்மங்கள். அக்காரியங்கள் ஏதோ ஒரு சாப விசேஷத்தை முன்னிட்டு நடந்தனவேயல்லாமல் சாதாரணமாய் நடந்தவையன்று; பரஸ்திரீயுடன் சேரும்படிக் கட்டளையிட்ட தாய் ஒரு தாயுமன்று; அவ்வார்த்தையைக் கேட்டு அங்ஙனம் பரஸ்திரீயுடன் சேர்ந்த புத்திரன் ஒரு புத்திரனு மன்று. இங்ஙனம் தாயும் புத்திரனுமாக உருவெடுத்துப் பிறந்தவர்கள் பரஸ்பரம் அதிக குரோதமுள்ள சத்துருக்களினும் அதமமானவர்களென்றே கூறத்தக்கவர்கள். ஆதலால் தாங்கள் என் க்ஷேமத்தைக் கோரியவர்களா யிருப்பதால் அதற்குமாறான விவாக விஷயத்தைப்பற்றி வற்புறுத்துவது சரியல்ல. அப்படி தாங்கள் கட்டாயப்படுத்தினாலும் நான் அதற்கிணங்கேன்.

இந்து:—(பெருமூச்சுடன்) அப்பா குழந்தாய் ! இதற்குத்தானா நாங்கள் உன்னைத்தவஞ் செய்து பெற்றோம் ? சுபுத்திரனுக்கு இதுதானா லக்ஷணம். தான் இல்லறதர்மத்தை மேற்கொண்டு புத்திரர்களைப் பெற்றுத் தந்தையின் வம்சத்தை நிலை நிறுத்தித் தாய் தந்தையர் இறந்த பின்னர் சிரார்த்தாதி கருமங்களால் அவர்களைத்திருப்தி செய்விப்பதன்றோ சற்புத்திரருடைய கடன். இங்ஙனம் செய்யாத நீ சற்புத்திரனாவாயா ? யோசித்துப்பார்.

ஞான:—அம்மா ! தாங்கள் கூறுவது கேவலம் பாமரர்களுடைய வார்த்தை. விவாகம் செய்துகொண்டு மக்களைப்பெற்று சம்சாரமாகிய துக்க சாகரத்தில் மூழ்கியவன் எங்ஙனம் தாய்

தந்தையரைத் திருப்தி செய்யமுடியும்? தாயே! எதற்காக இந்த மனித சரீரம் கிடைத்ததோ அதை யோசிப்பதல்லவோ விவேகியின் காரியம்?

இந்து:—(மூர்ச்சையாய்க் கீழே விழுந்து) (தனக்குள்) ஐயோ! எத்தனைவிதமாய்ப் போதிக்கினும் இவன் மனதை மாற்ற முடியவில்லையே. அரசரே தம்மால் முடியாமல் என்னிடம் அனுப்பியிருக்க நான்என்னசெய்யமுடியும்? (பிரகாசமாய்) அப்பா! சேவகா!! நீ அரசரிடம்போய் ஞானப்பிரகாசனுக்கு எவ்வளவு போதித்தும் அவன் எண்ணம்மாறவில்லையென்று சொல்வாய் நடக்கிறபடி நடக்கட்டும் நானென்ன செய்வேன்.

(சேவகன் போகின்றான்.) (திரைமாறுகிறது.)

(வரும்)

N. சுப்ரமணிய அய்யர்.

## பக்தி.

### 10. ஸாதனங்களும் அனுஷ்டானங்களும்.

(பழக்க வழக்கங்கள்.)

பக்தியோகத்தைக் கைகொள்வதற்கான முறைகளையும், அதனை யடைவதற் கின்றியமையாத பழக்கங்களையும் பற்றிப் பகவான் ஸ்ரீராமானுஜாசார்யர் வேதாந்த ஸூத்ர பாஷ்யத்தில், பின்வருமாறு கூறுகின்றார்:—"அறிவு, மனவடக்கம், புலனடக்கம், பயிற்சி, கேள்வி, தூயஉளம், திறமை, அவாவறுத்தல், என்ற இவைகளால், அது (பக்தி) கிட்டுகின்றது." "பல பொருள்களையும் ஆராயுங் கூட்டத்தில், தீயவுணவையுந், தூயவுணவையும் வேறு பிரித்தறிதலும், "அறிவு" தான் என அவர்கள் கருதுகின்றார்கள். அவரது கொள்கைப்படி உணவுகள் மூன்று காரணங்களாற் கெட்டதாய் விடுகின்றன. (1) உள்ளிப்பூண்டு போன்று உணவுகள் இயற்கையிலேயே தமோகுணம் வாய்ந்திருத்தலென்பன. (2) தீயவரிடத்திலிருந்து வருதலென்பன. (3) "மண்" "மயிர்", முதலிய கெட்டபொருள்கள் (உணவில்) கலந்திருந்



தலென்பன. * இவ்வாறுள்ள மூன்று காரணங்களா லுணவுகள் கெட்டதாய் விடுகின்றன.

"தூயவுணவானது ஒருவரிடத்து நல்ல (ஸத்வ)குணத்தை வளரச்செய்கின்றது; அவரது உளத்தை நிலைக்கச் செய்கின்றது." என்று மறைகள் பறையறைகின்றன. (சாந்தோக்யஉபநிஷத்) உணவுப்பொருள்களுடைய குணங்குற்றங்களை யறிதலானது தொண்டர்கட்கு மிகவும் முதன்மையாயுள்ளதாகும். அவ்வாறுள்ள குணங்குற்றம் முதலிய ஆராய்ச்சி செய்வதிலிருந்து

* ஸ்ரீமத் பகவத்கீதையில், உணவுப்பொருள்களை "ஸாத்விகம், ராஜஸம், தாமஸம்" என மூன்று பிரிவாகச்செய்து கூறப்பட்டுள்ளது.

"ஆயுஸ்ஸத்வ பலாரோக்ய ஸுகப்ரீதி விவர்த்தனு:
ரஸ்யாஸ்னிக்தாஸ்திராஹ்ருத்யா ஆஹாராஸ்ஸாத்விகப்ரியா:

"வாழ்நாளை நீடிக்கச்செய்வதும், மனவெழுச்சியை யளிப்பதும், திறமையைக், கொடுப்பதும், நோயற்றதும், இன்புறுத்துவதும், உண்ணும்போதே மகிழ்ச்சியைக் கொடுப்பதும், ஆகிய இவைகளைப் பெருகச்செய்பவையும், நல்ல சுவையுள்ளவையும், நெய் எண்ணெய்ப் பசையுள்ளவையும், உடனே ஜீர்ணமாய் விடாமல் (கோதுமை, ரவைபோன்று) அதிக காலம் உடலில் நிலைத்திருப்பதாகிய பொருளையுடையவையும் இன்னும் உண்ணலாமென்று மனதிற்கின்ப முள்ளவைகளுமாகிய உணவுப்பொருள்கள் "ஸாத்விகர்களுக்கு" விருப்பமானவை".

"கட்வாம்பலவணாத்யுஷ்ண தீக்ஷ்ண ரூக்ஷவிதாஹிந:,
ஆஹாரா ராஜஸஸ்யேஷ்டா துக்கசோகாமயப்ரதா:.

"மிகுந்த கசப்பு, புளிப்பு, உப்பு, சூடு, காரம், பசையின்மை, வறண்டது, தாகத்தை உண்டுபண்ணுவது, இவைகளுள்ளதாயும், உடலுக்குத்துன்பத்தையும், உள்ளத்திற்குச் சோர்வையும், உண்டாக்கத்தக்கவைகளாயும் இருக்கிற உணவுப்பொருள்கள் "ராஜஸர்களுக்கு" விருப்பமானவை."

"யாத்யாமங்கதரஸம் பூதிபர்யுஷிதஞ்சயத்
உச்சிஷ்டமபி சாமேத்யம் போஜனம் தாமஸப்ரியம்."

நன்றாய் வேகாததும், சமைத்து நெடுநேரம் (எழரை நாழிகைக்கு மேற்பட்டு) ஆனதும், ஆறிப்போனதும், நாற்றமெடுத்ததும், சமைத்து ஓரிரவு சென்றதும், எச்சிலும், அசுத்தமானதாயுமிருக்கிற உணவுப்பொருள்கள் "தாஸர்களுக்கு" விருப்பமானவை." (இதனால் ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்னும் மூன்றுவகையான உணவுப்பொருள்களும் நன்கு விளக்கப்பட்டுள்ளன.) பகவத்கீதை 17-வது அத்தியாயம், 8-9-10-வது ச்லோகங்கள்.

நாம் பல உண்மையான நற்கருத்துக்களை யறிந்துகொள்ளலாம். ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களின் ஸாமான்ய நிலைமைக்கு "மூலப்ரக்ருதி" என்று பெயர் கூறப்படுகின்றது. எனினும் பிறகு ரஜோகுண மிகுதியாய் அந்நிலைமை மாறுதலடையும்பொழுது முக்குணங்களே இந்த உலகவடிவமாய்த் தோன்றிவிடுகிறதென்று கூறும் "ஸாங்க்ய" மதத்தினரது முடிவான தீர்மானமானது, நாம் உள்ளத்திற் பதியவைத்துக்கொள்ள வேண்டியதாகும். இம்முக்குணங்களே ப்ரக்ருதி அதாவது இயற்கை என்று கூறப்படுகின்றன. குணமும், குணத்தையுடையதுமாயிருப்பவை அவைகளே. ஆதலால் மனித(ரது)உடல் தோன்றுவதற்குப் பொருளும் இம்முக்குணங்கள் தாம் காரணம். அவற்றில் ஸத்வகுண அம்ஸத்தை நாம் நம்மிடத்தில் வளரச்செய்ய வேண்டும். ஏனெனில் ஆத்மஜ்ஞானமானது அபிவ்ருத்தியடைவதற்கு ஸத்வகுண (ப்ரதான) முதன்மையாயுள்ள பொருள்களே மிக இன்றியமையாதனவாக விருக்கின்றன. உடல் பெருத்து வளரவேண்டியோ, (உறுதியடைய வேண்டியோ) நாம் ஏற்றுக்கொள்ளுமுணவுப் பொருள்கள் தாம் நமது உள்ளத்தை (அந்தக்கரணங்களை)யும் வளர்த்து வருகின்றன. ஆதலால் நாம் உண்ணும் பொருள்களிற்றனிமையாக விழிப்பாயிருந்து வரவேண்டும். எனினும் மற்றவைகளிற் கூறுவதுபோலவே இவ்விஷயத்திலும் சில அறிவிலிகளது மூடத்தனத்தி-அறிவின்மையி-னால் நேரிடுங் குற்றங்களை, அவரது ஆசிரியராகிய மேலோரிடத்துக்கூறி வீண்பழி சுமத்துவது ஒருபொழுதுங் கூடாது.

ஆனால் உணவைப்பற்றிய இவ்வாராய்ச்சி முதன்மையானதல்ல. ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகள் இந்த இடத்தையே அவரது உபநிஷத் பாஷ்யத்தில் (பேருரையில்) விளக்கி யிருக்கின்றார்கள். அதில் "உணவு" என்ற சொல்லுக்கு "உண்ணப்படுவது" என்ற ஸாதாரணமான பொருளுக்குப் பதிலாக இன்னும் மேலான வேறு பொருள் ஒன்றை அவர் உண்டாக்கியிருக்கின்றார், அல்லது கண்டுபிடித்திருக்கின்றார். அவரது கருத்துப் படியாதொன்று உண்மையா (ஆந்தரமா)க ஏற்றுக்கொள்ளப் படுகின்றதோ, அது "உணவு" ஒலி முதலிய விஷயங்களை நுகர்வது ("ஜீவாத்மா") நுகர்ச்சியின்பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. "உணவைத் தூய்மையாக்குதல்" என்பதற்கு "ராகத்வே



ஷங்கள் முதலிய பகைக்குணங்களற்றமெய்ப்பொருளையாராய்ந்தறிதல்" என்று பொருள்படும். ஆதலால் இவ்வாறு உணவு தூயதாகிவிடின் அந்த உள்ளத்தில் ஸத்வாம்சமானது தூயதாகி விடுகின்றது; ஸத்வாம்சம் தூயதாதலோடுகூட், எப்பொழுதுமுள்ளவரும், ஈடற்ற "ஒருவரு"மான கடவுளி(ஸாக்ஷாத் பரமாத்மாவி)னுடைய மெய்யான இயற்கை, உள்ளத்தில் நன்றாய்ப் பதிவதன்றி அவரை இடையறாது நினைத்தலு மியற்கையாய்த் தோன்றிவிடுகின்றது?

இந்த இரண்டு விரிவுரை - வ்யாக்யானங்களிலும் ஒன்றுக்கொன்று பொருந்தாத நேர் மாறுபாடானதாகத் தோன்றுகின்றதெனினும், அவையிரண்டும் ஒழுங்கானவையே; அவையிரண்டுமின்றியமையாதனவாகும். மாம்ஸ (புலால்) மயமான ஸ்தூல உடலை, முறைப்படி யடக்குக என்பதைவிட, ஸூக்ஷ்ம உடலை (உள்ளத்தை) யடக்குவது மேலானதென்பதற் கையமில்லை. எனினும் ஸ்தூல உடற்பயிற்சியானது உள்ளத்தினடக்கத்திற்கு இன்றியமையாதது. ஸ்தூல உடலை நன்கு பழக்கினால் மட்டுமே ஒருவர்க்கு உள்ளத்தை யடக்குவதற்கு இயலும். ஆகவே, இரண்டுமின்றியமையாதனவென்றுபொருள். ஆதலால் பக்தி யோகத்தைக் கைக்கொள்ளத் தொடங்குபவர், தன்னிடத்து அன்பும், அருமையும் வாய்ந்த குருவானவர் - உணவைப்பற்றியும், மற்றும் என்னென்ன கட்டளை யிடுகின்றாரோ, அந்த முறைகளைத் தனியாக நன்கு கருத்திலிருத்தவேண்டிய தின்றியமையாதது. ஆனால் அளவற்றதாயும், மிகத் துன்பத்தை யளிப்பதாயுமுள்ள அறிவின்மையினால் இப்பொழுதுள்ள சில கொள்கையினர், தங்களது கொள்கையையும், அன்பையும், அல்லது நம்பிக்கையையும், சமையலறையின் ஓர் மூலையில் கொண்டுபோய் முடித்துவிடுகின்றார்கள். அதனாலேயே ஆத்மப்ரகாசத்தை யடைவதற்கு வேண்டியதான எல்லாவழிகளையும் அழிக்க முயலுகிறார்கள். முடிவில் அவர்கள் "அனாத்மவாதிகளை"ப் போலவும் "சார்வாகக் கொள்கை"யினரைப் போலவும் ஆய்விடுகின்றார்கள். இது ஜ்ஞானமு (அறிவு) மல்ல, பக்தியு (அன்பு) மல்ல, கர்மமு (செய்கையு) மல்ல, ஒருவகை மயக்கம் அல்லது குழப்பமேயாகும். அக்கொள்கையில் விருப்பமுடையவர், ஒருவகைப் பயித்தியக்கார (ரிற்சிறிது வேறுபட்டவ) ரென்றும், அவர் பேரின்பத்தை யடைவதற்கு மாறாகப் பைத்திய வைத்யசாலையை யடைவதுதான் எளி

தென்றும், கூறவேண்டியிருக்கிறது. ஆதலால் யுக்தியாய்ப் பார்க்கும்போது உணவை ஆராய்ந்து கொள்ளுதலானது, உள்ளத்தின் உயர்வையடைவதற்கு மின்றியமையாததென்றும், அது (அந்தக்கரண பரிசுத்தமானது) வேறெந்த வழியாலு மெளிதில் அடையப்படுவதில்லை யென்றுந் தெரியவருகின்றது.

இந்த்ரிய நிக்ரஹத்திற்றான் இனிக் கவலை செலுத்தவேண்டியது ; இந்த்ரியங்களை விஷயங்களினின்றுந் திருப்பி-நீக்கி,-யடக்கி அவற்றினிடத்திலிருத்தி அவற்றை யறிவின் கட்டளைக்குக் கீழ்ப்படியுமாறு செய்யும் முயற்சிதான் ஆத்மஞானாபி வ்ருத்திக்கு (மெய்யறிவைப் பெற்று முன்னேற்றமடைவதற்கு) இன்றியமையாதது. அதன் பிறகு ஆத்ம ஸம்யமத்தை (ப்ரஹ்மஞ்ஞான நிஷ்டையை)ப் பழகவேண்டும் ; மேலான அன்பையுடைய விரும்புபவர் மிகுந்த வருத்தப்பட்டும், இடையறாத பழக்கத்தைக் கைக்கொள்ளாமலுந், தனது ஆத்மாவில் ஈச்வர ஸாக்ஷாத்காரத்தையடைவதில்லை. “மனமானது எப்பொழுதுங் கடவுளை நினைத்துக்கொண்டிருக்கவேண்டும்”; தொடக்கத்தில் உள்ளத்தை எப்பொழுதுங் கடவுள் நினைப்பிலேயே செலுத்துவது மிகவருத்தமாக விருக்கும்; எனினு மிடைவிடாத பழக்கத்தினால், இந்தத்திற - வல்ல-மை சிறிதுசிறிதாக நம்மிடம் வளர்ந்துவிடும். அர்ஜுனனைப் பார்த்து ஸ்ரீ க்ருஷ்ணபகவான் சொல்வதாவது

“அஸம்சயம் மஹா பாஹோமனோ துர்னிக்ரஹஞ் சலம்,
அப்யாஸேனது கௌந்தேய வைராக்யேண்ச க்ருஹ்யதே.”
(ஸ்ரீபகவத்கீதை அத - 6, சுலோ - 35.)

“ஓ! பெருந்தோளுடையாய்! உளமானது அடக்குவதற்கு வருத்தமானதென்பதிலும், அது இயற்கையில் (ஒரு நிலையின்றி எப்பொழுதும்) அலைந்துகொண்டிருப்பதென்பதிலுமையமில்லை. அப்படியிருப்பினும், (இடைவிடாத) பழக்கத்தினாலும், பற்றின்மையினாலும் (சிற்றின்பங்களை வெறுப்பதினாலும்,) உளமானது அடக்கப்படுகின்றது என்று கூறியுள்ளார். பிறகு வேள்விகளைப்பற்றி யாராய்வோம். அவற்றுள் ஐம்பெரும் வேள்வி (பஞ்சமஹாயஜ்ஞங்)களைப் பற்றியமட்டில் (பெரியோரது) வழக்கம் போலக் கைக்கொள்ள வேண்டியதின்றியமையாதது.

“பக்தி” என்ற கட்டடத்தின் அஸ்திபாரம் “சுத்தி” அல்லது “தூய்மை” என்பதாகும். வெளிப்படையாயிருக்கின்ற (புறத்



தூய்மை) சுத்தீகரணமும், உணவையாராய்ந்து தீயவுணவகற்றி ஸாத்விகமான உணவருந்துவதும், எளிதில் நிறைவேறுஞ் செய்கைகளாகும். ஆனால் உளத்தூய்மை (அந்தக் கரண சுத்தி) யின்றி வெளிவேஷமாக எவ்வளவு தொழிற்படினும், அதனால் யாதொரு உதவியு(ம்: பயனு)மில்லை. ஸ்ரீராமானுஜருடைய கருத்துப்படி, (மனதிற்குப்) பரிசுத்தத்தை யளிப்பதான குணங்கள் பின் வருவனவாம்:—“மெய்பேசுதல், உள்ளம் சொல் செயல் இம்மூன்றுமொன்றாக நேர்மையாயிருத்தல், அருளுடைமை, உளத்தினாலாவது மொழியினாலாவது எவ்வுயிரையும் மறந்துங் கனவிலுந் துன்புறுத்தாமை, பிறர்பொருளை விரும்பாமை, வீண் எண்ணங்கட் கிடங்கொடாமை, பிறர்நமக்குச் செய்த துன்பத்தை யுடனே மறந்துவிட்டுப் பிறர்க்கெப்பொழுது மதனை நினையாதிருத்தல் (முதலியன). இவற்றுள் அஹிம்ஸை (துன்புறுத்தாமை)யே மிகச் சிறந்தது. இவற்றுள் “அஹிம்ஸை”யைப் பற்றித்தான் தனிமையாகக் கவலையெடுத்துக்கொள்ளவேண்டும். எவ்வுயிரையுந் துன்புறுத்தாமை என்ற கடமையைக் கைக்கொள்ள வேண்டியது நமது இன்றியமையாத பொறுப்பாகும். சிலர் மனிதரிடத்துமட்டு மன்பு செலுத்தித் தாழ்ந்த உயிர்க(ளாகக் கருதப்படும் புள், விலங்கு முதலிய ப்ராணிக)ளைத் துன்புறுத்தியும், வருகிறார்கள். இது இரக்கமற்ற செய்கையே. வேறுசிலர் (மாடுகன்று முதலிய) ம்ருகங்களையும் பக்ஷிகளையும் அன்புடன் உணவு முதலியன அளித்தும், பாதுகாத்தும் தம்மோடொத்த மனிதரிடத்துச் சிறிது மிரக்கமின்றி மிகக் கொடுமையாய்த் துன்புறுத்துகின்றனர். இதுவு மிரக்கமின்மையே. பல பெரியோர் கைக்கொண்டுள்ள சில நல்ல கருத்துக்களையு மளவு கடந்து போற்றுவதுங் கைக்கொள்வதும் மனிதர்க்கு இகழ்ச்சியையுந் துன்பத்தையுந் தரும். நல்லதென்று பெரியோரா லேற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஒரு செய்கையை மட்டுக்கு மீறிக் கைகொள்ளின், அதனாற் குற்றமே வந்தெய்து மென்பதற் கையமின்று. தங்கள் உடலில் பல உயிர் (ப்ராணி)க ளிருக்கின்றதெனில், தாங்கள் தண்ணீரில் மூழ்கிக் குளித்தலாலவற்றிற்குத் துன்பமுண்டாகும், உடலிலுள்ள (அணுக்ருமி) புழுக்கள் முதலியன இறந்துவிடுமேயென்று அஞ்சி அதனால் ஸ்நானத்தையே விரும்பாத சில துறவிகள், (ஜைனமத ஸன்யாஸிகள் ஸ்நானஞ் செய்வதேயில்லையாம்.)-அவர்-தங்களுடலினின்றுண்டாகும் நாற்றமானது மற்ற மனிதர்க்கு எவ்வளவு

வெறுப்பை யுண்டாக்குகின்றதென்றும், அதனாலெவ்வளவு நோய்க்கிடமாகின்றதென்றும், மற்றுமுள்ள பல கெடுதிகளையு மவர்களெண்ணி யாராய்வதில்லை. அவ்வாறுள்ளவர் வேதத்தில் கூறிய விதி விலக்குகளின் உட்கருத்துகளை யறியாதவர் என்பதி லையமில்லை.

கங்கர்ஜடேசசர்மா.

## லார்ட் லாரன்ஸ்.

தற்காலத்தில் இந்தியர் தாமும் மற்ற நாட்டினரைப் போன்று முன்னுக்கு வரவேண்டும் என்று ஆவல்கொண் டிருக்கின்றனர். சிலர் "இந்தியர் ஒற்றுமையுட னுழைத்து இராஜரீக விஷயங்களில் அதிகாரம்பெற்று தம் நாட்டைத் தாமே ஆளும் பக்ஷத்தில் தாமும் விருத்தியடைந்த மற்ற நாட்டினரைப்போன்று உந்நத நிலைமைக்கு வருவோம்" என்று உரைக்கின்றனர்.

இவ்விதமான கொள்கைகள் சில விஷயங்களில் உண்மையே எனினும் அனுபவத்திற்கு ஏறக்குறைய முற்றிலும் பொருந்தின வாகக் காணப்படவில்லை.

எத்தகைய மேன்மையான ஆக்ஷியும் ஒருநாட்டினரை மேன்மைக்கு முற்றிலும் கொண்டுவர முடியாது. ஏனெனின் அத்தகைய ஆக்ஷி ஏறக்குறைய நன்னிலைமையை அடைய வழிகளைக் காண்பிக்கக் கூடுமே ஒழிய ஒரு ஜனசமூகத்தின் குணங்களை முற்றிலும் மாற்ற முடியாது.

அரசாக்ஷியோ ஜனங்களைக் காப்பாற்றவும் சட்டங்களை ஏற்படுத்தவும் பொது ஜனங்களுடைய அபிப்பிராயங்களை நன்கு கவனித்து நல்லவழியில் செல்ல ஏற்பாடுகளையும் செய்யதல்கூடும்.

ஆனால் அஃது எங்ஙனம் சோம்பேறிகளைச் சுறுசுறுப்புள்ளவர்களாகவும், வீணர்களை உபயோகமுள்ளவர்களாகவும், கர்விகளையும் டாம்பீகர்களையும் கர்வமற்றவர்களாகவும் டாம்பீகமற்றவர்களாகவும் செய்தல்கூடும்?

ஆதலால் ஒரு நாட்டை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர அந்நாட்டிலுள்ள குடிகளே முயற்சிசெய்தல் வேண்டும்; அவர்களே ஆதிகாரணராவர்.



எந்நாட்டில் குடிகள் சோம்பலுள்ளவர்களாகவும், ஊக்கமற்றவர்களாகவும், மனோதைரிய மற்றவர்களாகவும், விடாமுயற்சி யற்றவர்களாகவு மிருக்கின்றனரோ எவ்விதத்தாலும் அந்நாடு விருத்திக்கு வரமுடியாது. இராஜீயச் சீர்திருத்தங்களும் அவர்களை மேலான பதவிக்குக் கொண்டுவர மாட்டா.

இந்தியாவின் விருத்தியும் மேன்மையும் இந்தியச் சிறுவர்களிடத்தேயுள்ளன. இந்தியச் சிறுவர் "உன்னத நிலைமையிலுள்ள நாடுகள் பலவும் ஒரேநாளிலேனுமன்றி ஒரே வருஷத்திலேனும் உன்னதபதவியடைந்துவிட வில்லை" என அறிந்து இடைவிடாமல் ஊக்கத்துடனும் பொறுமையுடனும் உழைத்தல்வேண்டும்.

இகத்தில் கீர்த்திபெறவும், மேன்மை அடையவும், பரத்தில் நற்கதி அடையவும், எத்தகைய இடுக்கண் நேரிடினும் சிறிதும் மனங்குன்றாது, உறுதியுடன் நல்லவழியைப்பற்றி உழைத்தல் வேண்டியது அவசியம்.

எவ்விதமான தொழிலாயிருந்தாலும் அத்தொழிலின்மீது பூரண ஆவல்கொண்டு கடினமா யிருந்தாலும், சிறிதுந் தளராமலும், மயங்காமலும், அதனை ஊக்கத்துடன் செய்வோமாயின் சந்தேகமின்றி நாம் மேன்மையடைவோம்.

புத்தியின் வல்லமையால் தான் ஒருவன் முன்னுக்குவரலாம் என்பது தவறு. சாதாரண அறிவுடைய மனிதர் பலர் தம்வாணாளில் மிக்க உயர்ந்தபதவியை அடைந்திருக்கின்றனர். அதிகப் புத்திசாலியான ஆடவன் ஒருவன் ஒருவேலையும் செய்யாமல் சோம்பலிலேயே உழன்று, ஊக்கமற்றவனாயும் பிடிவாதமாய்ச் செய்யுந் திறனில்லாதவனாயு மிருந்தால் அவன் அளவற்ற புத்திசாலித்தனத்தால் அடையும் பயன்யாது? ஆனால் மந்தபுத்தியுள்ள ஒருவன் மேற்குறித்த குணங்களை நன்றாகப் பயிற்சிசெய்து விடாமுயற்சியுடனும் பிடிவாதத்துடனும்செய்யும் விஷயங்களால் அவன் உலகத்தில அதிக சௌக்கியத்துடன் வாழ்வான் என்பது திண்ணம்.

எத்தொழிலைச் செய்யப் புகுந்தாலும் அதை முழுமனதோடு செய்யவேண்டியது. எவனொருவன் "நான் இதைச்செய்தே முடிப்பேன்" என்று தீர்மானத்துடன், அதனை எளிதில் செய்து முடிக்கக்கூடிய வழிகளைத் தேடிப்பிடித்து பிடிவாதத்துடன் உழைக்கி

ருனே அவன்தான் எடுத்த கருமத்தை முடித்தே தீருவான் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. ஆனாலோ இன்னது ,செய்கிறோம் என்று அறியாமல் மனம்போன போக்கெல்லாம் செய்து ஒருவித சீருமில்லாமல், மனஉறுதியில்லாமல் செய்யப்புகும் விஷயங்கள் ஒருகாலும் சித்திக்குவராது என்பது முக்காலும் உண்மை. பிராஞ்சுதேசத்தில் ஒரு சிப்பாய் "நான் இந்நாட்டிற்குப் பிரதம சேனாதிபதியாவேன்" என்று கூறி அங்ஙனம் அடைவதையே கண்ணுங்கருத்தாகக்கொண்டு உழைத்துப் பின் அவ்வண்ணமே பிரதமசேனாபதியாக ஆனதாக ஓர் ஆங்கில நூலில் வாசித்திருக்கிறோம்.

இவ்விதம் உழைத்து மேலான பதவிக்கு வந்த லாரன்ஸ் பிரபுவின் சரிதத்தைச் சிறிது விசாரிப்போம்.

சிறுவர் பலர் தம்மிளவயதில் உலகப் பயிற்சியின்மையால் கீர்த்திபெற்று பெரியபதவிக்கு வர,முதலில் அனேக நூல்களை யியற்றியும், பெரிய உபந்நியாசங்களைச் செய்தும் தான் வரல்வேண்டுமென எண்ணியிருக்கின்றனர்.

பின்னும் சிலர் அனேக பத்திராதிபர்களும் வாக்சாலகர்களும் பெரிய பதவிகளை அடைந்துள்ளதைக்கண்டு ஐயோ! நாம் அவர் போன்ற பத்திராதிபர்க ளல்லவே! வாக்சாலகத் தனமும் இல்லையே! எங்ஙனம் உலகத்தில் நல்லபதவிக்கு வருவது என்று ஏங்கித் தவிக்கின்றனர். அத்தகைய எண்ணங் கொண்டார் லாரென்ஸ் பிரபுவின் சரிதம் ஓர் மருந்துபோலாகும். நூல்களை இயற்றுவதும், உபந்நியாசங்கள் செய்வதும் அன்றி வெகுநேர்த்தியாய் வர்த்தமானப்பத்திரிகைகள் இயற்றுவதும் தவிர ஏனைய மற்றவிஷயங்களாலும் ஒருவன் நல்லபதவிக்கு வரலாம் என்பதை நன்கு விளக்கிக் காட்டும் ஓர் அழகிய கண்ணாடிபோலிருக்கின்றது அவ்சரிதம்.

இந்தியாவிற்கு அரசரின் பிரதிநிதியாக வந்த பெரிய மனிதர்கள் பலரும் நூலாசிரியர்களாகவோ அன்றி இராஜரீக விஷயங்களில் ஆரம்பமுதற்கொண்டு பழகினவர்களாகவோ விருந்தனர். அதாவது:—வாரன்ஹேஸ்டிங்க்ஸ், வெல்லஸ்லி, டைன்மௌத், மௌண்ட்ஸ்டுவர்ட் எலிபன்ஸ்டன் ஸட்டன், ஆம்ஹரஸ்டு, எல்லன்பரோ, ஹார்டிஞ்சு, டால் ஹௌஸி, கானிங், மேயோ, நார்த்புருக், கர்ஸான், மிண்டோ, ஹார்டிஞ்.



அப்படியிருக்க லாரன்ஸ் பிரபுவோ இவ்வினத்தோரைச் சேர்ந்தவரல்லர். இவருக்கு நூலாசிரியப் பட்டமும் இல்லை. இவர் ஒரு புத்தகமும் எழுதவில்லை. ஆதிமுதற்கொண்டு ராஜரீகப் பழக்கமுண்டோ அதுவுமில்லை. என்றாலும் இவர் ராஜப்பிரதிநிதி உத்தியோகத்தைச் செவ்வனே செலுத்திவந்தார்.

இவர் மிகவும் அனுபவசாலி. புத்தகவாயிலாகக்கண்டு அதன்படி நடப்பவரல்ல. எல்லா விஷயங்களையும் தாமே அநுபவித்துப் பழகி அதன் பயிற்சியால் மேன்மையடைந்தார். இவர் இந்தியாது குணாதிசயங்களை நன்றாக அறிந்துகொண்டு சமயத்திற்கேற்ற யுக்தியுடன் அதிகாரம் செலுத்தினார். இவர் புத்தியால் பிரகஸ்பதியுமல்ல. உயர்தரக்கலாசாலைகளில் சென்று மற்றவரைப்போல் அதிகமாகப் பயின்று பயன் அடைந்தவருமல்ல. இவருடன் பிறந்த சுயமான ஆற்றலே இவரை இந்நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டது. தம்முடைய விடாமுயற்சியாலும் சுறுசுறுப்பாலும் அரிய பல நற்குணங்களை எப்பொழுதும் பழக்கி அதனால் மேன்மை அடைந்தார்.

சிலமகான்கள் தம்மிளவயதிலேயே தம் அறிவின் ஆற்றலைப் பலவிதங்களாலும் காண்பித்துள்ளார்; மற்றும் சிலர் தம்வாலிபத்தில் காண்பித்துள்ளார். ஆனால் லாரன்ஸ்பிரபுவோ இளவயதிலேனும் அன்றி வாலிபத்திலேனும் அத்தகைய அறிவின் வன்மையைக் காண்பிக்கக்கூடிய அறிகுறி ஒன்றையேனும் காண்பித்ததாகத்தெரியவில்லை. நெடுநாள்வரையில் இவரது முக்கியநண்பர்கள் கூட இவர் இவ்வுயர்பதவிக்கு வருவார் என்று எண்ணவேஇல்லை. என்றாலும் ஒவ்வொரு பதவியிலிருந்தும் மெல்லமெல்ல உயர்ந்த பதவிக்கு வந்து கொண்டேயிருந்தார்.

1857 வருஷத்தில் இந்தியாவில் ஒரு பெருங்கலக முண்டாயிற்று. இதுவே சிப்பாய்கலகம். பிரிட்டிஷ் ஆக்ஷிக்கே ஒரு பெரிய ஆபத்து வந்ததுபோற் றோன்றியது. ஆங்கிலேயர் ஆட்சி இத்துடன் முடிந்தது எனப்பலர் எண்ணியிருந்தனர். எங்குப்பார்த்தாலும் அலங்கோலமாயிருந்தது. இத்தருணத்தில் லாரன்ஸ் பிரபுவின் சாமர்த்தியம் வெளிப்பட்டது. ஒரு ஜில்லாவுக்கு மாஜிஸ்டிரேட்டாயிருந்த இவர் படிப்படியாக மகாணக்கவர்னரானார். கலககாலத்தில் தம் விடாமுயற்சியாலும் மனோதைரியத்தாலும் இணையற்ற வீரனாக

விளங்கினார். ஆபத்து அதிகமாக அதிகமாக இவர் மனஉத்ஸாகமும், அமைதியும், மனவன்மையும் அதிகப்பட்டது. கலகத்தை அடக்கினார். இவரது குணத்தையும் சக்தியையும் கவர்ன்மெண்டார் கண்டு கடைசியாக இவரைப் பிரதம தளகர்த்தாக நியமித்தனர். சிலர் சிறியபதவியில் இருக்கும் சமயத்தில் நன்றாகவேலைசெய்யுந் திறமையுள்ளவரா யிருப்பார். அதிக பொறுப்புள்ள சமயங்களில் இன்னதுசெய்வது எனத்தெரியாமல் மயங்கித்தவிப்பர். ஆனால் லாரன்ஸ்பிரபுவோ தாம் மாஜிஸ்ரேட் வேலையை எவ்வளவு ஒழுங்குடனும் சீருடனும் பார்த்துவந்தாரோ அப்புடியே இப்பதவிக்கு வந்தபின்னும் இதனை ஒழுங்குடனும் சீருடனும் பார்த்துவந்தார்.

பொன்னைக்காய்ச்சி அடிக்க அடிக்க அது எங்ஙனம் பிரகாசிக்குமோ அங்ஙனமே ஆபத்திலும், சங்கடத்திலும் இவரது மனவுறுதியும், அமைதியும் விளங்கின.

எத்தகைய குணமிருப்பினும், இல்லாது போயினும் இவரிடத்தில் அரியகுணங்களிரண்டு விளங்கின. அவையாவன: சுறுசுறுப்பும், தீர்மானமும் ஆகியவையே. இக்குணங்களே அவரை மேன்மைப்படுத்தின; இவர் மிக நல்லகுணங்கள் வாய்ந்தவராயிருந்தமையால் சண்டையிலாயினும், சமாதானத்திலாயினும் இவர் மேன்மை விளங்கிற்று.

இவர் நல்ல கிருகஸ்தன்; மாதுரு, பிதுரு பக்தியுள்ளவர்; மனைவியிடத்தில் அதிக அன்புபூண்டு நன்றியுள்ள புருஷனாக விருந்தார். தம்மக்களிடத்தில் அதிக அன்புபூண்டிருந்தார். இவருக்குச் சகோதர வாஞ்சையுண்டு; அரியபல நண்பர்களிருந்தனர்.

கீர்த்திபெற்ற மகான்களில் அநேகர் பொதுஜன விஷயங்களில் களங்கமற்றவரா யிருந்தாலும், தம் குணங்களில் சிலகுற்றங்களை யுடையவரா யிருப்பார்; என்றாலும் லாரன்சு பிரபு மாசுமறுவற்ற குணமுடையுவர். இவரது இராஜரீகத்தந்திரங்களின் கொள்கைகளில் பெரிதும் குறை கூறிவருபவரும் இவருடைய குணங்களில் ஒருவிதக் குற்றமும் கண்டுபிடிக்க முடியாது. ஐரோப்பிய நாடுகளில் வயதுவந்தபின் பெற்றோரைக் கவனிப்பது மிகவும் அருமை. Each man for himself என்கிற வாடிக்கை ஒன்றுண்டு. இந்தியரைப்போல் எல்லோரும் ஒருமித்து வாழ்வதில்லை.

லாரன்ஸ் பிரபுவும் அவர் சகோதரரும் கூடி தம்தாய்க்கு ஒரு நிதி ஏற்படுத்தினார்.



இவர் தெய்வபக்தி யுடையவர் என்றாலும் பலரைப் போன்று பக்திமான் என்று வெளிவேஷம் போட்டுக்கொள்ளவில்லை. தாம் ஈச்வரபக்தியைச் செய்கைவழியே காண்பித்தார். ஈச்வரனுக்குப் பயந்து நடந்துவந்தார். அதிகாரமும் செல்வாக்கும் வந்துற்றகாலையில் கண்தலை தெரியாமல் கூத்தாடுவது அநேகரது இயல்பு; இவர் கீழ்மக்களெனப்படுவர்.

செல்வாக்கும் அதிகாரமும் நீங்கியபின்னரோ இருந்தவிடம் தெரியாமல் பெட்டியிற்பாம்புபோல் அடங்கிநிற்பர். அக்காலத்தில் அவர்க்குப் பாக்கி நின்றவை எவை? அபவாதமும், இழிவுமே! லாரன்ஸ்பிரபுவோ எக்காலத்தும் இன்னிலைமை நீடித்திருப்பதல்லவென எண்ணி நடுநிலைமையுடனிருக்கவேண்டி அதிக பிரயாசப்பட்டுவந்தார். ஆதலின் பஞ்சாபின் குடிகள் இவரை மிகவும் நேசித்தனர்.

இவருடைய நற்குணங்கள் எக்காலத்தும் ஒரே சீராகவிருந்தன. இவருடைய வாணாள் ஏனையபலர்க்கும் ஒரு நீதியைப் புகட்டும் புத்தகம்போலுள்ளது.

நம்மிந்தியச் சிறுவர் இவர்போன்று நற்குணம், சுறுசுறுப்பு, செய்துதான் முடிப்பது என்ற தீர்மானம் முதலியவைகளைச் செவ்வனே பயிற்சிசெய்துவந்தால் மேன்மை அடைவர். இந்தியாவும் இவரால் சீர்பெறும்.

இந்தியச்சிறுவர் முன்னுக்குவர வேண்டுமாயின் குலநலம், சிபார்சு, செல்வாக்கு, திரவியம் இவை அல்லவென்பதை நன்கு கவனித்தல்வேண்டும்.

தாம் பயிலும் பயிற்சியே கடைத்தேறச் செய்யும் என்பதை நன்றாகமனதில் வைத்தல்வேண்டும்.

அப்பொழுதுதான் இந்தியாவும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜர்மனி முதலிய நாடுகளைப்போன்று சீரும் செல்வமும் பெற்றோங்கும்.

K. V. சுப்பிரமணியம்.

## நீதிசாரம்.

### தெரிந்து செயல்வகை.

லோகத்தில் ஒரு கார்யத்தைச் செய்ய முயல்கின்றவர்கள் அதனாலுண்டாகும் நன்மை தீமைகளைக் குறித்து முன்னரே விசாரித்தறிந்து பின்பு கார்ய முயற்சிசெய்து நன்மை பெறல் வேண்டும்.

ஒரு தொழிலைச் செய்வதினால் லாபமும் நஷ்டமு முண்டாவது இயல்பா யிருக்குமாதலால், நஷ்டத்தை மாத்ரம் நோக்கி அத்தொழிலை விட்டுவிடலாகாது. ஆனால் நஷ்ட மிவ்வளவா யிருக்கு மென்றும் லாபமிவ்வளவா யிருக்குமென்றும் தெரிந்து கொண்டு லாபம் அதிகமா யிருக்குமாயின் தொழிலை விடலாகாது; நஷ்ட மதிகமாகக் காணப்படுமாயின் அதை யுடனே விட்டு விடல் வேண்டும்.

ஒரு கார்யத்தைத் தொடங்கும்போதே அதனா லுண்டாகும் லாப நஷ்டங்களின் நீதியையும், அதை நடத்த வேண்டிய விதத்தையும், அதற்கு நேரிடு மிடையூறுகளையும், அவைகளை நீக்கிக் கொள்ளத்தக்க முகாந்தரங்களையும், இவை முதலாகிய கார்யங்களையும் மதியூகத்தினால் பகுத்தறிந்து அக்கார்யத்தைச் செய்ய முயன்றால் பலனை யடையலாம். இவைகளி லொன்று குறைந்தாலும் நஷ்டமடைய வேண்டி யிருக்கும்.

ஒருவன் தான் செய்யுந் தொழில் தனக்கு ஸாத்யமாகு மென்றும் ஆகாதென்றுந் தெரியாமல் தன்னால் நடக்கக் கூடாத அஸாத்யமான தொழிலில் ப்ரவேசித்து அதை முடிப்பதற்கு முயற்சி செய்வானாயின் அவன் கடைசியில் பஹு நஷ்டத்தை யடைந்து கெட்டுப்போவான்.

ஒரு கார்யத்தைச் செய்யக் கருத்துக் கொண்டவன் அதைத் தனக்கு மேலான புத்திமான்களிடத்துச் சொல்லி அவர்களுடைய அபிப்ராயத்தைத் தெரிந்துகொண்டு பின்பு தான் தனியாக விருந்து தகும் தகாதென்று ஆலோசித்துச் செய்வானாயின் அப்படிப் பட்டவனுக்கு எல்லாக் கார்யமும் ஸாத்யமாகும்.

ஒரு கார்யத்தைத் தொடங்குவதற்கு முன்னமே அதைக் குறித்துத் தகுந்தபடி யோசித்துத் தொடங்க வேண்டும். அப்படியல்லாமல் தொடங்கிய பின்பு ஆலோசிப்போமென்று ஆலஸ்யமாக விருந்துவிட்டால் அதனால் நேரிடுந் துன்பத்தைக் குறித்துத் துயரமுறல் வேண்டும். ஆதலால் எக்கார்யத்திற்கும் முன் யோசனை வேண்டும்.

யாவராலும் அங்கீகரிக்கப்படும்படியான கார்யத்தை யெண்ணிச் செய்வதே தர்மம். அப்படிச் செய்தா லதற்கு யாவரும் ஸந்தோஷமாகவே ஸஹாயம் செய்து அக்கார்யத்தை முடிவு பெறும்படி செய்வார்களே யல்லது இகழ்ச்சி செய்யார்கள். தகாத வீண்கார்யத்தைச் செய்ய முற்படின், அதற்கொருவரு முடன்படாம விருப்பது மல்லாமல் யாவருங் கைகொட்டி நகைப்பார்கள்.

ஆதலால், ஒரு கார்யத்தைச் செய்யத் தொடங்குவதற்கு முன்னரே அதுதகும் தகாதென்று தெரிந்து செய்தல்வேண்டும்.

### பொச்சாப்பு.

பொச்சாப்பெனப்படும் மறதி யாரிடத்தி லிருக்கின்றதோ அவர்களுக்குள்ள எல்லாச் செல்வமும் சிறப்பும் அழிந்துபோகு மென்று முன்னோ ருரைத்திருக்கிறார்கள்.

மறதி யென்பது தீராக் கோபத்தைப் பார்க்கினும் கொடியதாம். அதைப் பற்றற வொழித்தவனுக்கு ஏனைய துர்க்குணங்களிருந்தாலு மவைகளை நீக்கவேண்டு மென்கிற ப்ரயத்னம் வேண்டுவதில்லை. ஏனெனில், மறதி யென்னும் ஓர் குணத்தை நீக்குவதினால் மற்றவை தமக்குத் தாமே விலகிப்போய்விடும்.

ஒருவனை வருத்திக் கொண்டிருக்குந் தரித்ரம் அவனது அறிவை மழுங்கவைத்துக் கொண்டிருப்பதுபோல, மறதியென்னுந் துர்க்குணம் ஒருவனிடத் திருக்குமாயின், அது அவனுக்குண்டாகும் ப்ரயோஜனங்களைக் கெடுத்து அவனைத் தரித்ரத்தில் வருந்தும்படி செய்யும்.

மறதி யென்னும் மனச்சோர் வுடையவனுக்குக் கார்யத் தாழ்வு நேரிடுமென்பது யாவர்க்கும் அநுபவமா யிருக்கும். அஃதெப்படியெனில், ஒருவன் எந்தக் கார்யத்தை எப்போது செய்ய வேண்டுமோ அந்தக் காலத்தை மறந்துவிடுவானாயின் அதனாலவனுக்குக் கார்யங்கெடுவதுமன்றி உத்தேசித்தபலனுங் கைகூடாது.

பின்னர் வரப்போகிற துன்பத்தை முன்னமே யறிந்து தப்புவித்துக்கொள்ள வேண்டிய யத்னத்தைச் செய்யாமல் மறதியினுல் சும்மா யிருப்பவன் துன்பத்தை யடைவானென்றும், அம்மறதிக் கிடங்கொடாமல் கவனத்தோ டிருப்பவன் துன்பத்திற் குள்ளாக மாட்டானென்றும் சொல்லப்பட் டிருக்கின்றது.

மனச்செருக்கினு லுண்டாகும் மறதி சிறப்புடைய ஸத்காரியங்களை யிழந்துவிடச் செய்யுமாதலா லதையுணர்ந்த நல்லோர் அம்மறதிக் கிடங்கொடார்கள். ஏனெனில், அம்மறதிக்கிடங் கொடுப்பதே கேட்டுக்கிடங் கொடுத்ததாகு மென்பதினுலேதான்.

ஒரு பொருளை யடைய விருப்பங் கொண்டவன் மறதியாகிய சோர்வைத் தன்னிடத்தி லில்லாமல் ஒழித்துவிட்டால்தான் அவனுக்கு அப்பொருள் கைகூடும்.

ஆதலால், மனதுக்குச் சோர்வைத்தரும் மறதியைத் துறந்துவிடும் புத்திமானுக்கு எல்லா நன்மையுந் தாமே வந்துகூடு மென்கிற ப்ரமாணத்தை யாவருங் கைக்கொள்ளல் வேண்டும்.

## வைகறைத் துயிலெழுதல்.

சரீர சுகத்திற்கு நித்திரை இன்றியமையாதது; ஆயினும் பொழுதோடு படுத்துறங்கிப் பொழுதோடு விழித்தெழுந்தால் நன்மை உண்டாகும் என்பதை எவரும் மறக்கவொண்ணுது.

இவ்வுலகத்தில் சீரும் சிறப்பும் சௌக்கியமும் சம்பத்தும் வாய்ந்த பெரியோர்களுடைய ஜீவிய சரித்திரத்தை வாசிக்கின் அன்னுரிற் பெரும்பாலார் அதிகாலையில் எழுந்திருக்கும் வழக்கத்தைக் கைக்கொண்டவர்களென்றும், அவ்வித முக்கிய வழக்கம் அவர்களிடத்திலிருந்த தன் நிமித்தமே அவர்கள் உன்னத நிலையுற்றனர் என்றும் தெரிபவரும்.

நம் முன்னோர்களிடத்தும் தற்காலத்தில் சில கிராமாந்தரங்களிலுள்ளோரிடத்தும், "வைகறைத் துயிலெழும்" வழக்கமுண்டென்பதை நாம் நன்கறிவோம். இன்றும், நாட்டுப் புறங்களில் அந்தணோத்தமர்களும் பிறரும் வைகறையாமந் துயிலெழுந்து புனலாடி இந்திராக்ஷி சிவகவசம் தேவாரம் திருவாசகம் திருவாய்மொழியாதிய இசைப்பதும் தேவாலயங்களில் திருப்பள்ளியெழுச்சி முதலியன நடத்துவதும் அறியாதார் யார்?



ஆயினும் பெரும்பான்மையோர் விடிந்து 8 - மணிவரையும் கமகம என்று துப்பட்டியைப் போர்த்துக்கொண்டு தூங்குகின்றனர். 9-மணிக்குப் பின்னும் உறங்கும் உத்தமர்களுமுண்டு. இன்னுர் காலை விழிப்பின் நற்பயனை யறியாததனுலோ அல்லது சோம்பேறித் தனத்தாலோ இவ்வாறு செய்து வருகின்றனர். இவ்வாறு தூங்குவது தவறு. ஆதலின் பொழுது புலருமுன் எழுதலால் உண்டாகும் நன்மைகளையும் எழாது படுத்துறங்குதலால் நேரும் தீமைகளையும் ஒருவாறு விளக்கிக் காட்டுவாம்.

வைத்தியசாஸ்திர நிபுணர்கள்,

"புத்தி யதற்குப் பொருந்து தெளிவளிக்குஞ்
சுத்த நரம்பினற் றூய்மை யுறும்—பித்தொழிந்
தாலவழி வாதபித்தம் தத்தநிலை மன்னும் அதி
காலைவிழிப் பின் குணத்தைக்காண்"—என்றனர்.

இதன்பொருள் யாதெனில், அதிகாலையில் விழிப்பவர்களுக்குப் புத்திக்குத் தெளிவை யுணர்த்துகின்ற "சுத்த நரம்பு" என்ற ஒருவித நரம்பினது துவாரத்தில் நிறைந்திருக்கிற நீரானது கலங்கலின்றி பரிசுத்தமாயிருக்கும். பைத்தியம் கோபம் இவை நீங்கும். வாதமும் பித்தமும் சிலேஷ்மமும் தத்தம் இடங்களிலேயே பொருந்தும் என்பதே.

இரண்டாவது:—காலைப்பொழுதிற்முன் இராத் தூக்கத்தின் பயனுகை புத்திகளங்கமற்றும் சரீரம் களைப்பற்றும் இருக்கும். அதுவே வெய்யோன் கிரணம் வெளிப்படாக் காலம். வீங்கிளந் தென்றல் வீசும் நற்சமயம். ஆதலின் படியாத விஷயங்களைப் படித்தற்கும் படித்த விஷயங்களைச் சிந்திப்பதற்கும் ஏற்ற தருணமாகும். இதுபற்றியே வேதாத்தியயனம் பண்ணுவோர் பாடகர்கள் தேகப்பயிற்சி செய்வோர் முதலிய சகல வித்தியார்த்திகளும் சிரமப்பட்டு அதிகாலையில் எழுந்து தத்தம் வித்தையை முற்காலத்தில் கற்முர்கள். இன்றும் கற்று வருகிறுர்கள்.

மூன்முவது:—மலஜலங்கள் கழிப்பதற்குத் தக்க தருணம் காலைவேளையே. அப்பொழுது நித்திரை செய்தால் அவை வெளியாகாமல் வயிற்றில் தங்கிவிடும். இவ்வாறு தங்குவதால் பலவித வியாதிகள் உண்டாம். அவற்றைக் காலாகாலத்தில் கழித்துவிட்டாலோ எவ்வித் துன்பமும் இராது.

நான்காவது:—இருட்டுவேளையில் நாம் துயிலொழிந்தெழுந்து இரண்டொரு நிமிஷம் கழித்து மினுக்கு மினுக்கெனச் சிற்றொளி காட்டும் ஓர் விளக்கைப் பார்க்கின் நம்கண் கூசமாட்டாது. அவ்விளக்கொளியை வர வரப் பெரிதாக்கிய காலத்தும் கண்ணுக்கு எவ்வித அதிர்ச்சியும் உண்டாகாது. இவ்வாறன்றி விழித்தும் விழியாததும் திடீரென்று கொழுந்து விட்டெரியும் தீவர்த்தி ஒளியைப் பிடித்தால் கண்ணுக்கு எவ்வளவு கூச்சமும் அதிர்ச்சியும் உண்டாகும்? அற்பநெருப்பைப் பார்த்தலே கண்ணுக்குக் கெடுதி எனின் பெரிய அக்கினிப் பிழம்பாகிய சூரியனை எட்டு மணிக்குப் பின் காண்டல் கண்ணுக்கு எத்துணைக் கேட்டைத் தரும்? ஞாயிறு உதித்திடும் முன்னே எழுந்து சிறுவெளிச்சமுள்ள இள வெயிலை முதலிற் கண்ணுற்று வரவர அதன் சுடுகொடுங்கதிரை கண்ணுறினே கண் சிறிதும் கெடாது. இது பற்றியே சர்வஞ்ஞரான கடவுள் பகலுக்குப் பின் இரவும் இரவிற்குப் பின் பகலும் வரும்போது இவ்விரண்டிற்கும் இடையில் அந்திசந்திகளை ஏற்படுத்தியிருக்கிறார். இவ்வந்திசந்திகளை ஆங்கிலத்தில் 'ட்வைலட்' (Twilight) என்பர். "Twilight" என்ற பதத்திற்கு (Two lights) இரு வெளிச்சம் என்பது பொருள் [அஃதாவது பகலும் இரவும் சந்திக்கும்போதுள்ள வெளிச்சம்]

ஐந்தாவது:—கோழி காக்கை வானம்பாடி யாதிய பட்சிசாலங்கூட அதிகாலையில் எழுந்து உல்லாசமாய் இனிய குரலுடன் பாடும்போது அறிவுடையோராகிய மனிதர் அக்காலத்தைத் தெய்வ ஸ்துதியிலும், மனோநாசஞ் செய்வதிலும் பற்பல காரியங்களில் சித்தி பெறுவதிலும் செலவுசெய்யாமல் நமது சரீரத்துச் சுத்த நரம்புக்கும் படிப்புக்கும் பயிற்சிக்கும் வேண்டாகத் தூங்குவது எவ்வளவு அயுக்தமான விஷயமாம்.

ஆறாவது:—வைகறை தேவர்களுக்குரிய காலமாதலால் இதில் நித்திரை செய்யின் தேவசாபமுமுண்டாகும். அச்சாபத்திற்குள்ளாகாதபடி தக்க நேரத்திலேயே எழுந்திருத்தல் வேண்டும்.

ஏழாவது:—ஒவ்வொருவரும் மலஜலம் கழித்துப் பல் தேய்த்து முகம் கழுவி ஸ்நானம் செய்து தாங்கள் முன்பு உடுத்த வஸ்திரத்தைத் தோய்த்து சுத்த உடையணிந்து நித்திய கர்மானுஷ்டானம் பூஜை முதலியன முடித்து காலை உணவருந்துவதற்கே சுமார்



1-மணி அல்லது $1\frac{1}{4}$ மணி நேரமாகும். 7 அல்லது 8 வரை தூங்கிப் பின்பு இவற்றைச் செய்தால் 9 மணியாவது ஆகுமல்லவா? இதற்கே 9-மணியாய் விட்டதால் பிறகாரியங்களை எப்பொழுது பார்க்கிறது? இக்காரியம் யாவும் நாம் வயிற்றுப்பாட்டின் நிமித்தம் உழைத்துப் பொருள் தேடச்செல்லுமுன் முடியவேண்டியவைகளன்றோ? ஆதலின் தத்தம் சரீரத்தைப் பொறுத்த இவ்வின்றிமையா வேலையைச் செய்யும் பொருட்டாவது அதிகாலையில் எழுந்திருக்க வேண்டாமா?

இவற்றையெல்லாம் நன்குணர்ந்தன்றோ உலகத்தார்க்கு நீதிநூற் பொருட்களை நுணுக்கமாகச் சிறுசிறு வாக்கியங்களால் வெளியிட்ட ஒளவையார், 'வைகறைத் துயிலெழு' என்று கட்டளையிட்டுள்ளார்; ஆயினும் இந்நீதியை இளமை தொட்டே கற்ற அநேகர் கற்றறி மூடராகிய நெடுந்துயில் கொள்ளுகிறார்களே! ஈதென்ன பரிதாபம்! இந்தத் துர் வழக்கத்தால் வரும் பெரிய நஷ்டத்தை ஒரு உதாரணத்தால் உணர்த்துவோம்: ஒரே வேளையில் படுத்துறங்கும் இருவருள் ஒருவன் மட்டும் பிரதிதினமும் 5-மணிக்கும் மற்றவன் 7-மணிக்கும் எழுவதாக எண்ணுவோம். இவ்வாறு நாற்பது வருஷம் நடந்துவந்தால் நாள் ஒன்றுக்கு 2-மணி வீதம் 29,000 மணிநேரம் வித்தியாசப்படுமன்றோ? இரண்டு மணிநேரம் தாமதித்து விழிப்பதால் உண்டாகும் வித்தியாசம் இவ்வளவாயின் 8-மணிக்கு எழுந்திருப்பின் 43,500 மணிநேரம் அல்லவா வித்தியாசப்படும்? பெருந்துயில் கொள்வோன் விழித்திருப்பானாயின் அவன் இத்தனைமணிநேரங்களில் எவ்வளவு காரியங்களைச் செய்திருத்தல் கூடும்? அவன் மாணாக்கனாயிருப்பின் எவ்வளவு கல்விப்பொருளும், வணிகனாயிருப்பின் எவ்வளவு செல்வப்பொருளும் பெற்றிருக்கலாம் பாருங்கள்!

இதுகாறும் கூறியவாற்றால் அதிகாலையில் எழுவதாலுண்டாகும் நற்பயன்களும், எழாததால் வரும் தீமைகளும் பச்சைமரத்தறைந்த ஆணிபோற் படிப்போர் மனதிற் பதிந்தேயிருக்குமென்றெண்ணுகிறோம்.

"ஆ! ஆ! இவ்வுண்மைகளை ஓராமல் இதுகாறும் நமது வாணாளை வீணாளாகக் கழித்துத் தூங்கித் தொலைத்தோமே" என்று அநேகர் வருந்துதல்கூடும். அவ்வாறு வருந்துவோர்க்கு நாம் சொல்லும் புத்திமதி ஒன்றுண்டு, சென்றுபோன காரியத்தை

நினைந்து நினைந்து நெஞ்சம் புண்ணாவது வீண். (ஏனெனில் சென்றநாட்கள் என்றும் வாரா.) இனியேனும் இயன்றவரை இத்தூர் வழக்கத்தை ஒழிக்கப் பாடுபடுவதே அறிவிற்கடுத்ததாம். "வருந்தினால் வாராதது ஒன்றுமில்லை." நிற்க.

அதிகாலையில் தூங்கித் தூங்கிக் காலத்தைக் கழித்தோர் பலர் வைகறையில் எழவேண்டும் என்று எவ்வளவோ உறுதியாகத் தீர்மானித்துக்கொண்டபோதிலும் அவர்களுக்கு, அக்காலத்தில் துயிலொழிந்தெழ இலேசில் மனம் வாராது. அவர்களை எழுப்பினாலும் ஏதாவது சாக்குப் போக்குகள்சொல்லி உறங்கவே செய்வர். அல்லது எழுப்புவோரது தொந்தரவு பொறாமல் எழுந்தும் அவர்களை மனதிற்குள் வைதுகொண்டே ஓர் மறைவிடந் தேடி ஆங்கு முடங்கிக்கிடப்பர். இன்னோர் பிரஷியாதேசத்தை ஆண்ட "மகா" பிரடரிக்கின்" நன்மாதிரியைப் பின்பற்றினால் மிக்க நன்மையுறலாகும்

இம்மகான் தாம் அதிகாலையில் தூங்கும் தூர்வழக்கத்தை அறவே ஒழிக்கத் தீர்மானித்துத் தம்மைச் சுமார் 4½-மணிக்கே எப்படியேனும் எழுப்பிவிடும்படி ஒரு கட்டளையிட்டனர். இக்கட்டளைப் பிரகாரம் வேலைக்காரனும் மறுதினத்தில் குறித்த வேளையில் மகாராஜாவை எழுந்திருக்கும்படி கேட்டுக் கொண்டான். ஆயினும் கரும்புபோன்ற நித்திரையினின்றும் எழ அவர்க்கு மனம் எழாதது கண்டு வேலைக்காரனும் அவரைத்தொட்டு எழுந்திருக்கவேண்டும்" என்று கெஞ்சினான். அப்போது அரசருக்கு எழ மனம் வராமல் அரைத்தூக்கத்துடன் 'அடா! என்னைத் தொந்தரவு செய்யாதே மிகச் சிரமமாக இருக்கிறது. சற்றுநேரம் கழித்து என்னை எழுப்பு" என்றார். வேலைக்காரனோ அஃதெல்லாம் முடியாது. இப்பொழுதே தங்களை எழுப்பிவிட எனக்கு உத்தரவு. ஆதலால் அதன்படியே நான் செய்து தீருவேன். தாங்கள் எழுந்தே தீரவேண்டும் என்றான். அரசர் மூடிய கண்ணுடனேயே நீ சொல்லியது சரியே ஆயினும் இன்னும் அரையே அரை நாழிகை என்னைத் தூங்கவிடு பின்னர் என்னை எழுப்பு என்றார். ஆயினும் வேலைக்காரன் அப்படி உங்களுக்கு இடந்தர எனக்கு உத்தரவில்லை" என்று கண்டித்துக்கூறி பின்பு அரசர் தன்னிடம் சொல்லி வைத்திருந்தபடி ஓர் கைச்சவுக்கத்தை எடுத்து அதைப் பனிபோற் குளிர்ந்த நீரில் நனைத்து வேந்தனுடைய முகத்தில் மூடினான். அரசர் குளிர்பொறாமல் தக்ஷணமே எழுந்து



முதலில் வேலைக்காரன் மீது கோபங்கொண்டனர். ஆயினும் அக்கோபம் நீர் கிழியவெய்த வடுப்போல மாறிற்று. மாறவும் அவர் வேலைக்காரனை விளித்து "அப்பா! நீ அதி தைரியசாலியே உன்னைப்பிடித்த நல்லவேளையே என்னை எழுப்பினை. என்னைமட்டும் தூங்கவிட்டிருந்திருப்பாயாயின் நீ படும்பாடு சொல்லமுடியாது. உன் தலையை வாங்கியே யிருப்பேன் என்று சொல்லி வேலைக்காரனின் துணிகரச் செயலைப் பலவாறு வியந்தோதினர். இவ்வாறு இரண்டொரு நாட்கள் செய்யவே அவ்வரசன் காலையில் துயிலும் வழக்கம் நீங்கி எவரும் எழுப்பாமலே வைகறைத் துயிலொழிந்தெழுந்தனர். நிற்க.

அதிகாலையில் எழவிருப்பமுடையோர் சுத்த வீரரும் ராஜதந்திர நிபுணரும் நூலாசிரியருமான இப்பிரடரிக் அரசரின் சரித்திரம் மட்டுமேயன்றி மகா அலெக்சாந்தர், நெப்போலியன், கிராஞ்சி, ஹானிபால், உவில்லியம், ஜேம்ஸ் பண்டிதாரதி பலருடைய சரித்திரத்தையும் படித்துணர்க.

இனிக் கடைசியாக இண்டொரு வார்த்தை கூறி விஷயத்தை நிறுத்துவோம்.

(இரவிற்) சீக்கிரம் படுத்துறங்கிக் (காலையிற்) சீக்கிரம் எழும் வழக்கத்தால் ஒருவனுக்குத் தேகாரோக்கியமும் திரவியலாபமும் தெள்ளறிவும் உண்டாகும்" என்னும் முதுமொழியை யாவரும் மறவாமல் இளமைதொட்டே,

'வைகறை யாமந் துயிலெழுந்து தான் செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதிற்
றந்தையும் தாயும் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை."

என்பதைக் கடைப்பிடித்து வைகறையாகிய பின்சாமத்தில் விழித்துக்கொண்டு செய்தற்குரிய கருமங்களையும் (நல்வழியில் திரவியம் சம்பாதித்ததற்கு வேண்டிய மார்க்கங்களையும் நன்காய்ந்து பின்பு தக்க விதத்தில் தாய் தந்தையரைத் தொழுதெழுந்து எக்காரியத்தையும் செய்யத் தொடங்கல்வேண்டும்.

" காட்டுக்களைந்து கலங்கழீஇ இல்லத்தை
ஆப்பீநீர் எங்குந் தெளித்துச் சிறுகாலை
நீர்ச்சால் கரகம் நிறைய மலரணிந்து
இல்லம்பொலிய அடுப்பினுள் தீப்பெய்க
நல்ல துறல்வேண்டு வார்."

என்பதை அனுசரித்து, மகளிர், அதிகாலையில் எழுந்து மங்களகரமாக வீட்டை விளக்கிச் சாணிநீர் தெளித்து மெழுகிப் பாத்திரங்களைச் சுத்திசெய்து பெரிய நீர்ச் சால்களிலும் சிறிய கரங்களிலும் மலர்களையிட்டுப் பிறகு அடுப்பில் நெருப்பு மூட்டிச் சமைக்கத்தொடங்குவார்களாயின் செல்வம் ஆரோக்கியம் முதலான சகல சம்பத்துக்களு முண்டாகுமென்பதற்கு ஐயமில்லை.

"லோகோபகாரி".

## யுத்தம்.

இப்போது மேற்கரங்கத்திலும், இத்தலியிலும், ஆசியாத் துருக்கியிலும் பலமான சண்டை நடந்துவருகின்றது. மேற்கரங்கத்தில் பிரிட்டிஷாரும், பிரெஞ்சுக்காரரும் ஜெர்மானியரை மிகு உக்ரமாக எதிர்த்து, அவர்களைப் பின்னடையச்செய்து வருகின்றனர்; பிரிட்டிஷார் ஹின்டன்பர்க் போர்முகத்தைப் பிளந்து கொண்டு 6 மைல் தூரம் பிளாண்டர்சில் பிரவேசித்துவிட்டனர். இந்த வெற்றி ஜெர்மானியர்க்கு மிகுதியும் பாதகமாக முடியும். ருஷ்யாவில் அமிதவாதிகள் ஆக்ரமித்து, புரொவிஷனல் கவர்ன்மெண்ட் கட்சிக்காரரை யடக்கிவிட்டனர். அமிதவாதிகள் உடனே யுத்தத்தை நிறுத்தி ஜெர்மானியருடன் சமாதானஞ் செய்துவிட முயற்சிசெய்து வருகின்றனர். ருஷ்யாவில் நேர்ந்திருக்கும் குழப்பத்தினால், அங்குச் சண்டை நடப்பது நின்றிருக்கின்றது. அதனால் ருஷ்யப்போர்முகத்தி லிருந்த ஆஸ்டிரிய - ஜெர்மன் சேனைகளெல்லாம் இத்தலியப் போர்முகத்திற்கு வந்து இத்தலியரைப் பின்னடையச் செய்து, இத்தலியுள் பிரவேசித்துவிட்டன. இத்தலியர் மிகு வீரதீரமாகச் சண்டைசெய்து வருகின்றனர்; பகைவரைப் பின்னும் முன்னேறவொட்டாமல் செய்து வருகின்றனர். பகைவர் உடைன் நகரத்தைப் பிடித்துக்கொண்டு, வெனிஸ் நகரத்தைப் பிடித்துவிட முயற்சிசெய்து வருகின்றனர். வெனிஸ் நகரம் முன் ஜாக்கிரதையாகக் காவிசெய்யப்பட்டு வருகின்றது. இத்தலியின் உதவிக்காகப் பிரிட்டிஷ் - பிரெஞ்சுச்சேனை சென்று கொண்டிருக்கின்றது. ஆசியாத் துருக்கியில் பிரிட்டிஷார் துருக்கியரைத் தாக்கி அவர்களைப் பெரிதும் பின்னடையச்செய்து வருகின்றனர்; ஜெருசலம் நகரம் பிரிட்டிஷார் வசமாகிவிடுந் தருணத்தி லிருக்கின்றது.

6-APR 1918
MADRAS

# சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL -13 } தொகுதி- 13 } December-1617. டிசம்பர் மீ 1917. { No - 5. { பகுதி – 5.

## நாலடியார் வசனம்.

### 5-வது தூயதன்மை.

அஃதாவது உடம்பு தூயதன்றெனக் கூறல். செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை யென்பவற்றை நன்குணர்ந்து அறத்தைச் செய்பவர்க்கன்றி மற்றவர்க்கு உடம்பின் அசுத்தம் தோன்றாமையின் அவ்வியைபு பற்றி, இஃது அறன் வலி யுறுத்தலின் பின் வைக்கப்பட்டது. அறத்தை முறையாகச் செய்பவரது மனம் தெளிந்த நீர்போலச் சுத்தமுடையதாமாகலின், அதனால் அவர் உடம்பின் தூயதன்மை (சுத்தமில்லாத தன்மை) யை யறிதற்குரியவ ராகின்றன ரென்பதாம். தூயது – பரிசுத்த முடையது.

உடம்பு ரணவடிவமா மெனல்.

(1) உடம்பிலிருந்து ஓரீயினது இறகள வானதோர் தோல் நீங்கினாலும், (அதனைக் கொற்றவரும்) காக்கையை ஓட்டுவதற்கு ஒரு கோல் வேண்டுவதா யிருக்கின்றது; அதனால், (போகப் பிரியத்தால்) மாந்தளிரி னிறத்தை யொத்த மேனியையும் இளமையையு முடைய பெண்ணே என்று கதறியழைக்குஞ் சான்றவர் தாம் புகத்தக்கதோர் வீட்டினை நுண்ணறிவால் நோக்கா திருக்கின்றனர்; (நோக்குவாராயின் அவ்வாறு கதறி யழையார்).

தாம் புகத்தக்க தோர்வீடு – தாம் இறந்த பின் அடைதற்குரிய புண்ணிய லோகம். சான்றவர் என்பது இங்கு இகழ்ச்சிக்

குறிப்புச் சொல் : அஃதிங்குக் குணங்களால் நிறைந்தவ ரென்னும் பொருளுணர்த்தாது, அறிவீனரென்னும் பொருளுணர்த்தி நின்றது.

(க–து.) நம் முடம்பினுள்ள தோலின் மிகச்சிறிய பாகம் நீங்கினாலும் அதனைக்கொத்த காக்கையை யோட்டுதற்கு ஒரு கோல் வேண்டப் படுவதாகின்றது; அதனால் உடம்பின் நிறத்தை (மினுக்கைக்) கண்டு மயங்கிக் கெடுதல் கூடாதென்பதாம்

உடம்பின் மீதுள்ள ஆசை அதனைப் பைம்மறியாகப் பார்த்தலால் நீங்கிப்போ மெனல்.

(2) உடம்பானது தோலாகிய போர்வையை மேலே யுடையதாயும், பல துவாரங்களை யுடையதாயும், (உள்ளேயிருந்து கசிகின்ற) அசுத்தங்களை மறைக்கும் மேற் போர்வையை யுடையதாயுமிருப்பதனால் மாட்சிமை யுடையதாகத்தோன்றுகின்றது; ஆனால், மேற் போர்வையானது அசுத்தங்களை (மறைத்து)க் (கொண்டிருப்பதைக் கண்டு அவ்வுடம்பின் மீது) விருப்பங்கொள்ளாமல், அவ்வுடம்பைப் பையைத்திருப்பி (பார்ப்பது போல)ப் பார்த்தால் (அதன் மீதுள்ள ஆசை முற்றும்) ஒழிந்து விடும்.

மேற் போர்வை–மீந்தோல்; அது வழக்கத்தில் பீந்தோல் என்று சொல்லப்படுகின்றது.

(க–து.) கோணிப்பை முதலியவற்றைத் திருப்பிப்பார்ப்பது போல உடம்பை யூகத்தால் திருப்பிப் பார்த்தல் வேண்டும்; பார்த்தால் அதன்மீது பிரியமுண்டாகாதென்பதாம்.

உடம்பு தூர்க்கந்த முடையது.
அஃதெதனாலும் நீங்காதெனல்.

(3) கல்வி கேள்வி யறிவு ஒழுக்கங்களால் பெரியாராயினோர் எப்போதும் உணவுண்ணுந் தொழிலால் துர்க்கந்தம் வீசிக்கொண்டிருப்பதென்றறிந்து (இது நமக்குஇனி வேண்டாமென்று வெறுத்துத்)தள்ளிவிட்டது உடம்பாம்; அதற்குத் தக்கோலத்தைத் தின்று தலைநிறைய மலர் மாலையைத் தரித்துப் பொய்யான அலங்காரத்தைச் செய்தால் (அத்துர்க்கந்தம்) நீக்கிப்போமோ? (போகாது, போகாது).

பெரியார் உடம்பைத் தள்ளிவிடுதலாவது.
அதன் மீதுள்ள அபிமானத்தை விடுதலாம்.

பொய்யான அலங்காரம்-இயல்பாக ஒரழகின்றியிருக்கவும், அஃதிருப்பதாகக் காட்டல். தக்கோலந்தின்றல்—தாம்பூலம் போட்



டுக்கொள்ளுதல். ஏலம், வால்மிளகு, வெற்றிலை யென்னும் மூன்றும் தக்கோலமெனப்படும். இவற்றைப் பாக்கோடு தின்னல் இங்குத் தக்கோலம் தின்னலாம்.

(க–து.) உணவிடுந்தோறும் துர்க்கந்தமே வீசிக்கொண்டிருக்கும் உடம்பு தாம்பூலம் தரிப்பதாலும், பூச்சூடுவதாலும், நல்ல ஆடைதரித்தல் ஆபரணந்தரித்தல் முதலிய அலங்காரஞ் செய்வதாலும் துர்க்கந்தமில்லாதிருப்பதில்லையாம்; அதனால் அதன் மீது பிரியம் வைத்துக்கெடுவது கூடாதென்பதாம்.

கண்ணிற்கழகு இல்லையெனக்கூறல்.

(4) உள்ளே யிருக்கின்ற நீரை யெடுத்து விட்டால் நுங்கைத் தோண்டி யெடுத்தாற் போன்றிருக்கின்ற கண்ணின் தன்மையை யறிந்தொழுகும் யான் அது (தெளிவாய நீரினுண்டாய) கருங்குவளை மலரை யொத்திருப்பது;(போர் செய்கின்ற) கயல்மீன்களை யொத்திருப்பது; வேற்படையை யொத்திருப்பதென்று அறிவில்லாத கீழ் மக்கள் (கூறி என்மனத்தைக்) கவலைப்படுத்த (அதனால் துறவறத்தை) விட்டுவிடுவேனோ? (ஒருகாலும் விடமாட்டேன்).

இது துறவறம் பூண்ட நல்லொழுக்கமுடையா னொருவன் தன்னிடத்து வந்து மங்கையரின் கண்களைச் சிறப்பித்துக் கூறிய ஒரு வித்துவானை வெறுத்துக் கூறியதாம்.

(க - து.) உள்ளேயுள்ள நீரையெடுத்து விட்டால் நுங்கைத் தோண்டி யெடுத்தாற்போலத் தோன்றுங் கண்களைக் கருங்குவளை மலர் முதலியவற்றிற் கொப்பாமென்று வியந்துகூறி மயங்கிக் கிடப்பது நன்மை தருவதாகா தென்பதாம்.

பல்லிற்கழகு இல்லையெனக் கூறல்.

(5) யாவரும் காணும்படி சுடுகாட்டில் உதிர்ந்து சிந்திக்கிடக்கின்ற பல்லாகிய எலும்பினைக் கண்டு (வெறுத்து) ஒழுகுகின்ற யான் (அப்பற்களை) முல்லையரும்பென்றும் முத்தென்றும் இவற்றை யுவமமாக்கிக் கூறிப் பிதற்றுகின்ற (அறிவு நூல்களைக்) கல்லாத கீழ்மக்கள் (என் மனத்தைக்) கவலைப்படுத்த (அதனால் யான் துறவறத்தை) விட்டுவிடுவேனோ? (ஒருகாலும் விடமாட்டேன்).

இதுவும் துறவறம் பூண்ட நல்லொழுக்கமுடையானொருவன் தன்னிடத்து வந்து மங்கையரின் பற்களைச் சிறப்பித்துக் கூறிய ஒரு வித்வானை வெறுத்துக் கூறியதாம்.

(இ-து.) பற்களை முல்லையரும்பு முதலியவற்றிற் கொப்பா மென்று வியந்துகூறி மயங்கிக் கிடப்பது நன்மை தருவதாகா தென்பதாம்.

பெண்பித்தேறி யிருப்போரைத் தெளிவித்தல்.

(6) (இவள் இந்திரையினுஞ் சிறந்த வழகுடையாளென்று கருதிப் பெண்பித்தேறிப் பிதற்றுகின்றவனே! நீ பிதற்றுகின்ற அக்) குளிர்ந்த பூமாலையை யுடையாள் குடலும், கொழுப்பும், இரத்தமும், எலும்பும், (அவற்றைத்) தொடர்ந்துள்ள நரம்பும், தோலும் (இவற்றின்) நடுவே சேர்ந்துள்ள மாமிசமும், நிணமு மாகிய இப்பொருளுள்ளே எந்தப்பகுதியளாவள்? கூறுவாயாக.

இந்திரை - இலக்குமி. இஃதொருபண்டிதன் பெண்பித் தேறிப் பிதற்றுகின்ற ஒருவனை நோக்கி, அவன் தெளிவடையு மாறு கூறியதாம்.

பெண்ணுடம்பு குடல், கொழுப்பு, இரத்தம், எலும்பு முத லியவற்றின் தொகுதியா யிருப்ப துணராது, அதனைக் கண்டு மயங்குகின்றவர் அது குடல் கொழுப்பு முதலியவற்றுள் யாதா மென் றுற்றுற்று நோக்குவாராயின், அவர்க்கம் மயக்கம் நீங்கி விடு மென்பதாம். ஆணுடம்பும் இங்ஙன மிருத்தலின், அதனைக் கண்டு பெண்களும் மயங்குதல் கூடாதென்பது இங்குணர்தற் பாலதாம்.

(க - து.) பெண்பித்தேறி யிருப்பவர் பெண்ணென்பது யா தென, தாம் விரும்பிய பெண்ணின் வடிவத்தை யுற்றுற்று நோக் கினுல், அப்பித்து அவர்க்கு நீங்கிவிடு மென்பதாம்.

பெண்பித்துக் கொண்டா னொருவனது.
பேதைமைப் பேச்சைக் கூறல்.

(7) பெண்பித்துக் கொண்டா னொருவன் தான் விரும்பி யுள்ள பெண்ணுடம்பின்) மீது அணிபோர்த்தாற் போன்றுள்ள தோலி னழகைக் காண்டலால் நேத்திரானந்த மடைந்து, (அறி வுடையார் கண்டு) அருவருக்கத்தக்க நவத்துவாரத்திலும் (குறு ம்பி, சளி, கோழை, பீளை முதலிய) மலக்குழம்பு கசிந்து, பெ ருகி, வழிகின்ற (அவளது) உடம்பினைப் பெருமை பொருந்திய தோளினை யுடையவளே! வளைய லணிந்திருப்பவளே! என்று (புகழ்ந்து) பேசுகின்றனன்; (அறி வுடையானுயின், இவ்வாறு கூறுன்).



கண் 2, காது 2, மூக்கு 2, வாய் 1, மலம் வரும் வழி 1, ஜலம் வரும் வழி 1 என்பன நவத்துவாரமாம்.

(க - து.) பெண் பித்துக் கொண்டவன் பெண்ணுடம்பு இன்ன தன்மையதா யிருக்கின்ற தென்பதை யறியாது, அதனைப் புகழ்ந்து புகழ்ந்து பேசுகின்றா னென்பதாம்.

உடம்பின் தன்மை அது பிணமாம்போது
விளங்குவதாம்; அதனை யறியாதார்
அதனையே போற்றிக் காத்து
வருகின்றன ரெனல்.

(8) உடம்பினியல்பை யறியாது அதனைப் பூசுதற்குரிய சந் தனத்தையும் (அணிதற்குரிய) பூமாலையையுங் கொண்டு (அலங் காரஞ்செய்து) பாராட்டி வருகின்றவர் உயிராகிய அச்சு முறிந்த போது கழுகுப் பறவைகள் பெண்ணும் ஆணுமாக நெருங்கி (வந்து), (தம்மடிகளை மாறி) மாறி வைத்துக் குத்தும் (தன்மைய தாய) துர்க்கந்தமுடைய உடம்பாகிய வண்டியினை (சுடுகாட்டில் எப்போதும்) கண்டிலர்போலும்! (கண்டிருப்பாராயின், அங்ங னஞ் செய்யார்).

உடம் பென்னும் வண்டி உயிரென்னும் அச்சு முறியா திருக்குமளவும் ஓடிக்கொண்டிருக்கும்; அவ்வச்சு முறிந்தபோது அது சுடுகாட்டில் கழுகுகள் கொத்திக் கொத்தி யுண்ண அவலட் சணமாக விருக்குமென உடம்பினியல்பைக் கூறியவாறும்.

உயிராகிய அச்சுமுறிதல் - உயிர் உடம்பினின்றும் பிரிந்து போதல். உயிராகிய அச்சு உடம்பாகிய வண்டியென உருவமாகக் கூறியதற்குக் காரணம் உயிரில்லாவிடத்து உடம்பு ஒருசெயலுஞ் செய்தற்குரிய தாகாதென்பதை யுணர்த்து தற்கா மென்க.

(க - து.) உயிர் நீங்கியவிடத்து உடம்பு சுடுகாட்டில் கழுகு கள் கொத்திக் கொத்தித்தின்ன அவலட்சணமாக விருப்பதைக் கவனித்து நோக்குவோர் தம்முடம்பை யலங்காரங் கொள்ளு தலில் பிரியங்கொள்ளா ரென்பதாம்.

சுடுகாட்டில் அவலட்சணமாகக் கிடக்கு
முடம்புகள் தம்மைக் கண்டவர்க்குச்
சன்மார்க்கத்தைப் போதிப்பன
போன்றிருக்கின்றன வெனல்.

(9) (சுடுகாட்டில்) இடப்பட்டுள்ள இறந்தவாது (பிணங்க ளது) தலைகள் (தம்மைக்) கண்டவரது மனம் அஞ்சி நடுக்க முறு

மாறு குழிந்தாழ்ந்த கண்களை யுடையனவாய்த் தோன்றி (விளங்குதலை நாமுற்று நோக்குவோ மாயின், அவை நம்ம னேரை நோக்கி, நீங்கள்) இறவாதிருப்பவரை (உமக்குரிய பொருளைக் கொண்டு) பாதுகாத்து, சன்மார்க்கத்திற் சென்றொழுகு வீராக, இவ்வுடம்பின் தன்மை யித்தன்மை யதாமென்று மிகச்சிரித்துச் சொல்வன போல்வன வாம்.

சுடுகாட்டில் தலைகள் மாமிசப் பசையற்றுக் குழிந்தாழ்ந்த கண்களை யுடையனவா யிருத்தலை நோக்குவோர்க்கு நமக்கு மிக் கதியே சம்பவிக்கும் ; நாம் நற்கதி பெறுதற்குரிய அறத்தை விரைந்து செய்ய வேண்டுமென்னு மெண்ணமுண்டா மென்பதை இங்குணர்த்திய வாறும்.

(க - து.) சுடுகாட்டில் அவலட்சணமாகக் கிடைக்குந் தலைகள் தம்மைக் காண்போர்க்கு அறத்தை விரைந்து செய்யவேண்டு மென்பதையும், உடம்பி னிலையாமையு முணர்த்து கின்றன வென்பதாம்.

சுடுகாட்டிலுள்ள தலையெலும்புக்களைக் கவனித்து
நோக்குவோர், தாம் உலகவாழ்க் கையில்
மயங்கி யிருத்தலை யொழித்து
விடுவா ரெனல்.

(10) இறந்தவாது (பிணங்களது) தலையெலும்புகள் (உலக வாழ்க்கையை நம்பி மயங்கி) கர்வித்திருப்பவரை (நோக்கி அவர்) அஞ்சி நடுங்குமாறு சிரித்து, (அவரது) மயக்கத்தைத் தீர்ப்பனவா யிருக்கின்றன. (உலகவாழ்க்கையை நம்பி) மயங்குத லொழிந்தவர் இவ்வுடம்பின் தன்மை யித்தன்மைய தென்பதனை (நன்றாக) அறிந்திருப்பதால், தம்முடம்பை ஒரு நற்பொருளில்வைத் தெண்ணு திருக்கின்றனர்.

தலையெலும்புகள் சிரித்தலாவது அவை மாமிசப் பசையின்றி வெண்மையாகத் தோன்றுதலாம்.

(க - து.) சுடுகாட்டிலுள்ள மாமிசப் பசையற்ற தலையெலும்புகள் தம்மைக் காண்போர் யாவர்க்கும் உடம்பி னிலையாமையை யுணர்த்து வனவாயிருக்கின்றன ; அதனால் அறிவுடையார் உடம்பினை நிலையுடையதாகக் கருதுவதொழிந்து, உலகவாழ்க்கையிலவாவற்றிருக்கின்றன ரென்பதாம்.

## கிரீக் தேசத்துப் பீமசேனன் கதை.

### பீமசேனனும் பொன் மாம்பழமும்.

(முன் தொடர்ச்சி.)

ஒரு இனிமையான சத்தமிட்டுக்கொண்டு அலைகள் பொற்கிண்ணத்தின்மேல் அடித்து அதைத் தண்ணீர்மேல் அலையச் செய்தன. இவன் சிறிது நேரம் தூங்கினான் ; அப்போது ஒரு பெரும் சப்தத்தோடு அக்கிண்ணம் அங்கிருந்த ஒரு பெரும் பாறையின் ஒரு பக்கத்தில் மோதினது. இந்தச் சத்தத்தால் பீமசேனன் நித்திரைவிட்டு திடுக்கிட்டெழுந்து தான் எங்கே யிருக்கின்றான் என்பதைச் சிந்தித்தான். அந்தப் பொற்கிண்ணம் சமுத்திரத்தின் ஒரு பெரும் பகுதியைத்தாண்டி மிதந்து வந்து, ஒரு தீவுபோல் காணப்பட்ட ஒரு கரையின் அருகாமையில் வந்து கொண்டிருக்கிறதென்று கண்டான். இத்தீவில் என்ன பீமன் கண்டான் என்றால், அவன் இதுகாறும் கண்டிராத ஒரு பெருங் காட்சியையாம்.

அது ஒரு ராட்சசன் ; அவன் ஒரு மலைபோன்று உயரமாக விருந்தான். அவனது மேல் அரைப்பங்கு மேகத்தால் மூடியிருந்தது ; அதனால் அன் பீமசேனனையும் அவனன்றிச் சமுத்திரத்தைத் தாண்டிவந்த கிண்ணத்தையும் பார்க்க வியலாதுபோயது.

அந்த இராக்கதன் தனது பெருங் கைகளை மேலே தூக்கிக் கொண்டிருந்தான் ; மேலும் அவனது தலையின்மேல் தங்கியிருந்த ஆகாயத்தை அவன் தாங்குவதாகக் காணப்பட்டது. சிறிது நேரத்தில் மேகங்கள் கலைந்தன. அதனால் இராக்கதனது முகத்தைப் பீமசேனன் பார்த்தான். அவனது கண்கள் பெரும் ஏரிகள் போன்றும், அவனது மூக்கு ஒரு கல் நீளமும், வாய் ஒரு மைல் அகலமும் இருப்பதைக் கண்டான்.

அவனது பாதங்களைச் சுற்றி ஒரு காடு உண்டாய் நாசமாயிருந்தது ; அறுநூறு எழுநூறு வயதுள்ள பெரிய மரங்கள் அவனது கால்விரல் மத்தியில் வளர்ந்திருந்தன.

இந்த இராக்கதன் பீமசேனனைப் பார்த்து, இடி யிடித்தாற் போன்று ஒரு பெருங் கூக்குரலிட்டு “ எனது பாதத்தண்டை நிற்கின்ற நீயார் ? எங்கிருந்து வருகின்றாய் ?” என்று கேட்டான்.

இதைக்கேட்ட பீமசேனன் அதே அளவான உரத்த சத்தத்தோடு “ நான்தான் பீமசேனன் ; பொன்மாம்பழம் விளையும் தோட்டத்தைத் தேடிப் போகின்றேன் ” என்றான்.

"ஹோ! ஹோ! நீ அங்குப் போய்விடுவா யென்று நினைக்கிறாயா?" என்றான். இதைக்கேட்டு பீமசேனன் "ஏன் போக மாட்டேன்? நூறுதலையுடைய மிருகத்துக்கு யான் பயப்படுகிறேனென்று நினைக்கின்றாயா?" என்றான்.

அப்போது ஒரு பெரும் இடிச் சப்தம் உண்டாயிற்று; அதனால் இராட்சசன் சொன்னதில் ஒரு வார்த்தையும் பீமசேனனுக்குக் கேழ்க்கவில்லை; அப்போது கரியமேகம் அவனை மறைத்துவிட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் இந்தக் குழப்பம் நீங்கிவிட்டது; உடனே ஆகாயம் வெளுத்தது, இராக்கதன் ஆகாயத்தைத் தாங்குவது கண்ணுக்குத் தோன்றியது. இப்போது அவ்விராக்கதன் தான் அட்லாய் என்னும் உலகத்திலுள்ள இராக்கதர்களுக்கெல்லாம் மஹா வலிமைசாலி என்றும் தன் தலைமேல் ஆகாயத்தைத் தான் தாங்குவதாகவும் சொன்னான்.

இதைக்கேட்டு பீமசேனன் "அப்படியா! யான் கண்டறியத் தேடும் தோட்டத்திற்கு வழிகாட்டுவாயா" என்று கேட்டான். இதற்கு இராக்கதன் "அங்கே உனக்கென்ன வேண்டும்" என்றான். "அங்கே மூன்று பொன்மாம்பழங்கள் வேண்டும், எனது அரசனுக்குக் கொடுக்க" என்றான்.

இராக்கதன் பீமசேனனைப் பார்த்து "தோட்டத்திற்குப் போய் அறுப்பவர் என்னைத் தவிர யாருமில்லை. இந்த ஆகாயத்தைத் தூக்கிக்கொண்டிருக்கும் வேலையில்லா விட்டால் "நான்கைந்து அடியில் சமுத்திரத்தைத் தாண்டிப்போய்த் தோட்டத்தைச் சேர்ந்து பழங்களைச் சேகரித்துக்கொண்டு வருவேன்" என்றான்.

(வரும்).

வ. ஆறுமுக செட்டியார், சென்னை.

## சுகாதாரம்.

(முன்தொடர்ச்சி)

### பால்.

சரீரத்திற்கு அவசியமாயுள்ள போஜன சத்துக்களெல்லாம் பாலில் அமைந்திருக்கின்றன. பாலிலும் முட்டையிலும் சகல வகையான போஜன சத்துக்களும் ஏறக்குறைய சரியான அளவாய் அமைந்திருக்கின்றன. பால் குடிக்கிற சிசுக்களும், முட்டைக்குள்ளிருக்கும் குஞ்சுகளும் வளர்வதற்கு அவசியமாய் வேண்டிய எல்லாவகைச் சத்துக்களும் சம்பூரணமாய் அமைந்திருக்கிற பாலையும் முட்டைக்கருவையும் தாயிடத்திலிருந்தே உண்டாகும்படி சர்வஞ்ஞராகிய கடவுள் விதித்திருகிறார். அச்செந்துக்கள் அவ்விருவகைப் போஜனங்களினால் மாத்திரமே மிகவுஞ் செழிப்பாய் வளர்ந்து வருகின்றன.

பசுவில் கறக்கப்படும் பாலின் அளவுந் தன்மையுந் பல ஏதுக்களால் பலவித வித்தியாசப்படும். (1) பசுவினுடைய வயதிற்குத் தக்கபடி பால் வித்தியாசப்படும். (2) பசுவின் ஈற்றுக்குத்தகுந்தபடியும் அதுவித்தியாசமாயிருக்கும். முதல் ஈற்றுக்குப் பால் கொஞ்சமாகவும் பின்பு வரவர அதிகமாகவு மிருக்கும். (3) கன்றின்வயதிற்குத்தக்கபடியும் பால் வேறுபடும். கன்றுபோட்டவுடனே பால் மிகவுங் கனத்ததாயிருக்கும். இந்தப் பால் வயிற்றுப் போக்கையுண்டாக்கத்தக்க தன்மையுள்ளது. இதனால்கன்றின் குடலிலுள்ள கட்டுக்கிடையான கன்மிஷங்களெல்லாம் வெளியே தள்ளப்படுகின்றன. கன்றின் இளம் பிராயத்தில் பால் அதிக தண்ணீர் கலந்ததாயிருக்கும். பின்பு அது வளர வளர பாலில் சரீரவளர்ச்சிக்கு அனுகூலமான கனத்த சத்துக்கள் அதிகப்படுகிறதினால் பாலுங் கனத்ததாகிவிடும். ஆகையால் இளம்பிராய முள்ள பிள்ளைகளுக்கு இளம் பிராயமுள்ள கன்றையுடைய பசுவின்பாலே யேற்றது. (4) உதயத்தில் கறக்கப்படும் பாலில் தண்ணீர் குறைவாயும் கனத்த சத்துக்கள் அதிகமாயு மிருக்கும். (5) பசு தின்கிற தீனிக்குத் தக்கபடியும் பால் வித்தியாசப்படும். அது சிலபதார்த்தங்களைத் தின்றால் அதன்பால் அதிக தித்திப்பாயிருக்கும். தகாதபொருள்களை அது தின்னுமாயின் பாலினுடைய தன்மையும் ஒருவாறு கெடுதியடையும். பால் கறக்கப்படுவதற்குச் சற்றுமுன்னதாக பசு அதிகந் தண்

ணீரைக் குடித்திருக்குமாயின் பின் கறக்கப்படும் பாலில் தண்ணீர் அதிகமாய்க் கலந்து போவதினால் அதன் அளவு அதிகப்படும். (6) கடைசியில் கறக்கப்படும் பாலில் அதிக ஆடையிருக்கும்.

### பாலைக் காப்பாற்றும் வகைகள்.

1. பாலைக்காச்சி அதன் ஆவி யெழும்பிக் கொண்டிருக்கும் பொழுதே சுடச்சுட ஒரு புட்டி அல்லது சீசாவில் முற்றிலும் நிறையவார்த்து உடனே ஒரு நல்ல கார்க்கை இறுக்கமாய்ப்போட்டு அதன்மேல் அரக்கைக்கொண்டாவது அல்லது மெழுகைக் கொண்டாவது நன்றாய்மூடவேண்டும். இந்தப்பாலுடன் சுத்தமானசர்க்கரை சிறிது சேர்த்தால் உத்தமம். இந்தப் பக்குவத்தினால் பால் சில மாதங்கள் வரையிலுங் கெட்டுப்போகாம லிருக்கும். ஆனால் இப்படிச் செய்கிறதினாலே வெண்ணெய் பாலைவிட்டுப் பிரிந்து நிற்கும். இதை நீக்கும்பொருட்டு, காய்ச்சின பாலுடன் முட்டையின் மஞ்சட் கருவிற் சிறிது சேர்க்கவேண்டும், (2) பாலைக் காய்ச்சாமல் அதனோடு சிறிது சோடாப் பவுடரையும் (Carbonate of Soda) சருக்கரையையுஞ் சேர்த்துக் காற்றுச் சிறிதேனும் பிரவேசியாத படிக்குப் பாலை ஒரு புட்டியில் வார்த்து மூடிவைத்திருந்தால் 10-அல்லது 15 - நாள்வரைக்குங் கெட்டுப் போகாமலிருக்கும். (3) பாலை மிகவும் மெதுவாய்ச்சொற்ப சூட்டைப் பிரயோகித்துக் காய்ச்சினால் கடைசியில் அது கட்டியாகிப் போய்விடும். பின்பு அதை எடுத்து வெயிலில்வைத்து நன்றாயுலர்த்திக் காற்றுப்படாத படிக்குத் தகுந்த பாத்திரங்களில் வைத்துக் கொண்டால் வேண்டிய பொழுது இந்தக்கட்டிப்பாலில் சிறிது எடுத்துத் தண்ணீரில் சேர்த்தால் அது நேர்த்தியான பாலாகிவிடும். இப்படிப் பாலைக் காய்ச்சும்போது சிறிது சர்க்கரையை அதனோடு சேர்த்துக்கொண்டால் உத்தமம்.

ஐரோப்பியதேசங்களில் பாலிலிருந்துசெய்யப்படும் (cheese) பால்கட்டியில் மாம்சத்தை யுண்டாக்கும் சத்து மிகவும் அதிகமாயிருக்கின்றது. அதில் 100-ல் 33-பங்கு மாம்சத்தை வளர்க்குஞ் சத்திருக்கின்றது. ஆனால் பாற்கட்டியானது உஷ்ண தேசங்களில் சீக்கிரங் கெட்டுப்போகும்.

### முட்டைகள்.

முட்டையில் சதையை யுண்டாக்குஞ் சத்துங் கொழுப்பும் லகுவில் ஜீரணமாகத்தக்க வண்ணமாய் அமைந்திருக்கின்றன. ஒரு



பெரியமுட்டை 2-அவுன்ஸ் நிறையுள்ளதாயிருக்கும். அதில் 100-ல் 10-பங்கு மேல் தோலும் 60-பங்கு வெள்ளைக் கருவும் 30-பங்கு மஞ்சட் கருவுமாயிருக்கும்.

### முட்டைகளைப் பரீக்ஷிக்கும்வகை.

(1) முட்டையை வெளிச்சத்தில் பிடித்தால் அது புதுமுட்டையானால் அதன் மத்தியில் சற்றுவெளிச்சமா யிருக்கும்; அது பழையமுட்டையா யிருந்தால் அதன் உச்சியில் சற்றுத் தெளிவுண்டாயிருக்கும். (2) 10-அவுன்ஸ் தண்ணீரில் 1 - அவுன்ஸ் உப்பைக் கரைத்து அத்தண்ணீரில் முட்டைகளைப்போட்டால் நல்ல முட்டைகள் மூழ்கிக் கீழேதாழ்ந்துவிடும் ; கெட்டமுட்டைகள் மேலேமிதக்கும். மிகவுங் கெட்டமுட்டைகளோ சுத்த ஜலத்திலு மிதக்கும்.

### முட்டைகளைக் காப்பாற்றும்வகை.

(1) வாள்தூளிலாவது (saw dust), உப்பிலாவது முட்டைகளை அடுக்கிப் பொதிந்து வைத்திருந்தால் அவை சிலநாள் வரையில் கெட்டுப்போகாமலிருக்கும் (2) விளாம் பிசின்முதலிய பிசின்களையாவது அல்லது எண்ணெயை யாவது முட்டைகளின் பேரில் நன்றாய்ப் பூசிவைத்தால் அவை சிலநாள் வரையில் கெட்டுப் போகாமல் நல்லனவாயிருக்கும். (3) சுண்ணாம்புத் தண்ணீரில் முட்டைகளைப்போட்டு வைத்திருந்தால் அவை நன்றாயிருக்கும். (4) 30 - அல்லது 40 - எண்ணுகிற வரைக்கும் முட்டைகளைச் சுடுதண்ணீரில் போட்டுப் பின்பு எடுத்துவைத்திருந்தால் அவை சில நாள்வரையில் கெட்டுப்போகாம லிருக்கும் (5) நல்ல களிமண்ணை எடுத்து அதனோடு சிறிது மிளகுத்தூளையும், தண்ணீரையும், உப்புத்தூளையும் சேர்த்துச் சேறுண்டாக்கி இச்சேற்றை முட்டைகளின் பேரில் நன்றாய்ப்பூசி அவற்றை வெயிலில் உலரும்படி செய்து பின்பு எடுத்துப் பத்திரமாய் வைத்திருந்தால் அவை சிலநாள் வரையில் கெட்டுப்போகாமல் நன்றாயிருக்கும். இப்பக்குவத்தினால் முட்டைகளின் ருசியும் அதிகப்படும்.

### பயறுகள்.

கடலை, துவரை, உளுந்து, அவரை, முதலிய பலவகைப் பயறுகளிற் சதையை யுண்டாக்குஞ் சத்து மிகவும் அதிகமுண்டு. அவைகளில் பாலிலுள்ள சத்துக்கொப்பான சத்து இருக்கின்றது. 15-பவுன் உருளைக்கிழங்கிலுள்ள சதையையுண்டாக்குஞ் சத்து ஒரு

பவுன் பயறிலுண்டு. பயறுகள் இவ்வளவு பிரயோஜன முள்ளவைகளா யிருந்தபோதிலும் அவை ஜீரணமாவதில் சற்றுக் கடினமானவைகளும் அதிக வாய்வை யுண்டாக்கத்தக்கவைகளுமாம். ஆகையால் சிறுகுழந்தைகளும், பலவீனரும், போதுமான அளவு தேக முயற்சியில்லாதவர்களும் அவைகளை அதிகமாய்ச் சாப்பிடுதல்கூடாது. சிலவகைத்தண்ணீர்களில் பயறுகளை அவித்தால் சீக்கிரத்தில் அவிகிறதுமில்லை இலேசில் ஜீரணமாகிறதுமில்லை. முக்கியமாய்ச் சுண்ணாம்புக்கல்லுள்ள தரையிலூறுந் தண்ணீரில் பயறுகளும் பின்னுஞ் சில காய் கறிகளும் நன்றாய் வேகமாட்டாவாம். ஆகையால் இவ்வகைத் தண்ணீர்களைக் கூடுமானால் நீக்கிப்போடவேண்டும். அல்லவென்றால் குளிர்ந்ததண்ணீரில் 24 - மணிநேரம் பயறுகளை ஊறவைத்துப் பின்பு அவைகளைச் சற்றுநொறுக்கி அதன்பின் சமைக்கவேண்டும். முக்கியமாய், பழையபயறுகள் தாம் வேகிறதில் அதிக கடினமானவை. அவைகளை மெதுவாகவும் வெகுநேரமாகவும் வேகவைக்கவேண்டும். அப்படிக்கில்லாவிடின் கடினமான தண்ணீரோடு சிறிது சோடாப் பவுடரைச் சேர்த்தபின்பு பயறுகளை அவிக்கலாம். அல்லது மழைத்தண்ணீரில் பயறுகளைச் சிலமணிநேரம் ஊறத்துப் பின்பு காயவைத்துக்கொண்டால் அவற்றை எந்தத் தண்ணீரிலும் சமைத்துக் கொள்ளலாம். பொதுவாய் ஆற்றுத்தண்ணீரில் பயறுகள் நன்றாய்வேகும்.

## பக்தி.

(முன் தொடர்ச்சி.)

இரக்க மிருப்பதற் கடையாளம் பொருமையில்லா திருத்தலேயாம். குருட்டு நம்பிக்கையினாலோ, அல்லது எந்த மதத்தலைவரின் சொற்களின் பொருட்டோ, எந்த மனிதரும், அப்பொழுது மட்டுந் தட்ட முடியாமல் பிறருக்கு ஏதாவது சிறிது நலம்புரிந்திருக்கலாம். ஆனால் "எவனொருவன் எப்பொழுதும், எல்லாரிடத்தும், பொருமை முதலிய தீயகுணங்களற்று மனப்பூர்ணமான (முழு மனதுடன்) அன்பு செலுத்துகின்றானோ அவன்தான் உயிர்களிடத்து உண்மையான பேரன்புடையவனெனப் படுவான்." உலகத்தில் உயர்ந்த நிலையிலிருப்பதாகக் கூறப்படும் மனிதரும், அற்பப் பொருளின் பொருட்டோ, புகழின்பொருட்



டோ, ஒருவர்க்கொருவர் பொருமை யுடையவர்களாய் விடுவதைக் காண்கின்றோம். உள்ளத்திற் பொருமையுள்ள வரையில், உண்மையான இரக்கம் என்னும் உயர்ந்த நிலையினையடைய முடியாது. புலாலுண்பதில்லை என்றதினால் மட்டுமொருவன் ஜீவகாருண்யமுடையவனாய்விட முடியாது ; ஆடு மாடு முதலிய மிருகங்கள் புல்லைத் தவிரப் புலாலுண்பதில்லை. அவற்றைப் பெரிய யோகிகளென்றோ, அருளுடையனவென்றோ கூறப்படுவதுண்டோ? ஏந்த ஒரு மூடனுங் கூடப் புலாலையோ, மாக்கறியையோ உண்ணாதிருந்து விடலாம். ஆனால் அவன் புல்லைத் தின்னும் விலங்கின் கூட்டத்திலன்றி வேறொன்றிலுஞ் சேர்த்துக் கணக்கிடத் தகுதியுடையவனல்ல. ஒருவன் (புருஷனை யிழந்த) கைம்பெண்களையும், உதவிசெய்வாரற்ற (அனாதைக்) குழந்தைகளையுஞ் சிறிது பொருளின்பொருட்டு இரக்கமற்றுத் துன்புறுத்துவானெனில், அவன் புல்லைத் தானுணவா யருந்துவோனெனினும் வேண்டாம். அவன் ஒரு மிருகத்தைக் காட்டிலும் மிகவுந் தாழ்ந்த-தள்ளுண்ட-வனே. பிறவுயிர்களிடத்து, யாதொரு பகையான எண்ணமுமில்லாதிருத்தலும், தனது நேர் பகைவரிடத்தும் ஏராளமான செல்வமிருப்பது கண்டு மகிழ்ச்சியு மடைபவனெவனோ, அவ்வாறுள்ளவன் என்றுந் தீய புலாலையே யுண்பவனெனினும், அவன் தான் உண்மையான பேரன்பு-பக்தி-உடையவன் ; அவனே யோகி, அவனே அனைவர்க்குங் குருவா யிருப்பவன். ஆதலால் வெளிப்படையான ஒழுக்கங்கள் உள்ளத்தைப் பரிசுத்தமாக்குவதற்கு ஓர் உதவியாக மட்டுமே யிருக்கிறதென்பதை நாமெப்பொழுதும், நினைவிற் பதியவைத்துக் கொள்ளவேண்டியதா யிருக்கின்றது. புறத்தூய்மையை அவ்வளவு கண்டிப்பாய்க் கைகொள்ள வியலாதவர், உளத்தூய்மையுடன்மட்டு மிருப்பினு மொரு குறைவுமில்லை. உட்கருத்தாயும், மெய்ப்பொருளாயு மிருக்கின்ற "ஆத்மதத்வத்தை" மறந்து வெளிப்படையான சில செய்கைகளை மட்டும், ஒரே பிடிவாதமாய் விடாது மென்மேலும் புரிந்துவருஞ் சில கொள்கையினருடைய நிலைமை மிகவுந் துன்பத்தை யளிப்பதாயுள்ளது ! "ஆத்மசைதன்யத்தை விளங்கச் செய்யுமானால் மட்டுமே யொரு செய்கைக்கு மதிப்புண்டு. அதற்குதவாவிடின் அச்செய்கையைக் கைவிடுதலே மேலானது.

பக்தியோகம் கைகூடுவதற்கு இனி வேண்டிய பயிற்சி 'அனவஸாத'மே. அஃதாவது உடல்வன்மை, அல்லது சோர்வின்மை

யாகும். "சோர்வுள்ளவர்களால் இந்த ஆத்மாவானது அடையப்படுவதில்லை." என்று "ச்ருதி" முறையிடுகின்றது. இங்கு "சோர்வு" என்பது "உளச்சோர்வு, உடற்சோர்வு' என்ற இரண்டு பிரிவையு முள்ளடக்கிக் கூறப்படுகின்றது. "மிகுந்த பலமுடையவர்களும், உறுதியான உடற்கட்டுடையவர்களும்" மட்டுமே ஆத்மாவை யடையத் தகுதியுள்ளவராவார்கள். மிக இளைத்த உடலுடையவருந் தென்பில்லாதவரும் யாது செய்வர்? அப்படி யுள்ளவர் ஏதாவது ஒரு யோகத்தைக் கைகொள்ளத் தொடங்கினால் அவரது உடல் முழுவதும் துகள் துகளாக நொறுங்கிப்போய் விடுகின்றது. "இளமையோடு கூடியவனும், நோயற்றவனும், நல்லதென்புடையவனு மானவன்தான்" தான் அவ்வித (யோகச்) செய்கைகளில் வெற்றி பெறுகின்றான். ஆதலால் முதலாவதாக "உடல்வன்மை" இன்றியமையாதது. பொறி புலன்களை யடக்குவதால் நேரிடுந் துன்பத்தையும், அதற்கெதிரிடையாய்த் தோன்றித் துயரமளிப்பதான பிற சக்திகளின் செயலையும் எதிர்த்துத் தாங்குவதற்கு வன்மையுள்ளோரால் மட்டுந்தானியலும்; பக்த - தொண்டனாக விரும்புகிறவன் பலவானாக விருத்தல் வேண்டும்; பிணியற்றவனுமா யிருத்தல் வேண்டும்; வன்மையற்றவன் யோகத்தைக் கைகொள்ள விரும்பி முயன்றால் வீண்துன்பத்திற்காளாய் மிக எளிதிற் கொடிய நோயினால் வருந்தவேண்டி, நேரிடும்

இனி "உள்ளத்தின் வன்மை" யில்லாதவனுக்கும் "ஆத்மாவை யடைய" ஒருபொழுது மியலாது. பேரன்புடையவனாக விரும்புகிறவன், எப்பொழுதும் உள்ள மகிழ்ச்சியுடையவனா யிருத்தல் வேண்டும்; சிடுமூஞ்சிகளதற்குத் தகுதியுடையவராகார். மன எழுச்சி யுடையவரும், களிப்புடையவ்ரும், எவ்வளவு துன்பம் நேரிடினுங் கலங்காத உள்ளத்துட னிருப்பவருமே பேரன்புக்கு உரியவர். அவ்வாறு, உள்ளத்திறமை வாய்ந்தவர்க்குமட்டுமே, மாயை யென்னும் வலையினின்றும் வெளிப்பட முடியும்; எனினும், "அனுந்தர்ஷம்" "பெருமகிழ்ச்சி" யும் வெறுத்தற்குரியது. ஒன்றைச் செவ்வையா யாராய்வதற்குப் பெருங்களிப்பானது "பகை என்று கூறலாம். மிகுந்த அறிவின்மையும், மட்டற்ற மகிழ்ச்சியும், உளத்தைக் கலக்கிவிடுகின்றன. மனதைச் சமநிலையில் நிறுத்தல் வேண்டும். உறுதியாயும், அமைதியாயுமுள்ள அறி



வினால் மட்டுமே "ஆத்மாவானது" அடையத் தகுந்ததா யிருக்கின்றது.

இவ்வாறு தான் ஒருவன் முதலில் "ஈச்வர பக்தி" யைக் (கடவுளிடத்துப் பேரன்பைத்) தொடங்க வேண்டியது.

(தொடரும்.)

விண்ணுற்று முடிச்செல்வனார்.

நீதிசாரம்.

## ஊக்கமுடைமை.

ஊக்கமுடைமை யென்பது மனோதைர்யத்தை யுடைத்தாயிருத்தல். இம் மனோதைர்யத்தை யுடையவனுக்கு எல்லாச் சீருஞ் செல்வமு முண்டாகும். இம்மனோதைர்ய மில்லாதவனானெனில், எவ்வளவு செல்வத்தையுடைத்தாயிருந்தாலும் அதைக் காப்பாற்ற வல்லமையில்லாதவனாக விருப்பானாதலால் தரித்ரத்தால் வருத்தமடைவான்.

மனதி லுதிக்கும் உற்சாஹமே நிலைபெற்ற செல்வப் பேற்றிற்குக் காரணமெனவும், அவ்வுற்சாஹ மில்லாதவர்களது செல்வம் நிலையில்லாத ஸரீரமழிந்து விடுவதுபோ லழிந்துவிடுமெனவும், சொல்லிய நீதியின் உண்மையை யுணர்ந்தவர்களே தைர்யவான்களென்றும், அவர்களிடத்து லக்ஷ்மி தாண்டவமாடுவளென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

உற்சாஹமென்னும் தைர்யத்தை யுடையவன் தனக்குள்ள செல்வப்பொருளை யிழந்து விடுவானாயினும், தைர்யத்தை விடாமலிருப்பானாயின் அவனிடத்திலுள்ள தைர்யலக்ஷ்மியைத் தேடிக்கொண்டு பாக்ய லக்ஷ்மியும் அவனிடத்திற்கு வந்து சேருவள்.

அல்லிப்பூவின் தண்டானது ஜலத்தின் அளவுக்குத் தக்கபடி நீண்டு வருவதுபோல உற்சாஹத்தை யுடையவன் அதனளவுக்குத் தகுந்தபடி வ்ருத்தியாகி மேன்மையடைவன்.

முயற்சியினாலே செல்வமும், செல்வத்தினாலே கொடையும், கொடையினாலே கீர்த்தியும், அடைந்திருப்பதற்குக் காரணம் உற்சாஹமென்னும் தைர்யமே யல்லது வேறல்ல. இவ்வகையாகக் கீர்த்திபெற்றவர்களைக் கண்டு ஸந்தோஷப்படாமல் பொறாமை

யா லிகழ்ச்சி செய்கின்றவர்களை உற்சாஹமென்னும் தைர்யமில்லாத புத்தியீனரென்று முன்னோர்கள் சொல்லி யிருக்கின்றார்கள்.

கூர்மையான கொம்புகளையும் ஸ்தூலமான தேஹத்தையுமுடைய யானையானது புலியோடெதிர்க்க அஞ்சிப் பின்னிட்டோடுமே யல்லது முன்னிற்கமாட்டாது; அதுபோல மனிதன் காத்ரமான தேஹமும், அதற்குத் தக்க பலமும், கூர்மையான ஆயுதமும் பெற்றிருந்தாலும், மநோதைர்யமில்லாத பேதையாக விருந்தால் மாற்றானுக்கஞ்சிப் புறங்காட்டி யோடுவானே யல்லாமல் முன்னிற்க மாட்டானாதலால், ஊக்கத்தைக் கைவிடலாகாது.

மிகுந்த உற்சாஹமே மனுஷ்யனுக்கு உறுதியானவறிவாம். அஃதில்லாதவன் மனுஷ ஸ்வரூபத்தைப் பெற்றிருந்தாலும் காட்டில்வாழு மரங்களுக்கு ஸரியாகவே சொல்லப்படுவான்; ஏனெனில், மாநுஷமெனப்படும் மன ஊக்கமும், அதைக்கொண்டு செய்யப்படுங் காரிய் முயற்சியும் இல்லாவிடின் மரமென்று சொல்வதற்குத் தடையென்ன ?

ஆதலால், உற்சாஹமென்னும் மநோதைர்யத்தை யுடையவனிடத்து தைர்யலக்ஷ்மி குடிகொண் டிருப்பாளென்றும், அவனை ஸாதிப்பது அஸாத்யமென்றும் சொல்லிய நீதியை யாவரும் அறிந்து நடத்தல் வேண்டும்.

---

## மடியின்மை.

மடியின்மை யென்பது சோம்பலில்லாமையாம். அச்சோம்பாவில்லாம லிருப்பவன் தான் நினைத்த கார்யத்தை முடிப்பானென்றும், சோம்பலையுடையவன் எவ்வளவு செல்வத்தைப் பெற்றிருந்தாலும் அதை வ்ருத்தியாக்குவதுங் காப்பதும் அவ்னால் கூடாத கார்யமாதலால், அது நாசமுறுமென்றும், சொல்லப்பட்டிருப்பது அநுபவத்திற்கு ஸரியா யிருக்கின்றது.

ஒருவனது குடும்பம் ஹீநதசையி லிருந்தாலும், அவன் சோம்பலை யகற்றி முயற்சிசெய்து வருவானாயின், அதனு லக்குடும்பம் மூன்றாம்பிறைச் சந்த்ரன்போல நாளுக்குநாள் வ்ருத்தியாகி உயர்வை யடையும். சோம்பலுடையவனது குடும்பமோவெனில், அதற்கெதிரிடையாக கிருஷ்ணபக்ஷத்துச் சந்திரன் போல நாளுக்குநாள் தேய்வையடைந்து குறைந்துவிடும்.



நன்முயற்சியை விட்டுச் சோம்பலை மேற்கொண்ட ஒருவனது குடும்பம் நசித்துப்போவது மல்லாமல், அவனுந் துன்பத்திலழுந்திக் கெட்டுப்போவான். ஏனெனில், நடப்பது நடவாமற் போகாது, நடவாதது நடக்கவறியாது என்கிற ஆலஸ்ய வசனத்தை யநுஸரித்து நடப்பது கேட்டுக்கிடமென்று முன்னூற்களி லுரைத்திருப்பதினாலே தான்.

மிகவும் புராதனமான கப்பல் பார்வைக்கு மாத்ரம் மிகுந்த பலமுள்ளதாகக் காணப்பட்டாலும், அதை நன்றாய்ப் பரிசோதியாமல் அத்னிடமாய்ப் பலவித சரக்குகளை யேற்றி லாபத்தை ஸம்பாதிப்பதின் பொருட்டு, கடல் யாத்ரை செய்துகொண் டிருக்கும்போது அக்கப்பல் பலச்குறைவால் நடுக்கடலிலழுந்தி, பலவித நஷ்டத்தையுந் தருவதுபோல ஆலஸ்யம்-மறதி-சோம்பல் இம்மூன்று குணங்களும் முதலில் இன்பத்தைத் தருவதுபோலத் தோன்றினும், பின்பு பல துன்பத்திற்காளாக்கி விடுமென்பது ஸத்யமேயாம்.

ஒரு சக்ரவர்த்தியினுடைய செல்வ முழுதும் ஒருவனுக்கு முயற்சியில்லாமலே வந்து சேர்ந்தாலும், அவன் சோம்பலை யுடையவனாக விருந்தால் அச்செல்வத்தாலுண்டாகிய ஸௌக்யத்தையவன் அநுபவியாமற் போகிறது மல்லாமல் அச்செல்வமும் அவனையல்லாமலே அழிந்துபோய் விடும்.

சோம்பலினாலே நன்முயற்சி செய்யாதவ்ன் நன்னடத்தையுடைய பெரியோர்களும் உத்தம ஸ்நேஹரும் சொல்லிய புத்தியைக் கேளாமற் கெடுதியடைவானாயினும், அக்கெடுதியினால் வரும் இகழ்ச்சியைக் கேள்விப்படுவதினா லுண்டாகும் வெட்கத்தினாலாகிலும் சோம்பலைவிடான்.

கார்யங்களுக்கு விக்னத்தைச் செய்யும் சோம்பலானது ஒருவனிடத்துண்டாயிருக்குமாயின் அது அவனைப் பகைவருக்குத் தாழ்ந்து நிற்கும்படியாயும், அவர்களேவிய பணிவிடைகளைச் செய்யும்படியாயும், செய்விக்கும்.

சோம்பலைவிட்டு முயற்சிசெய்கின்றவனுக்கு யாது குற்றம் வரினும் எளிதாக ஒழிந்துவிடுமென்றும், அவனுக்கு இம்மையிலும் மறுமையிலுமுள்ள எல்லா நன்மைகளுங் கைகூடுமென்றும், முன்னோர்கள் உரைத்திருக்கிறார்கள்.

மடி யென்னுஞ் சோம்பல் ஸரீரத்தின் வ்யாதியா யிருக்கின்றது. அதனால் குற்றமுந் துயரமுந் துன்பமுமுண்டாகின்றன. எப்படியெனில், சோம்பலுள்ளவன் பொய்பேசப் பின் வாங்காமல் எவனாயினுந் தன்னை ஒருவனிடத்திற்குப் போகச்சொல்லுமளவில் உடனே அவன் வீட்டில் இல்லையென்றும், ஒரு வஸ்துவைக் கொண்டுவரச் சொன்னால் அது அகப்படாதென்றும், சொல்லி விடுவான். ஆதலால், அவனுக்குப் பொய்யா லுண்டாகுங் குற்றம் நேரிடும். மேலும் சோம்பலுள்ளவன் தனது ஸௌக்யத்தை விரும்புவது மாத்ரமே யல்லாமல், அதற்குரிய கார்யத்தைச் செய்யவே மாட்டான். அவனுக்குக் கார்ய முயற்சியின்மையால் அவனுடைய செல்வமும், அநுபவமும் நாளுக்குநாள் குறைந்துவிடும். இதனால் அவனுக்குத் துயரம் நேரிடும். பின்னும் மேற்படி சோம்பலுள்ளவன் எப்போதும் அந்யனுக்குட்பட்டிருப்பான். அவனுக்கு ஸமீபத்திலிருக்கிற வஸ்துவைக்கூட அந்யனுடைய உதவியில்லாமற் பெறமாட்டான். அப்படிக்கொத்தவனுக்கு எந்தத்துன்பந்தான் நேரிடாது ?

ஆதலால், சோம்பலுக்கிடங்கொடாமல் அதை நீக்கிவிட வேண்டும்.

## பொறுப்பும் ஆற்றலும்.

"அரியவொன் றாகாதவில்லை
பொச்சாவாக் கருவியாற் போற்றிச் செயின்."

ஒரு காரியத்தை, அது சிறிய காரியமாயிருப்பினும் மிகப் பெரியகாரியமா யிருப்பினும் நான் இதனைச்செய்து முடிப்பேன் என்று உறுதிசெய்து கொள்வதால் ஒருவனுக்கு ஆற்றல் மிகுதிப் படுகின்றது. அதனைச்செய்து முடித்துத் தீரவேண்டும் என்னும் தீராத ஆவலால் அவன் உள்ளத்தில் சிதறுண்டு கிடக்கும் சக்திகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து உறுதியளிக்கின்றன. இனி, அவன், அதனைச்செய்து முடிப்பேன் என்று பொறுப்பேற்றுக் கொள்வதாலும் அவனுக்கு ஆற்றல் மிகுதியாகின்றது.

ஒரு காரியத்தைச் செய்து முடித்துத் தீரவேண்டும் என்று ஒருவன் செய்துகொள்ளும் உறுதியான தீர்மானத்தாலும், ஒரு



காரியத்தைச் செய்துமுடிக்கும் பொறுப்பை ஒருவன் ஏற்றுக் கொள்வதாலும் ஒருவனுக்குச் சக்தி பெருகுகின்றது. பெருங்காரியத்தின் பொறுப்பு ஒருவனுக்கு ஏற்படுவதால் அவனுக்கு அறிவும் ஆற்றலும் பெருகுகின்றன.

லண்டன் நகரத்துக் கோபுரங்களின் மீது ஏறிக் குரங்குபோலக் குந்தியிருந்தும், சாக்கடைகளின் குறுக்கே படுத்து நீரைப் பெருக்கி அதனால் கடைகாரருக்கு இடைஞ்சல் விளைத்து அவர்களிடம் சிறுபொருள் பெற்றுச் சிற்றுண்டி வாங்கித்தின்றும், இன்னும் பல சிறுதொழில்கள் புரிந்தும், ஒன்றுக்கும் உதவாத சிறு பயல் என்று பெற்றோரால் வெறுக்கப்பட்டு, இவன் கணக்கில் சேராத பிள்ளையென்று இந்தியாவுக்கு அதிர்ஷ்டம் போல் நடக்கும் என்று அனுப்பப் பட்ட கிளைவ் என்னும் துஷ்டப்பையன் பிற்காலத்தில் இந்தியாவில் மகத்தான பிரிட்டிஷ் ராஜாங்க ஸ்தாபனத்திற்கு மூலபுருஷனா யிருந்தமை, ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்று நம்மால் புறக்கணிக்கப்படும் சிறுவர்களிடம் அமைந்து கிடக்கும் அற்புத அபாரசக்தியைக் காட்டுகின்ற தன்றோ! மூன்று பவுன் சம்பளத்தில் வயிற்றுப்பிழைப்புக்காக வந்த ராபர்ட் க்ளைவ் இந்தியாவில் செய்த பெரியவேலைகள் இன்னும் ஆச்சரியத்துக் குரியனவா யிருக்கின்றனவே. மேசையில் இருந்தெழுதும் சிறிய குமஸ்தாவாக வந்த ராபர்ட் க்ளைவ் லார்டு க்ளைவாகித் தேசாதிபதியாக இங்கிலாந்திற்குத் திரும்பிய சரித்திரத்தைப் படிக்கும் ஒவ்வொருவரும் ஒன்றுக்கும் உதவாதவரென்று கருதப்படும், சாதாரண மனிதர்களிடம் எவ்வளவு அபாரமான சக்தி அமைந்து கிடக்கின்ற தென்பதைத் தெளிவாக அறியலாம். ஐரோப்பா முழுமையும் கலங்குமாறு செய்த நெப்போலியன் சக்ரவர்த்தி சிறிய கார்சிகத் தீவின் சிறுவனன்றி வேறென்ன ?

உறுதியான நோக்கமும், கலங்காத நெஞ்சமும், தளராத முயற்சியும் உலகத்தில் எந்த மகத்தான காரியத்தைத் தான் செய்து முடித்துவிடா ? ஒரு காரியத்தை நீ செய்ய வேண்டிய சந்தர்ப்பம் நேரும் வரை நீ அறிய முடியாது. உலகத்திலுள்ள பெரிய மனிதர்களிற் பலர் தங்களுக்குரிய அனைத்தையும் இழந்து அல்லது பெரிய துரதிஷ்டம் அவர்களுக்குச் சம்பவித்தபின் இனி என்ன வழியென்ற கவலை சேர்ந்த ஆவலால் தங்கள் அபார ஆற்றலை உணர்ந்தனர்.

மிகுந்த அவசியம் நேரிடுவதால் சிலகாலங்களில் நாம் சாதாரண காலங்களில் செய்யாத பெருங்காரியங்களைச் செய்து முடித்து விடுகின்றோம். ஒரு பெரும்போரில் வென்று ஜய சீலனாய் வரும் போர் வீரனைவிட, அளவற்ற சகித்தற்கரிய கஷ்டங்களையும் நிர்வகித்துத் தனது நோக்கத்தை நிறைவேற்றுபவன் பெரிய சுத்த வீரனாவான். கஷ்டங்களைப் பொறுமையுடன் எதிர்ப்பதால் ஆற்றல் பெருகுகின்றது. சிலரது அபார ஆற்றலும் சாமர்த்தியமும் எதிர்பாராத சம்பவங்கள் நேர்ந்த பொழுதுதான் வெளியாகின்றன. ஐரோப்பாயுத்தமும் ஏற்படாமலும், ஜெர்மனியர் பெல்ஜியத்தின் மீது படையெடாமலும், இந்திருப்பின் பெல்ஜிய நாட்டு ஜனங்களின் பெரும் பராக்ரமம் வெளிப்பட்டிருக்குமா? சந்தர்ப்பமும் சமயமும் கிடையாமையால் குடத்தினுள் வைத்த விளக்குப்போல இருப்போர் நம்மில் அநேகர். போர் நடவாத காலங்களில் யுத்தவீரரின் வீரபராக்ரமங்கள் வெளிப்படுவதில்லை. அதனால் தீரமிகுந்த போர்வீரர் இல்லையென்று கொள்ளலாமா? அது போலவே, ஒவ்வொருவருள்ளும் அபாரமான அற்புத சக்தி, அடங்கிக் கிடக்கின்றது; ஆலமரம் வித்தினுள் உறங்குவது போல, அண்டங்களை ஆளும் அற்புத மனிதனது சக்தியும் அவனது அகத்தில், அநேகமாய் அவனுக்குத் தெரியாமலே அடங்கிக் கிடக்கின்றது.

அநேகருக்குப் பிறர் உதவியிருக்கும் வரை தங்கள் ஆற்றல் வெளிப்படுவதில்லை. எங்கள் தகப்பனார் இறந்து போனால் எங்கள் குடும்பமே ஒழிந்து போகும் என்று கூறும் புத்திரர்கள் அவர் மரணகாலத்திற்குப் பின் குடும்பச் சுமையை ஏற்று அறிவாற்றலோடு நடத்திவரக் காண்கின்றோம் அன்றோ? தாயால் கவனிக்கப்படாத பறவைக்குஞ்சு விரைவில் பறக்கத் தொடங்குகின்றது.

எதிர்பாராத சம்பவங்களால், திடீரென்று ஒரு பெரும் பொறுப்பை வகிக்க நேரும்பொழுது பிரதமத்தில், பேய்போல் விழிப்பவர்களில் எத்தனைபேர் பொறுப்பேற்றபின் ஆற்றலுடையவர்களாய் விடுகின்றனர்? அறிவும் ஆண்மையும் பெருகுவதற்குப் பொறுப்பு மிகுதியும் துணை செய்கிறது. ஒரு காரியத்தை அவசியம் செய்து தீரவேண்டிய பொறுப்பால் அநேகர் ஆற்றலுள்ளவர்களாகின்றனர். பொறுப்பு ஆற்றலை வளர்க்கின்றது. சிலர் எமக்குப் பொறுப்பற்ற சிறிய வேலைகள்வேண்டும் என்கின்றனர். இவர்களுக்கு அறிவும் ஆற்றலும் விர்த்தியாகப் போவதேயில்லை. சிறிய முயற்சிகளிலும் பிறரிடம் தாழ்ந்தவேலைகளிலும் உள்ளவர்களுக்கு ஆற்றல் விர்த்தியாவதேயில்லை. அவர்களுக்குத் தங்கள் ஆற்றலைப் பரீட்சிக்கும் சம்பவம் நேர்வதேயில்லை. அதனால் அவர்கள் ஆற்றல் வெளிப்படுவதேயில்லை. அவர்கள் எப்பொழுதும் மற்றவர் சொல்வதையே, யந்திரங்கள் போலச் செய்து கொண்டிருக்கிறார்கள். தனித்து நிற்கவோ தாமாக ஒரு காரியத்தைப் பற்றிச் சிந்திக்கவோ, ஒரு காரியத்தை ஸ்வயமாகச் செய்யவோ அவர்கள் படிக்கவில்லை.



நமது அபசாரசக்திகளும் ஆற்றல்களும், பூமியின் வெளியே தோன்றி வளரும் மரங்கள் போலன்றி, கோலாரில் பூமிக்குள் நாள்தோறும் பெருகி வளர்ந்து மறைந்து கிடக்கும் தங்கக்கனிகள் போல, நமது அகத்தில் அபரிமிதமாக மறைந்து கிடக்கின்றன. அவற்றை அடையுமாறு நாம் முயற்சி செய்வதேயில்லை. நமது சித்தம் விரும்பியது எதனையும் பெறுமாறு கடவுள் நமது சித்தத்தில் எல்லாச் சக்திகளையும் அடக்கி அமைத்து வைத்திருக்கின்றார்.

பிறரது அபாரசக்தியைப்பார்த்து ஆச்சரியப்படும் நாம் நம்மிலும் அந்தச்சக்தி அடங்கிக் கிடக்கின்றதென்பதை அறிய வேண்டும். ஒழுங்கான அப்பியாசத்தினால் நாம் நமது ஆற்றல்களை வளர்க்கலாம்.

ஒரு பெரிய காரியத்தின் பொறுப்பு ஒருவனுக்கு ஏற்படும் பொழுது அவனுக்குத் தன்னை வளர்க்கும் முயற்சி ஏற்படுகின்றது; அவன் அகத்தில் அடங்கிக் கிடக்கும் ஆற்றல்களெல்லாம் வெளிப்படுகின்றன. "இந்தவேலைக்கு அவர்தான் சரி, என்னால் ஆகாது" என்று கூறும் எனது சகோதரனே! ஒரு பெருங்காரியத்தின் பொறுப்புஉனக்கு ஏற்படும்பொழுது அதனைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்; உனது ஆற்றலை நீ அறிந்து அடைவதற்கு அது தக்க துணையாகும்.

## ஏன் மாம்ஸம் சாப்பிடுதல் கூடாது ?

### பத்துக் காரணங்கள்.

[ இது "கிரேதாயுக தூதன்" ("Herald of the Golden-Age") என்னும் ஆங்கில மாதப் பத்திரிகையின் பிரதம தலைவரான ஸிட்நி பேர்டு அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட துண்டுப் பத்திரத்தின் மொழி பெயர்ப்பு].

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே.
கொல்லா விரதங் கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ? அறியேன் பராபரமே.
எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபராமே.

1. மாம்ஸ ஆகாரம் மனிதனுக்கு இயற்கையானதல்ல; அவனது இயற்கைக்கு விரோதமானது. நமது பிரபல வைத்தியர்களும் தாவரசங்கம சாஸ்திரிகளும் நமது சரீர அமைப்பு பழவர்க்கங்களைச் சாப்பிடுவதற்குரிய தென்றும்,மாம்ஸ பட்சணஞ்செய்யும் பிராணிகளின் சரீர அமைப்புக்களை ஒத்திருக்கவில்லை யென்றும் ஒருங்கே கூறுகின்றனர். ஆதலால், பிராணிகளின் மாமிஸத்தைச் சாப்பிடுவது நம்மைச் சிருஷ்டித்த கடவுளின் நோக்கத்திற்கும் விருப்பத்திற்கும் மாறாயிருக்கின்றது. ஒவ்வொரு காலத்தில் தோன்றி இவ்வுலகத்தை அலங்கரித்த தத்வஞானிகளின் உபதேசங்களும் இதனை உறுதிப் படுத்துகின்றன.

2. மாம்ஸ ஆகாரம் மனிதனுக்கு அநாவஸ்யமானது.மனித ஜாதியாரில் பாதிப்பேர் மாம்ஸம் சாப்பிடுவதில்லை. (ஸ்பார்ட்டானியர், ரோமர், அரபியர், ஜப்பானியர் முதலிய) பெருஞ் சக்தி வாய்ந்த அநேக ஜாதியார் மாம்ஸம் சாப்பிடா திருந்தனர். இப்பொழுதுங்கூடச் சரீரவன்மையில் மேம்பட்டவர்களென்று உலகத்தில் பிரசித்தி பெற்றுள்ள பலர் சாகபட்சணிகளே யாவர். (கலியுக வீமசேனன் என்று உலகமெங்கும் பிரக்யாதி பெற்றுள்ள ராமமூர்த்தி ஸாகபட்சணியே யன்றோ ?) அமெரிக்காவிலுள்ள ஏல் (Yale), ஹார்வார்டு (Harvard) சர்வ கலாசாலைகளில் பண்டிதர் சிட்டெண்டென், இர்விங் பிஷர் (Prof Chittenden & Irving Fisher) முதலியோரும், லண்டனில் பிரசித்திபெற்ற டாக்டர் ஜோஸப் ஓல்டு பீல்டு அவர்களும், பிரஸல்ஸில் சர்வ கலாசாலை அதிகாரிகளும் இது சம்பந்தமாகப் பரிசோதனைகள் செய்து பார்த்தனர் ; அவர்கள் மாம்ஸ ஆகாரமின்றி, பால், பழவர்க்கங்கள், தான்யவர்க்கங்களென்னு மிவற்றைச் சாப்பிடுவோர் மிகுந்த சௌக்யமும், மிகுந்த சக்தியும் கஷ்டங்களைப் பொறுக்கும் ஆற்றலும் உடையவர்களாக விருக்கின்றனரென்று உறுதி செய்தனர். முற்காலத்தில் பலவேறு மனோமுயற்சிகளையும் சரீர முயற்சிகளையுங் கொண்டிருந்த ஆயிரக் கணக்கான மேதாவிகள் கூறியுள்ள உண்மைகளும் இவ்விஷயங்களை உறுதிப்படுத்துகின்றன.

3. மாம்ஸ ஆகாரம் ஸரீர ஸௌக்கியத்திற்கும் பாதகமாயுள்ளது ; அஃது அபாயகரமாயுள்ளது. நமக்குண்டாகும் அநேக கொடிய வியாதிகள், பிளவைகள், சூலை, வாதரோகம், (Bright's Disease), ஒருவகை மூத்ரரோகம், க்ஷயரோகம் முதலியன மிருகங்களின் சரீரங்களைச் சாப்பிடுவதன் நேரான பயன்களாகும். மிருகங்கள் பெரும்பான்மையும் பற்பல வியாதிகளை யுடையனவாயிருக்கின்றன ; அவை சுகஜீவியா யிருக்கும்பொழுதுகூட எப்பொழுதும் நவச்சார வாயு முதலிய விஷவஸ்துக்கள் கலந்தனவாகவே யிருக்கின்றன. இதனால் அவற்றைக் கொன்று புசிப்பவருக்கு மேற்கூறிய வியாதிகள் சம்பவிக்கின்றன. இங்கிலாந்திலுள்ள ஆடுமாடுகளும் 100-க்கு 50-க்கு மேற்பட்டவை (Tubercles) மணிக்குடல் ரோகமுள்ளவையா யிருக்கின்றன ; சிலந்திப் புண்கள், (பிளவை) ஆந்த்ராக்ஸ், கால்நோய், வாய்நோய் முதலிய பற்பல வியாதிகளுள்ளனவாயு மிருக்கின்றன. பற்பல புழுக்களும் உண்ணீக்களும் அவற்றின் சரீரத்தின்மீது வசிக்கின்றன. மிகப் பெரிய பட்டணங்கள் தவிர (அங்கும் சரியாய் நடப்பதில்லை);மற்றவிடங்களிலெல்லாம் டாக்டர்கள் மாமிச பரிசோதனை செய்வதில்லை. பொதுஜனங்கள் இவற்றையெல்லாம் அறியாமையால், எச்சில் போன்ற மாமிசங்களைத் தின்றுகொண் டிருக்கின்றனர் ; தங்கள் குழந்தைகளுக்கும் இவற்றைச் சாப்பிடுமாறு கொடுக்கின்றார்கள். அதனால் மிகுந்த கேடுகள் சம்பவிக்கின்றன.

4. Dipsomania (இருதய ரோகம்) என்னும் கொடிய வியாதி உண்டாவதற்கு மாமிசபட்சணமே முக்கிய காரணமாயிருக்கின்றது. மாமிசபட்சணமில்லாத நாடுகளில் குடி மிகுதியாயில்லை. பழவர்க்கங்களை யுண்டுவாழும் சாக பட்சணிகள் மதுபா

னஞ் செய்வது மிகுதயாயில்லை; டிப்ஸமோனியா வியாதியா யுள்ளவர்கள் பழவர்க்கங்களை மாத்திரம் உண்டு ஜீவிப்பதால், மேற்படி வியாதிபோய் விடுகின்றதென்று இரட்சணிய சேனையைச் சேர்ந்தவர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

5. நமது வறுமைக்கும் குற்றங்களுக்கும் முக்கிய காரணம் குடிமுதலிய கெட்ட வழக்கங்களே யாம். இவற்றை அநேக ராஜதந்திரிகளும் சாஸ்திரிகளும் உறுதிப்படுத்துகின்றார்கள். அதனால் இவ்விதத் தீமையெல்லாம் வாராமல் பாதுகாக்குமாறு ஆகாரத் திருத்தம் செய்யவேண்டியது அவஸ்யமாம். உற்சாகத்தை மிகுதியும் உண்டாக்கக் கூடியனவல்லாத கிழங்குகள், கொட்டைகள், பருப்புகள், கோதுமை, அரிசி, பயறுகள் பலவகையான பழவர்க்கங்கள், பால், பாற்கட்டி, மோர், தயிர் முதலிய சத்தான வஸ்துக்களைச் சாப்பிடுவோர்க்குக் குடிக்கவேண்டுமென்னும் ஆசையுண்டாவதில்லை.

6. மாமிச ஆகாரம் தன்னைச் சாப்பிடுகின்றவரை முரட்டுக் குண முள்ளவர்களாயும், அடிக்கடி சண்டையிடுஞ் சுபாவமுள்ளவர்களாயும் ரத்தப்பிரிய முள்ளவர்களாயும் ஆக்கிவிடுகின்றது; ஆனால் சாகபட்சணம் செய்யும் ஜாதியரோ எக்காலத்திலும் சமாதானமும் சாதுத்தன்மையு முள்ளவர்களென்று பேர்பெற்றிருக்கின்றார்கள். இப்பொழுது மீட்டும் உலகத்தார் மனிதருக்கு இயற்கையான சாகபதார்த்த உணவைக்கொள்ளின், உலகத்தில் யுத்த விருப்பம் அடியோடொழிந்துபோம். சாகபதார்த்த உணவையே யாவரும் உண்டு வந்தால் அஃது இனி வரப்போகின்ற சர்வ ஜீவ ஐக்கியமும் சகோதரத்துவமும் பொருந்திய புதிய காலத்தை விரைவில் வருமாறு செய்யும்.

7. மாமிச ஆகாரம் சாப்பிடுவதால் ஒவ்வொரு தேசத்திலும் தினந்தோறும் குறைந்த பட்சம் சுமார் 10 லட்சம் பிராணிகள் (ஈவிரக்கம், ஜீவகாருண்யம் என்னு மிவையின்றி) கொடுமையாகக் கொலை செய்யப்படுகின்றன. அதனால் வாயில்லாப் பிராணிகளுக்குக் கொடுந் துன்பமும் துயரமும் ஏற்படுகின்றன. அத்தகைய கொடுவதைக்கும், துன்பத்திற்கும் ஏதுவான மாமிஸ பட்சணம் முற்றிலும் அநாவஸ்யமாம். தெய்வ நீதியின்படி மாமிஸ பட்சணம் செய்வது நியாயமுள்ள தாகாது. மாமிஸ பட்சணம்



ஜீவகாருண்யத் தன்மைக்கும் உண்மையான மத நீதிகளுக்கும் முரணானதாம். (ஆடு மாடுகளைத் தினந்தோறும் ஆயிரக் கணக்காகக் கொன்று புசித்து வருவதால், ஆடு மாடுகள் க்ஷீணதசையடைந்து வருகின்றன; அதனால் தேசத்தில் விவசாயத் தொழிலுக்குக் கஷ்டம் நேரிடுகின்றது; பால், மோர், நெய் முதலியன கிடைப்பதும் கஷ்ட மாகின்றது.

8. மாமிஸ பட்சணஞ் செய்யும் வழக்கம், ஆயிரக் கணக்கான ஸ்திரீ புருஷரும் சிறுவர்களும் மிருகங்களை நினைக்கக்கூடாத வண்ணம் கொடுமையாக வெட்டி வதைசெய்தல் முதலிய கேவலமான வேலைகளைச் செய்வதால், அவர்களைக் கேவலமானவர்களாயும் கொடுமையான மிருகத்தன முள்ளவர்களாயும் செய்து விடுகின்றது. அஃது அவர்களது பின் சந்ததியாரிடத்திலும் பெருந் தீமைகளையும் கொலைப் பாதகத் தன்மையையும் உண்டு பண்ணுகின்றது. அதனால் அது பொதுவாக ஜனசமூகத்திற்கே மிகுந்த கஷ்டத்தையும் நஷ்டத்தையும் உண்டு பண்ணுகின்றது.

9. இயற்கை யானதும் மாமிஸ பட்சண மல்லாததுமான (சாகபதார்த்த) ஆகாரத்தைக் கைக்கொள்வது விவசாயத்தொழில் முயற்சி மிகுதியாகச் செய்யும்படி செய்வதற்குக் காரணமாகின்றது. ஆடுமாடுகளை வளர்ப்பதை விட, நிலத்தில் கனிவர்க்கங்கள் தரும் விருக்ஷ ஜாதிகள், பலவகைத் தானியங்கள், காய் கறிகள் முதலியன சாகுபடி செய்வதில் மனிதர் முயற்சி செய்தால் அதனினும் எட்டு மடங்கு மிகுதியான லாபம் கிடைக்கும். இதனால், இப்பொழுது வரவரப் பயங்கரமாக நாட்டுப் புறங்களில் ஜனங்களின் வாசம் குறைந்து வரும் கேடும், பட்டணங்களில் மூச்சு விடவும் இடமின்றி ஜனக்கூட்ட மிகுதியாகிக் கொண்டு வரும் கேடும் நிவிர்த்தியாய் விடும். (பூமி திருத்தி யுண் என்னும் ஆன்றோர் நீதியின்படி) மீட்டும் பூமியை நாடுத லேற்படுமாயின், அது சோம்பேறிகள் அயோக்கியர் முதலிய தாழ்ந்த வகுப்பாரின் கஷ்டங்களையும் நமது ஜாதியாரின் சீரழிவையும் நிவிர்த்திசெய்வதற்குத் தக்க வழியாகும். இதனால் ஆகாரத்திருத்தம் ஒவ்வொரு ஜாதியாரும் முன்னிலை யடைவதற்கு அவசியமாக விருக்கின்றது.

10. மாமிஸ ஆகாரம் மனிதனது (ஆத்ம) ஞான வளர்ச்சியையும் அபிவிர்த்தியையும் தடைசெய்கின்றது. அஃது அவனை ஸ்தூல சம்பந்தமான சிந்தனையையும் ஞானத்தையும் கொண்

டிருக்குமாறு செய்துவிடுகின்றது ; அதனால் அவனைக் கொடுமையுள்ளவனாகவும், குரூரமுள்ளவனாகவும், திருடுந் தன்மையுள்ளவனாகவுஞ் செய்து அவனது ஞானதிருஷ்டியை மறைத்துவிடுகின்றது. ஆதலின் இந்த ஆகாரத்திருத்த முயற்சியைச் சகல மதாபிமானிகளும் பரோபகார சீலர்களும் சிந்தித்து ஆதரிக்க வேண்டியது அவஸ்யமாம். ஏனென்றால், அஃது எம்மதத்திற்கும் சம்மதமான ஜீவகாருண்ணிய நிலையை அடைவதற்குப் பெருந்தடையாயுள்ள கொலைப்பாவத்தை நிவிர்த்தி செய்கின்றது.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந் தொழும்.

---


## சக்ரவர்த்தினி.

இப்பத்திரிகை சென்ற 13 வருடங்களாகச் செவ்வனே நடைபெற்று வருவது பிரசித்தமாம். எமது வாயிலாக இது சென்ற 6 வருடங்களாக நடைபெற்று வருகின்றது. இதில் கல்வி யறிவு அபிவிர்த்தி யாவதற்குரிய விஷயங்களும், மாதராடவர் தருமங்களும், மனோலய சாதனங்களும் பிறவும் செவ்விய நடையிலெழுதப்பட்டு வருகின்றன.

வருட சந்தா ரூ.2 0 0

---

## லோகோபகாரி.

இது சோமவாரந்தோறும் சென்னை, கோமளேசுவரன் பேட்டையில் பிரசுரமாகுந் தமிழ்ப் பத்திரிகை; 22 வருடகாலமாகச் செவ்வனே நடைபெற்றுவருகின்றதென்பது பிரசித்தமாம். இஃது ஏனைய பத்திரிகைகளைப் போலல்லாது மக்களாய்ப் பிறந்தோர் பெறவேண்டிய பெரும்பேற்றை யடைதற்குரிய சாதனங்களை யாவரும் சுலபமாக அறியுமாறு போதித்து வருவதாம். இதுவேயுமன்றி இதில் கைத்தொழில், கல்வி, சுதேசிய, விதேசிய முதலிய அநேக விஷயங்கள், சிறுவர் சிறுமியர் யாவர்க்கும் பயன்படுமாறு செவ்விய நடையி லெழுதப்பட்டு வருகின்றன. தினசரிப் பத்திரிகை வாங்குவோரும் இப்பத்திரிகையின் ஒரு பிரதியை வாங்கிப் படிப்பார்களாயின், இதனை மறந்துங் கைவிடமாட்டார்களென்பதும், இஃது ஒவ்வொரு வீட்டிலுமிருத்தற்குரியதா மென்பதும் நன்கு விளங்கும். சாம்பில் காப்பி ஒன்று இனாமாக அனுப்பப்படும்.

### சந்தா விவரம்.

இந்தியா, சிலோன், பர்மாவிற்கு.

ஆறு மாதத்திற்கு ரூபாய் 1-14 | ஒரு வருடத்திற்கு ரூபாய் 3 -8

(நேட்டால்-சிங்கப்பூர்-பினாங்கு).

ஒரு வருடத்திற்கு ரூபாய் 5- 8 | ஆறு மாதத்திற்கு ரூபாய் 3 - 0


5-APR-1938 MADRAS

# சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL -13 தொகுதி- 13 | January-1918. ஜனவரி மீ 1918. | No -.6 பகுதி – 6.

## நாலடியார் வசனம்.

### 6. வது துறவு.

அஃதாவது யானெனதென்னு மிருவகைப் பற்றையும் விடுதலாம். இஃது உடம்பின் தூய தன்மையை யுணர்ந்தார்க்கன்றி மற்றவர்க் குண்டாகாதாகலின், அது பற்றித் தூயதன்மையின் பின் வைக்கப்பட்டது.

பாவம் இதனால் கெடும் ; இதனால் வளரும் எனக் கூறல்.

(1) விளக்கு வந்தவிடத்து இருள் கெடுவதுபோல ஒருவன் செய்த தவத்திற்கு முன் (அவன் செய்துள்ள) பாவம் கெட்டுப் போவதாம் ; அவ்விளக்கிலுள்ள (அகலிலுள்ள) நெய் குறைந்தவிடத்து இருள் வந்து பரவிவிடுதல்போல (அவன்) நல்வினைசெய்து குறைந்தவிடத்துப் பாவம் (வந்து வியாபித்து) நிலைபெறுவதாம்.

விளக்கு - தீபம். அவஞ்செய்வதொழிந்து தவஞ்செய்து வருபவரிடத்துப் புண்ணியம் பெருகும் ; பாவம் குறையுமென்றிங் குணர்த்தியவாறும்.

(க - து,) விளக்கின் முன் இருள்கெடுவதுபோலத் தவத்தின் முன் பாவம் கெடுவதாம் ; விளக்கில் எண்ணெய் குறைந்தவிடத்து

இருள் வந்து சேர்வதுபோல நல்வினை செய்வது குறைந்துவிடத் துப் பாவம் வந்து சேர்ந்து விடுமென்பதாம்.

ஒவ்வொருவரும் கருவி நூல்களைக் கற்பதிலேயே
காலத்தைக் கழிக்காது, தமது கருமமாகிய
தவத்தைச்செய்ய வேண்டுமெனல்.

(2) கல்வி கேள்வி அறிவு ஒழுக்கமென்பனவற்றால் முதன்மை பெற்றிருப்பவர் உடம்பானது நிலையாமையும், நோயும், மூப்பும், மரணமுமுடையதாமென் றுணர்ந்து (அதனிடத்துப் பற்றுச் செய்வ தொழிந்து) தமது (சொந்த) கருமமாகிய தவத்தைச் செய்து வருவர்; (உயிர்க்கு உற்ற துணையாயுள்ள தவத்தைச் செய்ய முயலாது) இலக்கண நூல் தருக்க நூலென்னு மிவற்றை ஓய்வில்லாது படித்து வருபவர் பித்தராவர்; இப்பித்தர்களைப் போல மூடர் (உலகத்தில் எங்கும்) இல்லை.

இலக்கண நூல் - நன்னூல் தொல்காப்பிய முதலியனவாம். தருக்கநூல் - தருக்க பரிபாஷை, நியாயப் பிரகாச முதலியன வாம். இவை எந்த நூலையுங் கற்பதற்குச் சாதனமா யிருத்தலின் கருவி நூல்களெனச் சொல்லப்படுகின்றன. தருக்க நூலில் கணித நூலும் சோதிட நூலு மடக்கமாமென் றிங்குணர்தல் வேண்டும்.

தவம் துறவறம் நிலைபெறுதற்குச் சிறந்த காரணமாமென் றிங்குணர்தற் பாலதாம்.

(க - து.) கருவி நூல்களையே படித்துக் காலங் கழிப்பது கூடாது; பெரியார் கூறியவாறு தவத்தைச் செய்துவருதல் வேண்டு மென்பதாம்.

துறவறம் பெறுதற் கேதுவைக் கூறல்.

(3) கல்வி கேள்வி முதலியவற்றாற் றலைமைபெற் றிருப்பவர் இல்வாழ்க்கை, இளமைப் பருவம், எழில், வனப்பு, சொற்செலவு, செல்வம், வலியென்று கூறப்படுமிவை யனைத்தும், நிலைபெற்றிரா மையை நிதானமாக ஆலோசித்தறிந்து தாம் கடைத்தேறுதற் பொருட்டு (ஒன்றையும் விரும்பாமையை மனத்திற்)கொண்டு (பின்னே பார்த்துக்கொள்ளுவோமென்று) தாமதஞ் செய்யாது, துறவறத்தை மேற்கொள்வர்.



எழில் - தேககாந்தி, வனப்பு - அழகு, சொற்செலவு - சொன்னபடி யாவரும் நடத்தல். வலி - சாமர்த்தியம். அது தன் வலியும் துணைவலியுமாம்.

(க - து.) அறிவுடையார் இல்வாழ்க்கை முதலிய வனைத்தும் மேகத்திற் றோன்றும் மின்னல்போல விரைந்தழிவனவா யிருத் தலை யாலோசித்துணர்ந்து, தாமதஞ் செய்யாது தமது கரும மாகிய தவத்தைச் செய்யத் துறவறத்தை மேற்கொள்ளுவாரென்ப தாம்.

அறிவுடையார் துறவறத்தை மேற்கொள்ளுவர்; அஃதில்லாதார்
இல்லறத்திலேயே யுழல்வரெனல்.

(4) அறிவில்லாதவர் துன்பத்தைப் பலநாள் அனுபவித்து வந்தும், ஒருநாள் கிடைக்கும் இன்பத்தையே விரும்பி இல்லறத்தி லிருந்துழன்று வருகின்றனர்; நிரம்பி யமைந்த அறிவுடையவரோ (இல்வாழ்க்கையில் வரும்) இன்பம் இடையே மாறிப்போவதை யறிந்தும் அதனால் விளையும் துன்பத்தை யாராய்ந்து நோக்கியும் இல்வாழ்க்கை வழியிற் செல்லுவதினின்றும் நீங்குவாராயினர்.

இதனால் இன்பந் துறவறத்திலன்றி இல்லறத்திலில்லையென வுணர்த்தியவாறறிக.

(க - து.) அறிவில்லாதவர் இல்லறவாழ்க்கையில் ஒருநாள் கிடைக்கும் இன்பத்தை விரும்பி, அதனைவிடாது துன்பத்தைப் பலநாளடைந்து வருகின்றனர்; அறிவுடையவரோ இல்லறத்தில் வரும் இன்பம் இடையே மாறிப் போவதையும் அதனால் வரும் துன்பத்தையும் ஆராய்ந்துணர்ந்து, துறவறத்தை மேற்கொள்ளு கின்றன ரென்பதாம்.

இளமை கழிதலையும் பிணியும் மூப்புப் வருதலையும்
ஆராய்ந்து நோக்கினால், துறவறத்தில் செல்லுதற்குரிய
அறிவு உண்டாமெனல்.

(5) (என்று மிருப்போமென்னும்) நிச்சயத்தைக்கொண்டு என்னோடு (யாது பற்றியும்) ஆலோசனை செய்யாது (விரும்பிய வாறு) செல்லுகின்ற மனமே! இளமைப் பருவமும் பயன் தருத லில்லாமலே கழிந்துவிட்டது; பிணியும் மூப்பும் வந்துகொண்டே யிருக்கின்றன. (இவற்றைச் சிந்தித்துநோக்கி) நமக்குச் சன்மார்க்

கத்திற் சேருதலுண்டாக (நீ யெனக் கிணக்கமாக விருந்து) வர மாட்டாயோ?

இது தனது வாழ்நாள் பயன் தருவதாகாது கழிந்ததை நோக்கி வருந்திய ஒருவன் தன் னெஞ்சினை விளித்துக் கூறியதாம்.

பிணி - நோய், மூப்பு - கிழத்தனம், சன்மார்க்கம் - துறவற மார்க்கம்.

(க - து.) இளமை கழிந்ததையும், பிணி மூப்புவந்து கொண்டிருத்தலையும் கவனித்து, விரைந்து துறவறத்தை மேற்கொண்டு நன்மையடைய முயலுதல் வேண்டுமென்பதாம்.

விவாகஞ் செய்துகொண்டபின், துறவைக்கொள்வது
முடியாததாகத் தோன்றுதலின், அதற்கு முன்னரே துறவைக்
கொள்ளவேண்டு மெனல்.

(6) மனையாள் மாட்சிமையுடைய குணங்களும் மக்களைப் பெறுதலு மில்லாதவளா யிருப்பினும், அவளைவிட்டுத் துறவைக் கொள்வது அவள் கணவனுக்கு அருமையாகத் தோன்றுவதாம்; ஆகலின், அவன் தானடந்துள்ள வறுமையென்னுங் காரணம் பற்றி, மேலாகிய துறவற மார்க்கத்திலே நின்றொழுக, அற நூல்களை யுள்ளவாறு கற்றறிந்த பண்டிதர்கள் (விவாகத்தைக்) கடியென்று கூறினார்கள்.

விவாகத்திற்குக் கடியென்று மொருபெயருண்டு; கடியென்பதற்கு விடு என்றும் ஒரு பொருளுண்டு.

(க - து.) மனையாள் தீக்குண முடையவளாயும் மலடியாயுமிருப்பினும், அவளை விட்டுத் துறவைக்கொள்வது கஷ்டமாகத் தோன்றும்; அதனால், ஒவ்வொருவரும் விவாகஞ் செய்துகொள்வதைத் தமக்குள்ள வறுமையை முன்னிட்டு விட்டுவிட்டால், துறவற மார்க்கத்திலொழுகி, நற்கதி யடையலா மென்பதாம்.

விரதமுள்ளவரே துறவறத்தைப் பாதுகாப்பவ ராவரெனல்.

(7) உறுதியாகத் தாங்கள் மேற்கொண்ட விரதங்களை மனங் கலங்கும்படி பொறுத்தற்கரிய துன்பங்கள் தம்மிடத்து வந்தவிடத்தும், (அவற்றைக்) கவனியாது, நிலைபெறச் செய்யும் மனவலியுடையவரே நல்லொழுக்கத்தைப் பாதுகாக்குஞ் சிறப்புடையவராவர்.



நல்லொழுக்க மென்றது இங்குத் துறவற மார்க்கத்தி லொழுகுதலை. விரதங்களாவன:—இன்னவறஞ் செய்வே னென்றும், இன்னபாவ மொழிவேனென்றும், ஒவ்வொருவரும் தமது சக்திக்கேற்ப ஏற்படுத்திக் கொள்வனவாம். அவை யளவில்லாதனவாம். அவை கிரிச்சரம், சாந்திராயண முதலியனவாம். துன்பங்களாவன:—தன்னை (உடம்பை)ப் பற்றிவரும் துன்பமும், பிறவுயிர்களைப்பற்றிவரும் துன்பமும், தெய்வத்தைப் பற்றிவரும் துன்பமுமாம்.

(க - து.) தாம் மேற்கொண்ட விரதங்களைத் தமக்குவரும் துன்பங்களுக் கஞ்சிவிடாது மனவுறுதியோடு செய்து வருகின்றவரே துறவறத்தைப் பாதுகாத்தற் குரியவராவ ரென்பதாம்.

துறவறத்தார் பொறுமையும் இரக்கமு முடையவரா
யிருத்தல் வேண்டுமெனல்.

(8) துறவறத்தால் நிறைந்து விளங்குகின்றவரது கடமை அவர் பிறர் தங்களை நிந்தித்துப் பேசினவற்றைத் தாம் பொறுத்துக்கொள்வதே யல்லாமல், இவர் எம்மை நிந்தித்துப் பேசிய தீவினையின் பயனாக மறுமையில் நெருப்பு நிறைந்துள்ள நகரத்திலே விழுந்து வருந்துவாரேயென் றிரக்கங்கொள்ளுவது மாம்.

மறுமை - இறந்தபின் வரும் நிலை.

(க - து.) உண்மைத் துறவிகள் பிறர் தம்மை நிந்தித்துப் பேசினால் அதற்கு மாறுபேசாது அதனைப் பொறுத்துக் கொள்வார்; அதனால் அவர் மறுமையில் நரகத்தை யடைந்து வருத்தமடைவாரேயென் றிரக்கங்கொள்வ ரென்பதாம்.

இந்திரிய நிக்கிரகஞ் செய்பவன் தவறாது
மோட்சமடைவானெனல்.

(9) மெய், வாய், கண், மூக்கு, செவியெனப் பெயர் பெற்றுள்ள ஐந்து இந்திரியங்களின் வழியாக வருகின்ற எனக்கு இது வேண்டுமென்னும் அவாவைத் துறவற ஒழுக்கத்தில் நின்று மனங்கலங்குத லில்லாதடக்கி (அவ்விந்திரியங்களைத் தாம் விரும்பிய மார்க்கத்தில்) செலுத்துகின்ற வல்லமையுடையவன் தவறாது மோட்சமடைவான்.

(க - து.) இந்திரியங்கள் வாயிலாக வருகின்ற ஆசையைத் துறவற மார்க்கத்திலிருந்து கெடுத்து, அவற்றைத் தமது வழியில் நிறுத்துகின்றவன் நிச்சயமாக மோட்சமடைவானென்பதாம்.

அறிவிலார் இல்லற வின்பத்தை விரும்புவர்:
அஃதுடையார் துறவற வின்பத்தை விரும்புவரெனல்.

(10) அறிவில்லாதவர் (இல்வாழ்க்கையில்) துன்பமே அதிகரித்துவரக் கண்டும், துறவறத்தை மேற்கொண்டொழுகச் சிறிதும் நினையாது (அவ்வாழ்க்கையில்வரும்) இன்பத்தையே விரும்பியிருக்கின்றனர்; அறிவுடையார் (இல்வாழ்க்கையில்) இன்பம் வருந்தோறும் அதனால் வருந் துன்பத்தை (ஆராய்ந்து) நோக்கி, (இல்வாழ்க்கையில்) விருப்பமாக விருத்தலை விரும்பார்; (துறவற வாழ்க்கையையே விரும்புவர்).

(க - து.) இல்வாழ்க்கையில் இன்பம் வருந்தோறும் துன்பம் பெருகிக்கொண்டே வருதலின், அறிவுடையார் அதனை விரும்பாது, துறவற வாழ்க்கையையே விரும்புவாரென்பதாம்.

# சுகாதாரம்.

## தானியங்கள்.

தானியங்களிலெல்லாங் கோதுமையானது மகாவிசேஷித்ததும் பலமுள்ளதுமான போஜனமாயிருக்கின்றது. ஏனென்றால் அதில் சதையையுண்டாக்குஞ்சத்து அதிகமாயிருக்கின்றது. நம்முடைய தேசத்தில் விசேஷித்த போஜனமாகிய அரிசியில் சதையையுண்டாக்குஞ் சத்து மிகவுஞ் சொற்பம். இந்தச் சொற்பத்திலும் ஒருபாகம் சோற்றை வடித்துப் போடுகிறதினால் வடிகஞ்சியில் சேர்ந்து நஷ்டமாய்ப் போகின்றது. ஆனால் கேழ்வரகு, அல்லது கேப்பை, சோளம், கம்புமுதலான தானியங்கள் சதையையுண்டுபண்ணுவதில் அரிசியைப் பார்க்கிலும் எவ்வளவோ மேலானவை. கேழ்வரகானது சதையை யுண்டாக்குஞ் சக்தியில் அரிசியைப் பார்க்கிலும் 2½ பங்கு அதிகமும், கோதுமைக்குச் சமம், அல்லது சற்று மேலனதாயுமிருக்கின்றது. கோதுமை, கேழ்வரகு, சோளம், கம்பு முதலிய தானியங்களைச் சாப்பிடுகிற ஜனங்களெல்லோரும் அதிக பலமும், உறுதியும், மிகுந்த சுகமும் பொருந்திய



தேகமுள்ளவர்களாயிருக்கின்றார்கள். மேலும் அவர்கள் பூரணமான தேகவளர்ச்சியை யடைந்து, நீடிய சுகத்தையும் ஆயுளையும் அநுபவித்து வருகின்றார்கள். ஆனால் அரிசிச்சோற்றைச் சாப்பிடுகிறவர்களெல்லோருங் குன்றினதும் பலவீனமுள்ளதுமான சரீரத்தை யுடையவர்களாயிருக்கின்றார்கள், மேலும் அவர்கள் ஏனைய தானியங்களைச் சாப்பிடுகிறவர்களைப்போல் பிரயாசத்தையும், உழைப்பையுந் தாங்கமாட்டார்கள்.

சேலத்திலிருந்த ஓர் ஐரோப்பிய வைத்தியர் கேழ்வரகின் குணத்தைப்பற்றிச் சொல்லுகிறதென்னவென்றால், கேழ்வரகைச் சாப்பிடுகிற ஜனங்கள் சதை புஷ்டியுள்ளவர்களாயும் உறுதியான கட்டுச் சரீரமுள்ளவர்களாயும் சொறி சிரங்கு முதலிய தோலைப் பற்றிய வியாதிகளை யடையாதவர்களாயும் எவ்வித கடினமான வேலையையும் யாதொரு சோர்வின்றி ஊக்கத்துடன் செய்து நிர்வகிக்கத் தக்கவர்களாயுமிருக்கிறார்களென்கிறார். மதுரை ஜில்லாவிலிருந்த ஒரு டாக்டர் கம்பு என்கிற தானியத்தைப் பற்றிப் பேசும்பொழுது மதுரை ஜில்லாவின் தென்கிழக்குப் பக்கத்தில் வாசம் பண்ணுகிற ரெட்டிகளென்னப்படுகிற ஜனங்கள் கம்பு ஒன்றையே விசேஷமாகச் சாப்பிட்டு வருகின்றார்கள். அவர்கள் அதிக உயரமாய் வளர்ந்த ஆட்கள். அவர்கள் உறுதியும் பலமும் இறுகினதுமான சதை புஷ்டியுள்ள தேகமுள்ளவர்கள். அவர்கள் பயிரிடுகிற வியவசாயத் தொழிற்காரர். அவர்களிற் சிலரை அளந்துபார்த்ததில் ஆறு அடிக்குக் குறையாத உயரமுள்ளவர்களாயிருந்தார்கள். இந்த உயரத்திற்குத் தகுந்த பருமனுமுடையவர்களாயிருக்கின்றார்கள் என்கிறார்.

கடப்பையிலிருந்த ஒரு வைத்தியர் இந்த ஜில்லாவில் விசேஷமாய்ச்சோளத்தை ஜனங்கள் சாப்பிட்டு வருகிறார்கள். அது தேகத்திற்கு சுகமுள்ளதாயும் சதையை அதிகமாய் வளர்க்கத்தக்கதாயுமிருக்கின்றது. கடினமும் பிரயாசையுமுள்ள வேலைகளைச் செய்கிற ஜனங்கள் இயல்பாய் அரிசிச் சோற்றை முற்றிலுந் தள்ளிவிட்டு சோளத்தையே விசேஷமாய்ச் சாப்பிட்டு வருகிறார்கள் என்கிறார். வேறொரு டாக்டர் மராட்டிய ஜனங்கள் அரிசியை மிகவுஞ் சொற்பமாயும் கேப்பை, கம்பு, சோளம் முதலிய தானியங்களை மிகவும் விசேஷமாயும் கையாண்டு வருகிறார்கள். அவர்கள் உறுதியும் பலமும் பொருந்திய தேகமுள்ளவர்கள். அவர்கள் எவ்வித பிரயாசத்தையும் தாங்கத்தக்கவர்கள்; அவர்கள்

வாசம்பண்ணுகிற நாடு ஒருவாறு சுகவீனமுள்ளதா யிருந்தபோதிலும் அவர்களுடைய சாப்பாட்டின் மூலமாய் அதிக சுகமுள்ளவர்களா யிருக்கிறார்கள் என்கிறார்.

மேலே காட்டப்பட்ட பிரகாரம் தேகத்திற்குப் பலத்தையும் சுகத்தையும் வருவிப்பதில் அரிசியானது கேழ்வரகு, கம்பு, சோளம் முதலிய தானியங்களைப் பார்க்கிலும் தாழ்வாயிருந்தும் பொதுவாய் நமது தேசத்து ஜனங்கள் அரிசிச் சோற்றையே அதிக மேன்மையாகப் பேசுவதும் அதையே ஆசிக்கிறதும் ஆச்சரியமான காரியந்தான். கேழ்வரகு, கம்பு, சோளம் முதலான தானியங்கள் சதையை வளர்க்கிற சத்துவத்தில் அரிசியைப்பார்க்கிலும் இரண்டு அல்லது இரண்டரைப் பங்கத்தனை அதிகமுள்ளவைகள். மேலும் அவைகள் அரிசியைப் பார்க்கிலும் கிரயத்தில் இரண்டத்தனை சகாயமாயுமிருக்கின்றன. சில வேளைகளில் ஒரு பவுன் நிறையுள்ள அரிசியின் கிரயத்தினால் 3-அல்லது 4-பவுன் நிறையுள்ள ஏனைய தானியங்களை வாங்கலாம். இப்படியிருந்தும் ஜனங்களுடைய பிரியம் அரிசியின்மேலேயே சாருகின்றது. கடினமான தேக உழைப்புள்ள எளிய ஜனங்கள் தாங்கள் செய்யவேண்டிய முயற்சிகளைத் தாங்குவதற்கு அரிசிச்சோறு ஏற்றதல்லவென்பதையும், அரிசியின் கிரயம் அதிகமென்பதையும் அநுபவத்தினால் கண்டு அரிசியை நீக்கிவிட்டு ஏனைய பலமுள்ள தானியங்களையே சாப்பிட்டு வருகிறார்கள். ஆயினுஞ் சமயா சமயங்களில் அவர்கள் அரிசிச்சோற்றையும் நெய்யையும் நினைத்துப்பெருமூச்சுவிடுகிறார்கள். இதற்குக் காரணமென்னவென்றால் நமது தேசத்தில் பெரும்பான்மையும் யாதொரு தேகமுயற்சியு மற்றுச் சோம்பலா யிருக்கிற ஐசுவரியமுள்ள உயர்ந்த ஜனங்கள் அரிசிச்சோற்றை விசேஷமாய்ச் சாப்பிட்டுவருகிறபடியால், வேலைசெய்கிற எளிய ஜனங்கள் பெரியவர்களும் ஐசுவரியவான்களும் சாப்பிடுகிற போஜனத்தைத் தாங்களுஞ் சாப்பிட்டால் அதனால் கனம் வருமென்று வீணாய் எண்ணிவருகிறார்கள். இப்படியே ஏனைய தேசங்களிலும் பிரபுக்களும் ஐசுவரியவான்களுஞ் செய்கிற சில காரியங்கள் எவ்வளவும் பிரயோஜனமற்றவைகளா யிருந்தபோதிலும் எளிய ஜனங்கள் அவைகளைத் தாங்களுஞ் செய்யக்கூடுமானால் அதனால் தங்களுக்குப் பெருமையுங் கனமு முண்டாகுமென்று அவிவேகமாய் நினைத்து அநேக தவறுகளுக்குள்ளாகின்றார்கள். (வரும்)

## வெற்றியின் மர்மம்.

ஜப்பானில் சுவாமி ராமதீர்த்தர் செய்த உபந்யாசம்.

இந்தியாவிலிருந்து வந்த அன்னியன் ஒருவனுக்குப் பிரத்தியக்ஷத்தில் இந்தியரினும் ஜப்பானியரால் அதிநுட்பத்துடன் கையாளப்பட்டுவரும் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசுவது அதிசயமாகத் தோன்றுதா? தோன்றலாம். ஆயின் இவ்விஷயத்தில் உங்கள் முன் ஒரு போதகனாக நான் நிற்கின்றேன். அதற்குக் காரணம் ஒன்றன்று, பல உள. ஒரு கொள்கையைச் சாமர்த்தியமாகப் பழக்கத்துக்குக் கொண்டுவருவது ஒரு விஷயம்; அதனது சூக்ஷ்மார்த்தத்தை அறிவது வேறு விஷயம். இன்று சில பொது விதிகளை அநுஷ்டானத்தில் கொண்டு ஒரு ஜாதி செழிப்பும், செல்வமும் பெறலாம். ஆயின் அவ்விதிகளின் சூக்ஷ்மார்த்தங்களைத் தெளிவாக அந்த ஜாதி அறியாமலும் அதற்கு ஆதாரங்களை உள்ளபடி உணராமலும் போகுமாயின் அந்த ஜாதியின் அழிவுக்கு ஆபத்துக்கள் கணக்கில்லாது காத்துக்கொண்டிருக்கின்றன. ரசாயன சோதனைச் சாலையிலுள்ள கூலிக்காரனொருவன் ஒரு சேர்மானம், அல்லது திராவகம் செய்யப் பழகிக்கொண்ட மாத்திரத்திலேயே ரஸாயன பண்டிதன் ஆய்விடமாட்டான். ஏனெனின், அவனது வேலைக்குச் சரியான ஆதாரம் அவன் உணர்ந்திருக்கவில்லை. புகைவண்டியில் நெருப்பெரிய விடுபவன் சாமர்த்தியமாய் வண்டி நடத்தத் தெரிந்துகொண்டதினாலேயே ('இஞ்ஜினீர்') சிற்பன் ஆய்விடமாட்டான். ஏனெனின் அவன் சாமர்த்தியம் வெறும் பழக்க மாத்திரத்தானே வந்தது. காயம்பட்ட இடத்தை ஒரு வாரம்வரை துணியால் இறுகக்கட்டித் தினந்தோறும் வாளால் தடவிக் குணப்படுத்தும் ஒரு வைத்தியரைப் பற்றிய கதையை நீங்கள் படித்திருக்கலாமே. காற்றுப்படாதபடி கட்டுப் போட்டிருந்ததினாலே காயம் ஆறிற்று; ஆனால் அவன் தன் மந்திரவாளின் ஸ்பரிச சக்தி யென்று சொல்லிவந்தான். நோயாளிகளும் அங்ஙனமே எண்ணி யிருந்தார்கள். இதை நினைத்துக் கொண்டு வெறும் கட்டினாலேயே குணப்படுத்தக்கூடாத காயங்களுக்கும் அவன் வாளால் தடவ ஆரம்பிக்கவே அது பயனொன்று மில்லாது போய்விட்டது. ஆதலின், நோய் குணப்படுத்தும் ஒருவன் "நோய்நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச்செயல்" என்ற மூதுரையின்படி நடத்தல் அவசியம். அங்ஙனமே எக்காரியம் செய்யினும் அதைப் பற்றிய தெளிவான

உணர்ச்சியும் தெளிவான ஆசரணையும் இன்றியமையாதன. இரண்டாவதாக, ஜப்பானை என் சொந்தத் தேசமாகவும் அதில் வசிக்கும் உங்களை என் தேசத்தவராகவும் மதித்திருக்கிறேன். உங்கள் முன்னோர்கள் ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்தே வெளியேறினவர்களென்பதைத் தக்க காரணங்கள் காட்டி நிரூபிப்பேன். ஆதலின் உங்கள் முன்னோர்கள் எனக்கும் முன்னோர்களே. இக்காரணங்கொண்டுதான் உங்களை நான் சகோதரர்போல ஆலிங்கனம் செய்யவந்தேன். அன்னியனென்ற பாவத்தோடல்ல.

இன்னொரு காரணமும் உண்டு. உங்களிடம் இவ்வளவு பாத்தியத்தைக் கொண்டாடுவதற்கு, பிறந்தநாள் முதலாகவே குணத்திலும், நடையிலும், வழக்க ஒழுக்கங்களிலும் நான் ஒரு ஜப்பானியனாகவே இருந்து வருகிறேன். இவ்வளவு முன்னுரைபோதும். இனி எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றிப் பேசுகிறேன்.

வெற்றியின் ரகஸ்யம் வெளிப்படையான ரகஸ்யமே. ஒவ்வொருவருக்கும் இந்த விஷயத்தைப்பற்றிச் சொல்லச் சிறிது இடமிருந்துகொண்டேயிருக்கிறது. ஒருவேளை நீங்களும் இதன் பொதுவிதிகளை அநேகர் விளக்க அடிக்கடி கேட்டிருக்கலாம். எனினும், அதன் மர்மம் ஜனங்களின் மனத்திலே பழகிப் பதியும் வரை எத்தனை முறை அதைப்பற்றிப் பேசினும் குற்றமாக முடியாது.

### வெற்றியின் முதல் அம்சம் கர்மம்.

முதலிலே, நம்மைச் சுற்றியுள்ள பிரகிருதி தேவியினிடம் இதைப்பற்றிக் கேட்போம். ஓடிக்கொண்டிருக்கும் நீரோடைகளும், ஓய்ந்துகிடக்கும் கற்களும் ஓய்வொழிவற்ற இடையீடில்லாத உழைப்பைப்பற்றி உச்ச ஸ்வரத்தில் நமக்குப் பிரசங்கித்த வண்ணமாயிருக்கின்றன. ஜோதி நமக்குப் பார்க்கும் வல்லமை அளித்திருக்கின்றது. அது ஜீவராசிகளுக்கெல்லாம் ஆதாரமான ஊற்றையும் உதவுகின்றது. இத்தகைய ஜோதி நமது கேள்விக்கு என்ன விடை தருகிறதென்று பார்ப்போம். உதாரணமாக, சாதாரண ஒரு சிறு ஜோதியை-ஒரு விளக்கை-எடுத்துக் கொள்வோம். அவ்விளக்கின் ஒளி என்ன மர்மத்தை விளக்கிற்று? பிரகாசமுண்டுபண்ண எண்ணெயையும் திரியையும் அவ்விளக்கு எண்ணிப் பார்க்கவில்லை; தத்தம் செய்தது. திரி எண்ணெய் சிறுநாள் ஓய்வில்லாது ஒழிய ஒளி தானே விளங்கிற்று. அதுதான்



மர்மம் என்று விளக்குக் காட்டிவிட்டது. உன்னை ஒழிக்கச் சற்றுப் பின்வாங்கு, உடனே நீ அணைந்துவிடுவாய். இருள்மயமே - பின்னர். உன் சரீரத்திற்குச் சுகமும் ஆறுதலும் தேடி காமாநுபவத்திலும் ஆடம்பரத்திலும் காலங்கழிப்பையேல், நீ கடைத்தேறமாட்டாய். சுறுசுறுப்பின்மை, உழைப்பின்மை உன்னிடம் தலையெடுக்க ஆரம்பித்ததோ நீ இறந்தாய் என்றெண்ணிக்கொள். உழைப்பு ! உழைப்பொன்றே ஜீவன். நீர் கட்டிக்கிடக்கும் குளத்தையும், ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றையும் பார். இறைச்சலிட்டுச் செல்லும் ஆற்றின் ஜலம் தெளிவாயும் எப்பொழுதும் புதிதாயும், குடிப்பதற்கேற்றதாயும் கண்ணைக் கவர்வதாயும் இருக்கின்றது. ஆயின் போக்கற்ற குளத்து நீரோ பார்க்கச் சகிக்கவில்லை. அழுக்கும், புழுவும் படிந்து நாற்றமெடுக்கின்றது. ஆதலின் வெற்றிபெற உனக்கு எண்ணமிருக்குமாயின், உழைப்பின் வழியைப் பற்று; நதியின் ஓய்வில்லா ஓட்டத்தை எண்ணிப்பார். திரியும் எண்ணெயும் எரிந்து தீரவொட்டாது கெடுக்கும் மனிதன், கதி காணப்போகின்றதில்லை. அவன் ஈடேற வழியேயில்லை. தன் போக்குக்கு மென்மேலும் வழியுண்டு பண்ணிக்கொண்டு தடையாயெதிர்ப்படும் எவற்றையும் சிறிது சிறிதாகக் கரைத்துத் தன்வயப்படுத்தி, சுற்றிலுள்ளவற்றிற்குத் தக்கபடி தன்னை இசைத்துக் கொண்டு, எப்பொழுதும் தன் வேலையைவிடாது செய்துகொண்டு செல்லும் நதியின் போக்கைக் கவனி. உழைப்பு ! உழைப்பு !! இடைவிடா உழைப்பு ! ! ! இதுவே வெற்றிக்கு முதல்படி. “ நாள்தோறும் நன்மையின்படி உயரட்டும் ”

இம்முறைப்படி நீ உழைப்பாயாயின் பெருமை, சிறுமையைப் போல அத்தனை எளிதுதான் உனக்கு.

### 2. தன்னை யிழத்தல்.

சிவப்பு நிறத்திலே எவர்க்கும் பிரியமுண்டாகிறது. கறுப்பை எவரும் வெறுக்கின்றனர். ஏன் அப்படி ? ஏன் ? அது பலர் உள்ளத்தையும் கவருகின்றது ? ஏன் இது பலர்க்கும் வெறுப்பாகின்றது. பௌதிக சாஸ்திரம் நிறபேதத்தின் இயல்பைப் பற்றி என்ன சொல்லுகிறது? செவப்பு செவப்பல்ல, பச்சை பச்சையல்ல, கறுப்பு கறுப்பல்ல. இன்னும் நிறமெல்லாம் கண்ணுக்குத் தெரிவதுபோல நிறங்கொண்டிருக்கவில்லை. செவப்பு ரோஜா அத்தகைய அழகிய நிறத்தைப் பிம்பித்தது, ஏற்றுக்கொள்ளாது தள்ளி

விட்டது. அதனாலேயே அந்நிறம் அதற்குக் கிட்டிற்று. சூரிய கிரணத்திலுள்ள மற்ற நிறங்களெவற்றையும் அந்த ரோஜா கவர்ந்துகொள்ளுகிறது எனினும் அதை அந்நிறங்களின் பெயரால் அழைக்கவில்லை. அங்ஙனமே பசிய இலையும், கிரணத்திலுள்ள பச்சை நிறமொழிந்த மற்ற நிறங்களை விழுங்குகிறது. எனினும், அது ஏற்றுக்கொள்ளாது வேண்டாமென்று வெறுத்துத் தள்ளிய அந்தப் பசுமை நிறமே அதற்கு நிறமா யமைகின்றது. வேண்டினுண்டாகத் துறக்க என்னும் ஆன்றோர் வாக்கு இங்கு எவ்வளவு பொருத்தமுடையதாகின்றது. கறுப்பு நிறமுள்ள பொருள்கள், எவற்றையும் பேருண்டியான்போல விடாது கவளீகரிக்கின்றன எனினும் வெளிச்சமில்லை; அப்பொருள்களுக்குத் தியானகுணமும் தர்மசிந்தனையுமில்லை. ஒரு கிரணங்கூட அவை திரும்புவதில்லை. எவற்றையும் விழுங்க எண்ணமே யன்றி கொடுக்கிறதென்ற பேச்சே அங்கில்லை. இதிலிருந்து உங்களுக்கென்ன தெரிகிறது? எவன் தனக்குள்ளதைத் தன் பக்கத்தாருக்குக் கொடுக்கப் பின் வாங்குகின்றானோ அவன் இக்கரியைப்போலக் கன்னங்கரேலென்று பிறர்க்குத் தென்படாது தொலைகின்றான். பெறும் வழிகொடுப்பதே நீ பெற விரும்பும் எதையும் கொடுத்துத்தீர். வெண்மை நிறங்காட்டும்; பொருள்கள் தாம் பெறும் நிறங்களெவற்றையும் பக்கத்திலுள்ள பொருள்களுக்குத் திரும்ப உடனுக்குடனேயே அளித்தல் வேண்டும். இம்மர்மத்தைக் கீர்த்திபெற விரும்பும் மனிதன் அறிதல் அவசியம். இதுபற்றியே கீர்த்தியின் நிறம் வெண்மை என்றனர்போலும். நம்மவர் வெள்ளைநிறப் பொருள்களின் இக்குணத்தை நீ பெறு, உடனே உன் காரியம் எல்லாம் வெற்றிபெறும். வெண்மை என்ற மாத்திரத்தாலேயே ஐரோப்பியர் என்கிறேனென்று நினைக்கிறாரே? அவர்கள்மட்டுமில்லை. வெள்ளைக் கண்ணாடிகள், வெண் முத்துக்கள், வெள்ளைப் புறாக்கள், வெண்பனி, இன்னும் சுத்தம், நன்மை, இவற்றின் குறிகள் எவையும் உங்கள் பெரும்போதகராக நிற்கின்றன. ஆதலின் இத் தியாக குணத்தைக்கொண்டு உரைக்கப்படுவதை யெல்லாம் பிறர்க்குக் கொடுத்த வண்ணமா யிருப்பாயாக. தன்னயம் உன்னை விழுங்க இடங்கொடாதே. வெண்மை நிறத்தைப்போலே நீ பெறுவதையெல்லாம் சிறிதும் உனக்கென்று வைத்துக்கொள்ளாமல், பிறர்க்கே அளித்துவிடு. ஒருவிதை மரமாக வேண்டுமாயின் முதலிலே அது அழுகித் தன்னை இழந்துவிடுவது நீங்கள் அறியாத காரிய



ல்லவே. தன்னை முழுதும் தியாகம் பண்ணிய விதையின் கடை யான பலனல்லவா பழம்? உபாத்தியாயர் எவரையும் கவனி; என் ாக்குமூலம் ஒரு சிறிதும் பிழையற்றதென்று நிரூபிப்பார்கள். வ்வளவுக்கெவ்வளவு குழந்தைகளுக்கு அவர்கள் சிரமமெடுத்துக் ல்வி போதிக்கின்றனரோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கும் ல்வி விருத்தியடைகின்றது. (வரும்)

# பக்தி.

## 11. தொடக்கத்தில் நீக்கவேண்டியவை.

பேரன்பையடைய உதவியாகப் பழகவேண்டியவற்றை-ஸாதனபக்தியை-ப்பற்றி இதுவரையில் ஒருவாறு விளக்கி முடித்தோம். இனிமேல், மேலான நிலைமையை யளிக்குங் "காதல்" அல்லது பேரன்பை-ஸாத்ய பக்தியை-ப்பற்றிக் கூறத் தொடங்குவோம். இந்த மேலான அன்பைக் கைகொள்வதற்குஞ் சில உதவி முறைகளைக் கைகொள்ள லின்றியமையாதது. அம்முறைகளெல்லாம் தன்னைத்தான் தூய்மையாக்-பரிசுத்தமாக்-கிக் கொள்வதற்குமட்டுமேதான். கடவுளது திருப்பெயரை உருவுப் போடல், பலவாறான செய்கைகளைக் கைகொள்ளல், வழிபடல், சில குறிகளைக் கைகொள்ளல் (அதாவது சில அடையாளங்களை யுடைத்தாவிருத்தல்) என்றிவைகளெல்லாம் உள்ளந் தூயதாக வேண்டியதற்காகும். இவையனைத்திலும் மிக மேலானதும், உள்ளத்தைத் தூயதாகச் செய்வதுமாயுள்ளது எல்லாப் பற்றையு மகற்றி விடுதலொன்றே. அஃதின்றிப் பேரன்பையடைய எவர்க்கு மியலாது. சிலர்க்கிது மிகுந்த அச்சத்தையுண்டாக்கிவிடும்; எனினு மஃதின்றி மெய்யறிவில் (ஆத்மஞானத்தில்) முன்னேற்றமடைய முடியாது. இந்தத் துறவானது நமது எல்லா யோகங்கட்கு மின்றியமையாதது. துறவு அல்லது பற்றின்மையே மெய்யறிவின் பெருக்கத்துக்கு நல்லதாகவும் இன்றி யமையாததாகவுமுள்ள பயிற்சிமுறை இதுதான் நேரான தர்மநிஷ்டை - இந்தப் பற்றின்மையானது, ஒருவன் எப்பொழுது உலக நோக்கத்தினின்று உள்ளத்தை நீக்கி உண்மையான ஆராய்ச்சியைத் தொடங்குகின்றானோ, காணப்படுகின்ற எல்லா ப்ரபஞ்சமும் உயிரற்ற (ஜடவடிவமான) தா யிருக்கின்றதென்றும், அதற்கெதிர்ப்படுங் காரணத்தால் ஆத்மாவும்,

உயிரற்றதுபோன்ற நிலைமையை யடைந்திருக்கிறதென்றும், அது தனது அழிவிற்கே யிடமாயிருக்குமென்றும், அதனால் தனது ஆத்மாவை ப்ரபஞ்ச நோக்கங்களினின்றுந் திருப்பிக் கடவுளை நோக்கிச் செலுத்த வேண்டுமென்றும், மற்றுமுள்ள ஆராய்ச்சிகளை யவனைப்போலத் தொடங்குகின்றனரோ,—அப்பொழுது மட்டுமே யவனுக்கெல்லாப் பொருள்களிடத்தும் பற்றின்மையென்பது கைகூடும். அப்பொழுது தான் அவனுக்கு மெய்ப்பொருளான ஆத்மஞானப் பெருக்கமுண்டாகும். இம்மையிலும், மறுமையிலும் யாதொரு பயனையும் விரும்பாது பயனைக் கடவுளுக் களித்துவிட்டு கடவுள் பொருட்டாகத் தொழில்செய்தலே கர்மயோகியினது கடமை; ராஜயோகியினது நிலை எவ்வாறெனில்; உலகம் முற்றிலும் ஜீவாத்மாவின் ஆளுகைக் குட்பட்டதாகின்றது. ஜீவாத்மாவானது உலகிலுழன்று பழகிய பிறகுதான், இயற்கையிலிருந்து தான் வேறுபட்டதாகக் காண்கின்றது. இந்த இயற்கையின் சேர்க்கை தனக்குச் சிறிது பொழுதுமட்டுமே யுள்ளதென்றும், தான் உண்மையில் "சித்" வடிவமென்றும், ஜடமாயிருக்கின்ற ப்ராக்ருதி யல்லவென்றும், அறிந்துகொண்ட பிறகு ஜீவாத்மாவானது தன் வடிவத்தை யடைகின்றது. ராஜயோகி உலகத்தில் பழக்கவாயிலாகப் பற்றின்மையை யடைகின்றான். ஆனால் ஞானயோகிக்குத்தான் மிகவுந் துயரத்தோடு கூடிய பற்றின்மையைக் கைகொள்ள வேண்டியிருக்கின்றது. முதலிலேயே உலகனைத்தும் பொய்த்தோற்றமென்றும் அவனறிதல் வேண்டும். இயற்கையில் காணப்படுகின்ற பலவாறான விசேஷ வல்லமைகளெல்லாம் ஆத்மாவினிடத்திலிருந்து தோன்றுவனவென்று அறியவேண்டும். மேலான தன்னறிவைக்கொண்டு மாயையோடு கூடியதான எல்லாப் பற்றுக்களினின்றும் விடுபட வேண்டும். ப்ரபஞ்சத்தில் தோற்றப்படுகின்ற எல்லாப் பொருள்களையும் ஒன்றுமட்டு மில்லை, உலகத்தையே அவன் நிகரின்றி ஒதுக்கித் தள்ளிவிடுகின்றான். லௌகிகமான எல்லாவிஷயங்களையும் அவனது உள் உறுப்புக்களினின்றும் விளையாட்டாய் நீக்கிவிடுகின்றான். இவ்வாறு அவன் ஒன்றையுஞ் சாராதவனாய் (பிறருதவி வேண்டாது) முழு உரிமையோடு கூடியவனாய் ஒருவனாய் விளங்கும் பொருட்டு முயல்கின்றான்.

எல்லாத் துறவு (நீக்கங்) களைக் காட்டிலும் மிகவு மியற்கையாக உள்ளது பக்தியோகி யுடையதாகும். இதில் யாதொரு துய



ரமுமில்லை; ஒன்றையும் வெறுக்க வேண்டியது மில்லை; ஒன்றினின்றும் விடுபட்டுப் பகைக்கவேண்டியது மில்லை. தொண்டனது துறவு மிகவு மெளிதானது; மிகவு மின்பமானது; மிக நுண்ணியது; தங்குதடையின்றி நீரோட்டம்போன்ற நல்ல விசையுள்ளது. அவை யெல்லாவற்றையும் விட அஃதியற்கைக்கு மிக்வும் பொருந்தியுள்ளதுமாகும். இவ்வகை விலக்குதலின் ஒரிழிய சேர்க்கை முதலியவற்றை நம்மைச்சுற்றிலும் நாம் ஒவ்வொருநாளுங் காண்கின்றோம். ஒருவன் ஒருபெண்ணைக் காதலிக்கத் தொடங்குகின்றான் சிலநாட்கள் சென்றதும் அவன் மற்றொருவளைக் காதலித்து முன்னையவளை வெறுத்து விடுகின்றான். அவளுடைய நினைவே இவனது மனதினின்றுந்தானே மிக எளிதில் நீங்கிவிடுகின்றது. அதுபோலவேதான் ஒரு பெண் ஒரு புருஷனைக் காதலிக்கின்றாள்; அதன்பிறகு அவள் மற்றொருவனை விரும்புகின்றாள். அப்பொழுது முதல் மனிதனது நினைவு இயற்கையாகவே அவளது மனத்தினின்றும் அடியோடு அகன்று விடுகின்றது. அவ்வாறே ஒருவன் முதலில் தனது ஊரினிடத்துப் பற்றுள்ளவனா யிருக்கின்றான்; பிறகு தன் நாடு முழுவதையும் நேசிக்கத் தொடங்குகின்றான். அப்பொழுது இயற்கையாகவே அவனிடத்தினின்றும் குறுகிய அறிவான தன்னூர்ப்பற்றானது தானே விலகிவிடுகின்றது. பிறகு அவன் உலகு முழுவதையும் நேசிக்கத் தொடங்குகின்றான்; அப்பொழுது தன்னூரினிடத்தோ, தன் வகுப்பினரிடத்து மட்டுமோ, உள்ள பற்றுகிய மயக்க மகன்று, எல்லா வுயிர்களிடத்தும் ஒற்றுமையான பேரன்பு தோன்றுகின்றது. கல்வியறிவில்லாத ஒருவன் சிற்றின்ப (விஷயஸுக) ங்களையே மிகுதியாக விரும்புகின்றான்; அவன் பிறகு கல்வி யறிவைப் பெற்றுத் தனது அறிவைச் சீர்படுத்திக் கொள்வானே யாயின், சிற்றின்பத்திலுள்ள பேராசையைச் சிறிது சிறிதாயகற்றிக் கல்வி கற்றுத் தெளிந்த அறிவை யடைய விரும்பி முயல்கின்றான். ஒரு நாய் தனக்குக் கிடைத்த உணவைச் சுவைத்து உண்பதுபோல ஒரு மனிதனாலுண்ண வியலாது. எனினும் மேலான அறிவோடு கூடியிருக்கும் ஒருமனிதன் கல்வி யறிவினால் மேம்பட்டு அதன் சுவையை நுகர்வதுபோல ஒரு நாய்க்கு முடியுமோ? ஒருகாலும் முடியாதல்லவா! இன்ப நுகர்ச்சியானது முதலில் பொறிபுலன்களைப் பற்றியதாகும். பிறகு ஒரு உயிரானது உயர்ந்த நிலைமைக்கு வரும்பொழுது மிக இழிந்ததான பொறி இ (சிற்றி) ன்பங்களிலுள்ள அவாவானது

குறைந்து ஒழிகின்றது. மனிதர்களில் ஒருவன் இயற்கையினால் எவ்வளவுக் கெவ்வளவு விலங்கினத்தின் நிலைமையி லிருக்கின்றானோ, அவ்வளவுக் கவ்வளவு அவனுக்குச் சிற்றின்பங்களில் அளவற்ற ஆசையுண்டாகின்றது; எனினுங் கல்விப்பயிற்சியினால் அறிவு வளரப்பெற்றவர்க்குப் பெரும்பாலுஞ் சிற்றின்ப விருப்ப மகன்றும், பாட்டு, கூத்து முதலான (சிறிது உயர்ந்த) இசை யின்பங்களிற் சுவை மிகுந்தும் வருவதைக் காண்கின்றோம். அவ்வாறே யொருவன் அறிவிற்கு முணர்வுக்கு மெட்டாததான "ஆத்ம ஸாக்ஷாத்காரத்" தை யனுபவிக்கும் பொழுது அவனிடத்துச் சிற்றின்பங்கள் (என்றுமட்டுமல்ல) கல்வியைப்பற்றிய (சிறிதுயர்ந்த) இன்பங்கள் கூடச் சுவையற்றதாய் விடுகின்றன. (பேரின்பத்தின்முன் சிற்றின்பமுங் கல்வியின்பமு மெவ்வளவு.) முழுநிலா ஒளிவீசிக்கொண் டிருக்கும்பொழுது விண்மீன் (நக்ஷத்ரங்)களெல்லாம் மங்கி விடுகின்றன. அவ்வாறே ஞாயிறுதோன்றும் (ஸூர்ய உதயமாகும்) பொழுது, திங்களும் (சந்த்ரனும்) ஒளி மழுங்கி விடுகின்றது. பக்தி கிட்டுவதற்கான த்யாகமானது ஒன்றையுந் தன்புறுத்தி யடையப் படுவதில்லை. மிகுந்த பேரொளியில் தாழ்ந்த வெளிச்சங்கள் எவ்வாறு உள்ளடங்கி மறைந்து விடுகின்றனவோ அதுபோலவே அன்பின் பொருட்டுள்ள பற்றின்மையும் இயற்கையாகவே தோன்றிவிட வேண்டியதாகும். ஒருவன் உலகு முழுவதும் எல்லாவுயிர்களையு மொன்றுபோலவே நோக்கி அன்பு செலுத்தும் பொழுது தன்பொருட்டுண்டாயிருந்த எவ்வகையான பற்றுக்களும் தானாகவே அவனை விட்டகன்று விடுகின்றன. கடவுளிடத்து மெய்யான பேரன்பு பெருகிக்கொண்டு வரும்பொழுது, சிற்றின்பங்களுங், கல்வியின்பங்களும் மிகச்சுவை யற்றதாய்ப் போவதன்றி அவை சிறிது சிறிதாக அழிந்தும் விடுகின்றன. கடவுளிடத்துள்ள இவ்வன்பு முறைப்படி வளர்ந்து முடிவில் அஃதொரு மேலான நிலைமையை யடைகின்றது. அதைத்தான் "பரபக்தி" (அதாவது பேரன்பு அல்லது மெய்க்காதல்) என்று சொல்லப்படுகின்றது. நித்ய, நைமித்திகச் செய்கைகள்; அறிவு பெருகுவதற்கான நூல்கள், விக்ரஹங்கள், இடங்கள் (க்ஷேத்ரங்கள்), ஜாதிப்பிரிவினைகள், கொள்கைகள், அரசாட்சி, என்றிவ்வாறுள்ள எல்லாப்பற்றுகளும் முற்கூறிய பேரன்பை யடைந்தவரிடத்தினின்றுந் தானே அகன்று விடுகின்றன. பிறகு அவனது முழு உரிமைகட்கும், யாதொரு இடையூறு முண்டாவதில்லை. ஒரு



கப்பலானது காந்தமலையை யணுகினால் அதே நொடியிலக்கப்பலினுள்ள, (இரும்பினாலாய) ஆணிகளும், கீல்களும், பூட்டுக்களும், சங்கிலி முதலியவைகளும் எல்லாம் காந்தத்தின் இழுக்குந்தன்மையால் வலிக்கப்பட்டுப் பிடுங்கிக்கொண்டு விடுவதனால் அவைகளாலிணைக்கப்பட் டிருந்த பலகைகளெல்லாம் பிளவுபட்டுத் தண்ணீரில் மேலே மூலைக்கொன்றாய் மிதக்கின்றன. கடவுளருளும் அவ்வாறேதான். "ஆத்மா" வைக் கட்டுப்படுத்தியுள்ள எல்லாக் கட்டுக்கள், பூட்டுக்கள், சங்கிலிகள் முதலியவற்றைப் பிரித்து விடுகின்றது. அதனால் "ஆத்மா" வானது உரிமையுடையதாக (ஸ்வதந்த்ரமாக) ஆய்விடுகின்றது. ஆகையால் பேரன்புக்கு மிக உதவியாயிருக்கிற இந்த த்யாகத்தில், மிகுந்த துன்பமோ, கல்நெஞ்சமோ, ஒடுக்கமோ, அழிவோ, யாதொன்று மின்றியமையாததல்ல, என்பதையறிந்து கொள்ளவேண்டும். பக்தன் யாதொரு எண்ணத்தையும் ஒடுக்கவேண்டியதில்லை எல்லாவகையான அந்தக்கரணத் தொழில்களையும், அவன் கடவுளிடத்துச் சேர்த்து விட மட்டுமே முயல்கின்றான்.

விண்ணாற்று முடிச்செல்வனார்.

## நீதிசாரம்.

(முன்தொடர்ச்சி)

### புலான் மறுத்தல்.

கொல்லாமையென்னும் வ்ரத மொன்றினாலேயே ஸகலதர்மங்களையும் எளிதிலடையலாமென்று சொல்லியிருக்கிறபடியால், புலாலுண்ண லென்னும் மாம்ஸபக்ஷணமுங் கொலைபாதகத்தோடு சேர்ந்த தென்றும், அதையும் விலக்கவேண்டு மென்றும், முன்னோர்களுரைத்திருக்கின்றார்கள்.

பயனில்லாத தன் சரீரத்தின் மாம்ஸத்தை வளர்ப்பதின் பொருட்டு மற்றொரு ஜந்துவைக் கொன்று அதன்மாம்ஸத்தை உண்ண விரும்புகின்றவன் அறிவில்லாத கொடியோனென்று சொல்லப்படுவான்.

த்ரவியத்தினா லுண்டாகும் பயனை யிழப்பதற்கு அதனைக் காப்பாற்றாமையே காரணமாக விருப்பதுபோல, அருளாலுண்டாகும் பயனை யிழப்பற்கு மாம்ஸபக்ஷணங் காரணமாக விருக்குமெனப்படுவதால், புலாலைப் புசிக்கின்றவர்களுக்கு அருளில்லையென்பது ப்ரகாசமாய் விளங்குகின்றது.

ஸுகதுக்கங்களை உணரத்தக்கதாகிய தனதுடல் போன்ற மற்றொன்றினுடலை ஸம்பாரங்களால் இனியசுவை யுண்டாகும்படி

சமையற்செய்து அதையுண்டு மகிழ்ச்சியடைகின்ற கொடிய பாதகர்களுடைய ஹ்ருதயங்களில் அருளென்னுந்தயை அணுமாத்ரமும் விளங்காதென்பது ஸத்யமே.

கொல்லாமையே அருளென்றும், கொல்லுதலே அருளில்லாத பாபச்செய்கையென்றும், அக்கொல்லுதலால் வந்த வூனைத் தின்னுதல் அறனல்லாததென்றும், சொல்லிய நீதியை யுணர்ந்து நடப்பதே தர்மமாம்.

ஒருயிரையுங் கொல்லாதவனும், புலாலையுமுண்ணாதவனுமிருக்கின்ற மஹாபுருஷனை எல்லா வுயிருங் கைகூப்பித் தொழுது வணங்குமென்று கூறப்பட்டிருப்பதன் பொருளென்னவெனில், இவ்விதப்பொருளை யுணர்ந்தவன் மறுமையில் தேவர்களினுமுயர்ந்தவனாவனென்பதுதான்.

தர்மங்களுக்குள் சிறந்தது கொல்லாமையென்றும், அதனோடு கூடப் பொய்சொல்லாமையுமுண்டாயிருக்குமாயின், அது எல்லாவற்றிலுஞ் சிறந்த தர்மமென்றும், பெரியோருரைத்திருக்கின்றார்கள்.

மோக்ஷத்திற் குறுதியைத்தரும் தர்மமார்க்கமென்னவெனில், யாதோருயிரையுங் கொல்லாமையாம். இதை வ்ரதமாகக் கொண்டவனது ஆயுஸ்ஸின்மீது யமனணுகுவதற் கஞ்சுவான்.

உலகமயக்கங்களை விட்டுத் ஸந்யாஸாஶ்ரமத்தைப்பெற்ற பெரியோர்களைப் பார்க்கிலும் உயர்ந்தவன் யாரெனின், யாதோருயிரையுங் கொல்லாதிருப்பவனும் புலாலையுண்ணாம விருப்பவனுந்தான்.

இன்பத்தையுஞ் செல்வத்தையு மதிகப்படுத்திக் கொள்வதன் பொருட்டு யாகாதிவிஷயத்தில் உயிரை வதை செய்யலாகுமென்று சாஸ்த்ரப்ரமாண முண்டாயிருந்தாலும், அது சான்றோருக்கு ஒவ்வாத செய்கை யாதலால் அதைக் கனவிலும் நினைக்கலாது.

ஒருவன் தனது உணவிற்காக ஓருயிரை வதைசெய்வதினாலுண்டாகிய பாபத்தை யறியாமற்போனாலும், அவனை அப்பாபம் விடாமல் தொடர்ந்து கெடுக்கும். அன்றியும் அவனை நல்லோர்கள் அருளுள்ளவனென்று நினையார்கள். ஏனெனின், ஒரு ப்ராணியைக் கொண்டுவந்து அதற்கு வேண்டிய ஆஹாரத்தைக் கொடுத்து வளர்ப்பதினால் அந்தப்ராணி தன்னை ரக்ஷிக்கின்றவனென்று அவனிடத்து விஶ்வாஸத்தைப் பாராட்டிக்கொண்டிருக்க அதனிடத்துச் சற்றுமிரக்கமில்லாமல் அதை வதைத் துண்பதினாலே தான்.



இப்பிறப்பில் நோயினாலேயும் தரித்ரத்தினாலேயும் வருத்தப்படுகின்றவர்களே முற்பிறப்பில் உயிர்களை வதைசெய்த கொடியோர்களென்று பலநூலோருஞ் சொல்லி யிருக்கின்றார்கள்.

ஆதலால், புலாலென்னும் ஊனை உண்ணாமலும் கொலைசெய்யாமலு மிருத்தல்வேண்டும்.

## கீழ்மை.

கோழியை வளர்ப்பவர்கள் நாள்தோறுங் காலமே அதற்கு நல்ல ஆஹாரத்தைக் கொடுத்து வளர்த்தாலும், அது குப்பையைக்கிளறுந் தன் ஜாதிஸ்வபாவத்தை விடாது. அதுபோல கீழ்மையானவனுக்குத் தர்மங்களைக் கண்ணாடியைப்போ லெடுத்துக் காட்டினும், அவன் அதையுணராமலும், அதனிடத்துப் புத்தியைச் செலுத்தாமலும், தன்னியல்பின் படியே நடப்பான்.

குற்றமற்ற பெரியோர்களிடத்திற்குப்போய் ஆத்மலாபத்தைப்பெறுவது நல்ல மார்க்கமென்று கீழ்மக்களுக்குச் சொல்லினும், அவர்கள் அதைமேற்கொள்ளாமல் நித்ரைகொள்ள வேண்டுமென்றாவது வேறொருவேலையைச் செய்யவேண்டுமென்றாவது போய்விடுவார்களே யல்லாமல், நன்மையடைய விரும்பார்கள்.

சான்றோர்கள் எவ்வளவுபெரிய செல்வத்தைப் பெற்றவர்களாயிருந்தாலும், தங்களுடைய ஒழுக்கத்திற்கு மாறாக நடவார்கள். கீழானவனோவெனில், அகண்டசெல்வத்தைப் பெற்றவனாகவிருந்தாலும், தான்செய்யும் பொல்லாங்கான காரியத்தில் மனதுள்ளவனாகவிருந்து அபகீர்த்தியைப் பெறுவானே யல்லது பெருமை யடையான்.

ஒருவர்செய்த வுதவி தினையினது அளவுபோல் அல்பமாகவிருந்தாலும், அறிவுடையோரதனைப் பனையினது அளவுள்ளதாக வெண்ணி நடப்பார்கள்; பனையினது அளவுக்கதிகமான உதவியை நாள்தோறும் பெற்றவர்கள் கீழ்மக்களாயின், அவர்களதைத் தினையளவாகவும் நினையாமல் இகழ்ந்துவிடுவார்கள்.

ஒருநாய்க்கு ஸ்வர்ணபாத்திரத்தில் க்ஷீராந்நமிட்டு மனுஷ்யனைக் காவலாகவைத்துக் காப்பாற்றிக் கொண்டிருந்தாலும் அது பிறருடைய எச்சிற்கலை யெப்போது போடப்படுமோ வென்றிமை கொட்டாமற் பார்த்திருக்கும். அதுபோல கீழ்மக்களைப் பெருமை

யடையும் படியான பல முயற்சிசெய்து மேன்மைப் படுத்தினாலும், அவர்கள் செய்யு மிழிதொழிலா லவர்களொருகாலும் மேன்மை யடையார்கள்.

நல்ல குலத்தோர் மிகுந்த செல்வத்தைப் பெற்றவர்களாக விருந்துஞ் சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொல்ல அஞ்சுவார்கள். கீழ்மக்களோவெனில், முந்திரிப் பொன்னுக்குமேற் காணிப் பொன்னைப் பெற்றிருப்பார்களாயின் அவர்கள் தங்களைத் தேவேந்த்ரனுக்கு ஸமானமாக வெண்ணிக்கொண்டு ஒருவரையும் மதியாமற் பேசுவார்கள்.

பசும்பொன்னினாலே செய்த பாதரக்ஷையினிடத்துக் குற்றமற்ற நவரத்நங்களை யிழைத்து அழகுபெறச் செய்தாலும், அது காலிலணிவதற்கு யோக்யப்படுமே யல்லது மற்றவிடத்தில் ஆபரணமாகத் தரித்துக் கொள்வதற்குப் பயன்படாது. அதுபோல, கீழ்மக்கள் எவ்வளவு செல்வத்தைப் பெற்றிருந்தாலும், அவர்களது இழிதொழிலால் அல்பமாகக் காணப்படுவார்களே யல்லாமல் மேன்மையடையார்கள்.

கடினவசனங்களைப் பேசுவதும், பிறருக்கு விபத்துவந்த காலத்திலும் மனமிரங்காமற் களிப்பதும், அடுத்தவரை மதியாமல் இகழ்வதும், கோபம்வந்த காலத்தில் ஶாந்தமடையும்படி நல்லவர்கள் சொல்லிய வார்த்தைகளைக் கேளாமல் அதிகமூர்க்கமடைவதும், இன்னும் பலவும் கீழ்மக்களுக்குரிய குணங்களாம். இக்குணங்கள் ஒருவேளை உயர்குலத்திற் பிறந்த ஒருவனிடத்திலிருக்குமாயின், அவன் கீழ்மக்களினுந் தாழ்ந்தவனாவன்; ஏனெனின், அவன்தனது துர்குணத்தால் நற்குலத்தைக் கெடுத்தானெனப் படுவதினாலேதான்.

கர்ப்பூரத்தினாலே பாத்திகட்டி. கஸ்தூரியினாலே சேறுகூட்டி ஆயிரம் வருஷம் பன்னீர்வார்த்து வளர்க்கப்பட்டாலும், உள்ளியானது தன் துர்க்கந்தத்தை விடாமல் வைத்திருப்பதுபோல் கீழ்மக்கள் எவ்வளவுகாலம் நல்லோர்களுடைய ஸஹவாஸம் பெற்றாலும், தங்கள் துர்க்குணத்தை யொருபோதும் விடார்கள்.

ஆதலால், கீழ்மக்களுடைய குணம் இத்தன்மையதென்றுணர்ந்து அந்தக்குண முண்டாகாமல் யாவருங் காத்துக்கொள்ளல்வேண்டும்.

## துஷ்டசகவாசம் துன்பந்தருமெனல்.

முற்காலத்தில் ஒரு ராக்ஷஸனுக்கும் ஒரு குள்ளனுக்கும் சிநேகமுண்டாகி, அவர்களிருவரும் ஒருவரை யொருவர் விட்டுப் பிரியாமல் இருக்கவேண்டுமென்றும், எங்கே யாவதுபோய்ச் சுத்த வீரச்செய்கைகள்செய்து பெருங்கீர்த்தியைச்சம்பாதித்தல்வேண்டுமென்றும் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அந்நோக்கமாகவே அவர்கள் தேசாந்தரம் போகையில், முதல் முதல் இரண்டு சரசேனரைக் கண்டு அவர்களோடு சண்டை செய்தார்கள். குள்ளன், அதிக தைரியத்துடன் யுத்தத்தை ஆரம்பித்து எதிரிகளிலொருவனை உக்கிரத்துடன் ஓங்கி வெட்டினான்; ஆயினும் சரசேனனுக்கு அதனால் ஒரு சேதமும் நேரிடாததினால் அவன் தன் வாளை யுருவிக்கொண்டு ஒரே வெட்டினால் குள்ளனுடைய கையைத் தறித்துவிட்டான். குள்ளன் இப்பரிதாபஸ்திதியிலிருக்கக் கண்டு ராக்ஷஸன் அவனுக்கு உதவிசெய்யும்படி விரைந்து வந்து, சிறிது நேரத்திற்குள் சரசேனர் இருவரையும் கீழே வீழ்த்திக் கொன்றுவிட்டான். அப்பொழுது குள்ளன் மிகுந்த கோபத்தோடு ஓடிவந்து தன்னைக் காயப்படுத்தின சரசேனனுடைய தலையை வெட்டித்தள்ளி அகமகிழ்ச்சியினால் கூத்தாடினான். பின்னர், அவர்களிருவரும் சிறிதுதூரம் பிரயாணமாகச் செல்லுகையில் அழுது துயரக் கூக்குரலிடுகிற ஒரு பெண்ணை, பாதி மனுஷ ரூபமும், பாதி மிருக ரூபமும் பொருந்திய மூன்று வனதேவதைகள் கவர்ந்துகொண்டு போகிறதைக் கண்டு, அவர்களோடு யுத்தந் தொடுக்க எத்தனித்தார்கள். குள்ளனுக்கு ஆரம்பத்திலிருந்த மூர்க்கம் சற்றுக் குறைந்துபோனபோதிலும், இந்தச் சண்டையிலுங்கூட அவனை முந்திக்கொண்டு ஒரு தேவதையோடு கைகலக்க அது திரும்பிக்கொண்டு அவனை ஓர் அடி அடித்ததில் அவனுடைய கண்களிலொன்றுச் சேதப்பட்டுப் போய்விட்டது; ஆனால் ராக்ஷஸன் தைரியமாய் நின்று போர் செய்ததினால் அத்தேவதைகள் மூன்றும் பெண்ணை விட்டுவிட்டுத் தங்கள் பிராணன் தப்ப ஓட்டம் பிடித்தன. இந்த ஜெயத்தினால் அகப்பட்ட பெண்ணானவள் ராக்ஷஸன்பேரில் பிரியமாகி அவனை விவாகஞ் செய்துக்கொண்டாள். பின்பு அவர்கள் வெகுதூரம் பிரயாணம் பண்ணிப் போகையில் கள்ளர் கூட்டமொன்று அவர்களுக்கு எதிர்ப்பட்டது. இக்கள்ளரோடு செய்த போரில்தான் ராக்ஷஸன் குள்ளனுக்கு முந்திக்கொண்டான்; ஆயினும் குள்ளன்

அதிகமாய்ப் பின்வாங்கிப் போகாமல் சண்டை செய்தான். இந்த யுத்தம் வெகுநேரம் வரையில் மும்முரமாய் நடந்தது. ராக்ஷஸன் சென்றவிடமெல்லாம் கள்ளரைச் சங்கரித்தான். குள்ளன் இச்சண்டையில் இரண்டு மூன்றுதரம் பிராண அபாயத்திற்கு மிகவுஞ் சமீபமாயிருந்து தப்பினான்; கடைசியில் கள்ளர் ஜெயிக்கப்பட்டு ஓட்டம் பிடித்தார்கள்; ஆனால் குள்ளனுக்கு ஒருகால் சேதமாகி விட்டது. ஆகக் குள்ளனுக்கு ஒரு கையும், ஒரு கண்ணும், ஒரு காலும்போய் விட்டன. ராக்ஷஸனுக்கோ ஒரு பெண் அகப்பட்டதேயன்றி ஒரு அபாயமும் நேரிடவில்லை. அப்பால் ராக்ஷஸன் தன் தோழனைப் பார்த்து ஓ, பகைவர்கள் அஞ்சுஞ் சுத்தவீர நெஞ்சனே! நம்முடைய பேர்ப் பிரஸ்தாபம் என்றென்றைக்கும் நிலைத்திருக்க வேண்டுமென்றால் இன்னமொரு யுத்தமாத்திரஞ் செய்து ஜெயமடையவேண்டும் என்றான். குள்ளனானவன் தனக்கு இதுவரையிலும் உண்டான நஷ்டங்களினால் விவேகத்தை அடைந்தபடியினால் ராக்ஷஸனுக்கிணங்காமல் அவனைப் பார்த்து, "இம்மட்டுக்கும் போதும், இனி நான் உன்னைவிட்டுப் பிரிந்துகொள்ளுகிறேன்; ஏனெனில் ஒவ்வொரு யுத்தத்திலும் நஷ்டமும் பாடும் அனுபவிக்கிறது நான், லாபமும் மகிமையும் பெறுகிறது நீ" என்றான்.

## புத்தியுள்ளவனே பெரியவனெனல்.

இந்தியா மொகலாய அரசாட்சிக்குள் அடங்கியிருந்த காலத்தில் வங்காளநாட்டில் ஒரு நபாபு இருந்தான். அவனிடத்தில் வித்வ சமர்த்தும் புத்தி விற்பன்னமுமுள்ள ஒரு மந்திரி இருந்தான். இவன் பேச்சில் சதுரன்; கேளாதவரும் கேட்க அவாவும்படி பேசத்தக்க இங்கித வசனங்களை யுடையவன். சமயம் அறிந்து உத்தரஞ் சொல்லுகிறதில் மிகு சமர்த்தன். இவனாலே அந்த நபாபுக்கு அதிக கனமும் பேரும் கீர்த்தியும் உண்டாயின. குடிகளும் இன்புற்று வாழ்ந்தார்கள். அதனால் இம்மந்திரியினுடைய கியாதி பல தேசங்களிலும் பரவிற்று. ஒருநாள் டில்லி சக்கிரவர்த்தியின் சமுகத்தில் இவனைப்பற்றிப் பிரஸ்தாபம் நடந்தபோது இவனுடைய சொல்வன்மையைக் குறித்து ராஜ சபையிலுள்ள அனைவரும் வியந்து பேசினார்கள். சக்கிரவர்த்தியும் அவனைப்பற்றிச் சந்தோஷப்பட்டார்.



இது சக்கிரவர்த்தியின் அருகிருந்த மகா கீர்த்திப் பிரதாபரான அவருடைய குருவுக்குமனப்புழுக்கத்தை உண்டுபண்ணியது. உடனே அவர், என்ன! நாம் இருக்கிறோமென்றும் பாராமல் இவர்கள் ஒரு அற்ப மந்திரியைக் குறித்து இவ்வளவு பிரபலமாய்ப் பேசுகிறதா! நல்லது, இவர்கள் கொண்டாடுகிற மந்திரியை நாம் எவ்விதத்திலும் பங்கப்படுத்த வேண்டுமென்று தம் மனதில் நிர்ணயித்து, அங்ஙனமாயின் நாமும் அம்மந்திரியைப்போய்ப் பார்த்துவர அபேக்ஷிக்கிறோமென்று சொல்லி சக்கிரவர்த்தியினிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார். இவர் வருகிறார் என்ற செய்தி வங்காளத்து நபாபு அறிந்தவுடனே பட்டணமெல்லாம் அலங்கரிக்கச்சொல்லி, ரதகெஜதுரக பதாதிகளுடன் வெகுதூரம் எதிர்கொண்டுபோய் அவரை அழைத்துவந்து, மிகுந்த சிறப்புடன் பட்டணப் பிரவேசஞ் செய்வித்து, பின்பு கொலுமண்டபத்தில் உன்னதமான ஓர் ஆசனத்தின்மீது அவரை உட்காரவைத்து, குருவுக்குச் செய்யவேண்டிய உபசாராதிகளெல்லாம் செய்து, தானும் பக்கத்தில் உட்கார்ந்தான். மந்திரிகள் பிரதானிகள் பிரபுக்கள் மற்றுமுள்ளவர்களெல்லாம் சூழ இருந்தார்கள்.

அச்சமயத்தில் குருவானவர் நபாபினுடைய மந்திரியைப் பார்த்து, நாம் உம்மைக்குறித்து வெகுவாய்க் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒருவர் மனதிலுள்ளதை அவர் தம் வாயினால் சொல்லாதிருக்கவும், அதைக் குறிப்பினால் அறிந்து சொல்லுகிறதில் நீர் நல்ல சமர்த்தராமே; அது அமைச்சருக்குரிய லட்சணந்தான். நல்லது, இப்பொழுது நம்முடைய மனதில் உள்ளது என்ன சொல்லும் பார்ப்போம் என்றார்.

அப்பொழுது மகா புத்திசாலியாகிய அம்மந்திரி ஆலோசித்து, ஏதோ இவர் நம்மை இந்தப் பெரிய சதசில் பங்கப்படுத்தும்படி மோசக்கருத்தாய் இப்படிப்பட்ட கேள்வி கேட்கிறார்; ஆதலால் இதற்குத் தகுந்த உத்தரஞ்சொல்லி, இவர் வாயை அடக்க வேண்டுமென்று நிச்சயித்துக் குருவைப் பார்த்து, சுவாமி! எங்கள் அரசனாகிய நபாபானவர் தங்களுடைய வருகையை ஆவலோடு எதிர்பார்த்து அத்தியந்த பக்தி விநயத்துடன் தங்களுக்கு ஆசார உபசாராதிகள் செய்து தங்களிடத்தில் அன்புவைத்திருக்கிறதினால், தாங்கள் அவர்பேரில் பரிபூரண கடாட்சம் வைத்து, அவருக்கு நீடிய ஆயுசும், புத்திரபௌத்திர சந்தான பாக்கியமும், நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் மென்மேலும் பெருக வேண்டுமென்று, அடியாருடைய விண்ணப்பத்தின்படி அருளுகின்ற ஆண்டவரை நோக்கித் தங்கள் உள்ளத்தில் இப்பொழுது பிரார்த்தனை செய்கின்றீர்கள் என்றான்.

இந்த மறுமொழியைக் கேட்டுக் குருவானவர் பிரமித்து, நாம் அப்படியல்லவென்று மறுத்தோமானால் நபாபுக்கு நம்மீது வெறுப்புண்டாகும்; ஒத்துக்கொண்டோமானால், அரசனுடைய பிரீதியும், எல்லாருடைய மதிப்பும் நமக்குக் கிடைக்கும். ஆதலால் இதை ஒத்துக்கொள்வதே புத்தியென்று தனக்குள் சிந்தித்து மந்திரியைப் பார்த்து நீர் மகா புத்திசாலி; நீர் சொன்னது சரிதான். நாம் அப்படியே பிரார்த்தித்தோம்; நல்லது, இப்பொழுது நாம் மறுபடியும் என்ன சிந்திக்கிறோம் சொல்லும் என்றார்.

அதற்கு அம்மந்திரி அரசனுக்கு இரண்டாவது பிரஜைகள் தான் விசேஷமாதலால், அதைக்கொண்டு இவரை வெல்லவேண்டுமென்று யோசித்து, இப்பொழுது தங்கள் மனதில் இந்த ராஜ்யத்துக்கு குடிகளெல்லாம் நிர்விக்கினமாய் வாழ்ந்து சுகித்திருக்க வேண்டுமென்று கடவுளை வேண்டிக்கொள்ளுகிறீர்கள் என்றான்.

அப்பொழுது அந்தக் குருவானவர் இந்த இரண்டாம் உத்தரத்தையும் மறுக்க முடியாமல், ஆம் அப்படித்தான் என்று அங்கீகரித்துக்கொண்டு, அரசனும் குடியும் ஆய்விட்டது, இனி என்ன சொல்லுவான் பார்ப்போம். இம்முறையிலாவது இவனை அகப்படுத்திக் கொள்ளலாமென்று கருதி, இப்பொழுது மூன்றாந்தரமாக நம்முடைய மனத்தில் எழும்புகிற விசேஷமென்ன சொல்லும் என்றார்.

அதற்கும் அம்மந்திரி அஞ்சாமல், தகுந்த ஆலோசனையுடன் குருவை நோக்கி, இப்பொழுது தங்கள் சிந்தையில் உண்டாகும் விசேஷம் என்னவென்றால், இந்த ராஜ்ஜியம் இவ்வளவு சீரும் சிறப்பும் செல்வமுமா யிருப்பதற்கும், இந்த நபாபுக்கு இவ்வளவு கனமும் கீர்த்தியு முண்டாவதற்கும் காரணமென்ன என்று யோசிக்குமளவில், இந்த நபாபினுடைய பத்தினி மகா உத்தமியும் பதிவிரதையுமா யிருக்க வேண்டும். அந்த அரசியுடைய கற்பே இந்தச் செல்வத்துக்கெல்லாம் காரணம்; ஆதலால் இந்த ராஜபத்தினியைப்போல பதிவிரதை வேறெங்கும் கிடையாது என்று தங்களுடைய மனதில் நிர்ணயமுண்டாகிறது என்றான்.

இது கேட்டவுடனே அந்தக் குருவானவர் ஆச்சரியப்பட்டு, இனி நம்முடைய காரியம் இவ்விடத்திற் செல்லாது; இவனை வெல்லவும் நம்மால் முடியாது. இவ்வளவு மரியாதையுடன் நாம் தப்புவதே யோக்கியதையென்று எண்ணி, மர்மம்விடாமல் மந்திரியை மெச்சிப் புகழ்ந்து, சிறிதுநாளிருந்து பின்பு டில்லிக்குத் திரும்பிப் போய்விட்டார்.

5-APR 1918 MADRAS


# சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL -13 தொகுதி-13 | February-1918. பிப்ரவரி மீ 1918. | No -.7 பகுதி – 7.


## நாலடியார் வசனம்.

### 7-வது சினமின்மை.

அஃதாவது சினத்தைச் செய்தற்குக் காரணமொருவனிடத்துண்டாய விடத்தும் அச்சினத்தைச் செய்யா திருத்தலாம். துறவிகள் சினங்கொண்ட விடத்து, அதனால் அவரது துறவறவொழுக்கங் கெட்டுப்போதலின், அதுபற்றி இது துறவின்பின் வைக்கப்பட்டது. சினம் - நீட்டித்தகோபம்; அஃதாவது தீராக் கோபம்.

சினங்கொள்ளா திருப்பது எவர்க்கும்
நலந்தருவதாமெனல்.

(1) நம்மை நன்குமதித்து நடப்பவரும் நடப்பாராக; நன்குமதியாது தாழ்வுசெய்து நடப்பவரும் நடப்பாராக. ஈயும் (நம்மைத் தன் கால்களால்) மிதித்து (நம்மீது) ஏறி (நமது) தலைமீதிருக்கின்றது. ஆதலின் அவ்வீயின் றன்மையை யறிபவர் (பிறரை) வருத்துங் கோபமில்லாதிருத்தல் வேண்டும்; (அஃதவர்க்கு) நன்மையைத் தருவதாம்.

நன்குமதித்தல் – கௌரவித்தல்.

(க - து.) ஈ தமது தலைமீது மிதித்தேறி யிருத்தலைக்கண்டு, அதன்மீது கோபஞ்செய்வா ரொருவருமில்லை; ஆதலால், தம்மை

நன்கு மதியாதவர்மீது கோபங்கொள்ளுதல் எவர்க்கும் கூடாது; அது நன்மையைத்தருமென்பதாம்.

அறிவுடையோர் தமக்கிழிவு வந்தபோது கோபங்கொண்டு, தம்முயிரை விடாரெனல்.

(1) தமது கால்களை (வேறிடத்துப்) பெயர்த்து வையாதபடி மிக நெருக்கமாக இழிவு (தமக்கு) வந்தபொழுதும் (அதற்குக் கலக்கமுறாது தாமெடுத்துக்கொண்ட காரியத்தை) முடிவுபெறச் செய்யும் மனவலியுள்ளவர்கள் கெடாத சிறப்பினையுடைய தமது இனியவுயிரை (இழிவு செய்தவர்மீது கோபங்) கொண்ட போதெல்லாம் தாங்காது விட்டுவிடுவாரோ? விடார் (இழிவு-அவமானம்.

(க - து.) தாமெடுத்துக்கொண்ட காரியத்தை முடிவுபெறச் செய்யும் மனவலியுள்ளவர்கள் பிறர்செய்யும் அவமானத்திற்காக அவர்மீது கோபங்கொண்டு தம்முயிரை விடார்; அறிவில்லாரே அவ்வாறு செய்வாரென்பதாம்.

அறிவுடையோர் பிறர் தம்மை நிந்தித்தபோது அவர்மீது கோபங்கொண்டு கடுஞ்சொற் கூறாரெனல்.

(3) ஒருவன் தனது நாவை யடக்குதல் செய்யாது வாயைத் திறந்து (பிறர் வருந்தச்) சொல்லுஞ் சொல்லானது நீங்குதலில்லாமல் (அவன்) தன்னையே வருத்துவதாம். ஆதலால், ஒழிவில்லாமல் (சாஸ்திரங்களை) ஆராய்ச்சி செய்து (அதனால்) நிறைந்த கேள்விகளையுடைய அறிவுடையார் எப்போதும் கோபித்து உக்கிரமாயுள்ள சொற்களைச் சொல்லமாட்டார்; (சொல்லின் அவரது தவம் கெட்டுப்போம்.)

(க - து.) கல்வி கேள்விகளையுடைய அறிவுடையார் பிறரைக் கோபித்துப் பேசுவது தமக்கு வருத்தந் தருவதாக விருப்பது நோக்கி எப்போதுங் கடுஞ்சொற்களைச் சொல்லாரென்பதாம்.

மேலோர் சினங்கொள்ளார்;
கீழோர் சினங்கொள்வாரெனல்.

(4) மேன்மைக் குணமுடையார் (தமக்கு) ஒப்பாக வில்லாதவர் (தம்மை) எதிர்த்து நீர்மையல்லாத சொற்களைச் சொல்லிய விடத்து (அதனால்) மனம் புழுங்கி, (அவர்மீது) கோபங் கொள்ள மாட்டார்; கீழ்மைக்குண முடையாரோ அற்சொற்களை (தமது) மனத்தால் ஆராய்ந்து நோக்கி, (பலர்க்குஞ்) சொல்லி, (தமது) ஊரார் கேட்கும்படி துள்ளிக் குதித்து உராய்ந்து (கொண்டு நின்று), அவனோடு முட்டிக்கொள்வார். நீர்மையல்லாத - தகுதியில்லாத.



(க - து.) மேலோர் பிறர் தம்மீது பழிச்சொற்களைக் கூறினால் அதுபற்றிக்கோபங்கொண்டு வருத்தமுறார். கீழோரோ அச்சொற்களைக் கவனித்துப் பலரறியக்கூறி யலைந்து வருத்தமுறுவரென்பதாம்.

உடல்வலி முதலியவற்றை யுடையவன்
பொறுக்கும் பொறுமையே
பொறுமையாமெனல்.

(5) இளமைப் பருவமுடையவன் (பொறிகளின் வழியே தன்மனத்தைச் செலுத்தாது) அடக்குதலே (சிறந்த) அடக்கமாம்; இளைக்கின்ற பொருளில்லாதவன் (ஏழைகளுக்கு அவர் கேட்டதை மறையாது) கொடுப்பதே பயன்தருங் கொடையாம்; (அவைபோல) யாவரையும் வெல்லத்தக்க உடல்வலியும் மனவலியுமுடையவன் (பிறர்செய்த தீமைகளைப்) பொறுத்துக்கொள்ளும் பொறுமையே (மேலாய) பொறுமையாம். இளைத்தல் விர்த்தியாதல்.

(க - து.) இளமைப்பருவ முடையானிடத்து அடக்கமும், பணமில்லாதவனிடத்து ஈகையும் சிறந்து விளக்குதல் போல, உடல்வலி மனவலி யுடையானிடத்துப் பொறுமை சிறந்து விளங்குமென்பதாம்.

குலநலமுடையார் சினங்கொள்ளா
திருப்பாரெனல்.

(6) குலநலமுடையார் (தம்மைப்பற்றி) கீழ்மக்கள் வாயினின்று உண்டாகின்ற கொடுஞ் சொற்கள் கல்லை (யெடுத்துத் தம்மீது) எறிந்தனபோன் றிருந்தனவாயினும் (அவற்றை) (மந்திரவாதி) மந்திரஞ்செய்து போட்ட விபூதியால் படம் விரித்தாடுகின்ற பாம்பு தனது படத்தை விரைவாக அடக்கிக் கொள்வது போலத்தத்தமது குலநலத்தால் அடக்கப்பட்டு, யாவரும் அறியுமாறு பொறுத்துக்கொண்டு செல்வர்.

குலநலம்-நற்குடிப்பிறப்பின் மாட்சி.

(க-து.) படம்விரித் தாடுகின்ற பாம்பு மந்திரவாதி யிட்ட விபூதியால் தனது படத்தை யடக்கிக் கொள்வதுபோல, குலநல

முடையார் கீழ்மக்கள் தம்மைப்பற்றிக் கூறும் கொடுஞ் சொ
ற்களைத் தமது குமலகிமையை யெண்ணி அதனலடங்கிப் பொறு
த்துக்கொண்டு, அவருள்ள விடத்துத் தங்காது போய்விடு
ரென்பதாம்.

உயர்குடிப் பிறந்தார் பிறர் தமக்குத் தீமைசெய்வாராயின் அதனைப் பொறுத்துக் கொள்வாரேயன்றி, அவர்க்கு அதற்கு பிரதியாக வேறு தீமை செய்யாரெனல்.

(7) (ஒருவர் தமக்குப்) பகைவராகவிருந்து தம்பகைக்குரிய செயல்களை மேற்கொண்டு செய்து வருகின்றவர்க்கு (தாமும் அதனை) மேற்கொண்டு செய்யாமையை அறிவுடையார் வல்லமையில்லாமையென்று கூறுர்; அதனல்அப்பகைவர் பொறுமைகொள்ளா தெதிர்த்துத் துன்பங்களைச்செய்த விடத்து அவர்க்குத்தாம் மீண்டும் துன்பம்செய்யா திருத்தல்வேண்டும், (அது) நன்மையைத் தருவதாம்.

(கது.) பிறர்செய்த தீமையைப் பொறுத்துக் கொள்ளுதல் வல்லமையில்லாமை யாகாது; நன்மையைத் தருவதா மென்பதாம்.

கீழ்மக்கள்கொண்ட சினத்திற்கும்
மேன்மக்கள்கொண்ட சினத்திற்குமுள்ள
வேற்றுமையைக் கூறல்.

(8) கீழ்மக்கள்கொண்ட கோபம் அநேககாலம் சென்றுலும் (தனக்குக்) கெடுங்கால மில்லாது வளர்ந்துவரும்; மேன்மை பொருந்திய சான்ருேர்கொண்ட கோபம் காய்ச்சும்போது நீரானது கொண்ட வெப்பம்போல (விருந்து பிறர் தணிக்க வேண்டாது தனக்குத்) தானே தணிந்து போய்விடும்.

இயற்கையாகத் தட்பமுள்ளநீர் தீயில் சம்பந்தத்தால் வெப்பமுடையதாகின்றது; ஆயினும் அது பிறர் ஆற்றவேண்டாது தானே ஆறிவிடுகின்றது; அதுபோல இயற்கையாகவே பொறுமையுடைய சான்ருேர் கீழ்மக்கள் தம்மை இகழ்ந்து கூறுவதால் கோபமுடையவ ராகின்றனர்; ஆயினும், அவர் கோபம் பிறர் தணிக்கவேண்டாது தானே ஆறிவிடுகின்றதென்பது இங்குணர்தற் பாலதாம்.

மா. தட்பம்-குளிர்ச்சி, வெப்பம்-சூடு, சான்ருேர் குணங்கள் பல
ற்றல் நிறைந்தவர்.



(க-து.) கீழ்மக்கள் கொண்டகோபம் மாருதிருக்கும், மேன்மக்கள் கொண்டகோபம் உடனே மாறிப்போ மென்பதாம்.

உயர்குடிப் பிறந்தார் தமக்குத் தீமை செய்தவர்க்கு
நன்மை செய்வதேயன்றித் தீமை
செய்யா ரெனல்.

(9) சுவர்க்கமளாவிய (புகழையுடைய நற்) குடியிற் பிறந்தவர் (பிறர்தாம்) செய்த வுபகாரத்தைக் (சிறிதும்) கவனியாது தம்மிடத்து அபகாரத்தை மிகுதியாகச் செய்தாலும், தாம் (அவர்க்கு) உபகாரத்தைச் செய்வதல்லாமல், (அவர்செய்த) தவறுகாரணமாக (அவர்க்குத்) தீமை செய்யக்கருதார்; (அவ்வாறு கருதுதல் அக்குடிப் பிறந்தார்க்கு எப்போதும்) இல்லையாம்.

(க-து.) தாம் செய்த உபகாரத்தைக் கவனியாது தமக்கு அபகாரம் மிகுதியாக செய்தவர்க்கும் நற்குடிப்பிறந்தார் அபகாரம் செய்வதறியார்; உபகாரமே செய்வரென்பதாம்.

மேன்மக்கள் கீழ்மக்கள் பேசுவதை முன்னிட்டுத்
தாமும் அவர்போற் பேசாரெனல்.

(10) நாய் கோபித்து (தம்மைக்) கௌவிக் கொள்வதைப் பார்த்தும், திருப்பி அந்த நாயைத் தமது வாயாற் கௌவினவர் இந்த வுலகத்திலிலாவர்: (ஆதலால்), கீழ்மக்கள் (தம்மீது கோபங்கொண்டு) இழிவாய சொற்களைச் சொல்லியவிடத்து மேன்மக்கள் திருப்பித் தம்வாயால் தகுதியுடைய தாகாது (உள்ள சொல்லை அவர்களை நோக்கிச்) சொல்லுவாரோ ? (சொல்ல மாட்டார்). கௌவிக் கொள்ளல்—கடித்தல்.

(க-து.) நாய் கடித்ததென்று அதனைத் திருப்பி கடிப்பாரொருவரு மில்லை; அதனல், கீழ்மக்கள் சொல்லிய இழிவான சொற்களைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமேயல்லாமல், அவர்களை யெதிர்த்துப் பேசுதல் கூடாதென்பதாம்.

# சுகாதாரம்.

## தானியங்கள்.

(முன் தொடர்ச்சி.)

இதனடியில் வரைந்திருக்கும் அட்டவணையானது, பலவகைப் போசனங்களில், சதையை உண்டாக்கத்தக்க சத்தும், அனலையுங் கொழுப்பையு முண்டாக்கத்தக்க சத்தும், தண்ணீர் முதலிய வைகளும், 100-ல் இத்தனை பங்கிருக்கின்றனவென்று காட்டுகின்றது.

| போஜனங்களின் பெயர்கள். | சதையை உண்டாக்குவது. | அனலையுங் கொழுப்பையு முண்டாக்குவது. | தண்ணீர். | உப்புகள். |
|---|---|---|---|---|
| அரரூட் மாவு ... ... ... | 0 | 81 | 18 | $\frac{3}{4}$ |
| உருளைக்கிழங்கு ... ... ... | 2 | 23 | 74 | 1 |
| சர்க்கரை ... ... ... | 0 | $96\frac{1}{2}$ | 3 | $\frac{1}{2}$ |
| அரிசி ... ... ... | $6\frac{1}{2}$ | 79 | 14 | $\frac{1}{2}$ |
| கம்பு அல்லது புல் ... ... ... | 12 | 71 | $16\frac{1}{2}$ | $\frac{3}{4}$ |
| சோளம் ... ... ... | 13 | 72 | $13\frac{3}{4}$ | $1\frac{1}{4}$ |
| கோதுமை மாவு ... ... ... | 15 | 69 | 15 | 1 |
| கேழ்வரகு அல்லது கேப்பை ... | $15\frac{1}{2}$ | $69\frac{1}{4}$ | 14 | 1 |
| கடலை, துவரை, உளுந்து, அவரை முதலிய பயறுகள் ... | $24\frac{1}{2}$ | 59 | 14 | $2\frac{1}{2}$ |
| வெண்ணெய், நெய், எண்ணெய் கொழுப்பு முதலியவை ... | $\frac{1}{4}$ | 94 | $4\frac{3}{4}$ | 1 |
| பசுவின்பால் ... ... ... | 5 | 8 | 86 | $\frac{1}{2}$ |
| பால்கட்டி (Cheese) ... ... | $33\frac{1}{2}$ | $24\frac{1}{2}$ | $37\frac{1}{4}$ | $5\frac{1}{2}$ |
| முட்டை ... ... ... | 14 | 11 | 74 | 1 |
| சில மீன்கள் ... ... ... | 14 | 7 | 78 | 1 |
| எலும்பில்லாத இறைச்சிகள் ... | 20 | 7 | 72 | 1 |
| ரோஸ்டு இறைச்சி ... ... | $27\frac{1}{2}$ | $15\frac{1}{2}$ | 54 | 3 |

இந்து தேசத்திலுள்ள ஜனங்களுடைய பிரதான போஜனம் அரிசியே. பூர்வகாலத்தில் வெவ்வேறான அந்நிய சாதியார்கள் வடக்கேயிருந்து இந்து தேசத்திற்கு வந்து இதை ஜெயித்துத் தங்கள் கைவசமாக்கினார்கள். அவர்களில் முன்வந்த ஒவ்வொரு அந்நிய ஜாதியாரும் பின் வந்த ஜாதியாரால் ஜெயிக்கப்பட்டு அவர்களுக்குக் கீழடங்கிப் போனார்கள். இதற்கு ஒரு காரணமென்னவென்றால் இத்தேசத்தை ஜெயித்துப் பின்பு அதில் குடியேறின ஒவ்வொரு அந்நிய ஜாதியாரும் சில காலத்திற்குள் இந்துக்கள் சாப்பிட்டு வந்த பலமற்ற போஜனங்களைச் சாப்பிடத் தொடங்கி தங்கள் சரீர மனோபலங்களை யிழந்து அவர்களைப் போலவே துர்ப்பலமுள்ளவர்களாய்ப் போனார்கள்.

தேக மனோதன்மைகளில் இந்துக்களுக்கும் மற்றும் அநேக அந்நிய தேசஸ்தருக்குமுள்ள வித்தியாசத்திற்கு முக்கிய காரணம் இந்துக்கள் வாசம்பண்ணும் தேசத்தின் தன்மையே தவிர அவர்கள் சாப்பிடும் போஜனத்தன்மை யல்லவென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் இவ்விஷயத்தைப்பற்றி நாம் நன்றாய் யோசிப்போமானால் ஒரு தேசத்தின் வித்தியாசமான தன்மையினால் அத்தேசத்தில் தானிய முதலிய பல விளைவுகள் வித்தியாசப்பட்டிருக்குமென்றும் அந்த வித்தியாசமான விளைவுகளை அத்தேசத்தார் உபயோகிக்கிறவிதம் எப்படியோ அப்படியே அவர்களுடைய தேகமனோ தன்மைகளிருக்குமென்றும் நாம் காணலாம்.

### மசாலை முதலிய சம்பாரங்கள்.

மசாலை முதலிய சம்பாரங்களும் போஜனத்தில் சேருகிற வாசனைத் திரவியங்களும் தங்களில் தாமே சதையை வளர்க்கத்தக்க யாதொரு சத்துவத்தை யுடையவைகளா யிராதபோதிலும் போஜனத்தை ஜீரணிக்கச் செய்யும்பொருட்டு வயிற்றிலிருந்தும் வாயிலிருந்தும் ஊறுகிற ஜீரண நீர்கள் அதிகமாய்ச் சுரக்கும்படி செய்கின்றன. இச்சம்பாரங்கள் தானியம் முதலான மாக்கறி போஜனங்களை அதிகமாகச் சாப்பிடுகிறவர்களுக்கு அதிக அவசியமுள்ளவைகளா யிருக்கின்றன. மாம்ச போஜனங்களை கையாடுகிறவர்களுக்கு மசாலை சம்பாரங்கள் சொற்பமாய்த்தான் வேண்டியன. ஏனென்றால், மாம்ச போஜனங்களைக் கொஞ்சமாய்ச் சாப்பிட்டால் தேகத்திற்குப் போதுமானதா யிருக்கும். இந்தக் கொஞ்ச அளவுள்ள போஜனத்தை வயிற்றிலிருந்து இயல்பாய் ஊறுகிற ஜீரணநீர் இலகுவாய் ஜீரணமாக்கிவிடும். ஆனால், தானிய முதலிய மாக்கறி போஜனங்களைச் சாப்பிடுகிறவர்கள் அப்போஜனங்களை அதிகமாய்ச் சாப்பிடவேண்டியது அவசியம். இந்த அதிக அளவுள்ள போஜனத்தை ஜீரணிக்கச்செய்யவயிற்றி

விருந்தும் வாயிலிருந்தும் இயல்பாய் ஊறுகிற ஜீரண நீர்கள் போதுமானவைகளா யிராவாம். ஆகையால் காரசாரமுள்ள பலவகைச் சம்பாரங்களை அப்போஜனங்களோடு சேர்க்கிறதினால் போதுமான ஜீரணநீர்கள் சுரக்கின்றன. இதினிமித்தந்தான் பலவகைமசாலைச்சம்பாரங்களை இந்துக்கள் அதிகமாகவும் ஐரோப்பியர் மிகவுஞ் சொற்பமாகவும் உபயோகித்து வருகிறார்கள். மேலும் மாம்ச முதலிய போஜனங்கள் மரக்கறி போஜனங்களைப் பார்க்கிலும் அதிக ஜீரண நீர்களைச் சுரக்கச்செய்யத் தக்கவையாயிருக்கின்றன. மசாலை முதலியவற்றை அதிகமாய்க் கையாளுகிறதினால் தீமைகளுண்டாகும். விசேஷமாய் மாம்ச போஜனங்களோடு அதிகமாய் மசாலை சம்பாரங்களைச் சேர்க்கிறது வியர்த்தமானதும் தீமையுள்ளதுமான காரியம். மசாலை சம்பாரங்கள் மிகுதியாய்ச் சேர்ந்திருக்கிற மாம்ச போஜனங்களைப் போதுமானபடி சாப்பிடக்கூடாமல் போகிறதுந் தவிர அவைகளினால் ஜீரணக் கருவிகளுக்குச் சேதங்களும் நேரிடும். மாம்ச பதார்த்தங்களைச் சமைப்பதில் இங்கிலீஷ்காரரைப் பார்க்கிலும் இந்துக்கள் மசாலைச் சம்பாரங்களை மிகவும் அதிகமாய்க் கையாண்டு வருகிறார்கள். இது தீமையான வழக்கம். ஐரோப்பியர் தங்கள் சுகத்திற்கும் பலத்திற்கும் ஆதாரமென்று நினைத்துச் சாப்பிட்டு வருகிற பலவகை மாம்சங்களில் மிகவுஞ் சொற்பமாய் மசாலைச் சம்பாரங்கள் சேருகின்றன. மேலும் மசாலைகள் அதிகமாய்ச் சேர்த்துவந்த வெகுகால வழக்கத்தினாலும் போதுமான தேக முயற்சி யின்மையினாலும் தங்கள் ஜீரணக் கருவிகளைப் பலவீனப்படுத்திக் கொண்டவர்களுக்குத்தான் அதிக மசாலைகள் சேர்ந்த காரசாரமுள்ள போஜனங்கள் வேண்டியிருக்கின்றன. நமது தேசத்தில் கடினமான தேக முயற்சிகளைச் செய்கிற கூலிக்காரரும் உழுது பயிரிடுகிறவர்களும் பலமுள்ள ஜீரணக் கருவிகளையுடையவர்களா யிருக்கிறபடியால் அவர்கள் மசாலைகள் மிகவுஞ் சொற்பமாய்ச் சேர்ந்த எந்தவகைப் போஜனங்களையும் பிரீதியோடு சாப்பிட்டு அவைகளை நன்றாய் ஜீரணிக்கச் செய்யக்கூடியவர்களா யிருக்கிறார்கள். அவர்கள் அதிக மசாலைகள் சேர்ந்த போஜன பதார்த்தங்களை வெறுக்கிறார்கள். (வரும்.)

# பக்தி.

## 12. பேரன்பின் பொருட்டுச் செய்யப்படும் நீக்கமானது காதலினாலேயே உண்டாகின்றது.

இயற்கையாகவே காதலானது உலகெங்கணும் எவ்வகையிலாவது பரவியிருக்கக் காண்கின்றோம். மனிதரிடத்துப் பொதுவாக எதெது நலத்தை யளிப்பதும், மேன்மையானதுமென்று கருதப்படுகின்றதோ அவைகளெல்லாம் பேரன்பின் பொருட்டுத் தோன்றியதே யாகும். மனிதர் கூட்டத்திற் காணப்படுகின்ற கெட்ட செய்கைகளும், கொடுமைகளுங்கூட அன்பினாலேதான் உண்டாகின்றன; ஆனால் அவைகளின் வழி பிழைபானதென்பதுமட்டுமே (அருவருக்கத்தக்கதா) யுள்ளது. மனைவியும் மணாளனுந் தம்மிடத்துள்ள தூயமாசற்ற காதலும், அவ்வாறுதான் மிக இழிந்த சிற்றின்பத்தை நுகரவேண்டி உயிர்களுக்குள்ள ஆவலும், காதல் என்ற உள்ளத்தின் மாறுதலி (மனோவிகாரத்தி) னின்றே உண்டாகின்றன. எங்கும் மனத்தின் றொழில் ஒன்றுதானெனினும், அதனது தோற்றம் பலவிடங்களிலும், பலவாறானதாக விருக்கின்றது. ஒரு கொடைவள்ளல் ஒரு ஏழைக்கு மிகுந்த பொருள்கொடுத்து உதவுவதும், ஒருவன் மற்றொருவனைக் கொலைசெய்துவிட்டு அவனது பொருளைக் கவர்தலும், என்று மட்டுமல்ல, இன்னு முலகத்தில் நடைபெறுமெல்லாத் தொழில்களும் "பேரன்பு" அல்லது "காதல்" என்ற எண்ணத்தினால்தா னுண்டாகின்றன.

ஆனால் சிலவிடங்களில் அது ஒழுங்கான வழியில் கைக்கொள்ளப்படுகின்றது. கொலை முதலியன செய்யும்பொழுது அது மிகப் பிழையான தீய (குற்ற) வழியில் கையாளப்படுகின்றது. நமக்கு உணவுகளை வேகச்செய்து சுவையுடையதாக்கி உதவுகிற நெருப்பே ஒரு சிறுவனுடைய கைவிரல்களைச் சுட்டுக் கொப்பளிக்கச்செய்து விடுகின்றது. அது தீயின் குற்றமென்று கூறவியலாது. அதனைக் கையாள்பவரது வழக்கத்தைப் பொறுத்துத்தான் இந்த வேற்றுமைகள் உண்டாகின்றன. "பக்தியோகம்" என்பது மிக உயர்ந்த பேரன்பை யடைவதற்கான ஓர் சாஸ்த்ரமாகும். அதனை நாமெந்த வழியில் திருப்பவேண்டுமென்றும், எவ்விடத்தி லதை மடக்கி வெல்லவேண்டுமென்றும், எவ்வாறதைக்

கைக்கொள்ள வேண்டுமென்றும், அதனினின்று முயர்ந்த பயனை எய்திப் பேரின்பமுறுவதற்காக அதனை யெவ்வாறு வளரச் செய்யவேண்டியதென்றும், மற்றும் பலவும் "பக்தியோகமானது" நமக்குப் பயிற்றுவிக்கின்றது. "எல்லாவற்றையும் வெறுக்க வேண்டுமென்று" பக்தியோகம் ஒரு இடத்திலுங் கூறியதில்லை. "மிக மேலான பொருளை நேசிப்பாயாக!" அதாவது கடவுளிடத்துப் பேரன்பைச் செலுத்துக! என்று மட்டுமே அது நமக்குக் கட்டளையிட்டிருக்கின்றது. இவ்வுயர்ந்த பொருளிடத்து எவர்க்கு நினைத்த பேரன்பு வாய்த்து விடுக்கின்றதோ, அவரிடத்தினின்று இவ்வுலகப் பொருள்களிடத்துள்ள "பற்று" ஆகிய தாழ்ந்த அன்புகளெல்லாம் தாமே யகன்று விடுகின்றன.

தாங்கள் எனது பேரன்பிற் குறைவிடமென்பதன்றித் தங்களைப்பற்றி யெனக்கொன்றுங் கூறவியலாது. தாங்கள் மிகுந்த அழகுடன் விளங்குபவர். ஆ! தாங்கள் ஒளிமிகுந்த இன்பவடிவும் வாய்ந்தவரென்பதற் கையமில்லை! தாங்கள் எழில் மிகுந்த திருமேனி வாய்ந்தவரன்றோ?" உலகத்திலுள்ள அழகிய பொருள்களிலெல்லாம் நமக்குத் தோன்றுகின்ற காதலை நாம் கடவுளிடத்துச் செலுத்தவேண்டும். இதுதான் பக்தியோகத்தில் நாம் செய்யவேண்டி யிருப்பது. ஸூரியன், சந்த்ரன், நக்ஷத்திரங்கள், வானம், பனிதாது, முகம் என்னு மிவைகளிலுள்ள அழகு யாது? அவை யெல்லாம் எங்கும் நிறைந்திருக்கின்ற கடவுளது அளவற்ற அழகின் ஒரேயொரு சிறு சிறு அதிர்ச்சிமட்டுமே யாகும். "அவர் இயற்கையாகவே (தனக்குத்) தானே யொளி வீசிக்கொண்டு அனைத்தையும் விளக்குகின்றார். அவரது ஒளியைக்கொண்டே எல்லாம் விளங்குகின்றன." * ஆதலால் பக்தியின் இந்த உயர்ந்த நிலைமையினை யெய்த எப்பொழுதும் முயற்சி செய்க! அப்பொழுது மட்டுமே உங்களது உடற்பற்று அகலும். லௌகிகங்களிலுள்ள இழிந்ததான தன்னலக் கருத்தைத் தொலைவிலேயே அகற்றிவிட வேண்டும். மனிதக்கூட்டத்தில் மட்டும் அருளுடையவரா யிருத்தல்போதாது. ஒரு "ஸாக்ஷி"யைப் போலத் தான் வேறாக நின்று ஒரு அறிவுத் தேட்டமுடையவனது (ஜிஜ்ஞாஸு) நிலைமையிலிருந்துகொண்டு உலகத்தில் நடப்பவற்றை யெல்லாங் காணவேண்டும். எவரிடத்தும், ஒன்றிலும்

* தமேவபாந்த மநுபாதி ஸர்வம், தஸ்யபாஸா ஸர்வமிதம் விபாதி.



பற்றின்றி (கட்டுப்படாது) அனைத்தையும் ஒற்றுமையான பொது நோக்குடன் எங்கும் பரவிக்கொண்டிருக்கின்ற அந்தப் பேரன்பை ஈட்ட முயலவேண்டும். சில பொழுது சில இடையூறுகளுந் துயரங்களும் நேரிடலாம்; சிலபொழுது மிகுந்த (கீழ்) வீழ்ச்சிகள் கூட வந்திருக்கலாம்; அவைகளெல்லாம் மேலான அன்பைத் தேடி யடைவதற்குள்ள வழியில் மட்டுந்தானுண்டு. அவைகள் வரட்டும்; குற்றமில்லை; பகையில்லை; ஆனால் நீங்கள் மட்டும் அப்பொழுது ஒதுங்கிநின்று கொள்ளவேண்டும். நீர்ப்பெருக்கு வடிவமான லௌகிகத் தொழில்களில், நீங்களு முட்படும்பொழுது தான் உங்களுக்கு இடையூறுகள் நேரிடுகின்றன. ஆனால் அவற்றிற்கலவாது, மாறிநின்று நீங்கள் அத்தொழில்களை ஒரு ஆராய்பவன் (ஜிஜ்ஞாஸு), நிலைமையிலும், ஒரு காண்பான் (ஸாக்ஷி) நிலைமையிலும், இருந்து நோக்கும்பொழுது, கோடிக் கணக்கான (பொருள்களின்) வாயிலாகக் கூடக் கடவுள் அன்பு வடிவமாக விளங்கி வருகின்றவரென்ற உண்மையை நீங்கள் நன்குணரலாகும்.

"எங்கு—எவ்வளவுதான் தாழ்ந்த பொருள்களிலுங்கூட—இன்பந் தோன்றுகின்றதோ அங்கும் இன்ப வடிவினரான கடவுளது அழிவற்ற இன்பத்தின் ஒரு சிறு துளியேனு முண்டென்று அறிந்துகொள்ள வேண்டியதாகும்." கடவுளது பெயர்களில் ஒன்றாகிய "ஹரி" என்ற சொல்லிற்கு "அனைத்தையுந் தன்னிடத்து இழுத்துக்கொள்பவர்" என்று பொருள்படுகின்றது. மனிதரது உள்ளத்தைக் கவரும் வல்லமை அவருக்கு மட்டுமே யுண்டு. உண்மையில், ஆத்மாவைக் கவர்ந்துகொள்ளு மாற்றல் யாவர்க்குண்டு? அவர்க்கு மட்டுமே! அசேதனமான (இயக்கமற்ற) பொருள்கட்கு ஆத்மாவை யிழுக்கும் வல்லமையுண்டென நீங்கள் கருதுகின்றீர்களோ? இயக்கமற்ற பொருள்கள் ஒருபொழுது மாத்மாவைக் கவர்வதில்லை. ஒருவன் ஒரு அழகிய முகத்தைக்கண்டு அதனை எந்த நோக்கத்துடன் பின்தொடர்கின்றான்? முகத்தின் தோற்றத்தில் அமைக்கப்பட்டுள்ள பரமாணுக்களின் சேர்க்கையைக் கண்டுதானோ? இல்லை. ஒருபொழுது மில்லை. அந்த அசேதனப் பொருள்களி னுட்புறத்தில் அன்பு வடிவினராகிய கடவுளது ஒரு ஆற்றல் நிலைத்திருக்கின்றது. அவ்வாற்றல் தான் பார்ப்போர் மனதைக் கவர்வது. ஆனால்,

அறிவிலிகள், அதனை அறிந்துகொள்வதில்லை; அறிந்திருப்பினும், அறியாதிருப்பினும், அந்த வல்லமையேதானவனைக் கவர்வது. ஆதலால் எந்த இழிந்த அன்பின் பொருளிலும் (நேச விஷயத்திலும்) கடவுள் அன்பு வடிவமாய் விளங்குகின்றாரென்று நன்கு புலப்படுகின்றது. “ஓ! என்னுயிர்த் தலைவ! மனைவியானவள் காதலனுடலுக்கு வேண்டிக் கணவனை நேசிக்கவில்லை; காதலனிடத்து அந்தர்யாமியாய் அன்பு வடிவமாய் ஆத்மா நிலைத்திருக்கின்றது; அந்த ஆத்மாவின் பொருட்டே மனைவி, காதலனை நேசிக்கின்றாள். அவ்வாறே தான் காதலனும் (ஆத்மாவின்பொருட்டே) காதலியை நேசிக்கின்றான். புதல்வரையு மவ்வாறே போற்றி அன்புடன் வளர்க்கின்றான்.” அன்பு வடிவமான கடவுள் ஒரு பெரிய (அயஸ) காந்த மலையைப் போன்றதாகும்; நாமனைவரும் அராவிப் பொடிசெய்த இரும்புத் தூள்போன்றிருக்கின்றோம்; நாம் அவரால் எப்பொழுதும் கவரப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்; நாமனைவரு மவரை யடைதற்கு மிகுதியான முயற்சிகளையுஞ் செய்துகொண்டுதானிருக்கின்றோம். இம்மையில் நாம் செய்யும் முயற்சிகளும், நாமடையுந் துன்பங்களும் கேவலம் தன்னலங் கருதிய செய்கையென்று ஒருபொழுதுஞ் சொல்ல முடியாது. அறிவிலிகள் தாம் செய்வதன் கருத்தை யறிவதில்லை. அவாது வாழ்நாளிற் செய்யப்படுகின்ற எல்லாத் தொழில்களும், அந்த மேலான காந்த மலையை யடைவதற்காகத்தான். நமது எல்லா முயற்சிகளும் முடிவில் அவரை யடைவதற்கும், அவருடன் ஒன்று படுவதற்கும் வேண்டியேயாகும்.

“பக்தியோகி” இதன் உண்மையை அறிகின்றான். அவன் பலவகையான செய்கைகளைக் கைகொண்டும், அநுபவித்தும் அதன் உண்மை வடிவத்தையும், பயனையு மறிந்து அவற்றினின்றும் விலக மிக வருந்தி முயல விரும்புகின்றான். இடைவழியிலுள்ள அல்லல்கள் நேரிடாவண்ணம், “ஹரியை” நேரிலடைய அவன் விரும்புகின்றான். இதுதான் தொண்டனது நீக்கம். கடவுளை நோக்கியுள்ளதான மிகப் பெரிய இக்கவர்ச்சி, மற்றுள்ள எல்லாப் பற்றுதல்களையும், அகற்றிவிடுகின்றது. கடவுளிடத்து மிகப் பெரியதாயு மளவற்றதாயுமுள்ள இவ்வன்பானது அவனது உள்ளத்தில் நிறைந்துபொங்கி வழியும்பொழுது மற்றைச் சில்லறைப் பற்றுக்களுக் கங்கிருக்க விடமில்லாமற் போய்விடுகின்றது.



இவ்வாறன்றி வேறு வழியுண்டோ? ஏனென்றால், அன்பெனுங் கடலினின்றும்—அதாவது சாக்ஷாத் கடவுளிடத்திலிருந்தே—எடுத்த நல்ல நீரைக்கொண்டு பக்தியானது அவனது உள்ளத்தை நிறைத்தல் செய்கின்றது. அப்பொழுது பிற, எளிய இழிந்த பற்றுகட்கு இடமுண்டாகுமோ! என்றால், கடவுளிடத்துள்ள அன்பின் மிகுதி, அல்லது மிகுந்த தொண்டு, அல்லது மெய்க்காதலின் பொருட்டுக் கடவுளைத் தவிரப் பிற பொருள்களிடத்து அவனுக்கு வெறுப்பு (வைராக்யம்) உண்டாகுமென்று பொருள்படும். இந்த உறுதியான எண்ணமே பக்தனது த்யாகம். இதுதான் பேரன்பை யடைவதற்கு இன்றியமையாத உதவி. இந்த உறுதி தோன்றும்பொழுதுதான் மேலான காதலாகிற அந்த உயர்ந்தநிலைமையை யடையும்வழி மிக இன்பமாய் விடுகின்றது. அப்பொழுதுதான் மேலான அன்பின் உண்மை நமது மனத்திற் பதிகின்றது. இத்தகைய மேலான காதலை யெவனடைந்திருக்கின்றானோ, அவனுக்குமட்டுமே, விக்ரஹாதிகளைக்கொண்டு யாதொரு பயனுமில்லை; அவை ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்கு உதவியாய்த் தோன்றுவதில்லை, என்று கூறத்தக்க வல்லமையுண்டு. அவன்மட்டுமே அனைவரையும், உடன்பிறந்தாரைப்போலக் கருதுதல் என்று சொல்லப்படுகின்ற அந்த மேலான அன்பின் நிலைமையை அடைந்திருக்கின்றான்; மற்றவர்களெல்லாம் வெறும் நாவினால் மட்டும் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள்; மேலான அன்பன் அனைத்தையும் வேற்றுமையின்றி ஒன்றாகக் காண்கிறான். பெருந் தோற்றமுடையதா யிருக்கின்ற காதற்கடலில் மூழ்கியிருப்பதனால் சேதனப் (இயங்கும்) பொருளும், அசேதனப் (இயங்காப்) பொருளுமா யிருக்கின்ற எல்லாவற்றிலும் அன்பு வடிவனான “ஹரி”யை மட்டுமே அவன் காண்கின்றான். அழகு, பெருந்தோற்றம், ஒளித்திகழ்ச்சி, முதலியவை எங்குக் காணப்படுகின்றனவோ, அவைகளை யெல்லாம் ஹரியினுடையதாய்த் தான் அவன் காண்கின்றான். இவ்வாறுள்ள முதன்மையான தொண்டர்கள் இப்பொழுதும், வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய தொண்டர்களை ஒரு பாம்பு கடித்ததெனில், தங்களது அன்பிற்கிருப்பிடமான “ஹரியி”னிடத்திலிருந்து தங்களை யழைத்துக் கொண்டு போவதற்கு ஓர் ஆள்வந்திருப்பதாக அவாகள் சொல்லிக்கொள்வதன்றி, அவர்களதைப்பற்றி யொருபொழுதும் வருந்துவதில்லை. அவர்கட்குப் பகையோ, பொறாமையோ, கோபு

மோ மனதிற்றோன்றுவதுகூடக் கிடையாது. நட்பின் மிகுதியா லவர்களனைத்தையும் " ஹரிமயமாகக் " காண்பர், ஆதலாற் பின் னெவ்வாறு அவர்கட்குப் பகைதோன்றும்? (வரும்)

விண்ணாற்று முடிச்செல்வனர்.

## நீதிசாரம்.

### குடிபிறப்பு.

புலியானது பசியினால் வருத்த முற்றதாயினும், புல்லைத் தின்ன விரும்பாததுபோல, நல்லகுடியிற் பிறந்தவன் எவ்வளவு தரித்ரம் வந்தாலும், தன்குலத்திற்குத் தகுதியான வொழுக்கத்தை விட்டுத் தாழ்வடையான்.

நல்லொழுக்கமும், இரக்கமும், பொறுமையும், ஆகியமூன்று குணங்களையும் காப்பவர்களே நல்லகுடியிற் பிறந்தவர்க ளெனுஞ் சிறப்பையடைவார்கள். அப்படிக் காக்காதவர்களோவெனில்,நல்ல குடியில் பிறந்தவர்களென்று சொல்லப்படாம லிருப்பதுமன்றி, தீயவொழுக்க முள்ளவர்களென்றும், இரக்கமும் பொறுமையு மில்லாத மூர்க்கரென்றும், இகழப்படுவார்கள்.

மர்யாதைக்குப் பாத்ரரான பெரியோர்கள் வரின், உடனே யிருந்தவிடத்தைவிட் டெழுந்திருந்து எதிரேசென்று உபசரித்து வணக்கத்துடனே வரவழைத்து ஆஸனத்திலிருக்கச்செய்வதும், அவர் போகும்பொழுது கூடப்போய் அவர் நில்லுமென நிற்பதும், ஆகிய வொழுக்கங்கள் நல்லகுடியிற் பிறந்தவர்களிடத்திலிருக்குமே யல்லது மற்றவரிடத்திலிராது.

நற்கார்யங்களைச் செய்வதே நற்குலத்திற் பிறந்தவருடைய ஒழுக்கமாதலால், அவ்வொழுக்க மில்லாதவர்கள் அக்குடியிற் பிறந்தும் பலனில்லை; ஏனெனில், தங்களுடைய கெட்டநடக்கையால் தாங்கள் கெடுதியடைவது மல்லாமல், குலமுமிழிவடைந்து போகு மென்பதினாலேதான்.

இழிகுலத்தானிடத்து ஒருநற்குண முண்டாயிருக்குமாகில் அதனாலவனை நற்குடியிற் பிறந்தவனென்று எண்ணலாகாது. ஏனெனில், அக்குணம் அச்சத்தைப் பற்றியாவது ஒருகாரியத்தை ஸாதிப்பதின் பொருட்டாவது உண்டாயிருக்கு மென்பதினாலேதான்.



நல்லகுடியிற் பிறந்தவர்கள் கல்லாதிருப்பதினாலும், இழிதொழில் செய்யும்படி நேரிட்டதினாலும், சொற்சோர்வு பட்டதினாலும், இரப்போர்க்குக் கொடுக்க வில்லாமை நேரிட்டதினாலும், அச்சத்தையும் நாணத்தையு முடைத்தா யிருப்பார்கள். ஏனெனில், அவர்களுக்கு முன்னோர்களிருந்த நிலைமைகுறைந்து இழிவானவர்களுடைய நிலைமைக்கு வந்தோமென்கிற தோற்ற முண்டா யிருப்பதினாலேதான்.

நற்குலத்திற் பிறந்த ஒருவனுக்கு கர்மாநுபவத்தால் மீளாத தரித்ரம் நேர்ந்தாலும், அவன் உலகவழக்கத்திற்கு விரோதமான கார்யங்களைச் செய்யாமல் நலமேசெய்வான். அஃதெப்படியெனில், சந்த்ரனை ராஹுவெனும் கரும்பாம்பு ஒருபுறத்திற் பற்றி விழுங்கிக் கொண்டிருக்கினும், அதைப் பாராட்டாமல் அச்சந்த்ரன் தனது மற்றொரு புறத்தைக்கொண்டு பூமிமுழுதும் ப்ரகாசிக்கும்படி செய்வது போலவாம்.

ஶ்ரேஷ்டமான குலத்திற் பிறந்த ஒருவன் தான் வறுமையுற்றகாலத்திலும், உபகாரத்தைச் செய்வானே யல்லது அபகாரத்தைச் செய்யான். கீழோர் அதிகமாகச் செல்வத்தைப் பெற்றிருந்தாலும், செய்யவேண்டிய நற்கார்யத்தைச் செய்யாமல் அல்பவிஷயத்தில் மனதைச் செலுத்தித் தமது சிறிய குணத்தை வெளியாக்கிக் கொள்வார்கள். அஃதெவ்வாறெனின், ஸிம்ஹ சர்மத்தை தரித்திருந்த ஒரு கழுதையைப் பார்த்தவர்க ளெல்லாரும் ஸிம்ஹமென்று நினைத்துப் பயமுள்ளவர்களாயிருக்குங்காலத்தில் அது பெட்டைக் கழுதையைக்கண்டு தனது பெருங்குரலைக் காட்டி இகழ்ச்சிபெற்ற தன்மைபோலவாம்.

உத்தம குலத்திற்பிறந்த ஒருவன் யாதொரு பொருளு மில்லாமல் வருத்தமுறுங் காலத்திலும், அவனை வந்தடுத்த வெளியவருக்கு வேண்டிய உதவியைச்செய்ய ஶக்தியில்லா விடினும், தன்னாலாகிய உதவியைச்செய்து ஆதரிப்பனேயல்லாது கைசோரவிடான். அஃதெவ்வாறெனின், மஹா நதியானது வற்றிப்போன காலத்திலுந் தோண்டப் படுமாகில் நல்ல ஜலத்தைக் கொடுத்து தாஹத்தை தீர்க்குமது போலவாம்.

ஒழுக்கமும், மெய்ம்மையும், நாணமும், ஆகிய விம்மூன்று குணங்களும் உயர்ந்த குலத்தாருக்கு ஸ்வபாவமாக விருக்குமாதலால், அவர்களிவைகளை வழுவிநடவார்கள். நடப்பார்களாயின் இழிகுலத்தா ரென்றே சொல்லப்படுவார்கள்.

உயர்ந்த குலத்திற்பிறந்த ஒருவனுக்குள்ள த்ரவ்யம் முன்னிருந்த அளவுக்கு அனேகம்பங்கு குறைவடைந் திருந்தாலும் அவன் அக்காலத்திலும் இரப்போர் முதலாகியவர்களுக்கு உபகாரஞ் செய்வதில் மனத்தளர்ச்சி யடையான்.

களங்கத்தையுடைய சந்த்ரன் உலகத்திற்கு நன்மையைச் செய்து வருவதால் அச்சந்த்ர னிடத்துள்ள களங்கத்தைப் பெரியோர்கள் பாராட்டாமல் குணத்தைப் பாராட்டி வருகிறார்கள்; அதுபோல, நற்குலத்திற் பிறந்தவர்களிடத்து ஒருவேளை குற்றமுண்டா யிருந்தாலும், அது ஒரு நன்மையைப்பற்றி வந்ததாக விருக்குமேயல்லாது வேறாகவிராதென்று நினைக்கத்தக்கதாகும்.

பழமையாகவரும் நற்குலத்தி லுத்பத்தியான ஒருவன் அன்பில்லாதவனாக காணப் படுவானாகில், அவனது பிறப்பிடத்தைக் குறித்து உலகத்தாருக்கு ஐயமுண்டா யிருக்கும். ஏனெனில் நிலத்தினியல்பை அதனிடத்து விதைத்த விதைகளின் முளைகளாலறிவதுபோல புத்ரர்களி னியல்பால் அக்குலத்தின் தம்மை யறியப்படு மென்பதினாலேதான்.

ஆதலால், புத்திமான்க ளானவர்கள் தங்கள்நன்னெறி நடக்கையால் தங்கள் குலத்திற்குச் சிறப்புண்டாகும்படி மானம் முதலான நற்குணங்களை மேற்கொண்டு நடக்கவேண்டும்.

### மேன்மக்கள்.

மேன்மக்க ளெனப்படும் நற்குலத்திற் பிறந்த கனவான்களுக்கியல்பாக விருக்கவேண்டிய குணங்கள் யாவெனில், மாற்றார்—அன்பர்-பிறர் என்னும் மூவகையாரிடத்திலும் பேதமில்லாத அன்பும், பழிபாவங்களுக்கு அஞ்சிநடத்தலும், வஞ்சனையின்றி யுபகரித்தலும், அடிமைமுதலிய யாவரிடத்திலும் அருள்புரிதலும், வாய்மையா லுண்டாகும் வாக்ஶுத்தியும், உரைத்தசொற்றவறாமையும், பேதையரிடத் திரக்கமும், பெரியோர்களிடத்து வணக்கமும், ஸமமானவரிடத்துத் தகுதியான மர்யாதையும், இன்சொலுரைத்தலும், குலாசாரம், ஶிஷ்டாசாரம் இவைகளைத்



162432

காத்தலும், அதிதி பூஜை முதலான விதிகார்யங்களைச் செய்தலும், நடுவு நிலைமையும், இன்னும்பல நற்குணங்களுமேயாம்.

மேன்மக்க ளென்னும் நற்குலத்திற் பிறந்த நல்லோர்கள் லோக கார்யங்களை விசாரித்து குணத்தையும் குற்றத்தையுமுணர்ந்து முன் சொல்லப்பட்டதை ஸாதித்து பின் சொல்லப்பட்டதை மனதில் அடக்கிப் போடுவார்கள். அஃதெங்ஙனமெனின், பரமஶிவனானவர் திருப்பாற்கடல் கடையப் பட்டபோது அதிலுதித்த சந்த்ரனை ஶிரஸில் தரித்து ஆலகாலத்தைக் கண்டத்தில் அடக்கிய தன்மை போலேதான்.

மேன்மக்களெனுஞ் சான்றோர்களுக்கு ஸமமாக ஆகாசத்தில் ப்ரகாஶிக்குஞ் சந்த்ரனைக்கூட உவமிக்கலாகாது. ஏனெனில் சந்த்ரன் தனது குளிர்ச்சியான கிரணங்களால் உலகத்திற் இருளையகற்றி ஜனங்களுக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கினும், களங்கியெனப் பெயர் பெறுவான். சான்றோர்களோ வெனில், அப்படிக் கல்லாமலும் உலகத்தாருடைய மனதினிருளை நீக்கி அவர்களைக் களிப்புறச் செய்வது மல்லாமல், நிஷ்களங்கரா யிருப்பதினாலேதான்.

மேன்மக்களாகிய மேலானோர் ஸாத்யா ஸாத்யங்களைக் குறித்து எவ்வளவும் நினையாமல் குணதோஷங்களை மாத்ரம் நினைத்துப் பார்த்து குணமுள்ள கார்யம் அஸாத்யமாயிருந்தாலும் தமக்குள்ள மனோதைர்யத்தினால் அதை ஸாதிக்க முயல்வார்கள். அஃதெப்படி யெனில், நரியின் மீதெறிந்த அம்பு தப்பாமல் அம் மிருகத்தைக் கொல்லினும், ஸிம்ஹத்தின் மீதெறிந்த அம்பு தப்பிப் போய் விடினும் இதிலும் அது சிறந்ததல்லவென் றுரைத்திக்குந் தன்மை போலவாம்:— இதற்குப் பொருளென்ன வெனில், சிறுதொழிலை ஸாதித்ததினால் பெருமை யுண்டாகா தென்பதும், மேலானதொழிலை ஸாதிக்காவிடினும் ஸாதிக்க முயல்வதினாலேயே பெருமையுண்டாகு மென்பதுந்தான். இதற்கு நிதர்ஶனமென்ன வெனில், பரமஶிவனோ டெதிர்த்து யுத்தஞ்செய்த மன்மதன் பஸ்மமான போதிலும் இக்காலவரையில் மேன்மையான கீர்த்தி யடைந் திருப்பதேயாம்.

மேலானவர்களுக்கு கர்மாநுபவத்தின் பொருட்டுவந்த தரித்ரம் அவர்களுடைய ஶரீரத்தை மெலிவித்து நரம்பு தோற்றும்படிச் செய்யத்தக்க கொடியதாயினும், அதன் வருத்தத்தைப் பா

ராட்டமல் அவர்கள் மானமெனுங் கயிற்றினல் கட்டப்பட்டவர்களாய் இரத்தல் முதலான சிறிய தொழில்களில் செல்லவறியார்கள்.

கருப்பங் கழியைக் கண்டங் கண்டமாய்த் திருத்தி ஆலையில் வைத்து நெருக்கினலும், அது இனியசுவையுள்ள ரஸத்தைத் தருமேயல்லாது கசப்பைத் தாரதுபோல மேலானவர்கள் புன்மொழிகளால் நிந்திக்கப்படினும் தங்கள்வாக்கில் பொல்லாங்கான தாழ்ந்த வசனங்களை வரவொட்டாமல் மதுரமான மொழிகளையே பொழிந்துகொண் டிருப்பார்கள்.

ஆதலால், மேன்மக்களுடைய ஒழுக்கநெறியில்நின்று பெருமையையடைய வேண்டியதைவிட நன்மார்க்கம் வேறொன்றுமில்லாமையால், யாவரும் அதைக்கருதி நடத்தல்வேண்டும்.

## மனுஷ்ய தாவரம்.

தாவரங்களின் நாடி மண்டலம் மனுஷ்ய நாடி மண்டலத்தைப் போலவே இருக்கிறதென்பதைத் தெரிவிக்கும் ஆச்சரியமான பரீக்ஷைகள்.

இந்தக் காலத்தில் புதிய புதிய ஆச்சரியங்கள், யோசனைகள் புத்திக்குப் படாமல் சிலவாரம் கழித்தல் அசாத்தியமாகி விட்டது. அரை டன் நிறையுள்ள ஒரு ஆகாயக்கப்பல் பூமியிலிருந்து மேலெழும்புவதைப் பார்த்துத் தெளிந்த பின்னர், நடு ஆகாயத்தில் தொங்கிச்செல்லக்கூடிய ஓர் வண்டியில் யாத்திரை செய்தல் சாத்தியமெனத் தோன்றுகிறது. இன்னும் இரண்டொரு நாட்களில் ஐம்பது மைல் தொலைவிலிருக்கும் ஒருவனோடு கம்பியின் உதவியில்லாமலேயே சம்பாஷிக்கலாம் என்றும் புத்திக்குப் படுகிறது. அப்பப்பா! விஞ்ஞான சாஸ்திரத்தின் வேகமே வேகம். அதனைத்தொடர்ந்து செல்லுதல் சிறிது பிரயாசையாகத்தானிருக்கிறது.

மனுஷ்யர்களைப்போல தற்காலத்தில் ஜகதீச சந்திர வசு என்கிற ஹிந்து விஞ்ஞான சாஸ்திரி ஒருவர் தமது ஆராய்ச்சியின் வித்திகளை மேல் நாட்டுச் சாஸ்திரிகளுக் கெதிரே காட்டும்படி இந்திய இராஜாங்கத்தாரால் அனுப்பப்பட் டிருக்கிறார். அவர் லண்டனிலுள்ள "மைதாவேல்" என்கிற இடத்தில் ஜனங்களுக்கு மிகவும் ஆச்சரியமான விஷயங்களைக் காட்டிக்கொண் டிருக்கிறார். செடி, புஷ்பம் இவற்றைக்கொண்டு அவர் செய்துகாட்டும் விநோதமான பரீக்ஷைகளை நீங்கள் கவனிப்பீர்களானல், ஒரு பழய உலகத்தை விட்டுவிட்டு, ஒரு புதிய உலகத்தில் நுழைவதாகத் தெரியும். தாவரங்கள் வெறுந் தாவரங்களே யென்கிற உலகம் கண்டிப்பாகப் பொய்யாகிவிட்டது. அஃது அழியுங்காலம் வந்துவிட்டது. தாவரங்களும் மனுஷ்ய ஜந்துக்களே என்கிற உலகத்தில் நாம் திடீரென நுழையும்படி வந்திருக்கிறது. நம்மை அங்ஙனம் செய்கிறவர் ஜகதீச சந்திரவசு எனும் பண்டிதர். மனுஷ்யனுக்குள்ள நாடி மண்டலம் தாவரங்களுக்கும் இருக்கிறது என்பதை அவர் நிரூபிக்கிறார். மேலும், அத்தாவரங்களின் ஜீவசரித்திரத்தை அவற்றைக்கொண்டே எழுதும்படியும் செய்கிறார். இதனால் இன்னொரு புதிய உலகத்தில் நுழைகிறோம்.



### சடுதி மரணம்.

செடியின் மெய்யான மரணத்தைக் காட்டும் பரீக்ஷை மிகவும் அதிசயமாக இருக்கிறது. இஃது அவ்வளவு விந்தையில்லையென் நினைக்கலாம். ஆனல் ஒரு செடியின் மரணத்தை எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா? அது வா, வா வாடி வதங்கிப் போவதைப் பார்த்திருக்கிறீர்கள். ஆனல் அஃதுண்மையில் வாடுகிறதற்கு முன்னமே இறந்து வெகு நேரமாயிற்று. மனிதனைப்போல அது திடீரென மரணமடைவதை என்றைக்காகிலும் பார்த்திருக்கிறீர்களா? செடியின் மரண வேதனையைக் கண்டிக்கிறீர்களா? அதைத் தான் ஸ்ரீவசு காண்பிக்கிறார். அது பார்க்கிறதற்கு அலங்கோலமா யிருக்கிறது. அதனல் செடிக்கும் மனுஷ்ய குணம் இருக்கிறதென்று தெரிகிறது. பரீக்ஷை விவரிப்பதற்குச் சுலபமானதன்று. சுருக்கமாக இதுதான் நாம் பார்க்கிறோம். அஃதாவது ஓர் இருட்டறையில் சுவரின்மீது ஒருவெளிச்சக்கோடு தெரிகிறது. இது இடது பக்கம் நோக்கி மெதுவாக அசைகிறது. திடீரென அது தயங்குகிறது, நடுங்குகிறது, அவதிப்படுகிறது, பிறகு வலது பக்கமாக மெதுவாய்ச் செல்லுகிறது. அந்த வெளிச்சம் தயங்கி, நடுங்கித் தவிக்கிறதே அதுதான் செடியின் மரணவேதனை.

அதனை இங்ஙனம் கொல்வதெது? ஒரு செடியைத் திடீரென்று மரிக்கச் செய்தல் எங்ஙனம் என்று தெரிந்துகொள்வதே பண்டிதருடைய பெரும் பிரயத்தனங்களில் ஒன்றும். நீங்கள் ஒரு ரோஜாப்பூவைக்காய்யும்போது, அதனைக் கொல்கிறீர்கள். ஆனல்

அந்த க்ஷணமே கொல்லவில்லை; அதற்கு, அதனுடைய காம்பில் இன்னும் கொஞ்சம் ஆகாரம் இருந்துகொண் டிருக்கிறது. அதற்கு மரணம் படிப்படியாக வருகிறது. இம்மாதிரியான மரணம் மேலேசொன்ன பரீக்ஷைக் குதவாது. ஆதலால் மிகச் சூடான வெந்நீர் (140டிகிரி உஷ்ணமுடையது) செடியை உடனே கொன்றுவிடும்என்பதைப் பண்டிதர்கள் தெரிந்துகொண்டு மிகவும் திறமையான யுக்தியினால் அதனைக் காண்பிக்கிறார். அவர் முதல்முதல் ஒரு செடியின் தண்டை முறுக்கைப்போல திருகு வடிவமாக வெட்டி, வெளிப்புறமாக அதன்மீது ஒரு சிறியகண்ணாடியைப் பதித்து விடுகிறார். அக்கண்ணாடி தன்மீதுவிழும் ஒளியைச் சுவர்மேல் படும்படிசெய்கிறது. பிறகு அத்தண்டைச் சிறிது உஷ்ணமான ஜலத்தில் போடுகிறார். அந்தச் சூட்டினால் தண்டு சிறிது அகல ஆரம்பிக்கிறது. வெந்நீர் ஸ்நாநத்தால் மனிதன் ஓர் இன்பம் அடைகிறானல்லவா? அதைப்போலவே இத்தண்டும் இன்பமடைந்து, அந்த அநுபவத்தைத் தனது விரிவால் காட்டுகின்றது. தண்டு முறுக்குவடிவமாக இருப்பதால், அது பெரிதாகையால் அதன் திருகு சிறிது விரிகின்றது. இந்தச் சலனத்தை அத்தண்டோடு இணைத்திருக்கும் கண்ணாடி சுவர்மேல் காட்டுகிறது. ஜலத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக இன்னும் சூடாக்குகிறார். தண்டு இன்னும் விரிகிறது. இது சுவர்மீது காணப்படும் ஒளிக் கோட்டால் தெரியவருகிறது. கடைசியாக ஜலத்தின் சூடுதண்டால் பொறுக்கக்கூடாத சமயம் வருகிறது. வெந்நீரில் இருக்கிற ஒருவன், அந்நீரைக் கொதிக்கும்படி அவ்வளவு சூடேற்றினால், எங்ஙனம் சுடப்பட்டு அவஸ்தைப்படுவானோ, அங்ஙனமே இந்தத் தாவரமும் வெந்நீர் சூட்டால் அவஸ்தைப்படுகிறது. கொதிநீரின் உஷ்ணத்தால் மனிதநாடிமண்டலம் விழுவதுபோலவே, தாவரத்தின் நாடிமண்டலமும் சக்தி அற்றுப்போகிறது. இதுவரையில் சுவர்மீது இடதுபக்கம் சென்றுகொண்டிருந்த ஒளியானது நின்று ஒருக்ஷணம் நடுங்கி, பிறகு வந்தவழியே திரும்பிவிடுகிறது. அது இடீரென இறந்துபோயிற்று; மரணம் நேரிடும் வண்ணம் சுடப்பட்டது. ஒளி பின்நோக்கிப் போனதானது, தண்டு சுருங்கினதைக் காண்பிக்கிறது. மரணம் வந்தவுடனே அங்கங்களெல்லாம் சுருங்கிவிடுமல்லவா? அந்தச் சுருக்கம்.

### தாவரங்களின் ஆச்சரியமான உணர்ச்சிகள்.

தாவரங்களின் உணர்ச்சிகளைக் காட்டுகிற பரீக்ஷைகளும் விநோதமாகவே யிருக்கின்றன. ஸ்ரீவசு சாஸ்திரி செடியைத் தூண்டக்கூடிய ஒரு சக்தியை அதன்மீது பிரயோகிக்கிறார். அதற்கு மறுமொழியாக அஃதொரு குறிகாட்டுகிறது. செடியானது அக்குறிகளைத் தானாகவே, இதற்கெனப் பண்டிதாவர்களால் தயாரிக்கப்பட்ட சில நுட்பமான கருவிகளில் பதிகின்றது. இந்தப் பதிவுகள் தாவரத்தில் மறைந்து கிடக்கும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றன. பண்டிதாவர்கள் கண்டுபிடித்திருக்கும் கருவிகள் மிகச் சிறிய காலங்களையும், அஃதாவது இருதயத் துடிப்பினுடைய காலத்தின் ஆயிரத்தி லொன்றைப் பதியுமென்றால், அந்த யந்திரங்களின் நுண்மை ஒருவாறு ஞாபகத்திலிருக்கலாம். ஸ்ரீவசு சாஸ்திரி செடியை அக்கருவிகளில் ஒன்றுடனிணைத்து, அதன் இலைகளில் ஒன்றை இலேசாக அடித்தார்; அடிபட்ட மனிதனுக்கு உண்டாகும் உணர்ச்சியைப் போலவே, அச்செடிக்கு அடிவாங்கின உடனே, உணர்ச்சி ஏற்பட்டது என்பது தெளிவாகப் புலப்பட்டது. அஃதாவது, அந்த அடி தாவரத்தின் நாடி மண்டலத்தைத் தாக்கினது. அதனால் உண்டான அதிர்ச்சி அடியின் பலாபலத்துக்குத் தகுந்தவிதமாக யந்திரத்தில் வரையப்பட்டிருந்தது. சாஸ்திரி செடிக்குத் தீபன மருந்து ஒன்று கொடுத்தார். உடனே ஒரு பெரும் அதிர்ச்சி காணப்பட்டது. நாடிமண்டலம் மிகத் தளர்ந்துபோகும் விதமாக ஒரு மருந்து கொடுக்கப்பட்டது. உடனே தாது மந்தமாக நடக்க ஆரம்பித்தது.



அதனைக் குடிக்கச் செய்தல். எந்தெந்தப் பானங்கள் மனுஷ்யர்களை யென்னென்ன செய்யுமோ, அதே மாதிரியான செய்கையைத் தாவரத்திலும் காணச் சற்று அவமானமாகவே யிருந்தது. செடியை ஜலம் குடிக்கச் செய்வதில் எவனும் ஆக்ஷேபிக்கமாட்டான். ஆனால் அது தேப்பானம் குடிக்க என்ன நியாயமிருக்கிறது? ஸ்ரீவசு சாஸ்திரி அதற்குச் சாராயம் கொடுத்தபோது, யந்திரத்தினால் காட்டப்பட்ட அதனுடைய உணர்ச்சி தெளிவாக இராது, தடுமாறும் விதமாகக் காணப்பட்டது. குடிபோதையில் இருக்கும் செடியைக் கவனிக்க மிகவும் அவமானமாக இருந்தது. உண்மையில் செடியானது நமது நெருங்கியசகோதரனே. அதிக உணவினால், அது சுவாரணையில்லாது மூர்ச்சைபடைந்ததுபோலக் காணப்படுகிறது; அதனால் பதில் உரைக்க முடியவில்லை; மிகுதியான உணவை எடுத்துவிட்டால், செடியின் திமிர்ப்பு ஒழிந்துவிடுகிறது.

இன்னொரு யந்திரம் காணப்படுகிறதே, அது ஒலிக்கும் யந்திரம். செடிக்கு ஸ்பர்ச உணர்ச்சி எவ்வளவு நேரத்தில் உண்டாகிறது என்பதைக் காட்டும் யந்திரம். இங்கேயும் தாவரத்துக்கும் மனுஷ்யனுக்கும் மிக நெருங்கின பொருத்தத்தைக் காண்கின்றோம். கொஞ்சம் தடித்த செடி மெதுவாகவும், ஒரு பிரபுவைப் போலவும் பதில் சொல்லும். மெல்லிய செடிக்கு நம்பக்கூடாத விதமான அவ்வளவு விரைவில் உணர்ச்சி ஏற்படுகிறது. உதாரணமாக தொட்டாற் சிணுங்கி உணர்வதற்கு வேண்டிய நேரம் ஒரு கணத்தின் நூற்றிலொன்று. கொஞ்சம் களைப்பாக இருக்கும் போது, செடியின் தாது சிறிது மந்தமாக நடக்கிறது. அது மிக்க களைத்துச் சோர்ந்திருக்கும்போதும், அல்லது அதனைத் தொளையிட்டாலும், அதற்குச் சிறிதுநேரம் வரையில் சுவரணையே கிடையாது; அது அரைமணி நேரமாகிலும் இளைப்பாறின பிறகு அதற்குப் பிரக்ஞை வருகிறது.

அதிகமான உள்வாசம் கெடுதலாம்.

நல்ல காற்றுப்படாமல் உள்ளேயே வசித்தல் மனிதர்களுக்குச் சுகமில்லாததுபோலவே, தாவரத்துக்கும் சுகமில்லையென்பது இன்னொரு பரீக்ஷையினால் காட்டப்பட்டது. வெளிக்காற்றும், சீதோஷ்ணமும் படாமல் கண்ணாடிக்குள்ளே காபந்தாக வைக்கப்பட்ட செடி வெகு நுட்பமான சௌக்கியத்தோடு செழிப்பாகக் காணப்பட்டது. ஆனால் அதற்கு வளரும் சக்தி மிகக் குறைவாக இருந்தது; அல்லது அற்றுப்போயிருந்தது. ஆனால் அந்தச் செடியைத் தொடர்ச்சியாக சிறிது நேரம் அடித்துக் கொண்டிருந்தால், அது திமிர்ப்பொழிந்து, சுருசுருப்பாகப் பதில் சொல்ல ஆரம்பிக்கிறது. அதனுடைய தாது நல்ல தீவிரமடைகிறது.

ஸ்ரீவசு சாஸ்திரியினுடைய பரீக்ஷைகளைப் பார்த்தவனுக்கு மற்ற உயிர்களினின்று தன்னை வேறாகப் பிரிக்க நினைத்தல் அசாத்தியமாம். ("தெஸ்மோதியம் ஜீரான்ஸ்") என்கிற இந்திய செடியின் தாது விசேஷமான சுருசுருப்பையுடையது.

வெளியுலகத்தின் தன்மைக்குத் தகுந்த விதமாக மனித இருதயம் அடிக்குமல்லவா? செடியின் தாதுவும் அங்ஙனமேயாம். உஷ்ணத்தால் துடிப்புகள் அதிகரிக்கின்றன; குளிரால் குறைகின்றன. "ஈத்தர்" என்னும் ஆகாயமருந்தினால் செடியின் தாது நின்று போகிறது. ஆனால் அம்மருந்தின் ஆவியை ஊதி அகற்றிவிட்டால், தாது மறுபடியும் நடக்க ஆரம்பிக்கிறது. "க்ளோரோபோர்ம்" என்னும் சுவரணை நீக்கும் மருந்தால் செடிக்கு அபாயமாம். விஷங்கள் மனித இருதயத்தின் துடிப்பை எந்தவிதமாக நிறுத்திவிடுகின்றனவோ, அந்தவிதமாகவே செடியின் தாதுவையும் நிறுத்திவிடுகின்றன. இதுவுமொரு ஆச்சரியமான பொருத்தம். மனிதர்களுக்குள்ளே ஒரு விஷத்தை முறிக்க இன்னொரு எதிர்விஷத்தைப் பிரயோகித்தல் வழக்கமல்லவா? அதுபோல விஷம்பட்ட ஓர் இலையைத் தகுந்த எதிர்விஷத்தைக்கொண்டே ஸ்ரீவசு சாஸ்திரிகளால் சொஸ்தப்படுத்த முடிந்தது.



தாவரங்களும் விழிப்பு நேரங்களும்.

செடியின் உணர்ச்சி எந்த வேளையிலும் ஒரே மாதிரியாக இருக்கிறதா அல்லது மாறுகிறதா என்று தெரிந்துகொள்ளும் பொருட்டு பண்டிதரவர்கள் தொட்டாற் சிணுங்கிச்செடி ஒன்றை (இந்தச் செடிதான், நுண்ணிய உணர்ச்சியுடையது, பரீக்ஷைக்குப் பிரயோஜனமானது.) இராப் பகலாக, மணிக்கு மணி அடித்துக்கொண்டிருந்து, அதனுடைய உணர்ச்சியைக் கவனித்ததில், தாவரங்கள் வெகுநேரம் விழித்துக்கொண்டிருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்தார். இப்போதுள்ள அபிப்பிராயங்களுக்கு விரோதமாக, செடியானது அதிகாலை வரையில் விழித்துக் கொண்டிருக்கின்றது; 6 மணி முதல் 9 மணி வரையில் நல்ல தூக்கம். அப்போது உணர்ச்சியே கிடையாது. கொஞ்சங் கொஞ்சமாக விழித்துக்கொள்கிறது. பகல் 12 மணிக்கு நல்ல விழிப்பு. பின் பகல் வர வர சோம்பல், திமிர்ப்பு; கடைசியாக அதிகாலையில் படுக்கை.

மேலே கண்ட பரீக்ஷைகளிலிருந்து, உணர்ச்சியினால் மனிதன் உயர்ந்தவன் என்பது பொய்யாகிவிட்டது. மனுஷ்ய வர்க்கத்தின் உயர்வை நிலைநிறுத்துவதற்கு உணர்ச்சியைத், தவிர வேறு காரணம் வேண்டும் என்றேற்பட்டுவிட்டது.

ஒரு மின் சக்தியின் ஓட்டத்தை அறியக்கூடிய அதி உணர்ச்சியுள்ள அங்கம் நமது நாக்கு, பொதுவாக ஒரு ஐரோப்பியனால் 6 - 4 "மிக்ரோ ஆம்பேர்" அளவுள்ள ஒரு மின்னோட்டத்தை வளர முடியும். (மிக்ரோ ஆம்பேர் என்பது ஒரு ஆம்

பேரில் ஆயிரத்திலொரு பங்கு) ஒரு 'ஸெஸ்த்' ஜாதியான் நாக்கு இன்னும் உணர்ச்சியுடையதாக இருத்தல் கூடும். ஆனால் தொட்டாற் சிணுங்கியின் உணர்ச்சி 10 மடங்கு அதிகம். இவ்வளவு உணர்ச்சி இரண்டொரு தனிச் செடிகளில் மாத்திரம் உண்டென நினைத்தல்வேண்டாம். ஏறக்குறைய எல்லாச்செடிகளிலும் காணப்படுகிறது. சாதாரண முள்ளங்கி பண்டிதருடைய கருவிகளால் திடமான பதில் சொல்லுகிறது.

பண்டிதருடைய ஸித்திகள் அனைத்தும் ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ், லண்டன் முதலிய மேல்நாட்டிலுள்ள உயர்ந்த விஞ்ஞான சாஸ்திரிகள் பிரகாசிக்கும் இடங்களில், மிகவும் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன என்பதிலிருந்து, உணர்ச்சி விஷயத்தில் தாவரமும் மனுஷனும் ஒன்றே என்று அவர் ஸ்தாபித்ததின் பெருமை நன்கு விளங்கும்.

தாவரத்தினுடைய அங்கங்களின் ஆராய்ச்சியிலிருந்து மனுஷ்ய சரீரத்தான் ஸகலவிதமான செய்கைகளும் அர்த்தமாதல் கூடும். இங்ஙனம், ஸ்ரீ ஜகதீச சந்திரவசு சாஸ்திரி சொல்லுகிறதுபோல, பிராணனாகிய இப்பெரும்பாக சமுத்திரத்தில் வேற்றுமையின் தோற்ற மழிந்து ஒருமை தெரிகிறது. பேதம் அபேதத்தில் அமிழ்ந்துவிட்டது.

"டெய்லி நியூஸ் அண்ட் லீடர்"

## சக்ரவர்த்தினி.

இப்பத்திரிகை சென்ற 13 வருடங்களாகச் செவ்வனே நடைபெற்று வருவது பிரசித்தமாம். எமது வாயிலாக இது சென்ற 6 வருடங்களாக நடைபெற்று வருகின்றது. இதில் கல்வி யறிவு அபிவிர்த்தி யாவதற்குரிய விஷயங்களும், மாதராடவர் தருமங்களும், மனோலய சாதனங்களும் பிறவும் செவ்விய நடையிலெழுதப்பட்டு வருகின்றன. வருட சந்தா ரூ.2 0 0




# சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL -13 } March - 1918. { No - 8.
தொகுதி-13 } மார்ச்சுமீ 1918. { பகுதி – 8.


## நாலடியார் வசனம்.

### 8-வது பொறை யுடைமை.

அஃதாவது அறிவுடையார் காரணம் பற்றியாவது அறியாமை பற்றியாவது ஒருவன் தமக்குத் தீமை செய்தவிடத்து, தாமும் அதனை அவனிடத்துச் செய்யாது பொறுத்தலை யுடைய ராதலாம். சினமில்லாரிடத் திருப்பது பொறுமையாகலின், அதுபற்றிச் சினமின்மையின்பின் இது வைக்கப்பட்டது.

பேதையோடு யாதும் பேசாது அவனைவிட்டு,
விலகிப்போதல் வேண்டுமெனல்.

(1) மாலைபோற் செல்லும் அருவியாற்றால் குளிர்ந்துள்ள சிறந்த மலை நாட்டரசனே! பேதையோடு யாதும் பேசாதிருக்கக் கடவாயாக; பேதை (யாதவ தொன்றனை) கூறினால், (மனம்) உடைந்து (வருத்தமுறப்) பேசுவான்; (ஆகலின்), கூடுமான வளவில் (அவனினின்றும்) தப்பித்துக்கொண்டு நீங்குதலே நன்றாம்.

பேதை-செய்யத்தக்கதிது, செய்யத்தகாத
திது என்றுணராதவன் (மூடன்)

இஃதொரு பண்டிதன் ஓரரசனை நோக்கிக் கூறியதாம்.

(க-ரை.) மூடரோடு யாதும் பேசுதல் கூடாது; அவர் மனம் வருந்தப் பேசுவதன்றி வேறு வகையாகப் பேசார்; அதனால்

அவரிடத்திருந்து கூடுமானவளவும் விலகிப்போதல் வேண்டும் என்பதாம்.

கீழோர் சினங்கொண்டு கூறுவதைப்
பொறுத்துக்கொள்ள வேண்டுமேயன்றி
அவரோடெதிர்த்துப் பேசுதல் கூடாதெனல்.

(2) தமக்கு (எவ்வகையாலும் தமக்கு) ஒப்பாகாதவர் (தம்மைப்பற்றித்) தகுதியல்லாத சொற்களைக் கூறினால், அவற்றைப் பொறுத்துக் கொள்ளுதலே (அறிவுடையார்க்குத்) தகுதியாம். (அவர் அவற்றைப் பொறுத்துக் கொள்ளாது பேசுவாராயின்) அதனை உலகத்தார் புகழத்தக்கதாகக் கொள்ளாது இகழத்தக்கதாகக் கொண்டு விடுவர்.

(க - து.) கீழோர் தம்மைப்பற்றி இகழ்ந்து கூறுதலை மேலோர் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும்; பொறுத்துக்கொள்ளாமலவரோடெதிர்த்துப் பேசுவாராயின், அவமானமே உண்டாகு மென்பதாம்.

இச்சொல் தீமையைத் தரும்; இச்சொல்
நன்மையைத் தருமெனல்.

(3) மலர்களிலெல்லாம் அழகியவண்டுகள் மொய்த்துச் சப்திக்கின்ற கடற்கரையையுடைய அரசனே! (தமக்கு நன்மை) ஆவதை யறிந்திருப்பவரை (ஒருவர்) பெற்றால் (அவர்க்கு) தம்மீது) அன்புள்ளவர் கூறும் கடுஞ்சொல்லானது அயலார் சந்தோஷித்துச் சொல்லுகின்ற இன்சொல்லினும் தீமையைத் தருவதாமோ? (ஆதலால் நீ இதனை யாலோசித்துப் பார்க்கக் கடவாய்).

இஃதொரு பண்டிதன் ஓரரசனை நோக்கிக்
கூறியதாம். அயலார்-உள்ளன்பில்லார்.

(க - ). ஒருவர் தம்மீது அன்புள்ளவர் சொல்லுஞ் சொல் கடுமையானதாக விருக்கினும் அதனைப் பொறுத்துக் கொண்டு, அச்சொல்லின்படி நடக்கவேண்டுமே யல்லாமல், அன்பில்லாதவர் இனிமையாகச் சொல்லுகின்ற சொல்லின்படி நடத்தல்கூடாதென்பதாம்.

பொறுமை யுடையார்க்குத் துன்பமில்லை யெனல்.

(4) அறியத்தக்கதை (ஐயந்திரிபின்றி) அறிந்து, (அதனால் மனம் வாக்குக் காயமென்னு மூன்றும்) மடங்கி அஞ்சத்தருவ



தற்கு அஞ்சி, (தமக்குப்) பொருந்திய காரியத்தை யுலகத்தார் மனமுகக்குமாறு செய்து, (நியாயமான வழியில் தாம்) பெற்ற பொருளால் இன்பமுற்று வாழும் இயல்பினை யுடையார் எப்போதும் துன்பமுற்று வாழ்தலில்லை.

அறியத்தக்கது-நன்மை தீமைகளாம்;
அஞ்சத்தகுவது-பழிபாவங்களாம்.

பொறுமையில்லார்க்கு மனம் வாக்குககாய மென்பன அடங்குவதில்லை யாகலின், அடங்கி என்பதனால் பொறையுடைமை பெறப் பட்டவாறறிக.

(க - து.) அறியத்தக்கதை யறிந்தடங்கி, அஞ்சத்தகுவதற்கஞ்சி, நியாயமானவழியிற் சென்று பொருள்தேடி வாழுகின்றவர் இன்பமுற்று வாழ்வதன்றித் துன்பமுற்று வாழ்வதில்லை யென்பதாம்.

நட்பினர் செய்யுந் தீமையைப் பொறுத்துக்
கொள்ளவேண்டுமெனல்.

(5) இருவர் (தம்முள்) வேற்றுமையில்லாது கலந்து நட்புக் கொள்ளல் வேண்டும். நட்புக்கொண்ட விடத்து (அவருள்) ஒருவனிடத்துத் தெளிந்தறிதற்குக் கூடாத ஒழுக்கமுண்டாமாயின், (மற்றொருவன் தனக்குப்) பொறுக்கக் கூடியவளவும் (அவன் செய்த தீமையைப்) பொறுத்துக் கொள்ளக் கடவன்; பொறுத்துக்கொள்ள முடியாதவனாயின் (அவன் செய்த தீமையைப் பிறரிடத்துச்) சொல்லாது (அவனிடத்துத்தான் கொண்டுள்ள நட்பை அவனும் அறியாதபடி) தூரத்தில் விட்டுவிடக் கடவன்.

தூரத்தில் விட்டுவிடலாவது பையப்பைய
விட்டுவிடுதல்.

(க - து). நட்பினரிருவருள் ஒருவன் தீமைசெய்து வருவனாயின், மற்றவன் அவன்செய்த தீமையைப் பிறரறியச் சொல்லாது பொறுத்துக் கொண்டு அவனது நட்பைப் பையப்பைய விட்டுவிடல் வேண்டு மென்பதாம்.

நட்பினர் செய்யுந்தீமையை நன்மையாகக்
கருதிப் பொறுத்துக்கொள்ள
வேண்டு மெனல்.

(6) காடு சூழ்ந்த நாட்டையுடைய அரசனே! (கல்வி கேள்வியறிவொழுக்க முடையோன் தனக்குத் தனது நட்பினர்) துன்பந்

தருஞ் செயல்களைச் செய்தாராயினும் (அவை என்னிடத்து) இன்பந்தருஞ் செயலாக வொழியக் கடவனவாக வென்று கருதித் தன்னைத்தானே வெறுத்துக் கொள்வதல்லாமல், (தன்னோடு) கூடி நட்புச் செய்தவரை (தன்னினின்றும்) நீங்கி விடுவதில்லையாம். மிருகங்களுக்கும் (நட்பினின்றும்) நீங்குதல் முடியாத காரியமாகும்; (இதனை நீயாலோசித்துப் பார்ப்பாயாக).

இஃதொருபண்டிதன் ஓராசனை நோக்கிக்
கூறியதாம்.

விலங்குகள்-புலி, சிங்கம், யானை முதலியனவாம். இவற்றுள் யாதாவதொன்று எதனோடாவது நட்புக்கொண்டால், அந்நட்பினின்றும் நீங்குவதில்லையாம். சிங்கம் நாய்க்குட்டியுடன் நட்புச் செய்த கதை முதலியன இங்குக் கவனித்தற் குரியனவாம்.

(க - து.) ஒருவர் பிறரோடு ஆராய்ந்து நட்புச்செய்தல் வேண்டும்; நட்புச்செய்த பின்பவர் தீமைசெய்தால், தீவினைவசத்தால் நம்மால் வாற்பாலது அவரால் வந்ததென்றுகருதி அதனைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமேயன்றி, அவர்செய்த தீமைபற்றி, அவரிடத்துக்கொண்ட நட்பினைவிடுதல் கூடாதென்பதாம்.

பிறர் நல்லோரிடத்து நட்புக் கொள்ளுதற்
கேது கூறல்.

(7) ஒல்லென்னும் ஓசையோடு அருவியாறுகள் பாய்கின்ற பெரிய மலைநாட்டரசனே! (சிறியார்) பெரியாரது பெரு நட்பினைக் கொள்வதற்குக் காரணம் தாம்செய்த பொறுத்தற்கரிய குற்றங்களை (அவர்) பொறுத்துக் கொள்ளுவாரென்று கருதியேயாம். (பிறர்செய்த குற்றங்களைப் பொறுத்து அவர்க்கு) நன்மை தருவனவற்றைச் செய்பவர்க்கு நட்பினராகின்றவர் அரியவராவரோ? (எளியவரே யாவர். இதனைநீ ஆலோசித்துப் பார்ப்பாயாக).

இதுவுமொரு பண்டிதன் ஓராசனைநோக்கிக் கூறியதாம்.
பெருநட்பு-மாருச்சினேகம்.

(க - து.) பிறர்செய்த குற்றங்களைப் பொறுத்து அவர்க்கு நன்மையே செய்து வருகின்றவர்க்கு யாவரும் நட்பினராக வொழுகுவா ரென்பதாம்.

பொறுமை வறுமையிலவசியம்
வேண்டுமெனல்.

(8) (அறிவுடையார்) பெரும் பசியால் (உடம்பு) வற்றிப் போனாராயினும் பண்பிலார்க்கு (தமது) வறுமையை யறியும்படி



சொல்லாதிருப்பர்; தம்முடம்பை (மானங் கெடாதிருத்தற் பொருட்டு) விட்டுவிடுந் துணிவில்லாதவர் (தமது) வறுமையை (அதனைநீக்க வல்லபொருள்) அளவை யுடையார்க்குச் சொல்லுவர்.

பண்பு - எல்லாரியல்புகளு மறிந்தொத் தொழுகுதல்.

(க - து.) ஒருவர் வறுமையால் பெரிதும் வருந்துங் காலத்திலும் தமது வறுமையைப் பிறரிடத்துச் சொல்லி வருத்தமுறாது, அதனைப் பொறுத்துக் கொள்ளல் வேண்டும்; தம் முயிரைவிடும் துணிவில்லாதவரே தமது வறுமையைப் பொறுத்துக் கொள்ளாது பிறரிடத்துக் கூறிப்பொருள் பெற்றுப் பிழைப்ப ரென்பதாம்.

ஒருவன் ஒரு காரியத்தைப் பொறுமையாக
விருந்து நோக்கிப் பிறர் பழித்துக்
கூறுவாறுசெய்து, அதன் பயனை
யடைய வேண்டுமெனல்.

(9) அலைமிக்கெழும் அருவி யாறுகள் பொருந்திய மலைநாட்டரசனே! (ஒருகாரியம் முன்னர்) இன்பத்தைக் கொடுத்து (பின்னர்) இழிவு தருவதாயிருப்பினும், இன்பத்தின் பட்சத்திலேயே இருந்தவனுக்கு (நான் சொல்வ தொன்றுண்டு; நீ அக்காரியத்தால்) இன்பம் நீங்காமையை யறிந்தாயாயினும், (பொறுமையாக விருந்து) பழியுண்டாகாத மார்க்கத்திலே (சென்று அவ்வின்பத்தைப் பெறுதலே) தலைமையானதாம்.

இஃதொரு பண்டிதன் ஓராசனை நோக்கிக் கூறியதாம்.

(க - து.) ஒரு காரியத்தைச் செய்யுமிடத்து இதனால் இன்பமும் துன்பமு முண்டாதல் இயல்பாம்; ஆனால், அக்காரியம் பழிதருவதாகா தென்பதைப்பொறுமையாக விருந்துநோக்கி, அதனைச் செய்து, அதன்பயனை யடைவதே ஒருவனுக்கு மேலான தென்பதாம்.

கேடுவருவதா யிருப்பினும், வறுமை வருவதா
யிருப்பினும், செல்வம் வருவதாயிருப்
பினும் பொறுமையா யிருந்து செய்
யத் தக்கனவற்றைச் செய்ய
வேண்டுமெனல்.

(10) (ஒருவன் ஒரு காரியத்தால்) தான் கெடுவதா யிருப்பினும் தக்கார்க்குக் கேடுசெய்ய நினையா திருக்கக் கடவன்; தன்னு

டைய வுடம்பின் மாமிசம் (வறுமையால் வற்றிக்) கெடுவதாயிருப்பினும், உண்ணத் தகாதவரிடத்து உணவினை யுண்ணாதிருக்கக் கடவன்; சுவர்க்கத் தோடுகூடிய உலகத்தை யெல்லாம் பெறுவதா யிருப்பினும், நடுவே பொய்யோடு கூடியசொல்லைச் சொல்லாதிருக்கக் கடவன்.

தக்கார் - கல்வி கேள்வி முதலியவற்றால் மேம்
பாடுடையார்; உண்ணத்தகாதவர் -
கீழ் மக்கள்.

(க - து.) ஒருவன் எவ் விஷயத்திலும் பொறுமையா யிருந்தொழுகுதல் வேண்டும்; அதனைவிட்டு எதனையுஞ் செய்தல் கூடாதென்பதாம்.

# சுகாதாரம்.

## தானியங்கள்.

(முன் தொடர்ச்சி.)

### சாராய முதலிய மதுபானங்கள்.

சாராய முதலிய மதுபானங்களை உலகத்தார் அறியாதிருந்தார்களானால் இப்பொழுது உலகத்திலிருக்கிற பாவச்செயல்களில் பாதிப்பாவச்செயல் இல்லாதிருக்குமென்றும், இப்பொழுது மனிதஜாதியாருக்குள் காணப்படுகிற தரித்திரத்திலும் எண்ணிறந்த மற்றநேகவகை நிர்ப்பந்தங்களிலும் அதிகமான பங்கை நாம் காணாதிருப்போமென்றும் ஒரு கல்விமான் கூறுகிறார். இது நிஜமே. மதுபானங்கள் உலகத்தில் வழங்கப்படுவதனால் அவைகளை விசேஷமாய் உபயோகிக்கிறவர்களில் அநேகர் பலவகை நிர்ப்பந்தங்களுக்குள்ளாகிறதுமன்றி அதிசீக்கிரத்தில் விருத்தாப்பியத்தையும் மரணத்தையும் அடைகிறார்கள்.

மதுபானங்களில் சாந்தமானவற்றை அளவாக உபயோகித்து வருவதனால் தங்கள் சரீர சுகத்திற்கு அனுகூலமுண்டாகிறதென்று சிலர் சொல்லுகிறார்கள். இது ஒருவாறு நிஜமென்றாலும் மதுபானங்களை எப்போதும் தொடாதவர்களில் அநேகருக்குப் பூரணமான சுகமும் தேகபலமும் நீடிய ஆயுளும் இருந்திருக்கின்றனவென்பது அனுபவத்தினால் எல்லாரும் அறிந்திருக்



கிற விஷயமாம். இதனால் பெரும்பாலும் சுகமுள்ளவர்களுக்கு மதுபானங்கள் கொஞ்சமாவது அதிகமாவது அவசியமல்லவென்பது பெறப்படுகின்றது. மேலும் மதுபானங்களை அளவாகப் பிரயோகித்து வரவேண்டுமென்று முதலில் நினைத்து அவைகளைத் தொடங்கி வந்தவர்களில் முக்கால் பங்குக்கு அதிகமானவர்கள் கொஞ்சகாலத்திற்குள்ளாக மதுபானங்களை மிதமிஞ்சிக் கையாடுகிற வழக்கத்துக்குட்பட்டு அதனால் எண்ணிறந்த நிர்ப்பந்தங்களைத் தங்கள் பேரில் வருவித்திருக்கிறார்களென்பது யாவரும் அறிந்தொன்றாம். இக்காரியம் மதுபானங்களை இப்பொழுது அளவாகப் பிரயோகித்து வருகிறவர்களுக்கும், அவைகளை இதுவரைக்கும் கையாடாம லிருக்கிறவர்களுக்கும் மிகுந்த எச்சரிக்கையை யுண்டாக்கத்தக்கது.

பொதுவாய் மதுபானங்கள் உஷ்ணமான தேசங்களுக்கு ஏற்றவைகளல்ல. அவைகள் வேர்வையைக் குறைத்து அதனால் தீமைகளை விளைவிக்கின்றன. மதுபானங்களை அதிகமாய்ப் பிரயோர்கித்தவர்கள் கடினமான பிரயாசங்களைத் தாங்கமாட்டார்கள். மதுபானங்களினால் பலவகை வியாதிகளுண்டாகின்றனவென்பது மறுக்கக்கூடாத விஷயமாம்.

மதுபானங்களைப் பிரயோகிக்கிறவர்களில் பெரும்பான்மையோருக்குள் பலவகை தேகசுகவீனங்களும், நானாவித துர்க்குணங்களும், கெடுதிகளும் உண்டென்றும் அவர்களுக்குள் நிதானமும் தெளிந்த புத்தியும் அமரிக்கையான சந்தோஷமும் இராவென்றும், அவர்களுடைய காரியங்களிலெல்லாம் யாதொரு ஒழுங்கும் திட்டமுமிராவென்றும், அவர்களுடைய குடும்பங்களில் எண்ணிறந்த துக்கங்களும் நிர்ப்பந்தங்களும் நிறைந்திருக்குமென்றும், அநேக கல்விமான்களும் வைத்திய சாஸ்திரிகளும் உறுதியாய்ச் சொல்லுகிறார்கள். இது நிஜமென்பது யாவரும் நாடோறும் பார்த்தறியக்கூடிய காரியம். மதுபானங்களினால் எண்ணிறந்த ஜனங்கள் தங்கள் தனத்தையுங் கனத்தையுஞ் சரீரத்தையும் ஆத்மாவையும் தங்களை நம்பி அண்டியிருந்த மனைவி மக்களையும் முற்றிலும் நாசப்படுத்தி யிருக்கிறார்களென்பதை யார்தான் மறுத்தல் கூடும்?

### காப்பி–தேத்தண்ணீர்.

காப்பியானது சொற்பமாய் மதுபானங்களைப்போல மனதையும் சரீரத்தையும் உற்சாகப்படுத்தத்தக்கது. அது வேலையின்

களைப்பை மாற்றும். ஆனால் அதை அதிகமாகச் சாப்பிட்டால் தேகத்தில் சற்று நடுக்கல் உண்டாகும். தேத்தண்ணீர் ஏறக்குறைய காப்பியைப்போல உபயோகமுள்ளதுதான்.

காப்பிக்கொட்டையும் தேயிலையும் ஐரோப்பிய ஜனங்களுக்குத் தெரியவந்த நாள்முதல் அவர்களுடைய வழக்கங்கள் குணாதிசயங்கள் அதிக மாறுதலடைந்திருக்கின்றனவென்று சில கல்விமான்கள் கூறுகின்றார்கள். காப்பித்தண்ணீரும் தேத்தண்ணீரும் மனதை உற்சாகப்படுத்தி அமரிக்கையாக்கும். சாராய முதலிலான லாகிரி வஸ்துக்கள் முதலில் உற்சாகத்தையும் மிதமிஞ்சின மனக்குழப்பத்தையும் உண்டாக்கிவிட்டுப் பின்பு அதிக தளர்ச்சியையும் சோர்வையுங் கொண்டுவரும். காப்பி தேத்தண்ணீர்களோ மட்டான மனோ உற்சாகத்தையும் அமரிக்கையையும் உண்டாக்கும். அவை பின்னுக்கு மனத்தளர்ச்சியையும் சோர்வையு முண்டாக்கமாட்டாவாம். ஐரோப்பியருக்குள் காப்பித் தேத்தண்ணீர்களைச் சாப்பிடுகிற வழக்கமுண்டானபின் முன்னிருந்த பெருமிதமான குடி இப்பொழுது வெகுவாய்க் குறைந்து இருக்கிறதென்று சிலர் நினைக்கிறார்கள். ஐரோப்பியருக்குள் அடிக்கடி நடந்துவருகிற பிரகாரம் தேத்தண்ணீர் காப்பித்தண்ணீர் சாப்பிடுகிறதற்கு சிநேகிதர் முதலிய அநேகர் ஒன்றாக ஓரிடத்தில் கூடிவந்து சந்தோஷமாய்ச் சம்பாஷணை செய்கிற வழக்கத்தினால், அவர்களுக்குள் மனோச்சாகஞ் சந்தோஷ குணங்களும் ஒருவர்க்கொருவர் காண்பித்து வருகிற உபசார குணங்களும், நல்லொழுக்கங்களும் அபிவிர்த்தியாகி வருகின்றன. இப்படிப்பட்ட கூட்டங்களினால் நல்ல காரியங்களை யோசிக்கிறதற்கும் பேசுகிறதற்கும் செய்கிறதற்கும் உற்சாகமுண்டாகின்றது. அவைகளின் மூலமாய்க் கல்விவிர்த்தி கைத்தொழில் விர்த்தி, சுறுசுறுப்பு, தைரியம், உதாரகுணம், நற்காரியங்களில் ஒருவரையொருவர் மிஞ்சவேண்டுமென்கிற ஆசை முதலியவைகள் விர்த்தி யடைவதற்கு ஏதுவுண்டாகின்றது. காப்பியானது தேத்தண்ணீரைப் பார்க்கிலும் அதிக உற்சாகத்தைக் கொடுக்கின்றது. அது ஜீரணத்தைச்சற்றுத்தாமதமாக நடக்கும்படி செய்கின்றது. சிலபேருக்கு அதனால் மலசுத்தி சற்றுத்தாராளமாய் ஆகும். காப்பியுந் தேத்தண்ணீரும் தேகத்தின் தேய்வையுங் கழிவையுங் குறைக்கின்றன. ஆகையால் ஒரு வேலையைச் செய்கிற இரண்டு



பேர்களில் ஒருவன் போதுமான அளவாயும், மற்றொருவன் சற்றுக்குறைவாயும் போஜனத்தைச் சாப்பிட்டு வந்தால் குறைவாய்ப் போஜனத்தைச் சாப்பிடுகிறவன் காப்பி தேத்தண்ணீரைப் பிரயோகித்து வருவானாயின் அவன் மற்றவனுக்குச் சமமாகவே வேலையைச் செய்கிறதுமன்றி அவனுடைய தேகத்துக்குச் சமமாகவே இவனுடைய தேகமும் பருமனுள்ளதாயு மிருக்கும்.

காப்பியும் தேத்தண்ணீரும் மூளை முதலான நரம்புக் கருவிகளைக் கதிப்பாய் வேலைசெய்ய ஏவுகிற போஜனங்களாம். காப்பியும் தேத்தண்ணீரும் எல்லாவகை ஜனங்களுக்கும் பிரயோஜனமுள்ள போஜனங்களாம். மனோமுயற்சி முதலிய மூளையைப் பற்றின வேலைகளைச் செய்கிறவர்களுக்கு நல்ல காப்பி அல்லது தேத்தண்ணீரானது அதிக ஊக்கத்தையும் தைரியத்தையும் தெளிவுங் கூர்மையுமுள்ள புத்தியையும் பிரயாசத்தைத் தாங்கத்தக்க சத்துவத்தையுங் கொடுக்கின்றது. அதிக தேக உழைப்புள்ளவர்களுக்கும் காப்பி தேத்தண்ணீர் பிரயோஜனமுள்ளவைகள்தாம். தேக உழைப்புள்ள வேலையாளொருவன் போதுமான போஜனத்தோடுங்கூட காப்பி அல்லது தேத்தண்ணீரைச் சாப்பிட்டு வருவானாயின் போஜனத்தை மாத்திரம் சாப்பிடுகிறவனைப் பார்க்கிலும் அதிக வேலைசெய்யச் சக்தியுள்ளவனாவான்.

## நீதிசாரம்.

(முன் தொடர்ச்சி.)

### அடக்கமுடைமை.

மனோவாக்குக்காயங்களைக் கெட்டவழியிற்செலுத்தாமல் நல்லவழியிற் செலுத்துதலே அடக்கமுடைமையாம்.

ஆலாஹல விஷத்தைப்பார்த்து ஒரு கல்விமானுரைத்திருக்கின்றதென்னெனின், அடா ஆலாஹலமே! நீயே கொடியவனென்று மிகவும் இறுமாப்படையாதே. ஏனெனில், துஷ்டருடைய வாக்கில் வருகின்ற கெட்ட சொற்களநேகம் உன்னிலுங் கொடியவைகளாக விருக்கின்றன வென்பதை நீயறியாயோ? அறியாய்; அறிந்தாலுனக் கிவ்வளவு இறுமாப்பிராது என்பதுதான். ஆதலால் சொற்குற்றத்திலகப்பட்டுத் துன்பப்படுவதற்கு

நாவே காரணமாயிருக் கின்றமையின், மற்றவைகளைக் காவாவிட்டாலும் அவஸ்யமாய் நாவைக் காத்தல்வேண்டும்.

தீயசொல்லால் ஒருவனுக்கு மனவருத்த முண்டாகும்படி செய்கிறவன் பலதுன்பத்திற்கு முள்ளாகி வருத்த மடைவானென்றும், முன் தான் வருந்தித்தேடிய தர்மங்கள் யாவையு மிழந்துவிடுவானென்றும் சொல்லியிருப்பதை அநுஸரித்து அடங்கி நடப்பவர்களே அடக்கமுடையவர்களாவர்.

நெருப்பினல் சுடப்பட்டபுண் சரீரத்தில் துன்பஞ்செய்து கொண்டிருந்தாலும், அது அப்பொழுதே நெஞ்சினிடத்திருந்து ஆறிப்போய்விடும். அடக்கமல்லாத தீயசொல்லோ வெனில், எப்பொழுதும் மாறுத் துயரத்தைத் தருமாதலால், அதனிலுமிது கொடியதேயாம்.

அடக்கமாகிய தர்மத்தை விரதமாகக் கொண்டவர்களுக்கு அது இகத்தில் சிறந்த ஆபரணமாக ப்ரகாசிப்பது மல்லாமல், பரலோகத்திலு மவர்களைத் தேவர்களுக்குள் சிறந்தவர்களாக்கும். அடக்க மில்லாதவர்களோவெனில் இகத்தில் நிந்தையும், பரத்தில் நரகத்தையு மடைவார்களென்று சொல்வதற்கு ஐயமுறவேண்டியதே யில்லை.

வர்ணாஸ்ரம தர்மங்களுக்கு மாறுபாடில்லாமல் அடங்கி நடப்பவர்களுடைய பெருமை மிகவும் பெரிதாக வுணரப்படும்.

வர்ணமென்பது நால்வகையாக விருக்கும். ப்ராஹ்மண ஜாதி ப்ராஹ்மவர்ணமென்றும், அரசஜாதி க்ஷத்ரிய வர்ணமென்றும், வணிகஜாதி வைஸியவர்ண மென்றும், சூத்ரஜாதி சூத்ர வர்ண மென்றுஞ் சொல்லப்படும்.

ஆஸ்ரமமென்பது ப்ராஹ்மசர்யமெனவும், கார்ஹஸ்த்யமெனவும், வாநப்ரஸ்தமெனவும், ஸந்யாஸ மெனவும், நால்வகையாக விருக்கும். இவ்வாஸ்ரமங்கள் ப்ராஹ்மணருக்குள்ளே மாத்ரம் இப்பொழுதும் ஸரியாக வழங்கிவருகின்றன.

ப்ராஹ்மச்ர்யமென்பது எட்டு வயதில் உபநயநஞ்செய்யப் பட்டபிள்ளைகள் குருகுல வாஸம்பெற்று வேதஸாஸ்த்ரங்களைப் படித்துக்கொண்டிருப்பதும் அந்த ஆஸ்ரமத்திற்குரிய ஏனைய கர்மங்களை யியற்றுவதுமாம். இப்படிக்கொத்த பிள்ளைகட்கு ப்ராஹ்மசாரிகளென்று பெயர்.



கார்ஹஸ்த்யமென்பது ப்ராஹ்மசர்ய வ்ரதஸமாப்தியடைந்து விவாகஞ் செய்துகொண்டு அதற்குரிய ஔபாஸன வைஸ்வதேவாதி கர்மங்களை யியற்றுவதோடு அதிதி யப்யாகத பித்ருபூஜாதி கார்யங்களையு மியற்றுவதாம். இதுவே இல்லறமெனப்படும். இந்த ஆஸ்ரமமுடையவன் க்ருஹஸ்த னெனப்படுவான்.

வாநப்ரஸ்தமென்பது நகரம், பட்டணம் இவைகளின் வாஸங்களை விட்டு ஸாத்விகாஹாரம்புஜித்து ஔபாஸனாதி கர்மங்களை யியற்றி வனத்திற்சென்று தவம்புரிந்து நடப்பதாம். இந்த ஆஸ்ரமத்தை யுடையவன் வாநப்ரஸ்த னெனப்படுவான்.

ஸந்யாஸமென்பது ஸிகாயஞ்ஞோபவீதவிஸர்ஜனமும், ஸர்வஸங்கபரித்யாகமுஞ்செய்து கிராமைகராத்ரமாய் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கையிலுமந்த ஆஸ்ரமத்துக்குள்ள ஏனையகர்மங்களையு மியற்றி பிக்ஷாந்ந போஜனஞ்செய்து புத்ரமித்ரகளத்ரங்களைத் துறந்து விட்டிருப்பதாம். இதற்குத் துறவறமென்று பெயர்.

இப்படிக்கொத்த வர்ணாஸ்ரம நெறிதப்பாமலும், நீதிநெறி தவறாமலும், பஞ்சேந்த்ரியங்க ளெனப்படும் ஐம்பொறிகளையும் தமதிச்சையின்படி செல்ல வொட்டாமல் அடக்கி நடப்பதே அடக்கமுடைமையாம்.

யாவர்க்கும் நன்மையைக் கொடுக்கும் அடக்கமானது செல்வர்களிடத்தி லுண்டாயிருக்குமாயின் அது வேறொரு செல்வமாக ப்ரகாசித்துக்கொண்டிருக்கும்.

மெய்-வாய்-கண்-மூக்கு-செவி என்னும் ஐம்பொறிகளையும் அவைகளின் வழியிற் செல்லவொட்டாதபடி அடக்கவல்லவர்களுக்கு தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, ஸ்தாவரம் எனச்சொல்லிய எழுவகைப் பிறப்பிலும் அவ்வடக்கமென்னும் வல்லமையே காவலாகவிருக்கும்.

ஆகலால், அடக்கத்தைப் பார்க்கிலும் உயர்ந்தசெல்வம் வேறொன்று மில்லாமையால், எல்லோரும் அதைச்சிறந்த பொருளாகக் கருதிக் காப்பாற்றிக் கொள்ளல்வேண்டும்.

## ஒழுக்கம்.

ஒழுக்கமானது யாவர்க்குஞ் சிறப்பைத்தருகின்ற தாதலின், அதை உயிரைப்பார்க்கிலுஞ் சிறந்ததாகக்கருதி அதற்கிடையூறில்லாமல் நடத்த வேண்டுமென்பதை யுணர்ந்தவர்களே ஒழுக்கமுடையவர்களாவர்.

இம்மை மறுமைக்குத் துணையாகவிருக்கும் தர்மமெது வென்று பலநூல்களையு மாராயுமிடத்து ஒழுக்கமே முக்யமெனச் சொல்லியிருக்கின்றமையின், அவ்வொழுக்கத்தை எவ்விதத்திலும் தப்பிப்போக வொட்டாதபடி காப்பாற்றல்வேண்டும்.

ஜாதியாசாரத்திற்குத்தக்க வொழுக்கத்தை யநுஸரித்து நடத்தலால் நல்ல குலஸ்தனாவானென்றும், அவ்வொழுக்கத்திற்கு விரோதமாய் நடப்பவன் இழிகுலஸ்தனாவனென்றும், பல நூலிலும் விதியாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

ப்ராஹ்மணன் வேதத்தை மறந்துவிடுவானாயினும் மறுபடியுங் கற்றுக்கொள்ளலாம். ஒழுக்கத்தை விட்டுவிட்டால் அவனது உயர்ந்த ஜாதித்தன்மை கெடுமேயல்லது உயர்வாகமாட்டாது.

பொறுமையுடையவனிடத்துச் செல்வம் நிலையாதது போலவே நல்லொழுக்க மில்லாதவனிடத்து மேன்மை நிலைத்திருக்க மாட்டாது.

ஒழுக்கத்தைக்கைவிட்டால் இழிகுலஸ்தனாக வேண்டுமென் றறிந்த புத்திமான்கள் அவ்வொழுக்கத்திலிருந்து சிறிதும் வழுவார்கள்.

நல்லொழுக்கத்தால் ஶிஷ்டத்வமும், அஃதில்லாமையால் ப்ரஷ்டத்வமும், உண்டாகுமென்பதற்கு ப்ரமாணமென்னவெனில், நன்மைக்கெல்லாம் மூலம் ஒழுக்கமென்றும், தீமைக்கெல்லாம் மூலம் ஒழுக்க மில்லாமையென்றும் சொல்லப்பட்டிருப்பதேயாம்.

ஒழுக்கமுடையவர்கள் தங்கள் ஜாதிக்குங் குலத்திற்குந் தகாத பொய் முதலியவைகளை மறந்து நீக்கிவிடுவார்கள். ஒருவேளை நீக்காமலிருப்பார்களாயின் நல்லொழுக்கமில்லாத நீசரெனப் படுவதற்கு ஸந்தேஹிக்கவேண்டுவதில்லை.

கல்விக்குப்பயன் அறிவு; அறிவுக்குப்பயன் ஒழுக்கம். இவ்வொழுக்கத்தை யுணர்ந்து நடக்கக் கல்லாதவர்கள் பலநூல்களைக் கற்றும் அறிவிலாரென்றே சொல்லப்படுவார்கள்.

ஆதலால், யாவரும் ஒழுக்கத்தை மேற்கொண்டு நடத்தல் வேண்டும்.

## பக்தி.

(முன்தொடர்ச்சி)

### 13. பக்தியோகத்தினியல்பும், அதன் மெய்யான உட்கருத்தும்.

"இவ்வாறெப்பொழுதுந் தங்களிடத்திலேயே நிலைத்த உறுதியான உள்ளத்துடன் கூடியவனாய் யாதொரு தொண்டன் தங்களைப்போற்றி வழிபடுகின்றனனோ, யாதொருவன் புதுமையற்ற (வேற்றுமையற்ற) (நிர்விசேஷமான) கடவுளை வணங்குகின்றனனோ, இவ்விருவரில் யாவர் மேலானவர்?" * என்று அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணபகவானைக் கேட்டான். இதற்கு விடையாக ஸ்ரீகிருஷ்ண பகவான் கூறியதாவது:—"மிகக் கவலையோடுகூடிய உள்ளத்தை எப்பொழுது மென்னிடத்திலேயே உறுதியாய் நிறுத்திக் கொண்டு என்னைப் போற்றுபவன்தான் யோகிகளில் முதன்மையானவன். எனினும் பொறிபுலன்களை யடக்கி நன்கு சீர்திருத்தி எவ்விடத்திலும் பொதுநோக்கு (ஒற்றுமை எண்ணத்துடன்) கூடியிருப்பவரும், எல்லா வுயிர்கட்கு மின்பத்தையே செய்ய விருப்பமுள்ளவருமாய், யாதொருவர், வாயினால் மொழிவதற் கெட்டாததும், கண்களாற் காணமுடியாததும், உள்ளத்தினாற் கருதவொண்ணாததும், பொய்யான உலக வாழ்க்கைக்கு உதவியாயிருப்பதும், அசைவற்றதும், அழிவற்றதும், எங்கும் நிறைந்ததுமான "நிர்க்குண ப்ரஹ்மத்தைப்" போற்றி வழிபடுகின்றனரோ அவர்களும் என்னையே யடைகின்றனர். ஆனால், "நிர்க்குணப் ப்ரஹ்மத்தி"னிடத்தில் விருப்பம் மிகுந்தவர்க்குத் துயரம் மிகுந்திருக்கும். ஏனென்றால், நிர்க்குண விஷயமான நிஷ்டையானது உடற்பற்றுள்ளவரால், மிகவும் வருத்தத்தோடு கூடியே அடையப்படுகின்றது. எனினும், எவர்கள் எல்லாச் செயல்களையும், என்னிடத்தில் ஒப்புவித்துவிட்டு என்னையே அடைக்கலமென்று அடைந்தவர்களாய் எல்லாமாயிருக்கின்ற ஒரே முடி

* ஸ்ரீமத் பகவத்கீதை 12-வது அத்யாயம், 1 வது ச்லோகம்.

"ஏவம் ஸதத யுக்தாயே பக்தாஸ்த்வாம் பர்யுபாஸதே,
யேசாப்யக்ஷர மவ்யக்தம் தேஷாம் கேயோக வித்தமா:."

(இ-ள்.) "இப்படி எப்பொழுதும் உம்மிடத்தில் மனதையுடைய யாதொரு அடியார் உம்மை வணங்குகின்றனரோ, காணப்படாமலிருக்கின்ற அழிவற்ற கடவுளைக் கனவிலு முன்னுகின்றாரோ, அவர்களுக்குள் யார் மேலான யோகத்தை யறிந்தவர்?"

வான என்னிடத்துப்போன்பிறலேயே என்னையே நினைந்து வழிபடுகின்றார்களோ, என்னிடம் நிறுத்தப்பட்ட உள்ளத்துடன் கூடிய அவர்களை ஓ ! அர்ஜுனா! கூற்றுவன் (யமன்) போன்ற பிறவிக்கடலினின்றும் மிக விரைவில் யான் கரையேற்றுகிறேன்." * இங்கு ஜ்ஞானயோகத்தையும், பக்தியோகத்தையும், குறிப்பிடுகின்றது. ஞானயோகம் மேலானதுதான். அது அத்யாத்ம சாஸ்த்ரங்களிலெல்லாம் மிக முதன்மையானதாகும். எனினு மத்தகைய சாஸ்த்ரங்களிற் கூறியுள்ளபடி, நடத்தல் எளிதென்று எல்லோரு மெண்ணுகின்றனர் ! ஆனால் உண்மையில் ஞானயோகப்படியுள்ள வாழ்க்கை மிக அரிது. அதனை யெளிதிற் கைகொண்டு வாழ்நாள் கடத்த முயன்றால் எப்பொழுதும் பிழைபட்டுப் பலவாறான இடையூறுகளையே அடுத்தடுத்து அடைய நேரிடும். இவ்வுலகத்திலே இரண்டு வகையான மனிதருளர். முதலாமவர், உடலைக்கொழுக்க வைத்துக்கொள்வதையே பிறவிப்பயனாகக் கருதிவருகின்ற அசுரத்தன்மை வாய்ந்தவர். மற்றொருவர், உடலும், அதனைப்போற்றுதலும், ஆத்மாவின் முன்னேற்றத்திற்காக மட்டுமே என்று கருதுகின்ற தெய்வத்தன்மை வாய்ந்தவர்,

* "மய்யாவேச்ய மனோயேமாம் நித்யயுக்தா உபாஸதே
ச்ரத்தயா பரயோபேதாஸ் தேமேயுக்த மோமதா:."

"யேத்வக்ஷரமனிர்த்தேச்ய மவ்யக்தம் பர்யுபாஸதே,
ஸர்வத்ரக மசிந்த்யஞ்ச கூடஸ்த மசலந் த்ருவம்."

" ஸந்நியம்யேந்த்ரியக்ராமம் ஸர்வத்ர ஸமபுத்தய:.
தேப்ராப்நுவந்தி மாமேவ ஸர்வபூதஹிதே ரதா:."

" க்லேசோதிகதரஸ்தேஷா மவ்யக்தா ஸக்த சேதஸாம்
அவ்யக்தாஹி கதிந் து:கம் தேஹவத் பிரவாப்யதே."

" யேதுஸர்வாணி கர்மாணி மயிஸன்யஸ்ய மத்பரா:,
அனன்யேனைவ யோகேக மாம் த்யாயந்த உபாஸதே."

" தேஷாமஹம் ஸமுத்தர்த்தா ம்ருத்யு ஸம்ஸார ஸாகராத்,
பவாமி நசிராத் பார்த்த! மய்யாவேசித சேதஸாம்."

(பகவத்கீதை 12வது அத்யாயம் 2-3-4-5-6-7 ச்லோகங்கள்)

குறிப்பு:—

மேற்கூறி வந்தவை இவ்வாறு ச்லோகங்களின் பொருளேயாதல் பற்றி இங்கு வேறாக எடுத்தெழுதாது ச்லோகம் மட்டும் எழுதப்பட்டுள்ளது.



* அஸுர இயற்கை (தீயசெய்கை) யைப் பின் பற்றியவர்க்குங் கூடத் தங்கள் சார்பான உதாரணங்களை வேதத்திலிருந்தே ப்ரமாணப்படுத்திக் கூறமுடிகின்றது; ஆகலால், ஒரு நல்லோரது செய்கைகளனைத்து மெப்படி நல்லதாகவே யிருக்கின்றதோ அவ்வாறே, ஒரு தீவினையாளனது செய்கையும் ஒழுங்கானதாகவே தான் தோற்றப்படுகின்றது. ஞானவழியில் இது (மாதிரித்) தான் சில குற்றங்களுண்டு. ஆனால் பக்தியோகத்திலோ இந்த (மாதிரியான) துன்பமில்லை. பக்தியோகம் இயற்கையாயுள்ளதாகும். அது மிக அமைதியானது. கைகொள்வதற்கு மிக இனிமையானது. பக்தன் ஞானியைப்போல அவ்வளவு உயர்ந்த நிலைமையைப்பெற வேண்டி வருந்தி முயல்வதில்லை; ஆதலால் பக்தனது (கீழ்) வீழ்ச்சியும் அவ்வளவு வல்லமையோடு கூடியுண்டாவதில்லை. எந்த வழியைக் கைகொண்டாலும், பற்றின்மை வாய்க்கப்பெற்றாலன்றி ஆத்மா ஸ்வதந்த்ரனா (விடுதலை யடை) வதில்லை.

ஸ்ரீகுந்த அருட்செல்வம் வாய்ந்த "கோபஸ்த்ரீகளில்" ஒருத்தியினுடைய பாபபுண்ய வடிவமான ஆத்மபந்தங்(உடற்பற்று)கள் எவ்வாறு வேறுபடுகின்றன ? என்பதற்கு இரண்டு ச்லோகங்களையெடுத்து விளக்குகின்றேன்:—

"தச்சிந்தா விபுலாஹ்லாத க்ஷீணபுண்யாசயா ததா,
ததப்ராப்தி மஹாதுக்க விலீனா சேஷபாதகா"
"நிருச்சுவாஸ தயாமுக்திம் கதான்யா கோபகன்யகா"

அதாவது:—" கோபஸ்த்ரீயானவள் " பகவானை போரவலுடன் நினைப்பதனாலுண்டாகின்ற பெருமகிழ்ச்சியானது அவர்களுடைய எல்லாப்புண்யங்களையுமழித்தது ; பிறகு அவரையடைவதற்குத்தடையாயுள்ள பெருந்துன்பம் அவர்களுடைய எல்லாப் பாபங்களையுமழித்துவிட்டது; இப்படி அவர்களது ஆத்ம பந்தங்களாகிய புண்யபாபங்களினின்றும் விடுபட்டவர்களாயினர்".

ஒருவனது உள்ளத்திற்றோன்றுகின்ற பலவாறான எண்ணங்களும், உள்ளத்தின் மாறுதல்களும், தானே குற்றமுடையன

* " த்வௌ பூத ஸர்க்கௌ லோகேஸ்மின்
தைவ ஆஸுர ஏவச...........".

பொருள்:—" இவ்வுலகத்திலே உயிர்த்தோற்றங்கள் " தைவம் " என்றும், " ஆஸுரம் " என்றும் இரண்டுவகையா யுள்ளன............ " (பகவத் கீதை அத் 16. ச்லோகம். 6.)

வல்ல என்றறிகின்றது தான் பக்தியோகத்திலுள்ள உண்மையான (ரஹஸ்யக்) கருத்து. அவ்வித எண்ணங்களை முறைப்படி ஒழுங்காகவே திருப்பி வேண்டிய வழியில் செலுத்தவேண்டும்; அவை மேலான நிலைமையை யடைகின்றவரையில் அவற்றிற்கு மென்மேலும், உள்ளவழியைக்காண்பித்துக் கொடுக்கவும் வேண்டும்; அவ்வளவுமட்டுமே வேண்டியது. கடவுளை யடைவதற்கான வழியே உயர்ந்ததாயுள்ளது; மற்றுள்ளவைகளெல்லாந் தாழ்ந்தவையே. நமது வாழ்நாளி லின்ப துன்பங்க ளிரண்டும் ஸாதாரணமாய் இடையிடையே தோன்றுகின்ற நிலைமைகளாகுமென்று நமக்குத்தெரியுமன்றோ? செல்வமோ, அல்லது வேறு பல லௌகிகப்பொருள்களோ, தனக்குக்கிட்டவில்லையன்றோ? என்று எண்ணி ஒருவன் வருந்துகின்றானெனில் அவன் தனது துன்பமாகின்ற உள்ளத்தின் மாறுதலைத் தவறாகச்செலுத்துகின்றான். ஏனெனில் துன்பத்திலும் பயனுண்டு. "கேட்டிலுமுண்டோருறுதி." தான் உயர்ந்த நிலைமையையடையவில்லையே? தனக்குக் கடவுள் நேரில் வந்து காட்சி கொடுக்கவில்லையே? என்றிவ்வாறவன் வருந்தட்டும்; அத்துயரமே அவனுக்குப் பேரின்பத்தை யளிப்பதற்குதவியாகும். அவ்வாறே, தேவையான பொருள் கிடைத்ததென்று நீங்கள் மகிழ்ந்தீர்களானால் அந்த மகிழ்ச்சியாகின்ற உள்ளத்தின் மாறுதலைப் பிழையான வழியிற் செலுத்தி விடுகின்றீர்கள். அதனை அதிலுமுயர்ந்ததான வழியிற் செலுத்த வேண்டும். அதனை மேலான பிறவிப்பயனை யடைவதற்கான வழியில் உதவிப்படுத்திக் கொள்ளல்வேண்டும். அந்த உயர்ந்த விருப்பங்களை யடையப் பெறுவதிலுள்ள மகிழ்ச்சிதான் மிகவும் மேலானது. நமது மற்றுள்ள எல்லா எண்ணங்களைப் பற்றியு மிவ்வாறு தான். எல்லா மனமாறுதல்களையுங் கடவுளிடத்துச் செலுத்தினால் அவை நன்னிலைமைக்கு உதவியாக முடிகின்றது; இல்லாவிடிலெல்லாந் துன்பத்தையளிப்பதாய் விடுகின்றன. பக்தன் அவை யொன்றையும் பிழையென்று கூறுவதில்லை. பக்தன் அவற்றை ஏற்றுக்கொண்டு எல்லாவற்றையுங் கடவுளெதிரில் ஒப்புவித்து விடுகின்றான்.

## 14. நட்பின் பல வழியிலுள்ள ஸ்பூர்த்தி (அதிர்ச்சி.)

நட்பு பலவாறாக விளங்குகின்றது. முதலாவதாக நட்பு அன்பு (பக்தி) வடிவமாய்த் திகழ்கின்றது. க்ஷேத்ரங்களிலும்



மற்றுள்ள புண்ய ஸ்தலங்களிலும் மனிதனுக்குள்ள வணக்கம் எதனாலுண்டாகின்றது? ஸாதாரணமாய்ப் பலரும் அவிடத்திலிருந்தே (கோயில்களிலிருந்தே) கடவுளைப்போற்றி வழிபடுகின்றனர். ஆதலால் அத்தகைய இடங்களில் கடவுள் இருக்கின்றாரென்று கருதுகின்றனர். அதனாற்றான் (கோயில் முதலிய) அவை தூய இடமாய்க் கருதப்பட்டு வருகின்றன. எல்லா நாடுகளிலுமிருக்கின்ற மனிதர்கள் தங்களுடைய கொள்கையின் தலைவர்களான குருக்களைப்போற்றி வணங்குவதெதற்காக? கடவுளைப் பற்றிய உபதேசத்தை அவர் நமக்கு அளிக்கின்றாரென்பதனாற்றான் மற்றவர் அவரைப்பெருமைப்படுத்துகின்றனர். இத்தகைய அன்பு, பெருமைப்படுத்திப் புகழ்தல் என்பதற்கு வேர் போன்றிருப்பது நட்பாகும். நமக்கு விருப்பமில்லாதவற்றை வணங்கவோ போற்றியுள்ளன்புடன் வழிபடவோ முடிவதில்லை. நட்பின் மற்றொரு அதிர்ச்சி "ப்ரீதி"யாகும். (ப்ரீதி—இன்பம்). கடவுளிடத்துமிகுதியான அன்பு—மிகுந்த மகிழ்ச்சி-மனிதர் சிற்றின்ப நுகர்ச்சியிலேயே எவ்வளவு மகிழ்ச்சி யடைகின்றனர்! அவர் விரும்புகிறபொருளை—அவரது பொறிபுலன்கட்கு விருப்பமானவற்றை—யடையவேண்டி அவர்களெங்கு வேண்டுமானாலும் போகின்றார்கள். அதன்பொருட்டு எந்த இடையூறுகளையுமெதிர்க்கிறார்கள். ஆனால் பக்தனோவெனில், இத்தகைய பேரன்பை (மெய்க்காதலை)க் கடவுளிடத்துச் செலுத்திவிடவேண்டும். அதுதான் அவன் செய்யவேண்டியிருப்பது.

... பிறகு பிரிவாற்றாமை. (விரஹம்) விரும்பிய பொருளின் பிரிவினால் உண்டாகின்ற மிகுதியான பிரிவாற்றாமை (விரஹம்) எனப்படும். எல்லாத்துயரத்தையும்விட மிகவுமினிமையாயுள்ளது பிரிவாற்றாமையேயாகும். "தான் கடவுளை யடையவில்லையே, அறியத்தக்கதாயுள்ள அந்தஒரேபரம்பொருளைத்தானறியவில்லையே," என்றிப்படி எண்ணி ஒருவன் வருந்தவும், அதன்பொருட்டு அவன் குறையுள்ளவ (அத்ருப்த) னும், கலங்கிய உள்ளத்தவ (அஸ்வஸ்தசித்த) னுமாய்த் திரும்பொழுது அவன் பிரிவாற்றாமையென்ற துயரத்தையடைகின்றானென்று கூறுகின்றோம். இந்த நிலைமையில் அவனுக்கு விருப்பமாயுள்ள அந்தக் (கடவுள்) ஒன்றைத்தவிர மற்றவைகளெல்லாந் துன்பமாய்த் தோன்றுகின்றன. (ஏகாந்திவிசிகித்ஸா) லௌகிகமான நட்பு அல்லது காதலிலும் பிரி

வாற்றுமை பலபொழுதுந் தோன்றுவதை நாம் காண்கின்றோமன்றோ? ஒருவனுக்கு ஒரு ஸ்திரீயினிடத்தோ, அல்லது ஒரு ஸ்திரீக்கு ஒரு புருஷனிடத்தோ மிக உறுதியான காதல் (அநுராகம்) உண்டாகும்பொழுது அவர்க்குப் பிற (அவர்விரும்பாதவ)ரைக்காண்பது (ஸான்னித்யம்) பொறுக்கமுடியாத துன்பமாய்த் தோன்றுகின்றது. மேலான மெய்க்காதலை யடையும்பொழுது பிற பொருள்களிலுள்ள வெறுப்பு (விரக்தியு)ம் அது போலவே யாகும். கடவுளைப் பற்றிய தல்லாத எந்தப் பேச்சுக்களும் அப்பொழுது சுவை யில்லாததாகின்றன. "பிற விஷயங்களைப் பற்றிப் பேசி வீணில் தொண்டை வற்றிப் போகச்(வ்ருதா கண்ட சோஷபம்) செய்து கொள்ளாது அவரைப் பற்றியே எப்பொழுதும் பேசுக; அவரையே எப்பொழுதும் நினைவி லிருத்துக." (அன்யாம் வாசாம் விமுஞ்சத). எவர்கள் கடவுளைப் பற்றிப் புகழ்ந்து பேசுகின்றார்களோ அவர்களை, பக்தன் நேசிக்கின்றான்; மற்றவர்களை விரும்புவதில்லை. அன்பு நிறைந்து மிகுந்த உயர்ந்த நிலைமையை யடையும் பொழுது (ஒருவனது) வாழ்நாள் முழுவதுமே அத்தகைய உயர்ந்த நட்பினா லுண்டாகின்ற இன்பத்தை யடைவதன் பொருட்டே என்றாய் விடுகின்றது. (ததர்த்த ப்ராண ஸ்தானம்). அஃதில்லாவிடில், அத்தகைய பக்தனுக்கு ஒரு நொடிப்பொழுது கூட உயிர்த்திருக்க முடியாது. இடை விடாத கடவுள் நினைப்பினால் பக்தனுக்கு இந்தப் பிறவி இனியதாகத் தோன்றுகின்றது. பக்தி யோகத்தின்படி ஒருவன் எங்கும் நிறைந்தவ (பரிபூர்ண)னாகி விடும் பொழுது அவன் கடவுளுடையவனாகி, "ததீயத" யை யடைகின்றான். இவ்வாறவன் பொருள் பெற்றவனாய் விடும் பொழுது அவன் கடவுளை யடையப் பெற்றால்,—கடவுளது திருவடித் தாமரையை யவன் தீண்டும் பேற்றை யவன் பெறும் பொழுது, அவனது இயற்கை முற்றிலும் வேறு படுகின்றது. எல்லாம் மிகத் தூயதாய்த் தீர்கின்றது; அவனும் பிறவிப் பயனை எய்துகின்றான். இவ்வாறான பல பக்தர்கள் கடவுளைப் போற்றி மகிழ்வதாகிய பேரின்பத்தை யடைய வேண்டிய மட்டும் உயிர் வாழ்கின்றார்கள். "ஓ! அரசனே ஹரியின் பெருமை மிக வியக்கற் பாலதே. ஏனெனில், ஆசை யற்றவரும் (நித்ய த்ருப்தரும்) எல்லாப் பற்றுகளி னின்றும் விடுபட்டவருங் கூட அன்பின் பொருட்டாகவே கடவுளிடத்துக் காதலுடையவர்களாய் விடுகின்றார்கள். "யம் ஸர்வே தேவா: நமஸ்



யந்தி முமுக்ஷவோ ப்ரஹ்மவாதிநஶ்ச." யாதொருவரை எல்லாத் தேவர்களும், எல்லாப் பேரின்ப நாடிகளும், எல்லாப் பெரியோர்களான அறிஞர்களும் போற்றுகின்றனரோ," (ந்ருஸிம்ஹ தாபினீ உபநிஷத்) அத்தகைய கடவுளே மேற்கூறிய வருடைய மெய்க்காதலுக்கு இருப்பிடமாய்த் தோன்றுபவர். அன்பின் வல்லமை இத்தகைய தாகும். ஒருவன் தன்னைத்தான் மறத்தலும், தனது என்று ஏதேனும் ஒரு பொருளுண்டென்ற எண்ணத்தை யகற்றுதலும், அடைந்த பொழுது தான் அவன் "ததீயத" என்ற (எல்லா மவருடையதென்ற) நிலைமையைப் பெறுகின்றான். அவன் எல்லாவற்றையுந் தூயதாய் எண்ணுகின்றான். எல்லாப் பொருள்களுந் தனது மெய்க்காதலுக் குரியவரான அவருடையதாகும் என்றே அவன் கருதுகின்றான். லௌகிகமான அன்பின் விஷயத்திலுங்கூட நாமிதனைக் காண்கின்றோம். ஒருவன் தனது காதல் மிகுந்த பெண்பாலுடைய எல்லாப் பொருள்களையும், மிகத் தூயதாய்க் கருதுகின்றான். அவளது கிழிந்த ஒரு பீற்றல் துணி கூட அவனால் மிகவும் விரும்பப்படுகின்றது. அது போலவே கடவுளிடத்துப் பேரன்பு வாய்ந்த எல்லா வுயிர்களை முழு மனதுடன் நேசிக்கின்றான். ஏனெனில் எல்லா மவருடையதென்று அவன் கருதுகின்றான்.

(வரும்)

விண்ணாற்று முடிச்செல்வனார்.

உ

# அகல்யா பதிவிரதா பங்கம்.

## முதல் அத்தியாயம்.

### பர்ணசாலை.

நாடு நகரங்களையெல்லாம் விட்டுவிட்டு மிதுலாபுரிக்கு அருகே ஒரு வனத்தில் முனிபுங்கவரான கௌதமர் தன் தர்ம பத்தினியுடன் தவம்செய்து கொண்டிருந்தார். அம்மகான் வசித்துவந்த அவ்வனம் அத்தி, ஆல், அசோகு, தென்னை, புன்னை, கொன்றை, மா, புளி, நெல்லி, முதலிய விருக்ஷ சாதிகள் செவ்வனே பயிராக்கப்பட்டு நீதி தவறாது ஆட்சிபுரியும் அரசனது நகரம்போன்று விளங்கிற்று. எங்குப் பார்த்தாலும் பசிய மரங்கள் பூத்தும், காய்த்தும், மனோரம்மியமாய்க் காணப்பட்டன. அழகிய தடாகங்களும் பஞ்சபஞ்ச உஷத் காலத்தில் ஸ்நானம் செய்தற்குரிய வசதிகளும் காணப்பட்டன. தேவதார்ச்சனைக்கு வேண்டிய புஷ்பச் சாதிகளும், அல்லி, மல்லிகை, மருவு, மருக்கொழுந்து, முதலிய மலர்க்கொடிகளும், செடிகளும் பூத்தும், தளிர்த்தும், நறுமணம்வீசி நாலாபக்கங்களிலும் சோபித்தன. உலகப் பற்றற்று, நித்யனை எக்காலத்தும் தியானித்துக் கொண்டிருக்கும் இம்முனிவரது ஆசிரமம், நிஷ்களங்கமான அவரது மனம்போல், பிரகாசித்தது. புலி, பசு, மான், முதலிய ஜன்ம வைரிகளான மிருகங்கள்கூட தம் தம் வைரத்தைவிட்டு அன்னியோன்னிய நட்புடன்கூடி வாழ்ந்தனவெனின், அவ்வனத்தின்,(மத, மாற்சரிய, குரோத, லோப, மோகங்களின்றி விளங்கிய) சிறப்பை எடுத்துக்கூறின் மிகையாகும்.

கௌதமர், ஒவ்வொருநாளும் அதிகாலையில் எழுந்து ஸ்நானஞ்செய்து நித்திய கர்மங்களை முடித்து "ஐந்துமுகம் ஒளிரவும் அழகிய முடியில் இளந் திங்கள் ஒளியொடு பிரகாசிக்கவும், கொக்கினது இறகுபோல் வெண்ணிறம் வாய்ந்து, திவலைவீசி, நறுமணங் கமழ்ந்து, நாட்டினர் செய்யும் பாபங்கள் அனைத்தும், நலமுடன் தீர்க்கக் கங்கணங்கட்டிக் கரைபுரண்டோடும் கங்காதேவி, அங்கமதுபுளகி, முகமது மலர்ந்து உன்னத பதவியிலிரு



ந்து பிரகாசிக்கவும், "பெண்களைப் பகைத்தல் பேதமை" 'மண்ணினில் வசிப்போர்க்கவர் மாணிக்கம்' குடும்பம் என்பது தலைமுறை தத்துவநிதி—அந்நிதிக் கணிகலம்—மாதர்—அவமதியாதே! அலக்ஷியம் செய்யாதே! இல்லறத்தைப்போன்ற சந்தோஷக் களஞ்சியம் எவ்விடத்துங் காண்பதரிது—எவ்வித துக்க காலத்தும் ஆண்பாலரது துயரத்தை நீக்கும் அற்புத சக்தி. அங்கனா மணிகளிடத்தே யுண்டு" "பெண்டாட்டி யோர்விலங்கு—பிள்ளையொரு சுள்ளாணி" என்று பிதற்றித் திரியும் பித்த வேதாந்தியை நம்பாதே! என்று மானிடர்க்குக் கற்பிக்குமாறேபோல், தமது இடது பாகத்தில் உடையை அணிந்துள்ளவருமான சுந்தர நாயகனை "முக்கண்மணியே! முழுமுதற் கடவுளே அரவம்பூண்ட அய்யனே! கங்கைதரித்த அண்ணலே! காமனையெரித்த கண்ணனே! மான்மழுவேந்திய நாதா! முப்புரம் எரித்த முதல்வ! என்று பலகாலுந் தியானித்துத் தவம்புரிவது வழக்கம்—

கௌதமரது இல்லத்தை விளங்கச் செய்தவள் அகல்யா தேவி! அவள் அவரது தர்மபத்தினி! இகபர சாதனங்களுக்குற்ற துணைவி! அவரது மகிமைக்கும், கீர்த்திக்கும் ஆதிகாரணம் அவ்வம்மணியே! வனப்பில் இலக்குமிக்கு நிகராவாள். காரிருள்போன்று நிறம்வாய்ந்து தேனொழுகும் நறுமலர்மாலை சூடிய அம்மாதரசியின் வதனம் சிறிதே களங்கமுற்ற ரோகிணி நாயகனைப் பழிக்கும்! அகன்ற நெற்றியும், மதனவில்போன்ற புருவங்களும், அதனிடையே சற்று மேலே, கரேலெனக் கறுத்துத் தோன்றும் சிறிய வட்டமான திலகமும், மான்விழிகளும், குமிழம்பூவை நிகராக்கும் நாசியும், பளிங்கைப் பழிக்கும் கபோலங்களையுமுடைய அம்மாதரசி பதியின்நலமேதனது பாக்கியம் என்று நன்குணர்ந்தவள். ஆதலால் அவருக்கு இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய உதவிகளை மனமுவந்து புரிந்துவந்தாள். கோத்த முத்துக்கள்போன்ற தந்த வரிசைகளையுடைய தன் பவளவாயால் கௌதமருக்கு இனிய மொழிகளுரைத்து சமயோசித புத்தியுத்தியுடன் அவரது மனங் கோணாமல் உபசரித்துக் களிப்பித்தாள். பல பல சொல்வானேன்? மாந்தளிர் மேனியும், பசிய கரும்புகள்போன்ற புஜங்களும், பொன்வளையணிந்த முன்னங்கைகளும், பாந்து, குவிந்து, வாரணிமார்பின் வனப்பும், நுண்

ணிடையும், அழகிய அம்புருப்பாதங்களுமுடைய, அகல்யாதேவி தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் தன் பதியின் நலத்திற் கெனவே சமர்ப்பித்து அவரது இல்லத்தை விளங்கச் செய்தாள்.

உலகில் ஒரு நற்காரியம் செய்யவேண்டுமாயின் அதற்கிடையூறாக அனேக விக்கினங்கள் ஏற்படுகின்றன. மேலும் இல்லறத்தில் பதிபத்தினிகள் ஒரே மனத்தினரா யிருக்கக் காண்பதரிது. பதி சில சமயங்களில் துர்க்குணியாகவும், பத்தினியைத் தூஷிப்பவனாகவும், கொடுமையாய் நடத்துபவனாகவு மிருப்பான். பத்தினியைத் தனக்கு வேலைசெய்ய வந்த அடிமை என்று நினைத்துக் கொடுமையுடன் நடத்துவான். அவளது இன்ப துன்பங்களைக் கவனியான். தான் நன்றாய்ச் சுகமாயிருக்க வேண்டும் எனவும் தனக்கு வேண்டிய ஆசார உபசாரங்களில் யாதொரு குறைவும் ஏற்படக்கூடாது எனவும் நினைத்து, பத்தினியின் சிரமத்தையும், சிறப்பையுங் கவனிப்பதில்லை. சுயகாரிய பரனாய்த் தான் உண்பதும், உடுப்பதும், களிப்பதுமே அத்தகையோனது தொழில். மனையாள் எக்கேடு கெட்டாலும் கவனிப்பதில்லை. சோற்றுக் கழுது துணிக்குத் தடுமாறினாலும் கேள்வி முறையில்லை. பசுங்கிளிபோன்ற தன் பத்தினி பர்த்தாவுடன் சுகித்திருக்க எண்ணினாலும், கவனியாது அவளது கண்ணெதிரிலேயே பரஸ்திரீகளை நாடி அவர்களது பாதத்தில் வீழ்ந்து என்னை ரக்ஷி! என்னைரக்ஷி! அனங்கன் வாட்டுகிறான்! ஆதரி! ஆதரி! என்று உளறி கனதனங்களை வாரியிறைத்து தர்மபத்தினியின் மனத்தைப் புண்ணாக்குவான்.

இது நிற்க, சில குடும்பங்களிலுள்ள ஸ்திரீகளோ தம்பாடே பெரிதாய், கணவனுக்குமுன் உண்பதும், தம்மிஷ்டப்படி நடப்பதும், தம் புருஷர்களின் சொற்கேளாமல் தறுதலையாய் அலைவதும், எப்பொழுதும் அடுத்தகத்தார் வீடே கதியாய் இருப்பதுமாய் இருக்கின்றனர். இவர் தம் கணவர் கடுந்தொழில் புரிந்து வியர்த்துக் களைத்துவந்தாலும் கவனியாமல் தம்மை அலங்கரித்துக்கொள்வதும், தம்மிஷ்டப்படி வெளியே சென்று வம்பர் மகாசபைகளில் அக்கிராசனம்வகித்து சம்பூர்ண அதிகாரங்களைச்செலுத்துவதும், தம் வரவுக்கேற்றவாறு செலவு செய்யாமல் டாம்பீகமாயும் ஊதாரித்தனமாயும் செலவழித்தும் திரிகின்றனர். தம் புருஷர்மீதுசிறிதும் அன்புகொள்வதில்லை. மரியாதைகளும்செய்வ



தில்லை. அத்துடன் நிற்காமல் கணவனைத் தூஷிக்கவும் ஆரம்பிக்கின்றனர். கணவனைக் கண்டால் எமனைக் கண்டதுபோல் வெறுக்கிறார்கள். பரபுருஷர்களைக் கண்டால் வெகு ஆசார உபசாரங்களுடன் அவர்களுக்கு இன்பந் தரக்கூடிய இனிய மொழிகளையும், மலர்ந்த வதனங்களையும், குறுநகைகளையும் காட்டிக் களிப்பிக்கின்றனர். எப்பொழுதும் நல்ல ஆடைகளையுடுத்து நாடகசாலைகள் முதலான விடங்களுக்கும் புருஷனைவிட்டுத் தனியே புறப்பட்டுப் போகின்றனர். சில சமயங்களில் புருஷனே இவர்களுக்கு ஊழியம் செய்யவேண்டி வருகின்றது.

தாம் சொன்னபடி புருஷன் நடக்காவிட்டால் உடனே பிரளய கால ருத்திரனைப் போல் வந்து விடும் கோபம்; கண்டபடி திட்டவும், ஆரம்பித்து விடுகின்றனர். பின்னும் சில ஸ்திரீகள் எப்படியாவது புருஷனுடன் சண்டையிட வேண்டுமென்று எண்ணி அநேக விதங்களில் அவர்களைத் துன்புறுத்துகின்றனர். சிலர் தம் கள்ள நாயகனுட னிருக்கவேண்டிப் புருஷனைக் கொன்றும், மருந்து வைத்தும், பித்தம் பிடிக்கச் செய்தும் விடுகின்றனர். சிலர் அவர்கள் கண்ணெதிரிலேயே பர புருஷர்களுடன் கூடி விளையாடுகின்றனர். புருஷன் கேட்டாலோ, உனக்குத்தான் ஆண் தன்மை யில்லை. சுக மில்லை! என்னமோ கடனெழவுக்குத் தாலிகட்டி விட்டாய்; எத்தனை நாள்தான் நான் கஷ்டப் படுவேன்? குழந்தை குட்டிகளில்லை! நானாவது ஒருவருக்குந் தெரியாமல், உன் மானம் போகாமல், வமிச வ்ருத்தி செய்து கொண்டால் அதுவுமா உமக்குக் கஷ்டம்? வம்ச விருத்தியானால் உமது பேரைத் தானே சொல்லிக்கொண்டு திரியும். என்ன பொறாமை? எல்லாரும் உம்மைப்போலவா கஷ்டப்பட வேண்டும்? என் பாலியத்தை ஏன் வீணாக்கப் பார்க்கிறீர்? ஏதாவது செய்தீரோ? இதோ பாரும் நான் அரளி வேரும், நல்லெண்ணெயும் அரைத்துக் குடித்து உமது பேரில் பழி சுமத்திச் செத்து விடுகிறேன் என்று பய முறுத்துகின்றனர். இவ்வித கஷ்டங்களை யெல்லாம் பொறுக்கமாட்டாமல் எவ்வளவோ புருஷர்கள், தற்கொலை புரிந்து கொண்டும், சன்னியாசங் கொண்டும், பித்துப் பிடித்துந் திரிகின்றனர்.

பதியும், பத்தினியும் கூடி ஒரே மனத்தினராய் வாழும் குடும்பமே இன்பக்கடல். அக் குடும்பத்திற் கிணையான ஆனந்

தக் களஞ்சியம் வேறெவ்விடத்துங் கிடையாது. பதி தன் பத்தினியின் சௌக்கியமே மேலெனக் கருதி கண்ணை இமைகாக்கு மாறே போல் காக்க வேண்டும். அவளது மனங் கோணாமல் நடக்கவேண்டும். அவளது சுற்றத்தாரையும், தாய் தந்தையர்களையும், தன் சுற்றத்தார் போலவும், தன் பெற்றோர் போலவுங் கருதுதல்வேண்டும். அவளுக்கு வேண்டிய ஆடை ஆபரணங்களையும், அன்னபானாதிகளையும் தன்னா லியன்றவாறு கொடுத்துக் களிப்பிக்க வேண்டும். தன் பத்தினிக்கு அவமானமும் இழியும் வரக்கூடிய செய்கைகளை ஒரு போதும் செய்தல் கூடாது,

ஸ்திரீகளோ, "கொழுநனைப் பேணுதல் குலமங்கையர்க் கழகு" என்று நினைத்து, தம் உடல்,பொருள், ஆவி மூன்றையும் அவரிடத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். தம் கணவருக்கு எது இன்பத்தை விளைவிக்குமோ அதைச் செய்து அவரைக் களிப்பித்தல்வேண்டும். எப்பொழுதும் மரியாதையுடனிருத்தல்வேண்டும். குடும்ப விஷயங்களில் மகா ஜாக்கிரதையுடனிருந்து வருமானத்திற் கேற்றவாறு செலவு செய்தல்வேண்டும். தன் கணவன் தன் மீது அதிக அன்புடனிருக்கிறான் என்றெண்ணி தன் மனம் போனபடி எதையும் செய்தல் கூடாது. தன் புருஷனது பந்து வர்க்கங்களையும், பெற்றோர்களையும் அதிக மரியாதை யுடனும், வணக்கத் துடனும் உபசரித்தல் வேண்டும். இன்னது செய்தால் தான் கணவன் இன்புறுவான், இன்னது செய்தால் வெறுப்படைவான் என்று நன்காராய்ந்து எவ்விஷயத்தையும் செய்தல்வேண்டும். தன் புருஷன் துர் நடத்தை யுள்ளவனா யிருப்பினும், அவனை மெதுவாய் நல்வழிப் படுத்தி, அவனுக்கு இகபரங்களுக்கு மேன்மை விளைவிக்கக் கூடிய வழிகளைத் தேடல்வேண்டும்.

எக்காலத்திலும், தன் பதிக்கு இழிவைத் தரக்கூடிய செய்கைகளைச் செய்தல்கூடாது. தன் புருஷனைத் தூஷிக்கும் இடத்திலும், மனிதரிடத்திலும், உறவு பாராட்டித் திரிதல் கூடாது. "புல்லென்றாலும் புருஷன், கல்லென்றாலுங் கணவன்" என்று மதித்து அவனுடைய க்ஷேமத்தையே கருதுதல்வேண்டும். தன் அந்தஸ்துக்குத் தக்கவாறு ஆடை யாபரணங்கள் அணிய வேண்டும். (வரும்).

சுப்பிரமணிய ஐயர்,

16 APR 1918
MADRAS

# சக்வர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL - 13 } April & May-1918. { No 9-10.
தொகுதி-13 } ஏப்ரல்-மேமீ 1918. { பகுதி9-10.

## நாலடியார் வசனம்.

### 9-வது பிறர்மனை நயவாமை.

(முன்தொடர்ச்சி.)

அஃதாவது பிறரது மனைவியரை விரும்பாதிருத்தலாம். பிறர் மனைவியரை விரும்புதலா லுண்டாகும் குற்றம் பொறுமை யோடிருந்து நோக்குவார்க்கன்றி, மற்றவர்க்கு விளங்காதாகலின், அதுபற்றி இது, பொறையுடைமையின் பின் வைக்கப்பட்டது.

நாணுடையார் பிறர் மனைவியரை விரும்பாரெனல்.

(1) (ஒருவர் பிறர் மனைவியரை விரும்பிச் செல்லும்போது) (பிறர் கண்டால் யாது செய்வாரோவென்னும்) அச்சம் (அவர்க்கு) மிகுதியாக வுண்டாகின்றது ; அவ்வச்சத்தோடு செல்வதற்குப் (பயனாகவரும்) இன்பமோ மிகச் சிறிய வளவினதாம் ; ஒவ்வொரு நாளும் (பிறர் மனைவியரிடத்துச் செல்வதுபற்றி) யோசித்து வந்தால் (அக்குற்றச் செயலுக்குப் பயனாக வருவது) அரசனது தண்டனையாம் (என்பது விளங்குவதாம்); ஒவ்வொருநாளும் நரகத்திற்குச் செல்வதற்கே (அது) பெருந் தீவினையாம். ஆதலால், நாணமுடையவர் பிறரது மனைவியரை விரும்பாதிருக்கக்கடவர்.

நாணம் - பழிபாவங்களுக் கேதுவாய செயல்களைச் செய்தற்கு அஞ்சுதல் ; அச்சம் - பயம்.

(க-து.) பிறர் மனைவியரை விரும்பிச் செல்பவர்க்குப் பெரும் பயமும், அற்ப வின்பமும், அரச தண்டனையும், நரகவாசமும்

வருவனவாக விருத்தலின், ஒவ்வொருவரும் பிறர் மனைவியரை விரும்பாதிருக்கக் கடவரென்பதாம்.

பிறர் மனைவியரை விரும்பி யொழுகுபவரிடத்து இவை சேரா ; இவை சேருமெனல்.

(2) பிறர் மனைவியரை விரும்பி யொழுகுபவரிடத்து அறமும், புகழும், நட்பும், பெருமையுமென்னும் இந்நான்கு பொருளும் சேர்வதில்லையாம்; (ஆயின், சேர்வனவெவையோவெனின்), பகையும், பழியும், பாவமும், அச்சமுமென்னு மிந்நான்கு பொருளும் சேர்வனவாம்.

அறம் - தருமம் ; புகழ் - கீர்த்தி ; நட்பு - சிநேகம் ; பெருமை - மேன்மை.

(க - து) பிறர் மனைவியரை விரும்பி யொழுகுவாரிடத்து அறம் புகழ் முதலியன சேர்வதில்லை ; பகை, பழி முதலியனவே சேர்வனவா மென்பதாம்.

பிறர் மனைவியரை விரும்பி யொழுகுகின்றவர்க்கு எப்போதும் அச்சமே யாமெனல்.

(3) (ஒருவர் பிறர் மனைவியரை விரும்பிச்) சென்றவிடத்து (அவர்க்குப் பிறர் கண்டுவிட்டால் என்னாகுமோவென்று) அச்சமுண்டாகின்றது ; (அவரிடத்துச்) செல்லும்போதோ (அல்லது திரும்பிவரும்போதோ) அச்சமுண்டாகின்றது ; (பிறர் மனைவியரை) அனுபவிக்கும்போதும் அச்சமுண்டாகின்றது; (பிறர் மனைவியரை விரும்பி யொழுகுவதைப் பிறர்க்குத்) தோன்றாமல் காப்பதாலும் அச்சமுண்டாகின்றது ; (இவ்வகையாக நோக்குமிடத்து அஃது (எப்போதும் அச்சத்தைத் தருவதா யிருக்கின்றது; (அதனால் அச்சம் அடுக்கடுக்காக வுண்டாவதைச் சிந்தித்துணராது (ஒருவன்) பிறர் மனைவியரிடத்து அஞ்சாது செல்லுதல் யாது கருதியோ ?

(க-து.) ஒருவன் பிறர் மனைவியரை விரும்பிச் சென்றபோதும், செல்லும்போதும், திரும்பி வரும்போதும், அவரை யனுபவிக்கும்போதும், அதனை மறைக்கும்போதும் அவனுக்குப் பயமே யுண்டாகின்றதென்பதை யறிந்தவர் பிறர் மனைவியரை விரும்பிச் செல்லார் ; அறியாதார் விரும்பிச் சென்று துன்பமடைவரென்பதாம்.



பிறர் மனைவியரை விரும்பி யொழுகுகின்றவனுக்கு உண்மையில் துன்பமன்றி, இன்பமுண்டாவதின்றெனல்.

(4) துச்சாரி ! (நீ பிறர் மனைவியரிடத்துச் செல்லுதலைப் பிறர்) அறிந்தால், (உனது) குலத்திற்குப் பழியுண்டாகும் ; (செல்லும்போது அப்பிறர்) கையிலகப்பட்டுவிட்டாயாயின், (அவர் செய்யுந் தண்டனையால் உனது) கால் குறைவுபடும் ; நீ (அம்) மாட்சிமையில்லாத செயலைச் செய்யும்போது (யார் வந்துவிடுகின்றாரோ வென்று உனக்கு) அச்சமுண்டாவதாம் ; (மேலும் அது) நீண்டகால மனுபவித்தற்குரிய நரக வேதனையைத் தருவதாம். ஆதலால் நீ அத்தீய செயலாலடைந்த இன்பம் எவ்வளவினதாம் ? அதனை யெனக்குக் கூறக்கடவாய்.

துச்சாரி-துன்மார்க்கத்தில் செல்பவன் ; இங்குக் காமுகனாவன். கால் குறைவுபடுதல் - கால் வெட்டப்பட்டொழிதல். மாட்சிமையில்லாத செயல் - பிறர் மனைவியரைக் கூடுதல்.

இஃதொரு காமுகனை யொரு புலவன் நோக்கி வெறுத்துக் கூறியதாம்.

(க-து.) பிறர் மனைவியரை விரும்பி யொழுகுதல் குடிப்பழிக்கும், கால்வெட்டுண்டு போதற்கும், நடுக்கத்தையடைதற்கும், நரகவேதனையடைதற்கும் காரணமாயிருத்தலின், பிறர் மனைவியரை விரும்பி யொழுகுதல் எவர்க்கும் அறிவாகாதென்பதாம்.

பிறர் மனைவியரை விரும்பி யொழுகுவார் அலியாய்ப் பிறந்து அல்லலுறுவாரெனல்.

(5) முற்பிறப்பில் நடுவுநிலைமையென்பதொன்றில்லாது, சிறியாரோடுகூடி, பிறர் மனைவியரது தோள்களைச் சேரவிரும்பி, தமது வலிமையால் அவரிடத்துச் சென்றவரே இப்பிறப்பில் அலியாகிப் (பிறந்து), கூத்தாடி (பிச்சையெடுத்துப் பொருள்பெற்று) உண்டு பிழைப்பர்.

சிறியார் - தீயொழுக்கமுடையார் ; அலி - ஆணுறுப்புமிக்குப் பெண்ணுறுப்புக் குறைந்த வடிவம்.

(க-து.) முற்பிறப்பில், தமது வலிமையால் பிறர் மனைவியைச் சேரச் சென்றவர் இப்பிறப்பில் அலியாய்ப் பிறந்து கூத்தாடிப் பிழைத்து அல்லலுறுவரென்பதாம்.

தன் மனைவியைத் தனித்திருக்கவிட்டுப்
பிறர் மனைவியரை நோக்குவோன் பேதையேயாவனெனல்.

(6) (விவாகஞ் செய்தற்குரிய) சுபதினத்தை (சோதிடர் வாயிலாக நன்றாக விசாரித்து) கேட்டு, (உறவினர் நட்பினர் முதலாயினோர்) பலரும் அறியுமாறு மங்கலவாத்தியம் முழங்கச் சிறப்பாக, விவாகஞ்செய்துகொண்டு (தனக்கு உரியவளாக) வந்த தன் அன்பிற்குரிய அழகுடைய மனையாள் (தன்) வீட்டிலிருப்பவளாக ஒருவன் (அவளை விரும்பாது) அயலாரது மனைவியை ஆசையோடு நோக்குதல் (அவனுக்கு) யாது பயன்தருவதாம்? (துன்பத்தையேயன்றி இன்பத்தைத் தருவதில்லையாம்).

இஃதொரு புலவன் தன் மனையாளை விரும்பாது, பிறர் மனையாளை விரும்பிச் செல்லும் ஒரு பேதையை வெறுத்துக் கூறியதாம்.

(க-து.) தன் மனையாளைத் தனியே தன் மனையிலிருத்திப் பிறர் மனையாளை நோக்கிச் செல்பவன் தன் மனைவி தானில்லாத சமயத்தில் என்ன செய்வாளென்பதை யறியான்போலும்; அறிவானாயின், அவ்வாறு செய்யானென்பதாம்.

ஒருவன் பிறர் மனைவியரை விரும்பி யொழுகுவது பாம்பின்
தலையை நக்குவதுபோலாமெனல்.

(7) பிறர் நம்பும் நிலைமையில்லாத மனமுடைய ஒருவன் காம மயக்கங்கொண்டு, அயலார் புறத்துப் பழித்துப்பேச, உறவினர் (இவன் செய்யும் வியபிசாரத்தால் குடிப்பழி யுண்டாகின்றதேயென்று) அச்சமுற்று வருந்த, அயலானது மனைவியை(மறைவாகக்)கூடி (அனுபவிக்கும்) அனுபவமானது ஒருவன் பாம்பினது தலையை நக்கி யின்பமடைந்தாற் போல்வதாம்.

பாம்பின் தலையை நக்கினவனுக்கு ஆபத்துத் தவறாது வருவதுபோல, பிறர் மனைவியைக்கூடி யொழுகுகின்றவனுக்கும் ஆபத்துத் தவறாது வருமென்பதிங் குணர்தற்பாலதாம்.

(க-து.) பிறர் மனைவியை விரும்பி யொழுகுகின்றவனுக்கு, பிறர் பழித்துப்பேசல், குடிப்பழி, அவமானமென்பன தவறாது வருமென்பதாம்.



அறிவுடையோர் காமத்தால் வருந்தினாலும், அதனை வளராவா
றடக்கிக் கெடுப்பரெனல்.

(8) அறிவுடையார் (ஓராணோர் சமயத்தில்) தம்மிடத்துக் காம நோயுண்டாயின், இக்காமநோய் மிகக் கொடியதாம்; (இதனால் நமக்கு நமது) பகைவரிடத்து நாணித் தலைகுனிந்துபோதல் (உண்டாமென்று) அஞ்சி, (அதுபற்றி யாரிடத்தும்) யாதுங் கூறாது, (அதனை வளராவா றடக்குவார்; அதனால் அது மனத்திலே) பரவாமலும், வெளிப்படாமலும், பலரிடத்து (இரகசியமாகவேனுஞ்) சென்று தங்காமலும் அம்மனத்திலேயே தணிந்துவிடும்.

(க-து.) காமநோய் மிகப் பொல்லாதது; அது எவரையும் விடுவதில்லை; ஆனால் விவேகிகள் அதனாலுண்டாகுந் தீமையை புணர்ந்து, அதனைப் பிரயத்ன பூர்வகமாக வடக்கிவிடுவர்; மற்றவரோ அடக்காது அவமானம், துன்ப முதலியவற்றை யடைவரென்பதாம்.

காமம் வருத்தும் பொருள்களுள் மிகக் கொடியதாமெனல்.

(9) (அக்கினியாஸ்திர முதலிய) அஸ்திரங்களும், அக்கினி ும், விளங்குகின்ற கிரணங்களையுடைய சூரியனும், தீட்சண்ணிய ாகிச் சுட்டாலும் புறத்திலே சுடுவனவாம்; காமமோ உக்கிர ாகி, மனத்தை வருந்தச்செய்து, (அகத்தே) சுடுவதாம்; (அத ல் அக்காமம்) அவ்வஸ்திர முதலியனவற்றினும் மிகக் கொடிய ாமென்று அஞ்சுதற்குரியதாம்.

அஸ்திரம், பாணம், அம்பு என்பன ஒரு பொருட் சொற்க ாம். புறம்—வெளி, அகம்-உள்.

(க-து.) அம்பு முதலியன புறத்தே சுட்டு வருத்துவதன்றி கத்தே சுட்டு வருத்துவதில்லையாம்; காமமோ அகத்தே சுட்டு ருத்துதலால், அஃது அவற்றினுங் கொடியதாம். அதனால், வ்வொருவரும் பிறர் மனைவியரை விரும்புதலென்னும் காமத் ன் வசமாகாதிருக்க முயலல் வேண்டுமென்பதாம்.

காமத்தீ யேனைய தீயினுங் கொடியதெனல்.

(10) (ஒருவன் தான் வாழும்) ஊரில் (வீடு முதலியன பற் க் கொண்டமையால் பரந்து மேல்நோக்கி) எழுந்த பிரகாச ங்க பெரு நெருப்பினுக்கு (தப்பி) நீருள் மூழ்கியாயினும் பிழை

த்தல் கூடும்; காமமோவெனின், அது நீருள் குளித்தாலும் சுடா திருப்பதில்லையாம். மலைமீதேறி யொளித்ததாலும் சுடாதிருப்ப தில்லையாம்.

சுடுதல்—வருத்துதல்.

(க-து) ஊரில் பற்றி யெழுந்து கொழுந்துவிட்டெரியும் தீ தடாக முதலியவற்றில் மூழ்கிக் கிடப்பவரைச் சுடுவதில்லையாம்; காமத்தீயோ நீருள் மூழ்கிக்கிடந்தாலும் மலைமீதேறு யொளித்தாலும் சுடாதிருப்பதில்லையாம்; அதனால், ஒவ்வொருவரும் பிறர் மனைவியரை விரும்புதலென்னும் காமாக்கினியின் வசமாகாதிருக்க முயலுதல் வேண்டுமென்பதாம்.

## கிரீக் தேசத்திய பீமசேனன் கதை.

(முன் தொடர்ச்சி.)

பீமசேனன் பூமியைத் தலையின்மேல் சுமக்கும் அட்லாஸ் (ஆதிசேஷனை)ப் பார்த்து, நீ இந்த ஆகாயத்தை ஒரு மலையின் மேல் இறக்கிவைக்கக் கூடாதா? என்று கேட்டான், இதற்கு அட்லாஸ் தலையை அசைத்து ஒரு மலையும் போதுமான உயரத்தோடில்லை; ஆனால் நீ இதோ அருகிலிருக்கும் மலையின்மேல் நின்றால் உனது தலை என் தலை அளவுக்குவரும்; நீயும் மிக்க பலசாலி, நீ என்னிடத்திலிருந்து ஆகாயத்தை எடுத்து உன் தலைமேல் வைத்துக்கொள், அப்போது உனக்கு வேண்டிய வேலையை யான் முடித்துக் கொடுக்கின்றேன்” என்றான்.

இந்த ஏற்பாட்டுக்கு இணங்கி பீமசேனன் ஆகாயத்தின் பளுவைக்குறித்து விசாரித்தான். இதனைக்கேட்ட அரக்கன், “அது முதலில் அதிக பளுவுடையதாகக் காணப்படாது, ஆனால் ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு அது அதிக பளுவடைகிறது” என்றான்.

“ஆனால் பொன் மாம்பழங்கள் கொண்டு வருவதற்கு எத்தனைகாலம் செல்லும்” என்று கேட்டான்.

“ஆ! சில நிமிஷத்திலேயே பழங்களைக் கொண்டுவந்து விடுவேன். ஒரு அடியில் பத்துகல்லு அதிகமும் தாண்டுவேன்; ஆகையால் நீ இளைப்படைவதற்கு முன்னமே அந்தத் தோட்டத்திற்குப்போய் திரும்பிவிடுவேன்” என்று அரக்கன் சொன்னான்.

இதைக்கேட்ட பீமன் “நல்லது; பின்னால் இருக்கும் குன்றின்மேல் ஏறி உன் தலைமீதிருக்கும் ஆகாயத்தை எடுத்துக் கொள்ளுகின்றேன்” என்று சொல்லி அச்சுமையைத் தன் தலைமேல் இறக்கிக்கொண்டான். அட்லாசும் தன்னைச் சுற்றியிருந்த காட்டிலிருந்து ஒருகாலைத் தூக்கிக்கொண்டு பிறகு மறுகாலையும் எடுத்தான். பிறகு அவன் சமுத்திரத்தில் இறங்கி முதல் அடியில் பத்துகல்லும் இரண்டாவது அடியில் பத்து மயிலும்போக, சமுத்திரத்தின் தண்ணீர் அவன் முழங்காலுக்குமேல் வந்தது.

இம்மாதிரி அரக்கன் போவதையும் பிறகு அவன் மேகத்தில் மறைந்து காணமல் போனதையும் பீமன் கண்டான்.

சிறிது பொழுதுக்கெல்லாம் இந்த அரக்கன் பெரும் உருவம் மேகத்தைப்போல் சமுத்திரக் கரையோரத்தில் வருவதைப்பார்த்தான். ஆனால் இது நீண்டகாலம்போல் காணப்பட்டது. அவன் அருகில் வந்தபோது அவன் கையை மேலே தூக்க அதில் மூன்று அழகான பழமுடைய ஒரு குலையை, பீமன் பார்த்தான். உடனே அவனை நோக்கி “உன்னை மறுபடியும் பார்க்க மிக்க சந்தோஷமாயிற்று; பொன் மாம்பழங்களும் வந்திருக்கின்றன?” என்று சந்தோஷமாகக் கூக்குரலிட்டான்.

இதனைக்கேட்ட அரக்கன், “ஆம், இவை மிக நேர்த்தியானவை; அம்மரத்தில் இருந்தவற்றில் மிக்க மேலானவை” என்று சொன்னான்.

நீர் செய்த இவற்றிற்கெல்லாம் நான் வந்தனமளிக்கின்றேன். “யான் இப்பழங்களை அரசனுக்குக்கொடுக்க அதிக ஆவல்கொண்டிருக்கின்றேன்; தூரமோ அதிகம் போகவேண்டுமாகையால் தயைகூர்ந்து இந்த ஆகாயத்தை என் தோளின்மேலிருந்து எடுத்து இறக்க வேண்டும்” என்று பிரார்த்தித்தான்.

இதைக்கேட்ட அரக்கன் அந்தப்பொன்மாம்பழங்களை ஆகாயத்தில் இருபதுமைல் தூரத்தில் எறிந்து மீட்டும் கையில் ஏந்தி “நல்லது? எனது நண்பா! அது நியாயமென்று நான் நினைக்கவில்லை. நீ அரசனிடம் போவதைப் பார்க்கிலும் அதிக சீக்கிரம் யானே கொண்டுபோகக் கூடாதா? இப்பொழுதே ஆகாயத்தை

சம் கடவுளது பலவழிகளிலுள்ள வேற்றுமையான பிரிவுத் தோற்றமுமாகும். ஆதலால், ஒற்றுமை வடிவமா யிருக்கின்ற கடவுளை நாம் நேசித்தோமானால், நாம் எல்லா வுயிர்களையும், நேசிக்கின்றோமென்று பொருள்படும். அப்பொழுது ப்ரபஞ்சம் முழுவதையும் நேசிக்கவும், அதற்கு நன்மையைச் செய்யவும், நமக்கு எளிதில் முடியும்; முதலிலேயே கடவுளிடத்து மெய்க் காதலுள்ளவராய் விட வேண்டும்; அவரிடத்து அன்பைப் பெருகச்செய்ய வேண்டும்; அப்பொழுதுமட்டுமே நமக்கு அதற்குள்ள முழுவல்லமையும் கிடைப்பதாகும்; அஃதின்றி உலகத்திற்குதவுவதன்பொருட்டாக ஏதாவது தொழில் செய்வதென்பது அவ்வளவு எளிதல்ல; “ எல்லாம் அவருடையது; அவர் என் து மெய்க் காதலராவர். யானவரை நேசிக்கின்றேன் ” என்றுதான் பக்தன் கூறுகின்றான், இப்படி எல்லாப் பொருள்களும் பக்தனது பார்வைக்குத் தூயதாய் விடுகின்றன; ஏனெனில் எல்லா மவருடையது; அனைவரு மவரது மக்கள்; எல்லா மவரது உடல்; எல்லா மவருடைய அதிர்ச்சியேதான். அப்படியிருக்க நாம் பிறரை ஏமாற்றலாமா? எல்லா வுயிர்களையும் நேசியாதிருக்க எப்படி முடியும்? கடவுளிடத்து மேலான காதல் உண்டாவதோடுகூட ப்ரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருளிடத்தும் இன்றியமையாத நேசமும் தானே வந்து சேர்கின்றது. நாம் கடவுளை அணுகிக்கொண்டிருக்குந்தோறும், எல்லாப் பொருள்களும் அவரிடத்து நிலைத்து இருக்கின்றதென்ற உண்மைக் கருத்து நமக்கு மிக மிக நன்கு விளங்கி விடுகின்றது. இத்தகையபேரன்பு அல்லது மெய்க்காதலையடையப் பெறும்பொழுது நமக்கு அனைத்துங் கடவுள் மயமாகவே தோன்றுகின்றன. நமதுள்ளம் இடையறாது பெருக்கெடுத்தோடிக் கொண்டிருக்கின்ற அன்பின் பிறப்பிடமாக (ஊற்றுக் குமிழிபோல்) ஆய்விடுகின்றது. இவ்வன்பில், இதையும்விட மேலான ஒரு நிலைமையை யடையும்பொழுது பலவாறான லௌகிகப் பொருள்களில் நமக்குள்ள வேற்றுமை எண்ணம் முழுவதும் அற்றுப்போய் விடுகின்றது; அப்பொழுது நாம் மனிதரை மனிதராகவோ, விலங்கு (ம்ருகங்களை) விலங்குகளாகவோ காண்பதில்லை. எல்லாம் நமக்குக் கடவுள் மயமாய்த் தோன்றுகின்றன; மனிதரும், விலங்குகளும் (எல்லாவுயிர்களும்) எல்லாங் கடவுளே, புலியைக்கூட நாம் புலியாகக் காண்பதில்லை;—புலியுங் கடவுளது



மற்றொரு வடிவம்—இப்படி யன்பினது மிக மேலான உறுதியை யடைந்தபொழுது, நாம் எல்லாவற்றையும் ஸ்ரீ ஹரிமயமாய்க் காண்கின்றோம். ஆதலால் எல்லா வுயிர்களையும் போற்றி வணங்குகின்றோம்; எல்லா வுயிர்களையும் வழிபடுகின்றோம்.

“ ஏவம் ஸர்வேஷு பூதேஷு பக்திரவ்ய பிசாரிணீ,
பர்த்தவ்யா பண்டிதை ஞாத்வா ஸர்வபூத மயம்ஹரிம்.”

“ உலகனைத்திற்கும் இறைவனா யிருக்கின்ற ஹரியானவர் எல்லா வுயிர்களையுங் காத்து வருகின்றாரென்றறிந்து கற்றுத் தெளிந்த அறிஞர் எல்லா வுயிர்களிடத்தும் ஒரே முடிவான அன்பைச் செலுத்திவர வேண்டும். இத்தகைய உயர்ந்த தேசத்தின் பயனாக நமக்கு “ இடையூறின்மை ” யென்ற உள்ளத்தின் மேன்மையான துணிவு (நமக்குப் பகையாக யாதொன்று முண்டாகாதென்ற உறுதியான நம்பிக்கை) உண்டாகின்றது. இந்த நிலைமையிலுள்ள ஒரு தொண்டனுக்கு ஏதேனுந் துன்பம் நேரிட்டால்; அவன் அதை மிகுந்த அன்புடன்கூட ஏற்றுக்கொள்கின்றான். ஏனெனில் அவை யெல்லாம் ஸாக்ஷாத் கடவுளிடத்திலிருந்து, வருகின்றதென்றே யவன் கருதுகின்றான். அவனருகே ஒரு பாம்பு வந்ததானால், “ ஓ! அரவே! நின்வரவு நல்வரவாகுக!” என்று அவன் வரவேற்கின்றான். கூற்றுவ (யம)னே நேரில் வந்தாலும், அத்தகைய பக்தன் “ புன்சிரிப்புடன் ” கூட மிகுந்த அன்புடையவனாய் கூற்றுவ (யம)னையும் எதிர்கொண்டழைக்கின்றான். “ யானெப்பொழுதுங் கடவுளருள் பெற்றவனாயிருக்கின்றேன்; ஏனெனில் எல்லாரும் என்னிடத்திற்கே வருகின்றனர்; ஆதலால் எல்லார்க்கும் நல்வரவு கூறுகின்றேன்.” கடவுளிடத்தும் அவரைச் சேர்ந்துள்ள எல்லாப் பொருள்களிடத்துமுள்ள மேலான விருப்பத்தினால் எல்லாவற்றையுங் கடவுளிடத்துச் சேர்ப்பித்திருக்கின்ற இந்த நிலையில், பக்தனானவன் தனக்குக் குற்றமா (பகையா) யிருக்கின்ற இன்பத்தையுந், துன்பத்தையும் பிரித்து அறிவதில்லை; துன்பம் வந்தபொழுது குற்றங் கூறுவது, புலம்புவது என்பதென்னவென்றுகூட பக்தன் அறிய முடியாது; அன்பு வடிவமாகிய கடவுளது விருப்பத்தைப் பின்பற்றிக்கொண்டு, யாதொன்றுங் குறைகூறுதலின்றி எல்லாவற்றையு மவரிடத் தொப்வித்துக் கடவுளிடத்துப் பதிந்த உள்ளத்தனா யிருத்தல் என்ற இந்த நிலை, மேன்மையான வல்லமைக

ளைக்கொண்டு அடையப்படுகின்ற எல்லாப் புகழையுங் காட்டிலும் எவ்வளவோ உயர்ந்த செல்வம் ஆகுமென்பதி லையமில்லை.

இவ்வுலகத்திற் பெரும்பான்மையான மனிதர் தங்களுடைய "உடலைத்தான்" மிகவும் முதன்மையானதாக எண்ணியிருக்கின்றனர்; அதற்குமேல் யாதொன்றுமில்லை; சிற்றின்பத்தை நுகர்வதே அவரது மேலான பிறவிப்பயன். உடலையும், அதைச் சேர்ந்தவற்றையும், போற்றுமாறு நம்மை ஏவுகின்ற ஒரு "துர்த்தேவதை" நம்மிடத்திலெல்லாம் புகுந்து கொண்டிருக்கின்றது. நாம் மிக அரிய பேச்சுகளைப் பேசலாம்; சிலபொழுது மிக உயர்வான நிலையிற்சென்று நிற்கலாம்; அத்தகைய நிலைமையெல்லாமடையினும், நாமனைவரும், "கழுகு"களைப்போல விருக்கின்றோம்; நமது நோக்கமெல்லாம் கீழே கிடக்கின்ற கெட்டு(அழுகி) நாற்றமெடுத்த பிணத்தின்பேரிலேயே யிருக்கின்றது. ஒரு புலியினின்றுந் தப்பித்துக்கொள்வதற்கு நாமேன் முயற்சிக்கின்றோம்? நமது உடலைப் புலிக்கு உணவாகக் கொடுக்கலாகாதோ? புலி அதனால் மிகுந்த களிப்பெய்துமன்றோ? இத்தகைய ஆராய்ச்சி, இவ்வாறான செய்கை, உயர்ந்ததா யிருக்கின்ற "தன்மறுப்"போடு மிக நெருங்கி யிருக்கின்றது. மெய்க்காதல் அல்லது பேரன்பினின்றும் இது மிகவும் விலகியதல்ல. உங்களது அந்தக்கரணங்களிலிருந்து "யான்," "என்னுடைய(து)" என்ற எண்ணத்தை யடியோடு ஒதுக்கித் தள்ளிவிட்டு நிற்கும் பழக்கத்தை நீங்கள் அடைய முடியுமோ? அது பக்தியோகத்தின் மிக உயர்ந்த நிலைமை ஆகும்; அந்த நிலைமையை யடைந்துள்ளவர் இவ்வுலகில் மிகவு மரிது; எனினு மந்நிலையை எய்தாமல் ஒருவன் முழு அன்பனாய் விடுவதுமில்லை. நமது உடலை முறைப்படி பாதுகாத்து வந்தால், நோய் நொடி மிகுதியின்றிக் கொஞ்சகாலம் நிலைநிறுத்தலாம். நமது உடல் அழிந்துபோவதுதா னென்பதி லோர் சிறிதுமையமில்லை; அதற்கு யாதொரு நிலையுமில்லை. ஆதலால் எவரொருவர் பிறர் பொருட்டு உடலை விட்டுவிடுகின்றனரோ அவர் பேரின்பநிலையையடைந்த நல்லோரெனத் தக்கவராவர். அறிஞரானவர் தம் எல்லாப் பொருள்களையும், வாழ்க்கையையும் பிறருக்கு உதவுவதன்பொருட்டு எப்பொழுதுந் தயாராக வைத்துக்கொண் டிருக்கின்றார்கள். இம்மையில் முடிவானது சாவு. (மரணம்) "என்றால் பிறர்க்குதவுதலின் பொருட்டு இந்த உடல்



அழிகின்றதெனில் அது எவ்வளவோ மேலானதே. நம்மால் ஐம்பதோ, அல்லது நூறு ஆண்டுகளோ நமது வாழ்நாளை நீளச்செய்து (பிடித்து இழுத்துக்) கொண்டுபோவதா யிருக்கட்டும்; அந்த ஆண்டுகள் சென்றபின் அதற்கடுத்த கதை யாது? ஒற்றுமைப்படுத்தும் ஆற்றல் முதலிய வல்லமைகளைக்கொண்டு உடல் வடிவத்தோடு நிலைத்திருந்த "ப்ரத்வி" (மண்) முதலான அணுக்களெல்லாம் வேறாகப் பிரிந்து உயிர் நீங்கி விடும்பொழுது உடல் அழிந்துவிடுகின்றது. இது காலத்தினால் எல்லா வுடல்கட்குந் தடையின்றி நேரிடுவதான ஒரு நிலைமையாகும். இயேசுகிறிஸ்துவும், புத்த மஹர்ஷியும், முகம்மதும், பின்னும் உலகத்திலுண்டான மற்றும் பல ஆசார்யர்களும் இறந்துபோய்விட்டனர். "இமைப்பொழுதில் மாறுதலடைவதும், நிலையற்றதுமா யிருக்கின்ற இந்த ப்ரபஞ்சத்தில் உள்ளபொழுதை முடிந்த வரையில் மேன்மையானதாகவே கைகொள்ள முயலவேண்டியதாகும்" என்றுதான் பக்தன் கூறுகின்றான். வாழ்க்கையையும் பிறருக்கு உதவிசெய்வதன்பொருட்டு ஏற்படுத்திக்கொள்வதுதான் இந்தப் பிறவியினாற் கிட்டு முண்மையான பயனுமாகும். இவ்வுடலிலுள்ள மிகுந்த பற்றுதான், உலகத்திலுள்ள தன்னலம் முழுவதற்குங் காரணம்; உடலே நாம் என்றும், ஆதலாலிந்த உடலைப் போற்றி வளர்த்து அதற்கு வேண்டிய ஊழியங்களைச் செய்வதற்காகத்தான் நாமியன்ற வரையில் முயலவேண்டியதென்றும், உள்ள அறிவின்மையே உலகத்திலுள்ள எல்லாத் தன்னலத்திற்குங் காரணம். உடலை நானென் றெண்ணுவதொழிந்து, நாம் உடலினின்றும் வேறுபட்டவர் என்ற மெய்பறிவு எப்பொழுது உங்களுக்குண்டாகின்றதோ, அப்பொழுது உங்களிடத்துள்ள தீயகுணங்களாய பொறாமை, பகை முதலியவைகளெல்லா மகன்றுவிடுகின்றன; உங்களிடத்துள்ள தன்னலக் கருத்தும், அப்பொழுது அழிந்துபோய் விடுகின்றது. ஆகையால் பக்தன் இவ்வுலகத்திலுள்ள யாதொரு பொருளையும், தன்னுடையதாய்க் கருதுவதில்லை; அதுவே தன் மறுப்பு. "வருவதெல்லாம் வரட்டும்," என்றெண்ணி மகிழ்ச்சியுட னிருப்பீர்களாக! இதுதான் "எல்லாந் தங்களது விருப்பம்போல்" என்ற சொல்லின் பொருள். அன்றியும், நமது உணர்ச்சியிலுள்ள செருக்கு, பகைமை, முதலிய மாறுதல்களெல்லாப் கடவுள் கருத்துப்படியே என்றெண்ணி பிறரு

டன் போர்புரிதற்கும், பிறரைத் தோற்கடிப்பதற்கும், மற்றுட வேண்டிச்செய்யும் முயற்சிக்கெல்லாம் கடவுள் விருப்பத்தைட பின்பற்றி நடக்கின்றேனென்று கூறமுடியாது. தன் பொருட்டுச் செய்யப்படும் வினைகளிற் சிலபொழுது, நன்மையை யடைந்திருக்கலாம்; ஆனால் அதன் பொறுப்புக் கடவுளுடையதே யாகும்; நாமதனை யாராயவேண்டிய இன்றியமையாததல்ல. நிறைந்த அன்பை யடைந்துள்ளவர்க்குத் தன் பொருட்டான யாதொரு எண்ணமுந் தோன்றுவதில்லை; தன் பொருட்டான எந்த வேலையுஞ் செய்ய முடியாது. "ஓ! இறைவனே! மனிதர் உன்னை நோக்கி, உன் பொருட்டாகப் பெரிய பெரிய கோயிலைக் கட்டியிருக்கின்றனர். உன் பொருட்டாகவே பெரிய பெரிய கொடைகளை யளிக்கின்றனர்; யானோ மிக எளியவன்; ஆதலால் யான் எனது நினது திருவடித்தாமரைகளிற் காணிக்கையாகச் செலுத்தி (ஒப்புவித்து) விடுகின்றேன். "ஓ! பெருஞ் செல்வனே! நீ என்னை வெறுக்காதே" (ஏற்றுக்கொள்வாயாக.) பக்தனது உள்ளத்தினின்று மிவ்வாறாய புகழ்ச்சிகள்தான் புறப்படுகின்றன. இவ்வாறுள்ள போற்றும் முறையை—எல்லாப் பொருளையு மன்பு வடிவாயிருக்கின்ற கடவுளிடத்து ஒப்புவித்தலென்ற நிலைமையை-யடைந்துள்ளவர்க்கு, அது பொருட் செல்வத்தைக் காட்டிலும், உறுதியைக் காட்டிலும், மிக மிகவுயர்ந்ததாகும்; எங்கும் பரவுகின்றதான புகழைக்காட்டிலும், எல்லாச் சிற்றின்பங்களைக்காட்டிலும், சிறந்ததுமாகும்; எல்லாப் பொருளையுங் கடவுளிடத்துச் செலுத்தி விடுவதினால் பக்தனுக்குண்டாகின்ற "அமைதிநிலை" எவ்வள வின்பமானதென்று நமது வாயினாற் சொல்லவியலாது; மனத்தினாலாராய்வதும் முடியாது. அஃது அனைத்தையும் வியக்கச் செய்கின்றதாகும். "இடையூறின்மை" என்ற நிலையில் பக்தனுக்கு உதவியாகவோ, பகையாகவோ யாதொன்று முண்டாவதில்லை; எல்லாப் பற்றையுந் துறந்திருக்கின்ற இத்தகைய உயர்ந்த வழிபடு நிலையில் மேலான அருள்வாய்ந்தவரும் அன்பு வடிவானவருமான அவரிடத்திலுள்ள மெய்க்காதலொன்றைத் தவிர மற்றெல்லா (நேசப்) பற்றுக்களும் பக்தனிடத்தினின்று மகன்றுவிடுகின்றன. கடவுளிடத்துள்ள இப்பேரன்பானது தன் (ஆத்மாவி)னிடத்திலுள்ள எவ்வகைப் பற்றுக்களையுமழித்து விடுகின்றது.

(வரும்)

விண்ணாற்றுமுடிச் செல்வனார்.

## தேசாபிமானமுடைய ஒரு சீனப்பெண்.

1914-ம் ஆண்டில் ஸ்ரீ லஜ்பத்ராய் அவர்கள் லண்டன் பட்டணத்திலிருந்தபோது, அங்கு ஒரு யௌவன ஹிந்து ஸ்திரீ மூலமாக ஒரு சீனஸ்திரீயைக் கண்டார். அவர் தமது ஆயுளில் ஒரு சீனப்பெண்ணைப் பார்த்தது அதுதான் முதல் தடவை என்று சொல்லுகிறார். அப்பெண்மணியோடு சம்பாஷித்ததையும், அதிலிருந்து தமக்குண்டான அபிப்பிராயங்களையும் அவர் தெரியப்படுத்தி யிருக்கிறார். ஸ்ரீ லஜ்பத்ராய் எழுதுகிறார்:—

அந்தப் பெண் லண்டன் பட்டணத்திலுள்ள ஒரு கல்லூரியின் மாணவி. அவளிடம் சம்பாஷித்ததில், அவள் உயர்ந்த நோக்கங்களையுடைய ஒரு பெருந் தேசாபிமானியாகக் காணப்பட்டாள். அவளுடைய எண்ணங்கள் மிகவும் சிறந்தவையாகவும், மற்றவர்களுடைய மனதைக் கவரும் சக்தியுடையவையாகவும் இருந்ததினால், அவற்றை எனது ஹிந்து சகோதரர் யாவரும் மிகவும் உற்சாகத்தோடு படிப்பார்கள், என்கிற நம்பிக்கையோடு எழுதலானேன்.

என்னுடைய முதற்கேள்வி அவள் அப்படணத்திற்கு வந்த காரணத்தைப் பற்றியதாக இருந்தது. அவளுடைய மறுமொழி "கல்வி". "கல்வியா, எந்த நோக்கத்தோடு" என்றேன். "என் தேச சேவைக்கு" என்றாள். அவள் தனது தேசம் தற்காலம் மிகவும் அபாயகரமான நிலையில் இருக்கிறதாகவும் அதனால் அதன் சேவையிலே தனது ஆயுளை உபயோகிக்க எண்ணங்கொண்டிருக்கிறதாகவும் மிகத் தெளிவாகச் சொன்னாள். தேசத்தின் மக்கள் யாவரும் ஒன்று சேர்ந்து முழு சிரத்தையோடு தொண்டு புரிதல், அவசியமாம். அப்போது தான் தேசம் ஓங்கி கௌரவமாக வளரும். ஸ்வதந்திரத்தோடு தலைதூக்கி நிற்கும். "எங்களூரில் தேசத் துரோகிகளுக்குக் குறைவில்லை. ஆனால் தேசத்தை முன்னிட்டு உயர்ந்த நோக்கங்கள் நிரம்பப்பெற்ற மனதை யுடையவர்கள் மிக்க குறைவாக இருக்கிறார்கள். எனது தேசஸ்திரீகளின் மத்தியிலிருந்து, அவர்களுக் குழைத்தலிலே எனது வாழ்க்கையை உபயோகிக்க எண்ணங்கொண்டிருக்கிறேன்" என்றாள்.

நான் அவளுடைய மதத்தைப் பற்றிக் கேட்டபோது தான் அவளுடைய தேசபக்தியின் ஆழம் நன்கு புலப்பட்டது. அவள்

கிறிஸ்துமதத்தில் புகுந்தவளாம். அவளுடைய பெற்றோர் பௌத்த மதத்தினர். அவள் கிறிஸ்தவளானபோதிலும் தனது பெற்றோர்களாலே ஆதரிக்கப்பட்டு வருகிறாள். "நீர் மதம் மாறினதற்குக் காரணம் என்ன" என்றேன். அதற்கு அவள் மூன்று காரணங்கள் சொன்னாள். அவை யாவன:—

முதற்காரணம்:—சீனக் கிறிஸ்தவஸ்திரீகளைத்தேசசேவைக்குத் தூண்டி அவர்களைத் தேசபக்தர்களாக்க வேண்டுமென்பதே. சீனக் கிறிஸ்தவர்களில் ஒருவர்க்கும் தேசாபிமானம் கிடையாது. அவர்களுக்குள்ளே மிகவும் வைராக்கியமுள்ள தேசாபிமானிகள் சிலர் உண்டானால், இவர்கள் மற்றவர்களையெல்லாம் நேரான வழியில் திருப்பி விடுவார்கள். அவள் சொன்னதிலிருந்து, கிறிஸ்துமதமானது அவர்களைத் தேசபக்தி யில்லாதவர்களாகச் செய்துவிட்டதாகவும், அதனால் உண்மையான தேசாபிமானிகள் அவர்களுடைய கூட்டத்திலிருந்து உழைத்தல் அவசியமென்பதும் ஏற்பட்டது.

இரண்டாவது காரணம்:—சிறிது காலம் கிறிஸ்துமதம் சீனாவில் ஓங்கிவரும். அந்த மதத்தில் புகுந்தவர்களனைவரும் தேசபக்தர்களாகவே நிலைமாறுதிருக்கச் செய்தல் வேண்டும் என்பதே." ஒரு விதத்தில் சிறந்தவையாயினும், இவ்விரண்டு நியாயங்களும் மிகப் பழமையே" என்றேன்.

மூன்றாவது காரணம்:—"ஆனால்" எனக்கு ஒரு மதமும் வேண்டியதா யிருந்தது" என்றாள். பின்னும் "ஏதாவதொரு மதம் இல்லாவிட்டால், தர்ம மார்க்கத்துக்கு ஆபத்து என்பது என் அபிப்பிராயம். தற்காலம் என் தேசத்தில் வழங்கிவரும் மதத்திலே எனக்குத் திருப்தியில்லாதபடியினால், நான் கிறிஸ்து மதத்தை அநுசரிக்கும்படி நேரிட்டது" என்றாள்.

"ஆனால் உம்முடைய சொந்த மதத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறீரோ?" என்றேன். "நமக்கென ஓர் மதம் இருக்கிறதா என்ன? கன்பியூஸியூஸின் போதனைகள் நல்லொழுக்கந் தவிர வேறொன்றுமில்லையே" என்றாள்.

"பௌத்த மதமோ?" என்றேன்.

"ஓ! அஃதெனக்கு மிகவும் அசாத்தியமான மதமாக இருக்கிறது" என்றாள்.



உமது அபிப்பிராயப்படி, கிறிஸ்து மதத்தினுடைய சிறப்பு என்ன?" என்று கேட்டேன்.

"வருங்கால நன்மையில் நம்பிக்கை" என்று உடனே சொன்னாள்.

"உமது தேசத்தின் மதத்தில் சிறிதேனும் அவ்வித நம்பிக்கைக்கு இடமில்லையோ?" என்றேன்.

"தற்காலத்தில் நடமாடும் ஆசாரங்களால் ஒருவனுக்குச் சுகமுமில்லை, எந்த விதத்திலும் நம்பிக்கைக்கும் வழியில்லை. இங்கு பௌத்தமதம்கூட வெறும் சடங்குகளாகவும், மந்திரங்களாகவும் மாறி சீர்கெட்டுப் போய்விட்டது.

நான்—கிறிஸ்துமதத்தில் எங்ஙனம் சேர்க்கப்பட்டீர்?

அவள்:—நான் ஒரு பாதிரி பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தேன்.

நான்:—கிறிஸ்து மதத்தில் தவறுகள் இல்லையென்பதும், கிறிஸ்துவின் தாய் கன்னிகை யென்பதும் உமது நம்பிக்கையோ?

அவள்:—நான் பைபிலிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் திருவாக்காகக் கருதவில்லை. கிறிஸ்து தெய்வ குமாரன் என்று நம்புகிறதற்கு அவருடைய தாய் கன்னிகையென்று நம்பவேண்டிய தவசியமில்லை யென்றும் நினைக்கிறேன். ஒவ்வொருவனும் தெய்வ குமாரனாதல் சத்தியம்.

நான்:—உம்முடைய கிறிஸ்து மதம் கொஞ்சங்கூட கிறிஸ்து மதமாகக் காணப்படவில்லை. எவனும் இம்மாதிரி கிறிஸ்தவனாகலாம். அதற்காக மதம் மாறவேண்டிய தவசியமில்லை.

பிறகு சீன தேசத்தின் ஸ்திரீகளைப் பற்றிய பேச்சு வந்தது. அவள் சொன்னதாவது; "சீனாவில் ஸ்திரீகளுக்குத் திரை கிடையாது. ஆனால் அவர்களுக்கு, இங்கிலாந்து ஸ்திரீகளுக்குள்ள அவ்வளவு ஸ்வதந்திரமும் கிடையாது. ஒரு சீன யௌவனப் பெண் தனது பந்துக்கள் எதிரே ஒரு அந்நியனிடம் தாராளமாகப் பேசுதல் அருமை. தனியாகப் பேசுவதே யில்லை. எங்கள் தேசத்தில் ஸ்திரீகளுக்குச் சாதாரணமாக 20-வது வயதில்தான் விவாஹம் நடக்கிறது. உயர்ந்த வகுப்புக்களில் பெண்ணைக்காட்டிலும் பிள்ளைக்கு ஒன்று அல்லது இரண்டு வயது அதிகம் இருக்கும். பொதுவாகத் தம்பதிகளின் வயதில் வித்தியாசம் இராது.

நான்:—சீனப் பெண்களுக்குள்ளே கல்வி மிகவும் சாதாரணமாகிவிட்டதா?

அவள்:—சுயபாஷையில் கடிதம் எழுதுகிறதற்குத் தகுதியான கல்விதான் சாதாரணமாக இருக்கிறது. ஆனால் இப்போது உயர்தரக் கல்வியும் வழங்க ஆரம்பித்திருக்கிறது. சீனாவில் தாம்பத்தியம் மிகவும் சுகமாக இல்லை. கற்புநிலை தவறுகிறதும் மிகக் குறைவே.

நான்:—இங்கிலீஷ் பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

அவள்:—அவர்கள் சிறு குழந்தைகள்; அவர்களுக்குக்கொஞ்சங்கூட பெருந்தன்மையில்லை. அவர்கள் சிற்றின்பங்களைத்தான் கவனிக்கிறார்கள். அதற்குக் காரணம் இருக்கிறது. உலகத்தில் அவர்களுடைய இராஜாங்கம் அவர்களைச் சுகமாகப் போதுமான வசதியில் வைத்திருக்கின்றது. அவர்களுக்குப் பெருங் கவலைகளுக்கு இடமில்லை. ஆசியா கண்டத்தினராகிய நாமோ, நமது எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படும்படியான அந்தஸ்திலிருக்கிறோம். அதனால் தற்கால நிலையில் விஷய சுகங்களைப் பெரிதாகக் கருதாமல் ஊக்கத்தோடுழைக்க வேண்டியிருக்கிறது.

நான்:—பாக்ஸர்களின் * கலகத்தைப்பற்றி உமது அபிப்பிராயமென்ன?

அவள்:—அவர்கள் வெள்ளைக்காரர்களைக் கொன்றது தப்பிதம். சீன-ஜப்பானிய யுத்தத்தில், எங்கள் இராஜாங்கத்தார் சீனப் பிரஜைகள் மட்டில் நம்பிக்கைவைத்து, யுத்தத்தை நிறுத்தாமல் நடத்தி யிருப்பார்களானால், நாங்களே ஜெயித்திருப்போம். மன்சூரியர் அந்நியரில்லாவிட்டாலும், சரியான சீனர்களுமல்ல.

நான்:—இங்கிலீஷ் உடை, பாவனை, ஆசாரம் இவற்றில் உமக்குப் பிரியந்தானா.

அவள்:—நான் இங்கிலாந்தில் இருக்கிறவரையில் அவற்றை அநுசரிப்பேன். என் தேசத்திற்குப் போனவுடனே, அவற்றை மாற்றி என் தேசாசாரத்தைக் கைப்பற்றுவேன். எனது தேசத்தினர் அந்நியரின் ஆசாரங்களைப் பின்பற்றி, தங்கள் தன்மை யிழந்து, தங்கள் தேசத்திற்கு அந்நியர்களைப்போலக் காணப்படுதல் எனக்குப் பிரியமில்லை. ஜப்பானியர்கூட முதலில் ஈரோப்பிய நடை, உடை, பாவனைகளை முழுதும் அநுசரித்தவர்கள். ஆனால் இப்போது அவற்றை யொழித்து, தங்கள் தேசாசாரங்களைக் கைப்பற்ற ஆரம்பித்துவிட்டார்கள்.

* இவர்கள் சீனாவிலுள்ள மதவெறியர்.



நான்:—சீனா முழுதும் கிறிஸ்துமதம் பரவுமோ?

அவள்:—சிறிதுகாலம் பரவும். ஆனால் முழுதும் பொதுவாக ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

நான்:—ஏன் மேல்நாட்டினர் சீனர்கள் விஷயத்தில் பெரிய அச்சம் வைத்திருக்கிறார்கள்.

அவள்:—சீனர்கள் நல்ல உழைப்பாளிகள், சாமர்த்தியர்கள். இந்த விஷயத்தில் வெள்ளைக்காரர் அவர்களோடு போட்டிபோடுதல் அசாத்தியம். அவர்கள் எந்தப் புதிய இடத்திற்குப் போனாலும், சீனர்களையே வேலைக்கு வைத்துக்கொள்கிறார்கள். ஆனால் சீனன் கொஞ்சம் பணக்காரனாகி அங்கே நிலைபெற ஆரம்பித்தால் அவனைத் துரத்துகிறதற்குப் பெருங்கூச்சல் போடுகிறார்கள்.

இதுதான் சம்பாஷணை. அந்த சீனப்பெண் மிகவும் அழகாகவும், புத்திசாலியாகவும் இருந்தாள். அவள் இங்கிலீஷ் பாஷையைச் சுலபமாகப் பேசினாள். வேற்றுமொழி அருமையாகக் காணப்பட்டது. ஒரு சீனஸ்திரீயின் முதற் பரிசியம் எனக்கு மிகவும் சந்தோஷமாகவும், பிரயோஜனமாகவும், பிரியமாகவும் இருந்தது.

N. சுப்பிரமணிய ஐயர்,
புதுவை.

## நீதிசாரம்.

(முன் தொடர்ச்சி.)

நடுவுநிலைமை.

நிதானமாக நிற்குந் தராசு இருபுறங்களிலும் வைக்கப்பட்டிருக்கும் பொருள்களின் ஏற்றக் குறைவுகளை எப்படித் தெரிவிக்கின்றதோ அதுபோல நடுவுநிலைமையோர், ஸ்நேகிதர், அந்யர், பகைவர் முதலாகிய பெயர்களிடத்துப் பேத நினைவின்றி பொதுவாகவிருந்து கார்யங்களை நடத்துவார்கள்.

ஒருவன் நடுவுநிலைமைக்கு விரோதமான வழியில்நின்று ஸம்பாதிக்கும்பொருள் அளவற்றதாக விருந்தாலும், அது அப்போது மாத்ரம் ஸௌக்யத்தைக் கொடுப்பதுபோலிருந்து உடனே நஸித்துப்போகுமாதலால் அவன் பின்பு தரித்ரத்தில் வருத்தப்படுவான்.

தீவினையால் கேடும், நலவினையாற் செல்வமும், அவரவர்களுக்குமுன்பே விதிக்கப்பட்டிருந்தாலும், நடுவுநிலைமையிலிருந்து வழுவியதால் தீவினையுண்டாகிறதென்றெண்ணிப் பெரியோர் அதை மனதினிடத்திருந்து நீக்கி ஸமமாக நடக்கின்றார்கள்.

நடுவுநிலைமை யுடையவர்க்கு வறுமைவரினு மதைப் பெரியோர்க ளிழிவாக நினையார்கள். ஏனெனில், ஸத்யத்தினின்றும் வழுவாதபடி நடப்பவர்கட்கு வறுமை வராதென்றும், சிலவேளை வரினும் உடனே ஸூரியனைக்கண்ட பனிபோல நீங்கிவிடுமென்றும் பெரியோ ருரைத்திருப்பதி னாலேதான். இதற்கு நிதர்ஸனமென்னவெனில், ஸத்யத்தையே பொருளாகக்கொண்ட அரிச்சந்திரனை அஸத்யத்திற்குள்ளாகும்படியாக விஸ்வாமித்ரரிஷி தம்மாலானமட்டும் பற்பல துன்பங்களுக்குள்ளாக்கியும், அவன் ஸத்யத்தினின்றும் வழுவா திருந்தானென்றும், அதனாலேயே அத்துன்பங்களனைத்தும் ஸூர்யனைக்கண்ட பனிபோல நீங்கி அவன் பெருமையுங் கீர்த்தியு மடைந்தானென்றும், சொல்லியிருப்பதைவிட வேறு வேண்டுமோ ?

நடுவுநிலைமையைவிட்டு அஸத்யத்தில் புத்தியைச் செலுத்தி நடக்கின்றவனுக்கு அதனாலேயே கேடுவருமென்று நல்லோர்களுரைத்திருக்கின்றார்கள்.

ஆதலால், குணவான்கள் நடுவுநிலைமையெனும் பக்ஷபாதமின்மையைக் காத்தலே பல தர்மங்களையுங் காத்தலெனக்கருதி நடந்துகொள்ளவேண்டும்.

## பொறையுடைமை.

பொறையுடைமை என்பது பொறுமையுடைமை. பொறுமையுடையவர்களை ஈனர் பலவாக இழிந்து பேசினாலும், பூமிதேவியைப்போல பொறுத்துக்கொண் டிருப்பார்களேயல்லது கோபித்து ஈனவார்த்தைகளைச் சொல்லார்கள்.



வந்த விருந்தினரை நீக்கிவிடுதல் தரித்ரத்தில் தரித்ரமெனச் சொல்லப்பட்டிருப்பதுபோல அறிவில்லாதார் செய்த தீங்கைப் பொறுத்தல் வல்லமையில் வல்லமையென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

பிறராலுண்டாகுங் கெடுதியைப் பொறுத்துக்கொள்ளாமல் அவர்களுக்குத் துன்பத்தை விளைவிக்கின்றவர்கள் எவ்வளவு சிறந்தவர்களாக விருந்தாலும், அவர்களை நல்லோர்கள் கண்யமாகக் கொள்ளார்கள். அக்கெடுதியைப் பொறுத்துக்கொண் டிருப்போர்களையோவென்றால், மிகவுங் குணவான்களாகக் கொள்வார்கள். ஏனெனில் 'பொறுமை கடலினும் பெரிது' என்று கூறப்பட்டிருப்பதினாலேதான்.

ஒருவன் மற்றொருவனுக்குத் தீங்கு செய்தால் அவனைப் பொறுக்காமல் அதற்குப் பதிலாக மற்றொரு தீங்கை விளைவித்து அவனை நாசமுறும்படி செய்வதில் பிரயோஜனமென்ன ? நாம் நினைத்தபடி செய்து முடித்தோமென்கிற ஸந்தோஷந்தானே ? நமக்கு அபகாரஞ் செய்தவனுக்கு நாமும் பிரதி யபகாரஞ்செய்தோமென்கிற திருப்தியுமுண்டோ ? ஆனால் இவ்விரண்டும் நல்லோர்களுக்குரிய நன்மைகளல்லவே. ஆதலால் இத்தன்மை யுடையவர்களை நல்லோர்கள் பழிப்பார்களென்பதையும், ஒன்றுக்குப் பிரதியாகச் செய்யப்படும் அபகாரமும் பாதகந்தான் என்பதையும் கருதிப் பொறுமைகொண் டிருக்கவேண்டும்.

துன்மார்க்கருடைய வாயிற் பிறக்குங் கொடிய சொற்களைக் கேட்டும் பொறுத்துக்கொண் டிருக்கும்படியான குணவான்கள் இல்லறத்தில் வாழும் லௌகிகராக விருந்தாலும், அவர்கள் துறவறத்தில்வாழும் முனிவர்களைப் பார்க்கிலும் சிறந்தவர்களாவார்கள்.

ஆகாரம் நித்திரை பயம் முதலாகியவைகள் மிருகங்களுக்கும் மனுஷ்யருக்கும் ஸாமான்ய தர்மமாக விருக்கின்றன ; ஆனால் மனுஷ்யருக்கிருக்க வேண்டிய விசேஷகுணங்க ளென்னவெனில், யுக்தா யுக்தங்களைப் பகுத்தறியும் அறிவும், அதனாலுண்டாகும் பொறுமையுந்தானே.

ஒருவன் சாந்த்ராயணம் முதலிய மஹா விரதங்களைப் புரிந்து உண்டி சுருக்குதல் முதலான வருத்தங்களைப் பொறுத்தா

னும், பிறரானுண்டாகுந் தீமைகளைப் பொறுக்காவிடின் அவனுக்குப்பெருமையில்லை. அவைகளைப் பொறுக்கத்தக்கவனோவெனில், யாதொரு விரதத்தையு மியற்றாவிடினும், பெருமையடைவான்.

உலகத்தில் பொறுமை யென்பதுதான் பல நற்குணங்களினுஞ் சிறந்தது. இக்குணம் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் இன்னும் பெரியோர்களுக்கும் புத்திமான்களுக்குங்கூட உண்டாயிருப்பது அரிதென்பதைக் குறித்துப் பூர்வீகர்களுரைத்த த்ருஷ்டாந்தங்கள் பலவுண்டு; ஆதலால், ஸாமான்ய ஜனங்களிடத்தில் இக்குணமிராதென்பது சித்தமே. ஆயினும் இது கொடியதல்ல; ஏனெனில், துன்மார்க்கரிடத்திலுள்ள பரநிந்தை முதலான கெட்ட குணங்களைக் குறித்து அவர்களைத் தண்டித்தாயினும் ஸன்மார்க்கத்திற்குக் கொண்டுவர முயலவேண்டியது உத்தமர்களுடைய கடமையென வுரைத்திருப்பதினாலேதான். இது தீமையிற் பொறையின்மை யெனப்படும். மேலும் உலகத்தில் சில துன்மார்க்கருண்டு. அவர்கள் துஷ்ட கார்யங்களைச்செய்து கெடுதியடைகிற ஸமயத்தில் ஸன்மார்க்கர் யாவரேனும் அவர்களுடைய நன்மையைக்கோரி நற்புத்திசொல்வார்களாயின் அதையும் நிந்தையாகக்கொண்டு பொறுமையைவிட்டுக் கோபமடைந்து அவர்களுக்கு அபகாரத்தைச் செய்கிறார்கள். ஒருவன் தனக்குச் செய்யப்படும் நன்மையைக்கூடப் பெறாமலிருப்பானாயின் அவனுடைய குணத்தை யென்னவென்று சொல்லலாம்? நன்மையிற் பொறையின்மையென்று சொல்லலாமோ? அக்குணமுள்ளவர்களுடைய அவிவேகத்துக்கு அளவுண்டோ? அதை இழித்துச் சொல்லச் சொல்லுண்டோ? அதற்குவமிக்கக் கதையுண்டோ! இல்லை. ஆயினும், தொடர்ந்து வருகிறகதை முக்யமாய் வேறு விஷயத்தைப் பற்றியதாக விருந்தாலும், அஃது இவ்விடத்தி லுரைக்கப்படுகின்றது.

அஃதாவது, ஒரு விருக்ஷத்தினிடத்து ஒரு பக்ஷி வெயிற்காலத்திற்கும் மழைக்காலத்திற்கும் சௌக்யமாக விருப்பதன் பொருட்டு ஒரு கூடு கட்டிக்கொண்டு அதில் வாஸஞ்செய்துகொண்டிருந்தது. அப்படி யிருக்கையில் நேரிட்ட மழைகாலத்தின் ஒரு தினத்தில் அந்த விருக்ஷத்தினிடமாக வந்த ஒரு வானரம் அம்மழையில் நனைந்து வருந்துவதைக்கண் டிரக்கமுற்ற அந்தப் பக்ஷி வானரத்தைப் பார்த்து ஓய் வானரமே! நீர் என்னைப் பார்க்



கிலும் அநேகம்பங்கதிகமான ஸ்தூலதேகத்தை யுடைத்தா யிருக்கிறீரே; உமக்குக் கைகளுங் கால்களும் நன்றாயிருக்கின்றனவே; நீரும் ஒரு வீடுகட்டிக்கொண்டு என்னைப்போலே ஸௌக்யமடைந்திருக்கலாகாதா? என்று சொல்லிய வசனத்தைக்கேட்ட அவ்வானரமதை நலமென் றுணராமல் தன தறிவின்மையால் கோபங்கொண்டு அப்பக்ஷியை நோக்கி நீயோ ஒரு சிறிய பக்ஷி என்னைப் பார்த்து இப்படிச் சொல்லலாமோவென்று உடனே அக்கூட்டைப் பிடித்திழுத்துச் சின்னபின்னமாக்கி யெறிந்துவிட்டது. ஆதலால், அறிவிலாத மூடர்கள் நன்மையைச் சொன்னாலும் பொறார்கள்.

ஸமானமல்லாத ஒருவன் எதிரில் நின்று இழிவான புன்மொழிகளை வரம்புதம்பி வதறினாலு மதற்குச் செவி கொடாமல் பொறுமையாக விருத்தலே பெருமை. இதை யுணராமல் அவனை வெல்லவேண்டுமென்கிற கருத்துக் கொண்டவனோடு வாதிடுவோனுக்கு முன்னுள்ள பெருமையுங் குறைந்துவிடும். எப்படியெனில், குறைக்கும் இனத்தோடு குறைக்குந் தன்மைபோலேதான்.

அறியத்தக்கவைகளை யறிதலும், அடக்கத்தக்கவைகளை அடக்குதலும், அஞ்சத்தக்கவைகட்கு அஞ்சுதலும், இம்மை மறுமைக்குரிய நடைகொண் டுலகத்தை ஸந்தோஷிக்கச் செய்தலும், ஆகிய குணங்களை யுடையவர்களே பொறுமையுடையவர்களென்றும், துயரமற்ற வுலகவாழ்க்கை யுடையவர்களென்றும், முன்னோர்களுரைத்திருக்கிறார்கள். அறியத்தக்கவைகள் வர்ணாஸ்ரமங்களுக்குரிய தர்மங்களெனவும், அடக்கத்தக்கவைகள் ஐம்பொறிகளெனவும், அஞ்சத்தக்கவைகள் பழிபாவங்களெனவும், உலகத்தை ஸந்தோஷிக்கச் செய்தல் இல்வாழ்க்கை நெறிதவறாமல் அதிதிபூஜை முதலிய ஸத்காரங்களைச்செய்து யாவருங் களிப்புறச் செய்தலெனவுங்கொள்க.

ஆதலால், மனிதன் பொறையுடைமையென்னும் ஸத்குணத்தைத் தனது ஆசார்யனநுக்ரஹஞ் செய்த மெய்ப்பொருளாகக் கொண்டு நடக்கவேண்டும்.

# அகல்யா பதிவிரதா பங்கம்.

## இரண்டாவது அத்தியாயம்.

## இந்திரனின் சூழ்ச்சி.

உடல்களிரண்டும், உயிர் ஒன்றுமாய் விளங்கும் அகல்யா கௌதமர் இருவரும், மகா சந்தோஷமுள்ளவராய் வாழ்ந்து வந்தனர். கௌதமருடைய கடுந் தவம் இந்திராதி லோகங்களை வாட்டத் தொடங்கியது. இதைக்கண்ட இந்திரன் முனிவரது தவத்தைக் கெடுக்க முயன்றான். பலவாறு யோசனை செய்தான். பின் தான் வெகு நாளாய் மனதில் எண்ணிய விஷயத்தைச் சாதித்துக் கொள்ளத் தருணம் வந்தது என்று எண்ணினான்.

அநேக நாட்களாக இந்திரனுக்கு அகலிகை மேல் கண்ணுண்டு. அங்கனாமணியின் வனப்பு அவன் மனதைக் குலைத்தது. அகலிகையினது மதிவதனம் நோக்கி மனமயங்கி மானெனத் துவளும் மங்கையர் மணியை மனத்தி லிருத்தி மதி மயங்கினான். கற்புக்கரசியைக் கைப்பற்றுதல் கடும்பாவம் எனக் கனவிலும் நினையாமல், மறந்து, அவளது பொற்குடம்போல் பூரித்து, விம்மி, நூலுமிடையே நுழையா வண்ணம் பெருத்திளந் தன பாரத்தை நினைத்து, நினைத்து ஏங்கினான். பரதவித்தான். வாடிப் பலமற்று வீழ்ந்தான். ஆடை யாபரணங்களைக் களைந்தெறிந்தான். பற்பல சூழ்ச்சிகளை விற்பனமாய் எண்ணினான். பலவாறு யோசித்தான். அவளது செவ்விதழ் வாயை ஒரு தரமேனும் முத்த மிடுவேனோ? அதரபானத்தை அமிருதம் போல் அருந்துவேனோ என்று ஏங்கினான். பளிங்கு நிகர் கபோலங்களில் எக்காலம் முத்த மிடுவேனோ! பருத்த தனங்களை திருத்தமாய் அணைந்து அனுபவியாத சிற்றின்பமும் இன்பமோ? என் இந்திர பதவியும் ஒரு பதவியோ? என் னிந்திராணியும் இவளுக்கு நிகரான ஒரு பெண்ணோ? அகலிகையினது பாத தூளியும் பெறுவளோ என் னிந்திராணி? அந்தோ! என் வாணாள் எல்லாம் வீணாகின்றதே! என்று வாய்க்கு வந்த வித மெல்லாம் பிதற்றினான்.

கௌதமரது தபோ மகிமையும், அகலிகையினது கற்பும் இந்திரனைப் பயமுறுத்தின. அவரது சாபம் எங்குத் தனக்கு



வந்து கிட்டுமோ? எனப் பயந்தான். ஒரு வேளை பெண்மணி தன்னிஷ்டத்திற்கிணங்காமல் எங்கே சபித்து விடுவளோ? என்று மிகவும் நிலை குலைந்தான்.

காமுகற்குக் கண்ணேது? வெட்கம், ஏது? முதலில் தோன்றிய ப்பயமும் சிறிது சிறிதாக மறைந்து விட்டது. மனச் சாக்ஷியும் மாயமாய்ப் போய் விட்டது. காமப் பேய் கொண்டதனால் தைரியம் மெல்ல மெல்ல அதிகரித்தது. ஆசையோ குடிசையண்டை இழுத்தது.

நஞ்சினும் கொடிய கண்களையுடைய ஆயிழைகளின் பார்வைக்குத் தப்பியவரும் உண்டோ? மனத்தை அடக்கிய மகரிஷிகளும் மான்விழி மாதர்களின் மாய வலையில் சிக்கி மயங்க வில்லையோ? அவ்வித மிருக்க நித்தியபோக, இந்திரன் என்ன பிரமாதம்? அகல்யையினது அம்புஜ மலர்கள் போன்ற விழிகளின் கூரிய அம்புகள், இந்திரனது மார்பைப் பிளந்தன என்றால் இது ஒரு ஆச்சரியமா?

கௌதம பத்னியின் அழகிய வதனம் எக்காலத்தும் அவன் கண்களுக் கெதிரே நின்றது. உடலற்றவன், உடலைப்பிளந்தான். ஆதலின் " அகல்யா! அகல்யா! என் ஆருயிர்க் கண்மணீ! வனப்புமிகுந்த வனமணீ! அந்தோ! உன் விதியை என்னென்று சொல்லுவேன்? அடவியில் வசிக்கும் ஆடவனுக்கோ உன்னை அளித்தான்? பிரம்மலபி இங்ஙனமாயிற்றோ? விதியை வெல்வதே மதியின் திறமை! நானன்றோ உனக்கேற்ற மணாளன்! அரகரவென்று அலறித்திரியும் அவனோ உனக்குத் தகுந்த இன்பமளிப்பவன்? கௌதமனுக்குப் போகத்தின் அருமை என்ன தெரியும்? யோகியினிடத்திலா போகமனுபவிப்பது? ஐயோ! பெண்புத்தி பேதமை என்கிறார்களே. அதை உன்னிடத்தில் தான் காண்கிறேன். என்னைப்போன்ற போகியினிடத்தன்றோ போகமனுபவித்தல் வேண்டும். ஏகபத்னிவிரதனான அக்கௌதமனுக்கு என்ன சுகம் தெரியும்? நானோ மூவுலகங்களும் மயங்கும் அப்சர ஸ்திரீகளுட னிருப்பவன். கலவித்தொழில் முழுதும் களங்கமறக் கற்றவன். உன்னிளமைப் பருவத்தைப் பயனுறச் செய்பவன் நானே என்று அகலிகை முன்னிற்பதுபோல் நினைத்து உளறினான். தன் இருகரங்களையும் நீட்டித் தாவிப் பிடிக்கப்போனான். எதிரில் நிற்பது வெட்ட வெளிச்சமே!

சிறிதுநேரங் கழிந்தபின் மனந்தெளிந்து ஒரு சூழ்ச்சிச் செய்தான். காகம்போல் உருவங்கொண்டு கௌதமன் பர்ணசாலையண்டைவந்து கா கா என்று கதறினால் காரிருளைப் போக்கும் கர்லகாலனை எக்காலத்தும் மறவாக் கௌதமன் காலத்தில் பூசை செய்யச் செல்வான். அச்சமயத்தில் நிஜவுருவங்கொண்டு நிர்மலனது பத்தினியினிடத்தில் எண்ணிய எண்ணத்தை எவ்விதத்தாலும் தீர்த்துக் கொள்ளுவோம் என்று எண்ணினான்.

பின் தான் நினைத்தமாதிரி காக்கை உருவெடுத்துப் பர்ணசாலையின் சமீபத்திலிருந்துகொண்டு கா கா என்று கத்தினான் இந்திரன்—ஒருமுறை, இருமுறை, மும்முறை கத்தவே, அயர்ந்து துயில்புரிந்த அண்ணல் எழுந்தான். காக்கை கத்தவே பொழுதும் விடிந்தது என்றெண்ணி தன் ஜபதபங்களுக்கு வேண்டிய கருவிகளை யெடுத்துக்கொண்டு கதவைத்திறந்தால் எங்கும் இருள்மயமாயிருந்தது—சுக்கிரோதயமுமில்லை. இந்திரனின் தந்திரம் என்ன தெரியும்—இவருக்கு? தன் கர்மானுஷ்டானங்களைச் செய்ய குளக்கரைக்குப் புறப்பட்டார்.

இந்திரனோ மாசற்றோன் வெளியே செல்லக் கண்டான். ஆனந்தங்கொண்டான். மனம்பூரித்துக் குதித்தான், தன் மதியை வியந்தான். விதியை வென்றேன் என நினைத்தான். மாதர்மணியை எவ்விதத்தும் அடைவேன் எனப் புகன்றான். மார்போடணைத்து மகிழும் வேளைவந்தது என மகிழ்ந்தான். கூத்தாடினான். மாந்தளிர்மேனியாளே! நுண்ணிடை வந்திழையே! உனக்கேற்ற நாயகன் இதோ காத்திருக்கிறேன்—பொன்னின்மணியே! பூங்குழல்மங்கையே! மின்னற்கொடியே! பின்னற்சடையாளே! கிள்ளைமொழியாளே! இதோ வந்தேன் கிழவன் செல்லட்டும்—செல்லட்டும்—சற்று பொறு. சற்று பொறு. உனக்கு நல்லகாலம் இதோ வந்துவிட்டது. "உன் பாக்கியமே என் சிலாக்கியம்" என்று நினைத்து நினைத்துக் கூத்தாடினான்.

வரும் விதி யாருக்குத் தெரியும்? தன் மோக மயக்கத்தினால் பரமயோகியான கௌதமருக்கு இணையற்ற அபராதத்தைச் செய்வதைச் சிறிதேனும் நினைக்கவில்லை. கேடுவரும்போது மதி கெட்டுவரும்.



## மூன்றாவது அத்தியாயம்.

## குளக்கரை மீது.

மேலே கூறியவண்ணம், கௌதமர் வெளியில்வந்து காரிருளையுங் கவனியாமல் வழக்கப்படி கைகால்சுத்தி, தந்ததாவனமுதலியவைகளைசெய்து, விபூதியணிந்து, மடிஸஞ்சி, பஞ்சபாத்திர உத்திரணி, மான்தோல், தர்ப்பை, சமித்து, முதலியவைகளை எடுத்துக்கொண்டு குளக்கரைக்கு வந்துசேர்ந்தார். காமக்குரோதங்களைவென்ற முனிசிரேஷ்டர் அக்குளத்தில் ஸ்நானமாடி, புனிதமாகிப் பங்கயக்கண்ணனைத் தன் இருதய பத்மத்திலிருத்தி, முக்குணத்திற்கும் முதல்வனை, ஆதிதேவனை நோக்கித் தியானிக்கலானார். கார்மேகவண்ணனே! கருணைக்கடலே! விராட் புருஷனே! யோகினும்பதயே! நாரணனே! பரமபுருஷனே என்று பலவாறு தோத்தரித்தார். பொய், கொலை, களவு, காமம், பொறாமையையே குடியாய்க்கொண்ட இவ்வுலகத்தை மறந்தார். பரமபுருஷனது பாதாரவிந்தத்தை நாடினார். ஆனந்தக்கூத்தாடினார். அடைந்தேன் ஜன்மசாபல்யம்! பெற்றேன் முக்தி! அடைந்தேன் மானிடனாய்ப் பிறந்ததின் பலனை! என்றார். உரக்கக் கூச்சலிட்டார். ஏகநிஷ்டராய் விளங்கினார். மௌனியானார். எங்கு நோக்கினும் பரமனது வடிவமாய்த் தோன்றியது உலகம்.

என்ன ஆச்சரியம் உலகத்தின் மாயை! யோகியான கௌதமர் மாயா உலகத்தைவென்று மறந்து பரமனை நினைத்து ஆனந்தக்கூத்தாடி மனமடக்கி சமாதியிலிருக்க, பதிவிருதா சிரோமணியான கௌதம பத்தினியோ, மாயையால் மயங்கி, தன் கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமையை மறந்து, மனத்தையடக்காமல் இந்திரனுடன்கூடி, ஆடி, அடைந்தேன் ஜன்மசாபல்யம்! பெற்றேன் முக்தி! அடைந்தேன் பிறவிப்பயனை இன்றே! அனுபவித்தேன் இன்பத்தை! விளையாடினேன் ஆனந்தக்கடலில்! என்று இந்திரிய வயப்பட்டு மயங்கி, மெய் மறந்திருப்பதைக் காண உலகத்தில் ஒவ்வொருவரும் தாம் அனுபவிக்கும் சுகமே சுகம் எனவும், உண்டதே சுகம், கண்டதே காக்ஷி என்பது உலக மாயையின் இயல்பு என்பதும், மாயையை வெல்வது எளிதன்று என்பதும் நன்கு விளங்கும்.

இத்தருணத்தில் சூரியன் மெல்ல மெல்ல உதயமானான். முனிசிரேஷ்டரின் சமாதியோ இன்னும் கலையவில்லை; தவம்புரிகின்றார். குளத்திலுள்ள கமலமலர்கள் எல்லாம் தம்பதியைக்

கண்டதினாலோ, அல்லது பரமனைக்கண்ட பக்தனது இருதயம் போலோ, அல்லது குணம் நிரம்பிய பரமபக்தன் ஆடிய ஸ்நாநத்தின் பயனாலோ, தம் இதழ்களை மலரவிரித்து, "வெகுகாலம் காதலனைப் பிரிந்து வாடி வதங்கி நற்சுவையற்று நல்லுடம்பின்றிக் கனக்கவலையுற்று, மனம் புண்ணான ஓர் இளமடந்தையாங் கற்புக்கரசி, அகன்ற நெற்றியும், பரந்த கண்களும், உயர்ந்த தோள்களும், திரண்ட புஜங்களும், விரிந்த மார்பும், பொன்னிறமேனியும், பரதாரச் சோதரனுமான தன் காதலன், வெகுநாள் விட்டுப் பிரிந்து, திரவியம் மெத்தக்குவித்துத் தன்னாருயிர்க் காதலியாந் தன்னை நினைத்துத் தேடி வருவதைக் கண்டவுடன் காதலனைக் கூடி முத்தமிட ஆவலோடு மனங்களித்து முகமலர்ந்து "எவ்வாறு நிற்பளோ அவ்விதமே விளங்கி நின்றன.

வெண்ணிறங்கொண்ட அல்லிமலர்கள் யாவும், நலந்திகழ் நெடியவாட்கண் வஞ்சி நுண்ணிடையாள் ஒருத்தி யௌவனப் பிராயத்தே அனங்கனின் மலர்க்கணைக்கு வசமாகி, அதிக விரகங்கொண்டு, தன் கொழுநனது லீலைகளுக்குந் தணியா மோகத்தினால், கற்பெனும் அணிகலத்தை விரகதாபத்திற்கு அடிமையாக்கித் தன் மீது காதல்கொண்ட மற்றோர் ஆடவனிடத்தே மனதைச் செலுத்தி, கொண்ட கணவனில்லாத சமயத்தே அவனுடன் ரமித்து, மனமகிழ்ந்து மதனலீலையே பெரிதென நினைத்து, மலர்மிகுந்த மஞ்சத்திலிருந்து, அவனை கார்மேகவண்ணனே! யெனத் துதித்துச் சிரித்துக் கொஞ்சிக்குலாவி கிளியென மொழிந்து கலவிகள் பலவும் நலமுடன்செய்து கானத்திடையே கனிவுடன் துள்ளிவிளையாடும் மானேபோல் மகிழ்ந்திருக்கும் சமயத்தில், கொண்ட கணவன் கண்டுகொள்ளப் பண்டைய நினைவைப் பாங்குடன் நினைத்து, அங்கமதிளைத்து ஆருயிர் வெறுத்து மனமிகக் கலங்கி, மதிவதனஞ்சுருங்கி அச்சமது பெருக, நாவது உலர, நளின்மலர்த் தேனாவெனும் உடலது கருகி, ஒளிமழுங்கி ஒடுங்கிய நங்கைபோலோ அன்றி, மார்பதகன்று, நறுமலர் மாலை சூடி, ஜில்பா குடுமியுடன்கூடி, திவ்விய திலகம் பரந்த நெற்றியில் குருகுரென் றணிந்துப் பாவையர் மயங்கக் கோதையர் குலுங்கத் துய்யவாடை அரையிலணிந்து கையில் பிரம்பு பிடித்து நறுக்கு மீசையும் கிறுக்குச் சடாவும் நன்குதுலங்க தெருவுகடோறும் ஷோக் நடையுடன்கூடிச் சீட்டி அடித்துப் பாவையர்காணப் பலபல செய்துப் பேதைமாதர் மனதைப் பறித்திடும் பாபியாம் இளங்



காளை யொருவனைக்கண்டு மயங்கி கருத்தழிந்த அபலையொருவள், காரிருள் மூடியதென்றும், கணவன் காணான் என்றும் எண்ணி, மனிதரைக்கண்டால் மனமது கலங்கி ஆசையோர் பக்கம்இழுக்க, அச்சமோர் பக்கம் இழுக்க கள்ளநாயகன் சொல்லும் இனிய மொழிகளை இடையிடையே நினைத்து தன்னழகைத் தானறியாது மயங்கி, அவனுரைக்கும் அத்தனையும் மெய்யென நம்பி, தான் ரதியோ! அப்ஸரஸ்திரீயோ! கந்தர்வமாதோ! கமலமலர்த் தேவியோ? அன்றி நாககன்னியோ! நாட்டினர் மெச்சும் நளனது பத்தினியோ! இவர்களில் யார்தாமோ எனக்கு நிகராவர் என்று எண்ணிப் பண்டைவினையால் அப்புருடனைக் கண்டு புன்சிரிப்புகொண்டு அங்கம் பூரிக்க அளகபாரம் அவிழ்ந்தாட, தாம்பூலந் தரித்து தலையதுவணங்கி, அங்கமுழுதும் அடைக்கலம்செய்து நீயே கதியெனவும், நிமிஷமும் பிரியேன் எனவும், பாவியாம் பதி பழிவாங்குகிறான் எனவும், பலபல வியம்பிப் பின்னும், "உன் சுகந்தான் உண்மைச் சுகம். உற்ற கணவன் முற்றுஞ் செய்யான். பட்டுபோதும் அப்பாவி மகனுடன்! இட்டதெய்வம் நீயேயன்றோ! என்னை மறவாய் இயமனறிய! உன்னை மறப்பது ஒருகாலுமில்லை" என்று பிதற்றிச் சிறிது சிறிதாகப் புருஷனை வெறுத்து, கள்ளநாயகன்மீது காதல் பெருக்கித் துள்ளித்திரிந்து, திரவியம் முழுதுங் கொள்ளையிட்டுக் கூடிக் குலாவித் திரியுங் காலத்தில், கள்ளப் புருடன் அவ்வளவு பணத்தையும் மெல்ல மெல்லக் கொள்ளைகொண்டுப் பின் நம்பிவந்த நங்கையை நாட்டினில் கண்டோர் நகைக்கக் காரியுமிழவிட்டுப் பின்னையோர் நங்கையைக் கொண்டிருக்குங்கால், பதியை வெறுத்துப் பரபுருடனை நம்பிய இப்பாவி, நாட்டோர் நகைக்க, நாதன் வெறுக்க, நாதியற்றுப் பேதையாய் நலங்கெட்டுத் தெருவினில் அலையும் சமயத்தே பண்டைய புத்திப் பரிவுடன்தோன்ற, மனம் உருகி, உடல்வாடி, வனப்பு அழிந்து வன்மை குறைந்து உடலைச் சுருக்கி உள்ளே யடக்கும் ஆமைபோல் அவ்வளவு கஷ்டங்களையும் மனத்தேயடங்கி மேனிவதங்கித் தயங்கும் நாரிபோலே காணப்பட்டன.

அன்னப்புட்கள் இரைதேடி அங்குமிங்கும் உலாவித் திரிந்தன. பசிய மரங்களின் சாயல்கள் பளிங்குபோன்ற அக்குளத்தில் காணப்பட்டன. இளஞ் சூரியனது அழகிய கிரணங்கள் அலைகளின்மீது நின்று கூத்தாடின. நீர்வாழ் பறவைகள் சில தம்

வயிறே பெரிதென நினைத்துச் சுயநலங்கொண்டு ஒற்றுமையை யழிக்கும் சில பாதகர்கள்போல் சுற்றித் திரிந்தன. பின்னும் சில புட்கள் தன்னலம்மறந்து, பரோபகாரத்திற்கெனவே உடலெடுத்தப் பாலன், லோலன், பரமதயாளன் பச்சையப்பன் போல் தன்னினத்துடன்கூடி, இரைதேடித் திரிந்தன. "சிறியோரைக் காப்பதே பெரியோரின் தர்மம்" என்பதுபோல் தம் குஞ்சுகளுக்கு இரைதேடி அளித்த பக்ஷிகளும் பல காணப்பட்டன.

வரும்.

சுப்பிரமணிய ஐயர், கடக்.

## சுகாதாரம்.

(முன்தொடர்ச்சி.)

### போஜன நேரங்கள்.

நாம் சாப்பிடுகிற போஜனம் சரிவர ஜீரணமாகிறதற்குச் சராசரி மூன்றுமணி நேரஞ் செல்லும். போஜனம் ஜீரணமான பின்பு நமது வயிறு சராசரி இரண்டுமணி நேரமாவது இளைப்பாற வேண்டியது மிகவும் அவசியம். ஆகையால் ஒருதடவை போஜனஞ் செய்தபின் குறைந்தது ஐந்துமணிநேரஞ் சென்றபின்தான் இரண்டாந்தடவை போஜனம் பண்ணவேண்டும். உதயம் 9-மணிக்குக் காலைச் சாப்பாட்டையும், 2-மணிக்கு மத்தியானச் சாப்பாட்டையும், இராத்திரி 7-மணிக்கு இராச் சாப்பாட்டையும் செய்து, 10-மணிக்குப் படுக்கைக்குப் போகிற வழக்கம் சுகத்திற்கு மிகவும் ஏற்றது. தேகமுயற்சி அல்லது மனோமுயற்சி அதிகமில்லாதவர்களுக்கு இரண்டுநேரச் சாப்பாடு போதுமானதாயிருக்கும். இராச்சாப்பாடு சற்றுக் குறைவாயிருப்பது உத்தமம். அது படுக்கப்போகிறதற்கு இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்கு முன் ஆயிருந்தால் சுகத்திற்கு அநுகூலமாயிருக்கும்.



பின்வரும் அட்டவணை பலவகைப் போஜனபதார்த்தங்கள் ஜீரணமாகும் நேரங்களைக் காட்டுகின்றது.

| போஜனபதார்த்தங்களின் பெயர்கள். | மணி நேரம். | நிமிஷ நேரம். |
|---|---|---|
| உருளைக்கிழங்கு ... | 3 | 0 |
| அவித்தப்பயறுகள் ... | 3 | 0 |
| அரிசிச்சோறு ... | 1 | 0 |
| ஜவ்வரிசி ... | 1 | 30 |
| டாபியோக்கா (Tapioca) ... | 2 | 0 |
| கோவிஸ் (Cabbage) ... | 3 | 0 |
| காரொட்கிழங்கு (Carrot) ... | 3 | 15 |
| கோதுமைரொட்டி ... | 3 | 30 |
| நெய் ... | 3 | 30 |
| காய்ச்சினபால் ... | 2 | 0 |
| பச்சைப்பால் ... | 2 | 15 |
| பால்கட்டி (Cheese) ... | 3 | 30 |

உதயபோஜனம் எப்படி யிருக்கவேண்டுமென்றால் பகலைப்போல் இராத்திரியில் சாப்பிடுகிற வழக்கமில்லாததினால் உதயத்தில் தேகஞ்சோர்ந்து போயிருக்கும்; ஜீரணக்கருவிகள் பலவீனப்பட்டிருக்கும். மேலும் நித்திரை சமையத்தில் தேகத்திலிருந்து அதிகமான நீர் வேர்வையாக வெளியே கழிந்துபோகின்றது. ஆகையால் நித்திரையைவிட்டெழுந்திருந்தவுடனே பலமான கனத்த போஜனங்களினால் வயிற்றை நிறப்புகிறது நல்லதல்ல. இலேசானதும் சோர்ந்துபோயிருக்கிற தேக இந்திரியங்களை ஸ்திரப்படுத்தத்தக்கதும் இராத்திரியில் வேர்வையினால் போய்விட்ட நீரைத் திரும்ப தேகத்திற்குச் செலுத்தத் தக்கதுமான காப்பித்தண்ணீர், தேத்தண்ணீர், நொய்க்கஞ்சிகள் முதலானவைகளே அதிகாலையில் சாப்பிடுவதற்கு ஏற்ற போஜனங்கள். பின்பு நேரஞ் செல்லச் செல்ல வயிறுபலப்பட்டு சுறுசுறுப்புள்ளதாகுமாகையால் பின்னேரங்களில் பலமானதுங் கனத்ததுமான போஜனங்களைச் சாப்பிடலாம். பின்னேரங்களில் சாப்பிடவேண்டிய போஜனத்தின் தன்மையும் அளவும் அந்தந்த ஆள்செய்கிற தேகமனோ உழைப்புகளுக்குத் தக்கனவாயிருக்கவேண்டும். அதிக பலமுள்ள போஜனங்களைச் சாப்பிடுகிறவர்கள் அவைகளுக்கு

தகுந்தபடி தேகமுயற்சிகளைச் செய்தால்தான் தேகத்திற்குப் பலமும் சுகமும் இன்பமு முண்டாகும். அப்படிக் கில்லாவிட்டால் பலத்த போஜனங்களால் அஜீரணமும் அதனாலுண்டாகும் பலவியாதிகளும் தொந்தரவுகளுந்தான் நேரிடும்.

சிலருக்கு ஜீரணத்தொழில் அதிசீக்கிரமாக நடக்கும்; சிலருக்கு அது வெகு தாமதப்படும்; ஆகையால் அதிசீக்கிர ஜீரண சக்தியை யுடையவர்கள் சிறிது அளவாய் ஒருநாளில் 3-அல்லது 4-பொழுது சாப்பிடலாம்; தாமதமான ஜீரணக் கருவிகளை யுடையவர்கள் போதுமான அளவாய் 2-பொழுது சாப்பிட்டால் போதும்.

சிலர் சாயங்கால வேளைகளில் பலத்த போஜனங்களைச் சாப்பிட்ட சிறிது நேரத்திற்குப்பின்பு காப்பி அல்லது தேத்தண்ணீரைச் சாப்பிடுகிறார்கள். இது நல்ல வழக்கமல்ல. இதனால் சாப்பாட்டின் ஜீரணந் தடைபட்டு அஜீரணக்குறிகளும் வாய்வு உபத்திரவமும் இராவேளையில் நித்திரைக் கெட்டுப்போதலும் மறுநாள் உதயத்தில் நல்ல பசியின்மையும் சம்பவிக்கும்.

## போஜனத்தின் வேற்றுமை.

வேற்றுமையான சாப்பாட்டின்மேல் யாவருக்கும் இயல்பா யுண்டாகிற விருப்பம் சரீரசுகம் நடந்தேறுவதற்கு அநுகூலமான பிரமாணமே யல்லாது வேறல்ல. ஒரேவகையான சாப்பாட்டை எப்பொழுதுஞ் சாப்பிட்டுவந்தால் தேக இந்திரியங்களெல்லாம் கொஞ்சகாலத்திற்குள் சோர்வடைந்து தங்கள் தொழில்களைச் சரியானபடி நிறைவேற்ற ஏலாமற் போகும். இதனால் தேக சுகத்திற்குக் குறைவு நேரிடும். ஆகையால் கூடியவாறு போஜனங்களை வேற்றுமைப் படுத்திக்கொண்டே வரவேண்டும். பலவகை வேற்றுமையான போஜன பதார்த்தங்களைச் சம்பாதித்துக் கொள்ள இடமில்லாவிட்டாலும் ஒரேவித பதார்த்தங்களைக் கொண்டு பலவித பக்குவங்களைச் செய்து போஜனத்தில் வேற்றுமை யுண்டாக்கிக் கொள்ளலாம்; வேற்றுமையான போஜனங்களை உட்கொள்ளுகிறதினால் தேக சுகத்திற்கு அவசியமான பலவகைச் சத்துக்களும் சரீரத்தில் போய்ச் சேருவதற்கு இடமுண்டாயிருக்கும்.



## போஜனகாலத்தில் கவனிக்கவேண்டிய காரியம்.

வாயிலுள்ள உமிழ்நீர் போஜனத்தை ஜீரணிக்கச் செய்கிற விசேஷித்த கருவியாகையால் ஒவ்வொருவரும் போஜனபந்தியில் போதுமான நேரமிருந்து போஜனத்தை நன்றாய் மென்று அது உமிழ்நீரோடு சரிவரக் கலந்தபின்தான் அதை விழுங்கவேண்டும். ஜெர்மானிய தேசத்தினர் போஜனத்தை மிகவும் மெதுவாகச்சாப்பிடுகிறவர்கள். அப்படியே அவர்கள் அதிக தேக சுக முள்ளவர்களாயு மிருக்கிறார்கள். நமது தேசத்தினருள் அநேகர் சோறு முதலிய போஜனங்களை நன்றாய் மெல்லாமல் சடுதியாய் விழுங்கி விடுகிறார்கள். இது தீமையான வழக்கம்.

சாப்பிடுகையில் படிப்பு முதலிய மனோமுயற்சிகளைச் செய்கிறது ஜீரணத்தைக் கெடுக்கும். போஜன பந்தியில் மனதுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்குஞ் சம்பாஷணை ஜீரணத்திற்கு அநுகூலமானது. சாப்பிட்டவுடனே கடினமான தேகவுழப்பை அல்லது மனோமுயற்சிகளைச் செய்கிறது ஜீரணத்தைத் தடைபண்ணும். சாப்பிட்டவுடனே சற்றுநேரம் நின்றுகொண்டிருக்கிறது, அல்லது மெதுவாகச் சிறிது உலாவுகிறது நல்லது.

## சமையல் பாத்திரங்களைப்பற்றிய சில குறிப்புகள்.

நமது தேசத்து ஜனங்கள் சமையல் முதலான வேலைகளுக்கு உபயோகிக்கிற பாத்திரங்களில் அநேகம் சுகவீனத்தை யுண்டாக்கத் தக்கவைகள். ஈயபாத்திரங்கள் யாதொரு தீங்குமற்றவை யென்று ஜனங்கள் நினைக்கிறார்கள். இவைகள் மற்றப் பித்தளை தாம்பிரப்பாத்திரங்களைப்போல ஜனங்களுக்கு உடனே தீங்கு செய்யாமல் நாளடைவாய்த் தேகத்தில் விஷத்தைச் சேர்த்து வெகுகாலத்திற்குப் பின்பு கொடிய ரோகங்களை யுண்டாக்குகின்றன. ஆகையால் ஜனங்கள் அவ்வியாதிகள் தாங்கள் வெகுகாலமாய் உபயோகித்துவந்தஈயப்பாத்திரங்களாலுண்டாயினவென்று அறியாதே போகிறார்கள். ஈயவிஷத்தால் வரும்நோய்கள் கொடிய வயிற்றுநோவு, கால்கை வழங்காமல் போகிற ஒருவகை வாதநோய் முதலானவைகளே. காரீயமென்பது தான் சரியான ஈயம். சுயம்பான வெள்ளீயமானது தகரந்தான். தகரத்தகடுகளானவை இருப்புத்தகடுகளின் மேல் வெள்ளீயம் அல்லது, தகரமென்கிற உலோகத்தைப் பூசுவதினாலுண்டாகின்றன. பாத்திரங்

களுக்கு ஈயம் பூசுதல் அல்லது கலாய் பூசுதலென்பது வெள்ளீயமென்கிற தகரத்தைப் பூசுதலேயன்றி வேறல்ல. சுயம்பான வெள்ளீயம் அல்லது தகரமானது விஷத்தை யுண்டாக்கத்தக்கதல்ல. ஆனால் பாத்திரங்களைச் செய்வதற்கும் பாத்திரங்களுக்கு ஈயம் பூசுவதற்கும் உபயோகிக்கிற வெள்ளீயமென்கிற தகரத்தில் பின்னுக்குக் கொடிய விஷத்தை யுண்டாக்கத்தக்கக் காரீயம் சில வேளை கலந்திருக்கும். கலப்பான வெள்ளீயத்தினால் செய்யப்பட்ட பாத்திரங்கள் தீமையை யுண்டாக்கும். ஆகையால் சகல விதமான ஈயப்பாத்திரங்களையும் ஈயப்பூச்சுப் பாத்திரங்களையும் முற்றிலுங் கையாடாமலிருப்பது சுகத்திற்கு அநுகூலமான காரியம். பித்தளை தாம்பிரப் பாத்திரங்களினா லுண்டாகும் கொடிய விஷத்தைப்பற்றி எல்லாருக்குந் தெரிந்திருக்கும். இவைகளைச் சிறிதேனும் உபயோகிப்பது நல்லதல்ல.

### பிள்ளைகள் விருதாப்பியர்களுடைய போஜனத்தைப்பற்றி.

பிள்ளைகளுடைய போஜனம் இரண்டு தன்மைகளை யுடையதா யிருக்கவேண்டும்.

1 மசாலை முதலிய சம்பாரங்கள் சேர்ந்த கார சாரமுள்ள போஜனங்களை அதிகமாய்ப் பிள்ளைகளுக்குப் கொடுக்கக்கூடாது; இவைகளால் பிள்ளைகளின் நுட்பமான ஜீரண இயந்திரங்களுக்குச் சேதங்கள் நேரிடும்.

2 பிள்ளைகளுடைய போஜனம் இலகுவாய் ஜீரணமாகத் தக்கதா யிருக்கவேண்டும். அவர்கள் தீவிரமாய் வளருகிறார்களென்றாலும் அவர்களுடைய ஜீரணக்கருவிகள் நுட்பமும் உறுதி யற்றவைகளுமா யிருக்கிறபடியால் கடினமான பதார்த்தங்களை அவர்களுக்குக் கொடுத்தால் அவைகள் ஜீரணமாக மாட்டாவாம். இரத்தத்திற்கும் மாம்சத்திற்கும் அவசியமான சத்துக்களை அதிகமாய் அடக்கிக்கொண்டிருக்கிற போஜனபதார்த்தங்களையே முக்கியமாய்ப் பிள்ளைகளுக்குக் கொடுத்துவர வேண்டும். பால், கோதுமைரொட்டி முதலியவைகள் பிள்ளைகளுக்கு மிகவும் பிரயோசனமானவை. இவைகளோடு அரிசி முதலிய மாச்சத்துள்ள போஜனங்களை மிதமாய்ச் சேர்த்துக் கொள்ளலாம். பிள்ளைகளுக்கு வெண்ணெய் அல்லது நெய் அதிக பிரயோசனமா யிருக்கும். இறைச்சியோடு சேர்ந்த கொழுப்பானது சிறு பிள்ளைகளுக்கு ஜீரணமாக மாட்டாது.



பிள்ளைகள் சாப்பிடு நேரங்களை ஒரு ஒழுங்குபடுத்தி அந்த ஒழுங்கின் பிரகாரமாகவே அவர்கள் போஜனஞ் செய்து வரும்படி செய்யவேண்டும். மேலும் அவர்கள் சாப்பிடும்பொழுதெல்லாம் படபடப்பின்றி மெதுவாய்ச் சாப்பிடும்படிச் செய்யவேண்டும். பிள்ளைகளுடைய சாப்பாட்டு விஷயத்தில் திட்டமான ஒழுங்கில்லாவிட்டால் அவர்கள் மிதமிஞ்சி சாப்பிடுவார்கள்; அல்லது போதுமானபடி சாப்பிடமாட்டார்கள் இந்த ஏதுக்களால் அவர்களுக்குப் பல தொந்தர்வுகள் நேரிடும். பிள்ளைகள் நாளொன்றுக்கு எத்தனை நேரம் சாப்பிடவேண்டுமென்றால், 4 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் 3-மணிநேரத்திற் கொருதரமாக 5 அல்லது 6 தரம் சாப்பிடலாம். 15 அல்லது 16 வயதுக்குள்ளான பிள்ளைகள் 4 மணிநேரத்திற் கொருதரமாக 4 தரம் சாப்பிடலாம்.

விருத்தாப்பியரின் ஜீரணக்கருவிகள் பலவீனமுள்ளவைகள். இவ்விஷயத்தில் அவர்கள் சிறுபிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறார்களாகையால் சிறுபிள்ளைகளைக் குறித்து சாப்பாட்டின் தன்மையைப்பற்றி மேலே சொல்லப்பட்ட குறிப்புகள் விருத்தாப்பியருக்கும் பொருந்தும். ஆனால் சிறுபிள்ளைகள் எவ்வளவிற்கு வேகமாய் வளருகிறார்களோ அவ்வளவிற்கு விருத்தாப்பருடைய தேக இந்திரியங்களெல்லாந் தேய்ந்து குறைந்துகொண்டே வருகின்றன. ஆகையால் விருத்தாப்பியருடைய ஜீரணக்கருவிகளின் கூர்மை தேய்ந்து மங்கிப்போ யிருக்குமானதால் அவைகள் ஜீரணத்தொழில்களை நடத்துவதில் சோர்வடையும். இதினிமித்தம் அவர்களுக்கு ஜீரணத்தொழில் ஒருவாறு நன்றாய் நடப்பதற்கு மசாலை முதலிய சம்பாரங்களினால் கார சார மேற்றப்பட்ட போஜன பதார்த்தங்கள் அவசியம். ஆனபடியால் சிறு பிள்ளைகளுக்குப் பாலில் சர்க்கரை கலந்து கொடுத்தால் விருத்தாப்பியருக்கு அதில் கொஞ்சம் உப்பையும் மிளகுத் தூளையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு கார சார முள்ள குழம்புகள் அவசியமாயிருக்கும். மேலும் அவர்களுடைய ஜீரணக்கருவிகளின் பலவீனத்தினிமித்தம் திராட்சரசம், சாராயம் முதலியவைகளை மட்டாகப் பிரயோகித்து வந்தால் பிரயோஜனமா யிருக்கும்.

(வரும்)

## ஒரு லோபி.

எச்சிற்கைக்கொண்டு காக்கை விரட்டாத பரமலோபி ஒருவன் இருந்தான், அவன் இறந்தபின் அவனை நரக லோகத்திற்குக் கொண்டுபோகையில், வழியில் ஓர் ஆறு குறுக்கிட்டது. அங்குச் சேரும் பாபிகளெல்லாம் அந்த ஆற்றைக் கடத்திவிடும்படி வைத்திருக்கிற ஓடக்காரனுக்கு ஒரு காசு கொடுத்து அக்கரை செல்வது வழக்கம். அந்தப் பிரகாரம் ஓடக்காரன் மற்றவர்களிடத்திலெல்லாம் காசு வாங்கிக்கொண்டு, இந்த லோபியினிடத்து வந்து காசு கேட்டான். அதற்கு அவன், நமக்குத்தான் நீந்தத் தெரியுமே, பின்னை ஏன் இந்த ஓடக்காரனுக்குக் காசு வீணாய்க் கொடுக்கவேண்டும் என்று சொல்லி, திடீரென்று நதியிற்பாய்ந்து, அங்குள்ளவர் என்ன தடைசெய்தாலும் பின்வாங்காமல் நீந்தி அக்கரை சேர்ந்தான். இந்தச் செய்தி நரகவாசிகளுக்கு எட்டினவுடனே அங்குப் பெரிய அமளியுண்டாயிற்று. பாதாளலோக வரும்படிக்கு இடையூறுண்டாகத் துணிகரத்துடன் இவ்வளவு பெரிய குற்றஞ்செய்த இந்தத் துராத்மாவுக்கு என்ன தண்டனைசெய்யலாம்? மலையுச்சியிலிருந்து தலைகீழாக உருட்டலாமா? கையும் காலும் சங்கிலிகளாற்கட்டி நித்திய இருளிற் போடலாமா? இயந்திரத்தில் வைத்துத் திரிக்கலாமா? எது இவனுக்கு ஏற்ற தண்டனையாமென்று அங்குள்ள நியாயாதிபதிகள் ஆலோசித்தார்களாம். அதில் ஒருவர் எழுந்துநின்று, இந்த லோபியினுடைய குற்றத்துக்கு இவ்வெல்லாம் போதா. இவன் மனதுக்கு அதிக வேதனையுண்டுபண்ணத்தக்க கொடிய தண்டனை ஒன்றுண்டு. அஃதென்னவெனில், இந்த லோபியைப் பூலோகத்துக்கு அனுப்பி அங்கே இவன் சேர்த்துவைத்த ஆஸ்திகளையெல்லாம் இவன் பிள்ளைகள் அழிக்கிறதை இவன் கண்ணாரக்காணச் செய்வதேயாம் என்றார்.

இதனால் லோபியின் மனதுக்குத் தன் பொருள் செலவழிக்கிறது போலத் துன்பமான விஷயம் வேறொன்றும் இல்லையென்பது பெறப்படுவதாம்.

## விளைந்த கதிர் - சாவியான கதிர்.

விளைந்த தானியக் கதிர் தன்னில் நிறைந்திருக்கும்; விளைந்த தானிய மணிகளின் பாரத்தினால் தாழ வளைந்துகிடக்-



கும். இவ்வாறே போந்த அறிவுடையவர்கள் தங்களை உயர்த்திக்கொள்ளாமல் எப்பொழுதும் தாழ்மையாகவேயிருப்பார்கள். விளையாத அல்லது சாவியான கதிர்களோ நிமிர்ந்துநின்று, விளைந்த கதிர்களுக்கு மேலாகத் தங்கள் தலைகளை உயர்த்திக்கொண்டு காற்றினால் அங்குமிங்கும் அசைந்து சப்தித்துக்கொண்டிருக்கும். இவ்வாறே அல்ப அறிவையுடையவர்கள் வெற்றோலையைப் போல் சலசலப்பு மிகக்காட்டி இறுமாந்து திரிகின்றார்கள்.

## வைத்தியனும் பணக்காரனும்.

செல்வச் செருக்குள்ள ஒருவர் பேர்ப்போன ஒரு வைத்தியரிடத்தில், “நீர் வைத்தியஞ் செய்துகொண்டு வரும் ஐசுவரியவான்களுக்குள் அநேகருக்கு நீர் கொடுக்கிற மருந்துகளினால் பெரும்பான்மையும் பிரயோஜனமுண்டாகாமல் போவதேன்?” என்றுகேட்டார். அவ்வைத்தியர், “பொதுவாய் எளியவர்களுக்குள்ளும், போஜன முதலியவற்றை மிதமாய்ச் சுகிக்கிறவர்களுக்குள்ளும் என் மருந்துகள் மிகுபயன்படுகின்றன. ஆனால் செல்வச்செருக்குள்ளவர்களுக்கும், மிதமிஞ்சினயோகிகளுக்கும் என் மருந்துகள் அவ்வளவாய்ப் பயன்படுகிறதில்லை. அஃதேனெனில் நான் அவர்களுக்கு விராகன் இடையாய் மருந்துகளைக் கொடுத்தால், அவர்கள் வீசைக் கணக்காகத் தகாத போஜன பானங்களைப் பாசத்துடன் உட்கொள்ளுகிறார்களே” என்றார்.

## பூர்வீகத்திலிருந்த ஆச்சரியமான ஓர் வெண்கலச் சொரூபம்.

மத்தியதரைக்கடலிலுள்ள ரோட்ஸ் என்னும் தீவில் மிக உயரமும் பருமனுமுள்ள ஒரு வெண்கலச் சொரூபம் இருந்தது. அச்சொரூபம் ஜூபிடர் என்னும் தேவனுக்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. அதன் உயரம் நூற்று இருபது அடி; அதன் அவயவங்களெல்லாம் இவ்வுயரத்திற்குச் சரியான பருமனுள்ளவைகளாயிருந்தன. திருஷ்டாந்தமாக, அதன் ஒரு விரல் மாத்திரம் ஒரு பெரிய மனிதனது தேகத்திற்குச் சமானமாயிருந்தது. அச்சொரூபமானது ரோட்ஸ் தீவில் கப்பல்கள் வந்துநிற்கும் கரை துறையில் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் ஒருகால் ஒரு கரையின்பேரிலும், மற்றக்கால் எதிர்த்த கரையின்பேரிலும் நின்றன. இரண்டு கால்களுக்கும் நடுவே கடலில் பெரிய கப்பல்களெல்லாம் தாரா

ளமால் ஓடிக்கொண்டிருந்தன. இச்சொரூபத்தின் நிறை ஏழு லட்சத்து இருபதினுயிரம் இராத்தல். சொரூபத்திற்குள்ளே அடிதுவக்கி உச்சிவரைக்கும் சுற்றிச் சுற்றிக்கொண்டுபோகிற படிகள் வைக்கப்பட்டிருந்தன. அதனுல் ஒருவன் சொரூபத்தின் உட்புறமாகவே அதன் உச்சிமட்டும் ஏறிப்போக ஏதுவிருந்தது. கேர்ஸ் என்னும் நாமமுள்ள ஒரு கல்விமான் இச்சொரூபத்தைப் பன்னிரண்டு வருஷத்தில் செய்து முடித்தான். அது கி-மு. 288 வருஷத்திற்கு முன் ரோட்ஸ தீவில் நிறுத்தப்பட்டு, 66 வருஷம் நின்றது. பின்பு அங்குண்டான ஓர் பூகம்பத்தினுல் அது தள்ளுண்டு கீழே விழுந்து, சரசேனர் அத்தீவைப் பிடித்துக்கொண்ட காலம் வரையில் அந்த ஸ்திதியிலே கிடந்தது. பின்பு அவர்கள் அதை ஒரு யூத ஜாதியானுக்கு விற்றுப்போட, அவன் அதை யுடைத்து அதிலிருந்த வெண்கலத்தை 900 ஒட்டகங்களின் பேரில் ஏற்றிக்கொண்டு போனுன். பூர்வீகத்திலிருந்த ஏழு அதிசயங்களில் இச்சொரூபம் ஒன்று.

## பூர்வீக எகிப்தருடைய வழக்கம்.

பூர்வீகத்திலிருந்த எகிப்திய ஜாதியாருக்குள் பல விநோதமான பழக்கங்கள் வழங்கிவந்தன. அவர்களுள் ஒருவன் இறந்துபோனுல், அவர்கள் முதலாவது ஓரிடத்தில் கூடிவந்து, இறந்துபோனவன் தன் ஜீவகாலத்தில் எப்படி நடந்தவன்? அவன் நல்லவனு? அல்லது கெட்டவனு? என்று தீர்க்கமாய் விசாரணை செய்துத் தீர்மானம்பண்ணுவார்கள். அவன் நல்லவனு யிருந்தவனுனுல் அவனுடைய பிரேதத்தைப் புதைத்துப்போடலாமென்றுவது, அல்லது அதற்குச் சுகந்தவர்க்கங்களிட்டு அதை உலர்த்தி வைத்துக்கொள்ளலா மென்றுவது உத்தரவு கொடுப்பார்கள். ஆனுல் இறந்தவன் பொல்லாதவனென்றுல் அவனுக்குத் தண்டனையாக அவன் சரீரத்தை இழுத்துத் தெருவில் எறிந்துவிடும்படி கட்டளையிடுவார்கள்.

பூர்வீகத்திலிருந்த எகிப்தியருக்குள் ஏறக்குறைய எல்லாரும் முக்கியமாய்த் தங்கள் பெற்றேர்கள் பிள்ளைகள் முதலிய நெருங்கின இனத்தாரின் பிரேதங்களைச் சுகந்தவர்க்கமிட்டு உலர்த்திப் பத்திரமாய் வைத்திருப்பார்கள். அவர்களுள்யாவரேனும் மற்றவர்களிடத்தில் பணம் கடனுக வாங்கும்படி நேரிட்டால், கடனுளியானவன் தான் வாங்கும் கடன் பணத்திற்கு ஈடாகத் தன்னிடத்திலுள்ள உலர்த்தின பிரேதங்களுள் ஒன்றைக் கொடுப்பான். கடன் வாங்கினவன் குறித்த காலத்தில் பணத்தைக் கொடுத்துவிட்டு, தான் ஈடாகவைத்த பிரேதத்தை மீட்டுக்கொள்ளாவிட்டால், அது ஒரு பெரிய இகழ்ச்சியான காரியமென்று அவர்களுக்குள் எண்ணப்பட்டு வந்தது.



## கேடுவோன் கேடு நினைப்பான்.

பிரான்சு தேசத்திலுள்ள ஒரு நகரத்தில் குடியாயிருந்த மாட்டு வியாபாரி ஒருவன் அடுத்த ஊருக்குப்போய் தான் கொண்டுபோன மாடுகளையெல்லாம் விற்றுவிட்டுச் சொந்த ஊருக்குத் திரும்பி வருகையில், இரவானதினுல் வழியிலிருந்த ஒரு சத்திரத்தில் இராத்தங்கும்படி போய்ச் சத்திரத்தானிடத்தில் பணமெடுத்துக்கொடுத்து, போஜனமும் படுக்கிறதற்கு ஒரு அறையும் தனக்குத் தரும்படி திட்டம்பண்ணினுன். பின்னர் மாட்டுவியாபாரி சத்திரத்தானேடு சற்று நேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்து, அச்சம்பாஷணையில் தான் விற்கக் கொண்டுபோன மாடுகளெல்லாம் வெகு சீக்கிரத்தில் விலையாகிப் போய்விட்டனவென்றும், அதனுல் இருநூறுபவுன் தன் கைக்கு வந்ததென்றும் புத்தியீனமாய் வெளியிட்டான். பின்பு சாப்பாடு ஆயத்தமானவுடனே வியாபாரி போசனஞ் செய்துவிட்டுச் சத்திரத்தின் மேல் அறைகளில் ஒன்றில் போய்ப்படுத்து உடனே அயர்ந்து நித்திரையடைந்தான். அர்த்த ஜாமத்தில் அவன் நித்திரையினின்று விழித்துக்கொண்டான்; அங்குத் தனக்கெதிரே திறந்திருந்த ஜன்னலுக்குச்சமீபமாகக் கீழே தோட்டத்தில் சில ஆட்கள் நின்று மெதுவாய்ப் பேசுகிற சப்தத்தைக்கேட்டு, திடீரென்று படுக்கையைவிட்டெழுந்து ஜன்னலுக்குச் சமீபமாய்ப்போய்க் கவனமாய் உற்றுக்கேட்டான். அத்தருணத்தில், "நீங்கள் குழியை ஆழமாய் வெட்டுங்கள், நான் மேலே ஏறிப்போகிறேன். நான் அவனை இச்சன்னலின் வழியாய்க் கீழே தள்ளின க்ஷணத்தில் நீங்கள் அவனை எடுத்துக் குழிக்குட்போட்டு, மண்ணுல் குழியை நன்றுய் மூடிவிடுங்கள்" என்று ஒருவன் பேசின இவ்வார்த்தைகள் வியாபாரியின் காதில்விழ, அவன் மிகவும் திகிலடைந்து நடுநடுங்கித் தனக்கு அச்சமயத்தில் நேரிட்டிருந்த பெரிய அபாயத்தினின்று எப்படித் தப்புகிறதென்று யோசித்து, தான் படுத்திருந்த அறையில்

தடி முதலியன அகப்படுமோவென்று எங்கும் தடவிப் பார்த்தான்; ஓர் மூலையில் வேறொரு நோக்கத்திற்காக வைத்திருந்த ஒரு கோடாலி அவன் கைக்குத் தென்பட்டது. அவன் அதை எடுத்துக்கொண்டு வாசல் கதவிற்குப் பின்னேபோய் சத்தங் காட்டாமல் நின்றுகொண்டான். சற்று நேரத்திற்குள் ஒருவன் மெதுவாக மேலே ஏறிவந்து கதவைத் திறந்து அறைக்குட் பிரவேசித்தான். அவன் உள்ளே இரண்டடி வைக்கு முன் வியாபாரியானவன் கோடாலியை ஓங்கித் திருடன் தலையின்மேல் ஒரு போடு போட்டு அவனைக் கீழே வீழ்த்தினான். உடனே இரண்டாவது விழுந்த அடியோடு திருடன் பிராணன் போய்விட்டது. அப்பால் வியாபாரி யாதொரு சக்கமுங் காட்டாமல் பிரேதத்தை எடுத்து ஜன்னலெட்டி தோட்டத்திற்குள் எறிந்தான். தோட்டத்திற்குள் நின்ற மூன்று பேர்கள் உடனே அப்பிரேதத்தைப் பரபரவென்று இழுத்து, இருட்டானதினால் அது இன்னானுடைய பிரேதமென்று அறியாமல் அதைக் குழிக்குள் தள்ளி மண்ணைப் போட்டு மூடி நன்றாய்க் கெட்டித்துவிட்டார்கள். இவர்கள் இவ்வேலையைச் செய்துகொண்டிருக்கையில் மாட்டு வியாபாரி அரவங் காட்டாமல் அடுத்த கிராமத்திற்குப்போய் விடியுமுன் போலீசுக்காரரை அழைத்துவந்து அம்மூன்று துஷ்டர்களையும் பிடித்துக் கொடுத்தான். பின்பு குழியைத் திறந்தபோது அதற்குள் மாட்டு வியாபாரிக்குப் பதிலாக தங்கள் சொந்த தகப்பன் செத்துக்கிடக்கிறதை அம்மூவர் கண்டு மிகவும் திடுக்கிட்டார்கள். இறந்த திருடன் சத்திரத்தான்; குழியை வெட்டின மூன்று துஷ்டர்களும் அவனுடைய குமாரர்கள்.

## யுத்தம்.

ஐரோப்பாக்கண்டத்தில் நடைபெற்று வரும் யுத்தம் மிகு உக்ரமாகவிருக்கின்றது. மார்ச்சு மாதம் 21ந்தேதி ஜெர்மானியர் பெரும் படைகளைத்திரட்டி வந்து போர்செய்து மிகுதியும் முன்னேறிவிட்டனர்; ஆனால் பாரிசையும், கலேயையும் பிடிக்கச் செய்த முயற்சிகள் பயன்படவில்லை. நேசக்கட்சியார்க்கு அமெரிக்காவிலிருந்து 5 லட்சம் சேனை உதவியாக வந்திருக்கின்றது.


# சக்ரவர்த்தினி.

“கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி”.

VOL - 13 | June & July-1918. | No 11-12.
தொகுதி-13 | ஜூன்-ஜுலைமீ 1918. | பகுதி 11-12.


## நாலடியார் வசனம்.

### 10 - வது ஈகை.

அஃதாவது இல்வாழ்வார் தம்மிடத்து வறுமையால் நொந்து வந்து யாசிப்பவர்க்கு அவர் யாசித்தவற்றை யில்லையென்னாது கொடுத்தலாம். பிறர்மனை நயவாரிடத்தன்றி மற்றவரிடத்து ஈகை நிலைபெறாமையின், அதுபற்றிப் பிறர்மனை நயவாமையின்பின் இது வைக்கப்பட்டது.

ஈகையுடையாரது மறுமைப் பயன் சுவர்க்கப்பேறு மெனல்.

(1) (நமக்கு வேண்டிய வளவாகச் செல்வம்) இல்லாத காலத்திலும் இருக்கும் பொருளளவிற்கேற்ப, (வேண்டிய வளவாகச் செல்வம்) இருந்த காலம்போல, (தம்மிடத்து வந்து யாசிக்கும் ஏழைகட்கு அவர் யாசித்தபொருளை) மிக மகிழ்வுற்றுச் சாந்தமாகக் கொடுத்தலோடு பொருந்திய குணமுடைய மக்களுக்கு அவ்வுலகத்துக் கதவுகள் மூடப்பட்டிராவாம்.

அவ்வுலகமென்றது சுவர்க்கலோகத்தை.

சுவர்க்கலோக வாசிகள் ஈகையுடையாரது
வருகையை யெதிர் நோக்கி, தம்முலகத்துக்
கதவைத் திறந்துவைத்திருப்பாரென்
றிங்குணர்த்தியவாறும்.

(க—து.) செல்வமுள்ளபோதே யல்லாமல் இல்லாதபோதும் தம்மிடத்து வந்து யாசிப்பவர்க்கு அவர் வேண்டியவற்றைத் தம்

சக்திக் கேற்பவில்லை யென்னாது கொடுப்பவர்க்குச் சுவர்க்க லோகத்தின் கதவுகள் மூடப்பட்டிருப்பதில்லை ; அவரிறந்தபின் தவறாது அவ்வுலகத்தை யடைவரென்பதாம்.

நோயும் மூப்பும் மரணமும் வருமென்பதை ஒவ்வொருவரும்
கவனித்துத் தமது செல்வத்தை யேழைகள் முதலாயி
னோர்க்குப் பகுத்தீந் தனுபவிக்க வேண்டுமெனல்.

(2) முன்னரே (உமக்கு) மரண நாளும் வெறுக்கத் தக்க மூப்பும் ஏற்பட்டிருக்கின்றன ; பின்னும் (உமது) பெருமையைக் கெடுக்கும் நோய்களும் உண்டாயிருக்கின்றன, (ஆதலால், நீங்கள்) பொருளுண்டாயிருக்குங் காலத்தில், (அதுபற்றி) வீணே யலையாதே யுங்கள் ; (அதனை) இறுகப்பிடித்திராதேயுங்கள் ; (ஏழைகளுக்கு அப்பொருளின் வரும்படியில் நாலிலொருபங்கைப்) பகுத்துக்கொடுத்து (உறவினர் முதலாயினருடன் உணவினை) உண்ணுங்கள் ; (ஏழைகள் கேட்பனவற்றில் எதையும் இல்லை யென்று) மறையாதிருங்கள்.

இஃதொரு புலவன் இல்வாழ்வாரை நோக்கி வற்புறுத்திக் கூறியதாம்.

முன்னரே என்பது – பிறக்கும்போதே என்பதாம். மூப்பு-கிழத்தனம்.

(க-து.) மரணம் வருவதும் தவறாது ; நோய்வருவதுந் தவறாது ; நீட்டித் திருந்தால் மூப்புவருவதுந் தவறாது ; பொருளை எவர்க்கு முபகாரஞ் செய்யாது போற்றிக் காப்பதால் ஒருபயனு முண்டாகாது என்று துணிந்து, அதனை யேழைகளுக்குத் தக்கவாறீந்து, உறவினர் முதலாயினோருடன் உணவுண்டு வருபவர் இம்மைப் பயனாகிய புகழையும், மறுமைப் பயனாகிய சுவர்க்கத்தையும் அடைவாரென்பதாம்.

உலோபிகள் செயலிவையெனக் கூறல்.

(3) (ஒருவன் தன் செல்வத்தைப் பிறர்க்குக்) கொடுத்துத் தான் அனுபவித்தாலும், (அது) சேருங் காலத்திலேயே (வந்து) சேர்வதாம் ; செல்வம் வந்து சேர்தற்குரிய நல்வினை யொழியுமாயின், உறுதியாகக் கெட்டியாய்ப்பிடித்தாலும் (அச்செல்வம் அவனிடத்து) நிலை பெறுவதில்லையாம். (இவர் அப்பொருளால் பெறும்பயன் யாதோ ?)



(செல்வத்தின் நிலைமை யித்தன்மையதென் றறியாதலோபிகள் வறுமையால்) நடுக்கத்தை யடைந்து தம்மை (அடைக்கலமாக) அடைந்தவரது துன்பத்தை நீக்கா திருக்கின்றனர்.

(க-து) செல்வமானது நல்வினை தன் பயனைத் தரத்தொடங்கியபோது வருகின்றது ; தீவினை தன் பயனைத் தரத் தொடங்கியபோது நீங்குகின்றது ; அது ஏழைகளுக்குக் கொடுத்தலாலும், அனுபவித்தாலும் குறைந்து விடுவதில்லையென்றறியாத லோபிகள், ஏழைகளுக்கு ஒருதவியுஞ் செய்யாது, இம்மைக் குரிய பழியையும் மறுமைக்குரிய பாவத்தையும் அடைகின்றன ரென்பதாம்.

ஈகையில்லாதார் இரவலராகப் பிறப்பாரெனல்.
(இரவலர்-யாசகர்.)

(4) (இல்லறத்தோடு கூடிவாழ்கின்றவரே ! நீங்கள்) மத்தங்காய்ப் புல்லரிசி யளவாகவேனும் (ஏழைகட்கு) உமது வீட்டிலிருந்து கொடுக்கக்கூடிய பொருளை நாடோறும் கொடுத்து, உணவுண்ணுங்கள். கடல்சூழ்ந்த பூமியில் அடுப்பு மூட்டிச் சமைத்துணவுண்ணுதற்குரிய பொருளில்லாதவராய்ப் பிச்சை யெடுத்துண்டலைகின்றவரை, (சாஸ்திரங்களின் முடிவினை யறிந்தவர் இவர் முற்பிறப்பில் தம்பொருளை யேழைகளுக்கு) ஈயாதலோபிகளாவரென்று கூறுவர்.

இஃதொரு பண்டிதன் லோபிகளாயுள்ள
இல்வாழ்வாரை நோக்கிக் கூறியதாம்.

இல்லறத்தார் தமக்குள்ள பொருள் மிகச் சிறியதாக விருப்பினும், அதில் சிலவற்றை யேழைகளுக் கீந்து உதவி செய்ய வேண்டுமென்றிங் குணர்த்தியவாறும்.

(க-து) முற்பிறப்பி லேழைகட் குதவிசெய்யாதவர் பிற்பிறப்பில் இரவலராகி வருத்தம் பலவற்றை யனுபவிப்பரென்பதாம்.

ஈதலினும் இரவாமை சிறந்ததெனல்.

(5) (ஒவ்வொருவரும்) இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் (ஆராய்ந்து) நோக்கி, (ஏழையாயுள்ளவர்களுள் எவனாவது) ஒருவனுக்கு (தமக்குப்) பொருந்திய வழியில் கொடுக்கக்கூடிய பொருள்களைக் கொடுக்கக்கடவர் ; வறுமையால் (துன்பமடைந்து அவ்வாறு) கொடுத்தல் முடியாதாயினும், (தாம் பிறரிடத்துச்

சென்று இரவாதிருத்தல் வேண்டும். அந்த) இரவாமை (அவர்க்கு) ஈதலினும் இரண்டு பங்குப் பயன் தருவதாம்.

இம்மைப்பயன்-புகழ்: மறுமைப் பயன் - சுவர்க்கப்பேறு. இவை ஈதலால் வருவனவாம்.

ஈதலால் வரும் பயனிலும் இரவாமையால்வரும் பயன்சிறந்த தென இங்கு விளக்கியவா றறிக.

(க-து.) ஒவ்வொருவருக்கும் தம்பொருளை யேழைகளுக் கீந்து வாழவேண்டும்; அது முடியாதாயின், தாம் பிறரிடத்துச் சென்று இரவாதிருத்தல் வேண்டும்; அஃதவர்க்கு ஈதலினும் இரண்டு பங்குப் பயன் தருமென்பதாம்.

ஈகையுடையா ரிதனை யொப்பர்; அஃதில்லாதா ரிதனை யொப்பரெனல்.

(6) (உறவினர் நட்பினர் முதலாயினோர்) பலரும் (தம்மை) விரும்பும்படி (அவர்க்கீதலைச் செய்பவராய்) வாழுகின்றவர் ஊர் நடுவில் திண்ணை தன்னைச்சுற்றி யிருக்க தன்னை யடைந்தவர்க்குத் தன் பழமாகிய பயனைத்தருதல் பொருந்திய பனைமரத்திற்கொப் பாவர்; தமது குடித்தனம் (காணி, மனை, அணி, ஆடை பொருள் முதலியவற்றால்) வளப்பமிகுந்துள்ள விடத்தும், (ஏழைகட்குத் தம்பொருளைக்) கொடுத்து அனுபவியாத மாக்கள் சுடுகாட்டி லுள்ள ஆண்பனைமரத்திற் கொப்பாவர். மாக்கள்-மனவுணர்வு (பகுத்தறிவு-விவேகம்) இல்லாதவர்.

(க-து) ஈகை யுடையார் ஊர் நடுவே திண்ணை தன்னைச் சூழ்ந் திருக்கவுள்ள பழம் பொருந்திய பனைமரம் பலர்க்கும் எளிதாக உபயோகமாவதுபோல யாவர்க்கும் உபயோக முடையவராக விருப்பர்; அஃதில்லாதார் செல்வத்தாற் சிறந்து விளங்குங் காலத் திலும், சுடுகாட்டிலுள்ள ஆண்பனைமரம் ஒருவர்க்கும் உபயோக மாகாதிருப்பதுபோல எவர்க்கும் உபயோகமாகாதிருப்ப ரென் பதாம்.

ஈகையுடையாரிலராயின், இரவலரெவ்வா றுய்வாரெனல்.

(7) கயல்மீனின் புலால் நாற்றத்தைப் புன்னை மலரின் வாசனை நீக்கும் கடற்கரையையுடைய அரசனே! தான் பெய்யவேண்டிய காலத்தில் மழை பெய்யாவிட்டாலும், உயர்ந்தோர் தான்செய்யத் தக்க செயல்களைச் செய்யா விட்டாலும், உயிர்கள் பிழைக்கும்



வகை எவ்வாறும்? (ஒருவாற்றானுமில்லையாம்; ஆதலால் இவற்றை நீயாலோசித்து நோக்கக்கடவாய்.) உயர்ந்தோர்-ஈகையுடையார்.

இஃதொரு பண்டிதன் ஓராசனை நோக்கி, நீ ஈதலை யுடைய வனா யிருக்கவேண்டு மென்பது பற்றிக் கூறியதாம்.

(க-து.) பெய்யவேண்டும் காலத்தில் பெய்யும் மழை பிராணி களுக்கு அத்தியாவசியகமாக விருப்பதுபோல, ஈகையுடையார் இரப்பவர்க்கு அத்தியாவசியகமாக இருக்கவேண்டுமென்பதாம்.

கைம்மாறு நோக்கா தீவதே ஈகையாம்; அது நோக்கி யீவது ஈகையன்றாமெனல்.

(8) வளப்பமிக்க கடற்கரையை யுடைய அரசனே! (தம்மை நோக்கி) ஏந்தியகைக்கு இல்லை யென்னாது யாதாயினுமொரு பொருளை (இவர் இன்னாரினியாரென்று) வரையறை செய்யாது (பிரதியுபகாரஞ் செய்தற்குரியவராகாத) தரித்திரர்க்குக் கொடுப் பதே ஆண்மக்களது கடமையாம்; ஒருகாரணம்பற்றிப் பிரதியுப காரஞ் செய்பவர்க்கு (யாதாவதொரு பொருளைக்) கொடுப்பது சிறந்த கடனென்னும் பெயரை யுடையதாம்.

இதுவுமொரு பண்டிதன் ஓராசனை நோக்கிக் கூறியதாம். வரையரை - எல்லை.

(க-து) பிரதியுபகாரத்தை நோக்காதும், இல்லை யென்னாதும் ஏழைகளுக்கு அவர் விரும்பியவற்றைக் கொடுப்பதே ஈகையாம்; பிரதி யுபகாரஞ் செய்பவர்க்குக் கொடுப்பது மீண்டும் வருவதாக விருத்தலின் அது கடன் கொடுப்பதுபோல்வதென்பதாம்.

மனமுவந்து செய்யும் அறம் மிகச் சிறிதாயிருப்பினும் மிகப்பெரிதாக விருத்தியாமெனல்.

(9) (ஒருவர் நாம் இவர்க்கீயும் பொருள்) மிகச் சிறிதாமென்று கருதாதும் (அவரை நோக்கி யென்னிடத்துப் பொருள்) இல்லை யென்று கூறாதும், எப்போதும் (சுவர்க்கப்பேறு முதலிய) பயனைத் தருவதாகிய (ஈதலென்னும்) நல்வினையை (இவரின்னார் இனியா ரென்று கருதாது ஏழைகள்) யாவரிடத்துஞ் செய்யக்கடவர்; (அவ்வாறு செய்தால் அது) கிரமமாக (இல்லறத்தார் வீட்டு) வாயில்தோறும் பிச்சைக்குச் செல்லுகின்ற தவசியினது பிட்சா பாத்திரம்போல, (அப்பயனை) மெல்லப் பூரண மாக்கிவிடும்.

தவசி-தவஞ்செய்பவன். தவஞ் செய்பவர் பெரும்பான்மையும் துறவிகளா யிருப்பரென்பது இங்குணர்தற் பாலதாம்.

(க-து) இல்லறத்தார் நாம் இவர்க்கீயும் பொருள் மிக அற்பமாமென்று கருதாதும், என்னிடத்துப் பொருளொன்றுமில்லையென்று கூறாதும், ஏழைகளுக்கு உபகாரஞ் செய்து வருவாராயின் அஃது அவர்க்குச் சிறந்த பயனைத்தரு மென்பதாம்.

ஒருவர் சான்றோர்க்குத் தம்பொருளை மனமுவந்து
ஈந்தாராயின், அதுபற்றிப் பிறர் கூறுஞ்சொல்
மூவுலகத்தார்க்குங் கேட்குமெனல்.

(10) குறுந் தடியால் அகப்பட்ட நடுவிடத்தை யுடைய பேரிகை யென்னும் வாத்தியத்தின் ஓசையை ஒரு காதவழித் தூரத்திலுள்ளவர்கள் கேட்பார்கள்; மேகம் இடித்துக் கர்ச்சிப்பதை யொரு யோசனைத் தூரத்திலிருப்பவர்கள் கேட்பார்கள்; (ஆனால் ஒருவர் தம் பொருளை மன்முவந்து) சான்றோர்க்குக் கொடுத்தாரென்று (பிறர்) கூறும் சொல்லை (ஒன்றன்மே லொன்றாய்) அடுக்காயுள்ள மூன்றுலகத்தாரும் கேட்பார்கள். (ஆதலால், சான்றோர்க்கு ஈதல் பெரும் பயனைத் தரும்.)

காதம், யோசனை யென்பன ஒரு பொருட்கிளவியாயினும், இங்குச் சிறிது வேற்றுமை யுடையனவாய் நின்றன. சான்றோர்-குணங்கள் பலவற்றால் நிறைந்தவர். இவர் இல்லறத்தராயு மிருப்பர்; துறவறத்தாராயு மிருப்பர். மூவுலகம் - சுவர்க்க மத்திய பாதாளம்.

(க-து) ஒருவர் சான்றோர்க் கீந்தாரென்னுஞ் சொல் எங்கும் பரவுதலால், ஈதல்களுள் இதனினுஞ் சிறந்தது பிறிதொன்றில்லை யென்பதாம்.

# ஞானப்பிரகாசம்.

## முதலங்கம்

### 4-வது காட்சி.

இடம் :—கொலுமண்டபம்.

பாத்ரங்கள்:—புருஷோத்தமன், சித்தசர்மா, ஸுபுத்தி-சேவகன் ஞானப்ரகாசன்.



வகன்:— (ஓடிவந்து) சாமீ! கொயந்தையை அயச்சிகினு அம்மா வண்டே போயிருந்தேன். அம்மா அப்போ பிடிச்சி இன்னேரம் என்னென்னமோ சொன்னுங்கோ. கொயந்தெ ஓரே பிடியா கண்ணாலம் பண்ணிக்கமாட்டேன்னு சொல்லுதுங்கோ. இத்தெ அம்மா ஒங்களண்டே சொல்லச்சொன்னுங்கோ.

ஷோ. அப்படியா! சரி!! சுபத்தீ!!! இனி நடக்க வேண்டிய காரியம் யாது? தண்டனை விதிக்கலாமன்றோ?

த்தி. அருளே உருவெடுத்து வந்த அரசர் பெருமானே! என் வார்த்தைக்குச் சிறிது செவி கொடுக்க வேண்டுகின்றேன். தங்கள் புதல்வன் எவ் விதத்திலும் தண்டனைக் குரியவனல்லன். தங்களிஷ்டத்திற்கு இணங்கி நடக்க வில்லையென்னு மொன்றைத் தவிர அவன் யாதொரு குற்றமும் செய்யவில்லை. பெற்றோர்களின் கட்டளைக்குப் புத்திரன் அடங்கி நடப்பது தருமமேயாயினும் நாம் அவனுக்கு உபதேசிக்கும் தருமத்தை விட அவன் மேலான தருமத்தை யுணர்ந்திருப்பதனால் எவ்விதத்திலும் அவன் தண்டனைக்கு உரியவனல்லன். இந்த ராஜ வம்சத்தை விருத்தி செய்வதற்காகத் தங்கள் புதல்வனை மணஞ் செய்வித்தல் அத்தியாவசியமே யாயினும் அக்காரிய சித்தியின் பொருட்டு தண்டோபாயத்தை உபயோகிப்பது நியாயமன்று. தந்திரத்தினால் சாதித்தல் நலம். இந்திரியங்களைச் செயித்த பாராசர் விசுவாமித்திரர் முதலியவர்களே ஸ்திரீகளின் மோக வலையில் அகப்பட்டு மயங்கினார்க ளென்றால் அச் சிறுவன் எவ்வளவு! நாம் வெறும் வார்த்தைகளால் என்ன போதிக்கினும் அவன் மனம் மாறாது. ஒரு பெண்மணியின் திருஷ்டியாகிய வலையிற் சிக்கும்படி அவனைத் தனியாய் விட்டு விட்டால் அப்பெண் ஒரு நிமிஷத்தில் அவனைத் தன் வசப்படுத்துவாள். இது நிச்சயம். இதைத் தவிற வேறு வழியின்று.

னக்குள்) (சற்றுயோசித்து) சரி! அப்பெண்ணே அவனை மயக்கத்தக்கவள். (பிரகாசமாய்) அரசே! இதைப் பற்றித் தாங்கள் கவலை கொள்ளற்க!! அவனை மணம் புரிவிப்பது என் காரியம்.

புருஷோ. (சந்தோஷத்துடன்) ஆஹா! மந்திரீ!! சுபத்தீ!!! "கோபமே பாவங்களுக் கெலாந் தாய் தந்தை." கோபத்தினாலன்றோ என் அருந்தவப் புதல்வனைத் தண்டிக்கத் தலைப்பட்டேன். அக் கோபமாகிய தீயை யுன் சாந்த வசனங்களாகிய தண்ணீரினால் அணைத்துக் குளிர்ச்சியாகிய சந்தோஷத்தை யுண்டாக்கினாய். மெத்த சந்தோஷம். இனி யெனக்கொரு கவலையுமின்று. நான் இப்போது அந்தப்புரம் சென்று இந்துமுகியைத் தேற்ற வேண்டும். (அரசன் செல்கின்றார்).

(யாவரும் போகின்றார்கள்)

---

## இரண்டாமங்கம்.

### 1-வது காட்சி.

இடம். பாடலீபுரத் தரசனது உத்தியான வனம்.

காலம்-மாலை.

பாத்திரங்கள்: ஸுகுமாரவர்மா - மோகனாங்கி - மனோஹாரிணி- மதுரவாணி.

மோகனா. நாதா! நமது அருந்தவப் புதல்விக்கு விவாகத்திற் குரிய வயதாய் விட்ட தன்றோ. இதைப்பற்றி நாம் கவனித்துத் தக்க ராஜ குமாரனுக்கு மணஞ் செய்வித்தல் அத்தியாவசிய மல்லவா?

ஸுகு. மோகனா! இவ்விஷயத்தைப்பற்றி இப்பொழுதுதான் நானும் நினைத்து உன்னுடன் சொல்லலாமென்று எண்ணினேன். நீயும் அதைப்பற்றியே கூறினாய். எங்கே மனோஹாரிணி! நம்மோடு வந்தாளே!

மோக. நாதா! இங்கேதானே இருந்தாள்? எங்கே போனாள்? (பார்க்கின்றாள்) அதோ விருக்கின்றாளே! சம்பங்கிக் கொடி வீட்டிற்குள் இருக்கட்டும். ஏன் மனோஹாரிணியைக் கேட்டீர்கள்?

ஸுகு. ப்ரியே! அவளுடைய மனோபாவத்தைக் கேட்கவேதான்.

மோக. அப்படியா! ஆனால் சரி. கேழ்க்க வேண்டியதுதானே; நாமும் அங்கேயே செல்வோம்.

(கொடி வீட்டிற்கருகே செல்கின்றார்கள்)



மனோ:—

"காய நீர்க்குமிழி யதினுறு மின்பங்
கானலிற் புனலிது தனக்கிங்
காயவித் துயர மளவிலை யிதைநீ,
யாய்வுறா'மையினழித் தன்றாய்
நீயினிக் கவலை நினைவெலா மொழித்து
நேயமாய் வந்தெனக் குடன்பட்
டாயுநற் சொருபற் கன்பதே யிசைந்தா
லரியுதே தார்நமக் கெதிரே."

ஆஹா! நல்ல செய்யுள் நினைவிற்கு வந்தது. இந்தக் காயம் நீர் மேற் குமிழியேயாம். இதனால் அடையும் சுகம் கானலில் தோன்றும் ஜலம் போல்வதே. ஓ பாழ் மனமே! நீ யேன் இந்த நிலையற்ற வின்பங்களின் இச்சைவைக்கின்றாய்? (தன்னைமறந்து) ஒரு காலும் இச்சியேன்.

மோக. (மெதுவாய்) நாதா! மனோஹாரிணி யேதோ தனக்குத் தானே பேசிக்கொள்ளுகிறாள். சற்று மறைவாய் இந்த மரத்தின் பின்னால் நின்று கேழ்ப் போம் வாருங்கள்.

ஸுகு. என்ன! தனக்குத்தானே பேசிக்கொள்ளுகிறாளா!! ஏன்?

(ஸுகு குமாரனும் மோகனாங்கியும் ஒரு மரத்தின் பின் ஒதுங்கிக் கேழ்க்கின்றார்கள்)

மனோ. இந்த உலகில் யாருக்கு யார் தந்தை? யாருக்கு யார் தாய்! யாருக்கு யார் மகள்! யாருக்கு யார் பர்த்தா? யாருக்கு யார் மனைவி? அவரவர் வினையின் அவரவர் வருவர். ஓ சித்தமே! நீ ஏன் என்னை இங்ஙனம் வாட்டு கின்றாய்? ஒரு ராஜ குமாரனை நான் மணப்பேனே யாகில் அவனுடைய மனம் போல் நடந்து கொள்ள வேண்டும். நாதன் மனம் போல் நடத்தலன்றோ பதிவிரதை களுக்குப் பயந்த வழக்கு. இங்ஙனம் ஒருவனை மணந்து பொய்யான சிற்றின்பங்களை மெய்யெனக் காட்டித் தன்னையும் தான் மணந்த கணவனையும் சம்சார சாகரத்தில் அமிழ்த்து வதைக் காட்டிலும் விவாகமே யில்லாம விருப்பது நலமல்லவா? ஆதலால் ஹே சித்தமே!! நீ ஒருவனை மணக்கும் எண்ணத்தை முற்றும் விட்டு விடுவாய்.

ஸுகு. ப்ரியே! என்ன ஆச்சரியமிது!! நாமொன்று நினைக்கத் தெய்வ மொன்று நினைத்தது போற் காண்கிறதே!!! கவனித்தாயா மனோஹாரிணி கூறிய வார்த்தைகளை?

மோக. ஆச்சரியம்! ஆச்சரியம்!! நாதா நாம் கொண்ட எண்ணத்திற்கு முற்றும் மாறாக விருக்கின்றனவே இவளுடைய வார்த்தைகள். "யார் யாருக்குத் தந்தை? யார் யாருக்குத் தாய்?" என்கிறாளே. இவளுக்கு என்ன இவ்வளவு வெறுப்பு. இன்னும் முளைத்து இரண்டிலை வெடிக்க வில்லையே. இதற்குள்ளே வேதாந்த மென்ன இவளுக்கு? என்ன காலம் இது? இது தான் கலியின் இயற்கையோ?

ஸுகு:—காதலீ! எனக் கொன்றுந் தோற்றவில்லை. இப்போது அவளருகிற் சென்று கேட்டால் தகுந்த விடை தருவாளென்று நான் நினைக்க வில்லை. என்ன செய்யலாம்?

மோக:— அரசே! நாம் அவளருகில் சென்று தான் பார்ப்போமே! என்னதான் சொள்ளுகிறாளோ கேழ்ப்போமே!

ஸுகு:—ஆனால் செல்வோம் வா.

(சுற்றிக் கொண்டு மனோஹா ரிணியின் எதிராக வருகின்றார்கள்)

(மனோஹாரிணி தன்னை நோக்கிவரும் தாய் தந்தையர்களைப் பாராதவள்போல் வேறொரு புறமாய்ப் போகின்றாள்)

ஸுகு:—ப்ரியே! மனோஹாரிணி அந்தப்புரம் செல்லு கிறாளே!

மோக:—மனோஹாரிணீ! மனோஹாரிணீ!! (அழைக்கின்றாள்)

(மனோஹாரிணி திரும்பிப் பார்க்கிறாள்)

மனோ:—ஓஹோ! இந்தப் பக்கம் வந்து விட்டீர்களோ?

(திரும்பிவருகின்றாள்)

மோக:—என் அருந்தவப் புதல்வீ! இன்று உன் முகம் வாட்டமுற்றிருக்கின்றதே!! காரண மென்ன?

மனோ:— அம்மா! என்ன!! என் முகம் வாட்டமாயிருக்கின்றதா? என்ன ஆச்சரியம்!!! கவலை யற்றவர்களுக்கும் முக வாட்டமுண்டாகுமோ?

ஸுகு:—குழந்தாய்! கவலை யற்ற வர்களுக்கு முகவாட்ட முண்டாகுமோ? உற்றவர்களுத்தான் உண்டாகும். என்ன கவலையுனக்கு?



மனோ:—(சிரித்துக்கொண்டு) தந்தையே! இது என்ன வேடிக்கை? என் முகம் வாட்டமா யிருக்கிற தென்று நீங்களே கற்பித்துக்கொண்டு உனக்கு என்ன கவலை யென்று கேழ்க்கிறீர்களே; எனக்கு என்ன கவலை யிருக்கிறது தாங்கள் இருக்கும் வரையில்?

மோக:—நாதா! நமது அருமந்த புத்திரியின் மனக் கவலையை நான் அறிந்தேன். சொல்லட்டுமா?

ஸுகு:—சொல்லுவாய் சீக்கிரம்.

மோக:—எந்த ராஜ குமாரனை மணக்கலா மென்பதே.

மனோ:—அம்மா! தாங்கள் சொல்லுங் காரணத்திற்காக நான் கவலை கொள்ள வேண்டிய தில்லையே! நான் கவலை யற்றிருக்க வேண்டு மென்கிற கவலை யுங்களுடைய தன்றோ?

மோக:—நாதா! பார்த்தீர்களா!! நமது புதல்வி நம்மை ஏசாமல் ஏசுகின்றாள் இதுவரையில் அவளுக்கு விவாகஞ் செய்யாததற்காக.

(மனோஹாரிணியை நோக்கி) மனோஹாரிணீ! நீ கவலையற்றிருப்பதற்கு நாங்கள் தான் கவலைப் படவேண்டும். நாங்கள் அக் கவலையை எடுத்துக் கொள்ளாததினால் நீ கவலை யுற வேண்டியதே.

மனோ:—அம்மா! எனக்கு உண்மையில் ஒரு கவலையுமில்லை; அதனால் முக வாட்டமு மில்லை. ஒருகால் நான் கவலை யுற்றிருக்கிறேனென்று தாங்கள் கூறும் பக்ஷத்தில் அக் கவலை "ஒரு ராஜ குமாரனை மணக்க வேண்டுமே" என்பது தான்.

மோக:—நாதா! யான் முன்னரே கூறவில்லையா விவாக விஷயமான கவலையென்று.

ஸுகு:—ஆம்! ஆம்!! உனக்கு ஜோசியம் தெரியு மென்று எனக்குத் தெரியும்.

மோக:—ஓ என் அருந் தவப் புதல்வீ! மனோஹாரிணீ! நீ எந்த அரச குமாரனை மணக்க விச்சிக்கின்றா யம்மா?

மனோ:—அம்மா! யான் தங்களுக்கு ஒரே புதல்வி யாயிற்றே! என்னை யொரு அரசகுமாரனிடத்தில் அனுப்பிவிட்டு நீங்கள் எப்படித்தனியா யிருப்பீர்கள்? என்னை விட்டுத் தனியா

யிருக்க உங்களுக்கு முடியு மென்றாலும் உங்களைவிட்டிருக்க
எனக்குமுடியாது. ஆதலால் எனக்கு விவாகமே வேண்டாம்

ஸுகு:— என்னருஞ் செல்வப் புதல்வி! என்ன சொன்னாய்!!
உன்னை விட்டு அரை நிமிஷ மாவது இருப்போமா நாங்கள்!!!
உன்னை நீ யிச்சிக்கும் அரச குமாரனுக்கு மணஞ் செய்
வித்து அவனுக்கு இந்த இராஜ்ஜியத்தைப் பட்டாபிஷே
கஞ் செய்விக்க வேண்டு மென்பதல்லவா எங்களுடைய
விருப்பம். எங்களை விட்டுப் பிரிந்திருக்க நேரிடுமே யென்று
விவாகம் வேண்டா மென்கிறாய்?

மனோ:—(தனக்குள்) சரி! சரி!! இவர்க ளோடு எள்ளளவும்
உண்மையை மறைத்துப் பேச முடியாது.

(பிரகாசமாய்) தந்தையே எனக்கு விவாகமே வேண்டாம்.

ஸுகு:— என்ன! விவாகமே வேண்டாமா!! ஏன்?

மனோ:—தந்தையே! தங்க ளிஷ்டத் திற்கு மாறாகப் பேசுவதற்
காக என்னைத் தயவு செய்து மன்னிக்கக் கேட்டுக் கொள்ளு
கிறேன். சில நாளைக்கு முன் "சித் விலாச மென்கிற மாதச்
சஞ்சிகையில் "உலகமும் சிற்றின்பமும்" என்னும் அரிய
விஷயமொன்று பிரசுரிக்கப்பட் டிருந்தது. அதை நான்
வாசித்தேன். அதனால் இந்த உலகம் நீர் மேற் குமிழி
போன்று அநித்திய மென்றும், ஈங் கனுபவிக்கப்படும் சிற்
றின்பங்கள் யாவும் கானலிற்றோன்றும் ஜலம் போல்
பொய்யே என்றும் அறிந்தேன். ஆதலால் பொய்யாகிய
சிற்றின்பங்களை விரும்பி ஓரரச குமாரனை மணக்க யான்
சற்றும் இணங்கேன். தாங்கள் என்னை யோரரசிளங் குமா
ரனை மணக்குமாறு வற்புறுத்து வதனால் எனக்குக் கவலை
யுண்டாகுமே யன்றி மற்றன்று. ஆதலால் அவ்விஷயத்தைத்
தாங்கள் அறவே விடுத்து வேறு எதையாகிலும் பேசுங்கள்.

ஸுகு:—அம்மா! மனோஹாரிணீ!! நீ கூறுவது எனக்கு ஆச்சரி
யத்தையும் கவலையையும் உண்டாக்குகின்றது.

(மோக னாங்கியை நோக்கி) மோகனா! கேட்டாயா நமது
அருந்தவப் புதல் வியின் வார்த்தைகளை? சிற்றின்பங்கள்
கானலில் தோன்றும் நீர் போல் வனவாமே! அது உனக்குத்
தெரியுமா?



மோக:—நாதா! என்ன தாங்கள் வெளுத்த தெல்லாம் பால்
கறுத்த தெல்லாத் தண்ணீரென நினைக்கின்றீர்களே; ஸ்திரீ
களைப் பார்த்து நீ யாரை மணக்க விச்சிக்கின்றாயெனில்
இன்னவனை யிச்சிக்கிறே னென்று சகஜமாய்ச் சொல்லு
வார்களா அவர்கள்? அங்ஙனங் கூறுதல் அவர்களின்
இயற்கைக் குணத்திற்கு மாறன்றோ? (மனோஹாரிணியை
நோக்கி) அம்மா! மனோஹாரிணீ!! தந்தையி னிடத்தில்
நாண மென்ன? ஆனால் என்னிடத்தில் சொல் ரகசிய மாய்.

(ஒரு புறமாய் அழைத்துக்
கொண்டு போகிறாள்.)

மனோ:—அம்மா! யான் ஒருவரையும் மணக்க விச்சியேன்.
எனக்கு விவாகமே வேண்டிய தில்லை யென்று முக்காலுங்
கூறுவேன்.

மோக:—ஐயை யோ! இஃ தென்ன பைத்திய மடீ!! என்
னிடத்திற் சொன்ன மாதிரி மற்ற யாரிடத்திலாவது சொல்
லப் போகின்றாய் விவாகம் செய்து கொள்ள மாட்டே
னென்று. ஸ்திரீகள் மணக்க மாட்டே னென்று சொல்லவே
கூடாதே. இது நம்முடைய மதக் கொள்கைக்கு நேர்
விரோத மாயிற்றே.

(மதுரவாணி வருகின்றாள்)

மதுரவாணி:—(மோகனாங்கியை நோக்கி) நமஸ்கார மம்மணீ!
(அரசனை நோக்கி) அரசே! ஜயமுண் டாவதாக!! மனோ
ஹாரிணியை நோக்கி) மனோஹாரிணி! ஞானாம்பிகையும்
விலாஸமுகியும் அரண்மனையில் உனக்காகக் காத்துக்
கொண்டிருக் கிறார்களே. நீ இங்கு வந்திருப்பது அவர்
களுக்குத் தெரியாதென்று நினைக்கின்றேன்.

மனோ:—ஓஹோ! நான் மறந்தே விட்டேன் விலாஸ முகியை
வரச்சொல்லியதை. (மோக னாங்கியை நோக்கி) அம்மா!
எனக்கு உத்தரவு கொடுங்கள் அரண்மனைக்கேக. விலாஸ
முகி யெனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாளாம்.

மோக:—(ஸுகுமாரனை நோக்கி) நாதா! மனோஹாரிணி அரண்
மனைக்கேக வேண்டு மாம். விலாஸமுகி வந்திருக்கி றாளாம்
அவளைப் பார்க்க. அநுப்பு கிறீர்களா?

ஸாகு:—அப்படியானல் போகட்டுமே! நாம் இன்னுஞ் சற்று நேர மிருந்து போகலாம்.

மோக:—(மனேஹா ரிணியை நோக்கி) அம்மா! நீ போ நாங்கள் சற்று நேர மிருந்து வருகிறோம்.

(மனேஹாரிணி போகின்றுள்).

(வரும்.)

N. சுப்ரமிமணிய அய்யர்.

# நீதி ஸாரம்.

## பெரியாரைத் துணைக்கொளல்.

தர்மத்திலும் சீலத்திலும் வழுவாதிருத்தலும், அறியாமல் நேரிட்ட துன்பங்களைக்கூட உடனே விலக்கிவிடுதலுமான குணங்களை யுடையவர்களே பெரியவர்களென்று சொல்லப்படுவார்கள். இப்படிக் கொத்த நன்னெறி நடையுடையபெரியோர்களை யநுஸரித்து அவர்களைத்துணையாகப் பெற்றுக்கொள்வதே ஒருவனுக்கு முன்னேர்வைத்த பொருளிலும் மேன்மையான பொருளென்று சொல்லப்படும். ஏனெனில் அவர்கள் தங்களை யடுத்தவர்களைச் சீர்படுத்தி நன்மைபெறச்செய்வார்க ளென்பதினுலேதான்.

தானடைந்திருக்குஞ் செல்வத்தைப் பார்க்கிலும் சிறந்த செல்வ மென்னவெனில், அறிவுடைய பெரியோர்களை யடுத்து அவர்கள் சொற்படிகேட்டு நடந்து நற்பயன்களைப் பெறுதலேயாம்.

ஒருவனுக்கு நட்பாளர் பலபெயரிருக்கலாம். ஆனல் அவர்களுக்குள்ளே பெருந்தன்மையும் யோக்யதையுமுள்ள புத்திசாலிகள் இன்னவர்களென்று புத்திகூர்மையால் பகுத்தறிந்து கொண்டு அவர்களைத் தனக்குத் துணையாகப்பெற்று அவர்களைக் கொண்டு தனக்குள்ள கார்யங்களைச் சீர்படுத்திக் கொள்ள வேண்டுமென்று முன்னேர்கள் சொல்லியிருக்கிறபடி நடப்பவனே நட்பினுலுண்டாகும் ப்ரயோஜனங்களை யடைவான்.

பெரியோர்களுடைய ஸஹவாஸம்பெற்று அவர்கள் காட்டிய நல்வழியிற் செல்லும் ஒருவனுக்கு ஒறுதுன்பமு முண்டாகமாட்டாது; ஏனெனில், அப்பெரியோர்களுடைய ஸஹவாஸ மென்னும் அநுக்ரஹமே அவனுக்கு நேருந்துன்பங்களைத் தடுக்க அரணாகவிருக்கு மென்பதினுலேதான்.



குற்றங்கண்ட அப்பொழுதே கோபித்துத் தக்கபடி புத்தி சொல்லித் திருத்துகின்ற பெரியோர்களுடைய துணையைப் பெற்ற ஒருவனைக் கெடுப்பதற்காகப் பகையாளிக ளொருவருமிருக்க மாட்டார்கள். ஒருவேளையிருந்தாலும் அவர்களுடைய யத்னம் முடிவுபெறுது.

உறுதியான நல்வசனங்களைச் சொல்லிச் சீர்திருத்துகின்ற பெரியோர்களைத் துணையாகக் கொள்ளாதவனுக்கு எவ்வளவு பலமிருந்தாலும், பகைவர் ஒருவருமில்லாவிட்டாலும், விவேகமில்லாமையால் அவன் தானே தீயவழியிற் சென்று கேட்டையடைவானென்று சொல்வதற்கு ப்ரமாணத்தைத் தேட வேண்டியதேயில்லை.

வ்யாபாரஞ்செய்ய விரும்பியவனுக்கு முதற்பணமிருக்கவேண்டும். அப்படி முதலில்லாமல் வ்யாபாரஞ்செய்ய விரும்புவது எத்தன்மைய தெனில், ஏரில்லாதவன் உழுதடித்தானென்று சொல்லுங் கதைபோலிருக்கும். இதுபோலவே பெரியோர்களுடைய துணையைவிட்டு வ்யாபாரஞ்செய்ய முயல்வோனுக்கு முதற்பணமிருந்தும் லாபத்தைப் பெறுவதும் ஒருவேளை முதலைக் காப்பதுங்கூட அரிதாகவிருக்கும். ஏனெனில் விவேக முள்ள ஸமர்த்தருடைய துணையில்லாதவனுக்கு கார்யங்களை நடத்துங் கூறுபாடு தெரியாதென்பதினுலேதான்.

பெரியோர்களுடைய துணையைக் கைசோரவிட்டுத் தன் மனதின்படி நடக்க முயல்கின்றவன், பலவிக்கட்டுகளை அனுபவிக்கவேண்டும்; அவனுக்குப் பலபெயர்களுடைய பகையும் நேரிடும்.

ஆதலால், பெரியோர்களைக் கண்டு அவர்களோடுறவாடி அவர்கள் சொற்படிநடத்தல் நன்மைபயக்குமென் றுணர்தல் வேண்டும்.

## அழுக்காறு.

அழுக்காறென்பது ஒருவனுடைய செல்வத்தைக்கண்டு பொருமைப்படுகின்றதுதான். இப்பொறுமை யில்லாதவனிடத்துச் செல்வம் வளர்ந்தேறுமென்றும், யாவரு மவனைத் துதிப்பார்களென்றும் கூறப்படுகின்றது.

பிறருடைய செல்வத்தைக்கண்டு அருவருப்புக்கொள்பவன் எவ்வளவு மேன்மையுடையவனாக விருந்தாலும், அவன் தனக்குள்ள தர்மத்தையும் புகழையு மிழந்து துன்பப்படுவான்.

இஹபரங்களில் துன்பத்தையுண்டாக்கும் பொறாமையென்பது மிகவுங்கேட்டிற்கிடமான துர்க்குணமென்றறிந்த நல்லோர்கள் அக்கொடிய துர்க்குணத்திற் கிடங்கொடார்கள். ஒருவேளை கொடுப்பார்களாயின் அவர்கள்பெற்றிருந்த நன்மைகள் யாவும் அப்பொழுதே அவர்களைவிட்டு நீங்கிப்போய்விடும்.

ஒருவனுக்கு உபகாரமாய்க் கொடுக்கும் த்ரவ்யத்தைக்கண்டு பொறாமைப்படுகின்ற ஒருவன் செல்வமுடையவனாகவிருந்தாலும் அவனச் செல்வத்தை அப்பொழுதே யிழந்து தரித்ரத்தை யடைவதுமல்லாமல் தன்னைச்சார்ந்தவர்களுடைய செல்வத்தையு மிழக்கும்படிசெய்வான்.

ஒருவனிடத்து ஸ்ரீதேவி வாஸஞ்செய்து கொண்டிருப்பாளாயினு மவன் பிறர்செல்வத்தைக் கண்டு பொறாமைப் படுவானாயின் அவனிடத்து வஸித்திருந்த ஸ்ரீதேவி யுடனே விலகிப் போய்விடுவாளாதலால் அவனிடத்தில் மூதேவிவந்து குடிகொள்வாள்.

பொறாமையுடைய ஒருவன் இம்மையில் தனக்குள்ளசெல்வத்தை யிழந்து தரித்ரத்தில் வருந்துவதுமல்லாமல் மறுமையில் மோக்ஷத்தையிழந்து நரகவேதனையில் சிக்கிப் பரதவிப்பான்.

பொறாமையினாலே செல்வத்தையும், பொறாமைப்படாமையினாலே தரித்ரத்தையுமடைந்தவ ரொருவருமில்லையென்று முன்னோருரைத்த வாக்யங்கள் பலவுண்டென்பதை யுணர்ந்துநடப்போர் பொறாமையெனும் பாபத்திற்குட்படார்கள்.

பொறாமையுடைய ஒருவனுக்கு வேறொரு சத்ருவில்லாவிட்டாலும், அவனைக்கெடுப்பதற்கு அப்பொறாமையே சத்ருவாகவிருக்கும். இதற்கொருகதையுண்டு, அஃதெப்படியெனில்:—

ஒருவன் மற்றொருவனுடைய செல்வத்தைப் பார்த்துப் பொறுக்கமாட்டாமல் காட்டிற்சென்று வாஸஞ்செய்துகொண்டிருந்தான். அவ்விடத்தில் ஒருதபோதனர் அவனைப்பார்த்து இரக்கமுற்று ஒருவெண்கலமணியைக் கொடுத்து நீயிதைக் கொண்டுபோய் இதற்குப் பூஜைசெய்து உன்கோரிக்கையைச்



சொல்லி மூன்றுதரம் அடிப்பாயானால் நீ கோரிய பொருள்கள் யாவும் உனக்குண்டாகக்காண்பாய். இப்படிக்கு மூன்றுதரம் உன் கோரிக்கையீடேறும். ஆனால் நீகோரியதற்கு இருமடங்கதிகமாக உன் அண்டைவீட்டுக் காரனுக்கு ஸித்திக்கும். ஆதலால் அதற்காக நீபொறாமைப் படலாகாது என்று உரைத்தார். அவன் அந்த மணியைவாங்கிக்கொண்டு வீட்டிற்குவந்து அண்டைவீட்டுக் காரனுக்கு இருமடங்கதிகமாக ஸித்திக்குமென்பதைமறந்து மணிக்குத் தூபதீபங் கொடுத்துத் தனக்கு க்ரஹபூமிகள் தநதான்யங்கள் ஆடையாபரணங்கள் மிகவு முண்டாக வேண்டுமென்று சொல்லி மூன்றுதரம் மணியடித்தமாத்ரத்தில் யாவும் அப்படியே உண்டாயின. அவனண்டை வீட்டுக்காரனுக்கு மப்படியே அவைகளெல்லாம் இரட்டிப்பு அதிகமாக வுண்டாயின. அதைக்கண்டு பொறுக்கமாட்டாமல் அவன் அயலகத்தானைக் கெடுக்க நினைத்து இரண்டாந்தரம் மணிக்குப் பூஜைசெய்து எனக்கொருகண் குருடாக வேண்டுமென்றும், மூன்றாந்தரம் பூஜைசெய்து என்வீட்டில் பாதிமூழ்க வேண்டுமென்றும், சொல்லிமணியடித்தான். உடனே அயல் வீட்டுக்காரனுக்கு இரண்டுகண்களுங் கேட்டு அவன்வீடு முழுதும் வெள்ளத்தில் அமிழ்ந்துபோயிற்று. இவ்விதமாய் ஊர் முழுதும் நாஶமடைந்தபடியால் சிலதுஷ்டர் கூடி அந்தப் பொறாமைக்காரனையடித்து அவன் பொருள்களைப் பறித்துக்கொண்டு படகின்பேரில் போய்விட்டார்கள். அப்போது அவன்மிகவுங் கூக்குரலிட்டழுதான். ஆனால் அதைக்கேட்டு அவனையாதரிப்பவர்கள் யாருமில்லாமற் போனார்கள். உடனே அவன் என்னுடைய பொறாமையினாலே யல்லலவா எனக்கு இந்த ஆபத்து வந்தது; என் அண்டைவீட்டுக்காரரை நஶிக்கும்படி செய்யாமலிருந்தால் இந்தஸமயத்தில் அவர்கள் உபகாரஞ்செய்வார்களே, என்று வியஸனப்பட்டான்.

ஆதலால், பொறாமையென்னுந் துர்க்குணத்தால் தரித்ரத்தையும் ஆபத்தையு மடையவேண்டு மென்கிற நிச்சயத்தை யறிந்து அதற்கிடங் கொடாமல் நடத்தல்வேண்டும்.

# அகல்யா பதிவிரதா பங்கம்.

## நான்காவது அத்தியாயம்.

## அகல்யையும் இந்திரனும்.

தபோமகிமைபெற்ற கௌதமர் வெளிச்செல்வதைக்கண்ட இந்திரன் பர்ணசாலையில் நுழைந்தான். அவ்விடத்தில் ஓர் அறையில் கௌதமரது பூஜை சாமான்களும், ஹோமகுண்டமும், சமித்துக்களும் தர்ப்பைகளும் காணப்பட்டன.

மற்றோரிடத்தில் மான்தோல்களும், வியாக்கிரசர்மங்களும், சில ஏட்டுப்பிரதிகளும் காணப்பட்டன.

புருஷன் எழுந்து சென்றவுடன் அகல்யாதேவி தானும் எழுந்து தன் கணவன் வருவதற்குள் வீட்டுக்காரியங்கள் யாவும் செய்துமுடித்துத் தயாராயிருக்க ஆரம்பித்தாள்.

வெளியில் சென்ற புருஷன் மறுபடியும் உள்ளேவரக் கண்டாள். அகலிகை திடுக்குற்றாள். என்ன ஆச்சரியம்! புறப்பட்ட கணவன் தன் ஸ்நாநஜபதபங்களை முடித்துக்கொள்வதற்குமுன் திரும்பிவருவது வழக்கமில்லையே! என்று யோசித்தாள்.

பெண்ணே! இன்னும் இருளாயிருக்கின்றது. சுக்கிரோதயமும் காணோம்! ஏன் இவ்வளவு சீக்கிரம் எழுந்துவிட்டாய்! மஞ்சத்தின்மீது உட்காரு! என்மனம் என்னவோ ஒருநாளும் இல்லாத விதமாய்த் தோற்றுகிறது. ஒருநாளும் அகாலத்தில் உதிக்காத விரகதாபம் இப்பொழுது என் மனதை வாட்டுகிறது—சற்று உன்னுடனிருந்து சிறிது வெளிச்சமானபின் குளத்திற்குச்செல்லலாம் என்றிருக்கிறேன்.

அகல்யை நாத! என்னவினோதமான பேச்சுப்பேசுகிறீர். தம்மைப்போன்ற மகானுபாவர் அகாலத்தில் என்னுடன் ரமித்திருக்க எண்ணுவரோ? இது அமலனை அடிவணங்கும் காலமல்லவோ? உமக்குத் தெரியாததல்லவே! என்னைப்போன்ற அபலையோ உமக்கு நீதிபுகட்டுவது? உம்மைப்போன்ற தவசிரேஷ்டர்கள் அகாலச்செய்கைகளைச்செய்ய எண்ணினால் உலகத்தில் எவ்விடத்தில் தர்மதேவதைகள் நிறகக்கூடும்!



என்னே! அங்கனுமணீ! நீ சொல்வதெல்லாம் உண்மையே! என்றாலும் அனங்கனுக்குச் சமயமேது? சற்ஜனரேது? கண்ட கண்டவிடத்தில் தன் சக்தியைக் காண்பிக்க ஆரம்பித்துவிடுகிறான். பெண்மணியே! உன் நுண்ணிடையைக்கட்டி அணைய என்மனந் தீர்மானித்துவிட்டது. எவ்விதமேனும் உன்னை அணைந்தே தீருவேன்! சமயம் வந்தபோது எல்லாம் பின்னால் பார்த்துக்கொள்வோம்; சற்றே என்னிடம் உட்கார். ஒரு முத்தம்தா!

அகல்யைக்குச் சந்தேகம் பிறந்தது. என் கணவன் இப்படிக் கண்டபடி பேசாரே! இத்தனைநாள் வரையில் இத்தகைய பேச்சுக்கள் எல்லாம் பேசியவரல்லவே! ஏதோ சூதிருக்கவேண்டும். என் கற்பைக்கெடுக்க எவனோ ஒருவன் மாறுவேடம் பூண்டு வந்திருப்பதாகத் தோற்றுகிறது. என் பர்த்தாவுக்கு அழியாப்பேரவமானத்தை உண்டாக்க வந்தவன்போல் தோன்றுகிறது; இருக்கட்டும். யார் என்று முதலில் அறிந்துகொள்ளுகிறேன். பின் யோசனைபண்ணித் தகுந்த சிக்ஷை செய்கிறேன் என்று தனக்குள் எண்ணிக்கொண்டாள். பின் வந்த புருடனை நோக்கி என்பதிபோல் தோற்றும் நீர் யார்! உண்மையாகவே என்பதிதாமோ நீர்? அன்றி வேடம்பூண்டு என் கற்பைப் பரீக்ஷிக்க வந்தவரோ? சொல்லும் உண்மையை! நான் பதியே தெய்வம் எனக் கொண்டவள் என்பதை நன்கறிவீர். நீர் ஏதேனும் வஞ்சமாய் உத்தரமளிப்பீராயின் என் பதிவிரதா தர்மத்தின் பலனை யுடனே காண்பீர் என்று தைரியத்துடனும், உக்கிரத்துடனும் உரைத்தாள்.

அகல்யாதேவியின் பதிவிரதாதர்மத்திற்கு ஏற்கனவே பயந்தவனான இந்திரன் நடுங்கினான். உடல் வியர்த்தது; அசுரர்களுடன் கடும்போர்புரியுங் காலத்தும் இவ்விதநடுக்கம் அவனுக்குண்டானதில்லை. சிறிது தயங்கி நின்றான். இன்னதுதான் பதில் அளிப்பது என்பது அவனுக்குத் தோன்றவில்லை. சிறிதுநேரங் கழிந்தபின் தன் புத்தியை ஸ்திரப்படுத்திக்கொண்டு அப்பெண்மணியை நோக்கி நாரீமணீ! மாசற்றகோதையே! நான் பரம ஏழை. என்னைக் காப்பாற்றுகிறேன் என்று வாக்களி! இல்லையேல் உன் காலண்டையே என்உயிரை மாய்த்துக்கொள்ளுவேன்! நான் என்ன பிழை செய்தாலும் அதை மன்னிக்கிறேன் என்று

முதலில் சொல். நீ பிராமணபத்தினி! உன் குணமோ சந்திரனையொக்கும்! அண்டினோரை ஆதரிப்பதே உன்னைப்போன்ற ஸ்திரீகளின் தர்மம் என்று கெஞ்சினான்.

அகல்யை மனது கல்லைப்போல் சிறிதுங்கரையாமலிருந்தது. வந்தவன் கபடியே என்று நிச்சயமாய்த் தெரிந்துவிட்டது. கோபமோ உடம்பைத் தணலாய் எரித்தது. தன்கற்பை அழிக்க வந்த பாபியை நாசம் செய்துவிடுகிறேன் என்றாள். என்றாலும் பெண்கள் மனது சஞ்சலமுற்றதன்றோ? அவன் கெஞ்சுவதைக் கண்டவுடன் கொஞ்சம் மனதிளகிற்று. அவன் மீது கொஞ்சம் இரக்கமுண்டாயிற்று. தன் கோபத்தை அடக்கிக் கொண்டாள். ஓய்! நீர் யார். ஏன் இவ்விடம் என் புருஷனைப்போல் உருவங்கொண்டு என்னிடத்தில் தகாத வார்த்தைகளைச் சொன்னீர்? இவைகளை எனக்குத் தெரிவிப்பீராயின் ஒருவேளை நான் உம்மை மன்னிப்பேன். நான் கேட்டவைகளுக்கு உத்தரம் அளிப்பீராயின் இதோ என் பதிவிரதா தர்மத்தின் மகிமையை உம்மிடத்திற் காண்பித்து, அன்னிய பத்னிகளிடத்தில் ஆசைகொள்ளும் தோஷிகளுக்கு ஓர் உதாரணமாக்குகின்றேன் உம்மை என்றாள்.

இந்திரன் அம்மணி உமது கட்டளைப்படியே முழுதும் என் வரலாற்றைச் சொல்லுகிறேன் தயவுசெய்து கேளும்! என்னைக் காத்து ரக்ஷிப்பது உமதுகடமை! நான் தேவர்களுக்கெல்லாம் அதிபதி. இந்திரலோகவாசி அம்மணி. உமது வனப்பின் பெருமை எல்லாவுலகங்களிலும் பரவி நிற்கின்றது. நான் ஒரு சமயத்தே உம்மை நேரே பார்த்தேன். அது முதற்கொண்டு என்னுயிர் என்னுடலில் தரித்து நிற்கவில்லை. தேவர் சபையும் பிடிக்கவில்லை. மூவுலகும் போற்றும் இந்திராணியும், அப்ஸரஸ்திரீகளும் எனக்கு விஷம்போலாய் விட்டனர். ஊணில்லை உறக்கமில்லை. ஆதலால் பலவாறு ஆலோசித்தேன். பின் ஓர் உபாயத்தைக் கண்டுபிடித்து, அதன்படிசெய்ய உமது புருஷனும், நான் காக்கைபோல் கத்துவதை அறியாமல் குளக்கரைக்குப் போய் விட்டார். இது சமயம் என நினைத்து அவர்போல் வேடங்கொண்டு உம்மண்டை வந்தேன். என்னை ரக்ஷித்தாலும் சரி; அன்றி பக்ஷித்தாலும் சரி, நீரே என்னைக் காப்பாற்றவேண்டும் என்று சொல்லி அகல்யையினது பாதாரவிந்தத்தில் அடியற்ற மரம்போல் விழுந்தான்.



அகல்யை அடே துஷ்டா! வானவர்கோனே! என்ன அடாத காரியம் செய்தாய்? பரஸ்திரீ கமனம் செய்வது பாபம் என்று உனக்குத் தெரியாதா? அதிலும் பரமபாக்கியவந்தரான கௌதமரிஷியின் ஆசிரமத்தில் வசித்துவரும் அவரது தர்மபத்னி அகல்யாதேவியாம். எம்மீது காதல்கொண்டு தகாதவார்த்தைகளை என்னிடத்தில் சொல்லி அத்துடன்நிற்காமல் என்னை ரக்ஷி என்று ஓலமிட்டு என்னடியில் வீழ என்ன தைரியம் உனக்கு? மூவுலகங்களுக்கும் அரசனாயிற்றே! உன்னிடத்தில் மனுநீதி கோணிற்றோ? பிறருக்கு உபதேசிக்கும் நீதி உன்னிடத்தில் மழுங்கிற்றோ! இத்தகாததொழிலை நீயே செய்ய ஆரம்பிப்பாயாயின், உலகத்தார் ஏன் மயங்கார்? அவர்களுக்கெல்லாம் நீயே கற்பித்துக் கொடுப்பது போலாயிற்றே! உன்னை மன்னித்தேன். எழுந்து ஓடிப்போ! கௌதமர் அறிந்தால் உன் தலை நூறுசுக்காய்ப் படீர் என்று வெடித்துப்போம்! அப்பரமபுருஷரின் கோபத்திற்கும் சாபத்திற்கும் பாத்திரமாகாமல் வந்தவழியே திரும்பிப் பாராமல் ஓடிப்போய்விடு என்று கடுகடுத்துச் சொன்னாள்.

அகல்யை தானே சாபம்கொடாமல் புத்திமதி சொல்வதைக் கண்டவுடன் இந்திரனுக்குப்பயம் நீங்கிற்று. அகல்யை தன்னை ஒருபோதும் சபிக்கமாட்டாள் என்று நிச்சயங்கொண்டான். பின் மெதுவாக சரஸமாகப்பேச ஆரம்பித்தான். இந்திரன் நாரீமணீ! இதோ என்னிடத்தேயுள்ள கத்தியை எடுத்து உன் கண்ணெதிரிலேயே வெட்டிவிடு! நான் உன்னுடன் ஒருகணமேனுமிராமல் ஓடிப்போயனுபவிக்கும் சுகம் யாது? உன்னை அனுபவியாமல் உயிர்தரித்து வாழ்வதைக்காட்டிலும் உன்னெதிரிலேயே என்னுயிரை மாய்த்துக்கொள்வது நலம். சற்றுந் தயங்காதே! கொல்! என்னைக்கொல்! என்றான்.

அகல்யா! அடே புத்திகெட்ட பேதாய்! இதுவரைக்கும் உன்னைத் தேவேந்திரன் என்று மரியாதையுடனிருந்தேன். நீ உயிருடனிருக்க வேண்டுமாயின், தேவேந்திரப் பதவியிலிருக்க வேண்டுமாயின், உன் கீர்த்தி நிலைத்திருக்க வேண்டுமாயின், அழியா நரகத்திற்கு ஆளாகாமலிருக்கவேண்டுமாயின், கண்டோர் கைகொட்டி நகையாமலிருக்கவேண்டுமாயின், ஓடிப்போ! இப்பர்ணசாலைபண்டைக் காலெடுத்து வைக்காதே! கண்ணெடுத்

தும் பார்க்காதே! இவ்விடம் நிற்காதே! கௌதமர் வந்துவிடுவார்-! விரைவினில் செல்.

இந்திரன்:—அங்கனாமணீ ! என்னைக் காலன் வந்து கொண்டு போயினும், இவ்விடத்தைவிட்டுப் போகேன். உன்னுடைய தேகஸ்பரிசம் படாமல் இதைவிட்டு நகரமாட்டேன். உன்னடைக்கலம். நீயே கொன்றுவிடு ! உன் அழகிய வதனத்தைப் பார்த்தமாதிரியே இறந்துவிடுகிறேன்.

அகல்யாதேவியினது மனது இளகிற்று. பண்டைய வினையின் பயனை அனுபவிக்க வேண்டுமல்லவோ ? இதுவுங் காலத்தின் மகிமை ! தன் பதியே தெய்வம் எனவும், தன் புருஷனைவிட மேலான மனிதன் உலகத்திற்கிடையாதெனவும், தன் புருஷனே உருவத்தில் மன்மதனெனவும், தபசில் உயர்ந்தவன் எனவும், கீர்த்தியில் இணையற்றவன் எனவும் எண்ணி ஸ்திரீ தர்மம் வழுவாது இல்லறம் நடாத்திவந்த கௌதம பத்னியின் மனம் சிறிது மயங்கிற்று.

யுத்தத்தில் இணையற்ற தளகர்த்தன் தன் படையும் எதிரியின் படையும் கைகலந்து போர்புரியும்சமயத்தில் எதிரிப்படை களைப்படைந்து சிறிது மனங்கலங்கித் தத்தளிக்கும் சமயத்தே, குளத்தில் மீனைப்பிடித்துத் தின்னக் கரைமீது அசையாமல் உட்கார்ந்திருந்து காக்கும் கொக்கைப்போல், காத்திருந்து அச்சமயம் வந்தவுடன் தன்னிடத்தே வைத்துள்ள படையைத் திடீரென அலமலர்ந்திருக்கும் எதிரிப்படையின்மீதுஏவி யுத்தத்தில்வெற்றி பெறுவது வழக்கம். அவ்வீரன் செய்யவேண்டியதெல்லாம் கிடைத்த தருணத்தை நழுவவிடாமல் காத்துத் தன் படையை ஏவவேண்டியதே அன்றி வேறல்ல.

நியாய சபையில் வாதாடும் இரண்டு கக்ஷி வக்கீல்களும் தம் தம்எதிரிப்பக்கத்துச் சாக்ஷிகளையும், வாக்கு மூலங்களையும்சின்னபின்னப்படுத்தி, தமது வாக்சாதுரியத்தால் நியாயாதிபதியையும், எதிர்க்கக்ஷி வக்கீல்களையும் தலையெடுக்கவொட்டாமல் மயக்கி, அம்மயக்கிய சமயம்பார்த்து, இடிபோல் இடித்துக் கர்ஜித்து முன் பின் பாராமல் தமது வாதங்களையே மேற்படுத்தி, ஜயம்பெறுவது சகஜம். அவ்வாறே பரஸ்திரீகமனம் செய்பவர்கள் ஸ்திரீகளிருக்குமிடம் சென்று, தம் வாக்சாதுரியத்தையும், தாம் மகா



மேதாவிகள் என்பதையும், மனோகர சிந்தையுள்ளவர்கள் என்பதையும், மகா உத்தமர்கள் என்பதையும் தம் செய்கைகளாலும் வார்த்தைகளாலும் பசப்பி தம்மை அடிக்கடி நோக்கும் ஸ்திரீகளை ஜாடையில் அறிந்தும், தாம் பேசும்போதும் நடக்கும்போதும் எந்த ஸ்திரீ கவனிக்கிறாள் என்றும், கடக்கண்பார்வையும், மந்தகாசமும் எந்தப் பெண்ணிடமிருந்து உதயமாகின்றன என்பதையும், மெதுவாய்க் கவனித்து, அப்பெண்ணினிடம் மெதுவாய்ப் பேசுவதற்கு ஏற்ற உபாயங்களைத் தாங்களே யேற்படுத்தி அவர்களை மயக்கித் தம்.வசமாக்கிக் கொள்கின்றனர். இத்தகையோர் முதலிலேயே தம் ஜபம் எவ்விடம் பலிக்கும் என்பதை அறிந்துதான் பின் பூரண உச்சாடனம் செய்வார்கள். இவர்களது ஜபம் எல்லாரிடத்திலும் செல்லாது—இப்பரிசுத்த வீரர்களின் யுத்த உபாயங்களும், கவனங்களும், போர்க்களத்தில் காயம்பட்டுக் கீர்த்திபெற்ற தளகர்த்தர்களின் உபாயங்கள்போலும், கவனம்போலும் மயங்கியவிடத்தைக் கண்டு பிடிப்பதிலேயே இருக்கும் !

அகலிகை மயங்கினாள் என்பதை இந்திரன் அறிந்தான். தன் சாமர்த்தியத்தைக் காண்பிக்க வேண்டிய சமயம் வந்தது என்று கண்டுகொண்ட இந்திரன் சிறிதும் தாமதிக்காமல் அப்பெண்மணி நிற்குமிடத்திற்குச் சரேலெனச் சென்று, அவளது இருகரங்களையும் பிடித்துக் கண்மணீ ! ஏன் தயங்குகிறாய் ! நான் தேவேந்திரன் அல்லவோ ! உனக்கிஷ்டமானவைகள் யாவையும் குறைவறச் செய்யும் சக்தி என்னிடத்திலில்லையோ ! ஏன் பயப்படுகிறாய் ? மூவுலகங்களும் எதிர்த்துவந்தாலும் நான் வெற்றி பெறுவேன் ! மகரிஷிகளும், கந்தர்வர்களும் என் சபையை நாடி வர உனக்கென்ன பயம் ? என்று சொல்லி அவளது கன்னங்களிலும், நெற்றியிலும் அடிக்கடி முத்தமிட்டான்.

காமப்பித்துக்கொண்ட கமலவதனிகளுக்கு ஆடவர் ஸ்பரிசமே விஷம்போலாகும்! அதனினும் காமத்தீகொண்ட ஆடவர்கள் அடிக்கடி முத்தமிட ஆரம்பித்தாலோ, அவர்களுக்கு இன்னது செய்வதென தெரியாமல், விஷந்தீண்டிய மனிதர்போல காமப்பித்துத் தலைக்கேறி, மயங்கி ஆடவர் மடிகளின்மீது சரணம் புகுவர். ஸ்திரீகளின் குணங்களை அறிந்த ஆடவன் அத்துடன் நில்லாமல்

வாரி அணைத்து, கட்டியமுதே! எட்டாத் திரவியமே! என் இன்பக் கடலே! ஆருயிர்த் துணைவியே! உன்னைவிட்டு உயிர்தரியேன்! என முகமன்பேசி மற்றொரு முத்தங் கொடுத்துவிட்டானோ அத்தருணத்தில் அப்பெண்மணி அவன் வயப்பட்டு இட்ட கட்டளையைப் பொட்டெனச்செய்யச் சித்தமா யிருப்பாள். இவை நாரீமணிகளின் இயல்பு. சமயத்தை நழுவவிட்டாளோ பின் அவர்கள் மனம் இளகாது; கல்லையும் கரைக்கலாம் என்றாலும் அவரது மனத்தைக் கரைக்க இயலாது.

அகலிகை மனம் இந்திரன் வயப்பட்டது. காமவிஷந் தலைக்கேறியதும் உடனே இந்திரனது இரண்டு புஜங்களுக்கிடையே விளங்கி நின்றாள். தலைகுனிந்தாள். மல்லிகைக் கொடிபோல் துவண்டு, இடைக்கண் பார்வையால் இந்திரனைப் பார்த்தாள். அவளது கண்களினின்று கிளம்பிய கிருபா வெளிச்சமானது இந்திரனது மனதை ஊடுருவிச் சென்றது.

அவளது இடைக்கண் பார்வைக்குத் தாளாமல் வருந்தி அவளது வன்மையைச் சிறிது குலைக்குமாறு உடனே ஒரு முத்தங் கொடுத்தான். அகலிகையும் பிணையுண்ட மான்போல் மருள விழித்து மன்மதன் வயப்பட்டு மயங்கி, வலையில் அகப்பட்ட கிளிபோல் நாவெழாமல் நாணி நின்றாள். பின்னிருவரும் ஒரு மஞ்சத்தின்மீ துட்கார்ந்தனர்.

இந்திரன்:—"வனிதாமணியே! நான் முதல் முதலில் உன் பத்ம முகத்தைப் பார்க்கவந்து உன்னுடன் அன்புடன் பேசுங்கால் வாயில் வந்தவாறெல்லாம் என்னைப் பேசினையே! அவ்வாய்க்கு, நறுமணங்கமழும் உன் செவ்வாய்க்கு, ஒரு தண்டனை விதித்திருக்கிறேன். மறுதளியாதே! இதோ பெற்றுக்கொள்!" என்று ஒரு முத்தங்கொடுத்தான்.

அகலிகை:—என் கோமாளிங்கா! உமக்கு நான் பணிவனோ? என்னகமன்றோ இது! எனது காவலில் அல்லவோ இருக்கின்றீர்! வந்தவுடன் உண்மையைச் சொல்லாமல் மறைத்த கடுங்குற்றத்திற்கு ஏற்ற தண்டனை இதோ விதிக்கிறேன்! மன்மத ஸ்மிருதியில் வரைந்துள்ள பிரயோகங்கள் ஐந்தில் ஒன்றாகிய நவமல்லிகா பிரயோகத்திற்கொப்பான என் முத்தத்தைத் தாக்ஷிண்யமின்றி உமது கபோலங்களில் பிரயோகிக்கிறேன். அவைகளும் உம்மை நல்வழிப் படுத்தாவிட்டால் இதோ பாரும் எனது இருகைகளையும் பசிய கரும்புகளாகிய வில்லில் என் அன்பு என்னும் அம்பை ஸந்தானம்செய்து மோகவலை எனும் சிறைச்சாலையில் அடைத்து அதரபானமாகிய சிறைச்சோற்றை வேண்டுமட்டு மளித்து உமது மோகமாகிய வன்மையை அரைக்ஷணத்தில் குறைக்கிறேன் என்று சொல்லி இந்திரனது கழுத்தில் தன்னிருகரங்களையும் போட்டுக் கட்டிக்கொண்டு அவனது கபோலங்களில் இரண்டு முத்தமளித்தாள்.



இந்திரன்:—நாயகி! நான் அனேக நாளாய்த் தேவேந்திர போகம் அனுபவிக்கிறேன். கணக்கற்ற ஸ்திரீகளுடன் ஏகாந்தமாயிருந்திருக்கிறேன். மூவுலகங்களும் கொண்டாடும் அப்சரஸ்திரீகளுடன் அடையவேண்டிய போகங்கள் அனைத்தும் அனுபவித்துள்ளேன்! என்றாலும் கோதையர் திலகமே! உன்னுடன் இப்போது அனுபவிக்கும் இன்பத்திற்கு அவைகள் கிஞ்சிற்றேனும் ஈடாகா. நான் இவ்வளவு நாள் செய்த தவத்தின் பயனே என் சுதினமே ஒருருவாய் வந்தது—உன்னுடன் எந்நாளுமிருந்தனுபவிக்கும் அக்கௌதமனின் தவப்பயனே பயன்! நீ ஒருத்தி என்னிடம் எப்போதும் இணைபிரியா திருப்பையேயாயின் நான் தேவேந்திர போகங்களையும் விட்டு இக்குடிசையிலேயே யிருந்து விடுவேன். அனேக அஸ்வமேதயாகங்கள் செய்து இந்திரபதவி யடைய வேண்டும்! வாரணி மார்பினளே! அங்ஙனம் அனேக இந்திரபதவி யடைந்தாலும் அடையலாம் என்றாலும் உன்னுடன் ஏகாந்தமாயிருக்க இயலுமோ?

சுப்ரமணிய அய்யர், கடக்..

# பக்தி.

## 15-வது-உண்மைப் பக்தனுக்கு உயர்ந்த அறிவும் மேலான அன்புமொன்றேதான்.

உபநிஷத்துக்களில் வித்யை (கல்வி) யானது பரமென்றும், அபரமென்று இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பரவித்யையும், பரபக்தியும் ஒன்றற்கொன்று பக்தனுக்கு யாதொரு வேற்றுமையு மில்லை. முண்டகோபநிஷத்தில் பின்

வருமாறு கூறப்படுகின்றது:—(த்வே வித்யே வேதிதவ்யே இதி ஹஸ்மயத் ப்ரம்ம விதோ வதந்தி பராசைவா பராச தத்ராபரா ருக்வேதோ யஜுர்வேத: ஸாமவேதோ தர்வ வேத: சிக்ஷா டாகரணம் நிருக்தம் ச்சந்தோ ஜ்யோதிஷமிதி. அத பரா யயா ததக்ஷரமதி கம்யதே.) (பொருள்)—"பர, அபர என் இரண்டு வித்யைகள் தாம் அறியப்பட வேண்டியனவா யுள்ளன என்று அறிஞர்கள் கூறுகின்றனர். "ரிக்", "யஜுஸ்", "ஸாமம்", "அதர்வம்" என்ற நான்கு வேதங்கள் சிக்ஷா, * கல்பம், † ஜ்யோதிஷம், ச்சந்தஸ், ‡ வ்யாகரணம், நிருக்தம் § என்றிவை (சாஸ்த்ரங்)களெல்லாம் அபர வித்யையி லுட்பட்டிருக்கின்றன; யாதொன்றைக் கொண்டு அந்த அழிவற்றவரும், உலகத்திற்கு மூலகாரணமானவருமாகிய கடவுள் அறியப்படுகின்றாரோ அது பரவித்யை யாகும். பரவித்யை யென்பது ப்ரஹ்ம ஞானமே யாகும் என்பது மேற்காட்டிய ச்ருதிவாக்யத்தைக் கொண்டே நன்கு விளங்குகின்றது. பேரன்பென்ப தின்னதெனத் தேவீ பாகவதத்தில் நன்கு விளக்கப்பட்டுள்ளது; அந்தப் பாகத்தைக்கீழே சேர்த்திருக்கின்றேன்:—"ஒருபாத்ரத்திலிருந்து மற்றொருபாத்ரத்தி லூற்றும் பொழுது எண்ணெயானது எப்படி அதன் ஒழுக்கு துண்டிக்கப்படாமல் ஓரே தாரையாக விழுகின்றதோ, அவ்வாறே, உள்ளத்தினால் இடையறாது கடவுளைக் கருதும் பொழுதுண்டாகின்ற நிலைமை தான் 'பரபக்தி' (மேலான அன்பு, அல்லது மெய்க்காதல்) எனப்படும். மிகுந்த பேரன்புடன்கூடக் கடவுளிடத்து அசைவின்றியும் இடையறாதுமுள்ள உறுதியான உள்ளத்தின் ஒற்றுமையைத்தான் "கடவுளிடத்துள்ள மெய்க் காதல்" என்று கூறப்படுகின்றது; அதுவேதான் மேலான அன்புமாகும்; மற்றுள்ள பக்திகள் எல்லாம் பேரன்பை யடைவதற்கு உதவியாக மட்டுமிருக்கின்றன. இத்தகைய முதன்மையான அன்பை யடைந்துள்ளவர் பிறகு எப்பொழுதும், கடவுள் நினைப்பையன்றி மற்றொன்றையு (ங்கனவிலு)ங் கருதுவதில்லை; கடவுள் நினைவையன்றி மற்ற எண்ணங்கட்கு அவன் தனது உள்

* வேதத்திலுள்ள ஸ்வரவர்ணங்களை யளவுபடுத்திக் கூறும் நூல். † பயனடைவதற்காகப் பலவாறான உபாஸனை முறைகளை விளக்குகின்ற நூல். ‡ வேதத்திலுள்ள ரிக் பதங்களுடைய லக்ஷணத்தை விளக்கும் நூல். § வேதத்தில் வழங்கியுள்ள எல்லாச் சொற்களின் பொருளையும், பயனையும் நிச்சயப்படுத்திக் கூறும் நூல்.



ளத்தி லிடங் கொடுப்பதில்லை; அதனால் அவன் மிகத் தூய உள்ளத்தனாய் விடுகின்றான். அதனாலேயே அவன் உள்ளத்தினாலும், மொழியினாலும், உடலினாலுமுள்ள எல்லாவிதப் பற்றுகளினின்றும் விடுபட்டு அழிவற்ற பேரின்ப மெய்துபவனாகின்றான். அப்படியுள்ளவர்களுக்கு மட்டுமே கடவுளைத் தனது உள்ளத்திலேயே இருத்திப்போற்றி வழிபட வியலும்; அவனுக்கு, விக்ரஹங்களும், அடையாளங்(களும், குறிகளும் சைகை) களும், நூல்களும், கொள்கைகளும், மற்றுமுள்ளவைகளெல்லாம் பயனற்றவைகளாய்த் தீர்ந்து விடுகின்றன. அவனுக்குக் கடவுளைப் போற்றவேண்டி அவைகள் உதவியா யிருப்பதில்லை. இவ்வாறு கடவுளைப் போற்றுவதென்பது அவ்வளவு எளிதல்ல; அன்பு திரும்பவுந் தனக்குக் கிடைக்க வேண்டுமென்ற விருப்பத்தோடு கூடித் தான் மனிதர் ஸாதாரணமாய் ஒருவர்க் கொருவர் நேசிப்பது; நம்மால் நேசிக்கப்பட்டவர் நம்மை நேசிக்கவில்லையெனில் உடனே வெறுப்பானது இயல்பாகவே வந்து சேர்கின்றது. ஆனால் சில விடங்களில் கைம்மாறு விரும்பாது நேசிப்பவரை மிக அரிதாய் நாமே கண்டிக்கின்றோம்; இந்த அன்பை 'விட்டிற் பூச்சி' முதலிய உயிர்கட்குத் தீயின் கொழுந்தி (ஜ்வாலையி) லுள்ள அன்போடு உவமிக்கலாம்; அந்தப்பூச்சி தீயை நேசிக்கின்றது; தீயில் விழுகின்றது; இறந்தும் போய் விடுகின்றது. உயிர்களது இத்தகைய நட்பு இயற்கையாயுள்ளதாகும். நேசித்தலென்பது நேசத்தி னியல்பாகுமென்ற நிலையில் நேசித்தல் உலகத்தில் மிகவு முயர்ந்ததாயுந், தன்னல மற்றதாயும் உள்ள நேசமாகும். இத்தகைய நேசத்தைக் கடவுள் பொருட்டாகக் கைகொண்டால் நாம் கட்டாயம் பேரன்பை யடைந்து விடுவோம்.

## 16-வது நட்பாகின்ற முக்கோணம்.

உண்மையான நட்பை ஒரு முக்கோணமாகச் செய்துகொள்வோம். அதிலுள்ள ஒவ்வொரு முனையும், மற்ற இரண்டு முனைகளினின்றும் வேறுபடாதிருக்கின்றது. மூன்று முனைகளின்றி ஒரு முக்கோண முண்டாக்க முடியாது; அதுபோலவே கீழ்க் காட்டியுள்ள லக்ஷணங்களின்றி நட்புண்டாவதில்லை. நட்பை விற்கவோ, (ஓர் அற்பப் பொருளைப்போல) விலைகொடுத்து வாங்கவோ முடியாதென்பதே-நட்பாகின்ற-முக்கோணத்தின் முதல

வது முனை. ஏதாவது திரும்பவும் பெறவேண்டுமென்ற விருப்பம் எங்குண்டோ அங்கு உண்மையான நட்பு உண்டாவதில்லை. அது முற்றிலும் கடைத்தெருவில் பண்டமாற்றுச் செய்துவருவதைப் போல மட்டுமேயாய்த் தீர்ந்து விடுகின்றது. கடவுளைப்போற்றி வழிபடும்பொழுது நமக்கு இன்னின்னவை, கைகூடவேண்டுமென்றும், பயனை யடையவேண்டுமென்றுமுள்ள கருத்து நம்மிடம் எதுவரையில் இருக்கின்றதோ அதுவரையில் நட்பு உண்மையாக நம்மிடந் தோன்றுவதில்லை; ஏனெனில், பயனை விரும்பிக் கடவுளைப் போற்றுபவர்க்குத் தாம் நினைத்த பயனை யடையாவிடில், பிறகு அவர்கள் கடவுளைப் போற்ற மாட்டார்(தூற்றுவார்)கள் என்பதி லையமில்லை. கடவுள் அன்பு வடிவானவர் என்ற கருத்தோடு மட்டுமே, தொண்டர் கடவுளைப் போற்றுகின்றனர்; மெய்த்தொண்டரது உள்ளத்தில் மிக உயர்ந்ததான இந்த எண்ணத்தைத் தூண்டுவதற்கு, வேறு யாதொரு கருத்து மில்லை. இதற்கு உதாரணமாக ஒருகதை கூறுவோம்:— "ஓர் அரசன் காட்டிற் சென்றுகொண் டிருக்கும்பொழுது அங்கே ஒரு ரிஷியைக் கண்டான். அவரிடத்தில் அரசன் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்ததில், அரசனுக்கு அப்பெரியாரது அறிவையும், தூய்மையையும் நோக்கியதால் மிகுந்த மகிழ்ச்சி யுண்டாயிற்று. அப்பொழுது அரசன் அந்த ரிஷிக்குத் தான் நன்கொடை யளிக்க விரும்புவதாகவும், அதனை யவர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுந் தனது விருப்பத்தை யவரிடந் தெரிவித்தான். ஆனால் அந்த விருப்பத்தை அப்பெரியார் ஏற்றுக்கொள்ளவில்லை; அவர் கூறியதாவது:—"ஓ அரசனே! இக்காட்டிலுள்ள பழங்களும், கிழங்குகளுமே எனக்குப் போதிய உணவாகும்; மலைகளினின்று வழிந்தோடிவருகின்ற அருவிகளிலும், ஆறுகளிலுமுள்ள தூய தண்ணீரே யான் குடிக்கப் போதியதாயுள்ளது; உடுப்பதற்கு வேண்டிய மரவுரி கிடைக்கின்றது; எனக்குப் போதிய உறைவிடம், மலைகளிலுள்ள குகைகளே. (இவ்வாறு யாதொரு குறையுமற்ற எனக்கு) எதன்பொருட்டு யான் உன்னிடத்தினின்றோ, அல்லது வேறொருவரிடத்திலிருந்தோ நன்கொடையை ஏற்றுக்கொள்ள வேண்டும்?" என்று கூறியதும், அரசன் "ஓ அறிஞரே! எனக்கருள் பொழியவேண்டியேனுந் தாங்கள் யானளிப்பதை ஏற்றுக்கொள்ளமாறு வேண்டுகின்றேன். ஆதலால், எனது நாட்டில் யானிருக்கும் ஊருக்குத் தாங்கள் என்னு



டன்கூட எழுந்தருளும்படியாயும் வேண்டுகின்றேன்" என்று மறுபடியும் பன்முறை அரசன் மன்றாடிக் கேட்டுக்கொண்டதன் பேரில் அப்பெரியோர் அரசனது விருப்பப்படி [illegible] ஒப்புக்கொண்டு அரசனுடன் அரண்மனை போய்ச் சேர்ந்தனர். அப்பெரியோருக்குத் தான் குறித்துள்ள கொடையை யளிப்பதற்கு முன்னர் அரசன்:—"ஓ கடவுளே! எனக்கு (இன்னும்) மக்கட்பேறு உண்டாதல் வேண்டும்; செல்வம் மிகுதியும் வளரவேண்டும்; இன்னும் பல நாடுகளெனக்குச் சேரவேண்டும்; எனது உடலில் எவ்வித நோய் நொடிகளு மணுகா திருத்தல் வேண்டும்" என்றும், மற்றும் பலவாறாக வேண்டத் தொடங்கினான். அரசனது வேண்டுகோள் முடிவு பெறுவதற்கு முன்னரே, அந் நல்லோர் திடீரென எழுந்து (மறைந்து) போய் விட்டார். அது கண்ட அரசன் மனங்கலங்கி அவரைத்தேடிப் பின்தொடர்ந்து சென்று "ஓ பெரியவரே! யானளிக்க விருந்த கொடையை ஏற்றுக்கொள்ளாது ஏன் திரும்பிப் போகிறீர்கள்"? என்று கேட்டான். அப்பொழுது அந்த ரிஷி திரும்பி நின்று அரசனைப் பார்த்து "அடே, பிச்சைக்கார! யான் பிச்சைக்காரனிடத்தில் ஒன்றையும் ஏற்பதில்லை. நீயே ஒரு (பெரிய யாசகன்; அப்படியிருக்க, நீ எனக்கென்ன கொடுக்க முடியும்? உன்னைப்போன்ற பிச்சைக்காரனிடத்துத் தானம் வாங்கும் வண்ணம் (தை) குற்றமுடையவனல்ல யான்! விலகிப்போ! என்னைப் பின்தொடர்ந்து வராதே" என்று கூறிச் சென்று விட்டார். உண்மை யன்பர்கட்கும், கேவலம் யாசகர்கட்குமுள்ள வேற்றுமை இந்தக்கதையினால் நன்கு விளங்கும். ஏதாவது ஒருபயனை வேண்டி—பேரின்ப வீடென்னும் மோக்ஷத்தைக் கருதிக் கூடக் கடவுளை வழிபடுவதும், இழிவான செய்கையாகும். நட்பிற்குக் கைம்மாறுவேண்டியதில்லை. நட்பு எப்பொழுதும் நட்பின் பொருட்டே யாகும். பக்தன் நேசிக்கின்றான்; ஏனெனில் பக்தனுக்கு நேசிக்காதிருக்க முடியாது. நீங்கள் சிலபொழுது மிக இனிமையான ஒவ்வோரிடங்களைக் காண்கின்றீர்கள்; அதனை நீங்கள் மிகவும் நேசிக்கின்றீர்கள். அதனிடத்து நீங்கள் யாதொரு கைம்மாறும் விரும்பவில்லை; அந்த அழகிய இடங்களும் உங்களிடமிருந்து யாதொன்றையும் வேண்டவில்லை; எனினும் அந்தக் காட்சி உங்களது உள்ளத்தில் மகிழ்ச்சியை யுண்டாக்குகின்றது. உங்களுக்குள்ள அப்பொழுதைய மனத்துன்பங்களெல்லாம், பிறகு

அற்றுப்போய் விடுகின்றன; உங்களை யமைதியாயுள்ளவர்களாக்கித் தீர்த்துவிடுகின்றது; அப்பொழுது லௌகிகமாயிருக்கின்ற இன்பங்களை வியக்கத்தக்கதான பேரின்பத்தை நீங்கள் அடைந்தும் விடுகின்றீர்கள். பேரன்பினுடைய இத்தகைய இயல்புதான் முன்னர்க் கூறிய நமது நட்பாகின்ற முக்கோணத்தின்முதலாவது முனை. உங்களது அன்பிற்குக் கைம்மாறாக யாதொன்றையும் வேண்டாதீர்கள். நீங்கள் எப்பொழுதும், ஈ (கொடுப்) பவனது நிலைமையிலிருங்கள்; நீங்கள் கடவுளிடத்து அன்பு மிகுந்த மனத்தராயிருத்தல் வேண்டும்; அனைத்தையு மவரிடத்து ஒப்புவித்தல் வேண்டும்; என்றாலும், அவரிடத்தி னின்றுங் கூட யாதொரு கைம்மாறும் விரும்பாதீர்கள்.

அன்பிற்கு அச்சமில்லை; இதுதான் நட்பாகின்ற முக்கோணத்தி னிரண்டாவது முனை. அச்சத்தினாற் கடவுளைப் போற்றுபவர், தாழ்ந்த நிலையிலுள்ள மனிதரானவர்; அவர் மிகவுஞ் சீர்திருந்தாதவருமாகும். அடிக்கு அஞ்சி அவர்கள் கடவுளைப் போற்றுகின்றனர். எப்பொழுதும் இருப்புலக்கையும், சாட்டையும் (அல்லது நீண்ட பாசக்கயிறும்) கையிற் கொண்டுள்ள ஒரு வடிவமே அவரது நினைப்பின்படியுள்ள கடவுள்; அக்கடவுளை வணங்காவிட்டால், தங்களுக்கு நல்ல உதையும், அடியும் விழுமென்று அவர்கள் கருதுகின்றனர். அடிக்கு அஞ்சிச் செய்யும் கடவுள் வழிபாடு மிகத் தாழ்ந்ததாகும்; அத்தகைய கடவுள் வணக்கம் நட்பின் சீர்திருத்தமற்ற நிலைமையாகும். அச்சமுள்ளவரையில் அன்பு தோன்றுவதில்லை. அன்பானது இயற்கையாகவே, எத்தகைய அச்சத்தையும் வென்று விடுகின்றது. இதற்கோருதாரணம் கூறுவோம். "பிள்ளையுண்டாய் (கர்ப்பமாய்) இருக்கின்ற ஒரு பெண்பால் தெருவோடு போய்க்கொண்டிருக்கும்பொழுது நடுவழியிலிருந்து ஒரு நாய் குரைத்ததானால் அதே நொடியில் அவள் அச்சத்துடன் அங்குள்ள ஒரு வீட்டிற்குள் ஓடிப்போகின்றாள். அதே பெண்பால் ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்துத் தன் குழந்தையைக் கையிலெடுத்துக்கொண்டு தெருவில் போகும்பொழுது ஒரு சிங்கம் அக்குழந்தையை நோக்கி (அதற்கு நேராகப்) பாய்கிறதென்று வைத்துக்கொள்வோம். இப்பொழுது (இவ்விடத்தில்) அந்த அன்னையினது நிலைமை என்னவா யிருக்கும்? அவளுடைய நடையானது ஐயமின்றி அச்சிங்கத்தின் முகத்தை நோக்கியதாய்த்தா னிருக்கும். இங்கு அன்பானது எல்லா அச்சத்தையும் வென்று விடுகிறது. மிகுதியான தன்னயக் கருத்தினால்தான் அச்சமுண்டாகின்றது. எவ்வளவுக்கெவ்வளவு தன்னலங் கருதுகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அச்சம் வளர்ந்தோங்கி விடுகின்றது. தான் யாதொரு பயனுமற்றவனென ஒருவன் நினைக்கின்றானெனில் அவனுக்கு ஐயமின்றி அச்சமுண்டாகும்; ஒரு சிறிதேனும் அச்சமுள்ள இடத்தில் கொஞ்சங்கூட அன்பு உண்டாவதில்லை; அச்சமும், அன்புஞ்சேர்ந்திருப்பதில்லை; கடவுளை நேசிப்பவர் அவரிடத்து அஞ்சமாட்டார்கள். "கடவுள் பெயரை வீணிற் கூறாதே" என்ற முறையை * உண்மையான பக்தன் கேட்டதும் நகைக்கின்றான். ஏனெனில் பக்தியோகத்தில் கடவுளிகழ்ச்சி யென்பது எப்படி உண்டாகும்? நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு கடவுளது திருப்பெயர்களைக் கூறுகின்றீர்களோ, அத்தனைக் கத்தனை உங்களுக்கு நல்லதுதான். நீங்கள் கடவுளை உண்மையான அன்புடன் நேசிக்கின்றீர்கள். அதனாற்றான் நீங்கள் அவரது திருப்பெயரைக் கூறிப் புகழ்கின்றீர்கள்.

அன்பிற்குப் பொறாமையில்லை. என்பதுதான் நட்பெனும் முக்கோணத்தின் மூன்றாவது முனை. அஃதென்னவெனில், பக்தனது மிக உயர்ந்ததான எண்ணமும், நமது நட்பானது (நாம் யாதொன்றை நேசிக்கின்றோமோ அந்தப் பொருள்) நமது பிறவிப்பயனாய் முடிகின்றவரையில், மேலான அன்பு ஒருபொழுதுமுண்டாவதில்லை. மனிதர்கள், நட்பைப் பலவிடங்களிலும் (பலபொழுதும்) தவறான வழியில் உபயோகிக்கிறார்கள்; எனினும், நேசிக்கும் மனிதரிடத்து அவர் நேசிக்கும் பொருள் மிகவுமுயர்ந்ததான எண்ணமாயிருக்கும். ஒருவன் தனது விருப்பத்தை மிக இழிந்த பொருள்களிடத்தில் வைக்கின்றான். மற்றவனுடையதோ மிக வுயர்ந்த வாழ்க்கையா யிருக்கும்; எப்படியாயினும், அவர்கட்கு முதன்மையாயுள்ளவற்றை நோக்கி மட்டுமே உள்ளன்புடன் நேசிக்கவியலும். எல்லா மனிதருடையவும் மேலான விருப்பம் (மேலான பிறவிப்பயன்) கடவுளை யடையவேண்டுமென்பதே. அறிஞர் அறிவிலி. நல்லவர் தீயவர், ஆண் பெண், கற்றவர் கல்லாதவர், சீர்திருந்தியவர் திருந்தாதவர், அனைவர்க்கும்

* "நீ உனது கடவுளான யஹோவா"வுடைய பெயரை வீணில் எடுக்காம லிருப்பாயாக. (மோசேயுடைய 2-ம் புஸ்தகம் புறப்பாடு 20-27.)

மேலான பிறவிப்பயனாகவுள்ளது கடவுள் காட்சியே. மேலான அழகு, மிகுந்த உயர்வு, அளவற்ற பெருமை இவை மூன்றுங் கூடி ஒன்று சேர்ந்துள்ளவரே கடவுள்; எப்படியெனில், இவை மூன்றையு மறிவதனால் நமக்கு அன்பு வடிவானவரும், நேசிப்பதற்குத் தகுதியானவருமா யிருக்கின்ற கடவுளது முழு இயல்பையுமறிய முடிகின்றது. ஆனால் இம்மாதிரியான எண்ணங்கள் ஒருவிதமில்லாவிடில் மற்றொருவகையில் இயற்கையாகவே எல்லா உள்ளத்திலு முண்டாகின்றன. மனிதரது எல்லா முயற்சிகளும் அத்தகைய விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகத்தான் வருந்தி முயல்வதுதான். மனிதரிடத்தில் பொதுவாக நாம் காண்கின்ற பலவாறான பெருமுயற்சிகளும், ஒவ்வொருவரது உள்ளத்திலடங்கிக் கிடக்கின்ற ஒவ்வொரு பிறவிப்பயன்களை முடிவுபெறச் செய்வதற்கான முயற்சிகளே யாகும். உள்ளே யிருக்கின்ற எண்ணங்கள் வெளிப்படவேண்டி முயல்கின்றன. அந்தந்த உள்ளக் கருத்துகட்கு மாறாகப் பலவாயிருக்கின்ற "விருப்பங்கள்" என்ற தூண்டும் வல்லமை பொதுவில் எல்லா மனிதரிடத்தும் பரவியிருப்பதாய் நாம் காண்கின்றோம். அளவற்ற பிறவிகள் கழிந்த பிற்பாடு பல்லாயிரம் ஆண்டுகள் மிகவருந்தி முயன்றதின் பிறகு தான் மனிதன் தனது உள்ளத்தில் மிக ஆழ்ந்துகிடக்கின்ற (ஆந்தரமான) எண்ணங்களை வெளிப்படையாயுள்ள நிலைமைகளுடன் பொருத்த முயல்வது வீணான செய்கையென்று அறிவது. இந்த அறிவு உண்டாகும்போது பிறகு அவன் தனது (ஸ்வந்த-சொந்த) எண்ணங்களை வெளிப்டையாய் விளங்கச்செய்ய முயல்வதில்லை; அதனை அவன் தனது உயர்ந்த விருப்பமென்றுள்ள எண்ணத்தோடுகூட ஆந்தரமாய்ப் போற்றுகின்றான். இதுதான் நட்பின் முதன்மையான பற்றுக்கோல். இந்த உயர்ந்த எண்ணத்தில் பிற தாழ்ந்த விருப்பங்கள் முழுவது முள்ளடங்குகின்றன. ஒரு 'காப்பிரி'ப் பெண்ணிடத்துக் காதலுள்ள ஒருவன், அவளை "ஊர்வசி"யைப்போன்ற அழகுள்ளவளாக மதிக்கின்றான். என்ற செய்தி யனைவர்க்குந் தெரிந்ததுதானே. அவளது காதலை யவன்பிழையாய்ச் செலுத்துகின்றானென்று அமைதியாயுள்ள ஒருவர்க்குத் தோன்றுமெனினும், காதலன் கண்ணுக்குக் காதலி ஊர்வசிதான். ஊர்வசியாகட்டும், சூர்ப்பனகை யாகட்டும் நமது விருப்பத்திற்கு எதிர்ப்பட்டதெதுவோ அதுவேதான் நமது மேலான விருப்பமாய் விடுகின்றது. பொதுவாக (ஸாதாரணமாக) மனிதர் போற்



றும் பொருள் யாது? பேரன்புடையவனது அன்பின் நோக்கமாயிருக்கின்ற அனைத்து மடங்கி யிருக்கின்ற மேலான விருப்பமல்லவென்பதிலையமின்று. அவரவர்க்கு முதன்மையாகத் தோன்றும் விருப்பங்களைத்தாம் மனிதர் பொதுவாகப் போற்றுவது; அனைவருந் தத்தம் விருப்பத்தை உள்ளத்தினின்றும் வெளியே நிறுத்தி அதனெதிரில்தான் பணிகின்றார்கள். அதனால்தான் "அசுரத்" தன்மையான எண்ணம் வாய்ந்தவர் அஞ்சும்படியான தேவதையைப் போற்றி வழிபடுவதாய் நாம் காண்கின்றோம்; ஏனெனில், அதுதான் அவரது மேலான விருப்பம்; அதனைமட்டுமே யவர்களால் நேசிக்க இயலும். நல்லோர் வழிபடுங் கடவுளைப்பற்றிய ஆராய்ச்சியும், அவரது விருப்பங்களும் மிக முதன்மையானதா யிருக்கின்றதிலுள்ள காரணமு மதுவேயாகும்; அவருடைய விருப்பங்கள் பிறருடைய வற்றினின்றும் வேற்றுமையுடையனவாகவே யிருக்குமென்பதி லையமில்லை.

விண்ணாற்று முடிச்செல்வனார்.

## எஜோப்.

இவர் "ப்ரீஜி" தேசத்துக் கதை யாசிரியர்; கி-மு 552-ல் அதாவது சற்றேறக்குறைய 2500 வருஷங்களுக்கு முன் 'அமோரியோம்' கிராமத்தில் ஜனித்தார். மிகவும் அவலக்ஷணமான முகத்தோடு, அந்தமில்லாத சரீரம். மனித உருவோவெனச் சந்தேகிக்கும்படியான வடிவம், இவ்வளவோடு வாக்கும் பழுது. திக்குவாயன். இத்தனைப் பழுதுடைய சிறுவனைப் பார்க்கிற எவனும் அவனை ஒரு மனித ஜந்துவென நினைக்கிறதேயில்லை. மேலும் தொழிலோ அடிமைத் தொழில். ஆனால் சுகதுக்கங்களால் சலிக்காத தீர மனதுடையவன்.

அவனுடைய முதல் எஜமான் அவனை நிலங்கள் உழுகிறதற்கு வைத்துக்கொண்டான். பையன் வேறெந்த வேலைக்கும் தகுதியற்றவனென்பது எஜமானுடைய அபிப்பிராயம். மேலும் இவ்வளவு கோரமான ரூபம் தன் கண்ணில் அடிக்கடி படாமலிருக்குமென்று, அவனைச் சதா வயல்களில் உழைக்கச் செய்தான்.

அந்த எஜமான் ஒரு சமயம் வயல்களைப் பார்வையிட தனது கிராமத்துக்குச் சென்றான். அங்கே ஒரு குடியானவன் அவனுக்குச் சில அத்திப்பழங்கள் கொடுத்தான். அவன் அவற்றைப் பெற்றுக்கொண்டு, அவை மிகவும் நன்றாக இருந்தபடியால், அவற்றை "அகத்தோபுய்ஸ்" என்ற தனது மேட்டியிடத்தில் கொடுத்து, தான் ஸ்நானம் செய்துவந்த உடனே, அவற்றைத் தன்னிடத்தில் ஒப்புவிக்கும்படி திட்டம்பண்ணினான். மேட்டியும் அவனது முக்கியத் தோழர்களும் சேர்ந்து அப்பழங்களைத் தின்றுவிட்டு "எசோப்"பின் பேரில் பழி போட்டார்கள். அவனோ திக்குவாயன். மேலும் மூடன். தானன்று என எங்ஙனம் மெய்ப்பிக்கப் போகிறான் என்பது அவர்கள் கருத்து. அந்தக் காலத்தில், எஜமான்கள் தம் அடிமைகளுக்கு மிகக் கொடுமையான தண்டனைகளை விதிக்கிறது வழக்கமாக இருந்தது. எஜமான் சாப்பிட வேண்டிய பழங்களை, அடிமை சாப்பிடுதல் மகா பாதகம். அதனால் எசோப் தன் எஜமான் காலில் விழுந்தான்; தெற்றி, குளறி, அழுது, சாடைகளாலே சில நிமிஷங்கள் கெடு கேட்டான். அவனிஷ்டப்படி கெடு கொடுக்கப்பட்டது. உடனே உள்ளே சென்று, கொஞ்சம் வெந்நீர் எடுத்துவந்து, தன் எஜமான் எதிரில் குடித்தான். பிறகு தொண்டைக்குள் ஒரு விரலைச் செலுத்தி வாந்தி எடுத்தான். ஜலத்தைத் தவிர வேறொன்றும் வெளிவரவில்லை. மற்ற வேலைக்காரர்களையும் தான் செய்த வண்ணம் செய்யும்படி சைகைகளால் தெரிவித்தான். எல்லாரும் வெட்கிப் போனார்கள். இந்த மாதிரியான யோசனை ஒரு மூடனாகிற எசொப்பினிடமிருந்து வந்தது மிக்க ஆச்சரியமாயிற்று. மேட்டியும், அவன் தோழர்களும் மாத்திரம் தாம் ஆச்சரியப்படாதது போல நடித்தார்கள். ப்ரீழிகாரன் சொன்னபடி வெந்நீர்குடித்து, விரலை வாய்க்குள்விட்டு, தொண்டையில் செலுத்துவதாகப் பாவனை செய்தார்கள். வெந்நீரோ தன் வேலையைச் சரியாகச் செய்தது; சிறிது நேரத்திற்குள் அவர்களுடைய வயிற்றிலிருந்த அத்திப் பழங்களை வெளிப்படுத்தியது. எசோப் இங்ஙனம் தன்னைத் தப்பித்துக்கொண்டான். மற்ற வேலைக்காரர்களுக்கு, பழத்தைச் சாப்பிட்ட குற்றத்திற்காகவும், அந்தப் பழியைக் கெட்ட எண்ணத்தோடு வேறொருவன்மீது சாற்றின குற்றத்திற்காகவும், இரட்டைத் தண்டனைக் கிடைத்தது.



மறுநாள் எஜமான் கிராமத்தைவிட்டுப் போய்விட்டான். எஜோப் தனது வேலைகளைச் செய்துகொண்டிருக்கும்போது, சில யாத்திரை வாசிகள் வழிதவறி, அவனிடத்திற்போய், பட்டணத்திற்குச் செல்லும் மார்க்கத்தைத் தமக்குக் காண்பிக்கும்படி கேட்டார்கள். அவன் அவர்களை முதல், முதல் நிழலில் இளைப்பாறச்செய்து, சிற்றுண்டிகொடுத்து, பிறகு அவர்களை அழைத்துக்கொண்டுபோய் நேரான பாதையில் விட்டுத் திரும்பினான். அப்போது அவர்கள் கைகளை உயரத்தூக்கி இவ்வளவு அன்போடு தம்மை [illegible] பசரித்தவனுக்கு [illegible] உண்டாகும்படி தெய்வத்தைப் பிரா[illegible]ர்கள்.

உஷ்ணத்தினாலும், களைப்பினாலும் எசோப்புக்குத் தூக்கம் வந்தது. அவன் தூங்கிவிட்டான். நித்திரையில் ஸரஸ்வதியானவள் தன்னெதிரே வந்து தனக்கு வாக்கைக் கொடுத்ததாகக் கனவு கண்டான். சந்தோஷத்தினால் உடனே விழித்துக்கொண்டு பின்வருமாறு பேசலுற்றான். "என்ன அற்புதம், எனக்குத் தடங்கலில்லாமல் பேச்சுவருகிறது; எந்த வார்த்தையும் என்னிஷ்டம் போலத் தெளிவாக உச்சரிக்கிறேன்." இந்தப் புதுமையினால் அவன் தன் எஜமானனைவிட்டு, வேறொருவனிடம்போய் உழைக்கும்படி நேரிட்டது. காரணம் இதுவாகும்.

அங்கே "ஜெனஸ்" என்ற ஒரு கஜானாகாரன் இருந்தான். அவன் அடிமைகளுக்கு மேஸ்திரியாகவும் இருந்தான்; ஒருநாள் அடிமைகளில் ஒருவனை, அவன் செய்யாத குற்றத்தை அவன் மீது சுமத்தி, நையப் புடைத்துவிட்டான்; இதைப் பார்த்திருந்த எசோப்பின் மனம் கொதித்தது; இந்த அக்கிரமத்தை அவனால் சகிக்கமுடியவில்லை. அதனால் அவன் ஜெனஸைப் பார்த்து, "இந்த அநியாயம் எங்ஙனமாயினும் வெளியாகும், அப்போது நீ கஷ்டப்படுவாய்" என்று சொன்னான்; ஜெனஸ் தன்னைத் தப்பித்துக் கொள்ளுகிறதற்கும், எஜோப்பைப் பழிவாங்கவேண்டுமென்ற எண்ணத்தோடும், எஜமானிடம் போய் "நமது வீட்டில் ஒரு அற்புதம் நிகழ்ந்திருக்கிறது; அதாவது ஊமையனாகிய எஜோப் நன்றாகப் பேசுகிறான்; அதனால் அவன் சதா தன் எஜமானனைத் திட்டுகிறதும், நிந்திக்கிறதுமாகக் காலங்கழிக்கிறான்" என்றான். எஜமான் இந்த அபாண்டமான பொய்யை நம்பி, 'அவனை உன் இஷ்டப்படிச் செய்" என்று

ஜெனுஸுக்கு உத்தரவளித்தான். அன்று ஜெனுஸ் வயலிலிருந்து திரும்பி வருகையில், ஒரு வியாபாரி அவனைக் கண்டு "வாடகைக்குப் பொதிமாடு கிடைக்குமா" என்று கேட்டான். ஜெனுஸ் 'என்னிடம் பொதிமாடுகளில்லை; அடிமைகள் இருக்கிறார்கள்; தேவையானால் ஒருவனை உனக்கு விற்கிறேன்" என்று சொல்லி எசோப்பை வரவழைத்தான். வியாபாரி பார்த்து "என்ன ஐயா, பரிகாசம் செய்கிறீர்; இவன் ஒரு குருத்தியைப்போலக் காணப்படுகிறானே," என்று சொல்லித் தனக்குள் பாதி முணுமுணுத்துக் கொண்டும், பாதி [illegible]த்துக்கொண்டும் [illegible]விட்டான். எசோப் அவனைக் கூப்பிட்டு அவன்[illegible] சொன்னதாவது:—'என்னைத் தைரியமாக வாங்கும் ஐயா; நான் உமக்கு எங்ஙனமாயினும் உபயோகப்படுவேன். உமக்குக் குழந்தைகளிருந்தால், அவர்கள் அழும்போது, என்னை அவர்களுக்குக் காண்பியும்; அவர்கள் என்னைப்பார்த்துப் பயந்து, அழுகையை நிறுத்தி விடுவார்கள்.' வியாபாரிக்கு இந்த வார்த்தைகள் நியாயமெனத் தோற்றின. அவன் எஜோப்பை 3 துட்டுக்கு வாங்கி சிறித்துக்கொண்டே தனக்குள் சொன்னதாவது:—உண்மையில் இஃதோர் நல்ல ஆதாய மன்று; ஆயினும் என்ன செலவாயிற்று; 3 துட்டுதானே பரவாயில்லை.

அந்த வியாபாரி பலவிதமான சரக்குகள் பேரம் பண்ணி ஜீவித்து வருகிறவன். அவன் அடிமைகளாகிய சரக்குகளையும் வாங்கி விற்பதுண்டு. தன்னிடமிருந்த அடிமைகளை விற்கும்பொருட்டு, 'எபேஜ்' என்ற ஊருக்குப் பிரயாணப்பட்டான். யாத்திரைச் சாமான்களை அவனவன் அந்தஸ்துக்கும், பலத்துக்கும் தகுந்த விதமாகத் தூக்கிக்கொண்டு போக உத்தரவாயிற்று. அப்போது எஜோப் தன் சரீரத்தின் பிரமாணத்தை உத்தேசித்தும், தான் ஒரு புதிய அடிமை யானதாலும், தன் விஷயத்தில் சிறிது தயவு பாராட்டும்படி வேண்டிக்கொண்டான். அதற்கு மற்றவர்கள், "சரி, நீ ஒரு மூட்டையும் எடுக்கவேண்டாம்" என்றார்கள். எஜொப்புக்கு அது சம்மதமில்லை. "நானும் ஏதாவது தூக்கிக் கொண்டுதான் வருவேன்" என்றான். 'உன் இஷ்டப்படி எந்த மூட்டையாகிலும் எடுத்துக்கொள்' என்று மற்றவர்கள் சொன்னார்கள். அவன் ரொட்டிக் கூடையை எடுத்தான். அதுதான் பளுவுள்ள மூட்டை. அதனால் எல்லாரும் அவனை மடையனென



மதித்து, தமக்குள்ளே சிரிக்கலானார்கள். ஆனால் மத்தியானம் ஸகலரும் சாப்பிட்டான பிறகு ரொட்டிக் கூடையின் பளுவு கொஞ்சம் குறைந்திருந்தது; இரவில் கொஞ்சம் குறைந்தது. மறுதினம் கொஞ்சம் குறைந்தது. இங்ஙனம் இரண்டு நாட்களில், எஜோப்பின் சுமை வெறுங்கூடை. எல்லாரும் அவனுடைய புத்தியை மெச்சி வியப்புற்றார்கள்.

பிறகு, வியாபாரி சந்தையில் அடிமைகள் எல்லாரையும் விற்றுவிட்டான். ஒரு இலக்கண வித்வானும், ஒரு பாடகனும், நமது எஜோப்புந்தான் மிஞ்சினார்கள். அவர்களை விற்கிறதற்கு, வியாபாரி "[illegible]" நகர் சென்றான். அங்கே இரண்டு வித்வான்களையும் நன்றாக உடுத்தி கடைக்கு அழைத்துக்கொண்டு போனான். விற்கவேண்டிய சாமான்களைப் பகட்டாகக் காண்பித்தல் வியாபாரிக்கு ஸஹஜமல்லவா? எஜோப்புக்கு நல்ல உடை கொடுக்காமல், ஒரு அவலக்ஷணமான சாக்கை அவனுக்கு உடுத்தி, வித்வான்களை நல்ல விலைக்கு விற்பதாக, அவனை அவர்கள் மத்தியில் நிறுத்திக் காண்பித்தான்.

சில வியாபாரிகள் வந்தார்கள். அவர்களில் "ஸாந்துய்ஸ்" என்ற ஒரு ஞானியிருந்தார். அவர் அவ்விரண்டு வித்வான்களையும் பார்த்து "உங்களுக்கு என்ன தெரியுமென்று" கேட்டார். "ஸகலமும் தெரியும்" என்றார்கள். எஜோப் கலீரென நகைத்தான். அப்போது அவன் முகத்தைப் பார்த்த வியாபாரிகள் பயந்துபோனார்கள்; அவ்வளவு கோரமாக இருந்தது. "இலக்கண வித்வான் விலை 1000 துட்டு. பாடகன் கிரயம் 3000 துட்டு. இவர்களில் ஒருவனை வாங்குகிறவர்களுக்கு 'எஜேப்பை இனாமாகக் கொடுப்பேன்" என்று வியாபாரி விலைகூறினான்.

ஸாந்துய்ஸ் ஞானிக்கு வித்வான்களின் கிரயம் கிராக்கியாகப்பட்டது; கடைக்குவந்து வெறுங்கையாகத் திரும்புதல் கூடாது; ஆகையால் இவ்வளவு நேரமாகச் சிரித்த இந்தச் சுருக்கமான மனிதனை வாங்கிக்கொண்டுபோதல் நன்றென்று அவருடைய சிஷயர்கள் சொன்னார்கள். ஞானிக்கும் சம்மதமாயிற்று; அதனால் எஜோப்பை 60 துட்டுக்கு விலைபேசி "உனக்கு என்ன தெரியும்" என்று அடிமையைக் கேட்டார். அதற்கு அவன் "ஒன்றுந் தெரியாது; இவ்விரண்டு பேருந்தான் ஸகலத்தையும் எடுத்துக்கொண்டார்களே, மிச்சம் என்ன இருக்கிறது?" என்று

மறுமொழி சொன்னான். பணத்தைக்கொடுத்து எஜோப்பை வாங்கிக்கொண்டு ஞானி தம் வீட்டிற்குச் சென்றார்.

அந்த ஞானிக்கு ஒரு பத்தினி உண்டு. அவள் ஒரு மாதிரியான குணமுடையவள். அவளுக்குச் சுபாவத்தில் ஒருவனும் பிடிக்காது; இந்த அடிமையைக் கண்டால் சீறித் தன்னைப் பரிகசிப்பாள் என்பது நமது ஞானிக்குத் தெரியும். அதற்காகத் தாமாகவே வேடிக்கை செய்வதுபோல், அவளிடம் சென்று, "மிகவும் சுந்தரமான ஓர் அடிமை வாங்கிவந்திருக்கிறேன்" என்றார். இதைக் கேட்ட அந்தப்புர வேலைக்காரிகள் அனைவரும், 'நான் தான் முதலில் பார்ப்பேன்" என்று ஒவ்வொருவரும் சொல்லி, சண்டை செய்துகொண்டிருந்தார்கள். இதற்குள் எஜோப் வந்தான். எல்லாரும் வெட்கமடைந்தார்கள். ஒருத்தி தன் கண்ணைக் கையால் மூடிக்கொண்டாள்; மற்றொருத்தி ஓடிப்போனாள்; வேறொருத்தி கூக்குரலிட்டாள். எஜமானி, தன்னை வீட்டைவிட்டுத் துறத்துவதற்காகச் செய்யப்பட்ட ஸூழ்ச்சி இது என்றாள்; புருஷனுக்குத் தான் பிடிக்காததால், இந்த உபாயம் செய்யப்பட்டது என்று கணவனை நிந்தித்தாள். வார்த்தைகள் தடித்து, முற்றிப்போயின. கடைசியாக ஞானி தனது பொறுமையினாலும், எஜோப் தனது புத்தியினாலும் அவளை ஒருவாறு சமாதானம் செய்தார்கள். எஜமானி அடங்கினாள்; பிறகு பழக்கத்தினால் புதிய அடிமையும் அவ்வளவு அவலக்ஷணமாகத் தோன்றவில்லை.

(வரும்).

என். சுப்பிரமணிய ஐயர்.

# தனபதி.

எண்பார் மதுரை வணிகன் புதல்வரில் லாமையினா
னண்பா மருகை மகவாக்கிச் சென்றபின் ஞாதியர்கள் [டிப்
கண்காணி கைக்கொள்ள மாமனைப் போல்வழக் காடச்செட்
பண்பாக வந்தசொக் கேசா தேசி பயங்கரனே.



## 1. மதுரை.

செந்தமிழ் நாடு என்று சிறப்புற்று ஓங்குவது பாண்டிநாடாகும். இதற்குத் தலைநகர் மதுராபுரி. இங்கேதான் பழைய காலத்தில் பாண்டிய அரசர்கள் ஆண்டது. முதல் முதலில், பாண்டியர்கள் மதுரைக்குக் கிழக்கே மணவூர் என்னும் நகரில் அரசாண்டு வந்தார்கள். அப்போது, இந்தக் காலத்தில் மதுரையெனும் பெயர் பெறும் நகரம், கடம்பமரங்களடர்ந்த வனமாகவிருந்தது. இந்த வனத்தில், இந்திரன் முதலியோர் பூசித்த சிவலிங்கம் ஒன்றுண்டு. அதுவே இப்போது, மதுரையிலிருக்கும் சொக்கலிங்கம். இலிங்க உருவாக இருந்த சிவபெருமான், அடுத்த காலத்தில் மதுரையை யாண்ட, குலசேகர பாண்டியனுடைய கனவில் ஓர் நாள் தோன்றினார். தோன்றி, 'அரசனே! நாம் மணவூர்க்கு மேற்கிலுள்ள கடம்பவனத்துள்ள சிவம். நீ அக்காட்டைத் திருத்தி அங்கு உன் தலைநகரை ஏற்படுத்து. ஏற்படுத்துவதோடு நமக்குக் கோயிலையும் கட்டு' எனக்கூறி மறைந்தார். அவர் கூறியபடியே குலசேகர பாண்டியன் முடித்தான். அப்போது சிவபெருமான் தமது முடியிலுள்ள கங்கை நீரையும் சந்திரனில் உள்ள அமிர்தத்தையும் தெளித்தார். அப்போது சிந்தியன மதுரமாய் இருந்தன. அதனால், அந்நகரம் மதுரையெனப் பெயர் பெற்றது.

பிறகு சிவபெருமான் குலசேரபாண்டியன் பிள்ளையாகிய மலயத்துவச பாண்டியனது மகளை மணஞ் செய்துகொண்டார். இத்தகைய பரம்பரையில் சுந்தரேச பாதசேகர பாண்டியன் என்பவன் ஒருவன் சிம்மாசனம் ஏறினான். அவன் தன் முன்னோர்களைப்போல, நீதிதவறாது அரசாண்டு வந்தான். மதுரையில் முன் காலத்தில் ஒன்றன்பின்னொன்றாக மூன்று தமிழ்ச்சங்கங்களிருந்தன. அவை தலை, இடை, கடைச்சங்கங்கள். இவைகளில் பல புலவர்களொன்றுகூடிப் பல நூல்களைப்படித்து வெளியிடுவது வழக்கம். இச்சங்கங்களைப் பாண்டிய அரசரே ஆதரித்து வந்தனர். அதுபோல், சுந்தரேச பாதசேகர பாண்டியன் என்பவனும் ஆதரித்து வந்தான்.

அவன் அரசாண்ட காலத்தில் மதுரையில் மாதம் மும்மாரி பொழிந்தது. கருப்பு என்னும் பதமே அகராதியில் கிடையாது. யார் வந்தாலும் இல்லை என்னாது அவ்வூரார்கள் கொடுப்பார்கள்.

அவர்கள் திருடர் பயமில்லாததால் இரவிலுங்கூட கதவைச் சார்த்தார்கள். அவ்வூரார் எல்லாரும் சிவபத்தர்கள், அவ்வூரெங்கும் சைவபுராண காலக்ஷேபங்களே நடைபெற்றன.

இவ்வூரில் பிராமணர்கள் வேதமோதியும், தங்கள் சிஷ்யர்களுக்கு அதனைச் சொல்லிக்கொடுத்தும், யாகங்கள் பல செய்தும், கீழ்ச்சாதியார்களை யாகங்களைச் செய்யச் செய்தும், தானஞ்செய்தும், தானமேற்றும் வந்தார்கள். க்ஷத்திரியராகிய அரசர்கள் வேதமோதியும், நீதிநெறிதப்பிய மன்னரோடு சண்டைசெய்தும், தம் நாட்டுக்குடிகளைக் காப்பாற்றியும் பலயாகங்களுஞ் செய்தும், பற்பல தானங்களைச் செய்தும், சண்டைசெய்யவுங் கற்றுக்கொண்டும் வாழ்ந்து வந்தார்கள். வைசியராகிய செட்டிமார்கள் பலப் பசுக்களைக் காப்பாற்றியும், உழுதும், வர்த்தகஞ்செய்தும், ஜீவித்து வந்தார்கள். வேளாளர்கள் எல்லோரும் அரசனுக்கும் கடவுளுக்கும்அஞ்சிச் சிறந்த காரியங்களைச் செய்தார்கள். அன்றியும், அவர்கள் கபடில்லாத மனத்தோடு தமது சுறத்தாரோடு உண்டு ஊக்கத்தோடு வேலைசெய்து மன்னவனுக்கு வரிகட்டி வந்தார்கள். அவர்கள் ஒற்றுமையோடு நல்லவழியில் நடந்து, வந்த விருந்தாளிகளுக்கு இல்லை என்னாது, அன்னமிடுவார்கள். மற்றைய சாதியாரும் தமது தமது தொழில்களைக் கபடமின்றிச் செய்துவந்தார்கள்.

அவவூர்ப் பெண்கள் தங்கள் தங்கள் கணவரின் முகங்களையன்றி அறியாதவர்கள். அவர்கள் தங்கள் நாயகர்க்குக் குறுக்காக ஒன்றும் பேசுவதில்லை. கோவிலிக்குப் போவதாயிருந்தாலும் தம் கணவரைக்கேட்டே, போவார்கள். அப்படிப் போனாலும், யாராவது கிழவியுடனே வெளியில் செல்வார்கள். அவர்கள் ஜீவகாருண்யமே உருவாகக் கொண்டவர்கள். அவர்கள் மாமி, மாமனார், மைத்துனர் முதலோர்க்கு அடங்கி நடந்திடும் பெண்மணிகள். ஆடவர்கள் எழுவதற்கு முன்னமேயே அதிகாலையில் எழுந்திருந்து வீட்டு வேலைகளைச்செய்து முடிப்பார்கள். இவர்கள் தங்கள் கணவர் உண்டபின்பே உண்பார்கள்; கணவர்கள் தூங்கியபின்பே தூங்குவார்கள்; இப்படியெல்லாம் இவர்கள் இருந்ததனால் அவ்வூரில் எப்பொழுதும் மழையில்லாமல் இருப்பதில்லை.

(வரும்)

தே. மீனாக்ஷிசுந்தரான்.

162432 600 009